[வெளியீடு—3—4—1972]
[Issued—3—4—1972]

# தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை 1971 டிசம்பர் 10

Friday 10th December 1971

தொகுதி XIII—எண் 1

Volume XIII—No. 1

தமிழ் நாடு அரசு
1971
GOVERNMENT OF TAMIL NADU
1971

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

விலை 50 காசுகள்]
PRICE 50 Paise]

D

V211,31 'N71

31N71·13.2

61536

## உள்ளடக்கம்


| | | பக்கம். |
|---|---|---|
| . | வினாக்கள்—விடைகள் .. .. .. .. | 1–28 |
| . | அறிக்கைகள் அளித்தல்.— | |
| | (அ) மதுரை அருகில் ஏற்பட்ட விமான விபத்து குறித்து முதலமைச்சரின் அறிக்கை. | 28–29 |
| | (ஆ) நாட்டின் நெருக்கடி நிலையைச் சமாளிக்க நிதி திரட்டும் முயற்சிகள் குறித்து அரசு எடுத்துள்ள முடிவுகள். | 29–31 |
| 3. | நடைமுறைக் கேள்வி.— | |
| | கூடுதல் வரி விதிப்பு செயற் குறிப்புகளை 82-ம் விதியின் கீழ் அளிக்கும் அறிக்கை மூலம் வெளியிடுதல் குறித்து. | 31–34 |
| 4. | கவன ஈர்ப்பு.— | |
| | (அ) திருப்பூரிலுள்ள சலவைத் தொழிற்சாலைத் தொழிலாளரின் வேலை நிறுத்தம். | 34–35 |
| | (ஆ) மதுரை மகாலெட்சுமி ஆலைத் தொழிலாளரின் வேலை நிறுத்தம். | 35 |
| 5. | அறிவிப்பு.— | |
| | அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குத் தேர்தல். | 35 |
| 6. | 1971–72-ம் ஆண்டிற்கான மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கை மீதான விவாதம்—தொடர்ச்சி. | 35–79 |
| 7. | பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. | 80 |

## உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வினாக்கள்—விடைகள் .. .. .. .. | 81–109 |
| 2. | ஒத்திவைப்புத் தீர்மானம்.— "நவசக்தி" நாளிதழ் ஆசிரியரும், மற்றொருவரும் கைதானது குறித்து. | 110–116 |
| 3. | அறிக்கை அளித்தல்.— மண்ணெண்ணெய் பங்கீடு குறித்து முதலமைச்சரின் அறிக்கை. | 116–118 |
| 4. | நடைமுறைக் கேள்வி.— ஓர் உறுப்பினர் ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்பு அறிவிக்கை கொடுத்திருக்கும்போது, அதே பொருள் குறித்து அமைச்சர் அறிக்கை அளிப்பது குறித்து. | 118–119 |
| 5. | கவன ஈர்ப்பு.— நாங்குநேரியிலுள்ள "சுந்தரம் டெக்ஸ்டைல்ஸ்" மூடப்பட்டதும் தொழிலாளர் அல்லலும். | 119–122 |
| 6. | தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1971–72-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மீதான விவாதம்—தொடர்ச்சி. | 122–169 |
| 7. | பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. | 169 |
| 8. | இணைப்புகள் .. .. | 170–175 |

## உள்ளடக்கம்

### 13—12—1971


| | | பக்கங்கள். |
|---|---|---|
| 1. | வினுக்கள்—விடைகள்— | 177–21 |
| 2. | ஒற்றிவைப்புத் தீர்மானம்— | |
| | சுதேசமித்திரன் பத்திரிகை மூடப்பட்டதும் அதனுல் ஏற்பட்ட வேலையின்மையால் அவதியுறும் தொழிலாளர், செய்தியாளர் நிலைகுறித்து. | 219–220 |
| 3. | அறிவிப்புகள்— | |
| | (அ) 1971-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு. | 221–223 |
| | (ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பந்தைய–கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு. | 223 |
| 4. | அரசினர் சட்டமுன்வடிவுகள்— | |
| | (அ) 1971-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு. | 222 |
| | (ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பந்தைய–கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவு. | 223 |
| 5. | 1971--72-ம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதி அறிக்கை–அளித்தல். | 223–225 |
| 6, | 1967-68-ம் ஆண்டில் அதிகப்படியான செலவிற்கான நிதிக் கோரிக்கைகள்–அளித்தல். | 225 |
| 7. | தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1971–72-ம் ஆண்டுக்கான நிறிநிலை அறக்கை மீது விவாதம்–தொடர்ச்சி. | 226–258 |
| 8. | பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள். | 261 |

## உள்ளடக்கம்.

**14-12-1971.** பக்கங்கள்.


1. வினாக்கள்—விடைகள்— 295–341

2. அறிவிப்புகள்—

(அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (சட்டமன்றப் பேரவை சட்ட (திருத்த) சட்டமுன்வடிவு .. .. 341
முன்வடிவு எண் 38/1971)

(ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்டமுன்வடிவின் இரண்டாவது பரிசீலனைக்கான திருத்தங்களுக்கு ஆளுநருடைய இசைவு .. 344

(இ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனைவரி (ஐந்தாம் திருத்த) சட்டமுன்வடிவு .. .. 378

3. அரசினர் சட்டமுன்வடிவுகள்—

(அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (சட்டமன்றப் பேரவை சட்ட (திருத்த) சட்டமுன்வடிவு .. .. 342-345
முன்வடிவு எண். 38/1971)

(ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சட்டமன்ற (தகுதியின்மை நீக்கல்) திருத்த சட்டமுன்வடிவு (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண். 41/1971 .. 345–355

(இ) 1971-ம் ஆண்டு சென்னை நகராட்சி (திருத்த பதவிக்காலம் நீட்டிப்பு) சட்டமுன்வடிவு .. 356-363

(ஈ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவு .. .. 363–377

(உ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்டமுன்வடிவு .. .. 378–379

(ஊ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு .. .. .. 379–397

(எ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு .. 397–399

4. பேரவையில் வைக்கப்பட்ட ஏடுகள்— 400

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்:

திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, செய்தி, விளம்பரம், திரைப்படச் சட்டம், மலை அபிவிருத்தித் திட்டங்கள், பத்திரிகைச் சட்டம், காகிதக் கட்டுப்பாடு, சமஸ்தானங்களின் விஷயங்கள்-வழக்குகள் குறித்த சட்டம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், குடிசைமாற்று வாரியம்.

2. மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் (கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சிமொழி, நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சட்டமன்றம்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் (பொது நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழிலாளர், எழுது-பொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், சீரணி, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், பத்திரப் பதிவு.

5. மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனவளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உணவு-வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—உணவு, உணவுப் பொருள்கள், வருவாய், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள்.

A. 246—(i)

7. **மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப்பொருள்கள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. **மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப் பணித் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. **மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் (கூட்டுறவுத் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை மறுநிதி உதவி, மண் வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நீங்கலாக வேளாண்மை இயக்கத்தின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.

10. **மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (வேளாண்மைத் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—வேளாண்மை, உணவு உற்பத்தி.

11. **மாண்புமிகு திரு. க. இராசாராம் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பின்தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, வீட்டு வசதி, இட வசதிக் கட்டுப்பாடு.

12. **மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.

13. **மாண்புமிகு திரு.ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

14. **மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அறக்கட்டளைகள், பால் வழங்கு துறை, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான் கிராமதான இயக்கங்கள்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

## THIRU KODARDAS KALIDAS SHAH

*Members of the Council of Ministers.*

1. THE HON. THIRU M. KARUNANIDHI (*Chief Minister*)—in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition, Information and Publicity, Cinematograph Act, Passports, Newsprints Control, Prices and Supplies of Goods Act, Tamil Nadu Drainage and Water Board and Slum Clearance Board.

2. THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN (*Minister for Education and Local Administration*)—in-charge of Education including Technical Education, Official Language, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions and Legislature.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN (*Minister for Public Health*)—in-charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (*Minister for Labour*)—in-charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistics and Registration.

5. THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU (*Minister for Harijan Welfare*)—in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas, Refugees and Evacuees.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM (*Minister for Food and Revenue*)—in-charge of Food, Commercial Taxes, Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

7. THE HON. THIRU S. MADHAVAN (*Minister for Industries*)—in-charge of Industries, Textiles, Yarn, Handlooms, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA (*Minister for Public Works*)—in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Waqfs.

9. THE HON. THIRU SI. PA. ADITANAR (*Minister for Co-operation*)—in-charge of Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Schemes, Khadi and Village Industries and Rural Industries Project.

10. THE HON. THIRU A. P. DHARMALINGAM (*Minister for Agriculture*)—in-charge of Agriculture and Food Production.

11. THE HON. THIRU K. RAJARAM (*Minister for Backward Classes*)—in-charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

12. THE HON. THIRU O. P. RAMAN (*Minister for Electricity*)—in-charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

13. THE HON. THIRU S. RAMACHANDRAN (*Minister for Transport*)—in-charge of Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

14. THE HON. THIRU M. KANNAPPAN (*Minister for Religious Endowments*)—in-charge of Religious Endowments, Milk, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

## தமிழ்நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

**பேரவைத் தலைவர்:**

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன், பி.ஏ.

**பேரவைத் துணைத் தலைவர்:**

மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன், எம்.ஏ., பி.எல்:

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.**

திரு. மா. வெ. நரிவேங்கடம்
திருமதி ஜோதி வெங்கடாசலம்
திரு. நா. வீராசாமி
திரு. தி. அன்புச்செழியன்
திரு. என். கே. பழனிசாமி
திரு. எம். ஏ. லத்தீப்

**சட்டப் பேரவைச் செயலாளர்:**

திரு. சா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

**இணைச் செயலாளர்.**

திரு. பா. சுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

**உதவிச் செயலாளர்கள்:**

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி)
திரு. ஜீ. இராகவன்
திரு. சி. கே. இராமசாமி, பி.ஏ., பி.எல்.
திரு. ஆர். மாணிக்கம், பி.எஸ்சி., பி.எல்:

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| | தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி (2) |
|---|---|---|
| 1 | அண்ணாமலை, திரு. சி. வி. எம். .. | காஞ்சிபுரம். |
| 2 | அபுசாலி, திரு. எம். எ. .. .. | புவனகிரி. |
| 3 | அப்துல் ஜப்பார், திரு. வா. மை. .. | அரவக்குறிச்சி. |
| 4 | அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 | அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 6 | அழகர்சாமி, திரு. சோ. .. .. | கோவில்பட்டி. |
| 7 | அழகுத்தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 8 | அனந்தநாயகி, திருமதி த. ந. .. | மயிலாப்பூர். |
| 9 | அன்பழகன், மாண்புமிகு திரு. க. .. (அமைச்சர்). | புரசைவாக்கம் |
| 10 | அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 11 | ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.) |
| 12 | ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 13 | ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 14 | ஆல்டா எம். ஃபௌலர் திருமதி .. | நியமன உறுப்பினர். |
| 15 | ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 16 | ஆறுமுகம், திரு. எஸ். .. .. .. | வீரபாண்டி. |
| 17 | ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 18 | இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திகுளம். |
| 19 | இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 20 | இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி (செ.வ.) |
| 21 | இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 22 | இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 23 | இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 24 | இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-II. |
| 25 | இராசு, திரு. ஜே. எஸ். .. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 26 | இராதாகிருட்டிணன், திரு. எம். .. | தண்டராம்பட்டு. |
| 27 | இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |
| 28 | இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 29 | இராமநாதன், திரு. சி. .. .. | அறந்தாங்கி. |
| 30 | இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 31 | இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி (செ.வ.) |
| 32 | இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ |
| 33 | இராமன், திரு. மூ. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 34 | இராஜாங்கம், திரு. என். .. .. | குறிஞ்சிப்பாடி (செ.வ.) |
| 35 | இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. | கன்னியாகுமரி. |
| 36 | இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 37 | இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 38 எட்டியப்பன், திரு. பூ. .. .. .. | பெரணமல்லூர். |
| 39 எட்மண்ட், திரு. க. உரொ. .. .. | திருச்செந்தூர். |
| 40 கணபதி, திரு. என். .. .. .. | பாபநாசம். |
| 41 கணபதி, திரு. டி. .. .. .. | நாங்குனேரி. |
| 42 கணேசன், திரு. எல். .. .. .. | ஒரத்தநாடு. |
| 43 கணேசன், திரு. எஸ். .. .. .. | குற்றாலம். |
| 44 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | இணைத்துக்கடவு. |
| 45 கண்ணன், திரு. எம். ஆர். .. .. | பேஸின்பிரிட்ஜ். |
| 46 கதிரவன், திரு. கா. மு. .. .. | தென்காசி. |
| 47 கந்தசாமி, திரு. கே. .. .. .. | உசிலம்பட்டி. |
| 48 கந்தசாமி, திரு. கே. பி. .. .. | சாத்தான்குளம். |
| 49 கந்தசாமி, திரு. எம். .. .. .. | குளித்தலை. |
| 50 கந்தப்பன், திரு. செ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 51 கரிவேங்கடம், திரு. மா. வெ. .. .. | பாலக்கோடு. |
| 52 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 53 கருணாநிதி, திரு. தாழை. மு. .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 54 கருணாநாதன், திரு. சோ. .. .. | கூனூர். |
| 55 கருப்பையா, திரு. ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ.வ.). |
| 56 காசிராமன், திரு. நா. .. .. .. | கும்பகோணம் |
| 57 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு.. | முதுகுளத்தூர். |
| 58 காமாட்சி, திரு. கு. .. .. .. | திருவரம்பூர். |
| 59 கார்த்திசன், திரு. வீ. .. .. .. | இராமநாதபுரம். |
| 60 காவேரிமணியம், திரு. சொ. .. .. | திருப்பரங்குன்றம். |
| 61 காளிமுத்து, திரு. கா. .. .. .. | சிவகாசி. |
| 62 கிட்டப்பா, திரு. என். .. .. .. | மாயூரம். |
| 63 கிருட்டிணன், திரு. நா. .. .. | பேரணம்பட்டு (செ. வ.) |
| 64 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. .. | நெல்லிக்குப்பம். |
| 65 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 66 கிருஷ்ணன், திரு. கே. ஆர். .. .. | ஊத்தங்கரை. |
| 67 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு |
| 68 குமாரசாமி, திரு. அ. சே. .. .. | திருக்கோயிலூர் |
| 69 குமாரசாமி, திரு. கே. என். .. .. | பல்லடம். |
| 70 குருசாமி, திரு. நா. வெ. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 71 கேசவலு, திரு. தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 72 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். .. | உறையூர்ப்பள்ளி. |
| 73 கோபால், திரு. எம். .. .. .. | குன்னத்தூர் (செ. வ.) |
| 74 கோபால், திரு. கே. பி. .. .. | கரூர். |
| 75 கோபால், திரு. பி. .. .. .. | கோயம்புத்தூர் மேற்கு. |
| 76 கோவிந்தசாமி, திரு. வி. செ. .. .. | காவேரிப்பட்டினம். |
| 77 கோவிந்தராசன், திரு. ஆர். .. .. | கடலூர். |
| 78 கோவிந்தராசன் துரை, திரு. .. .. | கந்தர்வகோட்டை. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 79 [illegible], புலவர் [illegible]. .. .. | செய்யாறு. |
| 80 [illegible] செழியன், திரு. .. .. | காங்கேயம். |
| 81 [illegible], திரு. [illegible]. .. .. | செஞ்சி. |
| 82 [illegible], திரு. [illegible]. .. .. | அம்பாசமுத்திரம். |
| 83 [illegible], திரு. செ. .. .. .. | ஆண்டிமடம். |
| 84 [illegible], திரு. [illegible]. .. .. | பொள்ளாச்சி. |
| 85 [illegible], மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 86 [illegible], திரு. [illegible]. .. .. .. | திருவாடானை. |
| 87 [illegible], திரு. [illegible]. .. .. .. | விழுப்புரம். |
| 88 [illegible], திரு. [illegible]. .. .. | [illegible]. |
| 89 [illegible], மாண்புமிகு திருமதி (அமைச்சர்). | [illegible] (செ.வ.) |
| 90 [illegible], திரு. [illegible]. எஸ். கே. .. | இராமநாதபுரம். |
| 91 [illegible], திரு. [illegible]. .. .. .. | [illegible]கோயில். |
| 92 [illegible], மாண்புமிகு திரு. எஸ். [illegible] (அமைச்சர்). | [illegible]. |
| 93 [illegible], திரு. [illegible]. .. .. .. | [illegible]லூர். |
| 94 சிதம்பரம், திரு. சித. .. .. .. | [illegible]க்குடி. |
| 95 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. .. | சேரன்மகாதேவி. |
| 96 சிவபெருமான், திரு. கோ. .. .. | அரியலூர். |
| 97 சிறைமீட்டான், திரு. தெ. க. .. .. | பரமக்குடி (செ. வ.) |
| 98 சீனிவாசன், திரு. செ. (பேரவைத் துணைத் தலைவர்). | விருதுநகர். |
| 99 சீனிவாசன், திரு. [illegible]. .. .. | பேரூர். |
| 100 சின்னசாமி, திரு. அ. .. .. .. | [illegible] (செ. வ.) |
| 101 சின்னசாமி, திரு. து. .. .. .. | தர்மபுரி. |
| 102 சின்னசாமி, திரு. மு. .. .. .. | மொடக்குறிச்சி. |
| 103 சின்னசாமி, டாக்டர் [illegible]. .. .. | ஏற்காடு (ஆ.வா.). |
| 104 சின்னராசு, டாக்டர் ச. அ. .. .. | ஹரூர் (செ.வ.) |
| 105 சின்ன வெள்ளையன், திரு. சி. .. .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 106 சுந்தரம், திரு. [illegible] .. .. .. | திண்டுக்கல். |
| 107 சுப்ரமணியம், திரு. எஸ். கே. .. .. | சத்தியமங்கலம் |
| 108 சுப்பிரமணியம், திரு. அ. .. .. | சிங்கநல்லூர். |
| 109 சுப்பிரமணியம், திரு. கே. எம். .. .. | தியாகராயநகர். |
| 110 சுப்பிரமணியன், திரு. மா. .. .. | ஈரோடு. |
| 111 சுப்பிரமணியன், திரு. வீ. .. .. | உளுந்தூர்பேட்டை. |
| 112 சுப்பு, திரு. க. .. .. .. | இராஜபாளையம். |
| 113 சுப்பையா, திரு. ஆ. கு. .. .. | கோட்டூர் (செ.வ.). |
| 114 சுப்பையா, திரு. கே. வி. .. .. | ஆலங்குடி. |
| 115 சுப்பையா, திரு. ச. .. .. .. | சங்கரன்கோயில் (செ.வ.) |
| 116 சுப்பையா, திரு. அ. ஆர். .. .. | கடையநல்லூர். |
| 117 சுருளிவேல், திரு. மு. .. .. .. | போடிநாயக்கனூர். |
| 118 சுரேந்திரன், திரு. எம். .. .. | மேட்டூர். |
| 119 சுவாமிதாஸ், திரு. எ. .. .. .. | பத்மநாபபுரம். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 120 செபமாலை, திரு. கோ. | மங்களூர் (செ.வ.). |
| 121 ஜெயராமன், திரு. இ. | சேலம்-1. |
| 122 செல்லதுரை, திரு. வீ. | ஓமலூர் (செ.வ.). |
| 123 செல்லையா, திரு. குழ. | பேராவூரணி. |
| 124 செல்வராஜ், திரு. எம். | விருத்தாசலம். |
| 125 சேதுராமன், திரு. சி. | சிவகங்கை. |
| 126 சோணையா, திரு. த. | மானாமதுரை. |
| 127 சோமசுந்தரம், திரு. ந. | வலங்கைமான் (செ.வ.). |
| 128 சௌடி சுந்தரபாரதி, திரு. | அருப்புக்கோட்டை. |
| 129 சௌந்திரபாண்டியன், திரு. பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 130 டென்னிஸ், திரு. என். | கிள்ளியூர். |
| 131 தங்கமணி, திரு. கே. டி. கே. | மதுரை மேற்கு. |
| 132 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 133 தருமலிங்கம், திரு. ந. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 134 தவமணித் தேவர், திரு. வி. | சேடப்பட்டி. |
| 1 5 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. | நாட்ராம்பள்ளி. |
| 136 தியாகராசன், திரு. அ. | திருமயம். |
| 137 தியாகராசன், திரு. இ. எஸ். | திருத்தணி. |
| 138 திருப்பதி, திரு. கு. | மதுரை (சென்ட்ரல்). |
| 139 துரைசாமி, திரு. எ. க. | குடியாத்தம். |
| 140 துரைசாமி, திரு. சு. | திருப்பூர். |
| 141 துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 142 துரைராஜ், திரு. சு. ம. | திருவள்ளூர் (செ.வ.). |
| 143 தூயமணி, திரு. மே. சி. | மேட்டுப்பாளையம். |
| 144 தேவராசன், திரு. எம். | உதகமண்டலம். |
| 145 தேவேந்திரன், திரு. அ. | நன்னிலம் (செ.வ.). |
| 146 தோப்பூர் திருவேங்கடம், திரு. | கணியம்பாடி. |
| 147 நடராசன், திரு. ஈ. எம். | அந்தியூர். |
| 148 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 149 நரசிம்மன், திரு. எ. சி. | ஆரணி. |
| 150 நல்லசாமி, திரு. எஸ். | சூலூர். |
| 151 நாகராஜன், திரு. க. | வடமதுரை. |
| 152 நாகலிங்கம், திரு. பா. | பொன்னேரி (செ.வ.). |
| 153 நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டன்சத்திரம். |
| 154 நாச்சியப்பன், திரு. எ. எம். டி. | ஆத்தூர். |
| 155 நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 156 நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |
| 157 நெடுஞ்செழியன், மாண்புமிகு திரு. இரா. (அமைச்சர்) | திருவல்லிக்கேணி. |
| 158 நைனாமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 159 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 160 பத்மாவதி, திருமதி எ. கோ. | முகையூர். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| [illegible]த்தாமன், திரு. அ. | [illegible]டம்பத்தூர். |
| 162 பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம் |
| 163 பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 164 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 165 பழனிசாமி, திரு. என். கே. | பெருந்துறை. |
| 166 பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில் |
| 167 பழனிச்சாமி, [illegible] சி. | பழனி (செ.வ.). |
| 168 பழனியப்பன், டாக்டர் ச. மு. | [illegible]பிசெட்டிபாளையம். |
| 169 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 170 பழனிவேலன், திரு. ச. | வாகூர். |
| 171 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 172 பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர். |
| 173 பழனிவேல்ராஜன், திரு | தேனி. |
| 174 பன்னீர்செல்வம், திரு. [illegible] | ஆம்பூர் (செ.வ.). |
| 175 பாண்டுரங்கன், திரு. சி. | செங்கம் (செ.வ.). |
| 176 பாலகிருஷ்ணன், திரு. மு. | மன்னார்குடி. |
| 177 பாலசுந்தரம், திரு. கை. | அச்சரபாக்கம் (செ.வ |
| 178 பாலையா, திரு. ச. | கொளச்சல். |
| 179 பெரியசாமி, திரு. து. | கொடவாசல். |
| 180 பெரியசாமி, திரு. தி. ஒ. | அவினாசி. |
| 181 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில் |
| 182 பெருமாள், திரு. எ. ஆர். | காரியாபட்டி. |
| 183 பொம்மன், திரு. நு. அ. | கூடலூர் (செ.வ.). |
| 184 பொன் சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 185 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 186 பொன்னுசாமி, திரு. இ. | பனைமரத்துப்பட்டி. |
| 187 பொன்னுரங்கம், திரு. எ. எம். | சோளிங்கபுரம். |
| 188 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 189 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |
| 190 மதியழகன், மாண்புமிகு திரு. கே. எ. (பேரவைத் தலைவர்). | ஆயிரம் விளக்கு. |
| 191 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ.வ.). |
| 192 மலைக்கண்ணன், திரு. வி. | இளையான்குடி. |
| 193 மலைச்சாமி, திரு. பெ. | மேலூர் வடக்கு. |
| 194 மன்னிவேலன், திரு. கெ. | கிருஷ்ணகிரி. |
| 195 மாணிக்கம், திரு. [illegible] | பென்னாகரம். |
| 196 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 197 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். |
| 198 மாரிமுத்து, திரு. எ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 199 மாரிமுத்து, திரு. அ. | தலைவாசல் (செ.வ.). |
| 200 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 201 முகமது காதர் முகைதீன், திரு. எஸ். .. | மேலப்பாளையம். |
| 202 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. .. | லால்குடி. |
| 203 முத்து, திரு. வ. .. .. .. | சங்கரி (செ.வ.). |
| 204 முத்துசாமி, திரு. ப. .. .. .. | வேடசந்தூர். |
| 205 முத்துச்செல்வன், திரு. பு. செ. .. | முசிறி. |
| 206 முருகவேல், திரு. ந. .. .. .. | வானூர் (செ.வ.). |
| 207 முத்தையா, திரு. செ. செ. .. .. | கடலூர். |
| 208 முத்தையா, திரு. எம். .. .. .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 209 முருகையன், திரு. எஸ். .. .. | கலசப்பாக்கம். |
| 210 முனியாண்டி, திரு. ஆ. .. .. .. | நிலக்கோட்டை (செ.வ.). |
| 211 [illegible], திரு. ம. .. .. .. | திருப்போரூர். |
| 212 [illegible], திரு. ரா. ரா. .. .. | [illegible]. |
| 213 மொய்தீன், திரு. திருப்பூர் எ. எம். .. | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 214 ராசம், திரு. ம. .. .. .. | நாகர்கோயில். |
| 215 ரங்கநாதன், திரு. கே. .. .. .. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 216 ராமசாமி, திரு. ஓ. .. .. .. | வால்பாறை. |
| 217 ராமசாமி, திரு. ஜி. .. .. .. | திருப்பத்தூர். |
| 218 ராமராசன், திரு. வ. க. .. .. .. | பவானிசாகர் (செ.வ.). |
| 219 ராஜா, திரு. எ. எம். .. .. .. | பவானி. |
| 220 ராஜாராம், திரு. ஜி. .. .. .. | திண்டிவனம். |
| 221 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |
| 222 லத்தீப், திரு. எம். ஏ. .. .. .. | வாணியம்பாடி. |
| 223 வகாப், திரு. கெ. ஏ. .. .. .. | ராணிப்பேட்டை. |
| 224 வடிவேலு, திரு. சீ. க. .. .. .. | தொட்டியம். |
| 225 வடிவேல், திரு. எஸ். .. .. .. | சீர்காழி (செ.வ.). |
| 226 விசுவநாதன், திரு. செ. கோ. .. | செங்கம். |
| 227 வீராசாமி, திரு. நா. .. .. .. | ஆற்காடு. |
| 228 வெங்கடசாமி, திரு. பி. .. .. | [illegible]. |
| 229 வெள்ளத்துரை, திரு. அ. .. .. | வாசுதேவநல்லூர். |
| 230 [illegible], திரு. மு. .. .. .. | வண்ணாரப்பேட்டை. (சென்னை நகரம்) |
| 231 வேலப்பன், திரு. சி. வே. .. .. | கபிலர்மலை. |
| 232 வேழவேந்தன், திரு. கா. .. .. | கும்மிடிப்பூண்டி. |
| 233 ஜேம்ஸ், திரு. ஜெ. .. .. .. | திருவட்டார். |
| 234 ஜோதி வெங்கடாசலம், திருமதி .. | ஸ்ரீரங்கம் (செ.வ.). |
| 235 ஹண்டே, டாக்டர் எச். வி. .. .. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்**

| தொடர் எண்ணும், பெயரும். | |
|---|---|
| 1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன் .. | அமைச்சர். |
| 2 திரு. கோவிந்த சாமிநாதன் .. | தலைமை வழக்கறிஞர். |

## தமிழ்நாடு சட்டப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1971 டிசம்பர் 10.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. **மதியழகன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### தமிழரசு இதழ்

* 214 **வினா.—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

'தமிழரசு' வட்டை வார ஏடாக்கும் கருத்து அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தற்போது எதுவுமில்லை.

**திரு. எம். தேவராசன்:** தலைவர் அவர்களே, 'தமிழரசு' வார ஏட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அமெரிக்கச் சுற்றுப் பயணத்தைப்பற்றி ஒரு தொடர்க் கட்டுரை வெளியிடப்படுமா என்பதை அறிய ஆசைக் கொண்டுள்ளேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அது மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் அளிக்கின்ற ஆதரவைப் பொறுத்தது.

**திரு. எஸ். கணேசன்:** 'தமிழரசு' இதழ் துவக்கப்பட்டதிலிருந்து இப்பொழுது விற்பனை அதிகரித்திருக்கிறதா? வேறு மாநில அரசுகள் நடத்தும் பத்திரிகைகளைவிடச் சிறப்பான பத்திரிகை இந்த மாநிலத்தில் வெளியிடப்படுகிறதல்லவா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** வேறு மாநிலங்களைப்பற்றிய விவரங்கள் இல்லை. ஆனால், விற்பனையாளர்களைக் கொண்டிருக்கிற இதழ் ஒன்றை ஒரு அரசு சிறந்த முறையிலேயே பத்திரிகையாகவும் நடத்துகின்றதென்றால் அது தமிழக அரசு என்று சொன்னால் மிகை ஆகாது. இன்றைக்குத் தமிழிலே 'தமிழரசு' இதழ் 52,000 பிரதிகள் விற்பனை ஆகின்றன.

**திரு. நா. வீராசாமி:** வாரத்திற்கொருமுறை கொண்டுவருகிற செய்திக் குறிப்பு இல்லை என்று முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். வேலை வாய்ப்புகள், டெண்டர்கள் போன்ற அரசாங்க விளம்பரங்கள் 'தமிழரசி'ல் வெளிவருகின்றன. இவற்றினால் வியாபாரிகளும், வேலை வாய்ப்பை எதிர்நோக்கிக் கொண்டிருப்பவர்களும் படித்துப் பயன்பெறுகிறார்கள். 'தமிழரசு' மக்கள் பலருக்கும் பயனளிக்கக்கூடிய வகையில் வெளிவருவதால் இதை வாரத்திற்கொரு முறை கொண்டுவர உடனடியாக அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இதை வார ஏடாகக் கொண்டுவர வேண்டும் என்கிற ஆர்வம் இப்பொழுது அரசுக்கு இருக்கிறது. அச்சகம் முதலிய வசதிகளை நல்ல முறையில் பெருக்கிக்கொண்டு, அந்த இதழை

அழகான முறையில் அச்சிடுவதற்கேற்ற வகையில் அந்த வாய்ப்புகள் பெருகியதும் இதை வார இதழாகக் கொண்டுவருவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

**திரு. ரா. ரா. முனுசாமி :** 'தமிழரசு' இதழை ஊராட்சிகள், ஊராட்சி மன்றங்கள் பெற்று அங்குள்ள மக்கள் அவற்றைப் படிக்க வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். விவசாயிகள், மற்றும் எல்லாத் தரப்பிலுள்ளவர்களும் அவற்றை வாங்கிப் படிக்கவும் வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். அதனால், நம்முடைய முதல்வர் அவர்கள் தம்முடைய அமெரிக்கச் சுற்றுப் பயணத்தைப் பற்றி அதிலே கட்டுரையாக எழுதி வெளியிட்டால் எல்லா விவசாயிகளும் படித்து அமெரிக்காவிலுள்ள நிலைமைகளைப் புரிந்துகொள்வதற்கு ஏதுவாக இருக்கும். தமிழக முதல்வர் அவர்கள் அதில் கட்டுரை எழுதுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அமெரிக்கச் சுற்றுப் பயணத்தைப் பற்றிக் கட்டுரை எழுதுவதாக இருந்தால், அதைத் 'தமிழரசு' பத்திரிகையில்தான் எழுதுவேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மற்ற பத்திரிகைகளெல்லாம் யுத்த நிலைமை வருவதற்கு முன்பே 2 பைசா, 5 பைசா, 8 பைசா என்று விலையை உயர்த்தியிருப்பதற்கு மாருக, நம் 'தமிழரசு' பத்திரிகையின் விலை குறைக்கப்பட்டு, அதிகமானவர்கள் வாங்கிப் படிக்க வசதி செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** விலை ஏற்றப்பட்டது தினசரிப் பத்திரிகைகளைப் பொறுத்து என்று கருதுகிறேன். மாதம் இருமுறை வெளிவரும் பத்திரிகைகள் விலை ஏற்றம் செய்யவில்லை என்று தெரிகிறது. ஆனாலும், நாம் விலையை அதிகப்படுத்தாமல், கூடுமானவரையில் விலையைக் குறைத்துத்தான் கொடுக்க முயற்சி செய்ய வேண்டும்.

**திரு. வி. கே. இராஜாப்பிள்ளை :** தலைவர் அவர்களே, ஒரு சட்ட மன்றக் கூட்டத்தொடர் முடிந்தவுடன் அந்தத் தொடரில் நடந்த சட்டமன்ற நிகழ்ச்சிகள் முழுவதையும் அடுத்து வருகிற 'தமிழரசு' ஏட்டில் ஒன்றாக வெளியிட்டால் அது பொது மக்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மிகவும் பயன்படுவதாக இருக்குமாதலால் அரசு அதற்கு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கூடுமானவரையில் சட்டமன்ற நிகழ்ச்சிகள் நாளேடுகளில் வந்துவிடுகின்றன. இருந்தாலும் முக்கியமான நிகழ்ச்சிகளை மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல் 'தமிழரசு' இதழில் வெளியிடுவதற்கு முயற்சி செய்யலாம்.

**திரு. கா. காளிமுத்து :** 'தமிழரசு' ஏட்டில் ஆண்டுதோறும் நாவல் போட்டி போன்றவைகளை ஏற்படுத்தி, இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** படிப்படியாக ஏற்பட வேண்டிய முன்னேற்றங்களில் அதுவும் ஒன்று.

**திரு. என். கிட்டப்பா :** ஏனைய தாள்களில் வருவதைவிடத் 'தமிழரசு' பத்திரிகையில் நமது அரசாங்கத்தின் நல்ல திட்டங்களும் செயல்முறைகளும் விரிவாக அச்சடிக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. எனவே, அதை மேலும் நல்ல முறையில், அதிகமான பக்கங்களோடு வெளியிட அரசு முன்வருமா?



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நல்ல முறையில் வெளியிடப்படுகிறது என்று கூறிவிட்டு, அது மாற்றப்படுமா என்று கேட்பது நல்லது அல்ல.

DR. H. V. HANDE : Sir, can the Hon. Chief Minister give us an assurance that he will be able to direct the Publicity Department concerned to see that this publication does not, as far as possible, give any indication that it is moving on a party line or a political party line or a ruling party line but purely on a non-party line or impartial Government publication, so that whatever publications or whether statements on matters like the Cauvery issue, whatever it is, are made in it, it will be purely a Government publication as a sort of connection between the Government and the Press and the Press also, if they want, they can take out from that and publish certain portions ? Will the Government not only see to it that it is non-party publication but it also gives an impression to the public that it is not published on party lines or that it is not a party publication ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்படிப்பட்ட 'இம்ப்ரஷன்' எதுவும் பொதுமக்களிடத்தில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இது பத்திரிகையினுடைய குறை அல்ல; சில பேருக்கு அப்படிப்பட்ட எண்ணம் ஏற்படுகிறது. அமைச்சர்களைப்பற்றிய செய்திகளைப் போட்டாலே, அமைச்சர்கள் ஒரு கட்சியைச் சார்ந்தவர்களாக இருக்கும் காரணத்தால், அது கட்சிச் செய்தி என்று, இரண்டையும் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது. 'தமிழரசு' பத்திரிகையில் வெளிவரும் செய்திகள் அனைத்தும் பொதுவான விஷயங்கள்தான். காந்திஜி பிறந்த நாள் விழாவின்போது காந்திஜியினுடைய வாழ்க்கை வரலாற்றைக் குறிப்பிட்டு அவர்களுடைய படம் முகப்புப் படமாக வெளிவரும். பண்டித நேரு அவர்களுடைய பிறந்த நாள் விழாவின்போது அவருடைய வாழ்க்கை வரலாறும் அவருடைய படமும் வெளிவரும். இது போன்று எல்லாக் கட்சிகளைப் பொறுத்தும் அனைவரையும் சமமாக நடத்தும் அளவுக்குத்தான் 'தமிழரசு' பத்திரிகைச் செய்திகள் வெளிவருகின்றன. அமைச்சர்களைப் பற்றி வெளியிடும் செய்திகளை வைத்துக்கொண்டு, அமைச்சர்கள் ஒரு கட்சியைச் சார்ந்தவர்கள் என்பதற்காக அதைக் கட்சிக் கண்ணோட்டத்தோடு பார்ப்பது நல்லதல்ல.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, இந்த அரசு, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், சாதிச் சழக்குகள் இவற்றையெல்லாம் ஒழிப்பதை இலட்சியமாகக் கொண்டிருப்பதால் இத்தகைய கருத்துக்களுக்கு வழிகாட்டும் முறையில் கட்டுரைகளும் கவிதைகளும் 'தமிழரசு' பத்திரிகையில் இடம்பெற வழி செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்போதே அதில் அரசினுடைய சாதனைகளை விளக்கும் கட்டுரைகள், சிறு கதைகள் கல்வி, சுகாதாரம், மருத்துவம், விவசாயம், போன்ற பல அரசுத் துறைகளைப்பற்றி விரிவான விவரங்கள் அந்தப் பத்திரிகையில் வெளியிடப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போல், சமுதாய சீர்திருத்தத்திற்கான கட்டுரைகளும் அதிலே இடம் பெறுவதற்கு எந்தவிதத் தடையும் இல்லை.

[1971 டிசம்பர் 10

### தாந்தோணி பேரூராட்சிக்குக் குடிநீர் வசதி.

*215 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாந்தோணி பேரூராட்சிப் பகுதியில் உள்ள ஊர்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்த நிலைமையில் உள்ளது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 11—9—1971-ல் தாந்தோணி பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கும் ஆய்வு மதிப்பீடு ரூபாய் 14,000-க்கு நிர்வாக ஒப்புதல் அளித்திருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் தாந்தோணி பேரூராட்சிக்கு குடிநீர் வழங்க ஆய்வு வேலைகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, தாந்தோணி மிகமிகப் பின்தங்கிய பகுதி. ஆகவே, இதுபோன்ற பின்தங்கிய பகுதிக்கு முக்கியத்துவம் கொடுத்து இந்தத் திட்டத்தை விரைவாக முடித்துக்கொடுப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பின்தங்கிய பகுதி என்ற காரணத்தினால் தான் ஆய்வு மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. பேரூராட்சி ஆய்வு மதிப்பீட்டுத் தொகையைச் செலுத்தியவுடன் அந்த வேலைகள் மேற்கொள்ளப்படும்.

### திரைப்படத் தொழில் நுட்பக்கல்வி.

*216 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சினிமாத்துறை தொழில் நுட்பக் கல்விப் பகுதி ஒன்றை சென்னையில் துவக்கும் யோசனை ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) திரைப்படத் தொழில் நுட்பவியல் நிலையம் ஒன்று அரசு நிறுவனம் ஏற்கனவே செயற்பட்டு வருகின்றது.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. எம். தேவராசன்:** பூனாவில் உள்ளதுபோல இங்கேயும் நடிப்புத் தொழில் கற்றுக்கொடுக்க ஒரு கல்லூரி ஆரம்பிக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்போதே ஆரம்பிக்கப்பட்டிருக்கிற நிறுவனத்தில் நடிப்புப் பயிற்சி கற்றுத் தரப்படுகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இதனுடன் சர்க்காரே ஒரு ஸ்டுடியோ கட்டியிருக்கிறார்களே, அதை விரிவுபடுத்தி சர்க்காரின் செலவில் சோவியத் யூனியனில் விசேஷப் படங்கள் எடுக்கப்பட்டிருப்பதுபோல நம்முடைய சிறப்பான விடுதலைப் போராட்டங்களையும் படங்களாக எடுக்க முன்வருவார்களா?



1971 டிசம்பர் 10]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்போது ஸ்டுடியோ சம்பந்தப்பட்ட வேலைகள் செய்தித்துறை மூலமாகக் கவனிக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் சொன்னதுபோல போராட்டம் சம்பந்தமாக செய்திப்படம் எடுக்க முயற்சி எடுக்கப்படுகிறது. முழு நீளப்படமாக இல்லாவிட்டாலும் சிறுசிறு செய்திப்படங்களாக எடுக்க செய்தித்துறை ஏற்பாடு செய்திருக்கிறது.

**திரு. நா. வீராசாமி:** கல்வித்துறையில் புதியதான வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுப்பதுதான் வேலைவாய்ப்புக்கும் சரியாக இருக்கும். எல்.எம்.இ., எல்.இ.இ., படித்தவர்களுக்கு எல்லாம் இப்போது வேலைவாய்ப்புப் பெறுவது கடினமாக இருக்கிறது. ஆங்கிலப் படங்களைப் பார்க்கிற நேரத்தில் படங்களில் லேப், காமரா போன்ற [illegible] பட்டங்கள் பெற்றவர்களைப் பார்க்கிறோம். அது போன்ற பல படிப்புகளுக்கும் நம் நாட்டில் ஏற்பாடு செய்தால் பலபேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்குமே. அதுபோன்ற படிப்புகளையும் நம் நாட்டில் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஏற்கனவே அப்படிப்பட்ட பயிற்சிகளே இல்லாமல் அடையாறில் நடைபெற்று வந்தது. இப்போது அந்தப் பயிற்சிகளுக்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம். படத்தொகுப்பு பயிற்சிக்கு பி.யு.சி. படித்திருக்கவேண்டும். பயிற்சிக்காலம் 2 ஆண்டு. டிப்ளமா வழங்கப்படும். நடிப்புக்கு எஸ்.எஸ்.எல்.சி. படித்திருக்கவேண்டும். பயிற்சிக்காலம் 2 ஆண்டு. டிப்ளமா வழங்கப்படும். படம் இயக்குதல், திரைக்கதை, வசனம் எழுதுதல் ஆகியவற்றுக்கு கல்லூரி படிப்பு முடித்திருக்கவேண்டும். பயிற்சிக்காலம் 3 ஆண்டு. டிகிரி வழங்கப்படும்.

**திரு. கே. என். குமாரசாமி:** முதல் அமைச்சர் அவர்கள் நடிப்புத் தொழிலும் கற்றுக் கொடுப்பதாகச் சொன்னார்கள். பழைய நம் நாட்டு நாகரிகம், எது இந்திய நாட்டு நாகரிகம் என்பது கற்றுக்கொடுக்கப்படுகிறதா? சினிமாக்களில் எல்லாம் அந்நியநாட்டு நாகரிகங்களே புகுத்தப்படுகின்றனவே.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எல்லா நாகரிகங்களையும் நடித்துக் காட்டுவது நடிகர்களுடைய திறமையைப் பொறுத்தது. எந்த எந்த நாகரிகங்களைப் படத்தில் புகுத்துவது என்பது படம் எடுப்பவர்களுடைய எண்ணத்தைப் பொறுத்தது.

**திரு. கா. வேழவேந்தன்:** இப்போது தமிழ்நாட்டுத் திரைப்படத்துறை மிகச் சிறப்பாக வடநாட்டவர்களை எல்லாம் கவர்ந்திருக்கிறது. மேலும் இந்தச் சிறப்பை விரிவுபடுத்தத் திரைப்படக் கல்லூரியில் எல்லாத் தொழில் நுணுக்கத் துறையிலும் பயிற்சி அளிப்பதை விரிவுபடுத்துவார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மேலும் திரைப்படத்துறையில் வளர்ச்சி காண்பதற்கேற்ற வகையில், இத்துறையில் கலை வல்லுநர்களின் ஆலோசனைகளை எல்லாம் கண்டறிந்து, அவற்றுக்கேற்ற வசதிகள் செய்வதற்கிருக்கிறோம்.

**திரு. எஸ். கணேசன் :** சினிமாத்தொழில் பயிற்சிக் கல்விக் கூடத்தில் ஆண்டுதோறும் எவ்வளவு மாணவர்கள் ஒவ்வொரு துறையிலும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்த ஆண்டு மாத்திரம் பயிற்சிக்கு 82 பேர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். 1960-இல் இருந்து பத்து அல்லது பதினைந்து பேர்களுக்குத்தான் பட்டம் வழங்குகிற நிலை இருந்தது.

## *Special Officers for Tamil development*

* 217 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether there are proposals under the consideration of the Government to appoint special officers for the development of Tamil in disitricts ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தமிழ் வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தில் ஆய்வுத் தனி அலுவலர் ஒருவர் உள்ளார். அவர் ஆட்சி மொழிச் சட்டத்தை மாநிலத்திலுள்ள அரசு அலுவலகங்கள் யாவற்றிலும் துரிதமாகச் செயல்படுத்துவதை அவ்வப்போது ஆய்வு செய்யும் பணியைச் செய்கின்றார். மேலும் 9 ஆய்வுத் தனி அலுவலர்களை மாவட்டங்களில் நியமித்து ஆட்சி மொழிச் சட்டச் செயலாக்கத்தை விரைவுபடுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

## கயத்தாறு, ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள டிராக்டர்கள்

* 218 வினா.—திரு. எம் முத்தையா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கயத்தாறு, ஒட்டப்பிடாரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் டிராக்டர்களின் பராமரிப்புக்காக 1970–71-ம் ஆண்டில் செலவான தொகை எவ்வளவு ?

(இ) மேற்கண்ட ஊராட்சி ஒன்றியங்களில் டிராக்டர்கள் மூலம் 1970–71-ம் ஆண்டில் வரவு எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :**

| | | பராமரிப்புக்காக செலவு. |
|---|---|---|
| (அ) | (1) கயத்தாறு ஊராட்சி ஒன்றியம். | ரூ. 5,101-75 |
| | (2) ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம். | ரூ. 11,945-00 |
| | வரவு. | |
| (இ) | (1) கயத்தாறு ஊராட்சி ஒன்றியம். | ரூ. 3,375-00 |
| | (2) ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம். | ரூ. 8,339-00 |

**திரு. எம். முத்தையா :** தலைவர் அவர்களே, தனியார் வைத்திருக்கும் டிராக்டர்கள் மூலம் லாபம் கிடைக்கிறது. ஆனால் ஊராட்சி ஒன்றியங்களில் வருமானத்தைவிட செலவுதான் அதிகமாக இருக்கிறதே, இதைப்பற்றி அரசு ஆராயுமா ?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, செலவைக் காட்டிலும் வருமானம் பெருகவேண்டும் என்கிற அடிப்படையில்தான் செயல்படவேண்டும். ஆனால் இங்கே செலவைக் காட்டிலும் வருமானம் குறைவாக இருப்பதற்கான காரணங்களைக் கண்டு ஆராய்ந்து வருமானத்தைப் பெருக்குவதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளலாம்.

## *Municipalities of Tirunelveli, etc.*

* 219 Q.—THIRU T. GANAPATHY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to integrate the municipalities, viz., Tirunelveli, Palayamkottai and Melapalayam to form a Corporation; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. டி. கணபதி :** இந்த மூன்று நகராட்சிகளும் சேர்ந்தாற்போல இருப்பதனால் பொதுமக்களுடைய சௌகரியம், ஒருமைப்பாடு இவற்றைக் கருதி இந்த மூன்றையும் ஒரு மாநகராட்சியாக மாற்ற அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அப்படிப்பட்ட கோரிக்கையை அந்த மூன்று நகராட்சிகளும் தெரிவிக்கவேண்டும். பொதுமக்களும் விரும்பவேண்டும். அப்படிப்பட்ட கோரிக்கை எதுவும் அந்த மூன்று நகராட்சிகளிடம் இருந்து வரவில்லை. தனித்தனியாக இயங்கி, தங்கள் தங்கள் பணிகளையே சிறப்பாக ஆற்ற அவை விரும்புகின்றன. அவர்கள் அதுபோன்ற ஒரு கோரிக்கையை அனுப்பிவைத்தால் அரசு அதற்குப் பிறகு ஆராய்ந்து நிதி வசதி இருக்கின்றதா என்று பார்க்கலாம்.

## *Sri Subramaniaswami Arts College*

* 220 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether there is any proposal under the consideration of the Government to take up the work of constructing pucca buildings for the Sri Subramaniaswami Arts College, Tiruttani, this year?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கல்லூரி கட்டுவதற்கு இடம் இன்னும் ஒதுக்கப்படவில்லை. இடவசதி செய்து தரப்பட்ட பின்பு கட்டிடங்கள் கட்டுவது பற்றி ஆலோசிக்கப்படும்.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவர் அவர்களே, தியாகராய கல்லூரி முதல்வர் திரு. ராஜகோபால் நாயுடு அவர்கள் எந்த இடத்தில் கட்டிடம் கட்டலாம் என்பதற்கான அறிக்கையைச் சமர்ப்பித்து விட்டார்களா? எப்போது அந்த வேலை துவங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா நெடுஞ்செழியன்:** சுப்பிரமணிய தேவஸ்தானத்தைச் சேர்ந்தவர்கள் அதற்கான நிலத்தைக் கொடுப்பதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் இன்னும் நிலம் ஒப்படைக்கவில்லை. நிலம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் தான் கட்டிடம் கட்டுவதற்கான முயற்சியை மேற்கொள்ளலாம்.

**திரு. இ. எஸ். தியாகராசன் :** இந்தக் கல்லூரிக்காக கோவிலில் இருந்து 5 லட்சம் தருவதாகச் சொன்னீர்களே, அந்தத் தொகை வந்து விட்டதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதில் ஒரு பகுதி வந்திருக்கிறது. இன்னொரு பகுதி வரவேண்டியதாக இருக்கிறது.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரி அமைக்க குழு அமைக்கப்பட்டு, அது பொதுமக்களிடத்திலே 25 ஆயிரம் ரூபாய்க்கு வசூல் செய்யப்பட்ட அந்தப் பணத்தை அறங்காவலர் வசிடத்தில் ஒப்படைத்து விட்டார்களா ? எங்கே அந்தப் பணம் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரப்படும்.

**திரு. இ. எஸ். தியாகராசன் :** தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரியில் இந்த ஆண்டாவது பட்டப் படிப்பு தொடங்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பட்டப் படிப்புக்கு போதுமான கட்டிட வசதிகள் வேண்டும். கட்டடம் கட்டுவதற்கான நிலத்தையும், ஐந்து லட்சம் ரூபாயும் கொடுக்க அந்தக் குழுவினர் ஒப்புக் கொண்டுள்ளார்கள். நிலத்தை ஒப்படைத்தால் கட்டடம் கட்டப்பட்டு மேற்கொண்டு, பட்டப் படிப்புக்காக பல்கலைக் கழகம் அனுமதி அளிக்க வேண்டும். தற்காலிகமான இடமாக இருந்தாலும், இடத்தின் வசதியைக் காண்பித்தால் பல்கலைக் கழகம் அனுமதி அளிக்கும்.

## *Medical centres in rural areas*

* 221 Q.—THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to assist Doctors in opening Medical Centres in rural areas on co-operative basis; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இல்லை.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கு இரண்டு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. மக்களுக்குத் தேவையான வகையில் சுகாதார வசதிகள் செய்யப்படவில்லை. ஆகவே, கூட்டுறவு அடிப்படையில் கிராமங்களில் மருந்தகம் திறந்தால், அலியோபதி டாக்டர் படித்தவர்கள் மக்களுக்கு உதவி செய்ய முடியும். ஆகவே, கூட்டுறவு முறையில் மருந்தகம் அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இந்தத் துணைக் கேள்வியில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் இரண்டு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் என்று குறிப்பிட்டார்கள். நமது மாநிலத்தில் உள்ள மொத்த 374 ஊராட்சி ஒன்றியங்களில் 367 ஒன்றியங்களில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் இருக்கிறது. மற்றவைகளில் இரண்டு இருக்கின்றன. இரண்டு என்பதே எதாவது





விதிவிலக்காக ஏற்பட்ட ஒன்றாகும். இரண்டாவதாக கூட்டுறவு முறையில் மருந்தகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்டார்கள். கூட்டுறவு முறையில் மருந்தகம் நடத்த முன்வருகிற டாக்டர்கள் கூட்டுறவுத் துறையில் அதற்கான விண்ணப்பம் செய்தால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கக் கூடும். நான்கைந்து டாக்டர்கள் சேர்ந்து நடத்துவதுதான் கூட்டுறவு என்பதாகும். ஒருவரே தனியாக இருந்து நடத்துவது கோஆபரேடிவ் பேசிஸ் என்று சொல்ல முடியாது. மக்களுக்காக கூட்டுறவு முறையில் நடத்துவதற்கு அரசாங்கம் ஆவன செய்யும். பொதுமக்களை சேர்ந்து நாங்கள் எங்களுக்காக ஒரு கூட்டுறவு மருந்தகம் கூட்டுறவு முறையில் நடத்துகிறோம் என்று சொல்வார்களேயானால் அதற்கு நிச்சயமாக ஆவன செய்து, அரசாங்கம் ஒத்துழைக்கும்.

சென்னை நகருக்குப் பக்கத்தில் "வாலன்டரி ஹெல்த் சர்வீஸ்" திட்டத்தின் படி ஒரு மருந்தகம் இயங்குகிறது. இது கூட்டுறவு முறையில் இல்லையென்று சொன்னாலும், அந்த அளவிற்கு ஆங்காங்கே கிராமப் பகுதிகளிலுள்ள மக்கள் கூட்டுறவு இயக்கமாக, கூட்டுறவு முறையில் உறுப்பினராகச் சேர்த்து ஓர் அமைப்பாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆங்காங்கே சிறு மருத்துவமனைகளை ஏற்படுத்தி, குறிப்பிட்ட டாக்டர் சில குடும்பங்களுக்கு பொறுப்பு ஏற்றுக் கொள்கிற முறையை நடத்தி வருகிறார்கள். இந்த வாலன்டரி ஹெல்த் சர்வீஸை ஆங்காங்கே கிராமப் பகுதிகளில் ஏற்படுத்த, அங்குள்ள பொதுமக்களின் ஒத்துழைப்பை நமது சட்டசபை உறுப்பினர்கள் பெற்றுக் கொடுத்தால் பொதுமக்களுக்கு உதவி செய்தவர்களாவார்கள்.

## பயிற்சி மருத்துவர்கள் வேலை நிறுத்தம்

* 222 விஞ.—திரு. இ. எஸ். தியாகராசன்
திரு. கே. எ. வகாப்
டாக்டர் எச். வி. ஹாண்டே } மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அரசாங்க மருத்துவ மனைகளிலுள்ள அவுஸ் சர்ஜன்கள் வேலை நிறுத்தம் 1971-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடத்தப்பட்டதா ?

(இ) ஆம் எனில், எந்த காரணத்துக்காக வேலை நிறுத்தம் நடத்தப் பட்டது ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) மாதத்திற்கு ரூபாய் 250 உதவிப்பணத்துடன் ஏற்படுத்திய பயிற்சி மருத்துவ உதவியாளர்கள் (Assistantship Training) பதவியை எடுத்துவிட வேண்டுமென கோரி வேலை நிறுத்தம் செய்தனர்.

**திரு. இ. எஸ். தியாகராசன் :** இன்னும் எத்தனை ஹவுஸ் சர்ஜன்கள் வேலையின்றி இருக்கிறார்கள் என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, ஹவுஸ் சர்ஜன் பயிற்சி முடிந்தவுடன் அவர்களுக்கு எவ்வளவு விரைவில் வேலை கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவில் வேலை கொடுக்கலாம் என்பதுதான் இன்றைக்கு

உள்ள நிலைமை. ஏறத்தாழ 100, 150 பேர்கள் விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். முப்பது, நாற்பது பேர்களுக்குத்தான் இரண்டு மூன்று மாத காலத்தில் இயல்பாக வேலை கிடைக்கும் வாய்ப்பு ஏற்படுகிறபோது, இடத்தைப் பொறுத்து அவர்கள் அனுப்பப்படுவார்கள்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, ஹவுஸ் சர்ஜன்ஸ் ஸ்ட்ரைக் நிற்பதற்கு எந்த அடிப்படையில் ஒத்துக்கொண்டார்கள்? மேலும், ஏதாவது சலுகை அளிப்பதாக அரசாங்கம் ஒத்துக்கொண்டதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அடிப்படை இல்லாமல் வேலை நிறுத்தத்தை ஆரம்பித்துவிட்டார்கள். காரண காரியங்களை விளக்கிய பின்னர் அடிப்படைக் காரணம் இல்லையென்று வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர். நேர்முக தேர்ச்சி பெற்றுவிட்டாலும், பெறாவிட்டாலும் வேலை கொடுக்கவேண்டும். பயிற்சி பெற்ற அனைவருக்கும் வேலை கொடுக்க வேண்டும் என்பது அவர்களுடைய கோரிக்கை. பயிற்சி பெற்ற அனைவருக்கும் வேலை கொடுப்பது என்பது அரசாங்கத்தால் முடியாது. எவ்வளவுபேரைப் பயன்படுத்த முடியுமோ அவ்வளவு பேரைத்தான் பயன்படுத்த முடியும். மற்றவர்கள் சுயமாக தொழில் செய்யலாம். அதுவும் முடியாவிட்டால் அரசியலுக்கு—வேண்டுமானால்—வரலாம். மற்றொன்று, 250 ரூபாய் உதவிப் பணத்துடன் ஏற்படுத்திய பயிற்சி மருத்துவ உதவியாளர்கள் முறையில் 100 பேருக்காவது வேலைவாய்ப்புக்கொடுத்து, கிராமப்புறங்களில் பணியாற்றி, அதன் பின்னர் டாக்டர்களாக வரலாம் என்ற திட்டத்தை அமைச்சரவை ஏற்படுத்தியது. "250 ரூபாய் கொடுத்து எங்களுடைய உழைப்பை வாங்கிக் கொள்வது எங்களுடைய வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கும்" என்று சொன்னார்கள். "உங்களுடைய வளர்ச்சிக்கு இடையூறு செய்யவில்லை" என்று நாங்களும் அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டோம். அவர்களும் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டுவிட்டார்கள்.

DR. H. V. HANDE : Is it a fact that one of the reasons for the dissatisfaction of House Surgeons is because even though there were number of vacancies sometime ago and even though Government have notified that certain vacancies were there, the executive at the level of the Director of Health Services and the Director of Medical Education did not clearly notify these jobs and fill up the vacancies? That is the grievance of the House-Surgeons. Has the Hon. Minister gone into all these aspects and will he see to it that the anomaly is remedied?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, வெளியிலிருந்து பார்க்கிறபோது, இந்த இலாகாவில் உள்ளவர்கள் பொறுப்போடு அதை நிறைவேற்றுவதற்கு அக்கறை எடுத்துக்கொள்ளாத காரணத்தினால் வேலை காலியாக இருப்பதுபோல் தோன்றுகிறது. மருத்துவத் துறையில் பணியாற்றிக் கொண்டிருப்பவர்களை புதிதாக ஓரிடத்தில் நியமித்தால் இன்னும் கூட முழு சுதந்திரம் உள்ளவர்களாக நினைத்துக்கொண்டு, போடுகிற இடத்தில் ஒரு மாதமானாலும் சென்று வேலையில் சேருவதில்லை. விடுமுறை போட்டுவிட்டு இருந்து விடுகிறார்கள். புதிதாக ஒருவரை வேலைக்குப் போட்டாலும், அவர்களும் சிறு கிராமங்களுக்குச் சென்று வேலையில் சேருவதில்லை. அப்படிப் போனாலும் அங்கே இருப்பவர்கள் சார்ஜ் ஒப்படைப்பது இல்லை. இப்படியாக இது ஏறத்தாழ ஒரு மாதம், இரண்டு மாதம் என்று ஆகிவிடுகிறது, மருத்துவத்



துறையிலே உள்ளவர்கள் வசதி, செல்வாக்கு காரணமாக அரசாங்கத்தினுடைய நிர்வாகத் துறைக்கு முழு அளவுக்கு ஒத்துழைப்புத் தருவதில்லை. அப்படிப்பட்ட ஒத்துழைப்பு பெற முயற்சிக்கப்படவில்லையானால், அரசாங்க விதிமுறைகளை ஏற்படுத்தி, முறைப்படி செயல்படுத்துவதற்கு எத்தனை இடங்கள் நிரப்பப்படவில்லை என்பதைத்திட்டவட்டமாக அறிவிக்க முடியும்.

### திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மருந்தகங்கள்.

* 223 வினா.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த மருந்தகங்களை நடப்பு ஆண்டில் அரசு மேற்கொள்ளும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இல்லை.

**திரு. சு. துரைசாமி :** தலைவர் அவர்களே, திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் நிதிநிலைமை பற்றாக்குறையாக இருக்கிறது. நிதி பற்றாக்குறையிருந்த திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மருந்தகங்களை அரசாங்கம் மேற்கொள்ள முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் நிதி பற்றாக்குறை நிலைமை இருந்து வருகிறது. அது திருப்பூருக்கு மட்டுமல்ல. மருந்தகங்களை அரசே மேற்கொள்ள வேண்டுமென்று வேண்டுகோள் விடுவது என்றால், எல்லா ஊராட்சி ஒன்றியங்களும் இப்படிச் செய்யலாம். கொள்கை என்பது வரவேற்கத்தக்கது. ஆனால் அதற்கான வசதி என்கிற அடிப்படை இல்லாததாகும்.

### வடார்க்காடு மாவட்டத்தில் சீரணிப்பணி

* 224 வினா.—**திரு. தோப்பூர் திருவேங்கடம் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டத்திற்கு சென்ற ஆண்டு (1970) எவ்வளவு தொகை சீரணிப் பணிக்காக சீரணி நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டது?

(இ) அதில் செலவழிக்கப்படாமல் தொகை ஏதேனும் திருப்பப்பட்டதா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) சீரணிப் பணிக்காக வட ஆற்காடு மாவட்டத்திற்கு 1970-71-ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 1,20,000.

(இ) ஒதுக்கப்பட்ட தொகை முழுவதும் செலவழிக்கப்பட்டுவிட்டது.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட இந்தப் பணம் எந்தெந்த தாலுகாவுக்கு, எவ்வளவு எவ்வளவு செலவழிக்கப்பட்டது என்கிற புள்ளிவிவரத்தை அமைச்சர் அவர்கள் தருவார்களா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, வட்டவாரியாக விவரம் இல்லை. ஆனால் மாவட்டம் முழுவதும் செய்துள்ள பணிகள், கட்டி முடிக்கப்பட்ட பள்ளிக் கட்டிடம் 48; இணைப்புச் சாலைகள் 2, கால்வாய், குளம் தூர் எடுத்தல் 1; திறந்தவெளி அரங்குகள் 5 ஆகும். இவைகளின் மதிப்பீடு.

2,67,588 ரூபாய் ஆகும். ஆனால் அரசாங்கம் செலவழித்திருப்பது 1,23,577 ரூபாய் ஆகும். அதுமட்டுமல்ல, செய்யாற்றில் 'அண்ணா அரங்கம்' என்ற கட்டிடம் பத்தாயிரம் ரூபாய் செலவில் இந்தச் சிரமணி மூலம் கட்டி முடிக்கப் படும் தறுவாயில் இருக்கிறது.

முற்பகல் 9-30 திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திற்கு 1 லட்சத்து 26 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அது முழுவதும் செலவழிக்கப்பட்டதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டம் பெரிய மாவட்டம். அந்தப் பணம் போதவில்லை என்று கோரிக்கை வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால் அந்த மாவட்டத்திற்குப் பணம் கூட்டிக்கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சியெடுக்குமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: கனம் உறுப்பினர் அவர்களுடைய இந்த யோசனையை எதிர்காலத்திலே பரிசிலனை செய்யலாம்.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, சிரமணிப் பணிகளுக்காகச் செலவழிக்கப்படுகின்ற பணத்திலே ஏதாவது மானியமாக மத்திய அரசு தருகின்றதா? அப்படித் தருவதில்லையென்றால் இனியாவது மத்திய அரசு தர வேண்டுமென்று அரசாங்கம் வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்களுடைய யோசனையும் அரசு நினைவிலேகொண்டு ஆவன செய்ய முயற்சிக்கும்.

## தீண்டாமை ஒழிப்பு

* 225 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் செய்வதற்காக தனியாக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதில் பணியாற்றுபவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:

(அ) இல்லை.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

திரு. எம். முத்தையா: தலைவர் அவர்களே, தீண்டாமையை ஒழிப்பதற்காகக் குழுக்கள் அமைக்கப்பட்டாலும் வேறு வழிகளிலே தீண்டாமையை ஒழிப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தீண்டாமையை ஒழிப்பதற்குச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு குழுக்கள், தாலுக்கா வாரியாக ஒரு குழுவும், மாவட்ட வாரியாக ஒரு குழுவும் அமைக்கப்பட்டு அந்தக் குழு பிரச்சாரத்தில் தீவிரமான பங்குகொள்ளும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, இன்று நாட்டிலே கல்வி வேகமாகப் பரவிக்கொண்டிருக்கிறது. தீண்டாமையை அனுசரி



கிறவர்கள் தண்டனை பெறுவார்கள் என்பதை அறியாதவர்கள் அதிகமாக இல்லை. குடிசைவாழ் பகுதிகளைச் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு ஏற்ற வகையில் அவர்களுக்கு அங்கே தேவையான கழிவிடங்களை அமைத்துத் தருவதற்கும் மேலும் அடிப்படையான சில வசதிகளைச் செய்து தருவதற்கும் அரசாங்கம் ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இப்பொழுதே அவர்கள் வாழ்கின்ற பகுதிகளிலே சுத்தமாக வைத்து இருக்கவேண்டுமென்பதை ஊக்குவிக்கும் பொருட்டு 300 ரூபாய் மதிப்புள்ள வானொலிப் பெட்டிகள் பரிசாகத் தரப்படுகின்றன. அதன்மூலம் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது.

திரு. எம். சுரேந்திரன்: சார், தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் என்பது மிகப் பழமையான ஒரு வழியாக மாறிவிட்டது. தீண்டாமை இருந்து கொண்டிருப்பதற்குக் காரணம் பொருளாதார நிலைதான் என்பது தொழிற்சாலைகளிலே தொழிலாளர்களும் மற்றவர்களும் நடந்து கொள்ளக்கூடிய நிலைமையைப் பார்த்தால் நன்கு புரிந்துகொள்ளலாம். தீண்டாமை ஒழிக்கப்படவேண்டுமென்றால் அவர்களுடைய அந்தஸ்து உயர வேண்டும். எனவே அந்தஸ்தை உயர்த்துவதற்கு அதிகக் கவனம் செலுத்துவதற்கு வழிசெய்தால் நன்றாக இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: பொருளாதார மாற்றத்தினால் மாத்திரம் தீண்டாமை ஒழிந்துவிடும் என்று சொல்லமுடியாது, சமுதாய மாற்றமும் வேண்டும். ஒரு மறுமலர்ச்சி சமுதாயத்திலே இருந்தால்தான் மனமாற்றம் ஏற்படும். பொருளாதார மாற்றத்துடன் சமுதாய மனமாற்றம் தான் ஏற்படும் என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. நா. வீராசாமி: * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதனை நீக்கிவிடுமாறு ஆணையிடுகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா: சபாநாயகர் அவர்களே, அரிசன மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு வகைகளிலே பொருளாதார உதவி போன்ற மற்ற உதவிகள் எல்லாம் செய்தாலும் பம்பாய் மாநிலத்தில் ஏற்படுத்தியிருப்பது போன்ற அரிசனங்களுக்கு ஒரு வெறுங்கியல் கார்ப்பரேஷன் அவர்களுக்காக ஏற்படுத்திக்கொடுக்க அரசாங்கம் ஆலோசிக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அது அரசாங்கத்தின் பரிசிலனையில் உள்ளது.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, சுத்தமாக வைத்திருக்கின்ற சேரிகளுக்கு பரிசுகள் 300 ரூபாய் அளவுக்குக் கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சென்னையிலே உள்ள சேரிகளில் எத்தனைக்கு அப்படிப்பட்ட பரிசுகள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: சென்னையிலே சேரிகள் என்று தனியாக எதுவும் நிர்ணயிக்கவில்லை. அவர்களாவே சேர்ந்து பல வட்டங்களில் வாழ்கிறார்கள். சென்னையில் இந்தச் சிக்கல் எழவில்லை.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[1971 டிசம்பர் 10

*** 226 வினு—திரு. அ. சின்னசாமி:** மாண்புமிகு அரிஜன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

வானெலியில் தீண்டாமை பற்றி அறவுரைப் பகுதியில் ஒலிபரப்பும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** இல்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, தீண்டாமை என்பது சமுதாயத்தில் புரையோடிப்போன புண்போன்றது. அதை வானெலி மூலமும் பிரச்சாரம் மூலமும் ஆற்றமுடியும் என்று அரசாங்கம் கருதுகிறதா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** தீண்டாமையை ஒழிப்பதற்குப் பல கோணங்களிலே பல திட்டங்களை அரசாங்கம் அமுல்செய்து கொண்டிருக்கிறது. அந்த வகையில் சமூகநலக் கூடங்களை அமைத்து மாவட்டத்திலே கருத்துக்களைப் பிரச்சாரம் செய்துவருகிறார்கள். பஜனைகள் மூலமாக தெளிவுரைகள் வழங்கப்படுகின்றன. உயர்ந்த சாதியைச் சேர்ந்தவர்களும் தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவர்களும் இரண்டறக் கலந்து பழகுவதற்கு ஏற்றவகையில் கலாச்சார நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. சமூக நலப் பணியாளர்கள் ஆணும் பெண்ணும் சேர்ந்து பணியாற்ற வழி செய்யப்படுகின்றது. நல்ல முறையிலே இடங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு தான் முதலிலேயே கூறியபடி வானெலிப் பெட்டிகள் பரிசாக அளிக்கப்படுகின்றன. மேலும் மேலும் அவர்கள் நல்லமுறையிலே முன்னேறுவதற்கும், பொருளாதார ஏற்றம் பெறுவதற்கும் நல்ல திட்டங்களை அரசாங்கம் செய்துகொண்டிருக்கிறது. அனைவரும் தீண்டாமை ஒழியவேண்டும் என்ற முறையிலே மன மாற்றத்தை ஏற்படுத்தவேண்டுமே தவிர கட்டாயமாக மனத்திலே அந்த மாற்றத்தைப் புகுத்தமுடியாது என்பதை அனுபவ ரீதியாக நாங்கள் காண்கிறோம்.

THIRU K. M. SUBRAMANIAM: May I know whether there is any place in Tamil Nadu where untouchability is practised and whether any complaints of untouchability in any place in Tamil Nadu have been received?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** எல்லா மாவட்டங்களிலும் உண்டு. புகார்கள் தேவையென்ருல் அதைக் கணக்கிட்டுத் தருவதற்கும் என்ஞல் முடியும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, இளையபெருமாள் கமிட்டி அறிக்கையில் தீண்டாமையைப் போக்குவதற்கு பல விஷயங்களைச் சொல்லி இருக்கிருர்கள். தமிழகத்திலே தீண்டாமையை அனுஷ்டிக்கக்கூடியவர்களில் ஒரு குறிப்பிட்ட பேரின்மீதாவது சட்டப்படியாக நடவடிக்கை எடுக்க அரசுக்கு ஆலோசனை உண்டா? முன்பெல்லாம் அக்ரஹாரம் என்றும் சேரிகள் என்றும் தனித்தனியாக இருந்தது. அதையெல்லாம் மாற்றி ஊரின் ஒரு பகுதியிலேயே தாழ்த்தப்பட்ட மக்களும் வாழக்கூடிய பகுதியையும் சேர்ப்பதற்கு செயற்குறிப்பு ஏதேனும் அரசாங்கத்திடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** இளையபெருமாள் கமிட்டியின் சிபாரிசுகளின்பேரில்தான் முதலில் தாலுகாவாரியாகக் குழுக்களும், மாவட்ட



1971 டிசம்பர் 10]

வாரியாகக் குழுக்களும் அமைத்து தீண்டாமையை ஒழிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தாலுகாக் குழுக்களில் பிர்க்காக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அங்கம் வகிக்கிருர்கள். அதற்கு தாசில்தாரோ அல்லது டிபெடி தாசில்தாரோ தலைமை தாங்குகிருர். துணை போலீஸ் அதிகாரி அவர்களுக்குத் துணையாக இருப்பார். எந்த இடத்திலே தீண்டாமை கடைப்பிடிக்கப்பட்டது என்று புகார் வந்தாலும் அந்த உறுப்பினர்கள் அந்த இடத்திற்குச் சென்று அறிந்துகொண்டு அப்படி நடைபெற்றதா என்று பார்த்து அதை போலீஸ் அதிகாரிக்குச் சொல்லி நடவடிக்கை எடுக்கப்படும். சில வழக்குகள் பதிவு செய்யப்பட்டு தகுந்த சாட்சியங்கள் இல்லாததால் விடப்பட்டிருக்கின்றன. சாட்சியங்களை மறைக்க முயற்சி செய்தாலும் அதையும் இந்தக் குழு கவனிக்கும். தீண்டாமை அனுஷ்டித்தால் முதலிலே 50 ரூபாய் அபராதம் அதைக் கட்டத் தவறினால் 6 மாதம் கடுங்காவல் என்று இருந்தது. தமிழக அரசு இப்பொழுது முதன்முறையாகச் செய்யக்கூடிய குற்றமாக இருந்தால் கட்டாயம் 50 ரூபாய் அபராதம் கட்டாயம் 3 மாதம் கடுங்காவல் என்று மாற்றியமைத்து இருக்கிறது. இரண்டாவது முறையாக செய்தால் 500 ரூபாய் அபராதம் என்றும் 6 மாதம் கடுங்காவல் என்றும் மூன்ருவது முறையாகச் செய்தால் 1 ஆண்டுக் கடுங்காவல் என்றும் 1,000 ரூபாய் அபராதம் என்றும் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் மூலம் தண்டிக்கப்படுகிருர்கள். மேலும் மேலும் அப்படிப்பட்ட செய்கைகளைச் செய்யக் கூடாது என்று குழுக்களே தீவிரமான பிரச்சாரம் செய்வதற்குத் துணைபுரிகின்றன. இளையபெருமாள் கமிட்டியின் சிபாரிசுகளை ஏற்றுத் தேவையானவற்றையெல்லாம் இந்த அரசாங்கம் செய்துகொண்டு வருகிறது.

**திரு. என். இராஜாங்கம்:** சபாநாயகரவர்களே, தெரியாதவர்களிடத்திலே தீண்டாமையைப்பற்றிப் பிரச்சாரம் செய்ய நம்மால் முடியும், ஓரளவு சிறுகச் சிறுகவாவது முடியும். ஆனல் தெரிந்தவர்கள் உள்ள இடங்களில், கல்விக் கூடங்களில், மாணவர் விடுதிகளில் முக்கியமாக விஷயம் அறிந்த வட்டாரங்களில் இந்த தீண்டாமை வளர்கிறது. இப்படிப்பட்ட இடங்களைப்பற்றி அரசாங்கம் கடுமையாக நடவடிக்கை எடுத்திருக்கிறதா? மேலும் இவ்வாறு நடக்காதபடி அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** தெரிந்தவர்கள் செய்தாலும், தெரியாதவர்கள் செய்தாலும் அரசாங்கம் சட்டப்படி நடவடிக்கை எடுத்தே தீரும். ஆனல் கடித்த பாம்புதான் விஷத்தைக் கக்க வேண்டும் என்று பெரியோர் அன்று அவர்கள் தீண்டாமையைப் பற்றிக் கூறியிருக்கிருர்கள். தீண்டாமை என்பது உயர்ந்த ஜாதி மக்களே அதைக் கூடாது என்று சொல்லுகிற நிலை வருகிறவரையில் இந்த ஏற்றத்தாழ்வு பிரச்னை இருந்தே தீரும்.

**திரு. சொ. காவேரிமணியம்:** பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தீண்டாமை சமுதாயத்திலே அந்தஸ்து பெற்றவர்கள், அதிகாரத்திலே இருக்கக் கூடியவர்கள், இன்னும் உயர்ந்தவர்களிடத்தில் அகலுவதாக இல்லை. ஆகவே, இந்த ஆமையை விரட்ட கிராமங்களில் அதிகாரிகள் நியமிக்கப்படும் நேரத்தில், ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள் தேர்தல் சமயத்திலே அவர்களுக்குத் தனி இடங்கள் ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள்

போன்றவைகளுக்கு ஒதுக்கி அந்தஸ்திலே வைத்துவதற்கு அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** உயர்ந்த அந்தஸ்திலே இருப்பவர்கள், அல்லது தாழ்ந்த அந்தஸ்திலே இருப்பவர்கள் என்று தாரதம்மியம் பார்த்து தீண்டாமை இருக்கவில்லை. தீண்டாமையானது மாச்சரிய மனப்பான்மையால அவரவர் உள்ளத்தில் இருக்கிறது. அது காலப்போக்கில்தான் மாறவேண்டும். ஆகவே மனமாறுதல்தான் ஏற்றது என்று அரசு கருதுகிறது. அதன்மூலம் ஒழிக்க முடியுமே தவிர உயர் அந்தஸ்து தருவதாலோ சட்டப்படி தண்டனை தருவதாலோ மாற்றி அமைத்துவிட முடியாது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவரவர்களே, கிராமங்களில் இருக்கக் கூடிய இந்தத் தீண்டாதவர்கள் வாழ்கின்ற இடங்களுக்கும், மற்றவர்கள் வாழ்கின்ற இடங்களுக்கும் ஜாதியின் அடிப்படையில் பெயர்கள் இருக்கின்றன. தீண்டாதவர்கள் வாழ்கின்ற இடத்திற்கு கீழ்த்தெரு என்றும், தீண்டப்படுபவர்கள் வாழ்கின்ற இடத்திற்கு மேலத்தெரு என்றும், பள்ளத்தெரு என்றும், பறத்தெரு என்றும் கிராமங்களில் இருக்கின்றன. நாம் எத்தனை சட்டங்கள் போட்டாலும், எத்தனைதான் பிரசாரம் செய்தாலும், பிரச்சாரம் செய்தாலும்கூட இவைகளைப்போன்ற சிறிய விஷயங்கள் இன்னும் ஒழிக்கப் படாமல் இருக்கிறது. அந்த [illegible] யூனியன்கள், பஞ்சாயத்துக்களுக்குச் சொல்லி அந்தப் பெயர்களை மாற்றி நல்ல பெயர்களை வைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** ஜாதிப் பெயர்கள் இருக்கக் கூடாது என்று அரசு கருதுகிறது என்று சொன்னாலும் நடைமுறையில் இன்றைக்கு கீழத்தெரு, மேலத்தெரு, பள்ளத்தெரு, பறத்தெரு என்று மட்டுமல்ல, செட்டியார் தெரு, முதலியார் தெரு, வாணியர் தெரு என்ற வகையிலும் இருக்கின்றன. அவரவர்கள் வாழ்கின்ற சமுதாயத்தோடு சேர்ந்து வாழ தமிழகத்திலிருப்பவர்கள் பழக்கப்பட்டு இருக்கிறார்கள். அந்த ஜாதிப்பெயரை வைத்து அழைக்கும் முறையிருக்கிறது. இவைகள் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் மாற வேண்டும். கட்டாயமாக மாற்றுகின்ற நிலை ஏற்பட்டால் சமுதாயத்திற்கு விரோதமாக அரசு செயல்படுகிறது என்று தவறாக எண்ணக்கூடும் என்பதால் தான் அரசு இதையெல்லாம் மெல்ல, மெல்ல செய்ய வேண்டுமென்று கருதுகிறது.

DR. H. V. HANDE: Sir, while replying to a supplementary question, the Hon. Minister has stated that still complaints are being received from almost all the districts of Tamil Nadu with regard to this serious problem. May I know many cases were actually brought to the notice of the Hon. Minister and in how many cases action was taken in a positive manner and culprits were punished? Also, will the Government take more stringent steps to see that some persons are punished so that it may serve as a deterrent?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** எத்தனை பேர்மீது வழக்கு தொடரப்பட்டது, எத்தனைபேர் தண்டிக்கப்பட்டார்கள் என்பது பற்றித் தனியாகக் கேள்விகேட்டால் பொதுக்கணக்கு கொடுக்க முடியும். அந்தத் தண்டனையை இன்னும் கடுமையாக ஆக்க வேண்டுமென்பதற்காகத்தான் 50



ரூபாய், கட்டத்தவறினால் 6 மாதம் என்று இருந்ததை 50 ரூபாய் கட்டாயமாக, கடைசித் தண்டனையாக 50 ரூபாய் என்று போட்டோம். 3 மாதம் கட்டாயம் கடுங்காவல்தான் வேண்டும். 50 ரூபாய் வரையிலே என்று இருந்தால் 1 ரூபாய், 2 ரூபாய் என்று கூட வைத்துக்கொண்டிருந்தார்கள். எனவே கட்டாயமாக 50 ரூபாய் என்று ஆக்கினோம். 6 மாதம் வரையிலே என்று கடுங்காவல் இருந்தால் 1 மாதம் அல்லது ஒரு நாள் அல்லது கடுங்காவலேகூட இல்லாமல் இருந்தது. ஆனால் கட்டாயமாக முதல் தடவைக்கு 3 மாதம் தண்டனை, கட்டாயமாக 50 ரூபாய் அபராதத்துடன் தண்டனை எனவும் கட்டாயமாக்கியும் அளவில் ஏற்றுக் கடுமையாக இன்றைக்குத் தமிழக அரசு மத்திய அரசின் வேண்டுகோளோடு மாற்றியமைத்திருக்கிறது. வழக்குகள் நிறைய இருக்கின்றன. சாட்சிகள் போதுமானவைகளாகக் கிடைப்பது இல்லை. புகார் கொடுக்கப்படும் நேரத்தில் வழக்குகள் தொடரப்படுகின்றன. சாட்சிகள் முதலிலே கூறுகிறார்கள், ஆமாம் பார்த்தேன் என்று. வழக்கைப் பரிசீலனை செய்யும்பொழுது சாட்சிகள் மிரட்டப்படுகிறார்கள், எனவே எதுவும் இல்லை. எனவே நியாயமான வழக்காக இருந்தால்கூட நிரூபிக்கப்படாத காரணத்தால் பல வழக்குகள் விடுபட்டுப் போகின்றன. அத்தனையையும் மீறி நிரூபிக்கப்பட்டால் தண்டனைக்குள்ளாக்கப்படுகின்றனர்.

**திரு. தி. பொன்னுமலை:** தலைவரவர்களே, கிராமப்புறங்களில் ஐயர், கவுண்டர், முதலியார் என்ற ஜாதிகளைப்போல் பறையர், பள்ளர், சக்கிலியர் என்ற இந்த மூன்று பேரும் ஒருவருக்கொருவர் பார்ப்பதில்லை, தொடுவதில்லை. எனவே இவர்களுக்கு [illegible] தனியாக பிரச்சாரம் செய்ய வழிவகை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** தீண்டாமை எந்த ஜாதியில், எந்தப் பெயர்களில் இருந்தாலும், யார்யார் மத்தியிலிருந்தாலும் இந்தச் சட்டத்தை அங்கே அமல்படுத்த முடியும்.

**திரு. மு. இரத்தினசபாபதி:** தலைவரவர்களே, கிராமப்புறங்களில் ஜாதிக்கு ஒரு கோயில், ஜாதிக்கு ஒரு குடிதண்ணீர்க்கிணறு என்று இருந்து அதிலே அரிசனங்கள் நுழைய, அரிசனங்கள் குடிநீர் எடுக்க முடியாத நிலை இன்னும் இருக்கிறது. ஆகவே, இந்தக் கோயில்களையும், கிணறுகளையும் தேசியச் சொத்தாக அறிவித்து அங்கே எல்லோரும் எந்நேரத்திலும் செல்லலாம், குடி தண்ணீர் எடுக்கலாம் என்ற அறிவிப்பைச் செய்ய வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்குமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** சட்டப்படி யாரையும் ஒரு பொதுக் குளத்திலோ, கிணற்றிலோ தண்ணீர் எடுக்கக்கூடாது என்றோ, ஆலயங்களுக்குச் செல்லக்கூடாது என்றோ தடுக்கக்கூடாது என்று இப்பொழுதும் சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தை மீறுகிறவர்கள் இருக்கிறார்கள். மீறுபவர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து தண்டனை தரப்படுகிறது. எனவே சட்டத்தின் மூலம் வெற்றி காணவில்லை என்பதைக் காட்டுகிறது. சட்டம்போட்டும் இன்னும் பல இடங்களில் தண்ணீர் எடுக்க முடியாமலும் ஆலயங்களுக்குச் செல்ல முடியாமலும், பொது வீதிகளிலே நடக்க முடியாமலும் பல தடைகள் உயர்ந்த ஜாதி மக்களால் இன்றைக்கு நடத்தப்பட்டு வருகிறது.

## Suppression of Immoral Traffic Act

* 227 Q.—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether it is a fact that in the Suppression of Immoral Traffic Act only women are prosecuted and not the accessories ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இல்லை.

விபச்சார விடுதியை வைத்திருக்கிற அல்லது நடத்துகிற அல்லது விபச்சாரம் செய்வதால் கிட்டும் வருமானத்தைக் கொண்டு வாழ்கிற அல்லது விபச்சாரத்துக்காகக் காமத் தரகராய்ப் பணிபுரிகிற அல்லது பரத்தமைக்காகப் பெண்களை கொணர்கிற விபசாரத்துக்குத் தூண்டுகிற அல்லது விபச்சாரத்துக்காக மகளிர் அல்லது பெண்களை எடுத்துக்கொள்கிற எவரும் குற்றவியல் வழக்கு தொடர்வதற்கு மகளிர் பெண்கள் விபச்சார ஒழிப்புச் சட்டத்தில் பல்வேறு பிரிவுகள் வகை செய்கின்றன.

மேற்கூறிய சட்டத்தின் கீழ், பரத்தமை நடக்கும் மனையில், மகளிர் அல்லது பெண்களை வைத்திருக்கிற அல்லது அவர்களுடைய மனையகத்தே பரத்தமை நடக்க அல்லது அவர்களுடைய பாதுகாப்பில் உள்ள மகளிர் அல்லது பெண்களை கற்பழிக்க அனுமதிக்கிற ஆண்கள், பெண்கள் ஆகிய இரு சாராரும் வழக்குத் தொடரப்படுவதற்கு உட்பட்டவராவர்.

பரத்தமைக்காகப் பொது இடத்தில் ஒருவரை வலிந்தழைக்கும், அவருக்குத் தொல்லை கொடுக்கும், தடை உண்டு பண்ணும் மகளிர்மீது மட்டுமே மேற்கூறிய சட்டத்தின்கீழ் வழக்குத் தொடரப்படுகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இந்தச் சட்டத்தின்கீழ் குறிப்பாக நகரங்களில் சாதாரணமாகயிருக்கும் பெண்கள்கூட "They are all being harased" என்ற நிலையைத் தடுக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா? அம்மாதிரி கம்ப்ளெயிண்ட்ஸ் வந்த காரணத்தால்தான் நான் இந்தக் கேள்வியைப்போட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இது பாதிக்கப்பட்டவர்கள் கொடுக்கின்ற புகார்கள்மீது உயர்ந்த போலீஸ் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கிறார்கள். குறிப்பிட்ட பெண்கள்மீது பழிவாங்கும் நோக்கத்தோடு அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தலாம் என்று கருதித்தான் அந்தப் பெண்கள்மீது நடவடிக்கை எடுக்கும்போது பக்கத்திலேயிருக்கும் சமூகத்திலே மிக உயர்ந்த நிலையிலிருப்பவர்களை சாட்சிகளாக வைத்துதான் அவர்கள்மீது வழக்கு தொடர்கிறார்கள். எனவே பழிவாங்கும் நோக்கத்தோடு பயன்படுத்த வழி ஏதும் இல்லை என்றுதான் அரசு கருதுகிறது.

**திரு. கோவை. செழியன் :** "விபசாரம்" ஒரு பொருளாதாரக் கேடு அதிகமாக ஏற்படும்போது செய்யப்படுகின்ற ஒன்றாக இருக்கிறது. இந்த உணர்வுகள் வருவதற்குக் காரணமாக இப்போது பல பத்திரிகைகளில் வரக்கூடிய கதைகள், படங்கள் ஆகியவை காரணமாக இருக்கின்றன. கற்பழிப்பது சம்பந்தமான கதைகள் வருகின்றன, படங்கள் அம்மணமாகப் போடப்படுகின்றன. சிவப்பு விளக்கு எரிகிறது என்றெல்லாம் சில பத்திரிகைகள் கதைகளைப் போடு



றார்கள். இவைகளை எல்லாம் தடை செய்ய அரசு முன்வருமா? சில ஓட்டல்களில் பிலிம் கோத்தே நிகழ்ச்சிகள் நடக்கின்றன. அவைகளும் தடை செய்யப்படுமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எங்கு நடந்தாலும் அரசு கட்டாயமாக நடவடிக்கை எடுக்கும். விபசாரம் எந்த உணர்வால் ஏற்படுகிறது என்பது எனக்குத் தெரியாது.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** இந்த விபசாரத்தில் ஈடுபடக் கூடிய ஆணும் பெண்ணும் கல்யாணமாகாதவர்களாக இருந்தால் அந்த ஆண் கட்டாயமாக அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்றும், நடுவில் கைவிட்டு விட்டால் வாழ்க்கைச் செலவுக்கு ஜீவனாம்சம் கொடுக்க வேண்டுமென்றும் சட்டம் செய்தால் தவறு இழைப்பவர்கள் வாழ்க்கை முழுவதும் அந்தப் பெண்ணைச் சுமக்க வேண்டுமென்ற காரணத்தால் தவறு செய்பவர்கள் குறையக்கூடும் என்ற கருத்தைப் பற்றி அரசு ஆராயுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இருவரும் தொடர்ந்து வாழ்க்கையில் ஈடுபடுவது என்றால் அது விபசாரமாகாது. விபசாரம் என்பது பணத்திற்காகவோ அல்லது வேறு பல நோக்கத்தோடோ செய்யப்படுகிற ஒன்றாகும். அப்படிச் செய்கிற இரண்டு பேரையும் சேர்ந்து வாழ வைக்க வேண்டுமென்றால் அதற்கு இருவரும் ஒத்துக் கொண்டால்தான் முடியும்.

## கன்னியாகுமரி மாவட்டக் கிராம அலுவலர்கள்

* 228 வினா.—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு உணவு—வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில், கிராம அதிகாரிகள் முழுச்சம்பளம் கொடுக்கப்பட்டு முழுநேர ஊழியர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்களா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) & (இ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கிராம ஊழியர்கள் அனைவரும் முழுநேர அரசு ஊழியர்களாவர். அவர்களது சம்பள விகிதம் :—

(1) வில்லேஜ் ஆபீஸர் ரூ. 160-5-240.

(2) வில்லேஜ் அஸிஸ்டெண்ட் ரூ. 150-4-170-5-225.

(3) வில்லேஜ் மேன் ரூ. 130-3-160-4-180-5-195.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இவர்களுடைய சம்பளம் மிகவும் குறைவாக இருக்கிறது என்ற காரணத்தால் இவர்களுடைய சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்க அரசாங்கம் ஏதாவது வழிவகை ஏற்படுத்துமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இல்லை.

**திரு. கே. என். குமாரசாமி :** கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் இவர்கள் நிரந்தரமான ஊழியர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். மற்ற மாவட்டங்களிலும் இவர்களை நிரந்தரமான ஊழியர்களாக நியமிக்க அரசு வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதற்கு மாறாக தமிழ் நாட்டில் இருப்பது போல் அந்த மாவட்டத்திலும் புதுத்த அரசாங்கம் யோசனை செய்து கொண்டிருக்கிறது.

## 'ஸ்ரீ' க்குப் பதில் 'திரு'.

* 229 வினா.—திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவில்லிபுத்தூர், ஸ்ரீரங்கம், ஸ்ரீபெரும்புதூர் ஆகிய ஊர் பெயர்களில் 'ஸ்ரீ'க்குப் பதிலாகத் 'திரு'வைப் பயன்படுத்த அரசிடம் ஏதேனும் செயற் குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம்.

திரு. கா. காளிமுத்து: ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியிலுள்ள காமராஜ் காங்கிரஸ் கட்சியினர் உட்பட அனைவரும் ஏகமனதாக திருவில்லிபுத்தூர் என்று பெயரை மாற்ற வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்த ஊர் பெயரை திருவில்லிபுத்தூர் என்று மாற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இதுபற்றி நம்முடைய அரசு மத்திய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதியிருக்கிறது. மத்திய அரசு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலையில் ஸ்ரீவில்லிபுத்தூர் என்ற பெயரே இருக்கட்டும் என்று கூறியிருக்கிறார்கள். அரசு தமிழ் வளர்ச்சித் துறையைக் கலந்து முடிவு எடுக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஊர்களுடைய பெயர்களை மாற்றும்போது அந்த ஊர் மக்களுடைய எண்ணம் என்ன என்பதை அறிய வழிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா? முனிசிபாலிடியோ, பஞ்சாயத்தோ தீர்மானம் செய்தாலும் ஊர் மக்களின் எண்ணத்தையும் அறிந்து பெயர் மாற்றப்படுமா? இன்று பரங்கிமலை என்று இருப்பது பிருங்கிமாமலை என்ற பழம் பெயராக இருந்தது. இப்போது ஆங்கிலப் பெயரைத் தமிழ்ப் பெயராக மாற்றி வைத்து விட்டார்கள். இப்படிப்பட்ட பிரச்சினைகளிலே அவசரப்பட்டு முடிவு எடுக்காமல் மக்களுடைய எண்ணத்தைத் தெரிந்து முடிவு எடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கனம் அங்கத்தினர் அவர்கள் பரங்கிமலை பற்றிக் குறிப்பிட்டார்கள். தனியாகக் கேள்வி போட்டால் அது பற்றிச் சொல்ல முடியும். ஊர் பெயர்களை மாற்றும்போது மக்களுடைய உணர்ச்சிகளை இந்த அரசு மதிக்கிறது. அங்கங்குள்ள நகராட்சிகள் பெயரை மாற்ற வேண்டுமென்று தீர்மானம் போடுவதோடு மாத்திரமல்லாமல் பெயரை மாற்ற வேண்டுமென்று அரசு உணர்ந்தால் அரசே மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்கிறது.

## முள்ளுவாடியிலுள்ள மேய்ச்சல் நிலம்

* 230 வினா.—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—



வட ஆர்க்காடு மாவட்டம், ஆர்க்காடு ஒன்றியத்தில் உள்ள முள்ளுவாடி கிராமத்தில் உள்ள மேய்ச்சல் புறம்போக்கு நிலத்தை 1970-ம் ஆண்டில் நிலம் உள்ள ஒரு தனி நபருக்கு பட்டா செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம்.

திரு. கே. ஏ. வகாப்: நிலம் இல்லாத ஏழை மக்கள் பல்லாயிரக்கணக்காக நாட்டில் இருக்கும்போது இப்படி நிலம் உள்ளவர்களுக்கு நிலத்தைக் கொடுப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? ஏழை மக்கள் நிலம் கேட்டு அலைந்துகொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் இருக்கும் நிலையை மாற்றி உடனடியாக அவர்களுக்குப் பட்டா வழங்க ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இந்தப் பட்டா செய்தது தவறு என்று சொல்லி அதற்காக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தமிழகம் பூராவும் இருக்கின்ற மேய்ச்சல் புறம்போக்கைத் தனி நபர்கள் ஆக்கிரமித்துக் கொள்ளுகிறார்கள். ஆங்காங்கு மேய்ச்சல் புறம்போக்கு எந்த அளவுக்கு விடப்படவேண்டும், பாதுகாக்கப்பட வேண்டும், கால்நடைகளின் எண்ணிக்கை என்ன என்பதை எல்லாம் கணக்கிட்டு மேய்ச்சல் புறம்போக்கு நிலங்கள் ஒதுக்கி பாதுகாக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மேய்ச்சல் புறம்போக்கைப் பட்டா செய்வது கிடையாது. மேய்ச்சல் புறம்போக்கை சாதாரண புறம்போக்காக மாற்றிவிட்டுத்தான் பிறகுதான் பட்டா செய்து கொடுக்க முடியும். ஆக்கிரமிப்புப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஆக்கிரமிப்பு இருந்தால் அகற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது.

## New Chambers in High Court

* 231 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether new law Chambers are to be constructed inside the compound of the Madras High Court; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (ஆ) ஆம்.

உயர்நீதி மன்றக் கட்டிட எல்லைக்குள் வழக்கறிஞர்களுக்கான கூடுதலான அறைகளை கட்டுவதற்கான ஒரு திட்டத்தை அரசு அங்கீகரித்துள்ளது. இத் திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்படும். இந்தத் திட்டத்திற்கான மதிப்பீட்டுத்தொகை சுமார் ஒன்பது லட்சத்து ஐம்பத்தாறாயிரம் ஆகும்.

Thiru N. DENNIS: Regarding the allotment of new chambers, may I know from the Hon. Minister whether juniors and seniors will be considered alike?

The Hon. Thiru S. MADHAVAN: That will be decided by the High Court.

Thiru M. A. LATHEEF: In view of the difficulties experienced by advocates like me, I would like to know from the Hon. Minister when the buildings would be completed? Will it be completed at least this year?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: துவக்க விழா செய்யப்பட்டிருக்கிறது. விரைவில் முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஹைகோர்ட்டில் மெயின் பில்டிங்கில் ஒரு லிஃப்ட் வேண்டுமென்று கடந்த பத்து வருஷ காலமாகச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். லேட் ஹவுஸ் பக்கத்தில் ஒவ்வொரு சேம்பருக்கும் இரண்டு மூன்று மாடி ஏற வேண்டியிருக்கிறது. ஒரு நாளைக்குப் பத்து முறையாவது ஏறி இறங்க வேண்டியிருக்கிறது. புதிய கட்டடம் கட்டுவதோடு கூட இந்த லிஃப்ட் அமைத்துக் கொடுக்க அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கனம் அங்கத்தினர் அவர்களோடு நானும் படிகளில் ஏறி இறங்கியிருக்கிறேன். அங்கத்தினர் அவர்கள் கஷ்டப் பட்டதாகக் காணவில்லை.

## திருப்பூர் நீதிமன்றக் கட்டடம்

* 232 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரத்தில் உள்ள நீதிமன்றக் கட்டடத்தில் இடம் குறைவாக இருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இட வசதி செய்ய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) இது உயர் நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது. உயர்நீதி மன்றம் கோவை (மேற்கு) மாவட்ட நீதிபதியிடம், மாவட்ட முன்சிப்கோர்ட், சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட், திருப்பூர் இவைகளுக்குப் போதுமான இடவசதி செய்து கொடுப்பதற்கான திட்டத்தையும் மதிப்பீட்டுச் செலவையும் கேட்டிருக்கிறது.

திரு. சு. துரைசாமி: அமைச்சர் அவர்கள் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிவித்தார்கள். இந்தப் பரிசீலனை எவ்வளவு காலத்தில் முடிவு பெறும்? முடிவு பெற்ற பிறகு எவ்வளவு விரைவாக திருப்பூர் நகரத்தில் நீதிமன்றக் கட்டடங்கள் கட்டப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அறிக்கை வந்த பிறகு முடிவு செய்யலாம்.

## *Sugar from beet-root*

* 233 *Q*.—THIRU A. M. RAJA: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start Beet Sugar Industry in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



திரு. ஏ. எம். இராஜா: இந்த பீட்ரூட்டிலிருந்து சர்க்கரை 12 சதவிகிதம் கிடைக்குமென்று கூறப்படுகிறது. குளிர்ந்த பிரதேசங்களில் இது நன்றாக விளையும் என்று கூறப்படுகிறது. மேட்டுப்பாளையம், கோத்தகிரி போன்ற பகுதிகளில் பீட்ரூட் பயிர் செய்தால் அதன் மூலம் அந்தப் பகுதியில் பெரிய நாயக்கன்பாளையத்தில் கூட்டுறவுத் துறையில் அமைக்கப்பட்டிருக்கும் சர்க்கரை ஆலையில் சர்க்கரை உற்பத்திச் செய்ய வசதியாக இருக்கும். அந்தப் பகுதியில் கிடைக்கக்கூடிய கரும்பு தேவையான அளவுக்கு இல்லாமல் இருப்பதோடு ரெக்கவரியும் அதிகமாக இல்லை. இதனால் அந்த ஆலையில் 10 அல்லது 20 லட்சம் ரூபாய் நஷ்டம் கூட ஏற்பட்டது. ஆகவே, அந்த ஆலையை கரும்பு ஆலையாக இல்லாமல் பீட் சர்க்கரை ஆலையாக மாற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது நம்முடைய நாட்டுக்கு ஏற்றது தானா என்பதை முதலில் பரிசீலனை செய்ய வேண்டும். மேலும் இப்போது நாட்டில் இருக்கும் பிரச்சினை உற்பத்தியாகிற சர்க்கரையை எப்படி விற்பது என்பதுதான்.

## *Dam across Vaippar*

* 234 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have any proposal to construct a dam at Vaippar; and

(*b*) if so, the estimated cost of the dam and the details thereof? முற்பகல் 10-00

மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) இராமநாதபுரம் மாவட்டம், சாத்தூர் வட்டம், வெம்பக்கோட்டை கிராமத்திற்கு அருகில் வைப்பாற்றுக்குக் குறுக்கே சுமார் ரூ. 34 லட்சம் செலவில் நீர்த்தேக்கம் ஒன்று கட்டும் திட்டம் பரிசீலனையிலுள்ளது. இந்த செயற்குறிப்பில் (1) 669 ஏக்கர் பரப்புள்ள புன்செய் நிலத்தை இரு போக நன்செய் நிலமாக மாற்றுதல், (ii) 393 ஏக்கர் பரப்புள்ள புன்செய் நிலத்தை ஒரு போக நன்செய் நிலமாக மாற்றுதல் ஆகிய பணிகள் அடங்கும். இதனால் கூடுதலாக 1364 டன் உணவுதானிய உற்பத்தி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு டன்னுக்கு செலவு ரூ. 2494 ஆக இருக்கும். இந்த செயற்குறிப்பு தற் பொழுது (பாசனத்) தலைமைப் பொறியாளரால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

DR. H. V. HANDE: Is it a fact that the original estimate was only Rs. 23 lakhs and this estimate was revised even before the work started? If the original estimate which was Rs. 23 lakhs was revised later on, may I know the reason therefor?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இத்திட்டம் இரண்டு கட்டங் கள் அடங்கியது. சங்கரநத்தம் கிராமத்திற்கு அருகில் வைப்பாற்றிற்குக் குறுக்கே அணை கட்டுவதற்காக அரசால் ஒப்பளிக்கப்பட்ட பணிக்கு ரூ. 10.13 லட்சம் செலவாகலாமென மதிப்பிடப்பட்டது. ஆத்தங்கரை கிராமத்திற்கு

அருகில் வைப்பாற்றிற்குக் குறுக்கே அணை கட்டுவதற்காக அரசால் ஒப்பளிக்கப்பட்ட பணிக்கு ரூ. 22.26 லட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டது. ஆக ரூ. 32 லட்சத்திற்கு மதிப்பிடப்பட்டிருக்கிறது. மேற்கண்டுள்ள விவரங்கள் என்னிடம் இப்போது இல்லை.

### பாலவநத்தம் கிராமத்துக்கு ஏரி

* 235 வினா.—திரு. க. சுப்பு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், பாலவநத்தம் கிராமத்தில் ஊருக்குக் கிழக்கே புதிதாகக் கண்மாய் அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், பாலவநத்தம் கிராமத்தருகில் ரூ. 2.65 லட்சம் செலவில் கண்மாய் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

### சோலையாறு அணை

* 236 வினா.—திரு. இ. ராமசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோலையாறு அணையின் உயரம், அகலம், நீளம் எத்தனை அடி ?

(இ) அந்த அணையில் எத்தனை கன அடி தண்ணீர் தேக்க முடியும் ?

மாண்புமிகு திரு. எஸ். சாதிக் பாட்சா : (அ) சோலையாறு கல்லணையின் உயரம் 345 அடி, அகலம் 268 அடி, நீளம் 1,132 அடி.

சோலையாறு மண்ணணையின் உயரம் 235 அடி, அகலம் 820 அடி, நீளம் 2,950 அடி. இரு அணைகளின் மொத்த நீளம் 4,082 அடி.

(இ) சோலையாறு அணையின் மொத்த கொள்ளளவு 5,540 மில்லியன் கன அடியாகும்.

திரு. இ. ராமசாமி : இந்த அணையில் தேக்கப்பட்டிருக்கிற தண்ணீர் எந்தெந்த மின்நிலையங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது ? அப்படி மின்நிலையங்களுக்குப் பயன்படுத்தப்பட்டதுபோக மீதியிருப்பதை பொள்ளாச்சி வட்டமல்லாமல் வேறு எந்தெந்த வட்டங்களுக்கு எவ்வளவு ஏக்கர்களுக்கு பயன்படுத்தப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சோலையாறு பவர் ஹவுஸ் 1 ஆன்ட் 2. எந்தெந்தப் பகுதிகளுக்கு, எவ்வளவு ஏக்கர்களுக்கு என்று முடிவு இன்னும் செய்யப்படவில்லை.

### வேளாண்மைத் துறைச் சீரமைப்பு

* 237 வினா.—திரு. என். மருதாசலம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய இலாக்கா திருத்தி அமைக்கப்படவிருக்கிறதா ?



(இ) ஆம் எனில், வருடா வருடம் விவசாயத் துறையில் பட்டம் பெறுகின்ற ஏறத்தாழ 250 (இருநூற்றி ஐம்பது) பேர்களுக்கு காலப்போக்கில் வேலைவாய்ப்பு அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம். இது பரிசீலனையில் இருந்துவருகிறது.

(இ) தற்போது, இம்மாநிலத்தில் வேளாண்மைப் பட்டதாரிகளிடையே வேலையில்லாப் பிரச்சினை இல்லை. வேளாண்மைக் கல்லூரிகளிலிருந்து பட்டம் பெற்று அவ்வப்போது வரும் வேளாண்மைப் பட்டதாரிகள் வேளாண்மைத் திட்டங்களில், பணியில் அமர்த்தப்படுகிறார்கள்.

திரு. என். மருதாசலம் : இந்த 250 பேர்களில் எவ்வளவு பேர்கள் பட்டம் பெற்றவர்கள் ? எவ்வளவு பேர்களுக்கு வேலை அளிக்கப்பட்டிருக்கிறது ? அதில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் எவ்வளவு பேர்கள் ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பட்டம் பெற்றவர்கள் 241, பட்டம் பெறாதவர்கள் 9 பேர்கள். ஆனால் 250 பேர்களுக்கும் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு, எவ்வளவு பேர்களுக்குக் கொடுக்கப்பட்டது என்பதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் சொல்கிறேன்.

### வாடிப்பட்டியில் பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு விடுதி

*238 வினா.—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், வாடிப்பட்டியில் பின்தங்கிய மாணவர் விடுதி அமைக்கும் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : டி. வாடிப்பட்டியில், பின்தங்கிய மாணவர்களுக்கான உணவு விடுதி 1972-73-ம் ஆண்டில் ஆரம்பிக்கும் யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளது.

### கடல் அலைகளிலிருந்து மின் சக்தி

* 239 வினா.—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கடல் அலைகளில் இருந்து மின்சாரம் எடுக்க திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### சந்தன 'அத்தர்' உற்பத்தி

* 240 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு தரப்பில் புதிதாக சந்தன அத்தர் தொழிற்சாலைகளை துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இல்லை.

### செங்குன்றம்—காஞ்சிபுரம் பேருந்துகள்

* 241 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ரெட்ஹில்ஸ் முதல் காஞ்சிபுரம் வரை செல்லும் தனியார் பஸ்ஸை, சுண்ணாம்புக்குளம் முதல் தொடங்க திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையி லுள்ளதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** காஞ்சிபுரத்திலிருந்து செங்குன்றம் வரை ஓடிக்கொண்டிருக்கும் தனியார் பேருந்துகளை காஞ்சிபுரம்—சுண்ணாம்புக் குளம்வரை நீட்டிப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசிடம் முடிவு பெறாத நிலையில் இல்லை. எனினும் காஞ்சிபுரத்திலிருந்து எளாவூர் வரை ஓடிக்கொண் டிருக்கும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை பேருந்துகளை சுண்ணாம் புக்குளம் வரை நீட்டிப்பது பரிசீலனையில் உள்ளது.

**திரு. கா. வேழவேந்தன் :** சுண்ணாம்புக்குளத்திலிருந்து எளாவூருக்கு ஏராளமான வியாபாரிகளும் தொழிலாளர்களும் செல்லவேண்டியிருப்பதால் விரைவாக இந்தத் தனியார் பேருந்தையோ அல்லது அந்த 211 அரசுப் போக்குவரத்துப் பேருந்தையோ குறிப்பிட்ட சில வாரங்களுக்குள் நீட்டிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தனியார் பேருந்தை சுண்ணாம்புக் குளம் வரையில் நீட்டிப்பதாக இல்லை. 211 நம்பர் வழித்தடத்தைப் பொறுத்த வரையில் சுண்ணாம்புக்குளம் வரையில் நீட்டிப்பதற்கான செயற்குறிப்பு இருக் கிறது. விரைவில் அரசு நடவடிக்கை எடுக்கும்.

### *"Asthana Vidwans" in temples*

* 242 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether there are proposals to appoint "Asthana Vidwans" in major temples in this State?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இல்லை.

**திரு. வை. பாலசுந்தரம் :** மைலாப்பூரிலுள்ள கபாலீஸ்வரர் கோவிலுக்கு உள்ளே இருக்கிற மூலஸ்தானத்திற்கு குளு குளு வசதி செய்யப் போவதாக பத்திரிகையில் படித்தேன். அதுபோன்று பணக்காரக் கடவுள்கள் குடியிருக்கிற கோவில்களிலும் இந்தக் குளு குளு வசதியைச் செய்து பக்தர்கள் உள்ளங்கள் குளிரும்படிச் செய்ய இந்த அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இக்கேள்வி, ஆலயங்களில் ஆஸ்தான வித்வான்கள் நியமிக்கப்படுவதுபற்றிய கேள்வியாகும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இப்போது திருப்பதியில் லதா மங்கேஷ்கர் அவர்களை ஆஸ்தான வித்வானாக நியமித்திருக்கிறார்கள். பக்த கோடிகள் அதை மிகவும் பாராட்டியுள்ளார்கள். அதேபோன்று பழனி, மதுரை போன்ற நல்ல வருமானம் உள்ள கோவில்களில் அங்கும் நல்ல ஆஸ்தான வித்வான்களை





நியமிப்பதுபற்றி ஏன் இந்த அரசாங்கம் யோசிக்கக்கூடாது ? இயல், இசை, நாடகம் போன்ற எல்லாக் கலைகளிலும் தெய்வீகத்தன்மையை வளர்ப்பது வர வேற்கத்தக்கதாக இருக்குமே.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** ஆஸ்தான வித்துவான்களை நியமிப்பதில் அரசுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால் நிதிவசதியைப் பொறுத்துதான் நாம் நியமிக்கிறோம். திருப்பதியில் கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் வருகிற காரணத்தினால் அங்கு நியமித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆண்டவன் சன்னிதியில் பாடுவதற்கு எல்லாத் திருக்கோயில்களிலும் ஓதுவார்களை நியமித்திருக்கிறோம்.

**திரு. எஸ். வடிவேல் :** இந்த ஆஸ்தான வித்வான்களுக்கு சம்பளம் போத வில்லை என்று அரசாங்கத்தினிடம் ஏதாவது கோரிக்கைகள் வந்துள்ளனவா ? அவைபற்றி அரசு ஆலோசிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஆஸ்தான வித்துவான்களை நியமிப் பதற்கு முன்பே கோரிக்கை வந்தால் நியமிக்கிற விஷயமே தயக்கப்பட்டு விடும்.

**திரு. கோவை செழியன் :** திருப்பதி கோவிலில் லதா மங்கேஷ்கர் அவர்களை ஆஸ்தான வித்துவானாக நியமித்ததை ஆந்திரா சட்டமன்றத்தில் பல பேர்கள் எதிர்த்திருக்கிறார்கள். கோவில் புனிதமான இடம். அங்கே சினிமாப் பாட்டுக்கள் பாடக்கூடாது என்று ஒரு உறுப்பினர் கூறியிருக்கிறார்கள். ஆகவே, அப்படிப் பட்ட விவகாரங்களுக்கெல்லாம் இடம் வைக்காமல் ஓதுவார்களையே போடு வதற்கான ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கிற கோயில்களில் இப்படிப்பட்ட ஆஸ்தான வித்துவான்களை நியமிக்கிற பிரச்னையே இல்லை. ஆகவே, சினிமாப் பாட்டு பாடுகிறார்களா அல்லது தேவாரம் திருவாசகம் பாடுகிறார்களா என்ற பிரச்சினை எழுவதற்கே இடமில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பணம் கொடுத்தால்தான் ஆஸ்தான வித்துவான்களை நியமிக்கலாம் என்ற தவறான எண்ணம் அமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. எவ்வளவோ வித்துவான்கள் திருக்கோயில்களில் ஆஸ்தான வித்து வானாக இருப்பதை ஒரு பெருமையாகவே கருதுகிறார்கள். பணம் கூடக் கேட் காமல் அவர்கள் அந்தப் புனிதப் பணியைச் செய்ய முன்வருவார்கள். கோவில் களில் சினிமாப் பாட்டு பாடுகிறார்கள் என்று உறுப்பினர் அவர்கள் சொன்னது மிக மிக வருந்தத்தக்கது. அவர் கோயில் பக்கமே போகாத குற்றத்தினால் அப்படிச் சொல்கிறார்கள். கோவிலுக்கு வருகிற யாரும் சினிமாப் பாட்டு பாடுவது கிடையாது, பக்திப் பாடல்களைத்தான் பாடுகிறார்கள். ஆகவே சினிமாப் பாட்டுக்கள் பாடுவதையும் இதையும், இரண்டையும் இணைக்காது நம் கோவில் களில் ஆஸ்தான வித்துவான்களை நியமிக்க அரசாங்கம் யோசிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சினிமாப் பாட்டு என்றால் அது ஏதோ தவறான பாட்டு என்று கோவை செழியன் அவர்களும் திருமதி அனந்த நாயகி அம்மையார் அவர்களும் சினிமாப் பாட்டு பாடுவது தவறானது என்றும், அதைப் பாடமாட்டார்கள் என்றும் கூறியதைக் கேட்க நான் மிகவும் வருத்தப்படுகிறேன். சினிமாப் பாடல்களிலும் நல்ல பக்திபூர்வமான பாடல்கள் இருக்கின்றன. கே. பி. சுந்தராம்பாள் அவர்களைப் போன்றவர்கள்

நல்ல பல பக்திப் பாடல்களையெல்லாம் பாடியிருக்கிறார்கள். பணம் இல்லாமல் ஆஸ்தான வித்துவான்களாக இருக்க முன் வருவார்கள் என்றால் அப்படி யார் யார் வருகிறார்கள் என்று அவர்கள் விண்ணப்பிப்பார்களேயானால் அதுபற்றி அரசு ஆலோசிக்கும். (ஆரவாரம்).

### அறநிலையத் துறையினரால் வெளியிடப்படும் மாத இதழ்

*243 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறநிலையத் துறையினரால் மாதப் பத்திரிகை ஏதேனும் நடத்தப் படுகிறதா?

(இ) ஆம் எனில், எத்தனை ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) ஆம்.

(இ) 1958-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் வெளியிடப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத்தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் * வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## (2) அறிக்கைகள் அளித்தல்.

### (அ) மதுரைக்கு அருகில் ஏற்பட்ட விமான விபத்து குறித்து முதலமைச்சரின் அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டப்பேரவை 82-வது விதியின் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, தமிழ்நாட்டில் நடைபெற்ற விமான விபத்துபற்றி நேற்று மேலவையிலே ஒரு அறிக்கையை அளித்து இருக்கிறேன். இங்கே அப்படி ஒரு அறிக்கையை வைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கமணி அவர்களும், ஹாண்டே அவர்களும் தெரிவித்தார்கள். மேலவையிலே வைக்கப்பட்ட அறிக்கையை ஒட்டி, மேலும் பல விவரங்களை இங்கே அளிக்க விரும்புகிறேன்.

நேற்று காலையில் 11-55-க்கு திருவனந்தபுரத்தை விட்டுப் புறப்பட்ட இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் ஒன்று மதுரைக்கு பிற்பகல் 12.30-க்கு வந்து சேர வேண்டியது, பிற்பகல் 12-26-க்கு கன்ட்ரோலை விட்டுப் போய்விட்டது என்ற செய்தி பிற்பகல் 1-30 மணி அளவில் எனக்கு நமது போலீஸ் உயர்தர அதிகாரிகள் தெரிவித்தார்கள். இதனைத் தேடி இந்தியன் ஏர்லைன்ஸ் ஹெலிகாப்டர்கள் இரண்டு அனுப்பட்டுள்ளன என்றும் தெரிய வந்தது. பின்னர் மாலை 6 மணி அளவில் அந்த விமானம் மதுரை மாவட்டம், சின்னமனூருக்கு 43 கிலோ மீட்டருக்கு தென் மேற்கிலுள்ள மேகமலைத் தேயிலைத் தோட்டத்தில் நொறுங்கி விழுந்ததாகச் செய்தி கிடைத்து, அதை உடனடியாக நான் மேலவையில் தெரிவித்தேன். அந்த விமானத்தில் பிரயாணிகள் 27 பேரும், இரு விமான ஓட்டிகளும், இரு பணிப் பெண்களும் ஆக 31 பேர் இருந்ததாகத் தெரிந்தது. உடனடியாக மதுரை மாவட்ட ஆட்சியாளர், காவல் துறை பெரிய அதிகாரிகள் அந்த இடத்திற்கு விரைந்து அனுப்பப்பட்டனர். மருத்துவர்களும் அனுப்பப்பட்டனர்.



பின்னர் வந்த செய்தியின்படி அந்தப் பிரயாணிகளில் 11 பேர் அருகாமையிலுள்ள தேயிலைத் தோட்டத்தைச் சேர்ந்த "கைவேலிஸ்" மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகிறார்கள் என்றும், அவர்களில் ஒருவருடைய நிலை தான் கவலைக்கிடம் என்றும், மற்றவர்கள் பிழைத்துக் கொள்வார்கள் என்ற செய்தியும், அவர்களைக் கவனிக்க மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவ மனையிலிருந்து எலும்பு சம்பந்தப்பட்ட மருத்துவ நிபுணர் அனுப்பப் பட்டுள்ளார் என்றும், மற்ற 20 பேரும் (விமான ஓட்டிகள், பணிப் பெண்கள் உள்பட) இறந்து விட்டதாகவும் தெரிகிறது. இது சம்பந்தமாக, மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியவை எடுக்கப்பட்டு வருகின்றன. இறந்தவர்களுடைய உடல்கள் பிரேத பரிசோதனைக்காக மதுரைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

இந்த விபத்திற்குக் காரணம் என்ன என்று காயம் அடைந்த பிரயாணிகளைக் கேட்டதில், பறந்து கொண்டு வந்த விமானம் தானாகவே தனது உயரத்தை படிப்படியாக இழந்து, பிறகு மரங்களிடையே மோதல் ஏற்பட்டு, அதன் இரண்டு இறக்கைகளுக்கும் சேதம் அடைந்து, பிறகு கீழே விழுந்து நொறுங்கியதாகத் தெரிகிறது. சரியான காரணம் முழு விசாரணைக்குப் பின்னர் தான் தெரியும்.

இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தை இந்த அவையின் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (ஆ) நாட்டின் நெருக்கடி நிலையைச் சமாளிக்க நிதி திரட்டும் முயற்சிகள் குறித்து அரசு எடுத்துள்ள முடிவுகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டப்பேரவை 82-வது விதியின் கீழ் மேலும் ஒரு அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளிப்பார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இன்று நமது நாட்டை எதிர் நோக்கி நிற்கும் நெருக்கடி நிலையில் நாம் எடுக்க வேண்டிய சில நடவடிக்கைகளுக்கான அமைச்சரவையின் முடிவுகளை இம் மன்றத்தின் முன் வைக்க விழைகிறேன்.

இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில் நம் மீது ஏற்றப்பட்டுள்ள சுமையை ஏற்க, நாடு முழுவதும் ஒருங்கிணைந்து உதவி செய்யவேண்டுமென்ற எண்ணத்தோடு பல்வேறு மாநிலங்களிலும் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்யவேண்டும் என மத்திய அரசு நமக்கு வேண்டுகோள் விடுத்துப் பல்வேறு யோசனைகளைக் கூறியது. அவை, திரைப்படக் கட்டண உயர்வு, குதிரைப் பந்தய நுழைவுக் கட்டண உயர்வு, குதிரைப் பந்தய வரி உயர்வு, வாகன வரி உயர்வு, பஸ்கள் மீது போக்குவரத்து கட்டண உயர்வு முதலியவையாகும்.

இன்றுள்ள சூழ்நிலையில் மத்திய அரசிடமிருந்து நமக்குத் திட்டத்திற்காகக் கிட்ட இருக்கும் உதவித் தொகை குறைந்து விடக்கூடுமோ என்ற ஐயமும், அதன் விளைவாக நமது மாநிலத்தின் குறைந்த அளவுத் திட்டப் பணியும் பாதிக்கப்பட்டு விடுமோ என்ற அச்சமும் எழுந்துள்ளன. இந்நிலையில், ஏற்றதொரு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு தம்மாலான கூடுதல் நிதிவசதிகளை இயன்ற அளவு நாமே திரட்டும் முயற்சியில் ஈடுபட வேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது. புறத்தே இருக்கின்ற பகைவர்களுடன் போரிடும் நேரத்தில், நாட்டின்

அகத்தே பொருளாதார வளர்ச்சிக்கான பணிகளை நிறைவேற்றி செயல்படுத்தத்
தக்க நிதிவசதிகளைத் திரட்டும் பணியும், செலவினங்களிலே இயன்ற அளவு
சிக்கன முயற்சிகளை மேற்கொள்ளும் பணியும் முக்கியத்துவம் பெறுகின்றன.
இவ்வாறு, மத்திய அரசின் முயற்சிக்கு ஆதரவாகவும், நமது திட்டங்களைத்
தடங்கலின்றிச் செயல்படுத்தவும் நிதி திரட்டும் முயற்சிகள் சிலவற்றையும்,
சிக்கன நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது.

இதற்கிணங்க 1—1—1972 முதல் செயல்படுத்தும் வகையில் பிற்காணும்
நிதி திரட்டும் முயற்சிகளை மேற்கொள்ள முடிவு செய்துள்ளோம் :—

(1) ஒரு ரூபாய், அதற்குக் குறைவாகவும் உள்ள திரைப்பட நுழைவுச்
சீட்டுகள் மீது 5 பைசாவும், அதற்கு மேலுள்ள நுழைவுச் சீட்டுகளுக்கு 10
பைசாவும் கூடுதல் மேல் வரி விதிக்கப்படும்.

(2) 5 ரூபாயும், அதற்குக் குறைவாகவும் உள்ள குதிரைப் பந்தய
நுழைவுச் சீட்டுகள் மீது 50 பைசாவும் அதற்கு மேற்பட்ட நுழைவுச் சீட்டுகள்
மீது ஒரு ரூபாயும் கூடுதல் மேல் வரி விதிக்கப்படும்.

(3) குதிரைப் பந்தய வரியின் மீது 5 சதவீதம் மேல் வரி விதிக்கப்படும்.

(4) தற்பொழுது தனியார் துறையிலும், அரசு நிறுவனத்திலும் உள்ள
சாதாரண பேருந்துகளனைத்திலும் கிலோ மீட்டருக்கு 3 பைசா என்ற விதத்
தில் கட்டணம் விதிக்கப்படுகிறது. எனினும் இன்று அரசு விரைவுப் பேருந்து
களில் விதிக்கப்படும் கட்டணம் கிலோ மீட்டருக்கு 3-1/8 பைசாதான்.
எனவே, இதனைத் தக்கவாறு மாற்றியமைக்கும் வகையில், விரைவுப் பேருந்து
களைப் பொறுத்தவரையில், கிலோ மீட்டருக்கு 4 பைசா விதம் கட்டணம்
விதிக்கப்படும்.

(5) ஆவணங்களின் மீது தற்போதுள்ள முத்திரைத் தாள் வரி மீது 2½
சத விதக் கூடுதல் மேல் வரி விதிக்கப்படும்.

(6) கார், ஸ்கூட்டர் போன்றவற்றின் மீதான வாகன வரி 10 சத விதம்
உயர்த்தப்படும்.

இவை மூலம் ஆண்டொன்றிற்கு ஏறத்தாழ முழு ஆண்டில் இரண்டு கோடி
ரூபாய் கிட்டும் என நம்புகிறோம்.

இவை தவிர ஜனவரியில் பொங்கல் திருநாளை முன்னிட்டு நாட்டுப் பாது
காப்பு நிதிக்குதவ, சிறப்புப் பரிசுச் சீட்டுக் குலுக்கல் ஒன்றும் நடத்தப்
படும். இந்த குலுக்கலின் மூலம் ஒரு கோடி ரூபாய் அளவுக்கு கூடுதல் வருமா
னம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

மின்சார வளர்ச்சித் திட்டங்களை விரைந்து செயல்படுத்தி, நமது மாநில
மெங்கிலும் சிற்றூர்களையெல்லாம் ஒளிமயமாக்கும் முயற்சிக்கு நிதி
நிறுவனங்களின் உதவியினைக் கோரும் போதெல்லாம், நமது மின்சாரக்
கட்டணங்கள், மின்சாரம் வழங்குவதற்கு ஆகும் செலவு முழுவதும் ஏற்கும்
வகையில் உயர்த்திச் சீரமைக்கப்பட வேண்டும் என அந்நிதி நிறுவனங்கள்
கூறி வந்துள்ளன. நீர் மின்சார வசதிகளைப் பெரும்பாலும் அடிப்படையாகக்
கொண்டு, நமது மாநிலம், கோடை வறட்சி நாட்களில் மின்சார வெட்டில்
துன்புற்று வந்த நிலையை மாற்றிட, அனல் மின்சார வசதியினைப் பெருமளவில்



பெருக்கும் முயற்சிகளில் நாம் வெற்றி கண்டுள்ளோம். இதனால் அண்மைக் காலத்தில் மின்சார வெட்டு ஏதுமின்றி ஆண்டு முழுவதும் தொடர்ந்து மின்சாரம் வழங்கியுள்ளோம். அதன் விளைவாக நமது மின்சார உற்பத்தி முயற்சியின் விளைவாகவும் அதன் விளைவாக நமது மின்சார உற்பத்திச் செலவுகள் கணிசமாக உயர்ந்துள்ளதை மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சிற்றூர்கள் அனைத்திற்கும் விரைந்து மின் வசதி செய்யும் முயற்சியின் விளைவாகவும் பரவலான பம்பு செட்டுகளுக்கு மின்சார இணைப்புகள் தருவதனாலும் மின்சாரத்தைப் பிரித்து வழங்குவதற்கானச் செலவுகளும் உயர்வு பெற்றுள்ளன. எனவே, இந்நிலையை நன்கு ஆராய்ந்து மின்சாரம் பயன்படுத்தப்படும் பல்வேறு துறைகளிலும் கட்டண விகிதங்களை ஏற்றமுறையில் அமைப்பதற்குக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இக் குழுவினர் வேளாண்மை, தொழில் துறை மற்றும் பல்வேறு துறைகளுக்கான மின்சாரக் கட்டணங்களை உயர்த்திச் சீரமைக்கப் பரிந்துரை செய்துள்ளனர். கூடுதல் நிதி வசதிகள் மிகவும் தேவைப்படும் இந்நிலையில் இப்பரிந்துரைகளை 1—1—1972 முதல் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. அதற்கான விபரம் விரைவில் அறிவிக்கப்படும்.

வேளாண்மை வளர்ச்சி பாதிக்கப்பட்டு, உணவுப்பொருட்கள் சரிவரக் கிட்டாத நிலையில், இவ்வரசு படியரிசித் திட்டத்தைச் செயல்படுத்தியது. கோவை, சென்னை ஆகிய இருநகரங்களிலும் படியரிசி வழங்க இப்பொழுது ஆண்டொன்றிற்கு 4 கோடி ரூபாய் அளவிற்கு அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது. அரசு தொடர்ந்து எடுத்த தீவிர முயற்சிகளின் விளைவாக வேளாண்மைத் துறையில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு மாநில முழுவதும் உற்பத்தி பெருகி, தாராளமாக உணவுப் பண்டங்கள் கிடைக்கும் இந்நிலையில், படியரிசித் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவது தேவையா என அரசு ஆராய்ந்தது. படியரிசித் திட்டம் தற்பொழுது அமலில் உள்ள சென்னை மாநகரப் பகுதியிலும், கோவையிலும் உள்ள எளியவர்கட்கு நியாய விலையில் அரிசி கிடைப்பதற்கான வழி வகைகளைச் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் அரசு உணர்ந்துள்ளது. எனவே, 1—1—1972 முதல் மாதமொன்றுக்கு ரூ. 300-க்கும் அதற்கு குறைவாகவும் ஊதியம் பெறுபவர்களுக்கு நியாய விலையில் (Economic rate) அரிசி வழங்க ஏற்பாடுகள் செய்து படியரிசித் திட்டத்தை மாற்றியமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

இன்றுள்ள இக்கட்டான சூழ்நிலையில், நாட்டின் நலன் கருதிச் செய்யப்படும் இம்முயற்சிகளனைத்திற்கும் மக்கள் தங்கள் ஒத்துழைப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

### (3) நடைமுறைக் கேள்வி

#### கூடுதல் வரி விதிப்பு செயற் குறிப்புகளை 82-ம் விதியின்கீழ் அளிக்கும் அறிக்கை மூலம் வெளியிடுதல் குறித்து.

THIRU K. T. K. THANGAMANI : Sir, I know that under Rule 82 no discussion is allowed on the statement. But I am raising a point of order. We are very grateful to the Hon. Chief

Minister for the information that he has given. But that is in the nature of additional taxes and there is a certain procedure for it and so, such statements, I submit, would not come within the purview of Tule 82.

Mr. Speaker : Any statement can be made under Rule 82 whether it is budget proposal or any other proposal. A statement may be made on a matter of public importance under Rule 82. This is a matter of most public importance.

Thirumathi T. N. Anandanayaki : According to Rule 82, a statement may be by a Minister on a matter of public importance with the consent of the Speaker. But here almost all are taxation proposals which have been mentioned by the Hon. Chief Minister. This could have been brought under supplementary budget or he should have done something else. The regular budget is going to be introduced in two months' time, in February next year. This could have been included there. My submission is this is taking away the right of the Members to discuss the pros and cons of enhancement of levies, the pros and cons of taxation measures which means financial strain on the people. This cannot be brought under Rule 82. We cannot have any debate on this now.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இதிலே இப்போது சொல்லப்பட்டதெல்லாம், 1—1—1972 முதல்தான் அமுலுக்கு வரும் என்று இருப்பதால், உடனடியாக நாளையே செய்வோம் என்பதல்ல. அறிவிக்கப்பட்டது ஏனென்றால், மத்திய சர்க்கார் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு, மற்ற மாநிலங்களில் வரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. நாம் ஏற்கெனவே பின்தங்கியிருக்கிறோம். அதற்குக் காரணம், நான் வெளி நாட்டிற்குச் சென்று இருந்ததால், வந்தபிறகு அமைச்சரவையில் முடிவு எடுத்துச் செய்யலாம் என்றிருந்ததால், இந்தத் தாமதம். இப்பொழுதே தாமதமாகிவிட்டது. இந்த ஏற்பாட்டை அறிவிக்காமல் இருப்பது நாட்டின் நெருக்கடி நிலைமையில், நம் மாநிலம் அதைப்பற்றி யோசிக்காமல் இருக்கிறது என்கிற எண்ணத்தை ஏற்படுத்திவிடும். ஆகவேதான் இந்த அறிக்கையை வைக்க வேண்டிவந்தது. அதனதன் விவரங்கள் பற்றி, அந்த வரி அவைமுன் வரும்போது உறுப்பினர்கள் அவரவர்கள் எண்ணங்களைச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது.

Dr. H. V. Hane : On a point of Order.

Mr. Speaker : Are you supplementing the point raised by the hon. Member Thiru K. T. K. Thangamani.

Dr. H. V. Hande : Yes.

Mr. Speaker: Then say that you are supplementing the point of order raised by Thiru K. T. K. Thangamani. Don't say you are raising a point of order.



Dr. H. V. Hande : Under Article 205 the Governor may appoint a day for presentation of supplimentary statement of expenditure. Actually even the Constitution does not provide for any other method by which supplementary budget can be brought into picture. Supposing the Hon. Minister makes a statement under Rule 82, we cannot discuss it. If it comes under Article 205, we will have opportunity to extract a promise from the Minister that this will hold good till time of emergency, till the emergency is over. We can know from the Minister whether the taxes will be only for emergency period and will be withdrawn afterwards. But when it is made under Rule 82 we cannot discuss it. So, I would request the Hon. Speaker to verify the position. Under Rule 82 a matter of public importance can be made. This is of course a matter of most public importance. We are passing through a period of stress and strain and through a crisis. What I want to submit is about the norm by which a financial statement can be brought into the House. If the Hon. Speaker could give a decision on that, we will all abide by it.

Thiru K. M. Subramaniam : We do not have the regular financial statement according to Article 205 of the Constitution. If it is regular supplmentary budget, we can give our suggestions and what are the alternative methods. But now we are not in that position, since when a statement is made under Rule 82, it cannot be discussed here. The idea seems to be to prevent a complete discussion on this very important subject.

Thirumathi Jothi Vencatachellum : The Hon. Chief Minister has given an explanation about the emergency and about the intended taxation proposals that have been decided upon by the Cabinet. This is the decision of the Cabinet that has been presented here in this House. So, there is no point for argument.

Thirumathi T. N. Anandanayaki : The Cabinet may decide anything but they cannot usurp the right of Members here.

Thirumathi Jothi Vencatachellum : There is no point in confusing Members or Cabinet. I may tell in reply to Thirumathi Anandanayaki, who belongs to my party, that in the interest of ths country and in the interest of emergency and on account of financia'l necessity, the Hon. Chief Minister has stated what the proposals are. Since this matter is coming up for discussion sometime in January or February, this may be brought a month or two later. So there is no point in arguing over this matter or raising any point of Order. (cheers)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுது இந்த அவைமுன் இருக்கிற பிரச்சினை, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினை. அதாவது, 82-வது விதியின் கீழ் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்த வரிகள் பற்றிய ஸ்டேட்மெண்ட் செய்யலாமா என்பது

கேள்வி. வரி விதிக்கலாமா கூடாதா என்பது வேறு. நிதி மசோதாக்கள் வரும்போது பேசவேண்டிய விவரங்கள் அவை. இப்பொழுது திருமதி அனந்த நாயகி அம்மையாரும், திரு. ஹாண்டே அவர்களும் சொன்னார்கள். துணை மானியக் கோரிக்கைகள் வரும்போது, வரவு செலவு விவரம் பற்றிச் சொல்லலாம் என்று. இப்பொழுது மாண்புமிகு முதல் அமைச்சர் செய்திருப்பது ஒரு அறிவிப்புதான்; அரசாங்கத்தின் நிலையை கொஞ்சம் முன்னோடியாக இந்த அவைக்கும், நாட்டிற்கும் ஆயத்தம் செய்யும் வகையில் தெரிவிக்கப் பட்ட அறிவிப்புதான். இப்படி எல்லா விவரங்கள் பற்றி 82-வது விதியின் கீழ் அறிக்கை கொடுக்கலாம். A statement can be made by a Minister no a matter of public importance என்று அந்த விதியில் இருக்கிறது. சாதாரணமாக பப்ளிக் இம்பார்டன்சுக்கே ஸ்டேட்மென்ட் செய்யலாம் என்றால், மிக மிக முக்கியமான ஒரு விசேஷ பப்ளிக் இம்பார்ட்டென்ஸ் இருக்கும்போது, இந்த விதியின் கீழ் ஸ்டேட்மென்ட் செய்யக் கூடாது என்கிற விதிவிலக்குக் கிடையாது.

திரு. ஹாண்டே அவர்கள் சொன்ன 205-வது பிரிவின்படிச் சொன்னாலும், இது அறிவிப்புதான். பில்கள் வரும்போது, ஏராளமாக வாய்ப்புக்கள் நமக்கு இருக்கும். இப்பொழுது அவைமுன் இருப்பது, 82-வது விதியின் கீழ் முதல் அமைச்சர் அறிவிப்புக் கொடுக்க உரிமை இருக்கிறதா என்றால், தாராள மாக அந்த உரிமை இருக்கிறது. இப்படிப்பட்ட விசேஷ காலத்தை முன்னிட்டு, நெருக்கடியை முன்னிட்டு, முன்கூட்டியே ஆயத்தம் செய்ய வேண்டும் என்று, சபையின் நம்பிக்கையைப் பெற, அவர்கள் இந்த அறிக்கையை அளித்திருக் கிறார்கள். இதன் விவரங்கள்பற்றி மசோதாக்கள் மன்றத்தின் முன்னாலே வரும். ஆகவே, இதில் எந்த விதமான ஒழுங்கீனமும் இல்லை என்று தீர்ப்பளிக் கிறேன்.

## (4) கவன ஈர்ப்பு

### (அ) திருப்பூரிலுள்ள சலவைத் தொழிற்சாலைத்தொழிலாளரின் வேலை நிறுத்தம்.

THIRU N. DENNIS: Sir, I call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, namely, the strike of the workers in many bleaching factories at Tiruppur in Coimbatore district in October 1971.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டப் பொதுத் தொழிலாளர் சங்கம், திருப்பூரில் உள்ள பாரதி சலவைத் தொழிற்சாலை ஏனைய 57 சலவை செய்தல்/சாயமேற்றல் தொழிற்சாலைகளில் நிர்வாகத்தினரிடமிருந்து, 1970-71-ஆம் ஆண்டுக்குரிய தொழிலாளர் ஊதியங் களில் 20 சதவீதம் பூரிப்பூதியம் கோரி, கோயம்புத்தூர் தொழிலாளர் நல அதிகாரி முன்பு தகராறு ஒன்றை எழுப்பி உள்ளது. தொழிலாளர் நல அதிகாரி இரு தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு கண்டுள்ளார். சங்கம் ரூ. 150 கோரியது. நிர்வாகம் ரூ. 75 அளிக்க முன்வந்தது. தொழிலாளர் நல அதிகாரி ரூ. 95 கொடுக்கலாம் என்று கருத்துரை அளித்திருக்கிறார்.

### (ஆ) மதுரை மகாலட்சுமி ஆலைத் தொழிலாளரின் வேலை நிறுத்தம்



THIRU K. T. K. THANGAMANI: Sir, I call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, namely, the strike of the 1,000 workers of Mahalakshmi Mills, Madurai demanding payment of minimum bonus, for the years 1965 to 1969, from 20th October 1971.

முற் பகல் 10-30

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவரவர்களே, மதுரை மகாலட்சுமி ஆலையைச் சேர்ந்த தொழிலாளர்கள் உடன்பாட்டை ஒப்புக்கொண்டு வேலைக்கு திரும்பினர் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** ஒரு வார காலம் வேலை நிறுத்தம் செய்ததில் தொழிலாளருக்கு கிடைக்கவேண்டிய போனஸ் பின்னால் கிடைக்கும் என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் வேலைக்கு சென்று இருக்கிறார்கள். அந்த நேரத்தில் தொழிலாள அமைச்சர் இங்கு இல்லாமல் இருந்ததால், வேறு அமைச்சர் தலையீட்டின் காரணமாக பிரச்சனை சீக்கிரம் முடிந்தது. இப்பேர்ப் பட்ட தகராறுகள் வருகிறபோது, மற்ற அமைச்சர்கள் தலையிட்டு உதவி செய்ய ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவர் அவர்களே, அதுபோலவே நாங்கள் அந்த முறையை பின்பற்றி வருகிறோம். தொடர்ந்து அந்த முறை பின்பற்றி வரும்.

## (5) அறிவிப்பு

### அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குத் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவைக் காக (அண்ணாமலை யூனிவர்சிடி செனெட்) மூவருடைய பெயர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளன. முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர் களின் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஒத்திருப்பதால், அதாவது மூன்று என்பதால், திரு. எம். செல்வராஜ், திரு. பொன் சொக்கலிங்கம், திரு. க. சுப்பு ஆகிய மூன்று வேட்பாளர்களும் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவைக்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள் என நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

### (6) 1971-72-ம் ஆண்டிற்கான மின் வாரியத்தின் நிதி நிலை அறிக்கைமீதான விவாதம்—தொடர்ச்சி.

**திரு. கே. எஸ். குப்பல் ராமகிருஷ்ணன்:** பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மின் வாரிய அறிக்கையை பார்க்கும்போது மிகவும் மகிழ்ச்சித் தரக்கூடிய அறிக்கையாக இருக்கிறது. மிகவும் சிறப்பான முறையில் அந்த நிர்வாகம் செயல்படவேண்டும். அந்த நிர்வாகத்திடம் ஒத்துழைப்புக் கொடுத்து நம் நாட்டிலே உள்ள எல்லா கிராமங்களுக்கும் மின்சார சப்ளை ஏற்பாடுகள் செய்து முடிக்கவேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். திருநெல்வேலி, நீலகிரி மாவட்டங்களில் இருக்கும் எல்லா கிராமப் பகுதி களுக்கும் மின்சாரம் கொடுத்தாகிவிட்டது. மதுரை மாவட்டம், ஆற்காடு மாவட்டம் இவற்றிற்கு மின்சாரம் கொடுத்தாகி விட்டது. இன்னும் பல கிராமங்களில் மின்சாரம் கொடுக்க முழு முயற்சி அவர்கள் எடுத்துக்

கொண்டதால் அந்தக் கிராம மக்கள் வசதி உயர உதவி செய்துள்ளது. இதனால் கிராம மக்கள் பலவித நன்மை அடைந்துள்ளார்கள். விவசாய உற்பத்தி அதிகம்கூட, மின்சார பம்புகள் அதிகம் ஏற்பட வசதிகள் பெருகவும் நம் நாட்டில் அத் தொழில்கள் அமையப்போகிறது. இன்னும் ஏற்கெனவே மின்சாரம் கொடுக்கப்பட்டு பல கிராமங்களில் தெரு விளக்கு போடாதபடி இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அந்தக் கிராமங்களில் தெரு விளக்குகள் போடவேண்டும். மற்ற மாநிலங்களில், ஆந்திரா 12 பைசா, அஸ்ஸாம் 14 பைசா வீதம் மின்சாரத்தை விநியோகம் அதிகமாகச் செய்கிறார்கள். ஆனால் கேரளாவில் மட்டும் 3 பைசாவுக்கு மின்சாரம் விநியோகம் செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் 8¼ பைசாவுக்கு விநியோகம் செய்கிறார்கள். அந்த அளவிலே மின்சார வாரியத்தைப் பாராட்டுகிறேன்.

தவிர, மூன்று நான்கு ஆண்டுகளாக மின்சாரக் கட்டுகள் இல்லை. அதனால் பல தொழிற்சாலைகள் மின்சாரம் பெற்று பாதிக்கப்படாமல் இருக்கிறது. தொழிற்சாலைகள் மூடப்பட்டு தொழிலாளர்களுக்கு வேலை இல்லை, ஷிப்டு இல்லை என்றப் பிரச்சனைக்கு இடம் தராமல் மின்சாரம் கிடைக்கச் செய்திருக்கிறதை நாம் பாராட்டத்தக்க விதத்திலே நிர்வாகத்தை, மின்சார வாரியம் செயல்பட்டு வம்திருக்கிறது.

4,000 மெகவாட் உற்பத்தியை 6,000 ஆக வளர்ச்சியைக் காண்பித்தார்கள். அப்போது கிராமங்கள் 25,000, இப்போது 40,000 ஆக உயர்ந்திருக்கிறது. எல்லா கிராமங்களிலும் பம்பு செட்டுக்கள் அதிகமாகி இருக்கின்றன. ஒரு விஷயத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். சென்ற ஆண்டு அறிக்கையில் அயல்நாடுகளில் நாம் பார்த்த ஒரு இடத்திலே ஏராளமாக விளக்குகள் அலங்கரிக்கப்படும்போது, மின்சாரம் ஏதாவது கெட்டுவிடக்கூடாது என்று குறிப்பிடப்பட்டபோது, அதில் சொல்லியிருக்கிறார்கள் 60 ஆண்டுகளிலே அந்தப் பேட்டையில் மின்சாரம் 'பெயிலியூர்' இல்லை என்று. அந்த நிலை நம் நாட்டிலும் ஏற்படவேண்டும். இதில் கவனம் செலுத்தி காரியங்கள் புரட்சிகரமாக, பசுமைப் புரட்சி போன்றவைகளில் செயல் படுகிறோமோ, அந்த முறையில் இனிமேல் நம் நாட்டில் எலக்ட்ரிக் ஃபால்ட் ஏற்படாது என்று அதைச் செய்து, இதைச் சிறப்பாக செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. க. நாகராஜன்:** தலைவரவர்களே, நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் சீரிய தலைமையிலும் மாண்புமிகு அமைச்சர் ஓ. பி. ராமன் அவர்களின் சிறப்பான செயலாற்றும் தன்மையாலும், மின்சார வாரியத்தின் பல்வேறு ஆக்கப்பணிகளாலும் இருண்டு கிடந்த தமிழர் இல்லமெல்லாம் இன்று ஒளிமயமாகத் திகழ்வதைக் காண்கிறோம். நீர் நிலை மின் நிலையங்கள் மூலம் பெறப்படும் மின்சாரத்தை ஒரே சீராக வழங்க இயலாது என்பதாலும், மழை இன்மை போன்ற காரணங்களால் மின்சார வெட்டுகள் செய்யவேண்டும் என்பதாலும் வெப்ப, அணு மின் நிலையங்களை அதிக அளவில் இந்த அரசு அமைக்க முயல்வது மிகவும் பாராட்டுக்குரியதாகும். இதுபோன்று வெப்ப, அணு மின் நிலையங்கள் அமைக்கப்படும்போது கவனிக்கப்பட வேண்டிய ஒரு சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். மத்திய அரசு மூலம் இந்த வெப்ப அணு மின் நிலையங்கள் அமைப்பட்டால் அங்கிருந்து நாம்





மின்சாரத்தை விலைக்கு வாங்க வேண்டியிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் அங்கிருந்து பெறப்படும் மின்சாரத்தை மற்ற மாநிலங்களோடு பகிர்ந்துகொள்ளவேண்டிய ஒரு சூழ்நிலையேகூட உருவாகலாம். இதைத் தவிர்க்க இனி அமைக்கப்படும் வெப்ப, அணு மின் நிலையங்களை மத்திய அரசின் நிதி உதவியுடன் மட்டும், நம்மால் அமைக்கப்பட்டு, நமது நிர்வாகத்திலே இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். மூடிக் கிடக்கும் பழைய வெப்ப மின் நிலையங்களை, சமயநல்லூர் நிலையம் போன்றவற்றை, அவற்றின் உற்பத்தி சக்தியை அதிகப்படுத்தி, நிர்வாக அமைப்பின் முன்னேற்றங்களையும் கருவிகளையும், அமைப்புகளையும்கூட முன்னேற்றம் செய்து செயல்படுத்த வேண்டும். இதனால் வேலை வாய்ப்பும் பெருகும். மின்சார உற்பத்தியும் பெருகும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை.)

அடுத்து மின் வெப்ப, அணு மின் நிலையங்களை அமைக்கும்போது சற்று அதிகம் செலவானால் கூட பொருட்படுத்தாது மிகவும் பின்தங்கிய பகுதியாகிய வட மதுரைத் தொகுதி போன்ற இடங்களில் அமைத்து, அங்கே வேலை வாய்ப்பு பெருகவும் தொழில் வளம் பெருகவும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்.

அடுத்து, கிராமப்புறங்களில் மின் வசதியை விரைந்து அதிகரிக்கும்பொருட்டு நிதி வருவாயைப் பெருக்க கிராமக் கடன் (ரூரல் டிபன்சர்) திட்டம் ஏற்படுத்தியது மிகவும் பாராட்டுதற்குரியது. இதைப்போலவே (இண்டஸ்ட்ரியல் டிபன்சர்) தொழில் கடன் திட்டம் ஒன்றும் மின்சார வாரியத்தால் ஏற்படுத்தப்படவேண்டும். சிலவகையான சிறு தொழில் நிறுவனங்களை அமைக்க விரும்புவோர்கள் மின்சாரத்தைத் தங்கள் தொழிற்சாலைக்கு உள்ளே கொண்டுபோவதற்கு முன், விலை உயர்ந்த டிரான்ஸ்பார்மர், பவர் கெபாசிடர் போன்ற கருவிகளை வாங்க வேண்டியுள்ளது. இவைகளின் விலை அதிகம் என்பதால் அவை அந்த சிறு தொழில் அமைப்பாளர்களை மிகவும் பாதிக்கிறது. முதலீட்டில் பெரும்பகுதி இதற்காகச் செலவிட வேண்டியுள்ளது. இந்த (இண்டஸ்ட்ரியல் டிபன்சர்ஸ்) மூலம் திரட்டப்படும் பணத்தைக் கொண்டு (டிரான்ஸ்பார்மர், பவர் கெபாசிடர்) போன்ற கருவிகளை வாரியம் வாங்கி, அவற்றை சிறு தொழில் அமைப்பாளர்களுக்கு வாடகைக்கோ, தவணை முறையில் விலைக்கோ அளித்தால் மிகவும் உதவியாக இருக்கும்.

அடுத்து, பெரும் தொழில் நிறுவனங்கள், தாரங்கதாரா கெமிகல்ஸ் போன்றவைகள் மிகமிகக் குறைந்த விலையில் மின்சாரத்தைப் பெறுகின்றன. அந்த நிறுவனங்களுக்கு மின்சாரம் வழங்க ஆகும் கட்டுமானச் செலவு குறைவு. உயர் அழுத்தத்தில் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு, அதே அழுத்தத்தில் பெரும் கருவிகளின் உதவியின்றி வழங்கப்படுகின்றது. எனவே விலையும் குறைவாக வசூலிக்கப்படுகிறது. என்றாலும் பெருந்தொழில்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும் என்பதும் ஒரு காரணம் என்றாலும், இந்தச் சலுகை தொடர்ந்து பலப்பல ஆண்டுகளாக அந்த நிறுவனங்களுக்கு அளிக்கப்படுவதைக் காட்டிலும் முதல் சில ஆண்டுகள் மட்டிலும் அந்தச் சலுகைகளை அளித்து, அந்த நிறுவனங்கள் நல்ல லாபம் பெறும் நிலை வந்தவுடன் அதிக விலையை வசூலிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இதுபோன்ற சலுகைகளை சிறு தொழில் நிறுவனங்களுக்கும் அளிக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. க. நாகராஜன்] [1971 டிசம்பர் 10

கிராமப்புறங்களில் மின் விசையேற்றங்களுக்கு இணைப்பு வழங்கும்போது, வரும் விண்ணப்பங்களை சிக்கனமில்லாதவை (அன்எக்கனாமிக்கல்) என்று எதையும் ஒதுக்கிவிடாமல், சில சிற்றூர்களுக்கு தெரு விளக்குப் போடுவதற்கான திட்டங்கள் சிக்கனமில்லாதவை என்றாலும் கூட அதைப் பொருட்படுத்தாது இணைப்புகள் வழங்குவதுபோல விசையேற்றங்களுக்கும் இணைப்பு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்குவதற்காக டிரான்ஸ்ஃபார்மர்களை அமைக்கும்போது சிலபல காரணங்களால் அவை ஓவர்லோடாகி விடுகின்றன. ஒரு டிரான்ஸ்ஃபார்மர் மூலம் பல விசையேற்றங்கள் இணைக்கப்பட்டாலும் ஒரே சமயத்தில் எல்லா விசையேற்றங்களையும் இயக்க முடிவதில்லை. அப்படி இயக்கினால் மோட்டார்கள் எரிந்து விடுகின்றன. இணைப்பும் அறுந்து விடுகிறது. இணைப்பு எங்கே அறுந்துவிடுகிறது என்று அலுவலர்கள் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது.

இதைத் தவிர்க்க டிரான்ஸ்ஃபார்மர்களை அதிகச் சக்தி உள்ளவைகளாக அமைக்கவேண்டும். அதிக எண்ணிக்கையிலும் அமைக்கவேண்டும். 'எயர் சர்க்கியூட் பிரேக்கர்' என்ற ஒரு அமைப்பை மற்ற மாநிலங்களில் அமைப்பது போல் தமிழ்நாட்டிலும் டிரான்ஸ்ஃபார்மர்களில் அமைத்துவிட்டால் மோட்டார்கள் எரிவது தவிர்க்கப்படும். அப்படிச் செய்தால் அலுவலர்களும் எங்கே அறுந்து போயிருக்கின்றது என்று தேடிப் பார்க்கவேண்டிய அவசியமில்லை. இந்த எயர் சர்க்கியூட் பிரேக்கர் அமைப்பிலேயே சரிசெய்து விடலாம். அதனால் அலுவலர்கள் குறைந்த நேரத்தில் இணைப்பை மீண்டும் ஏற்படுத்தி விடுவார்கள்.

நான் குறிப்பிட்ட கருத்துக்களை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டு, இந்த அரசின் மின்சார வளர்ச்சிப் பணி வளர்க என்று கூறி அமைகிறேன்.

* திரு. எஸ். காதர் பாஷா என்கிற வெள்ளைச்சாமி: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, நமது பேரவையில் கொண்டு வரப்பட்டிருக்கும் 1971-72-ம் ஆண்டு மின்சார நிதி நிலை அறிக்கையை ஆதரித்து, வரவேற்று, என்னுடைய சில கருத்துக்களைக் கூறலாம் என்று விரும்புகிறேன். இந்த மின்சார நிதி நிலை அறிக்கை மிகமிகப் பாராட்டக்கூடிய ஒன்றாகும். பண்டைக்காலங்களைவிட நம்முடைய காலத்தில் அதிகமாக மின் தொடர்புகள் —எங்கு பார்த்தாலும் மின் இணைப்பு கொடுக்கப்படுகின்ற ஒரு நிலையைக் காணுகின்ற வாய்ப்பை நாம் பெற்றிருக்கிறோம். இந்த மின்சாரத்துறை வேகமாகவும், சிறப்பாகவும் செயல்படுகிற நேரத்தில் ஒரு சில கருத்துக்களை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த மின்சார இலாகாவிலே உள்ள சில அலுவலகங்கள் இரண்டு, மூன்று பிரிவுகளாகப் பிரிந்து செயல்படுகின்றன. மின் இணைப்பு கொடுக்கின்ற பிரிவு கட்டுமானப் பிரிவு என்றும், மற்றொன்று காமர்ஷியல் டிப்பார்ட்மென்ட் அதாவது வருமானப் பிரிவு என்றும், இவைகளை பராமரிக்கக்கூடியப் பிரிவு 'ஆப்பரேஷன்ஸ் அண்ட் மெயின்டனன்ஸ்' அதாவது பராமரிப்புப் பிரிவு என்றும் மூன்று பிரிவுகளாக தமிழகத்திலே மின்சார இலாகா செயல்பட்டு வருகிறது.



1971 டிசம்பர் 10] [திரு. எஸ். காதர் பாஷா என்கிற வெள்ளைச்சாமி]

தெரு விளக்குகள் போடும் பணி கட்டுமானப் பிரிவைச் சேர்ந்ததாக இருக்கிறது. ஆனால் அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகள் விசையேற்றங்களுக்கு இணைப்பு கொடுக்கவேண்டுமென்று கேட்டால் வருமானப் பிரிவுக்குப் போக வேண்டுமென்று சொல்கிறார்கள். அங்கே போனால் 'ஓ அண்ட் எம்' அதாவது பராமரிப்புப் பிரிவிலே பார்க்க வேண்டும் என்கிறார்கள். டிவிஷனல் எஞ்சினியர் அதாவது கோட்டப்பொறியாளரிடத்தான் அதிகாரம் இருக்கிறது. கோட்டப் பொறியாளர் அலுவலகங்கள் பல இடங்களில் இருக்கின்றன. விவசாயிகளும் பொதுமக்களும் கோட்டப்பொறியாளரைத் தொடர்பு கொள்ளவேண்டுமானால் போய்வர அதிகச் செலவாவது மட்டுமல்ல, காலதாமதமும் ஆகிறது. ஆகவே, என்னுடைய கோரிக்கையாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது மூன்று, நான்கு இடங்களிலே செயல்பட்டு வருகின்ற அலுவலகங்களையெல்லாம் ஒரே டிவிஷனை மாற்றி, ஒரே இடத்தில் அமைத்தால் விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் தொடர்பு கொள்ள சுலபமாக இருக்கும்; செலவு குறையும்; காலதாமதமும் தவிர்க்கப்படும். அவர்களுடைய கஷ்டமும் நீங்கும். இதை மின்சார வாரியம் பரிசிலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தெரு விளக்குப் போடப்படுகிறது. டியூப் லைட்களைப் போட்டு மின் இணைப்பு கொடுத்து விடுகிறார்கள். அங்கே போதுமான பவர் உள்ள டிரான்ஸ்ஃபார்மர்களை அமைக்காமல் குறைந்த வோல்டேஜ் டிரான்ஸ்ஃபார்மர்களை வைக்கிறார்கள். விளக்குகளே சரியாக எரியாத நேரத்தில் மற்ற உபயோகங்களுக்கு எப்படி இதிலிருந்து மின்சாரம் சப்ளை செய்ய முடியும்? முதலில் தெரு விளக்கு மட்டும் போடுகிறார்கள். பின்னால் விவசாயப் பெருங்குடிமக்கள் பம்புசெட்டுகள் அமைத்துவிட்டு, மின் இணைப்புக் கேட்டால் இப்போது போதுமான வோல்டேஜ் இல்லாததால் பம்புசெட்டுகளுக்கு மின்சார இணைப்புக் கொடுக்க வசதி இல்லை என்று சொல்லி காலதாமதப்படுத்துகிறார்கள். ஆகவே ஒரு ஊரிலே தெரு விளக்குகள் போடுகிற அதே நேரத்தில், பம்புசெட்டுகளுக்கும் மின் இணைப்புக் கேட்டு கோரிக்கை வந்தால் தயவுசெய்து உடனடியாக அதற்கும் சேர்த்து மின்சார இணைப்புக் கொடுக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது ஊராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் தெருக்களிலே ஏராளமான குழல் விளக்குகளை, அதாவது டியூப் விளக்குகளைப் போடுகிறார்கள். மாலை 5 மணிக்கு லைட் ஸ்விச்சை ஆன் செய்தால் ஒளி தெரிவதில்லை. இரவு பத்து மணிக்குத்தான் விளக்குகள் எரியத் தொடங்குகின்றன. ஏன் இப்படி எரிகிறது என்று கேட்டால் வோல்டேஜ் கம்மி. போதுமான மின்சாரம் வரவில்லை. அதனால்தான் ஸ்விச் போட்டவுடன் எரியவில்லை; நேரம் கழிந்து சோக்கூடான பின்னால் எரிகிறது என்று சொல்கிறார்கள். இம்மாதிரி குறைகளைத் தவிர்ப்பதற்கு, ஆங்காங்கே இருக்கின்ற சிங்கிள் ஃபேஸ் லைன், டபிள் ஃபேஸ், லைன்களையெல்லாம் மாற்றி, எல்லா இடங்களிலும் மூன்று ஃபேஸ் லைன்களை ஏற்படுத்த வேண்டுமென்ற என் கோரிக்கையை இந்தச் சந்தர்ப்பத்திலே வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பேரூராட்சிகளிலும், ஊராட்சிகளிலும் தெரு விளக்குகளைப் போட்டுவிட்டு, மாதம் இவ்வளவு என்று மின்சார வாரியம் ஊராட்சிகளிடமிருந்து வசூலித்துக் கொள்கிறது. ஆனால் போட்ட விளக்குகள் சரியாக எரிகின்றனவா என்பதை பரிசிலனைச் செய்வதாகத் தெரியவில்லை. வோல்டேஜ் குறைவினால் டியூப்

விளக்குகள் எரியாமலிருந்தால், அந்த இடத்தில் பல்புகளும் கெட்டுவிடுகின்றன. அவற்றை மாற்றிவிட்டு, இன்ன பல்புகளைப் பொருத்தினால் எரியும். ஆனால் அதைச் செய்வதற்கு ஊராட்சிகளுக்கு அதிகாரமில்லை. அந்தப் பொறுப்பும் மின்சார வாரியத்தையே சார்ந்ததாக இருக்கிறது. அந்தப் பொறுப்பு முன் போலவே ஊராட்சிகளிடமிருந்தால், அவர்கள் அங்குள்ள பணியாளர்களைக் கொண்டே வேகமாக இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வசதியாக இருக்கும். அதோடு, ஒவ்வொரு ஊராட்சியிலுமுள்ள தெரு விளக்குகளுக்குச் சேர்த்து ஒரு மீட்டர் பொருத்திவிட்டால், அவர்கள் எவ்வளவு மின்சாரம் செலவாகியிருக்கிறதோ அதற்குரியக் கட்டணத்தைச் செலுத்திவிடுவார்கள். இந்தக் கோரிக்கையையும் பரிசிலனைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது தமிழகத்திலே நமது அரசாங்கம் புரட்சிகரமான விவசாயத் திட்டத்தை உருவாக்கி வருகிறது. விவசாயப் பெருங்குடி மக்களும் அதற்கு ஒத்துழைக்கிறார்கள். சில சந்தர்ப்பங்களில் அவர்களுக்குச் சில குறைகள் ஏற்படுகின்றன. விவசாயத்திற்காகப் பம்புசெட்டுகளை அமைக்கிறார்கள். பம்புசெட் அமைக்கும்போது அவர்களுக்கு மூன்று குதிரை வேகம், ஐந்து குதிரை வேகமுள்ள பம்புசெட்டுகள் தேவையானவையாக இருக்கும். பின் பல முயற்சிகளால் கிணற்றில் தண்ணீர் அதிகம் ஊற்று ஏற்படுகிறது. அதிக ஆழத்திலிருந்து தண்ணீர் எடுக்க வேண்டுமானால் முன் அமைக்கப்பட்ட பம்பு செட்டுகளை விட இரண்டு அல்லது மூன்று குதிரை வேகம் அதிகமான மோட்டார்களை அமைக்க வேண்டியிருக்கும். அப்படி அமைக்கக்கூடியச் சந்தர்ப்பத்திலே அவைகளுக்குத் தேவையான மின்சார சப்ளை கிடைப்பதில்லை. மின்சார வாரியத்தோடு தொடர்புகொண்டு போதுமான மின்சார சப்ளை கிடைப்பதற்கு அதிகமான காலதாமதம் ஏற்படுகிறது.

குதிரை வேகத்தை விவசாயிகளே விரும்பி அதிகப்படுத்த முன்வருவார்களானால் உடனுக்குடன் அவ்வாறு மாற்றித்தருவதற்கு இளம்பொறியாளருக்கு அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும்.

இன்னும் பம்புசெட்டுகளுக்கு நாம் அதிகமாக சலுகை கொடுக்கும் நோக்கத்துடன் நாம் பல காரியங்களைச் செய்கிறோம். குறிப்பாக, தெரு விளக்குகள் எரியவில்லை என்றால் உடனுக்குடன் மின்சாரத் துறையினர் எப்படி பழுது பார்த்துக் கொடுக்கிறார்களோ, அப்படி மின்சார பம்புசெட்டுகள் பழுது பட்டாலும் ரிப்பேர் செய்து கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டும். இன்றைக்குப் பல குறைபாடுகள் இருக்கின்றன. உடனுக்குடன் தெரிவித்தாலும் சரியான முறையில் கவனிக்கப்படுவதில்லை என்பதுதான் இன்றைய நிலைமை.

இன்றைக்கு கமலை கட்டி இறைக்கின்ற பழக்கமே நின்றுவிட்டது. பயிர்களுக்கு நான்கு நாட்கள் மோட்டார் இறைவை இல்லை என்றால் நிலம் காய்ந்து பயிர் செத்துவிடும். ஆகவே உடனுக்குடன் மின்சார மோட்டார் வைத்திருப்பவர்களுக்கு உதவியாக அவற்றை முறையாகப் பழுதுபார்த்து செயல்படுத்தி கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். விவசாயிகளின் நலன்தான் முதலில் கவனிக்கப்படவேண்டும். விவசாயிகள் நலன் என்கிறபோது—மற்ற, மற்ற தொழில் துறையில் உள்ளவர்களிடையே ஒரு யூனிட் ஒற்றுமை இருக்கிறது. தங்களுக்கு வேண்டிய காரியங்களை உடனுக்குடன் செய்துகொள்கிறார்கள்.



ஆனால் விவசாயிகளைப் பொறுத்தவரையில் அத்தகைய ஒரு ஒட்டுமொத்தமான உறவு இல்லை. பக்கத்தில் பக்கத்தில் இருந்தாலும் கலந்து உறவாடுவதில்லை. ஆகவே அரசுதான் விவசாயிகள் விஷயத்தில் மிகுந்த அக்கறை காட்ட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய பணிவான வேண்டுகோள்—மதிப்பீட்டு அனுமதி முறைகளில் மாற்றம் ஏற்படுத்தியாகவேண்டும். 2,500 ரூபாய் வரை உதவிப் பொறியாளர் அனுமதிக்கலாம் என்றால்—அதை ஐந்து ஆயிரம் வரை உதவிப் பொறியாளரே அனுமதிக்கலாம் என்பதாக மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 2,500-க்கு மேற்பட்டவைகளுக்கு கோட்டப் பொறியாளரின் அனுமதி வேண்டும் என்கிற போது அங்கே போய்வருவதில் மிகுந்த காலதாமதம் ஆகிறது. ஆகவே, மதிப்பீடு அனுமதியின் கீழ் வரம்பை உயர்த்தித்தருவது நல்ல பலன் தரும் என்கிற நம்பிக்கை ஏற்படுகிறது. மின்சாரத் துறையினர் விவசாயிகளிடத்தில் நல்ல தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு கீழே இருக்கிற அதிகாரிகளும் உடனுக்குடன் அவர்களுக்கு வேண்டிய காரியங்களைச் செய்து கொடுத்துக்கொண்டு செயல்பட வேண்டும் என்கிற கோரிக்கையை வைத்து, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. கி. பொன்னுமலை:** இந்த மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள மின்சார வாரிய நிதி நிலைக் கோரிக்கையை ஆதரித்து சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன். குரங்கு தன் குட்டிகளை வயிற்றில் கட்டிக்கொண்டு மரம் ஏறுவதைப் போல் மின்சார வாரிய ஊழியர்கள் மழைக்காலங்களிலும் மின்சாரக் கம்பத்தின் மீது வேண்டிய சாமான்களை தம் வயிற்றில் கட்டிக் கொண்டு ஏறி வேலை செய்வதை கிராமப்பகுதிகளில் நான் பார்த்திருக்கிறேன். அதற்காக மின்சார வாரிய ஊழியர்களையும், மேல் அதிகாரிகளையும் நான் பாராட்ட வேண்டியிருக்கிறது.

ஆனாலும் தற்போது மின்சார வாரியத்திலே ஐந்து லட்சத்திற்கு மின்சார பம்பு செட்டுகள் இணைப்புக் கொடுத்திருக்கிறார்கள் என்றால், ஏறக்குறைய 7½ லட்சம் பம்புசெட்டுகளுக்கு இணைப்புக் கோரி வந்திருக்கும் விண்ணப்பங்களே கையில் இருக்கும். இப்போது கொடுத்துப்போகிற வேகத்தில் பதினைந்து ஆண்டுகள் ஆனாலும் கூட நம்முடைய கோரிக்கையைப் பூர்த்தி செய்ய முடியாது. ஆகவே, தீவிர நடவடிக்கை எடுத்து இன்னும் வேகமாக பம்பு செட்டுகளுக்கு இணைப்புக் கொடுக்கும் வேலையை மேற்கொள்ள வேண்டும்.

அதுபோல என்பகுதியில் 150 கே.வி. டிரான்ஸ்பார்மர் கொடுப்பது அரிதாக இருக்கிறது. இதுபோன்ற 100 டிரான்ஸ்பார்மர்கள் எங்களது மேட்டூர் சிஸ்டத்திற்கு உடனடியாகத் தேவையாக இருக்கிறது. அவற்றை அங்கே கொடுத்தால் அங்குள்ள விவசாயிகளுக்கு உடனடியாக மின்சாரம் கொடுக்க வசதியாக இருக்கும். அந்த டிரான்ஸ்பார்மர்களை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முதல் அமைச்சர் அவர்கள் எல்லா கிராமங்களுக்கும் மின் வசதி, ரோடு வசதி ஏற்படுத்திவிட்டால் எல்லாக் காரியங்களுக்கும் வசதியாக இருக்கும். இப்போது என்னுடைய தொகுதியில், வறட்சியால் பல கிராமங்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. குறிப்பாக வாழைபாடி, காரிப்பட்டி, பனமருத்துப்பட்டி போன்ற இடங்களில் எல்லாம் கூட்டுறவு நாணயச் சங்கத்தின் மூலம் விவசாயி

களுக்கு அடி கிணறு வெட்ட பத்தாயிரம் ரூபாய்வரை கடனாக அளிக்க முன்வர வேண்டும்.

என்னுடைய தொகுதியில் வெள்ளாளகுண்டம் கிராமத்தில் 5 லட்சம் ரூபாயில் அணைகட்ட உத்தரவிட்டிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கிறது. வேலை துவங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொண்டு, இந்த மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின் மீது பேச வாய்ப்பு அளித்த தலைவர்க்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. நா. வெ. குருசாமி : 1971-72-ஆம் ஆண்டு மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களை கூறலாம் என்று ஆசைப்படுகிறேன். குறிப்பாக ஊராட்சி மன்றங்களுக்குக் கொடுக்கப்படும் வீதி விளக்குகளுக்கு ஊராட்சி மன்றங்கள் சார்பாகப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. பெரும்பாலான ஊராட்சி மன்றங்களில் போதுமான நிதி வசதியில்லை. ஆகவே, மின்சார இலாக்காவே அந்தப் பணத்தை ஈடுகூட்டிக் கொள்ளலாம் என்பது என்னுடைய வேண்டுகோள். மேலும் விவசாயத்திற்கு மின்சாரம் கிடைப்பது அரிதாக இருக்கிறது. என்னுடைய தொகுதியில் ஓரத்த நாட்டு மலைப்பகுதியில் ஆண்டிப்பட்டியைச் சுற்றிலும் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புக் கேட்டால் 71 டிசம்பருக்குள் அரசாங்கத்தின் அறிவிப்புப்படி தெரு விளக்குகளுக்கு கொடுத்துவிட்டுத்தான் பம்பு செட்டுகளுக்குக் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள்.

ற்
கல்
1-00

அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் சட்ட மன்ற உறுப்பினர்களிடம் வந்து மின்சார வாரியத்திற்கு அழைத்துச் சென்று மின் இணைப்பு வாங்கித்தர வேண்டும் என்று கேட்கிற நிலைமை இருந்து வருகிறது. நாம் போய், எ.இ., அல்லது டி.இ.இ. அவர்களைக் கேட்டால், 'முயற்சி செய்கிறோம்' என்றுதான் சொல்கிறார்கள். காரியங்கள் உடனடியாகச் செய்யப்படுவதில்லை. புத்த நெருக்கடி நேரத்தில் விவசாயிகளின் பம்புசெட்டுகளுக்கு உடனடியாக மின் இணைப்புத் தர ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தெரு விளக்குகள் பல்புகள் சரியாக எரியவில்லை, இருபது வாட்ஸ் இரண்டாகப் போடுகிறார்கள். ஸ்டார்ட்டர் கிடைப்பதில்லை, சில இடங்களில் ஒரு விளக்கு ஆறு மாத காலவரையிலும் எரியாமல், கவனிக்கப்படாமல் இருக்கிறது. இம்மாதிரியான நிலைமைகளையெல்லாம் போக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழி செய்ய வேண்டும்.

(திரு. நா. வீராசாமி தலைமை)

குறிப்பாக, கிணறு வெட்டி, பம்பு செட் வைக்க மின் இணைப்புக் கேட்டால் தாமதமின்றி மின் இணைப்புத் தரவேண்டும். சில இடங்களில் மின் இணைப்புத் தருவதில் வீணாக காலம் கடத்துகிறார்கள். ஆனால் பெரியாறு, வைகையாறு கரைகளின் ஓரங்களில் இருக்கிற பெரிய பணக்காரர்கள் மின் இணைப்பு வேண்டுமென்றால், உடனடியாகக் கொடுக்கப்படுகிறது. இதைக் கவனிக்க வேண்டும். பட்டா நிலங்களில் கிணறு வெட்டி மின் இணைப்பு வேண்டுமென்று கேட்டால் உடனடியாகக் கொடுக்கவேண்டும். டிரான்ஸ்பார்மர் போன்றவை சரியான நிலையில் இல்லாததால், பம்பு செட் எரிந்துவிடுகிறது. ஆகவே, அவற்றையெல்லாம் மாற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.



திரு. ப. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரியத்தின் மீது சமர்ப்பித்த அறிக்கையை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். குறிப்பாக தெருவிளக்கு பற்றியது. தெரு விளக்குகளைப் பொறுத்தவரையில் நாம் பெற்றிருக்கின்ற மகத்தான வெற்றியை அத்தனைபேரும் பாராட்டுகின்ற அளவிற்கு இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. நிறைவேறிக்கொண்டிருக்கிறது. 1972-க்குள் அனைத்துக் கிராமங்களுக்கும் மின் இணைப்புத் தரப்படும் என்று அறிவிக்கப்பட்ட நேரத்தில், 'இது நடக்குமா?' என்ற கேள்வி கேட்டவர்கள்கூட பாராட்டும் அளவிற்குத் திட்டம் இன்றைக்கு நடைபெற்று வருகிறது. மத்திய அரசேகூட கண்டு வியக்கிறது. இம்மாதிரியான ஒரு திட்டத்தை தாமும் ஆரம்பித்து, ஒரு பத்தாண்டுகளுக்குள் 60 சதவிகித அளவைப் பூர்த்தி செய்ய முடியுமா என்று திட்டத்தை ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய திட்டத்தை மத்திய அரசாங்கம் செயல்படுத்துகிற நிலைமையில் நாம் நம்முடைய திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம், நிறை வேற்றியிருக்கிறோம். எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர்கள் தெரு விளக்கைப் பாராட்டியதோடு, விவசாயத்திற்கு மேலும் மின் இணைப்பு தர வேண்டுமென்று கூறினார்கள்.

தெருவிளக்கைப் பொறுத்தமட்டில், குறிப்பிட்ட காலத்திற்குள் பூர்த்தி செய்யக்கூடிய நிலையை உருவாக்கியிருக்கிறோமே அதுபோல விவசாயத்திற்கான மின் இணைப்புத் தருவதற்கு ஐந்தாண்டுக் காலம் என்று ஒரு கால அளவு வைத்து, அந்தத் திட்டத்தை நிறைவேற்றி வைக்க முயற்சி எடுத்துக்கொண்டால், அதுவும் பூர்த்தியாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு ஒவ்வொரு கிராமத்தில் எடுத்துக்கொண்டாலும், அந்தக் கிராமத்தில் எத்தனை கிணறுகள் வெட்டப்பட்டன, எத்தனை கிணறுகளுக்கு மின் இணைப்புக் கேட்டிருக்கிறார்கள், எத்தனை கிணறுகளுக்கு மின் இணைப்புத் தரப்பட்டிருக்கிறது, எத்தனை கிணறுகளுக்கு இன்னும் மின் இணைப்புத் தரவேண்டும் என்கிற கணக்கை வைத்துக்கொண்டு காரியங்கள் செய்தால், விரைவில் விவசாயிகளுக்கு மின் இணைப்பு செய்து தர முடியும். விவசாயிகளுக்கு முன்னுரிமை தருவதன் மூலம் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் இதில் ஏறத்தாழ 84 ஆயிரம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவுக்குப் போக்குவதற்கு மின்சார வாரியம் உதவியாக இருக்கிறது. படித்தவர்களாக இருந்தாலும், படிக்காதவர்களாக இருந்தாலும், எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்கும் இந்த வாரியம் வேலை வாய்ப்பு அளிக்கிறது. எவ்வளவோ பேர் தினக் கூலியாக இருந்து வேலைகளையெல்லாம் செய்கிறார்கள். மின்சார வாரியத்தில் இருக்கின்ற தொழிலாளர்களுக்கு—ஓரளவுக்கு—மற்ற இலாகாக்களைவிட அதிகமாக, மற்றவர்களும் பாராட்டுகின்ற அளவிற்கு நல்ல ஊதியத்தை மின்சார வாரியம் தந்துகொண்டிருக்கிறது. டி.சி.எல். கூலிகளுக்கு நகர ஈட்டுப்படி 5 காசு கூட்டிக் கொடுத்ததை இங்கே பாராட்டினார்கள். தினக் கூலியைப் பொறுத்தமட்டில், அந்த வேலைக்காக படித்தவர்கள், படிக்காதவர்கள் எல்லோரும் சட்டசபை உறுப்பினர்களிடத்தில் படையெடுத்து வருகிறார்கள். இன்னும் இந்த வாரியத்தில் 20 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புத் தர முடியும் என்றார்கள். இதைப்பற்றி ஆராய்வதற்காக அதிகாரிகள் கொண்ட ஒரு கமிட்டியை வைத்து, அதில் சட்டசபை உறுப்பினர்களையும் சேர்த்து, ஒரு கமிட்டி அமைத்தால் வேலை இல்லாதவர்களுடைய குடும்பங்களுக்கு மிக்க உதவியாக இருக்கும்.

அடுத்தபடியாக, தெருவிளக்குகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். டிஸ்ட்ரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சில் மீட்டிங்கில் இதுபற்றி பல கருத்துக்கள் வழங்கப் பட்டன. ஒவ்வொரு மீட்டருக்கும் குறைந்தபட்சம் 1,000 யூனிட் ஓட வேண்டும். மின்சார பல்புகளை மாற்றுவதற்கான செலவினங்களை ஊராட்சி ஒன்றியங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத் திற்கும் தனி மீட்டர் பொருத்தப்படவேண்டும். மின்சார விளக்குகளைப் போடுவதற்கும் ஊராட்சி மன்றம் பொறுப்பு ஏற்க வேண்டும், தனி ஆட்களை வைத்து செலவுகளை ஊராட்சி ஒன்றியம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள். சிறிய ஊராட்சி ஒன்றியங்கள் இம்மாதிரியான செலவு களை ஏற்றுக்கொள்ள முடியாது. சில இடங்களில் இரண்டு மூன்று மீட்டர்கூட வைக்க வேண்டியிருக்கிறது. ஒரு மீட்டருக்கு ஆயிரம் யூனிட் என்று கொடுத் திருக்கிறார்கள். இதனால் கஷ்டம் ஏற்படும். மினிமம் எவ்வளவு ஓட வேண்டு மென்பதை நீக்க வேண்டும். இவர்கள் இவ்வளவு தொகையைக் கட்ட வேண்டும், அதற்கு மேல் ஆகின்ற தொகையை துறையே கட்ட வேண்டுமென்கிற நிலை மையை வைக்க வேண்டும். தெருவிளக்குகளைப் போடுவது, அணைப்பது போன்ற வேலைகளை மின்சார ஊழியர்கள் பொறுப்பிலே விட வேண்டும். ஊராட்சி ஒன்றியங்கள் பொறுப்பு ஏற்க வேண்டுமென்ற நிலைமை கூடாது. அப்படி ஏற்றுக்கொண்டாலும் ட்யூப் லைட்டுகள் வாங்குவது என்றால், துறையின் விலையை விட அதிகமான விலை கொடுக்க வேண்டியிருக்கும். ஆகவே, துறை யினரே அதற்காகச் செலவு செய்துவிட்டு, ஊராட்சிமன்ற நிதியிலிருந்து எடுத்துக்கொள்ள வேண்டும். மீட்டர் வைத்து குறைந்தது என்ன வருகிறதோ அதைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். சில ஊராட்சி ஒன்றியங்கள் நிதி கட்ட முடியாத நிலையில் இருக்கின்றன. இதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும்.

இன்றைக்கு விவசாயத்தைப் பொறுத்தவரையில் 5 குதிரை சக்தி மோட் டார் என்று அனுமதி வாங்கிக்கொண்டு மூன்று குதிரை சக்தியுடையதை ஓட்டலாம், அதேபோல ஏழு குதிரை சக்திக்கு அனுமதி பெற்று, ஐந்து குதிரை சக்தி மோட்டாரை ஓட்டலாம். ஆனால் இப்பொழுது ஏழு குதிரை சக்தி அனுமதி பெற்றால், அதற்கான கட்டணத்தைக் கட்ட வேண்டும். குறைந்த சக்தியுள்ள மோட்டாரை உபயோகப்படுத்தினாலும் அக்ரிமெண்டில் கண்டுள்ளபடிதான் கட்டணம் செலுத்த வேண்டும். அக்ரிமெண்ட் விதிமுறைகளை மிகவும் கண்டிப் பான முறையில் அமல்படுத்துகிறார்கள். இதனால் விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படுகிறது. முதலில் குறைந்த சக்தியுள்ள மோட்டாரை வாங்கிக் கொண்டு, பின்னர் மிகுந்த சக்தியுள்ளதை வாங்கிக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் முதலிலேயே மிகுந்த சக்தியுள்ள மோட்டாருக்கு அனுமதி பெறுகிறார்கள். இந்த நிலையில் அவர்கள் இப்பொழுது அக்ரிமெண்டில் உள்ளபடி முழு கட்டணத்தை, குறைந்த அளவுக்காக கட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த விதிமுறை களைத் திருத்த முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று விவசாயத்தைப் பொறுத்தமட்டில் பல இடங்களில் சிக்கல் இருக்கின்றது. லோன் பெறுகின்றவர்களுக்கு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக மின் இணைப்புக் கிடைக்காத காரணத்தினாலே கஷ்டப்படுகின்றார்கள். எனவே, அப்படிப்பட்ட இடங்களுக்கு மின்சாரம் வழங்குவதில் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய பகுதியாகிய வேட சந்தூரை எடுத்துக்கொண்டால் அங்கே அடிவெட்டுக்குத்தான் லோன் கிடைக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அடிவெட்டுக்குக்கூட மோட்டார் இருந்தால்தான்





உண்டு, மோட்டார் இல்லாத காரணத்தினாலே—மின் இணைப்புக் கிடைக்காத காரணத்தினாலே—அவர்கள் வங்கியிலிருந்து எந்த விதமான லோனையும் பெற முடியாமல் அவர்களுடைய முன்னேற்றம் தடைப்பட்டிருக்கிறது, அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே கோயிலூரில் சப்- ஸ்டேஷன் அமைக்க இருக்கிறார்கள். அப்படி அமைப்பதை விரைவில் அமைத் தால் அங்கே இருக்கக்கூடிய மோட்டார்களுக்கு மின் இணைப்பு விரைவில் கிடைக்கக்கூடிய நிலைமை உண்டாகும் என்பதால் சீக்கிரத்திலேயே அதை அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்திலே நான் இன்னொன்றையும் பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நாட்டில் உள்ள விவசாயிகள் சிறப்பாக ஏழை மக்கள் பயன் அடையக்கூடிய முறையில் நம்முடைய அரசாங்கம் மின் வசதிகளைச் செய்து கொடுத்து—பவர் கட், மில்கள் ஓடவில்லை, விவசாயம் பாதிக்கப்படுகிறது என்ற நிலைமை இல்லாமல்—நல்ல முறையிலே பணியாற்றி வருகின்றது. அதற்காக நம்முடைய முதல்வர் அவர்களுக்கும் மின் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்து என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியமானது கழிந்த பல ஆண்டுகளாக நமது நாட்டுக்குச் சிறந்த சேவையைச் செய்கிறது என்பதை யாரும் மறுக்க இயலாது. முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்ட காலங் களில் இந்த மாநிலத்தில் மின்சார உற்பத்தியை 1,070 மெகாவாட்ஆக உயர்த்திய சேவையை தமிழ்நாடு மின்சார வாரியம்தான் செய்தது என்பதை நாம் நினைவு செய்து கொள்ளவேண்டும். முதல் ஐந்தாண்டு திட்ட கால ஆரம்பத்தில் 156 மெகாவாட் ஆக இருந்த உற்பத்தி மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப் பிறகு 1,070 மெகாவாட்டாக உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால் அதைத் தொடர்ந்து இப்பொழுது அந்த உற்பத்தி பெருகிவருகிறதா என்று பார்க்கும்பொழுது வேதனைப்பட வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். நாட்டுக்குத் தேவையான உற்பத்தி ஏற்படவில்லை யென்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உற்பத்தி குறைந்தது என்று சொன்னால் அது நம்முடைய நாட்டு பொருளாதாரத்தைப் பாதிக்கும் என்பதை நான் எடுத்துக்கூறத் தேவை யில்லை.

இப்பொழுது ஒரு புதுத் திட்டத்தை அமைத்து நாட்டில் இருக்கிற எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார இணைப்பு கொடுப்பது என்று ஒரு திட்டத்தை அரசாங்கம் கூறிக்கொண்டு இருக்கிறது. கிராம மின்சாரத் திட்டம் என்பது இப்பொழுது ஏற்பட்ட திட்டமில்லை. காங்கிரஸ் ஆட்சி இருந்தபோதே நான் காவது ஐந்தாண்டுத் திட்டம் பூர்த்தியடைவதற்குள்ளாக தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று முயற்சி செய்து கொண்டிருந்தது. அதன்படி காங்கிரஸ் அரசாங்கம் உற்பத்தி செய்த மின்சா ரத்தைப் பயன் படுத்தி அதைத் தொடர்ந்து இன்றைக்குக் கிராமங்களுக்கு விநியோகம் செய்து விளம்பரத்தைச் செய்வதைத்தான் இந்த அரசாங்கம் இன்றைக்குச் செய்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு நடைபெறுகின்ற கிராம மின்சார பூர்த்தி விழாக்கள் நடைபெறுவதைப் பார்க்கும்பொழுது ஏதோ மின்சாரமே 1967-க்குப் பின்பு இந்த அரசாங்கத்தால்தான் கண்டு பிடிக்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டு இந்த நாட்டில் உள்ள கிராமங்களுக்கு

விநியோகம் செய்யப்பட்டு பல கிராமங்களிலே பூர்த்தி விழாக்கள் நடை பெறுகின்றன என்ற அளவுக்குத்தான் பூர்த்தி விழாக்கள் லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து நடைபெறுகின்றன என்பதை நினைக்கும்பொழுது வேதனைப்பட வேண்டிய நிலைமையில் இருக்கிறது.

இந்த நாட்டிலே சோஷலிசக் கொள்கையை முன்வைத்து தேவையற்ற செலவுகளைச் செய்து விளம்பரத்திற்காகச் செய்வது சரியா என்பதைச் சிந்திக்க வேண்டும். மேலவையிலே இந்தக் கருத்தைத் தெரிவித்த நேரத்திலே யாரோ செய்தார்கள், யாரோ வசதி படைத்தவர்கள் அந்த செலவுகளைச் செய்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். செட்டி ஆதாயமில்லாமல் ஆற்றோடு போகமாட்டான் என்று கிராம மக்கள் சொல்வார்கள். வசதி படைத்தவர்கள் செய்கிறார்கள் என்றால் அரசாங்கத்திலிருந்து நன்மையை எதிர்பார்த்துத்தான் வசதி படைத்தவர்கள் விழாக்களுக்குச் செலவு செய்கின்றனர்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மேலவையிலே திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் விழாக்களை ஊதாரித்தனமாக நடத்துகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். நான் குறுக்கிட்டு சமயநல்லூரிலே நடந்த விழாவிலே மதுரை நகரத்தை அவர்கள் ஒரு மலர் வெளியிட்டார்கள். அந்த விழாவைச் சிறப்பாக நடத்தினார்கள், ஊதாரித்தனம் ஒன்றுமில்லை. ஒரு பைசாகூட அரசாங்கப் பணமோ, வாரியத்தின் பணமோ செலவு செய்யப்படவில்லை, மலர் வெளியிட்டு வந்த பணத்திலே இருந்து செலவு செய்யப்பட்டது. இன்னும் அந்தப் பணத்திலே மீதிகூட வைத்திருக்கிறார்கள் என்று சொன்னேன். அவர்கள் பேசும்பொழுது ஏதோ ஆதாயமில்லாமல் என்றெல்லாம் சொன்னார்கள். ஒரு பைசா கூட அரசாங்கப் பணம் செலவில்லாமல் நடைபெறுகிற விழாவை ஊதாரித்தனம் என்று சொல்வார்களானால் ஒரு லட்சம் செலவு செய்து அவர்கள் ஆட்சியில் விழா நடத்தியிருக்கிறார்களே, அதை என்னவென்று சொல்வது என்று தெரியவில்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : ஊதாரித்தனமென்றால் எந்த விதமான ஊதாரித்தனம் . . . .

திரு. ஜே. ஜேம்ஸ் : நான் சொல்லவில்லை, யாரோ சொல்லியதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். யார்செய்தாலும் லாபம் இல்லாமல் செய்யமாட்டார்கள். இந்த அரசாங்கத்திடமிருந்து ஏதாவது நன்மை பெறலாம் என்ற நோக்கத்தோடுதான் செய்கிறார்கள். உற்பத்திகுறைகிறது என்று சொன்னால் . . . . .

திரு. தோப்பூர் திருவேங்கடம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கும்பொழுது அரசாங்கப் பணத்திலிருந்து ஒரு பைசா கூட செலவு செய்யவில்லை, அந்த விழாவிற்கு மலர் வெளியிட்டதிலிருந்து பெற்ற பணத்தின்மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது என்று சொன்னார்கள். அப்படி விளக்கம் அளித்தபிறகும் கூட உறுப்பினர் அவர்கள் மீண்டும் மீண்டும் அவர்கள் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்வது சரியா?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்தார்கள். அந்த விளக்கத்திற்கு பின்னாலேயும் உள்நோக்கம் கற்பித்துப் பேசுவது சரியல்ல. ஆதாயத்தோடுதான் செய்கிறார்கள் என்று சொன்னால் உள் நோக்கம் கற்பிப்பது மாதிரி இருக்கிறது. அப்படிச் சொன்னால்



யார் செய்தார்கள் என்று நீங்கள் தெளிவாகச் சொல்லவேண்டும். அப்படி இல்லாமல் உள்நோக்கம் கற்பித்துக் கூறக்கூடாது. உள்நோக்கம் கற்பித்துக் கூறக்கூடாது என்று நம்முடைய பேரவை விதிகள் இருக்கின்றன. எனவே உள்நோக்கம் கற்பித்துப் பேசவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : அதேமாதிரி ஊட்டியிலே ஒரு விழா நடைபெற்றதாகக் கேள்விப்பட்டேன். இப்படிப்பட்ட செலவுகள் எல்லாம் தேவையான செலவுகள்தானா என்பதைப் பார்க்கவேண்டும். நாட்டிலே உள்ள வறுமையை ஒழிப்பதற்காகவும் பிச்சைக்காரர் மறுவாழ்வுக்காகவும் நல்ல திட்டங்களுக்காகவும் பொதுமக்களிடமிருந்தும் தனிப்பட்டவர்களிடமிருந்தும் வசூல் செய்து பயன்படுத்தினால் நாட்டுக்கும் அது பயன்தரும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

உற்பத்தி குறைகிறது என்று கூறினேன். உற்பத்தி குறைவதால் நாட்டில் உள்ள தொழில் வளம் குறைந்துகொண்டே வருகிறது. நான் ஒரு அறிக்கையைப் பார்த்தேன். நமது நாட்டில் 6% தொழில் வளம் இந்த ஆண்டு குறைந்து இருக்கிறது என்று அதில் நான் பார்க்க நேரிட்டது. மின் உற்பத்தி குறைவினால் விவசாய உற்பத்தியும் குறைவதற்குக் காரணமாக இருக்கும் என்பதை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே விவசாயம் பாதிக்கப்பட்டு தொழில் வளம் குறையும்பொழுது நாட்டில் பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது. நாட்டில் பொருளாதாரம் பாதிக்கப்படும் பொழுது நிச்சயமாக நாம் எதிர்நோக்கியிருக்கும் சமதர்ம சமுதாயத்தை அமைக்கும் வாய்ப்பு குறையும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தொழில் வாய்ப்புகள் குறைகின்றன, தொழில் வளம் குறைகிறது என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். எங்கள் மாவட்டத்தில் ஒரேயொரு ஆலை, மணல் கம்பெனி இருக்கிறது. அது மத்திய அரசாங்கத்தினால் நடத்தப்பட்டு வருகிறது. அதற்குப் புதிதாக பிளாண்டையும் கூட ஆரம்பிக்க ஏறத்தாழ 10 கோடி ரூபாய் செலவில் மத்திய சர்க்காரிடம் ஒரு திட்டம் இருக்கிறது. அதற்கு கழிந்த ஒரு ஆண்டுக்காலமாக இந்த அரசாங்கத்திடம் அந்தச் சாலைக்கு எந்த அளவில் மின்சாரம் தரமுடியும், எந்த அளவில் குறைந்த நிரக்கில் தரமுடியும் என்பதற்கு கழிந்த ஒரு மாதம் வரையில் பதில் வரவில்லை என்று என்னிடத்தில் நிர்வாகத்தினர் கூறினார்கள். நாம் நிச்சயமாக அந்த மணல் கம்பெனிக்கு குறைந்த ரேட்டில் மின்சாரம் கொடுக்கவில்லை என்றால் ஆயிரமாயிரம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்கும் அந்த நிறுவனம் நம்முடைய மாநிலத்திலே இல்லாமல் அண்டை மாநிலமான கேரளத்தில் அந்தத் தொழில் சாலையை அமைத்துவிடும். ஆகவே, அமைச்சரவர்கள் பிரத்தியேகக் கவனம் செலுத்தி அதற்குக் குறைந்த விலையில் மின்சாரம் கொடுத்து அந்தத் தொழில் சாலையை நமது மாநிலத்திலேயே அமைக்க வாய்ப்பு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

நாம் இப்பொழுதும்கூட பற்றாக்குறைகளில்தான் இருக்கிறோம். இன்னும் அறிக்கையில், 1980-81-இல் 3,000 மெகாவாட் பற்றாக்குறை ஏற்படும் என்று காணப்படுகிறது. ஆகவே இதற்கு முன்னெச்சரிக்கையாக நாம் உற்பத்தியைப் பெருக்கவில்லையென்று சொன்னால் 1980-81-இல் நாம் நிச்சயமாக மிகவும் மோசமான நிலையில் இருக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும் என்பதை நினைவில்கொண்டு

பல்வேறு திட்டங்களையும் எடுத்துக் கொண்டு உடனடியாக உற்பத்தியைப் பெருக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

எங்கள் மாவட்டத்தில் பாளியாறு திட்டம் இருக்கிறது. கோதையாறு திட்டத்தைச் சேர்ந்த பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. அவைகளையும் எடுத்து நடத்த வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கின்றேன்.

கடைசியாக, கோதையாறு மின்சார திட்டமானது என் தொகுதியில்தான் இருக்கிறது. ஏறத்தாழ 100 மெகாவாட் உற்பத்தி செய்யும் வாய்ப்புள்ள அந்தக் கோதையாறு மின்சார நிலையம் என் தொகுதியில்தான் இருக்கிறது. ஆனால் என்னுடைய தொகுதியிலுள்ள குலசேகரம், ஆத்தூர், அரமனை போன்ற பகுதிகளில் இன்றைக்கும் ஏறத்தாழ 9 மணிவரையிலும் மண்ணெண்ணெயைப் பயன்படுத்தித்தான் விளக்கேற்ற வேண்டியிருக்கிறது. மின்சார விளக்குகள வெளிச்சம் கொடுப்பதில்லை. கேட்டால், டிரான்ஸ்ஃபார்மர்கள் போதுமானதாக இல்லை, டிரான்ஸ்ஃபார்மர்களை மாற்றியமைக்கக்கூடிய வசதியும் இல்லை என்று சொல்லுகிறார்கள். நாங்கள் உற்பத்தி செய்கிறோம், என் தொகுதியில் உற்பத்தி நடக்கிறது, ஆனால் அதை நாங்கள் பயன்படுத்தத்தக்க அளவில் இல்லை என்று அமைச்சரவர்களிடத்தில் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர்களைப்பற்றி இந்த அறிக்கையில் மிகைபடக் கூறியிருப்பதைப் பார்க்கிறோம். ஏறத்தாழ 5 சதவிகிதம் போனஸ் கொடுக்கப்பட்டு, கழிந்த பல ஆண்டுகளாக இல்லாத முறையில் கொடுக்கப்பட்ட போனஸ் என்று காணப்படுகிறது. இப்பொழுதிருக்கும் நிலையில் 8-ம் 3-இல் ஒரு சதவிகிதம் போனசாகக் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தில் சட்டம் நிறைவேற இருக்கிறது. ஆனால் ஏதோ 4, 5 சதவிகிதம் கொடுத்துவிட்டு, அரசாங்கத்தில் அதிகமாகக் கொடுத்துவிட்டோம் என்று சொன்னால் அது நிச்சயமாகப் பாராட்டுக்கு உரியதல்ல. மத்திய அரசாங்கமே எல்லா நிறுவனங்களிலும் தொழிலாளர்களுக்கு 8-ம் 3-இல் ஒரு சதவிகிதம் போனஸ் தர வேண்டுமென்று சொல்லியிருக்கும்போது நம்முடைய அரசாங்கம் 5 சதவிகிதம் கொடுத்துவிட்டோம் என்று பெருமைப்படுவது பாராட்டிற்குரியதாக இல்லை. இதை மாற்றி அடுத்த ஆண்டில் 8-ம் 3-இல் ஒரு சதவிகிதம் கொடுத்தால் நிச்சயமாகப் பாராட்ட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணி படிக்கப்பட்டது).

கடைசியாக, எங்கள் பகுதியில் பஞ்சாயத்துக்கள், கிராமப் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அவைகளின் நிதி நிலை அறிக்கையைப்பற்றி அரசாங்கம் நன்கு அறியும். அவைகள் செக்யூரிட்டி டெபாசிட் வைத்து கிராமப் பகுதிகளில் மின்சார வசதியைப் பெருக்கிக்கொள்ள வேண்டுமென்றால் நிச்சயமாக அது நடைபெறக்கூடிய காரியம் அல்ல. ஆகவே செக்யூரிட்டி டெபாசிட் பஞ்சாயத்துக்கள் கொடுக்க வேண்டுமென்றிருக்கும் விதிமுறையை மாற்றி, விதிவிலக்கு அளித்து அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி படிக்கப்பட்டது).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): நீங்கள் கிட்டத்தட்ட 15 நிமிஷங்கள் பேசிவிட்டீர்கள். திருமதி அனந்தநாயகி அவர்கள் வேறு பேசப்போகிறார்கள்.





திரு. ா. ா. முனுசாமி: பெருமதிப்பிற்குரிய தலைவரவர்களே, இந்த ன்சார வாரியத்தின் மீது பேசுகின்ற வாய்ப்பினை அளித்தமைக்காக தலைவரவர்ருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய மிழக முதல்வரவர்கள் 1972 ஆம் ஆண்டுக்குள் தமிழகம் எங்கும் மின் இணைப்பு ரப்படும் என்று ஆணை பிறப்பிக்க, அதற்கேற்றவகையில் நம்முடைய மின்சார மைச்சரவர்கள் இரவு பகலாக, தமிழகத்தில் மின் இணைப்பு வெற்றிபெற பாடுபடுகிறார்கள். அவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

அடுத்தபடியாக, இன்றைக்கு மின்சார இலாக்காவினால் என்னுடைய செஞ்சி ட்டத்தைப் பொறுத்தவரையில் முழுப் பகுதியிலும் வெற்றிபெறவில்லை என்று ான்னாலும்கூட செஞ்சி தாலுக்காவில் முக்கால்வாசி வெற்றி பெற்றிருக்கிறது. றிப்பாக என்னுடைய தொகுதியாக மேல்மலையனூர் தொகுதியில் எல்லாக் ாமங்களுக்கும் மின் இணைப்பு தரப்பட்டு, மின் இணைப்பு வேகமாகத் தரப்பட்ருக்கிறது. அதற்காக என்னுடைய பகுதி மக்களில் தமிழக அரசைப் ாராட்டாதவர்கள் இல்லை, பாராட்டுகிறார்கள். இந்த நேரத்திலே, இன்னும் ன் இணைப்புத் தரவேண்டிய கிராமங்கள் செஞ்சி வட்டத்தில் கிட்டத்தட்ட ன்னும் 15, 16 கிராமங்கள்தான் இருக்கின்றன. அந்த 16 கிராமங்களிலும் ட்டத்தட்ட 1971 ஆம் ஆண்டு முடிவதற்குள் நிச்சயமாக முடிந்துவிடும் ன்று எண்ணுகிறேன்.

அதற்கடுத்து, இங்கு பேசிய பல நண்பர்கள் மின்சாரத்தைப்பற்றி மிகத் தளிவாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் மின்சாரம் விநியோகிக்கும் பொழுது தரு விளக்குகள் எந்த அளவில் எரிகிறது என்பதுபற்றி மாவட்ட ஆட்சித் லைவரவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். குறிப்பாக, ான் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்புகூட இந்தச் சட்டமன்றத்தில் கூறியிருக்கிறேன். கிராமங்களிலுள்ள தெரு விளக்குகளுக்கு மின்சார இலாக்கா ட்டர் பொருத்தியாக வேண்டுமென்று மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். அதையே நான் இங்கே வற்புறுத்த ஆசைப்படுகிறேன். அதற்குக் ாரணம் நான் சார்ந்திருக்கின்ற ஊராட்சி ஒன்றியத்தில் கிட்டத்தட்ட ஊராட்சி ன்றங்கள் மூலம் மின்சார இலாக்காவிற்குப் பணம் செலுத்துகிறார்கள். தாரணத்திற்குச் சொல்லலாம், 53 பஞ்சாயத்துக்களுக்கு ஒரு மாதத்திற்குக் ட்டத்தட்ட 18,000 ரூபாய், 19,000 ரூபாய் அங்கே மின் இணைப்பிற்காக ரியாகத் தருகிறோம். அப்படித் தரும்பொழுது ஊராட்சி மன்றக் கூட்டத்தில் ருக்கிருக்கும் தலைவர்கள் மிகத் தெளிவாகச் சொல்கிறார்கள், எங்கள் பகுதியில் ன் விளக்குகள் சரியாக எரியவில்லை, இருந்தும் மின்சார இலாக்காவிற்குப் ணம் அனுப்புகிறார்கள் என்று சொல்கிறார்கள். மாவட்ட ஆட்சியாளரிடத்திலும் இதைப்பற்றி விளக்கம் தந்துள்ளோம். எனவே இந்தப் பிரச்னையைக் வனித்து நம்முடைய தமிழக மின்சார அமைச்சரவர்கள் உடனடியாக எல்லா ஊராட்சி மன்றங்களிலும் எரியக்கூடிய மின் விளக்குகளுக்கு மீட்டர் பொருத்தியாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கும்பொழுது, கிணறுகளுக்கு மின் இணைப்பு வழங்கும்பொழுது அந்தக் கிணற்றிலே எத்தனைபேர் ாகல்தார்கள் என்று பார்க்கவேண்டும். 4 பேர் பயிர் செய்ய நிலம் வைத்திருக்கிறார்கள். ஒருவருக்கு மின் இணைப்பு இருந்தால் ஒருவருக்கு இல்லை என்ற நிலை உள்ளது. ஒருவர் மட்டும் ஃபாரம் தந்தால் போதும் என்று சொல்லி மின் இணைப்பு தருகிறார்கள். இப்படி குறிப்பாக என்னுடைய தொகுதியில் பல

[திரு. ஈ. ஈ. முனுசாமி] [1971 டிசம்பர் 10

சிக்கல்கள், பல பிரச்னைகள் ஏற்படுகின்றன. எனவே விவசாயிகள் வைத்துக் கொண்டிருக்கும் கிணற்றில் 4 பங்குதாரர்கள் இருந்தால் அந்த நான்கு பேரும் ஒத்து போக வேண்டும். ஒருவர் மட்டும் மனு தந்து விட்டால் அவர்களுக்கு மின் இணைப்பு தருவதை நிறுத்த வேண்டும். காரணம் அந்த விவசாயி வைத்திருக்கும் நிலம் 4 ஏக்கர் இருக்கும். அந்த 4 ஏக்கருக்கும் 4 பேர் சொந்தக்காரர்களாக இருப்பார்கள். அதில் ஒருவருக்கு மட்டும் அந்தக் ற்றைச் சுற்றி நிலம் இருக்கும். மற்ற 3 பேருக்கும் நிலம் இருக்காது. படியானல் மின் இணைப்பு கொடுக்கும்பொழுது ஒருவர் மட்டும் மின்விசை றும் சந்தர்ப்பத்தைப் பெறுகிருர், மற்ற மூவரும் அந்தச் சந்தர்ப்பத்தை க்கிருர்கள். எனவே, அப்படியிருப்பதை மாற்ற 4 பேர்களும் ஒத்து தால் மட்டுமே மின் இணைப்பு தரும் வகையில் மாற்றி அமைக்க வேண்டு ன்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மின்சார இலாக்காவில் மின்சாரம் வாங்குபவர்கள் ஃபார்ம்ஸ் வாங்கு ர்கள். தனியார் அந்த ஃபார்ம்களை அச்சிட்டு ஒரு ரூபாய், 2 ரூபாய் என்று விற்கிருர்கள். அதை உடனடியாகக் கவனித்து மின்சார அலுவலகத்திலேயே அந்த ஃபார்ம்ஸை தயாரித்து, விவசாயத்திற்கு மின் இணைப்பாகயிருந்தாலும், வீட்டிற்கு மின் இணைப்பாக இருந்தாலும் அந்த ஃபார்ம்ஸை மின்சார இலாக்கா வின் மூலம் தந்தால் அதனுல் வரும் பணம் மின்சார இலாக்காவிற்குச் சேரும் என்பதைத் தாழ்மையோடு இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளு கின்றேன்.

இப்போது மின்சார இலாகாவில் மீட்டரைக் குறிக்கின்ற அதிகாரிகள்
[முற் பகல் 11-00 படித்தவர்களாக இல்லை. மின்சார இலாகாவில் ஐந்து ஆண்டு காலம், பத்தாண்டு காலம் என்று பணியாற்றியவர்கள் மீட்டர் எடுக்கப் போகிருர்கள். இவர்கள் கணக்கைச் சரியாகப் பார்க்காமல் குறிக்கிற காரணத்தால் விவசாயி கள் பாதிக்கப்படுகிருர்கள், விவசாய இலாகாவும் பாதிக்கப்படுகிற நிலை ஏற்படு கிறது. மீட்டர் எடுக்க படித்தவர்களைப் போட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப் பத்தில் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

செஞ்சை வட்டத்தைப் பொறுத்தவரை 1970-71 பருவமழை தவறிவிட்டது. இரண்டு தினத்திற்கு முன்பு கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், உணவு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடமும் மகஜர் தந்திருக்கிறேன். மழை பெய்யத் தவறிவிட்ட காரணத்தால் மணிலா, நெல் சாகுபடி இல்லாமல் திண்டிவனம், செஞ்சி பகுதிகளில் பஞ்ச நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பகுதிகளில் உடனடியாக நியாய விலைக் கடைகளைத் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கு விளைச்சல் இல்லாத காரணத்தால் விவசாயி களுக்குக் கொடுக்கப்பட்ட கடனை வசூலிப்பதை ஓராண்டுக் காலத்திற்குத் தள்ளித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். நிலவள வங்கிகள் மூலம் கொடுக்கப் பட்ட கடனையும் ஓராண்டுக் காலத்திற்குத் தள்ளித் தரும்படி கேட்டுக்கொள் கிறேன். செஞ்சி, திண்டிவனம் பகுதிகளில் உடனடியாக பஞ்ச நிவாரண வேலைகள் நடைபெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குடிதண்ணீர் இல்லாத நிலையில் மேல்மலையனூர் பகுதியில் ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கக் கூடிய குடிதண்ணீர் கிணற்றை ஆழப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு அந்தப் பகுதியில் உடனடியாக நியாய விலைக் கடை களைத் திறக்க வேண்டுமென்று மறுபடியும் வேண்டிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.



1971 டிசம்பர் 10]

திரு. மணலி சி. கந்தசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மின்வாரியத்தின் நிதி நிலை அறிக்கை மீது பல அபிப்பிராயங்கள் சொல்லப்பட்ட பிறகு எனக்குத் தோன்றிய சில விஷயங்களைச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன். பொதுவாக, திருப்திகரமான முறையில் மின் வளர்ச்சி நமது ராஜ் யத்தில் வேகமாக வருவது பாராட்டத்தக்க ஒரு விஷயம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

நமது ராஜ்யத்தில் 559 கோடி யூனிட் மின்சாரம் பயன்படுத்துகிருேம். 313 கோடி யூனிட் நாம் உற்பத்தி செய்வது. 315 கோடி யூனிட் மத்திய சர்க்காரிட மிருந்தும், பக்கத்து மாநிலங்களில் இருந்தும் வாங்குவதாகக் குறிப்பிட்டிருக் கிருர்கள். நமக்கு இருக்கக்கூடிய மின்சாரத்தைச் செலவழிக்கும்போது ஏற்படக்கூடிய சேதாரம் கடந்த இரண்டு வருஷங்களாக 17 சதவிகிதத்திற்கு மேற்பட்டிருக்கிறது. இது சாசுவதமாக ஆகிவிடுமோ என்று கருதுகிறேன். கிட்டத்தட்ட ஐந்தில் ஒரு பகுதி சேதாரம் கவனிக்கப்பட வேண்டிய விஷய மாகும். வளர்ச்சி பெற்ற நாடுகளில், பரவலாக அதிக மின்சாரத்தை உபயோ கிக்கக்கூடிய நாடுகளில் எந்த அளவு சேதாரம் ஏற்படுகிறது, இப்படி சேதாரம் ஏற்படாமல் செய்ய என்னென்ன முற்போக்கான நடவடிக்கைகளை, விஞ்ஞான ரீதியான நடவடிக்கைகளை எடுக்கிருர்கள் என்ற விஷயங்களை ஆராய்ந்து நம்முடைய மாநிலத்திலும் இந்த சேதாரத்தைத் தடுக்க வழி செய்தால் மின் சாரம் அதிக அளவுக்குப் பயன்படுத்தப்படுவதோடு வருமானம் அதிகமாகக் கிடைக்கவும் வழிகோலுவதாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சேதாரமானது நியாயமானது என்ற அளவிலே கருத்துத் தெரிவித்திருக்கிருர்கள். பரந்த அளவுக்கு மின் சாரத்தை சப்ளை செய்கிருேம், சிதறுண்ட விதத்தில் பல்வேறு இடங்களுக்கு அனுப்புகிருேம், ஆகவே, இத்தகைய சேதாரம் நியாயம் என்று கூறியிருக் கிருர்கள். இந்த அளவிலே நாம் திருப்திப்பட்டுவிடக் கூடாது. இதையும் தடுப்பதற்கு வழி இருக்கிறதா என்பதைக் கவனிக்க வேண்டியது அவசியம்.

விவசாயத்திற்குப் பெரிய அளவில் மின்சாரம் பயன்படுகிறது. விவசாயத் திற்கும், தொழிலுக்கும் இடையே வித்தியாசம் காட்டுவது தவிர்க்கப்பட வேண்டும். பல்க் சப்ளை என்று சொல்லி பெரிய அளவுக்கு குறைந்த கட்ட ணத்தில் தொழில் முதலாளிகள் தொழிலுக்கு என்று வாங்குகிருர்கள். அதனுல் விவசாயிகளுக்கு அதிகம் சார்ஜ் செய்ய வேண்டுமென்று சொல்லுவது பொருத்த மானது அல்ல. 3½ லட்சம் ஏக்கருக்கு விவசாயம் செய்ய மின்சாரம் சப்ளை செய்யப்படுகிறது. விவசாய விளைபொருள்கள் எந்த அளவுக்குப் பெருகு கிறதோ அந்த அளவுக்குத்தான் தேசப் பொருளாதாரம் முன்னேற வழி ஏற்படும். விவசாயிகள் ஆக்கபூர்வமான துறைக்கு மின்சாரத்தைப் பயன் படுத்துகிருர்கள். ஆகவே, விவசாயத்திற்கும் தொழிற்சாலைகளுக்கும் இடையே வித்தியாசம் காட்டாது இரண்டுக்கும் ஒரே முறையில் மின்சாரத்தைக் கொடுக்க வேண்டும். வியாபாரத் தந்திரத்தின் அடிப்படையில் உபயோகிக் காமல் இருந்தாலும் குறைந்த பட்சக் கட்டணம் இவ்வளவு கட்ட வேண்டு மென்று விதிகள் எல்லாம் தளர்த்தப்பட வேண்டும். நமது நாடு விவசாய நாடு. 80 சதவிகித வருமானம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட வருமானம். இதில் ஏற்படக்கூடிய வளர்ச்சிதான் தேசப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும். அயல் நாட்டுச் செலாவணியை மீதப்படுத்தக்கூடிய நிலையில் இதற்கு ஊக்கம் அளிக்கும் விதத்தில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிற்சாலைகளுக்கு இன்னமும் ரிபேட் கொடுக்கக்கூடிய வழக்கம் இருந்து வருகிறது. அலுமினியம் தொழிற் துறையில் ஒரு தொழிலுக்கு ஒரு கோடி ரூபாய் வரையில் மின்சாரத்திற்கு ரிபேட் கொடுப்பதாகக் கேள்விப்படுகிறேன். லாபம் சம்பாதிக்கக்கூடிய அளவுக்குத் தொழில் முன்னேறிய பிறகும் ஏன் விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்கள் இன்று தொழிற்சாலையிலிருந்து அதிக லாபம் சம்பாதிக்கிறார்கள். அவர்கள் தொழிலாளர்களுக்கும் எதுவும் கொடுப்பதில்லை. சர்க்காருக்கும் வரி கட்ட மறுக்கிறார்கள், மின்சாரத்திற்கும் ரிபேட் வாங்கிக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட கொள்கை காரணமாகத்தான் பெரும் முதலாளிகள் வளரு கிறார்கள். இது சோஷலிசத் தத்துவத்திற்கு முட்டுக்கட்டை போடுவது போலாகும். தொழில்களில் அதிக லாபம் சம்பாதிக்கின்றவர்களுக்கு இத்தகைய சலுகைகள் காட்டப்படுகின்றன. இந்த மாதிரி சலுகைகளைக் காட்டாமல் அவர்களிடமிருந்தும் நியாயமான அளவுக்கு கட்டணம் வசூலிக்க ஏற்பாடு செய்வதுதான் நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற சோஷலிச லட்சியத்திற்குச் சரியானதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்வாரியத்தில் உள்ள தொழிலாளர்களைப் பொறுத்தவரை 31,000 பேர் டெம்பரரியாக இருக்கிறார்கள் என்பது கனம் அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவர்களில் பலர் எல்.இ.இ., பி.யு.சி., எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள். பட்டம் பெற்றவர்களும் இருக் கிறார்கள். இவர்களை எல்லாம் சாசுவதமாக்கிய பின்னர் இவர்களுடைய இடத்தில் அமைச்சர் சொன்ன 25,000 பேரை வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட் டத்தைப் போக்க முடியும். படித்தவர்களாக இருப்பவர்கள் இன்றைக்கு அன்றாடக் கூலி வாங்கிக் கொண்டு 31,000 பேர் அளவுக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை படிப்படியாக நிரந்தரமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

தஞ்சை ஜில்லாவில் இருக்கக்கூடிய மின்சாரக் கம்பெனியை சர்க்கார் ஏற்றுக் கொண்ட பிறகு ஏற்பட்டிருக்கும் மாறுதல் விரும்பத்தகாத முறையில் இருக்கிறது. பில் கலெக்டர் பில்களைக் கொண்டு வந்து கொடுக்கும்போது உடனடியாகப் பணம் கட்டுகிறேன் என்று சொன்னாலும் பில்லைக் கொடுத்துவிட்டு ஆபீசில் போய்ப் பணத்தைக் கட்டுங்கள் என்று சொல்லுகிறார்கள். இது என்ன புதிய மாறுதல் என்று தெரியவில்லை. பணம் கொடுக்கத் தயாராக இருப்ப வர்களிடம் பில்லைக் கொடுக்கும்போதே வசூலித்துக் கொள்ள வழி செய்ய வேண்டும். சர்க்கார் ஏன் இந்த மாதிரி இடைஞ்சல்களைச் செய்கிறது என்று புரிந்து கொள்ள முடியவில்லை. இது வெறுப்பைச் சம்பாதிக்க வழி செய் கிறது.

இப்படிப்பட்ட நிலைமையை மாற்றி பில் கொடுக்கக்கூடிய தேதியில் பணம் கட்டுபவர்களுக்கு அங்கேயே அதை வசூல் செய்துகொண்டு போவதற்கு அவரையே பில் கலக்டராகவும் பயன்படுத்திக் கொள்வது என்பதினால் சர்க்கா ருக்கும் பல தொல்லைகள் குறையும், அதோடு பணம் கட்டுபவர்களுக்கும் வசதி ஏற்படும். அந்த விதத்தில் இதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.



அடுத்தபடியாக, சேரிகளுக்கு மின்சாரம் கொடுப்பதில் தயக்கம் காட்டப் படுகிறது. எங்கள் ஜில்லாவில் பல பஞ்சாயத்துக்கள் ஹரிஜனத் தோழர் களால் நிர்வகிக்கப்படுகின்றன. சேரிகளுக்கு வெகு வேகமாக மின்சாரம் பரப்பப்பட வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள். ஆனால் அங்குள்ள சப்-ஸ்டேஷன்களில் அதற்கு செவிசாய்க்க மறுக்கிறார்கள். ஆகவே சேரிகளுக்கு எந்தளவிற்கு துரிதமாக மின்சாரம் கொடுக்கமுடியுமோ அந்த அளவிற்கு துரிதமாக கொடுக்கப்பட வேண்டுமென்பது சர்க்காருடைய கொள்கையாக யிருந்தபோதிலும் கூட அங்கிருப்பவர்கள் இதில் துரிதம் காண்பிக்க மறுக் கிறார்கள்.

முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி போன்ற இடங்களிலிருந்து புகார் கள் வந்துள்ளன. அதோடு மின்சாரம் வழங்குவதில் பல ஒழுங்கீனங்கள் நடைபெறுகின்றன என்றும் கேள்விப்படுகிறேன். அது தடுக்கப்படவேண்டும். அதோடு அகம்பாவமாகப் பேசுவது. எம்.எல்.ஏ. யிடம் எழுதிக் கொடுங்கள், அமைச்சரிடம் எழுதிக் கொடுங்கள், எங்களிடம் போல்ஸ் இல்லை என்று சொல் கிறார்கள். இதுபற்றி டிவிஷனல் என்ஜினியருக்கு எழுதியிருக்கிறேன்.

அடுத்தபடியாக, எலக்ட்ரிக் மோட்டார்ஸ் வாங்கப்பட்டு, பொருத்தப்பட்டு ஐந்து ஆண்டுகள் ஆகியும்கூட கனெக்ஷன் கொடுப்பதில் தயக்கம் ஏற்பட்டிருக் கிறது. கடன் வாங்கிவிட்டார்கள், தவணை கட்டிவருகிறார்கள், மோட்டார் ஃபிட் அப் செய்திருக்கிறார்கள். ஆனால் ஐந்தாண்டுகள் ஆகியும் கூட கனெக்ஷன் கொடுக்காமல் இருப்பது என்பதன் காரணமாக தமது உற்பத்திப்பெருக்கு வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. அதோடு விவசாயிகளுக்கும் வேதனையை அளிக்கிறோம். ஆகவே குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் அல்லது ஒரு ஆண்டுக் குள்ளாக கனெக்ஷன் கொடுக்கப்படும் என்று திட்டவட்டமாக உத்தரவு பிறப் பிக்கப்படவேண்டும். அப்படிச் செய்தால்தான் பம்புசெட்லை உபயோகப் படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். இதையும் கவனிக்க வேண்டும். அடுத்தபடியாக, இந்த அறிக்கையிலே அடுத்த தென் மேற்கு பருவ மழைக் காற்று வருவது வரையில் எத்தவிதமான பயமும் வேண்டியதில்லை என்று அமைச்சர் அவர்கள் உறுதி கூறியிருக்கிறார்கள். அதைப் பார்க்கும்போது உற்பத்தி செய்யும் மக்களிடம் ஒரு நிச்சயத் தன்மை ஏற்படும் விதத்தில் உத்தா வாதம் அளிக்கப்பட்டிருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

அடுத்தபடியாக, 2,000 கோடி யூனிட்ஸ் நாம் வெளியிலிருந்து வாங்க வேண்டி யிருக்கிறது. தம் காலிலேயே நாம் பெருமளவிற்கு நிற்கக் கூடிய விதத்தில் நமக்கிருக்கிற திட்டங்களை நாம் நிறைவேற்றிச் செயல்படுத்த வேண்டும். குறிப்பாக ஹைட்ரோ எலக்ட்ரிக் திட்டங்கள் ஐந்தாறு குறிப்பிடப்பட்டிருக் கின்றன. அவைகளை எந்தளவிற்கு விரைவாகக் கொண்டுவர முடியுமோ அந்தளவிற்கு விரைவாகக் கொண்டு வரவேண்டும். தூத்துக்குடி அனல் மின் திட்டத்தையும், நெய்வேலியில் இன்னொரு சுரங்கம் வெட்டும் திட்டத்தையும் விரைவில் நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து நம் மின்சக்தி யின் அளவை அதிகரிப்பதில் நாம் துரிதம் காண்பிக்க வேண்டும். அப்போது தான் தமிழ்நாடு தொழில் வளர்ச்சியிலும், விவசாய வளர்ச்சியிலும் முன்னேறு வதில் திண்டாடிக் கொண்டிருக்க வேண்டிய நிலையைத் தவிர்க்க முடியும். ஆக, என் ஆலோசனைகளுக்கு செவிமடுத்து அதற்கேற்றபடி நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. சொ. காவேரிமணியம்:** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நமது மின்சாரத் துறை அமைச்சர் அவர்களால் உரை மூலமாகக் கொடுக்கப்பட்டுள்ள 1970-71-ம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கையையும், 1971-72-ம் ஆண்டுக்கான முழு நிதி நிலை அறிக்கையையும் வரவேற்று அதே நேரத்தில் என் கருத்துக்கள் சிலவற்றையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அந்த அறிக்கையில் காட்டப்பட்டிருக்கக்கூடிய புள்ளிவிவரங்கள், எடுத்துச் சொல்லப்பட்டிருக்கக்கூடிய விளக்கங்கள், அடைந்துள்ள பாங்கு முன்னேற்றங்களையெல்லாம் வரைபடங்கள் மூலம் காட்டப்பட்டிருக்கிற இவைகளை எல்லாம் நான் மனப்பூர்வமாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நமது முதல்வர் அவர்கள் 1969-ல் இருந்து 1972-க்குள் நம் மாநிலத்திலுள்ள எல்லாக் கிராமங்களிலும் மின்விளக்குகள் பொருத்தப்படும் என்று சொன்னதை, அந்தத் திட்டத்தை மிகச் சுறுசுறுப்பாக பணிபுரியக் கூடியவர்கள் செயல்படுத்தியிருக்கிறார்கள் என்பது இந்த நாடு மட்டுமல்ல இங்குபேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் ஒத்துக் கொண்டதொரு விஷயமாகும். அதற்காக இத்துறையில் இருக்கக்கூடிய, உயர்தர அதிகாரிகளையும் அவர்களுக்குக் கீழே பணிபுரியக்கூடிய ஸிஸ்டத்தில் பணி புரியக்கூடிய அத்தனை தொழிலாளர்களையும் இம்மாமன்றத்தில் இருக்கக்கூடிய அத்தனை உறுப்பினர்களும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மதிப்புமிக்க பல உறுப்பினர்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டினார்கள். ஊராட்சி மன்றங்களிலும், பேரூராட்சி மன்றங்களிலும் தனி மீட்டர் வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். என்னைப் பொறுத்தவரையில் பேரூராட்சி மன்றங்களில் இம்மாதிரிச் செயல் திட்டங்களைக் கொண்டுவந்தால் அது மிகவும் நன்றாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஏனென்றால் பேரூராட்சி மன்றங்களில் இப்போது குழல் விளக்குகள், சாதாரண விளக்குகள் எல்லாம் போடப்படுகின்றன. அவைகளின் வருமானமும் கணிசமான அளவிற்கு இருக்கிறது. தனி மீட்டர் வைப்பதுடன் எரியாத விளக்குகளை எரிய வைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தனி மீட்டர் வைக்கவேண்டுமென்ற கோரிக்கையை இங்கு எடுத்துச் சொல்லி வருகிறார்கள். எரியாத விளக்குகளை எரிய வைக்கவேண்டுமென்றால் அந்தப் பேரூராட்சி மன்றம் ஏற்கனவே அக்ரிமென்ட் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ஒரு கம்பத்திற்கு மூன்று விளக்குகள் போடுவது என்பதன்கீழ் ஒவ்வொரு கிராமத்திற்கும் எவ்வளவு விளக்குகளை அவர்கள் தரவேண்டுமோ அவைகளை எல்லாம் ஆரம்பத்திலேயே கொடுத்துவிட்டால் எங்கெங்கு பழுது ஏற்படுகிறதோ, எந்தெந்த விளக்குகள் எரியாமல் இருக்கின்றனவோ, அவற்றைக் கவனித்து குறைகளை நிவர்த்தி செய்ய அந்தப் பேரூராட்சி மன்றத் தலைவரால் முடியும், மக்களையும் அதனால் திருப்திப்படுத்தவும் முடியும் என்று நான் இங்கு எடுத்துக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய கனம் உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இந்த வாரியத்தில் ஏதோ அதிகமாகச் செலவிட்டு படாடோபமான விழாக்களைக் கொண்டாடுகிறோம் என்றெல்லாம் சொன்னார்கள். திருப்பரங்குன்றம் தொகுதி வடக்குத் தாலுகா தெற்குத் தாலுகா என்று இருபகுதிகளைக் கொண்டதாகும். இத்தொகுதியில் 130 குக்கிராமங்கள் உள்ளன. இந்த 130 குக்கிராமங்களில், பலவற்றில் மின்





சாரமே செல்லாமல் இருந்தது. செல்வச் சீமான்களின் இல்லங்களுக்குத்தான் மின்சாரம் செல்வது, ஏழை எளியவர்கள் இருக்கக்கூடிய இடங்களில் மின்சாரம் செல்லாது என்ற நிலையை உடைத்தெறிந்து இன்று மிகக் குறுகிய காலத்திற்குள், இரண்டு ஆண்டுகளுக்குள் அங்குள்ள எல்லாக் குக்கிராமங்களுக்கும் மின்சாரம் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. இப்போது அந்தத் தொகுதிக்கு பணிபுரியக் கூடிய நான், சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், செல்கின்ற நேரத்தில், என்னென்ன செய்தீர்கள் நீங்கள் என்று கேட்கிற நேரத்தில் நான், பாருங்கள் சுடர் விட்டு எரிகிற விளக்குகளை, இதைத்தான் தமிழக அரசு கொண்டுவந்தது என்று சொல்லக்கூடிய அளவிற்கு, இந்த ஸிஸ்டத்தில் உள்ளவர்கள் மிக சுறு சுறுப்பாக பணியாற்றியுள்ளார்கள்.

நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளதைப் போன்று, இந்த விழாவில் ஒரு மலர் வெளியிடும் முகத்தான் அதற்கு விளம்பரங்கள் கொடுத்தவர்களிடம் பணம் பெற்று அதன் மூலம் அந்த விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருக்கிறார்கள். அங்கு தமிழக அரசு செய்துள்ள சிறந்த காரியங்கள் விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டது. இவற்றையெல்லாம் மனதில் வைத்து வேண்டாத, விரும்பாத ஒன்றை இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறார்கள். தமிழக அரசின் பணத்திலிருந்து ஒரு பைசா கூட செலவு செய்யவில்லை. மலரில் கிடைத்த வருமானத்தைக் கொண்டு, ஏற்கெனவே மின்சார வசதி கிடைக்காத கிராமங்களுக்கு மின்வசதி அளிக்கப்பட்ட காரணத்தினால் அவ்விழா கொண்டாடப்பட்டது என்று தக்க நேரத்தில் அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்துள்ளார்கள். ஆகவே இது பற்றியெல்லாம் மனமாச்சரியம் கொள்ளாமல் பார்க்கவேண்டும்.

அடுத்து, தனிப்பட்டவர்கள் மின்சாரத்தைப் பயன்படுத்துவதின் யூனிட்கள் இன்று அதிகமாகியிருக்கிறது. பத்தாண்டுகளுக்கு முன்பு பெர்காபிட்டா கன்ஸம்ஷன் 20 யூனிட்ஸ் என்ற அளவிற்கு பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆண்டு 120 யூனிட்ஸ் என்ற அளவில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது அதே போன்று விவசாயத் துறையிலும் மின்சாரம் இப்போது அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தொழில் துறையிலும் மின்சாரம் அதிகமாகக் கொடுக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் மின்சாரம் கொடுக்கப்படக்கூடிய அளவு அதிகரித்துக்கொண்டே செல்கிறது. அதேபோல் அதிலிருந்து கிடைக்கக் கூடிய வருமானம் ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறதா, கணிசமான அளவிற்கு பெருகியிருக்கிறதா என்றால் அதை அவ்வளவு எளிதில் என்றால் ஒத்துக்கொள்ள முடியாது.

ஆக, நாம் கொடுக்கக்கூடிய மின்சாரத்தின் யூனிட்டுகள் அதிகமாகிக்கொண்டு வருகின்றன. வருமானம் குறைந்து கொண்டே வருகிறது என்று நாம் சொல்கிற நேரத்தில் எங்கேயோ ஒரு இடத்தில் திருட்டு ஏற்படுகிறது என்ற ஐயம் ஏற்படுகிறது. மின்சாரத்தைத் திருடுபவர்கள் நிச்சயமாக சாதாரணமாக இருக்க முடியாது. கிராமங்களில் மின்சாரம் என்று சொன்ன உடனேயே கையை பின்னுக்கு இழுத்துக்கொள்கிற தன்மையில் இருக்கிறார்கள். ஆகவே, அந்த வகையில் தெரிந்தவர்கள் தான் மின்சாரத்தை திருட முடியும். மின்சாரத்தை எந்தெந்த வகையில் பயன்படுத்தலாம், எப்படி எடுத்தால் பயன் உள்ளதாக இருக்கும் என்று தெரிந்தவர்கள்தான், இன்னும் சொல்லப்போனால் டெக்னிகல் குவாலிபிகேஷன் உள்ளவர்கள் தான் ஒரு வேளை திருடுகிறார்களோ என்ற

ஐயம் ஏற்படுகிறது. அதைப் போக்கவேண்டும். அதற்காக தனி நிர்வாகத்தையாவது அல்லது தனிக் குழுவையாவது அமைத்து இவற்றை பரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நமக்கு கிடைக்கக்கூடிய மின் சக்தி 3 அல்லது 4 விதங்களில் கிடைக்கிறது. பற்றுக்குறைக்காக கேரளத்திலிருந்தும், மைசூரிலிருந்தும் நாம் மின்சாரத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறோம். மைசூரும், கேரளமும், பல திட்டங்களை நடைமுறையில் செய்து வருகிறது. அந்தத் திட்டங்களை முடித்துவிட்ட பிறகு அவர்கள் நமக்கு மின்சாரத்தை அளிக்க முடியுமா என்ற சந்தேகம் நமக்கு இருக்கிறது. இப்பொழுது இல்லையென்றாலும் இன்னும் 10 ஆண்டுகளில் அதாவது 1981-1982 ஆண்டுகளில் நமக்கு இப்போது பற்றுக்குறையாக உள்ள 3,000 மெகாவாட் என்று குறிப்பிடப்பட்டிருப்பது தீர்க்கப்பட்டு சரியான நிலைக்கு போதுமான நிலைக்கு வந்துவிடுகிற அளவுக்கு நாம் பல தெர்மல் ஸ்டேஷன் அல்லது அனல் மின்சார நிலையங்கள் ஆரம்பித்தாக வேண்டும். தற்போது கல்பாக்கத்தில் ஒரு அணு மின்சார நிலையத்திற்கான வேலைகள் துவங்கப்பட்டு இருக்கிறது. அது போன்ற ஒரு அணு மின்சார நிலையத்தை, அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை, மதுரையிலோ அல்லது ஏதாவது ஒரு தென் மாவட்டங்களிலோ ஆரம்பித்து வைப்பது, அங்கே உள்ள மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

மேலும், தற்போது ஒன்றிரண்டு தெர்மல் ஸ்டேஷன்கள் செயலற்றுக் கிடக்கின்றன. மதுரைக்குப் பக்கத்தில் உள்ள சமயநல்லூரில் உள்ள தெர்மல் ஸ்டேஷன் 16 மெகாவாட் மின்சக்தியைக் கொடுத்துக் கொண்டிருந்தது. அது இப்போது வேலை செய்ய முடியாமல் இருக்கிற நிலைமையில் இருக்கிறது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், உறுப்பினர் அவர்களுக்கும் நன்கு தெரிந்ததாகும். இப்போது அங்கே எலக்ட்ரிக் கம்பம் செய்யும் தொழிற்சாலை நடத்தப்படுகிறது. இது போன்று பல்பு செய்யும் தொழிற்சாலைகளை, நன்கு பணிபுரியும் ஆட்களைக்கொண்டு. திறமையான ஆட்களைக்கொண்டு, தமிழக அரசு ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான் நாம் மின் இணைப்பு கொடுத்து விளக்குகள் எரியமுடியும் என்று கூறி, இது சம்பந்தப்பட்ட பல்பு தொழிற்சாலையையும், ஒரு அணு மின்சார நிலையத்தையும் தென் மாவட்டங்களில் ஏற்படுத்த வேண்டுமென்று கூறி முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. டி. கணபதி:** மாண்புமிகு தலைவரவர்களே, மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கையைப் பற்றிச் சொல்கிறபோது கிராமங்கள் தோறும், சிற்றூர்கள் தோறும் மின் இணைப்பு 1972-க்குள் அளிக்க வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டதை, இங்கே மின்சார வாரியத்தின் அமைச்சர், இளைஞராக இருக்கும் அமைச்சர் ஒரு வருஷத்திற்கு முன்பே, அதாவது 1971-க்குள்ளேயே செய்து முடித்து இருக்கிறார்கள் என்பதை நாம் பாராட்டியாக வேண்டும்.

பல மாவட்டங்களில் மின் இணைப்பு கொடுப்பது முழுமை பெற்று இருக்கிற நிலைமையைப் பார்க்கிறோம். திருநெல்வேலி மாவட்டத்தில் முழுமை பெற்று இருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களும், ஊராட்சி மன்றங்களும் எங்கெல்லாம்



தன் வேலையைச் சரிவர செய்யவில்லையோ அங்கெல்லாம் சென்று கூட இந்த மின்சார வாரியம் தன்னுடைய பணியினைச் செய்து சிறு குக்கிராமங்களுக்குக் கூட மின் இணைப்பு கொடுத்திருக்கிறது. இதற்காக எத்தனை விழா நடத்தினாலும் தகும் என்று இந்த மன்றத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் ஊராட்சி மன்றங்கள் செய்யத்தவறிய காரியங்களைக் கண்டு பிடிப்பதற்குக் கூட இந்த விழாக்கள் பயன்பட்டு இருக்கின்றன என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய நான்குநேரி தொகுதியில் வள்ளியூர் யூனியனில், கோபன்குளம் பஞ்சாயத்தில் கண்ணுத்தி குளம் என்ற ஊருக்கு போகிறபோது அங்கே குடி தண்ணீருக்கு கிணறு இல்லை என்று கண்டு பிடித்தோம். தம்பித்தோப்பு என்ற கிராமத்திலும் குடி தண்ணீர் கிணறு இல்லை. ரோடுகள் சில கிராமங்களில் போடப்படவே இல்லை. இப்படிப்பட்ட குறைகளை எல்லாம், இந்த மின் இணைப்பு பூர்த்தியான விழாவில் தான் கண்டு பிடிக்க முடிகிறது. மதிப்பிற்குரிய நண்பர் ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்கள். விழாக் கூட்டினார்கள் என்று. விழா என்றால் அலெர்ஜியாக நினைக்கிறார்கள். அதற்காக வேண்டியேனும் கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்த மின் இணைப்பு கொடுப்பது பூர்த்தியடைவது ஒரு பெரிய விழாவாக அமைச்சர்கள் பெரிய தலைவர்கள் கலந்து கொள்கிற விழாவாக ஏற்படுத்தி, அதிலே பொதுமக்கள் கலந்து கொண்டு, தங்களுடைய குறைகளைச் சொல்வது போல் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

சர்க்கார் எதற்காக பெரிய விழாக்களை பெரிய சாதனைகளைக் கொண்டாடுவதற்காக எடுக்கிறது என்றால், ஆங்காங்கு உள்ள மக்களின் குறைகளைக் கேட்டறிவதற்காகத்தான். கன்னியாகுமரி மாவட்டத்தில் மின் இணைப்பு முழுமை பெற்று அதற்கான விழா கொண்டாடும்போது அங்கே உள்ளவர்கள் அதில் பங்கு பெற வேண்டும், இப்படி விழாவே வேண்டாம் என்று சொல்பவர்களை மட்டம் தட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி மின் இணைப்புகளை எல்லா மாவட்டங்களிலும் பூர்த்தி செய்து வருகின்ற நேரத்தில், தனியாரிடத்தில் இருக்கும் தூத்துக்குடி-திருநெல்வேலி எலெக்டிரிசிடி சிஸ்டத்தை நம்முடைய சர்க்கார் தேசியமயமாக்கிக்கொள்ள வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன். அது ஒன்று தான் இந்த மாவட்டத்தில் முழுமை பெறாமல் இருக்கிறது.

அதற்கடுத்தாற்போல், இன்னொன்றையும் சொல்ல நான் விரும்புகிறேன். இந்த மின்சார வாரியத்தில் கட்டுமானம், மெயின்டனன்ஸ் இரண்டையும் ஒன்றாக இணைத்து ஒரே இடத்தில் போய் விவசாயிகள் மின்சார இணைப்பு கேட்கிற நிலைமை உண்டாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி இல்லாத காரணத்தால் விவசாயிகள் மின் இணைப்புக் கேட்டுச் செல்கிற நேரத்தில் கட்டுமானத்திலுள்ள இன்ஜினீர், பராமரிப்பு இன்ஜினீரிடத்தில் போய் கேள் என்று சொல்கிறார். இப்படி இங்கும் அங்குமாக விவசாயிகள் அலைகிறார்கள். இந்த அவதியைப் போக்க இந்த இரண்டையும் ஒன்றாக இணைத்து ஒரே இடத்தில் வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நான் சொல்ல விரும்புவது, புதிய டிரான்ஸ்பார்மர்கள் எங்கெங்கே தேவையோ அங்கெல்லாம் வைக்கவேண்டும். சில இடங்களில் மின் இணைப்பு கேட்கிறபோது டிரான்ஸ்பார்மரில் லோடு இல்லை என்று கூறுகிறார்கள். ஆனால் அதே இடத்தில் வேறு ஒருவர் போய் மின் இணைப்பு கேட்கிறபோது கொடுத்து விடுகிறார்கள். இதனாலே டிரான்ஸ்பார்மரில் லோடு இருக்கிறதா இல்லையா என்று அறிந்து கொள்கிற வகையில் 'இன்டிகேடர்' வைத்தால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். இட்டமொழி, அழகப்பாபுரம், நன்னிகுளம் போன்ற பகுதிகளில் உடனடியாக டிரான்ஸ்பார்மர்கள் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விஜயநாராயணம் என்ற பகுதியில் 2,000 ஏக்கர் பாசனம் செய்யக்கூடிய வகையில் பல கிணறுகளை இப்போது புதிதாக வெட்டியிருக்கிறார்கள். அந்தக் கிணறுகளுக்கு பம்புசெட் போட்டு பாசனம் செய்கிற வகையில், அந்தக் கிணறுகளுக்கு போடும் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புத் தருவதற்காக உடனடியாக அந்தப் பகுதியில் ஒரு டிரான்ஸ்பார்மர் போடவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். இதனால் 2,000 ஏக்கர் நிலம் வேளாண்மைக்கு பயன்படும் என்பதோடல்லாமல், அங்கே இருக்கும் விவசாயிகளுக்கு பெருத்த நன்மை செய்தது போல் ஆகும் என்று தாழ்மையோடு தெரிவித்துக்கொண்டு, அந்த விவசாயிகள் 1 வருஷம் 1½ வருஷத்திற்கு மேலாக இதற்காக சர்க்கார் இடத்தில் முறையிட்டுக் கொண்டிருக்கிற காரணத்தாலே அதை உடனடியாக செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற்சாலை இருக்கும் இடங்களில் டிரான்ஸ்பார்மர்கள் வைப்பது போல், ரைஸ் மில் இருக்கிற இடங்களிலும் டிரான்ஸ்பார்மர்கள் வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் இந்தப் பகுதியில் ரைஸ் மில் வைக்க முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே, அதை உடனடியாக செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தெரு விளக்குகளைப் பற்றி எல்லோரும் நல்லவிதமாகச் சொன்னார்கள். தெரு விளக்குகள் போடப்பட்டிருந்தாலும் அந்த பல்புகள் பழுதாகி விட்டால் அவற்றிற்கு புதிய பல்புகள் உடனடியாக மாற்றப் படுவதில்லை. பஞ்சாயத்துகளிலே பல்புகளை உடனடியாக மாற்றுவதில்லை—நான் பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருக்கிறேன்—அதிலே உள்ள கஷ்டங்கள் எனக்குத் தெரியும். பல்புகள் பழுதானவுடன் மாற்றப்பட்டால் தான் நம் சாதனையும் முழுமை பெறும். அப்போது தான் நம்முடைய நண்பர் ஜேம்ஸ் போன்றவர்கள் அதைக் குறையாகக் காட்டி தங்கள் பக்கம் மக்களை சேர்ப்பதை தடுத்து நிறுத்த முடியும் என்றும் கூறிக்கொள்கிறேன். ஆகவே, பழுதான பல்புகளை உடனடியாக மாற்றி அந்தக் கிராமங்களில் ஒளி ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தெரு விளக்குகளுக்கு மீட்டர் வைப்பது என்பது சரியான யோசனை. அப்படி மீட்டர் வைத்தால் தான் எவ்வளவு செலவாகிறது என்ற கணக்கைப் பார்க்கமுடியும் என்று சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மணலி கந்தசாமி அவர்கள் குறிப்பிட்டதுபோல், நஞ்சை பயிரிடுகிறவர்கள்

நண் பகல் 12-00

மின்சாரம் மூலம் பயிர் செய்யும் போது அதிகச் செலவைச் செய்கிறார்கள். மின்சாரம் மூலம் பயிர் செய்பவர்கள் 3 ஏக்கர் நஞ்சை பயிரிட மாதத்திற்கு ரூ. 30 செலவு செய்ய வேண்டியிருக்கிறது என்றால், 4 மாதத்திற்கு ரூ. 120 ஆகிறது. ஆனால் அதே நேரத்தில், தாம்பரபாணி பாசனத்தில் சீரவாசல் கிராமத்தில் இரண்டு போகம் சாகுபடி செய்கிறவர்களுக்கு ஏக்கருக்கு ரூ. 20



என்ற அளவில் மூன்று ஏக்கருக்கு 60 ரூபாய் தான் செலவாகிறது. ஆகவே, மின்சாரத்தை உபயோகிக்க அதிகச் செலவு ஆகிறது என்பதைப் பார்க்க வேண்டும். இந்தக் கம்பாரிசனைப் பார்த்து, மாநிலம் முழுவதிற்கும் ஒரே மாதிரியான கட்டணம் என்கிற நிலையை உண்டு பண்ணவேண்டும். இது அமைச்சராலும், அந்தத் துறையினாலும் சிந்திக்கப்பட வேண்டும், ஆராயப்பட வேண்டும். இதற்கென்று ஒரு குழுவை ஏற்படுத்தி சீக்கிரமாக பரிசிலனை செய்து முடிவு எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் கிணறுகளை ஆழம் ஆழமாகத் தோண்டி, மேலும் மேலும் 2,000, 3,000 10,000 ரூபாய் என்று செலவு செய்து, சொத்துக்களை விற்று, செயல்படுகிறார்கள். ஆனால் மின்சாரம் இன்னமும் விஸ்தரிக்க வேண்டியிருக்கிறது. தண்ணீர் வற்றிப்போய், கிணறுகள் பலனற்றுப் போயிருக்கின்றன. இந்த நிலையில் 'ஆன்யுவல் மினிமம்' என்று கேட்கிறார்கள்.

கடைசியாக, டிஸ்ட்ரிக்ட் லெவல் கோ-ஆர்டினேஷன் கமிட்டி என்று அமைத்திருக்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது இந்த அறிக்கையில். கடந்த ஒன்றரை வருஷத்தில், திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரே ஒரு தடவைதான் இந்தக் கமிட்டி கூடியிருக்கிறது. ஆகவே, வருஷத்திற்கு மூன்று தடவையாவது கூடினால்தான் நன்றாக இருக்கும். அந்த வகையில் இந்தக் கமிட்டி செயல்பட வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

வள்ளியூர் ஒன்றியத்தில் மாண்புமிகு அரிசனத் துறை அமைச்சரவர்கள் முழுமை விழாவை அவர்கள் கையால், திறப்பு விழாவைத் துவக்கி வைத்த போது, மக்கள் பெருவெள்ளம் போல் வந்து கூடியிருந்து, அரசின் சாதனைகளை அமைச்சர் அழகாக எடுத்துச் சொல்ல, மக்கள் பாராட்டி வாழ்த்தினார்கள். இந்தியாவிலேயே மின்சாரத்தில் நம்முடைய தமிழ்நாடுதான் முதன் முதல் முழுமை பெற்றிருக்கிறது என்பதைக் கண்டு மக்கள் பூரித்திருக்கும் போது, அரசின் கையிலிருந்தே செலவு செய்து விழாவை, நண்பர் ஜேம்ஸ் போன்றவர்களுக்கு அலெர்ஜிக்காக இருந்தாலும், நல்ல முறையில் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன், வணக்கம்.

*திரு. த. சோலையா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கை மீது பேசுகின்ற வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

தமிழகத்தில், நம்முடைய மின்சார வாரியம், மற்ற மாநிலத்தவர்களாலும், மாற்றுக் கட்சி நண்பர்களாலும், பெருமைப் படுத்தப்பட்டு, பாராட்டப்பட்டிருக்கிறது. அப்படி வெளியிலே பாராட்டினாலும், இங்கே பேசும்போது கொஞ்சம் மன வேதனையோடுதான் சொல்லுகிறார்கள். உள்ளபடியே, மின்சார வாரியம் திட்டமிட்டதற்கு முன்னதாகவே, பூர்த்தியாக்கியிருப்பதால், மக்களால் பாராட்டப் பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக, மின்சார விளக்குகளை கிராமப் புற மக்கள் கண்டு, இன்றைக்கு மின்சாரத்தின் முழுப்பயனையும் அடைந்து, பெருமைப்படுகிறார்கள். பூரிப்படைகிறார்கள், பாராட்டுகிறார்கள், வரவேற்கிறார்கள், வாழ்த்துகிறார்கள். இந்தத் துறை அமைச்சரையும், இந்த இலாகாவிலுள்ள, பணிசெய்கின்ற அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியவர்களையும் பெருமையோடு பாராட்டுகிறார்கள்.

அதே நேரத்தில் மின்சார வாரியத்திலிருந்து வருகின்ற பில்களுக்கு பணம், அவர்களே வந்து பெற்றுக்கொள்ளலாம் என்று பெரியவர் மணலி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். உள்ளபடியே அந்த முறையைக் கையாண்டால், மக்களிடத்தில் நல்ல பல வசதிகளை ஏற்படுத்தியவர்களாக ஆவோம். நில வரி, வீட்டுவரி இவைகளை வீடுகளுக்குச் சென்று வாங்குகிறார்கள். அதேபோல் மற்ற சில வரிகளையும் வீடுகளுக்கே சென்று வாங்குகிறார்கள். அதே போல், மின்சாரக் கட்டணத்தையும் வீடு வீடாகச் சென்று பில் கொடுக்கிறவர்களே பணத்தையும் வசூல் செய்தால் மக்களுக்குப் பெரிய நன்மையாக இருக்கும். மேலும் குறிப்பாக ஆண்கள் வெளியே சென்றிருக்கும் காலங்களில் பெண்கள் மின்சார அலுவலகங்களுக்குச் சென்று கட்டணத்தைக் கட்டுவது சாத்தியமல்லாத ஒன்று. வீடுகளுக்கே சென்று ஊழியர்கள் வாங்கிக் கொண்டால், பெண்கள் அந்தப் பணத்தைக் கட்ட சிரமம் இல்லாமல் இருக்கும் அதோடு அதன் மூலம் சிலருக்கு வேலை வாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

அடுத்தபடியாக, முன்பெல்லாம் நம் தமிழகத்தில் அடிக்கடி மின்சார வெட்டு, மின்சார வெட்டு என்று, இரவில் வெட்டு, பகலில் வெட்டு, என்று வெட்டு வெட்டு என்ற வார்த்தையை நாம் கேட்டுவந்தோம். ஆனால், இப்பொழுது சில ஆண்டுகளாக அந்த வார்த்தையையே கேட்கமுடியாத அளவுக்கு திறமையாக நம் அலுவலர்கள் பணியாற்றுகிறார்கள். அதற்காக இந்த அமைச்சரையும், இந்த நிர்வாகத்தினரையும் மக்கள் பாராட்டுகிறார்கள். இன்றைக்கு கிணற்றுக்கு மின்சாரம் வேண்டும் என்று 5, 10 பம்புசெட்டுகளுக்கு ஏற்பாடு செய்தால் மின்சாரம் தருகிறோம் என்று சொன்னார்கள். ஆனால், அதை மாற்றி ஒரு கிராமத்தில் ஒரு கிணறு இருந்தாலும், மின்சாரம் கட்டாயம் கொடுப்போம் என்று செய்ய வேண்டும். இன்றைக்கு கிராமந்தோறும் மின்சாரம் சென்று விட்டதால், பக்கத்தில் இருப்பதை இழுத்துக் கொடுக்க அதிகச் சிரமம் இல்லை. ஆகவே நிச்சயமாக அதைச் செய்யலாம். அப்படிச் செய்தால் கிராம மக்களுக்கு, விவசாயிகளுக்கு ஏதுவாக இருக்கும்.

அடுத்தபடியாக, பேரூராட்சியில், இங்கே சொல்லப்பட்டது போல், பல்புகள் ஃப்யூஸ் ஆனாலும், குழாய் விளக்கு ஃப்யூஸ் ஆனாலும், வந்து போட தாமதம் ஆகிறது. கிராமப் பஞ்சாயத்து அளவில், அவர்களே ஊழியர்களை, லைன்மேன் போன்றவர்களை வைத்து, பொருத்திக் கொள்ளலாம் என்றால் நலமாக இருக்கும். மேஜர் பஞ்சாயத்து அளவில் இருக்கும் பெரிய பஞ்சாயத்துகளிலாவது அதைச் செய்யவேண்டும். பேரூராட்சிகளுக்குக் கொடுத்தால், இப்படிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்து, நல்ல முறையில் செயல் பட முடியும். நான் பொறுப்பேற்றிருக்கின்ற திருப்புவனம் ஊராட்சிக்கு உட்பட்ட எல்லாக் கிராமங்களிலும் மின் இணைப்பு கொடுத்தாகிவிட்டது. துவக்க விழாக்களுக்குப் போகும்போது, கிராம மக்கள் தாராளமாகச் சொல்கிறார்கள். 'நாங்கள் 20 வருஷமாக முயற்சித்தோம், ஆனால் கிடைக்கவில்லை. இப்பொழுது வந்திருக்கிறது "நாங்கள் 15 வருஷமாக மனுச் செய்தோம், வரவில்லை, இப்பொழுது வந்திருக்கிறது', '10 ஆண்டுக்காலமாக முயற்சித்தோம், கிடைக்கவில்லை, இப்பொழுது வந்திருக்கிறது' என்று இப்படி மக்களெல்லாம், 10, 15, 20 ஆண்டுகளாக முயற்சி செய்தும் கிடைக்காமல், இன்றைக்கு மனுப்போட்டு இரண்டு மூன்று மாதங்களுக்குள்ளாகவே கிடைக்கும் அளவில் மின்சார வாரியமும், நம்முடைய அரசும் ஏற்பாடு செய்து கொடுத்திருக்கிறது. கிராம மக்கள் உள்ளபடியே இந்த மின்சாரத் துறையை மிக மிகப் பாராட்டுகிறார்கள், வரவேற்கிறார்கள்.



இங்கே விழாக்கள் கொண்டாடுவது பற்றிச் சொன்னார்கள். என்னுடைய யூனியனில் மின்சாரம் பூர்த்தியானவுடனேயே, கிராம மக்கள் ஆர்வத்தோடு, ஒவ்வொரு கிராமத்திலும் விழாக் கொண்டாட வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். முன்பெல்லாம் கிராமங்களுக்குச் சென்றால், பூச்சிகளும், பாம்பும், காலைச் சுற்றிக்கொள்ளும். ஆனால் இன்றைக்கு குழல் விளக்குகள் பொருத்தியிருப்பதால், எட்டியிருந்து கிராமத்தைப் பார்க்கும்போதே மின் ஒளியால் பிரகாசித்துக் கொண்டு பெரிய நகரம் போலவே தெரிகிறது. கண்மாய்க் கரையிலோ அல்லது ரெயில் பெட்டியிலோ நின்று பார்த்தால், இரவிலே ஜோதி மயமாக இருக்கிறது. இந்த அளவுக்கு மின்சாரம் மிகச் சாதாரணமாக மக்களுக்குக் கிடைக்கும் அளவுக்கு செய்திருக்கும் இந்த அரசை பாராட்டுகிறோம், வரவேற்கிறோம். எனக்கு முன்னால் பேசியவர்கள் குறிப்பிட்டது போல், அமைச்சரவர்கள் இளைஞர், வேகமாகச் செயல்படுகிறவர். அடுத்த ஆண்டு வரும் என்றால், இந்த ஆண்டே கொடுத்துவிடும் அளவுக்கு திட்டத்தை தீவிரப்படுத்தி சிறப்பாகப் பணியாற்றியிருக்கிறார்கள். அதற்காகவும், அமைச்சரவர்களையும், அந்த இலாகாவில் பணிபுரியும் நிர்வாகத்தினர்களையும் பாராட்டிப் புகழ்ந்து, என் வார்த்தைகளை முடிக்கிறேன், வணக்கம்.

திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1971-72-க்கான மின் வாரிய நிதி நிலை அறிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பு பெற்றமைக்கு எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1971-72-க்கான செலவு 26, 27 கோடி என்று இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது, உள்ளபடியே பாராட்டத்தக்கதாகும். 1970-71-ல் ஏராளமான கிராமங்களுக்கு மின் இணைப்பு தரப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருப்பது உள்ளபடியே பாராட்டத் தக்க ஒன்று ஆகும். 1971 மார்ச் முடிய 5,30,442 வேளாண்மைத் துறை முன்னேறுவதற்காகவும், இங்கே மின் இணைப்பு தரப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது உள்ளபடியே இந்த நாட்டில் கிரீன் ரெவொலூஷன் என்று சொல்கிற பசுமைப் புரட்சியை நாம் உண்டாக்கி இருப்பது ஒரு முக்கிய காரணம் என்று மனமார பாராட்டுகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய நண்பர் ஜேம்ஸ் அவர்கள் ஏதோ அவர்கள் ஆட்சி காலத்தில் தான் இங்கே மின் விளக்குகள் வந்தது போல் இங்கே குறிப்பிட்டு பேசினார். அவர்களுக்கு நான் இந்த மாமன்றத்தின் வாயிலாக சொல்வேன். 1969-க்கு பின்பு தான் 72-க்குள்ளாக தமிழ்நாட்டிலே தான் பெருகி இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு முடிவு எடுத்ததற்கு பின்னாலே தான் 1971 ஏப்ரல் முடிய 11,905 அரிஜன குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு தந்திருக்கிறார்கள். பின்வரும் ஆண்டுகளில் மேலும் 6,200 அரிஜன குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு தரப்படும். இதற்கு முன்னால் முதலில் அக்ரஹாரப் பகுதியில் ஆரம்பித்து விட்டுவிடுவார்கள். இந்த அரசு, வந்ததற்குப் பிறகு நாங்கள் சிறப்பாகச் செய்ததை குறிப்பிட விரும்புகிறேன். 1970-71-ல் சிறப்பு திட்டமாக 10,016 கிராமங்களுக்கு நல்ல முறையில் மின் சக்தி தர இருப்பதை இங்கே குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதை நான் உள்ளபடியே வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். நடப்பு ஆண்டில் 21,305 கிராமங்களுக்கு இன்னும் மின் இணைப்பு தரப்பட இருக்கிறது என்பதை இங்கே குறிப்பிட்டிருப்பது வரவேற்கத்தக்கது, பாராட்டத்தக்கது.

லாபத்தில் மின்வாரியம் இயங்கினால் 4% போனஸ் சட்டப்படி கொடுக்க வேண்டும். இதை 5% ஆக உயர்த்தி 84,000 பேருக்கு தரப்பட்டு இருக்கிறது அந்த போனஸ். இந்த நாட்டிலே இருக்கிற பாட்டாளி மக்களும் இந்த நாட்டு தொழிலாளி வர்க்கமும் உள்ளபடியே பாராட்டுகிறது. இது ஒரு நல்ல, உண்மையான நிதி நிலை அறிக்கை என்று நான் கருதுகிறேன்.

இன்னொன்றும் இந்த சந்தர்ப்பத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த 84,000 தொழிலாளர்களில் குறைந்தது ஒரு 71,000 பேர் முழுக்க பிற்பட்டவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய சங்கத்தை (யூனியன்) அரசு அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் 31,000 பேர்களுக்கு தினம் 25 பைசா ஊதிய உயர்வு வந்திருக்கிறது. இதையும் நான் பாராட்டுகிறேன். 28,000 பேருக்கு மேலும் வேலைவாய்ப்பு ஏற்படப் போகிறது என்று பச்சை விளக்கு காட்டி மாண்புமிகு அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிற இந்த காலங்களில் இப்படி 28,000 பேருக்கு வேலைத் தரப்படுகிறது என்று சொல்லும்போது அதை வரவேற்கிறேன்.

பற்றுக்குறை முனிசிபாலிடிகள் கொஞ்சம் சிக்கனமாக இருக்கவேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நான் எலக்ட்ரிசிடி அட்வைசரி போர்டு மீட்டிங்குக்கு எங்கள் தொகுதியிலிருந்து 55 மைல் போகவேண்டி இருக்கிறது. அதற்கு டி.ஏ. இருக்கிறதா என்றால் இல்லை என்று சொல்கிறார்கள். எலக்ட்ரிஸிடி அட்வைசரி போர்டு மீட்டிங்குகளுக்கு போகும்போது அல்லது வேறு இடங்களுக்கு போகும்போது டி.ஏ. தரவேண்டுமென்று இந்த நேரத்திலே விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகள் கமிட்டிக்காக நான் தேக்கடிக்குப் போயிருந்தேன். நான் போயிருந்த நேரத்தில் அங்கே மின் உற்பத்தி நிலையத்தை பார்க்கும்போது வெள்ளை அலுமினிய பெயிண்ட் அடித்து வெள்ளையாக வைத்திருந்தார்கள். இந்த நெருக்கடியான நேரத்தில், மலைப்பகுதியில் வெள்ளையாக இருக்கும்போது பார்த்தால் சண்டை விமானங்கள் இதை பார்க்கின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. நாட்டின் பாதுகாப்புக்கு ஆதரவாக இருக்கும் விதத்தில் அவைகளை பச்சை நிறத்தில் அடித்தால் நல்லது.

என்னுடைய தொகுதி நன்னிலம். அது எப்பேர்ப்பட்ட தொகுதி என்று எல்லோருக்கும் தெரியும். அது மிகவும் பின்தங்கிய பகுதி ஆக இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் சிறப்பான டெல்டா பகுதி. இதுவரை மின் இணைப்பு தரவில்லை. நான் எலக்ட்ரிசிடி அட்வைசரி போர்டு கமிட்டியில் சொல்லியிருக்கிறேன். விரைவில் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய மாவட்டத்தில் பணி புரிந்தவர் இன்று இந்த வாரியத்தின் தலைவராக பொறுப்பு ஏற்றிருக்கிறார்கள். அவர்கள் மீது நம்பிக்கையால் நான் அவர்களை மன்றாடிக் கேட்டுக்கொள்வது என்னுடைய தொகுதிக்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்னிலம் தொகுதி பின்தங்கிய தொகுதி. 889 கிராமங்கள் கொண்டது. 82 பஞ்சாயத்துக்கள் கொண்டது. 2 ஊராட்சிகளைக் கொண்டது எங்கள் தொகுதி. டெல்டா பிரதேசம். சரியான பாதை இல்லை. அதன் காரணமாக விளக்குக் கம்பங்களை கொண்டுபோக முடியாது. இதையே அதிகாரிகள் சொல்கிறார்கள். நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால் எங்கள் குறைகளைப் போக்க வேண்டும்.



அதைப் போலவே, நான் பத்திரிக்கையிலே படித்தேன், பத்திரிக்கையின் பெயர் இப்போது ஞாபகம் இல்லை. அதிலே "க்ரீன் ரெவொலூஷன்" ஏற்படுவதற்கு, தொழில் புரட்சி ஏற்படுவதற்கு—உள்ளபடியே கிரிமினல் குற்றங்கள், மற்ற குற்றங்களும் குறைந்துகொண்டு வருவதாக சொல்கிறார்கள். அதற்குக் காரணம் தமிழகத்தில், தொழில் புரட்சி ஏற்பட்டு இருக்கிறது. மின்சார இணைப்பு, பம்புசெட்டு மற்றவை அதிகமான காரணத்தால் இங்கே கிரீன் ரெவலூஷன் ஏற்பட்டிருக்கிறது, இதனால் மக்கள் சிறப்பாக இருக்கிறார்கள் என்று அந்த பத்திரிக்கையில் குறிப்பிட்டிருந்தார்கள். அந்த வகையில் இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்று பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மின்சார வாரிய நிதி நிலை அறிக்கையைப் பற்றி நான் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இங்கே பேசிய எல்லா அங்கத்தினர்களும் மின்சார வாரியம் நல்லமுறையில் பணியாற்றி வருகிறது என்று சொன்னார்கள். காங்கிரஸ் ஆட்சி காலத்திலேயே மின்சார வினியோகத்தில் தமிழ்நாடுதான் முதலிடத்தைப் பெற்றுள்ளது என்ற பாராட்டைப் பெற்றிருக்கிறது. அந்தப் பணியைத் தொடர்ந்து நல்லமுறையிலே இன்று தமிழ்நாடு அரசாங்கம் நிறைவேற்றிவருகிறது.

இப்போது சில இடங்களிலே மின்சாரம் இல்லாதக் கிராமமே கிடையாது என்று சொல்லி, மின்சார பூர்த்தி விழாக் கொண்டாடுகிறார்கள். அதுபற்றி விளம்பரங்கள் கூடச் செய்யப்படுகின்றன. நல்ல காரியங்களுக்கு விளம்பரம் தேவைதான். எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர் திரு. குமாரசாமி அவர்கள் "எங்கள் பகுதியில் இன்னும் கிராமங்களில் மின்சாரம் வினியோகம் செய்யப்படவில்லை. ஆனால் மின்சார பூர்த்தி விழா கொண்டாடப்பட்டு விட்டது' என்று சொன்னார்கள். இப்படி மின்சாரம் எல்லாக் கிராமங்களுக்கும் சப்ளை செய்யப்படாமலேயே, மின்சார பூர்த்தி விழா கொண்டாடப்படுவதும், அதற்கு ஒரு விளம்பரமும் தேவைதானா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். மின்சார வினியோகப் பூர்த்தி விழாக் கொண்டாடுவதிலே என்ன தவறு? மின்சாரம் எந்தக் கிராமத்திற்கு வினியோகிக்கப்படவில்லை என்று சொன்னால் நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர் குறிப்பிட்டாரே, "எங்கள் பகுதியில் இன்னும் சில கிராமங்களுக்கு மின்சாரம் சப்ளை செய்யப்படவில்லை. ஆனால் பூர்த்தி விழா கொண்டாடி விட்டார்கள்" என்று.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** அவர் சொன்னதற்கு நான் பின்னால் பதில் சொல்லிக்கொள்கிறேன். அது ஆதாரமானதா அல்லது ஆதாரமற்றதா என்பதற்கு நான் விளக்கம் சொல்கிறேன். ஆனால் அதை ஆதாரமாகக் காட்டி கனம் அங்கத்தினர் பேசவேண்டாம். தங்களிடம் ஏதாவது ஆதாரங்கள் இருந்தால் அதைப்பற்றிப் பேசுங்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பொறுப்புள்ள ஒரு அங்கத்தினர் இந்த மன்றத்தில் ஆதாரத்தோடுதான் பேசுவார் என்று நினைத்துதான் அதைச் சுட்டிக்காட்டிப் பேசினேன். இல்லை என்றால் விட்டுவிடுங்கள். உங்கள் பதிலிலே அதற்கு விளக்கம் சொல்லிவிட்டுப் போகலாமே. சீக்கிரமே எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் கிடைக்கவேண்டுமென்பதுதான் எங்கள் எண்ணமும்.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1971 டிசம்பர் 10

அடுத்தபடியாக, தெருவிளக்குகள் எங்கும் போட்டுக்கொண்டிருக்கிறோம். சென்னை நகரத்தில் பல ரோடுகளில் தெரு விளக்குகள் எரிவது கிடையாது. பிற்பகல் மின்சார வாரியத்திற்குப் பொறுப்பு இல்லை, கார்ப்பரேஷன் பொறுப்பு என்று 12–30 சொல்வார்கள். கார்ப்பரேஷன் தன் பொறுப்பை ஒழுங்காகச் செய்கிறதா என்பதை மின்சார வாரியம் பார்க்கவேண்டும். உங்களிடத்தில் வாங்கித்தான் எங்களுக்குக் கொடுக்கிறார்கள். என் வீட்டுக்கு எதிரேயே வாரத்தில் ஒரு நாள் எரிந்தால் 6 நாள் விளக்கு எரிவதில்லை. இதைப்போல சென்னை நகரில் பலயிடங்கள். கேட்டால் 60 சப் ஸ்டேஷன்கள் தான் இருக்கின்றன. டிரான்ஸ் பார்மர் லோடு இல்லை என்கிறார்கள். சப் ஸ்டேஷன்களை அதிகப்படுத்தி டிரான்ஸ்பார்மர் லோடை என்ஹான்ஸ் பண்ணவேண்டும். இப்போதாவது சண்டை—விளக்கை அணைத்து விடுகிறார்கள் என்று சொல்லலாம். சண்டை இல்லாத காலங்களில் தெருவிளக்குகள் எல்லாம் எரிந்தால்தான் மக்களுக்கு வசதியாக இருக்கும். நகராண்மைக் கழகம் பொறுப்பில் தவறாது இருக்க தக்க மேற்பார்வை மின்சார வாரியத்தினிடத்திலும் இருக்கவேண்டும்.

இன்னும் கிராமங்களைப் பார்த்தால் ட்யூப் லைட் போட்ட இடங்களைத் தவிர மற்ற இடங்களில் மினிக் மினிக் என்றுதான் விளக்குகள் எரிகின்றன. லோ வோல்டேஜ் என்கிறார்கள். மண்ணெண்ணெய் விளக்கைவிட மோசமாக எரிகிறது. விளக்குகள் பிரகாசமாக எரிய என்ன வழி என்பதை யோசிக்க வேண்டும். இன்னும் கிராமப்புறங்களில் ஞாயிற்றுக்கிழமை என்றால் விளக்கு இல்லை, பான் இல்லை. கேட்டால் இன்றுதான் பழுதுபார்க்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இப்படி மக்களுக்கு இன்கன்வீனியன்ஸ் ஏற்படுத்திக் கொண்டுதான் பழுது பார்க்கவேண்டுமா? அது இல்லாமலே பழுதுபார்க்க முடியாதா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பம்புசெட்டை எடுத்துக்கொண்டால் விவசாயிகள் கடன் வாங்கி பம்புசெட்டுகள் வைத்து, ஐந்து வருஷமாக மின்சார கனெக்ஷன் இல்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். கேட்டால் கடனை மின்சார கனெக்ஷன் வந்த பிறகு கட்ட ஆரம்பிக்கலாம் என்கிறார்கள். அதுவரைக்கும் வட்டி கட்டத் தான் வேண்டியிருக்கிறது. பம்புசெட்டு போடுவதற்கு முன்னாலேயே பீஸிபிலிடி சர்டிபிகேட் என்று கொடுக்கிறார்கள். "ஆறு மாதங்களுக்குள் மின்சாரம் அளிக்கப்படும்" என்கிற பீஸிபிலிடி சர்டிபிகேட்டை இவர்கள் வழங்கியபின் தான் பம்புசெட்டு வாங்க கூட்டுறவு சங்கத்தில் கடனே வழங்கப்படுகிறது. ஆறு மாதம் எங்கே, ஐந்து வருஷமாகியும் கனெக்ஷன் கிடைக்கவில்லை என்றால் என்ன செய்வது? ஏதோ விவசாயிகளுடைய தொந்தரவுக்காக சர்டிபிகேட்டைக் கொடுத்துவிட்டோம் என்று இருந்துவிடுகிறார்கள், சர்டிபிகேட் கொடுப்பது ஒன்று, கடன் வழங்குவது ஒன்று, திரும்ப கனெக்ஷன் கொடுப்பது ஒன்று என்றால் இந்த 3 டிபார்ட்மெண்டுகளிடையே கோவார்டினேஷன் இல்லையா? இதை சட்டசபையில் வந்து உறுப்பினர்கள் சொல்வது—"இட் வில் பிவின் அட்டெண்டெட் டு" என்று எங்களுக்கு பதில் அனுப்பிவிடுவதோடு சரியாகி விடுகிறதா? இதை மின்சார வாரியம் கவனித்து அந்த சர்டிபிகேட்டுகளுக்கு மதிப்பு ஏற்படுகிற வகையில் உடனடியாக கனெக்ஷன் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, சென்னையில் வேப்பரைஸ்டு பல்புகள் போட்டு வருகிறார்கள். மவுண்ட் ரோடில் போட்டிருக்கிறார்கள். கோடம்பாக்கத்தில் போடப்பட்டு வருகிறது. இதைப்பற்றி வரக்கூடிய புகார் ஒன்று—வாகனங்களை ஓட்டிச்



1971 டிசம்பர் 10] [திருமதி த. ந. அனந்தநாயகி]

செல்கிறவர்களுக்கு க்ளேர் இருக்கிறது, கருப்பு டிரஸ் போட்டுப்போகிறவர்கள் தெரிவதில்லை என்பதாகும். இதைப் பரிசிலனை செய்யவேண்டும். இதற்கு செலவும் அதிகமாகலாம். ஆகவே ட்யூப் லைட்டுகளையே—ஷார்ட் ஸ்பானில்—போடுவதனால் வசதியாக இருக்காதா, சிக்கனமாகவும் இருக்காதா என்பதை இந்தத் துறையினர் பரிசீலிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்துகளிலே போடப்பட்டிருக்கிற பல்புகள் ப்யூஸ் ஆகிவிட்டால் மின்சார வாரியத்திற்கு எழுதினால் பல்பு ஸ்டாக் இல்லை என்றே பதில் வருகிறது. அதற்காக அவர்கள் பஞ்சாயத்துத் தலைவர்களே பல்புகளை வாங்கிப் போட்டுவிடலாம் என்று உத்தரவு அளித்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். ஆனால் 2 ரூபாய்க்கு அவர்கள் பல்பு வாங்கி அந்த பில்லை அனுப்பினால் ரூ. 1.40 தான் கொடுக்கிறார்கள். பாக்கித் தொகையை பஞ்சாயத்துத் தலைவர்களே போட்டுக்கொள்ளட்டும் என்கிறார்களா, அல்லது பஞ்சாயத்து நிதியில் இருந்தே ஈடுகட்டிக் கொள்ளவேண்டும் என்கிறார்களா? இது சரியானது அல்ல. பல்புக்கான முழுத் தொகையையும் கொடுப்பதற்கு வசதி செய்யவேண்டும்.

பல்பு கிடைக்காத காலத்தில்—மாதவரத்தில் ஜெனித் பல்பு என்று உற்பத்தி செய்கிற தொழிற்சாலை ஒன்று இருந்தது, அதையும் மூடிவிட்டார்கள். இங்கேயே போதுமான பல்புகளை உற்பத்தி செய்யவும் கவனம் செலுத்தவேண்டும்.

சென்னை நகரத்தில் முக்கால்வாசி ப்யூஸ்டு பல்புகளையே போடுகிறார்களோ என்கிற சந்தேகம் இருக்கிறது. அதை ஆராயவேண்டும். ஏன் விளக்குகள் பல எரியவில்லை. ஸ்டார்டர் தப்பா, சோக் தப்பா? எந்தக் கம்பெனிகள் சப்ளை செய்கின்றன, அவை சரியான கம்பெனிகள்தானா? போகஸ் கம்பெனிகளா, இதையெல்லாம் நன்கு பரிசீலிக்க வேண்டும்.

அடுத்து, இன்றையதினம் மின்சார வாரியத்தில் 81 ஆயிரம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்றால் அவர்களில் 30 ஆயிரம் பேர்கள் தினக் கூலிகளாக வைத்துக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள். மொத்தத்தில் இப்படி 45 சத விகிதம் காஷுவல் லேபரர்களாகத்தான் இருக்கவேண்டுமா? இப்படி நாம் வைத்துக் கொண்டிருந்தால் எப்படி ஊருக்கு உபதேசம் செய்ய முடியும்? தனியார் நிறுவனங்களின் முதலாளிகளிடத்தில் தற்காலிகமாக இருக்கிற தொழிலாளர்களை நிரந்தரமாக்குங்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்? 10 சத விகிதம், 15 சத விகிதம் காஷுவல் பேபர்கள் இருக்கலாம். 45 சதவிகிதம் என்பது மிக அதிகம். இவர்களில் எந்த எந்தப் பிரிவினர்களை உடனடியாக பர்மனென்ட் செய்யலாம் என்று பார்த்து பர்மனென்ட் செய்வதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

அடுத்து, தொழிலாளர்களின் பிரிவை எடுத்துக்கொண்டால் பிட்டர் 1, பிட்டர் 2, பிட்டர் 3 என்பதாக ஒவ்வொரு பிரிவிலும் பல ரகங்கள், பல ரக பே கிரேடுகள் எல்லாம் இருக்கின்றன. இவை அவசியமா? சில குறிப்பிட்ட ரகங்களுக்குள் அவர்கள் எல்லோரையும் கொண்டுவர முடியாதா என்பதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரு அதிகாரி—அவர் சென்னையிலும் வேலை செய்யவேண்டும், அதே சமயம் எண்ணூரிலும் ஒரு போஸ்டில் வேலை செய்யவேண்டும். அவர் இங்கே பாதி நாள், அங்கே பாதி நாள் என்று வேலை செய்யவேண்டும் என்கிறபோது இதற்காக ஆகும் பெட்ரோல் சார்ஜை வைத்துக்கொண்டே அங்கே ஒரு தனி அதிகாரியைப் போட்டுவிடலாம். காரணம், எப்போது சென்றாலும் "அவர் அங்கே இருக்கிறார்" என்பது, அங்கே சென்றால் இங்கே இருக்கிறார் என்பது—ஆக வேலையும் பாதிக்கப்படுகிறது. அங்கே இருக்கிற பல்வேறு தொழிலாளர்களை அவர்கள் தொழிலாளிகளாக நினைப்பதில்லை. கொடுமையான முதலாளிகளைக் காட்டிலும் மிகவும் கடுமையான முறையில் தொழிலாளர்களை நடத்துகிறார்கள். தொழிலாளர்கள் தொழிற்சங்கம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். என்றால், அவர்களைப் பழி வாங்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் யாரோ ஒரு அதிகாரியைப் போடுகிறோம். அந்த அதிகாரிகள் செய்கிற கொடுமை அரசாங்கத்தின் தலையில் வந்து விழுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட முறைகளைக் களைய வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எலெக்ட்ரிசிடி போர்டிலே வேண்டிய இடம் இருக்கிறபோது, எலெக்ட்ரிசிடி போர்டுக்காக 'ரயோலா கார்ப்பொரேஷன்' கட்டிடத்தில் வாடகைக்கு ஏன் இடம் எடுக்கவேண்டும்? அந்த இடத்தில் இடம் வாடகைக்கு எடுத்திருக்கிறார்கள். இந்த வாடகையை நாம் மிச்சப்படுத்தலாம் அல்லவா? இதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி:** பாயின்ட் ஆஃப் க்ளாரிபிகேஷன் சார், அம்மையார் அவர்கள் பேசுகிறபோது 110 வாட்ஸ் ஷாக் அடித்தால் குறைவாக இருக்கும் என்றார்கள். காரிலே 6 வாட்ஸ் பல்பிலேயே ஷாக் அடிக்கிறது. அம்மையார் அவர்களுடைய பேச்சைக் கேட்டு யாரும் 110 வாட்சிலே கையை வைத்தால் . . . .

THIRUMTHI T. N. ANANDANAYAKI : Sir, he will be always in the Transit. I know about mild shock and fatal shock.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு பேருக்குமே மின்சாரத்தைப்பற்றி அதிகம் தெரியாது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மின்சாரத் துறை நிதி நிலை அறிக்கையின்மீது பேசும்போது அம்மையார் அவர்கள் எலெக்ட்ரிகல் என்ஜினியரிங் பற்றிப் பேசினார்கள். அதனால் ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஷாக் அடிக்குமா, ஷாக் அடிக்காதா என்பதை எலெக்ட்ரிகல் என்ஜினியர்களுக்கே விட்டுவிட வேண்டும். 110 வோல்டிலோ, 230 வோல்டிலோ கை வைத்தால் ஷாக் அடித்து உயிரேகூட போய்விடும். வோல்டேஜ் குறைந்தால், ஆபத்து அதிகம் என்பதை 'பண்டமென்டல் ஆஃப் எலெக்ட்ரிகல் என்ஜினியரிங்' என்ற புத்தகத்தைப் பார்த்திருந்தால், இதைச் சொல்லியிருக்க மாட்டார்கள். தொழில் நுட்ப விஷயங்களை தொழில் நுட்ப வல்லுநர்களுக்கே விட்டுவிட வேண்டும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கனம் அமைச்சர் அவர்கள் ஒரு எலெக்ட்ரிகல் என்ஜினியர் என்பது எனக்குத் தெரியும். நான் எலெக்ட்ரிகல் என்ஜினியர் அல்ல. நான் ஒரு பி.ஏ., பி.எல். தான். "இந்த மாதிரி சொல்கிறார்களே, அதை நீங்கள் ஆராய்ச்சி செய்தீர்களா?" என்றுதான் என்னுடைய பேச்சில் குறிப்பிட்டேன்.



* **திரு. க. மு. இராசகோபால்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1971-72 மின்சார நிதி நிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு தங்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

அம்மையார் அவர்கள் பேசுகிறபோது, மின்சார விழாவை திராவிட முன்னேற்றக் கழகம் விழாக் கோலமாகக் கொண்டாடுகிறது என்று சொன்னார்கள். 1947 ஆகஸ்ட் 15-ம் நாளுக்குப் பிறகுதான் விருதுநகரில் மின்சாரத்தைக் கண்டுபிடித்து, அதன்பின்னர் அகில உலகத்திற்கும் தெரிவித்ததுபோல பேசினார்கள். ஏதோ வெள்ளைக்காரர்கள் கண்டுபிடித்ததை காங்கிரஸ்காரர்கள் கண்டுபிடித்ததுபோல பேசினார்கள். காங்கிரசார் இந்த நாட்டை ஆண்டபோது எவ்வளவோ கொடுமைகள் இழைக்கப்பட்டன. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் சிற்றூர்களுக்கெல்லாம் மின் விளக்கு போடப்பட்டது என்றார்கள். காங்கிரஸ் காலத்தில் சிற்றூர்களில் மின்சாரத்திற்காக நடப்பட்ட மரக்கம்பங்கள் நாளடைவில் அடி செத்து, வீடுகளின் மீதும், வீதியின் குறுக்காகவும் விழுந்துகிடைந்ததை அம்மையார் அவர்கள் பார்த்திருக்க மாட்டார்கள், காரணம் அவர்கள் சென்னை மாநகரத்திலே இருப்பவர்கள், கிராமங்களின் நிலைமை அவருக்குத் தெரியாது.

காங்கிரஸ்காரர்கள் என்ன என்ன செய்தார்கள் தெரியுமா? அவர்கள் ஏதோ சாதித்துவிட்டதாகச் சொல்கிறார்கள்? என்ன சாதித்துவிட்டார்கள்? ஊரிலே நடப்பட்ட மரக் கம்பங்கள் இல்லாமல்தான் போய் இருக்கின்றன. காங்கிரஸ் ஆண்ட பதினெட்டு ஆண்டுக் காலத்தில் 22,137 கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுத்திருக்கிறோம் என்றார்கள். நாம் கிட்டத்தட்ட ஐந்தாண்டுக் காலத்தில், 18 ஆண்டுகள் ஆட்சி செய்த காங்கிரஸைவிட சுமார் 42,000 கிராமங்களுக்கு மின் இணைப்புகள் கொடுத்திருக்கிறோம். இதில் விழாக் கொண்டாடுவதில் என்ன தவறு இருக்கிறது? நமது வளர்ச்சியைப் பார்த்து வயிற்றெரிச்சல் கொள்கிறார்கள். நமது கழக நண்பர்கள் காங்கிரஸ் சிண்டிகேட் உறுப்பினர்களை விழாக் கொண்டாடும்போது, அவர்களையும் அழைத்து காண்பியுங்கள். ஒருசில இடங்களில் சிண்டிகேட் காங்கிரஸாரை அழைக்காமல் விட்டுவிட்டிருக்கலாம். மற்ற நண்பர்கள் அவர்களையும் அழைத்து விழாவைக் கொண்டாடுங்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இந்த ஐந்து ஆண்டுக் காலத்தில் மின் இணைப்புத் தருவதில் தாமதம், தாமதம் என்று சொல்கிறார்கள். 1967-க்கு முன்னாலே எந்தெந்த ஊர்களிலே எப்படி எப்படி நடந்தது என்கிற கோரக் காட்சிகளையெல்லாம் நானே நேரிடையாக பார்த்திருக்கிறேன். என்னுடைய தொகுதியில் வாலாஜாபாத் என்கிற ஊரில் மின் இணைப்புக்காக கம்பம் நடப்பட்டது. அந்த ஊர் மக்கள் காங்கிரசுக்கு ஓட் போட மாட்டார்கள் என்று தெரிந்தவுடனே, அந்த இடத்தில் நடப்பட்ட கம்பங்கள் இரவோடு இரவாக வேறு ஊருக்கு மாற்றப்பட்ட காட்சிகள் பலப்பல. என்னுடைய ஊரில் 1959-ல் மின் இணைப் வேண்டுமென்று மனுச் செய்தேன். அங்கே இருக்கக்கூடிய பெரும் புள்ளிகள் எனக்கு மின்சாரம் வரக்கூடாது என்பதற்காக தடுப்பு நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டார்கள். அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள். கடைசியில் பெரு முயற்சிக்குப் பின்னால் 6 ஆண்டுகள் கழித்துத்தான் எனக்கு மின்சாரம் இணைப்பு

தரப்பட்டது. புலவர் அவர்களும் நானும் நேரில் சேர்மனிடம் சென்று அதைப் பெற முடிந்தது. இதையெல்லாம் காங்கிரஸகாரர்கள் மறந்துவிட்டார்களா? காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இழைத்த கொடுமைகள் ஏராளம்.

அடுத்தபடியாக, ஊராட்சி ஒன்றியங்களில் தெருவிளக்குகள் போடப் படுகின்றன. ஊராட்சி ஒன்றியத்தில் தலைவருக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? கோட்டாட்சித் தலைவர் அனுமதி பெற்றால்தான் மின்சாரம் பெற முடியும். ஒரு ஏழை விவசாயிக்கு மின்சார இணைப்பு வேண்டுமென்றால், அவன் ரெவின்யூ போர்டில் பர்மிஷன் வாங்க வேண்டும். 5 குதிரைச் சக்தி, 7 குதிரை சக்தி அளவுள்ள மோட்டார் இணைப்பு வைக்க வேண்டுமென்றால் அதற்கு பி.டபிள்யூ.டி. அனுமதி பெற வேண்டும். மேலும், விவசாயிக்கு கிணறு இருக்கிறதா, பட்டா நிலமா என்பதையெல்லாம் பார்த்துத்தான் வழங்குவார்கள். கிராமத்திலுள்ள கர்ணம், மணியம் இவர்களிடத்தில் அடங்கல் இருக்கிறது. அதைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். ஏழை விவசாயிகளுக்குப் பெரும் தொல்லைகளைக் கொடுக்கிறார்கள். ஆகவே, மின்சாரத் துறையிலுள்ள விதிகளை மாற்றியாக வேண்டும். காங்கிரஸ் ஆட்சியில் 2,56,566 கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப் பட்டிருக்கிறது. நாம் 5,30,044 கிணறுகளுக்கு மின்சார இணைப்பு வழங்கி யிருக்கிறோம். ஆனால் இதுவும் போதாது. மக்கள் வளர்ச்சியின் காரணமாக வேகமாக கிணறுகளைத் தோண்டிக்கொண்டே இருக்கிறார்கள். எனவே, அதற்கேற்ப நாமும் இந்தத் துறையிலே வேகத்தை அதிகப்படுத்தி மின் இணைப்புக் கொடுப்பதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

காங்கிரஸ் காருண்ய மூர்த்திகள் அவர்கள் காலத்திலே என்ன என்ன செய்தார்கள் தெரியுமா? என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலே பாலாறு சர்டிபிகேட் வேண்டுமென்று கேட்டார்கள். பாலாறு, செய்யாறு, வேகவதி மூன்று ஆறுகளும் என்னுடைய தொகுதியிலே ஓடுகின்றன. அதற்காக எத்தனை முறைகள் தாலுகா அலுவலகங்களுக்கும், கோட்டாட்சி அலுவலகங்களுக்கும், கலெக்டர் அலுவலகத்திற்கும் அலைவது? என்றால் நடந்து முடியவில்லை. அந்த அளவுக்கு விவசாயிகளைப் பொறுத்தவரையில் பாலாறு சர்டிபிகேட் என்பது மிகவும் பாதகமாக இருக்கிறது. அதை ரத்துச் செய்யவேண்டும்.

முதன்முதலிலே பசியைப் போக்கவேண்டும். வள்ளுவர் சொல்லி இருக்கிறார் முதலில் பசியைத்தான் போக்க வேண்டுமென்று 'உறுபசியும் ஓவாப் பிணியும்' என்று சொல்லும்பொழுது பசியைத்தான் முதன்மையாக் குறிப்பிட்டுக் காட்டுகிறார். எனவே, பசியைப் போக்குவதற்குத்தான் நாம் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். இன்றைக்கு தொழில் செய்கிறவர்கள் மின் இணைப்புக் கேட்டால் 10 நாட்கள் 15 நாட்களுக்குள் கிடைத்துவிடுகிறது. ஆனால், மின் இணைப்பு ஏழை விவசாயி கேட்டால் உடனே வாங்கமுடியவில்லை, நாள் ஆகிறது. இதைப் போக்கவேண்டும்.

இந்தத் துறையைப் பொறுத்தவரையிலே மூன்று பிரிவுகள் வைத்திருக்கிறார்கள். அதை மாற்றி ஒரே பிரிவாக ஆக்கவேண்டும்.

அவர்கள் ஏதோ 1967-க்கு முன்னாலே தெருவிளக்குகள் போட்டோம் என்று சொன்னார்கள், போட்டார்கள். எப்படிப் போட்டார்கள் தெரியுமா? ஒரு காலனி இருக்கிறது, அங்கே விளக்குப் போடவேண்டுமென்றால் அங்கே உள்ள





நாலைந்து பேர்களைப் பிடித்துவைத்து, 10 பேர்களிடம் கையெழுத்து வாங்கி மூன்று நான்கு விளக்குகளைப் போட்டார்கள். ஆனால் அதற்காகப் பின்னாலே கட்டணம் வசூலித்தார்கள். அதை அவர்களால் கட்ட முடியவில்லை. அதன் காரணமாக இன்றைக்குக்கூட அந்தத் தொல்லைகள் இருந்துகொண்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியிலே உள்ள சொறபந்தல் காலனியிலே எரிந்த விளக்குகளுக்காக என்று நானூறு ரூபாய், ஐநூறு ரூபாய் கட்டவேண்டியிருக்கிறது, பியூஸை எடுத்துகொண்டு போய்விடுகிறார்கள். பியூஸை எடுத்துவிட வேண்டுமென்று மின்சார இலாகா சொல்கிறது. இதனால் விளக்குகள் எரிவது பாதிக்கப்பட்டு இருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்றால் அவர்கள் முறையோடு சட்டத்தை வகுக்காமல் தனிப் பட்டவர்கள் சிலரிடம் அக்ரிமெண்ட் செய்து கொண்டு அப்பொழுது தெரு விளக்குகள் போட்ட காரணத்தினாலேதான் இன்றைக்கு ஊராட்சிகள் அதை ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமையிலே இருக்கின்றன. மின்சாரத்திலே எவ்வளவு திருட்டுப் போகின்றன, அந்தப் பணம் பூராவையும் இப்படிப்பட்ட இடங்களுக்கு தெரு விளக்குகள் எரியச் செய்வதற்குப் பயன்படுத்தலாம். எனவே, அப்படிப்பட்ட காலனிகளுக்கு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

34,000 பேர்கள் தினக் கூலிகளாக இருக்கிறார்கள் என்று ரொம்ப வருத்தப்பட்டார்கள் அம்மையார் அவர்கள். 34,000 பேர்கள் 1967-க்குப் பின்னால் வந்து சேர்ந்தவர்கள்தானா? ஏற்கனவே பல ஆண்டுக் காலமாக இந்தத் துறையிலே வேலை செய்தவர்கள்தானே? நீங்கள் ஏன் அப்பொழுது செய்யவில்லை? நாங்கள் செய்திருக்கிறோம். பொதுப் பணித்துறையிலே ஹைவேஸ் துறையிலே வேலைசெய்கிற தொழிலாளர்களைக் கேட்டுப் பாருங்கள், பி.டபிள்யூ.டி. துறையில் வேலைசெய்கின்ற தொழிலாளர்களைக் கேட்டுப் பாருங்கள் தெரியும். நீங்கள் இருந்தது வரையில் வேலையை ஊர்ஜிதம் செய்யாமல் விட்டுவிட்டு இன்றைக்கு ஆட்சிக்கு ஏதோ வந்திருக்கிற அரசு என்று நினைத்துக்கொண்டு பேசுவது சரியல்ல.

அதிகாரிகளிடம் ஒரு சில குறைபாடுகள் இருக்கின்றன. அவர்களும் நம்முடைய உற்றார், உறவினர், நாட்டுக்குச் சொந்தக்காரர்கள்தான். அவர்களும் ஏழை மக்களின் நிலைமையைச் சிந்தித்துப் பார்த்தால் அப்படிச் செய்ய மாட்டார்கள். நடுமட்டத்தில் ஏற்படுகிற குறைகளை வைத்து அரசாங்கத்தைக் குறைகூறுவது சரியல்ல. எனவே ஏற்கனவே இருக்கிற சட்டத்தில் உள்ள குறைகளை நாம் மாற்றியாக வேண்டும்.

கம்பங்கள் நடப்படுகின்றன. மீட்டரை விவசாயிகளுடைய இடத்திற்கு வெளியே வைத்து விடுகிறார்கள். அந்த மீட்டரைச் சுற்றி பாதுகாப்பாக வைத்திருக்கிற பெட்டி 10, 15 ஆண்டுகளுக்கு முன்னால் செய்யப்பட்டு வைக்கப் பட்ட பெட்டியாக இருப்பதால் அந்தப் பெட்டியினால் பாதுகாப்பு இல்லாமல் போய் அந்த மீட்டர் கெட்டுவிட்டால் அதற்கான பணத்தை விவசாயிதான் கட்டவேண்டுமென்று கேட்பது நியாயமல்ல. வெளியிலே வைக்கப்படுகின்ற மீட்டருக்கு எப்படி ஒரு விவசாயி பொறுப்பாவான்? அந்தச் செலவை மின்சார போர்டே ஏற்றுக்கொள்ள வேண்டும். விவசாயிகளுக்கு இப்படிப் பட்ட தொல்லைகளைக் கொடுக்காத அளவுக்கு சட்டத்தை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஊராட்சி மன்றத் தலைவராக பத்துப்பன்னிரண்டு ஆண்டுக் காலமாக இருக்கிறேன். பணம் வருகிறதோ இல்லையோ தெருவிளக்குக்காக என்று எடுத்துக்கொண்டுவிடுகிறார்கள். தெருவிளக்குகள் சரியாக எரிவதில்லை. விளக்கு எரிகிறதோ எரியவில்லையோ பணத்தை எடுத்துக் கொள்கிறார்கள். பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில் எல்லாப் பேரூராட்சிகளும் கடனாகத்தான் இருக்கின்றன. ஊராட்சிகளில் கடன் கிடையாது, விளக்குகள் எரியாவிட்டாலும் பணத்தை எடுத்துக்கொள்கிறார்கள். இதைக் கவனிக்கவேண்டும்.

லைன்மேன்கள் அந்தந்த ஊர்களிலே இருக்கவேண்டும். இப்பொழுது சில இடங்களிலே அப்படியில்லை. டவுன்புறங்களிலே இருப்பது காலையிலே ஒரு ஊருக்குப் போய்விட்டு வந்துவிடுவது. மற்றவற்றையெல்லாம் வீட்டில் இருந்துகொண்டே போனமாதம் என்ன ஆயிற்றோ அதையே பார்த்துப் போட்டு விடுவது என்று செய்துகொண்டே போய் ஆண்டுக் கடைசியிலே பார்த்தால் 200 ரூபாய், 300 ரூபாய் அளவுக்கு விவசாயிக்குப் போடுவது. இப்படிப்பட்ட குறைகள் எல்லாம் இருப்பதால்தான் எதிர்க்கட்சிக்காரர்கள் கொஞ்சம் ஆவேசமாகப் பேசுகிறார்கள். இயற்றப்பட்ட சட்டத்தை, அதை யார் இயற்றியிருந்தாலும் சரி அதை மாற்றி மின்சாரம் அதிகமாகப் பயன்படக்கூடிய முறையைச் செய்யவேண்டும். மின்சார வாரியம் தமிழகத்திலே எவ்வளவு வேகமாக வேலை செய்திருக்கிறது. அவ்வளவு வேகத்தையும் ஏழை விவசாயிகளின்பால் செலுத்தி அதிகமான வசதிகளை அவர்களுக்குச் செய்து கொடுக்கவேண்டும்.

ஒரு விவசாயி கிணறு எடுத்தால் 10 கம்பங்கள் வருகின்றன என்றால் திட்டத்தில் அது வரவில்லை என்று சொல்லிவிடுகிறார்கள். ஒரு விவசாயிக்குக் கொடுப்பதற்கு திட்டமாவது பணமாவது. எத்தனை கம்பங்கள் வேண்டுமென்றாலும் விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டும். கோடிக் கணக்காக செலவழிக்கிற நம்முடைய அரசாங்கம் விவசாயிகளுக்குக் கம்பங்கள் கொடுப்பதைப்பற்றிக் கணக்குப் பார்க்கக்கூடாது. இந்தக் குறைபாடுகளையெல்லாம் சீர்திருத்தி புனிதமாக சட்டம் இருந்தாலும் மக்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே அதை மாற்றியமைத்து வேகமாக நன்மைகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

* திரு. பெரி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் 1971-72-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையைப் பாராட்டி வரவேற்கிறேன்.

என்னுடைய திருவாடானை தொகுதியாகிய என்னுடைய பகுதியிலே மூன்று ஊராட்சி மன்றங்களையுடைய அமைப்பிலுள்ள அந்தப் பகுதிவாழ் இடங்களிலெல்லாம் குறிப்பாக எல்லாப் பகுதிகளிலுமே ஓரளவிற்கு மின்சார வசதிகள் பெற்று அந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் அத்தனை பேர்களுமே இன்று நம்முடைய அரசைப் பாராட்டிப் பெருமைப்படக்கூடிய ஒரு நல்ல மகிழ்ச்சிகரமான இந்தச் சந்தர்ப்பத்திலே நானும் என்னுடைய தொகுதிவாழ் மக்களுடைய நல்ல எண்ணத்தைச் சொல்லிக்கொள்ளப் பெருமைப்படுகிறேன். இந்தச் சந்தர்ப்பத்திலே ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திற்கும் அவரவர்களுடைய கிராமங்களிலே இணைக்கப்பட்டுள்ள மின்சார வசதியை முறையாக அன்றாடம் அந்த விளக்குகள் எரிந்தாலும் எரியாவிட்டாலும் மாதந்தோறும் அவர்கள் அதற்கு உரிய பணத்தைக் கட்டவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிற காரணத்தி





னாலே அவற்றைச் சீர்செய்வதற்கு அந்தந்த ஊராட்சி மன்றங்களுக்குத் தனித் பிற
தனியாக மீட்டர்கள் அமைத்து கொடுக்க வேண்டுமென்று நாங்கள் அந்தந்தப் பகல் 1-00
பகுதிகளில் உள்ள டிவிஷனல் மீட்டிங்குகளிலே மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டங்களிலே எடுத்துக் கூறியுள்ளோம்.

அத்தகைய வேண்டுகோளுக்கிணங்க இங்கே நான் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். குறிப்பாக, ஊராட்சி மன்றங்களில் சில சூழ்நிலைகளில் ஆங்காங்குள்ள தலைவர்கள் தங்களுக்குச் சாதகமாக உள்ள பகுதிகளில் உள்ள குடியிருப்புகளுக்கு தெருவிளக்குகள் போடும் சமயங்களில் தங்களுக்குச் சாதகமாகச் செய்து கொள்ள எண்ணுகிறார்கள். தங்களுக்குப் பாதகமாக உள்ள இடங்களிலுள்ள குடியிருப்புகளுக்கு விளக்குகளைப் போட வசதியில்லை என்ற அளவில் தங்கள் ஊராட்சி மன்றங்களில், அந்தக் கூட்டங்களில் தீர்மானம் நிறைவேற்றி அவைகளை ஆங்காங்குள்ள மின்சாரத் துறை அலுவலகங்களுக்கு அனுப்பி அத்தகைய முறையில் அங்கே மின்சார விளக்குகள் போடுகிறார்கள். அப்படிப்போடும் சமயங்களில் அந்தக் கிராமங்களிலுள்ள மற்றவர்கள் சற்று வேகமாக மனத்திற்கொண்டு, எங்களைப் போன்றவர்களிடத்தில் முறையிடும் பொழுது நாம் அவர்களை அணுகிக்கேட்டால் அந்த ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களுடைய தீர்மானத்தில் இந்தந்த இடங்களுக்குத்தான் விளக்குகள் போட அனுமதி தந்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். எனவே, அதை மாற்றியமைத்து, அந்தந்த ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கு அந்த அதிகாரத்தைத் தருவது என்ற முறையில் அதைச் சீர் செய்து அந்தக் கிராமத்திலுள்ள ஊராட்சி மன்றங்களில் எல்லாக் குடியிருப்புகளுக்கும் வீதிவிளக்குகள் நல்லமுறையில் கிடைக்கும் அளவிற்கு வாய்ப்பினைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக ஊராட்சி மன்றங்கள் வருமானம் ஏறத்தாழ 500 ரூபாய்க்குக் குறைவாக இருக்கும் அத்தனை ஊராட்சி மன்றங்களிலும் மின்சார வசதி பெறுவதற்கு மிகவும் சிரமப்படும் சூழ்நிலையிலிருப்பதால் அவைகளை அந்த ஊராட்சி மன்றங்களை, வருவாய் குறைவாக உள்ள ஊராட்சி மன்றங்களுக்கு அரசே பொறுப்பேற்று அதன் நிர்வாகத்தைச் செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, மாதந்தோறும் ஊராட்சி ஒன்றியங்களில் நடக்கும் மாதாந்திர கூட்டங்களில் மின்சாரத் துறை அதிகாரிகள், குறிப்பாக ஏ.ஈ. போன்ற அதிகாரிகள் வருகை தந்து, அந்தச் சமயம் அந்த ஊராட்சி ஒன்றியங்களில் அத்தனை தலைவர்களும், ஊராட்சி ஒன்றியத்தின் பெரும் தலைவரும் மற்றும் எல்லோரும் இருந்து அந்தந்தப் பகுதிகளிலுள்ள மின்சார நிலைமைகளைத் தெளிவாக எடுத்துக்கூறி, அவர்களும் அதற்குத்தக்க முறையில் பதில் சொல்லுகின்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தரலாம். நாங்களும் இந்த விஷயத்தை மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களிலும் சொல்லியிருக்கிறோம். அதைத் தொடர்ந்து இனிமேலாவது அத்தகைய ஒரு நல்ல வாய்ப்பை அந்தந்தப் பகுதி ஊராட்சி ஒன்றியக் கூட்டங்கள் நடக்கும்பொழுது மின்சாரத் துறையிலுள்ள ஏ.ஈ. போன்ற அதிகாரிகள் அந்தக் கூட்டங்களுக்கு வருகை தந்து இப்படிப்பட்ட சீரான நல்ல அமைப்புகளுக்கு வாய்ப்புத் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

என்னுடைய தொகுதியிலுள்ள 3 ஒன்றியங்களில் கண்ணங்குடி என்ற ஒன்றியம் மிகவும் பின் தங்கிய பகுதி. கடைசி எல்லை. தஞ்சை மாவட்டத்தின் ஓரத்தில் இருக்கிறது. அந்த ஒன்றியத்தில் பெரும்பாலான பகுதிகளில் பாதைகள் மிகவும் சீர்கெட்டிருப்பதால் மின்சார வசதியை அங்கே அடைவதற்கு மிகவும் தாமதப்படுகிறது. அந்த ஒன்றியத்தில் மின்சார வசதியைப் பொறுத்த வரையில் மிகவும் பின்தங்கியிருப்பதால் அதற்கு ரோடு வசதிகளைச் சற்றுத் துரிதப்படுத்தி அந்த ஒன்றியத்தில் மிக அதிக தேவையை நம்பியிருக்கும் அந்தப் பகுதிவாழ் மக்களுக்கு மின்சார வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அமர்கிறேன்.

* திரு. ச. சங்குமுத்து தேவர்: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகரவர்களே, என்னுடைய அம்பாசமுத்திரம் பகுதியில் உள்ள ஒருசில கருத்துக்களைத் தெரிவிக்க இருக்கிறேன். அவற்றை நிவர்த்தி செய்து தரும்படி வேண்டிக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து பகுதியில் தெருவிளக்குகள் சரியாக எரியவில்லை என்று எல்லா உறுப்பினர்களும் ஏற்கனவே தெரிவித்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்த வரையிலும், இந்த பல்புகள் போடுவதில் அந்தப் பஞ்சாயத்துப் பகுதியிலே அந்தத் தலைவர்கள்தான் பல்புகள் போடவில்லை என்ற குறைகூறப்பட்டு வருகிறது. இதை உடனடியாக நிவர்த்தி செய்ய ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, கிராமப் பஞ்சாயத்துப் பகுதிகளில் ரோடுகள் மத்தியிலே சில இடங்களில் மின் கம்பங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. அந்தக் கம்பங்களை, போக்குவரத்திற்கு இடையூறின்றி இருக்க அப்புறப்படுத்த வேண்டுமென்றால் பஞ்சாயத்திலிருந்து அதற்குப் பணம் கட்ட வேண்டுமென்ற நிலையிருக்கிறது. அந்தக் கம்பத்தை அகற்ற வேண்டுமென்றால் 100 ரூபாய், 200 ரூபாய்வரை கட்ட வேண்டியிருக்கிறது. பஞ்சாயத்துக்குப் போதுமான வருமானம் இல்லாத காரணத்தினால் உடனடியாகப் பணத்தைக் கட்ட முடியவில்லை. அதன் காரணமாக அந்தப் போக்குவரத்துப் பாதைகளிலே மிகவும் இடையூறுகள் இருக்கின்றன. எனவே, இப்படிப்பட்ட கம்பங்களை அகற்றுவதிலே அந்த மின்சார இலாக்காவே முழுப் பொறுப்பேற்று அகற்றினால்தான் அதை உடனடியாக நிவர்த்தி செய்ய முடியும்.

இரண்டாவதாக, இப்பொழுது விவசாயிகளுக்காக அரசு ஹெலிகாப்டர்கள் மூலம் மருந்து தெளிக்கப்படுகிறது. எங்கள் பகுதியில் தாமிரபரணி நதி ஓடுவதால் எப்பொழுதும் இருபோக நஞ்சைப்பயிர் சாகுபடி செய்யக்கூடிய நிலையிருக்கிறது. அந்தப் பகுதிகளில் மின் கம்பங்கள் நஞ்சை நிலங்களின் மத்தியில் ஏகப்பட்ட இடங்களில் இருப்பதால் அங்கே இருந்து தெளிப்பதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதன் காரணமாக சில பஞ்சாயத்துக்களில் மருந்தே தெளிக்க வேண்டாமென்று நிறுத்தப்படுகிறது. எனவே, இனிமேல் புதிதாகப் போடக்கூடிய இந்த மின்சாரக் கம்பங்களை நஞ்சை நிலங்களில் போடாமல் இருக்கத் தகுந்த ஏற்பாடு செய்வதுடன் முன்பு நஞ்சை நிலங்களில் போடப் பட்டுள்ள கம்பங்களையும் நாளடைவில் எடுத்துவிடுவதற்கு ஆவன செய்ய வேண்டுகிறேன்.





அடுத்தபடியாக, கிராமப் பகுதிகளில் உள்ளவர்கள் மின்சாரக் கட்டணங்களைக் கட்டும்பொழுது எங்கள் பகுதியைப் பொறுத்தவரையில் அநேகமாக அம்பாசமுத்திரம் வந்துதான் கட்ட வேண்டியதாயிருக்கிறது. பஸ் வசதியில்லாத கிராமங்களில் மின்சார இலாக்காவிலிருந்து வசூல் இன்ஸ்பெக்டர்கள் அந்தந்தப் பஞ்சாயத்துப் பகுதிகளுக்குச் சென்று அங்கேயேயிருந்து வசூல் செய்தால் அந்த பகுதி மக்களுக்கு வசதியாகயிருக்கும். ஆகையால் அதையும் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்துக் கூட்டங்கள் நடைபெறும்பொழுது மின்சார இலாக்கா சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூட்டத்தில் கலந்து கொண்டால் இதுபோன்ற கிராமங்களிலிருக்கும் சில குறைபாடுகளைச் சொல்ல வசதியாகயிருக்கும். எனவே, அவர்கள் அந்தக் கூட்டங்களில் கலந்துகொள்ள வாய்ப்பளிக்க வேண்டுமென்று நான் இந்தச் சமயத்தில் ஞாபகப்படுத்திக் கொள்கிறேன். மேலும் இதுபோன்ற மனுநீதி நாட்களிலும் மின்சார இலாக்கா சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதில் கலந்துக் கொண்டால் இதுபோன்ற குறைபாடுகளைச் சொல்ல வாய்ப்பாக இருக்கும்.

மேலும் கடையம் யூனியன் பகுதியில் மைலப்புரம், லட்சுமியூர் என்ற கிராமங்களில் அந்தக் கிராமங்களுக்கு மின் தெருவிளக்குகள் போட்ட காலத்திலேயிருந்து இதுவரையிலும் லைட்டுகள் சரியாகவே எரியவில்லை. அதுபற்றிக் கேட்டால் டிரான்ஸ்ஃபார்மர்கள் கிடைக்கவில்லை என்று சொல்லுவதாக தெரிகிறது. ரொம்ப நாட்களாகவே அப்படிப்பட்ட குறைகளிருந்து வருகிறது. அதையும் உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும்.

இதுபோன்று சில பல கிராமங்களில் இருந்து வருகிறது. அதுபோக, புதிதாக வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்றால் மீட்டர் கிடைக்கவில்லை என்று தெரிகிறது. அந்த மீட்டரை அவர்கள் சொந்தப் பொறுப்பிலே வாங்கி வைக்க வேண்டுமென்று தெரிவிக்கிறார்கள். அப்படிச் சொந்தப் பொறுப்பிலே வாங்கினால்தான் மின்சாரம் இணைக்கப்படுகிறது. இம்மாதிரிக் குறைபாடுகள் இல்லாமல் மின்சார இலாக்காவில் இருந்தே மீட்டர்கள் வாங்கிக் கொடுக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, அந்தப் பகுதிகளில் கட்டடங்களை விலைக்கு விற்கும் நேரத்தில் நேம் டிரான்ஸ்பர் செய்ய வேண்டுமென்ற பெரிய கஷ்டமாக இருந்து வருகிறது. கட்டடங்கள் யாராவது விலைக்கு வாங்கிவிட்டால் எவ்வித செலவும் இல்லாமல் பெயர் மாற்றம் செய்யத் தகுந்த உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டுகிறேன். மேலும் பத்து பன்னிரண்டு வருஷ காலமாக இது பெருகி வருகிறது. இது போன்ற சில பெயர் மாற்றம் மற்றவற்றுக்கு இடையூறாகவும் இருக்கின்றன. இதுமாதிரி இருக்கும் குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. மா. மீனாட்சிசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரிய நிதி நிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய உரையை நிகழ்த்துகிறேன். 1972-க்குள் தமிழ்நாடு முழுவதும் மின்சாரமயம் ஆக்குகின்ற பெரிய திட்டத்தை இந்த அரசு நல்ல முறையில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. [illegible]க இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய வேதாரண்யம் தொகுதியானது தஞ்சை மாவட்டத்தின் கீழ்க் கோடியில் இருக்கும் காரணத்தால் இன்னும் 25, 30 கிராமங்களுக்கு மின்வசதி கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு 150 மோட்டார் பம்புசெட்டுகளுக்கு இரண்டு மூன்று வருஷங்கள் ஆகியும் மின் இணைப்பு கிடைக்கவில்லை. அது கிடைக்காதது ஒருபுறம் இருக்க அந்த விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மோட்டார் வாங்கிய பணத்திற்கு வட்டி கட்டிக் கொண்டிருக்கும் அவல நிலை இருந்து கொண்டிருக்கிறது. அந்த மோட்டார் பம்புசெட்டுகளுக்கு உடனடியாக மின் இணைப்புக் கொடுக்க அரசு ஆவன செய்யவேண்டும்.

என்னுடைய தொகுதியில் மீனவர்கள் குடும்பங்கள் அதிகமாக இருக்கும் காரணத்தால் அந்தக் குடும்பங்கள் இருக்கும் பகுதிக்கு உடனடியாக மின் இணைப்புக் கொடுப்பதோடு கூட, அவர்கள் கடலில் மீன் பிடிக்கச் செல்லும் நேரத்தில் இரவில் திசை காட்டும் முறையில் உயர்ந்த கம்பத்தில் பல்ப் போட்டு ஒளி காட்ட வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேரிகள் இருக்கும் பகுதிகளுக்கு அரசு உடனடியாக ஒரு சட்டத்தைப் போட்டாவது உடனடியாக மின் இணைப்புத் தரவேண்டும். அந்த வகையில் எல்லா ஊராட்சிகளுக்கும் அரசு உத்தரவிட வேண்டும். அப்படிப்பட்ட உத்தரவைக் கொடுத்தால்தான் அவர்கள் உடனடியாக மின் இணைப்புக் கொடுப்பார்கள். சில ஊராட்சிகளுக்குப் போதிய வருமானம் இல்லாத காரணத்தால் அந்தப் பகுதிகளில் மின்சார இணைப்பு கொடுக்கவும், தெருவிளக்குகள் போடவும் கஷ்டமான நிலை இருக்கிறது. அதற்கும் இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உப்புத் தொழில் மிகச் சிறந்த தொழிலாக இருக்கிறது. அதிலே ஈடுபட்டிருக்கும் சிறு விவசாயிகளுக்கு, சிறு உற்பத்தியாளர்களுக்கு அவர்கள் இருக்கும் பகுதிகளில் இணைப்புக் கொடுக்கவேண்டும். பெரிய அளவில் உற்பத்தி செய்கிறவர்கள் சொந்த முதலைப் போட்டு மின் இணைப்புப் பெறுகிறார்கள். ஒரு ஏக்கர் இரண்டு ஏக்கர் வைத்திருக்கக்கூடியவர்கள் மின் இணைப்பும், மோட்டார் வாங்க பண வசதியும் இல்லாத காரணத்தால் உடனடியாக அரசு அவர்களுக்குத் தனிச் சலுகை அளித்து மின் இணைப்புக் கொடுப்பதன் மூலம் அந்தத் தொழில் வளர ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் பல கிராமங்களுக்கு மின் இணைப்புகள் தராமல் இருக்கின்ற குறையை 1972-க்குள் இந்த அரசு போக்கும் என்று மக்கள் எல்லாம் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நம்பிக்கைக்கு வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எல்லா ஊராட்சிகளின் மின்சார இணைப்புகளையும் அரசே எடுத்துக்கொண்டால் நல்ல முறையில் இருக்குமென்று நினைக்கிறேன். அரசு ஊராட்சிகள் செய்யக்கூடிய செலவுகளை முதலில் செய்துவிட்டு பிறகு அந்த ஊராட்சிகளிடமிருந்து பணத்தை வசூல் செய்து கொள்வது நல்ல முறையாக இருக்கும்.

வேதாரண்யத்தில் போடப்பட்ட லைன் மிக நீண்ட காலத்திற்கு முன்பு போடப்பட்டதாக இருக்கிறது. அதனால் அடிக்கடி ஃப்யூஸ் போய்விடுகிறது. அதிகாரிகள் லைன் பழையதாக இருப்பதால் ரிப்பேர் செய்ய முடியாது என்



கிறார்கள். சிறு மழை பெய்தால் கூட விளக்குகள் எரிவதில்லை. ஆகவே, புதிய கம்பிகளைப் போட்டு பழுது பார்த்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* திரு. ந. தருமலிங்கம்: சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய மாண்புமிகு மின்வாரிய அமைச்சர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** "அமைச்சர் அவர்களே" என்று அழைத்து பேசக்கூடாது.

திரு. ந. தருமலிங்கம்: 1971-72-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய தொகுதியிலுள்ள சில நிலைமைகளைப் பற்றிக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் 1972-க்குள்ளாக எல்லாக் கிராமங்களுக்கும் மின் இணைப்புக் கொடுக்கப்படும் என்று கூறியதற்கேற்றவாறு மதிப்பிற்குரிய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மிகுந்த உற்சாகம் எடுத்து தமிழகத்தின் ஒரு சில மாவட்டங்களில் மின்சார இணைப்புகளைப் பூர்த்தி செய்து நிறைவு விழா கொண்டாடி வருகிறார்கள். அதே போன்று என்னுடைய பகுதியிலே இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. சிஷிவந்தியம் ஒன்றியத்திலே மின் இணைப்புகள் முழுவதும் கொடுக்கப்பட்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டிருக்கிறது. தியாகதுருவம் ஊராட்சி ஒன்றியத்திலும் இன்று ஒரு சில கிராமங்கள் தவிர மற்ற எல்லாக் கிராமங்களிலும் மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. விரைவில் அந்தப் பகுதியில் நிறைவு விழா கொண்டாட இருக்கிறார்கள். இதைப் பார்க்கும்போது உண்மையிலேயே மின்சாரத் துறை அலுவலாளர்களும், அதிகாரிகளும் இந்த அளவுக்கு உற்சாகமாகப் பணியாற்றி வருவதை நோக்கும்போது நான் பெருமைப்படுகிறேன். நமது அரசு தீட்டி வரும் பல திட்டங்களை அலுவலாளர்கள் மிகுந்த உற்சாகம் காட்டி செயல்படுத்தி வருவது சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பெருமையைத் தேடித் தருகிறது. இப்படி அதிகாரிகள், அலுவலாளர்களின் ஒத்துழைப்பால் பல காரியங்கள் நடைபெற்று வருவதை எங்கள் பகுதியிலும் பல இடங்களில் காண்கிறோம்.

இன்னும் ஒரு சில கிராமங்களில் மோட்டார் பம்ப்செட்டுகள் போடப்படாமல் இருக்கின்றன. இப்போது எல்லா இடங்களுக்கும் தெரு மின் விளக்கு இணைப்பு கொடுத்து வருவது போல் 1972-க்குள் எல்லாக் கிராமங்களுக்கும் வேண்டிய அளவுக்கு பம்ப்செட்டுகள் கொடுத்து மின்சார இணைப்பு கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதி மிகப் பின்தங்கிய பகுதி. ஏழை விவசாயிகள் ஏராளமாக இருக்கிறார்கள். விவசாயிகள் கர்நாடக காலத்தில் பயன்படுத்தி வந்த கவலை, ஏற்றம் ஆகியவற்றைக் கொண்டுதான் தண்ணீர் இறைத்து வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் உற்சாகம் தரக்கூடிய வகையில் 1971-க்குள்ளாக எல்லாருக்கும் பம்பு செட்டுகள் கொடுத்து மின் இணைப்பு கொடுக்க வேண்டும். என் பகுதி மேலும் மேலும் அபிவிருத்தி அடைய நம் அரசாங்கம் தூண்டுதலாய் இருக்கிறது என்று தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

[1971 டிசம்பர் 10

* **திரு. இரா. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1971-72-ம ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையையும், 1970-71-ம் ஆண்டுக்கான துணை நிதி நிலை அறிக்கையையும் வரவேற்று அதில் என் கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். சென்ற ஆண்டு பேரவை உறுப்பினர்கள் வழங்கிய கருத்துரைகளின் மீது எடுத்துக் கொண்ட நடவடிக்கையைக் காட்டுகிற அறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும். நமது சட்டமன்ற உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களின் பேரில் நடவடிக்கைகள் எடுப்பது என்பது மிக மிக அவசியமானது. தமிழ்நாட்டில் மின்சார வாரியம் எவ்வளவு நல்லமுறையில் செயல்பட்டுவருகிறது என்பதை இந்த அறிக்கை தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது. தொழில் வளர்ச்சிக்கும், வேளாண்மை வளர்ச்சிக்கும் மின்சாரம் மிக அவசியமான ஒன்றாக இருக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முன்பாக நமது உற்பத்தித் திறன் 156 மெகாவாட்டாக இருந்தது. இன்றைக்கு அது படிப்படியாக உயர்ந்து 1971-72-ம் ஆண்டு இறுதிக்குள் 2,185 மெகாவாட்டாக உயர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்கும் போது, நம் அரசு திட்டமிட்டு படிப்படியாக மின்சார உற்பத்தியை அதிகரிப்பதில் எவ்வளவு அக்கறை செலுத்தியிருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம்.

1971-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் தேதிய நிலவரப்படி மின்தொடர்பு அளிக்கப்பட்ட வேளாண்மை விசையேற்றங்களில் மொத்த எண்ணிக்கை 5,30,044 ஆகும். இது ஒரு மகத்தான சாதனையாகும். பசுமைப் புரட்சி ஏற்படுத்துவதில் மின்சார வாரியம் எந்தளவிற்கு ஒத்துழைப்பு கொடுத்திருக்கிறார்கள் என்பதை கொடுக்கப்பட்டுள்ள புள்ளிவிவரங்களிலிருந்து காணலாம். அதேபோல் 1971-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் தேதி நிலவரப்படி மின் வசதி அளிக்கப்பட்ட கிராமங்கள், சிற்றூர்களின் மொத்த எண்ணிக்கை 42,226 ஆகும்.

குறிப்பாக, ஹரிஜனங்கள் குடியிருக்கிறப் பகுதிகளுக்கு சலுகைகள் அளிக்கப்பட்டு அங்கு முதலாவதாக மின் இணைப்பு கொடுத்திருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும். ஆகவே, 1972-ம் ஆண்டு இறுதிக்குள் தமிழ்நாட்டிலுள்ள அத்தனை கிராமங்களும் மின் இணைப்பு பெறக்கூடிய விதத்தில் திட்டம் செயல்படுத்தப்பட்டுவருவதைக் காண்கிறோம். நிதி ஒதுக்கீட்டிலும் மின்சார உற்பத்திற்கும், கிராமங்களுக்கு மின் வசதி அளிப்பதற்கும் அதிகமாக இன்றைய தினம் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பாக்கும்போது அதைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. அந்த அளவிற்கு மின்சார வாரியம் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. மின் சக்தி உற்பத்தி செய்வதையும், வினியோகம் செய்யும் பொறுப்பையும் ஏற்றிருக்கிற மின்சார வாரியம் மின்சாரப் பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய தொழில்களையும் தன்னகத்தே கொண்டிருக்கவேண்டுமென்று நான் கருதுகிறேன். அல்லது அரசுத் துறையிலாவது மோட்டார்ஸ், மீட்டர்கள், பல்புகள் போன்ற அத்தியாவசியமான பொருள்களை, தேவைப்படுகிற பொருள்களை உற்பத்தி செய்கிற தொழில்களை அரசே ஏற்று அதற்கான தொழிற்சாலைகளைத் துவங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடிக்குப் பக்கத்தில் ஒரு அனல் மின் நிலையம் வருவதாக இந்தக் குறிப்பில் இருக்கிறது. 600 மெகாவாட்ஸ் உற்பத்தித் திறன் கொண்ட அந்த அனல் மின் நிலையத்தினை கூடிய விரைவிலே ஏற்படுத்துவதற்கு தக்க முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.



1971 டிசம்பர் 10] [திரு. இரா. இராமலிங்கம்]

அடுத்து, தென் மாவட்டத்தில், குறிப்பாக நெல்லை மாவட்டத்தில் ஏப்ரல், மே மாதங்களில் வோல்டேஜ் ட்ராப் அதிகமாக ஏற்படுகிறது. அதனால் தொழிற்சாலைகளில் உற்பத்தி அதிகமாகப் பாதிக்கப்படுவதைக் காண்கிறோம். குறிப்பாக நூற்பாலைகளில் இத்தகைய வோல்டேஜ் ட்ராப்பினால் இழைகள் அறுந்து போவதும், இரண்டு மாதங்கள் உற்பத்தி பாதிக்கப்படுவதுமான நிலை இருக்கிறது. நீர்நிலைகளில் தண்ணீர் குறைந்து மின் உற்பத்தி குறைகிறபோது அம்மாதங்களில் இப்படிப்பட்ட நிலை அடிக்கடி உருவாகிறது. ஆகவே அப்படிப்பட்டதொரு நிலை ஏற்படுவதைத் தடுக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் உற்பத்திக் குறைவும், மோட்டார் போன்றவைகளுக்கு சேதம் ஏற்படுகிறது என்றும் பரவலாகக் கூறுகிறார்கள் தொழில் துறையில் இருப்பவர்கள். ஆகவே இந்தக் குறையை நிவர்த்திக்க வேண்டும்.

தூத்துக்குடி பக்கத்தில் பெரும்பாலும் உப்பு உற்பத்தியாளர்கள் இன்று பம்ப் செட்ஸ் வைத்திருக்கிறார்கள். அவர்கள் ஆயில் என்ஜின்ஸ் மூலம் தங்களது பம்ப் செட்களை இயக்கி அதன் மூலம் உப்பு உற்பத்தி செய்கிறார்கள். அவர்களுக்கு மின் இணைப்பு கொடுத்தால் அவர்கள் அதிகமாக உப்பு உற்பத்தி செய்வதற்கும் உப்பு உற்பத்தியில் காஸ்ட் ஆஃப் ப்ரொடக்ஷனைக் குறைப்பதற்கும் வசதியாக இருக்கும். ஆகவே உப்பளங்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதில் தனி அக்கறை செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடி-திருநெல்வேலி எலக்ட்ரிசிட்டி சப்ளை கம்பெனிக்கு அரசு ஒரு ஆணை பிறப்பிக்கவேண்டும். இந்த தனியார் நிறுவனத்தினரால் தூத்துக்குடியில் உள்ள மின்சாரம் உபயோகிப்பவர்கள் பல சங்கடங்களை ஏற்கவேண்டிய நிலைமை இருக்கிறது. அவர்கள் தங்கள் இஷ்டப்படி மின்சாரக் கட்டணத்தை உயர்த்துகிறார்கள்.

மீட்டருக்கு ஏற்கனவே டெப்பாஸிட் கட்டியிருந்தும் திடீரென்று டெப்பாஸிட் கட்டவேண்டுமென்று மின்சாரம் உபயோகப்படுத்துபவர்களுக்கு அவர்கள் உத்தரவு போடுகிறார்கள். சமீபத்தில் வீடு ஒன்றுக்கு 25 ரூபாய் அதிகப்படியாக டெப்பாஸிட் வாங்கக்கூடிய நிலையை அந்தக் கம்பெனி ஏற்படுத்தியிருக்கிறது. அதிகமாக மின்சாரம் உபயோகிப்பவர்களிடமிருந்து அதிக டெப்பாஸிட் தொகை பெற அவர்களை வற்புறுத்துவதாகக் கேள்விப்படுகிறேன்.

ஆகவே இத்தகைய குறைகளைப் போக்குவதற்காக, துரிதமாக பம்ப் செட்ஸுக்கு மின் இணைப்பு கிடைக்கும் விதத்திலும், மேற்கூறியபடி டெபாசிட் வாங்க விடாமல் தடுப்பதற்காகவும் தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அந்தக் கம்பெனியை தேசியமயமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் நடவடிக்கைகள் இன்று இத்துடன் முடிவடைகின்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணிக்குக் கூடும். பிற்பகல் 1-30

[பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.]

தால் அவைகளின் நுரையீரலில் நோய் வந்திருக்கிறது என்றும் கண்டுபிடித்து இருக்கிறார்கள். ஆகவே, அந்த இடத்திலிருந்து அவைகள் மாற்றப்பட வேண்டுமென்று யோசனை கூறியிருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. இரண்டு யோசனைகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று, கிண்டி பார்க்குக்குப் பக்கத்தில் 100-150 ஏக்கர் ஒதுக்கப்பட்டால் அங்கே வைக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். மற்றொன்று, வண்டலூருக்குப் பக்கத்தில் வைக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். வண்டலூர் சென்னைக்கு வெகுதூரத்தில் இருப்பதால், வெளியிலிருந்து வருபவர்கள் அங்கே சென்று பார்ப்பது கஷ்டம் என்கிற காரணத்தால், கிண்டியில்தான் இருக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் முடிவு எடுக்கப்படும்.

### மேலக்கட்டளை—சின்னமநாய்க்கன்பட்டி சாலை

* 253 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், மேலக்கட்டளைக்கு சின்னமநாயக்கம்பட்டியிலிருந்து சாலை அமைக்க வேண்டும் என பொதுமக்களிடமிருந்து கோரிக்கை எப்போது வந்துள்ளது?

(இ) அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு ஒரு கோரிக்கை 3—5—1971 அன்று வந்துள்ளது.

(இ) மேற்படி கோரிக்கை ஊராட்சி ஒன்றியத்தின் பரிசீலனையில் உள்ளது.

### வேலாண்டிபாளையத்தில் பாலம்

* 254 வினா—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், பேரூர் பஞ்சாயத்து யூனியனிலுள்ள தெலுங்கு பாளையம் நகரப் பஞ்சாயத்தைச் சேர்ந்த வேலாண்டிபாளையம் என்ற ஊரின் நடுவேயுள்ள பள்ளத்தின் குறுக்கே ஒரு பாலம் கட்ட நிதி உதவும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் கேள்வி கேட்க அனுமதிக்கவில்லை. அடுத்த கேள்வி . . . 255.

THIRU K. T. K. THANGAMANI: Has question No. 254 been put?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வினா கேட்கப்பட்டு, விடையும் அளிக்கப்பட்டு விட்டது. மாண்புமிகு உறுப்பினர் அந்த 254-வது கேள்விக்குத்தான் துணை வினா கேட்க எழுந்தார்கள். வேலாண்டிபாளையத்தின் அருகே பாலம் கட்ட நிதி உதவும் செயற்குறிப்பு உண்டா என்று கேட்டதற்கு அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் கூறிவிட்டார்கள். அதற்கு மேல் அதிலே துணைக் கேள்வி கேட்க என்ன இருக்கிறது? சில கேள்விகளுக்குத்தான் துணைக் கேள்விகள் அனுமதிக்கப்படலாம். அது அந்தந்த நேரத்தில் சபாநாயகர் பார்த்துச் செய்யவேண்டியது.



இன்றொன்றையும் நான் இந்த மன்றத்திற்கு இந்த கேள்வி நேரத்தில் ஒரு வேண்டுகோளாக விடுக்கவேண்டுமென்று கருதிக்கொண்டிருந்தேன். உங்களுக்கெல்லாம் கொஞ்சகாலத்திற்கு முன்பு தெரியும், மாண்புமிகு அமைச்சர்களிடம் விரைவாகப் பதில்கள் அளிக்கவேண்டும், கேள்வி நேரத்தில் கேள்விகள்கூட இல்லை என்று கூறப்பட்டது. இங்கே இன்றையதினத்தில் மாண்புமிகு அமைச்சர்களெல்லாம் எல்லா இலாகாக்களுக்கும் உடனடியாகப் பதில் அனுப்பவேண்டும் என்று சொல்லியதன் காரணமாக இன்று 800 கேள்விகளுக்குப் பதில்கள் வந்திருக்கின்றன. அதற்காக மாண்புமிகு அமைச்சர்களுக்கும், அந்த இலாகாவின் செயலாளர்களுக்கும் நான் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த 800 கேள்விகளுக்கான விடைகள் இப்போது நம்முடைய சட்டப் பேரவைத் துறையில் இருக்கின்றன. இவ்வளவு விடைகள் இருக்கிற காரணத்தால் இன்று முதற்கொண்டு 50 கேள்விகள் வினாப் பட்டியலில் இடம் பெறுகின்றன. அந்த 50 கேள்விகளுக்கும் துணைக்கேள்விகள் கேட்கக்கூடாது என்பது அல்ல, துணைக்கேள்விகள் கேட்க உரிமை இல்லை என்பது அல்ல. மாண்புமிகு உறுப்பினர்களிடத்தில் ஒரு பெரிய வேண்டுகோளாக கேட்டுக் கொள்வேன், தேவையான கேள்விகளுக்குத் துணைக்கேள்வி கேளுங்கள். உள்ளூர் பிரச்னைகளைப்பற்றிய ஒரு கேள்விக்கு, உதாரணமாக வேலாண்டிபாளையத்தில் பாலம் கட்டுவதற்கு உதவி என்று கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் கூறியபிறகும், அதுபற்றிப் பரிசீலனை செய்யுமா அரசாங்கம் என்று கேட்பதைக் காட்டிலும், கேட்காமல் இருக்கலாம். அந்தக் கேள்விகள் சுருக்கமாக இருக்கவேண்டும். மூலக்கேள்விகளை ஒட்டிய துணைக்கேள்விகள் கேட்க வேண்டுமென்று நான் மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கேள்விகள் கூடுமானவரையில் சுருக்கமாகக் கேட்கப்படலாம். டாக்டர் ஹாண்டே அவர்களுக்கும் சொல்கிறேன். அவர்கள் அனுபவம் உள்ள உறுப்பினர். நெடு நேரம் ஒரு கேள்வியைச் சொல்ல வேண்டும் என்கிற அவசியம் இல்லை. மூன்று கேள்விகள் கேட்கும் நேரத்தில் ஒரு கேள்வியைக் கேட்க வேண்டாம். சுருக்கமாகவும் விரைவாகவும் துணைக் கேள்வியைக் கேட்கலாம். அமைச்சர் அவர்களுக்கும் சொல்லுகிறேன். அவர்களும் சுருக்கமாகப் பதில் சொல்ல வேண்டும். சில கேள்விகளுக்கு அதிகநேரம் பதில் கொடுப்பது அவசியம் இல்லை.

இதுபற்றி சபாநாயகர்கள் மாநாட்டில்கூட விவாதம் வந்தது. அங்கே சொன்னார்கள், குறைந்தபட்சம் அரை நிமிஷம், முக்கால் நிமிஷத்தில் கேள்வி-பதில்கள் இருக்கவேண்டும் என்று. அப்படிப்பட்ட ஒரு நிலை வரவேண்டும். வெகு நீளமான பதில்களாக இருக்குமானால், அமைச்சரவர்கள் அவற்றை அச்சடித்துக் கொடுத்துவிடலாம். நெடுநேரம் பதில்கள் சொல்லிக் கொண்டிருப்பது சுருக்கப்படுவதன் மூலம் வேறு பல துணைக் கேள்விகள் கேட்க இடம் ஏற்படும். இந்த விவகாரத்தில் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும். அமைச்சர்களும், உறுப்பினர்களும். தினம் 50 கேள்விகள் என்று வைத்துக்கொண்டாலும், 18-ம் தேதி முடிய 300, 400 கேள்விகள்தான் எடுத்துக்கொள்ளமுடியும்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்** : மாவட்ட சேணிப்படைத் தலைவர்களுக்கு ஜீப் கார் தனியாக ஒதுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. பி. எஸ். மணியன்** : தலைவர் அவர்களே, போர்க்காலத்தில் உதவியாக இருக்கும் வகையில், சேணிப்படையினருக்குத் துப்பாக்கி சுடும் பயிற்சி அளிப்பதன்மூலம், தற்காப்புப் பயிற்சியும் அளிக்கப்படலாம் என்ற வகையில் அந்த போர் முறைகளைப் பயிற்சி அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்** : அதுபற்றிப் பரிசீலிக்கப்படலாம்.

### கொள்ளிடத்திற்கு உதவிப் பதிவாளர் அலுவலகம்

* 261 வினா—**திரு. எஸ். வடிவேல்** : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொள்ளிடத்தில் சப்-ரிஜிஸ்டிரார் அலுவலகம் ஒன்று ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்** : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா** : தலைவர் அவர்களே, கொள்ளிடம் பகுதி மக்கள் சீர்காழிக்குப் போக வேண்டியதாக இருக்கிறது. 25 மைல் தூரம் இருக்கிறது. கடினமாக இருக்கிறது. ஆகவே, கொள்ளிடத்திலேயே ஒரு சப்-ரிஜிஸ்டிரார் ஆபீஸ் திறக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்** : கொள்ளிடத்தில் துணைப் பதிவாளர் அலுவலகம் வைப்பதுகுறித்து நாகப்பட்டிணம் பதிவாளரால் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் கொள்ளிடத்திற்கும் சீர்காழிக்கும் அதிக தூரம் இல்லை என்பதாலும், துரித பஸ்கள் போவதாலும், அங்கே ஒரு அலுவலகம் தேவையில்லை என்று முடிவு எடுக்கப்பட்டது.

### பர்கூர் மலைவாழ் மக்கள்

* 262 வினா—**திரு. ஈ. எம். நடராசன்** : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், பவானி வட்டம், பர்கூர் மலைப்பகுதியில் உள்ள மலைஜாதி மக்களின் தொகை என்ன ?

(இ) இவர்கள் சேலம், திருச்சி, வடார்க்காடு, தென்னார்க்காடு மாவட்டங்களில் உள்ளது போல மலைஜாதி மக்களாகக் கருதப்பட்டுச் சலுகைகள் பெறுகிறார்களா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து** : (அ) சுமார் 1,000.

(இ) இல்லை.





### மாவட்ட மகளிர் நல அலுவலர்கள்

* 263 வினா—**திரு. தோப்பூர் திருவேங்கடம்** : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்ட மகளிர் நல அதிகாரிகளின் கடமைகளும், பொறுப்புகளும் யாவை ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து** : அவையுடன் ஒரு விபர அறிக்கை@ வைக்கப்பட்டுள்ளது.

### தெற்குப் பரும்பூர் அரிசனங்களுக்கு வீட்டு மனை

* 264 வினா—**திரு. எம். முத்தையா** : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரத்தைச் சேர்ந்த தெற்குப் பரும்பூர் அரிசன மக்கள் வீட்டு மனை திலப்பட்டாக் கோரி ஏழு ஆண்டுகள் ஆகியும் இன்னும் கொடுக்கவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், எப்போது பட்டா கொடுக்கப்படும் ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து** : (அ) & (இ) தெற்கு பரும்பூர் அரிசன மக்களுக்கு வீட்டு மனை வாங்குவதற்காக அந்த ஊரிலுள்ள, ச. எண். 535/10 நிலத்தில் 2.80 ஏக்கர் ஆர்ஜிதம் செய்வதற்கு, நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் 4(1) பிரிவு அறிக்கை 9—12—1970 தேதியிட்ட அரசிதழில் பிரசுரிக்கப்பட்டது. நிலச் சொந்தக்காரர்களை 5-ஏ விசாரணையில் விசாரித்து மேற்படி சட்டத்தின் 6-வது பிரிவு அறிக்கையை மாவட்ட ஆட்சியாளர் வருவாய்த் துறை வாரியத்திற்கு அனுப்பியுள்ளார். வருவாய்த் துறை வாரியத்தின் பரிந்துரை அரசுக்கு கிடைக்கப்பெற்றபின், 6-ம் பிரிவு அறிக்கை வெளியிடப்படும். பட்டா வழங்குவதற்கான அடுத்த நடவடிக்கைகள் ஆட்சியாளர் பிறகு எடுப்பார்.

9–30 a.m.

### *Exemption from sales tax on toddy*

* 265 Q.—Thiru R. R. Munusami, Dr. H. V Hande : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :

(a) whether toddy sales have been exempted from the payment of sales tax ; and

(b) if so, the reasons thereof?

The Hon. Thiru P. U. Shanmugam : (a) Yes.

(b) Since this is the first year of suspension of Prohibition, the practical aspects in respect of sales of toddy are being studied. A decision on whether sales of toddy should continue to be exempt from sales tax will be taken in due course after watching the position.

**திரு. ஏ. சுப்பிரமணியம்** : தலைவர் அவர்களே. இந்த அரசைப் பொறுத்த வரையில் மதுவிலக்கை நாங்கள் ரத்து செய்தது, மதுவிலக்குக்கு நாங்கள் எதிரானவர்களானதால் அல்ல; நிர்பந்தத்தினால் தான் ரத்து செய்திருக்

@(170-171-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.)

கிறோம் என்று பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருந்தும் அதற்கு உதவி செய்கின்ற வகையில் இருக்கக்கூடிய விற்பனை வரி ஏன் கள்ளுக்கு விதிக்கப்படவில்லை? அது மதுவிலக்கு சம்பந்தப்பட்ட அரசின் கொள்கைக்கு முரணாக இருக்கிறதல்லவா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, கள்ளுக்கு ஏன் விற்பனை வரி விலக்கு என்பது கேள்வி. உற்பத்தியாகின்ற எல்லாப் பொருட்களையும் நேரடியாகத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு இருப்பதனால் விற்பனை வரி விதிக்கலாம். ஆனால் கள் மரத்திலிருந்து எவ்வளவு இறக்கப்படுகின்றது என்பதைப் பார்த்து விற்பனை வரி விதிப்பது என்பது சாதாரண காரியம் அல்ல. ஆகவே, இந்த ஆண்டு அதைப் பரிசீலித்துப் பார்த்துத்தான் விற்பனை வரி விதிக்க வேண்டும்.

## *Select Committee of Parliament on sales tax*

*266 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :

(a) whether there are proposals under the consideration of the Government to give evidence before the Select Committee of Parliament on Sales Tax meeting in this State in October, 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) ஆம். ஆனால் 1971 அக்டோபர் மாதத்தில் நடக்கவிருந்த கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. பிரேரணைகள் இரகசியமானவைகளாக நாடாளுமன்றத் தேர்வுக் குழு கருதுவதால் விவரங்கள் வெளியிடுவதற்கில்லை.

## பல்லடம், அவினாசி வட்டங்கள்

* 267 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்லடம், அவினாசி வட்டங்களை நிரந்தர பஞ்சப் பிரதேசமாக அறிவித்து நிவாரண வேலைகளைத் துவக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

## *Deputy Tahsildars in Kanyakumari district.*

*268 Q.—THIRU R. PONNAPPA NADAR : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :

(a) whether the list of Regular Deputy Tahsildars in Kanyakumari Revenue Unit for 1968 and 1969 have been drawn up and published; and

(b) if not, whether the Government will take early steps for publishing and implementing the same?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) ஆம்.



திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த டிப்டி தாசில்தார் லிஸ்ட் இதுகாறும் காலதாமதப்பட்டிருக்கிற காரணத்தால், பலருடைய கிளெய்ம்ஸ் அண்டு அப்ஜெக்ஷன்ஸ் காலாகாலத்தில் போடுவதற்கு தகுந்த சாவகாசம் ஏற்படவில்லை. அதனால் உடனடியாக அவர்களுடைய கிளெய்ம்ஸ் அண்டு அப்ஜெக்ஷனை டிஸ்போஸ் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, 1968-69-ம் ஆண்டு பட்டியல் தயாரானதில் கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. சில பேருக்கு வயது விலக்கு அளிக்க வேண்டியிருக்கிறது. அரசாங்கத்திற்கு அந்த பட்டியல் 25—11—71-ல் தான் வந்திருக்கிறது. விரைவில் ஆணை பிறப்பிக்கப்படும். இனிமேல் இவ்விதக் காலதாமதம் ஏற்படக்கூடாது என்று மாவட்ட கலெக்டருக்கு அறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது.

## *Employment Exchanges, Nandanam*

* 269 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether the office of the Employment Exchanges in Madras City is to be shifted to new building from the present place at Nandanam ; and

(b) if so, the reasons thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) நந்தனத்திலுள்ள வேலை தேடித்தரும் அலுவலகங்கள் வீட்டு வசதிப் பிரிவின் பழைய கட்டடத்தில் அமைக்கப் பெற்றுள்ளன. இக்கட்டிடம் தற்போது குடிசைமாற்று வாரியத்தின் பணியாளர்களை அமர்த்த தேவைப்படுகிறது.

## *Survey on employment opportunities in Dharmapuri district*

* 270 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether any survey is conducted in Dharmapuri district to solve the unemployment problem among the age groups of 12 to 20 years with the help of UNICEF; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இது ஒரு முன்னோடி ஆய்வுப் பணியாகும். இது இந்தியாவில் இரண்டு மாவட்டங்களில் நடத்தப்பட்டு வருகிறது. அவையாவன : மகாராஷ்டிரத்திலுள்ள ஆமதாபாத், தமிழ்நாட்டிலுள்ள தருமபுரி ஆகியவையாகும். கிராமப்புற இளைஞர்களுக்கு, குறிப்பாக பள்ளியிலிருந்து நின்றுவிட்ட (11 வயதுமுதல் 22 வயது வரையுள்ள தொகுதியினர்) இளைஞர்களுக்கு உள்ள வேலை வாய்ப்புகளைப்பற்றி மதிப்பிடுவதே இந்த ஆய்வுப் பணியின் நோக்கமாகும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, in the month of September an Officer of the Central Government in connection with the UNICEF came to Hosur from Delhi. He remained for three days at Hosur and collected statistics with regard to school

drop-outs. I was with him. He selected 3 villages for this work. He said that he had discussed with the District Collector and prepared proposals. He told me that he would send the proposals to the State Government. May I know whether the Government have received a copy of the proposals?

THE HON. THIRU S. MADHAVAN : It is an information to the Government.

### கோவை மாவட்டத்தில் பின்தங்கியவர்களுக்கு தொழில் பயிற்சி

*271 வினா—திரு. இ. ராமசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் பின்தங்கியவர்களுக்காக தொழில் பயிற்சிக் கூடங்கள் ஏதேனும் அரசு அமைத்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. இ. ராமசாமி : தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் பின்தங்கிய மக்கள் நிறையபேர் படித்துவிட்டு வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க தொழில் பயிற்சிக் கூடங்களை ஆரம்பிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிற்பயிற்சிக் கூடங்களிலே படித்து விட்டுத்தான் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட தொழிற் பயிற்சிக் கூடங்கள் தேவையில்லை என்று கருதுகிறேன்.

### திருச்சி மாவட்டத்தில் கனிவளங்கள்

*272 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் கனிவளங்கள் உள்ளன என்று ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்துள்ளனர்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஓர் அறிக்கை அவை முன் வைக்கப் பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, திருச்சி மாவட்டத்தில், கடலூர் பகுதியில் புதிய ரக கனிவளம் கிடைப்பதாக ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். அதை விரைவுபடுத்தி, அந்தப் பகுதியில் ஒரு சிறு தொழிற்சாலையைத் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட தகவல் வருமானால் பரிசீலிக்கப்படும்.

### அலுமினியம் தொழிற்சாலை

*273 வினா—திரு. துரைமுருகன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தனியார் துறையிலோ அன்றி பொதுத்துறையிலோ அலுமினிய தொழிற்சாலை தமிழ்நாட்டில் அமைக்கின்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

---

@ 171-173-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அலுமினியப் பாத்திரங்களை ஏழைகள் பயன்படுத்துகிறார்கள். பணக்காரர்கள் எவர்சில்வர் பாத்திரங்களைப் பயன் படுத்துகிறார்கள். எனவே அதிகமான அலுமினியம் உற்பத்தி செய்வதற்கு தனியார் துறையில் இல்லாவிட்டாலும், பொதுத்துறையிலாவது, ஏழை மக்களுக்கு எளிதாகக் கிடைக்கும் வகையில் அலுமினியத் தொழிற்சாலை ஒன்றை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இப்போது தமிழ்நாட்டில் 25 ஆயிரம் டன் அலுமினியம் உற்பத்தி செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவிற்குத் தேவையான அலுமினிய பாக்ஸைட்தான் கிடைத்து வருகிறது. அதுவும் இந்தத் தொழிற்சாலைக்குத் தேவையான மூலப்பொருள்களை வெளி மாநிலங்களிலிருந்துதான் பெறவேண்டியதிருக்கிறது.

### திருமணத்திற்கான குறைந்த வயது வரம்பு

*274 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமணம் செய்து கொள்ள ஆண்களுக்கும், பெண்களுக்கும் குறைந்த பட்ச வயது நிர்ணயிக்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏதும் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, குறைந்தபட்ச வயதை நிர்ணயம் செய்வதன் மூலம் குழந்தைகள் பெறுவது குறையும் என்று அறிஞர்கள் சொல்கிறார்களே, அதை ஏற்று, திருமண வயதை நிர்ணயம் செய்ய அரசாங்கம் யோசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, 1955-ம் ஆண்டு திருமணச் சட்டப்படி, திருமண வயது ஆண்களுக்கு 18 என்றும், பெண்களுக்கு 15 என்றும் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இப்போது மத்திய அரசு திருமண வயதை ஆண்களுக்கு 21 என்றும், பெண்களுக்கு 18 என்றும் உயர்த்தலாமா என்று கேட்டிருந்தார்கள். அவ்வாறு நிர்ணயித்தால் நலமாக இருக்கும் என்று கருதி, அதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, 21, 18 என்று வயதை உயர்த்தினாலும் கூட, இப்போது இரண்டு நிமிடங்களுக்கு மூன்று குழந்தைகள் என்ற விதத்தில் குழந்தைகள் பிறந்துகொண்டிருக்கின்றன. இந்த வயது நிர்ணயத்தைக் கொஞ்சம் தள்ளிப்போட்டால் பிறப்பு விகிதத்தை இன்னும் தடுக்க முடியும். எனவே 21 வயது என்றிருப்பதை 25-ஆக உயர்த்துவதற்கு நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதுதான் அதற்கு மத்திய அரசாங்கம் முயற்சி எடுத்திருக்கிறது. இதற்கிடையில் இன்னும் கொஞ்சம் தள்ளிப் போடுவது என்பது இப்போது முடியுமா? வயதானவர்களுக்கும் குழந்தைகள் பிறக்கின்றன.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, திருமண வயதை உயர்த்திக் கொண்டே போனால் இந்த நாட்டின் சேதோஷ்ண நிலையின் காரணமாக மொராலிட்டி கெட்டுவிடும் என்று பேரறிஞர்கள் சொல்கிறார்கள். எனவே அரசு இதைப் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் உறுப்பினர் இப்போதுதான் பெண் பார்த்திருக்கிறார். ஆகவே அவசரப்படவேண்டாம்.

திரு. அ. தியாகராசன் : மேல்நாடுகளில் 40 வயது, 50 வயது ஆனபிறகு தான் ஆடவர்கள் திருமணம் செய்து கொள்கிறார்கள். அதனால் அவர்கள் நலமாகவும், திடகாத்திரமாகவும் நல்லமுறையில் இருக்கிறார்கள். அந்த முறையை நம்முடைய நாட்டிலும் கடைப் பிடிக்க அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மேல்நாடுகளில் 40, 50 வயதானபிறகு தான் திருமணம் செய்துகொள்கிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. ஒரு வேளை அது இரண்டாவது திருமணமாகக்கூட இருக்கலாம்.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, சில இடங்களில் திருமணம் ஆகாமலேயே குழந்தைகள் பிறக்கின்றன. அதைத் தடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நல்லவர்களைப் பற்றித்தான் நாம் கவலைப்பட வேண்டும்.

## வைகை அணை

* 275 வினா—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை வைகை அணைப்பகுதியில், மைசூர் பிருந்தாவனம் போன்று அமைப்பினை ஏற்படுத்துவதற்கு அரசு செயல் திட்டம் வகுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) மைசூர் பிருந்தாவனத்தில் உள்ளதுபோல் பூங்காவும் தோட்டங்களும் முன்னரே வைகை அணைப்பகுதியில் இருக்கின்றன. மின்விளக்குகளை புதுப்பித்து தோட்டங்களுக்கும், பூங்காக்களுக்கும் அதிக ஒளியூட்டும் திட்டம் ஒன்று பரிசீலனையில் உள்ளது.

திரு. பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, தேனி மாவட்டத்தில் வைகை டாம் பகுதியில் சுற்றுலா மாளிகை ஒன்றை அமைக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் இருப்பதாகக் கூறினார்கள். அதை விரைவு படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. எஸ். கே. சாதிக் பாட்சா : மின்தங்கிய வகுப்பு நல அமைச்சர் அவர்கள் வைகை அணைப்பகுதியில் ஏராளமான விளக்குகளைப் போட்டு, மைசூர் பிருந்தாவனத்தைப்போல் அழகுபடுத்தினால் உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் வகையில் இருக்கும் என்ற குறிப்பினை அனுப்பி



யிருக்கிறார். மதுரை மாவட்ட ஆட்சியாளரும் வைகை அணையில் உள்ள மின் விளக்கு அமைப்பைப் புதுப்பிப்பதற்காக ரூ. 2.14 லட்சத்திற்கு ஓர் மதிப்பீடு அனுப்பியுள்ளார். இத் திட்டம் பற்றி தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களுடன் தொடர்பு கொண்டு விரைவாக அவரது இறுதி அறிக்கையை அனுப்பும்படி அரசு கேட்டிருக்கிறது ; வந்தவுடன் பரிசீலனை செய்யப்படும்.

* 276 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(a) whether there is a proposal to extend Vaigai Irrigation scheme in Madurai District including more areas in the system in Tirumangalam taluk; and

(b) if so, the steps taken in this regard?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த வைகைத் திட்டம் முதலிலே திருமங்கலம், உசிலம்பட்டி தாலுக்காக்களிலுள்ள பின் தங்கிய மக்கள் நிறைந்தப் பகுதி—மக்களுக்கும், உரப்பனூர் கண்மாய் மூலமாகவும், சாத்தூர் கண்மாய் மூலமாகவும் அவற்றையொட்டி இருக்கிற பகுதிகளுக்கும் தண்ணீர் விடுவது என்ற அடிப்படையிலே வகுக்கப்பட்டிருந்தாலும், பின் அவை விலக்கப்பட்டாலும்கூட, இப்போதாவது வைகைத் திட்டத்திலே இந்த இரண்டுத் திட்டங்களையும் செயல்படுத்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, திருமங்கலம் கால்வாயின் கீழ் 10,384 ஏக்கர் நிலப்பரப்புக்குப் பாசன வசதியளிக்க முதலில் திட்டமிடப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்டது. திருமங்கலம் கால்வாயில் சிமெண்ட் பூச்சு செய்யப்பட்டப் பிறகு அதிக பரப்பளவுக்கு திருமங்கலம் தாலூகாவில் 1,095 ஏக்காராவுக்கு நிலக்கோட்டை தாலூகாவில் 920 ஏக்காராவுக்கு ஆக மொத்தம் 2,015 ஏக்காராவுக்கு மட்டுமே பாசன வசதி அளிக்க முடிந்தது. சமீப காலமாக வைகைத் திட்டத்தின்கீழுள்ள ஆயக்கட்டு முழுமைக்கும் பாசன வசதியளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சில வருடங்களில் பாசனத்திற்குத் தண்ணீர் விடும் நாள் தள்ளி வைக்கப்பட்டது. மேலும் பயனடையும் ஆயக்கட்டும் குறைக்கப்பட்டுள்ளது. ஆகவே, இத் திட்டம் செயல்படும் விதத்தை இன்னும் சில ஆண்டுகள் பரிசீலனை செய்த பின்னர் விரிவுபடுத்துதல் குறித்து ஆலோசனை செய்யலாம்.

## சித்திரைச்சாவடிக்கருகில் நொய்யலாற்றில் அணை

* 277 வினா—திரு. ஏ. சுப்பிரமணியம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நொய்யல் ஆற்றில் சித்திரைச்சாவடியில் கட்டப்பட்டுள்ள அணையின் உயரம் சில ஆண்டுகளுக்கு முன் கூடுதலாக்கப்பட்டது என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. ஏ. ஆர். சுப்பையா: தலைவரவர்களே, ஏற்கனவே அந்த சித்திரைச்சாவடி அணையிலிருந்து முறைப்படி இரண்டிரண்டு மாதங்களுக்கு ஒரு மு நீர் விடப்பட்டுங்கூட அணையில் தண்ணீர் இல்லையென்று குறைக்கப்படு எனவே, அந்த அணையின் உயரத்தை அதிகப்படுத்தி, தண்ணீரைத் தே வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, நொய் ஆற்றின் குறுக்கே உள்ள சித்திரைச்சாவடி அணை மிகவும் பழமையான இது கி.பி. 1881-ம் ஆண்டுக்கு முன்னால் அமைக்கப்பட்டது. கடந்த இருப ஐந்து ஆண்டுகளில் இந்த அணையின் உயரத்தை உயர்த்துவதற்காக எந் மான அத்தாட்சியும் இல்லை. ஏற்கெனவே இருக்கின்ற நிலைமையே இப்போ அனுசரிக்கப்பட்டு வருகிறது.

### *Demands of Junior Engineers Association, Pollachi*

* 278 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(a) whether the Hon. the Chief Minister has received a charter of demands, dated 5th June 1970 from the Junior Engineers' Association, Public Works Department, Pollachi;

(b) if so, the details thereof; and

(c) the action taken thereon?

THE HON'BLE THIRU S. J. SADIQ PASHA: (a) Yes Sir.

(b) (i) Giving Gazetted status to Junior Engineers.

(ii) Interim relief and fixation of pay.

(iii) Promotion chances.

(iv) Difference in pay between Junior Engineers and Supervisors.

(v) Changing the existing ratio of promotion to the post of Assistant Engineer from 3:1 to 10:1.

(vi) Only Engineering Graduates to be appointed as Section Officers.

(vii) Permission to undertake part-time employment.

(viii) To appoint a Junior Assistant or Draughtsman III Grade in the Section Office to attend to official matters.

(ix) To create a Division for further implementation of Tamil in the Department.

(x) To abolish direct recruitment to the post of Assistant Engineers.

(xi) Provision of quarters for Junior Engineers.

(c) No action was taken by Government since only representation from a recognised Central Association will be given consideration and as the representation was from the Pollachi Branch of Junior Engineers' Association, which itself is not a recognised



### மத்திய கூட்டுறவு பண்டகசாலைகள்

* 279 வினா—திரு. ஏ. சுப்பிரமணியம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இம்மாநிலத்திலுள்ள மாவட்ட மத்திய கூட்டுறவு பண்டகசாலைகள் ஒவ்வொன்றின் டைரக்டர் போர்டிலும் அரசினால் நியமனம் செய்யப்பட்ட டைரக்டர்கள் எத்தனை பேர்கள் உள்ளனர்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: விவர அறிக்கை @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, இப்படி நியமனம் செய்யப்படுவதற்கு ஏதேனும் தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளனவா? அப்படியானால் அவை யாவை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் ஊக்கம் உள்ளவர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

திரு. கே. எஸ். குமாரசாமி: தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் எல்லோருக்கும் ஊக்கம் இருக்கிறது. ஆனால் அதற்கென தனித் திறமை என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, தனித் திறமை என்று சட்டம் ஒன்றும் வகுக்கப்படவில்லை. நேர்மையானவர்களாகவும், நாணயமாகவும் நடந்துகொள்வார்களா, என்று பார்த்து நியமனம் செய்யப்படுகிறார்கள்.

திரு. எம். முத்தையா: தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் டைரக்டர்களைப் போடும்போது கட்சி ரீதியில் நியமிக்கப் போவதாக வதந்தி இருக்கிறதே, அது உண்மையா? அப்படி கட்சி ரீதியில்தான் நியமிக்கப் போகிறீர்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, கட்சி ரீதியில் நியமனங்கள் செய்யப்படுவதில்லை. 37-வது செக்ஷன் என்று ஒரு விதி இருக்கின்றது. அதன்படி தகுதிகள் இருக்க வேண்டும்.

### சேதுபாவா சத்திரத்திற்கு நிலவள வங்கி.

* 280 வினா—திரு. குழ. செல்லையா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேதுபாவாசத்திரம் வட்டாரத்துக்கு ஒரு நிலவள வங்கி அமைக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) & (இ) தலைவர் அவர்களே, சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் நிலவள வங்கி ஒன்றை, பட்டுக்கோட்டை நிலவள வங்கியின் கிளையாக திறக்க, அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அது விரைவில் திறக்கப்படும்.

---

@ 174-175-ம் பக்கங்களில் மூன்றும் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

## Nanguneri Taluk—Co-operative Jurisdiction.

*281 Q.—THIRU T. GANAPATHY: Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether there is any proposal with the Government to transfer Nanguneri taluk from the jurisdiction of Co-operative Circle Sub-Registrar at Tuticorin to the jurisdiction of Co-operative Circle Sub-Registrar at Tirunelveli, considering the administrative convenience?

***மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:*** இப்படிப்பட்ட செயற்குறிப்பு எதும் அரசிடம் தற்போது இல்லை.

## பனைவெல்லம் ஏற்றுமதி.

*282 வினா—***திரு. கே. என். குமாரசாமி:*** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு பனைவெல்ல கூட்டுறவு சங்கத்தின் மூலம் வெளிநாடுகளுக்கு பனைவெல்லம் ஏற்றுமதி செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் என்றால், அதன் விவரம் என்ன?

***மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:*** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

***திரு. கே. என். குமாரசாமி:*** தலைவர் அவர்களே, பனைவெல்ல உற்பத்தியானது மேலும் வலிவுள்ளதாக ஆவதற்கும், பனைவெல்ல உற்பத்தியாளர்கள் வியாபாரத் தொடர்பை அதிகரிப்பதற்கும் ஆன முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளுமா?

***மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:*** தலைவர் அவர்களே, பதனீர் இறக்கி, அதைக் கொண்டு பனைவெல்லம் உற்பத்தி செய்வதில் புதிய முறைகள் வந்துள்ளன. பனைவெல்ல உற்பத்தியாளர்களுக்கு மத்திய வங்கியின் மூலமாக கடன் உதவி செய்து தரப்படுகிறது.

***திரு. கே. டி. கே. தங்கமணி:*** தலைவர் அவர்களே, பனைவெல்லம் தமிழகத்தில் புராதனமாக உற்பத்திச் செய்யப்படுகிற பொருளாக இருக்கிறது. இன்றைக்கு அரசு செய்யக்கூடிய உதவிகளைவிட இன்னும் அதிகமாக உதவி செய்து, உற்பத்தியை அதிகரிக்க தக்க ஏற்பாடுகளைச் செய்யுமா?

***மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:*** தலைவர் அவர்களே, முன்னால் இதற்கு கிராமக் கைத்தொழில்கள் அமைப்பு மூலம் 2 கோடி ரூபாய் கடன் கொடுக்கப்பட்டது. அதில் சுமார் ஒன்றே முக்கால் கோடி ரூபாய் வாராக் கடனாக, திரும்பி வரவில்லை. ஆகவே, புதிய முறையில், ரிசர்வ் வங்கியிலிருந்து கடன் பெற்று, அதை மத்திய வங்கியின் மூலமாக, முன்னைவிட இரண்டு மடங்கு உதவிகளை, அரசு செய்து வருகிறது.

***திரு. த. சோலையா:*** தலைவர் அவர்களே, கருப்பஞ்சாற்றிலிருந்து எடுக்கப்படுகிற வெல்லம் ஏற்றுமதி மூலம் எந்தெந்த வெளிநாடுகளுக்குச் செல்கிறது?



அப்படிச் செல்லவில்லையானால், இப்போது அதிகமாக உற்பத்திச் செய்யப்படுகிற வெல்லத்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறதா?

***மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:*** தலைவர் அவர்களே, மூலக் கேள்வி பனைவெல்லத்தைப்பற்றியது, கரும்பிலிருந்து எடுக்கப்படுகின்ற வெல்லத்தைப் பற்றிக் கேட்பதாகயிருந்தால், அதற்கு தொழில்துறை அமைச்சர் அவர்கள் தான் பதிலளிக்க வேண்டும்.

***திருமதி ஜெ. தி. வெங்கடாசலம்:*** தலைவர் அவர்களே, பனைவெல்லத்திலிருந்து பல பொருள்கள் செய்கிறார்கள். இவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்குப் பெரும் வாய்ப்பு இருக்கிற காரணத்தால் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வார்களா? வங்கியில் பணம் கடனாகப் பெற்ற காரணத்தால், உற்பத்தியாளர்கள் தங்களுடைய உற்பத்தியை கோவாபரேடிவ் சொசைடி மூலமாகத்தான் விற்க வேண்டுமென்று எதாவது நிபந்தனை இருக்கிறதா?

***மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:*** தலைவர் அவர்களே, பனைவெல்ல உற்பத்தியை கூட்டுறவுத் துறையில் நடத்தியபோது, பனைவெல்லத்தின் விலை ஏறுமானால் அதன் லாபம் தங்களுடையது என்று சொன்னார்கள். விலை இறங்குமானால் நட்டம் கூட்டுறவுத் துறையின் தலையில் வைக்கப்பட்டது. இதன் காரணமாக ஒன்றே முக்கால் கோடி ரூபாய் வாராக் கடனாக இருக்கிறது. இப்போது புதிய முறையில், ரிசர்வ் வங்கியிடமிருந்து கடன் பெற்று, அதை மத்திய வங்கியின் மூலமாக, கொடுக்கின்ற கடன் திரும்பி வருகின்ற முறையில், கொடுப்பதற்கான வழிவகைகளைச் செய்திருக்கிறோம்.

***திரு. இரா. இராமலிங்கம்:*** தலைவர் அவர்களே, பனையிலிருந்து கிடைக்கும் பனைத் தும்பு, கருப்பு போன்ற பொருள்கள் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

***மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:*** தலைவர் அவர்களே, பனைத் தும்பும், ஈர்க்கும் அவ்வாறு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

## கள்ளிறக்குவோர்களுக்கு இழப்பீடு

*283 வினா—***திரு. பி. எஸ். மணியன்:*** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

விபத்துக் குள்ளாகும் தென்னை மரமேறும் தொழிலாளிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

***மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:*** இல்லை.

***திரு. பி. எஸ். மணியன்:*** தலைவர் அவர்களே, தற்போது மதுவிலக்கு ரத்து செய்யப்பட்ட காரணத்தால் லட்சக்கணக்கான தொழிலாளிகள் தென்னை மரம் ஏறக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களுடைய பாதுகாப்புக்கு ஊக்கம் கொடுக்கிற நிலையில், விபத்துக்குள்ளாகிற தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பது பற்றி அரசு மறுபரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, தென்னை மரம் ஏறுகிறவர்கள் கள் இறக்குவதற்காக ஏறுகிறார்கள். கள் இறக்குவதற்காக தொழிலாளி மரம் ஏறி, விபத்துக்குள்ளானால், சட்டப்படி கன்ட்ராக்டர்கள்தான் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். கன்ட்ராக்டர்கள்தான் தொழிலாளிகளோடு இது விஷயமாக ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, may I know from the Hon. Minister whether there is a proposal to give compensation to the persons who meet with accidents even though they are not members of a co-operative society?

THE HON. THIRU SI. PA. ADITANAR: Sir, the Government have already passed orders in that respect, in accordance with the proposal mentioned by the hon. Members.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது, கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினராக இல்லாதிருந்தாலும் கூட அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வழி செய்திருக்கிறது என்று கூறினார்கள். கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினராக இல்லாத முறையில் எத்தனைபேருக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால், எத்தனை பேர் என்று சொல்ல முடியும்.

**திரு. ப. முத்துசாமி:** தலைவர் அவர்களே, தென்னை மரம் ஏறும் தொழிலாளர்களுக்கு இடத்திற்கு இடம் கூலி வித்தியாசம் இருக்கின்ற காரணத்தினாலே அதை ஒழுங்குபடுத்துவதற்கு நம்முடைய அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தொழிலாளரின் கூலியைப்பற்றித் தனிக் கேள்வி எழுப்புவதாக இருந்தால் தொழிலாளர் நல அமைச்சரிடம் கேட்கவேண்டும்.

### பழம் ஏற்றுமதி

*284 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

1971-72-ம் ஆண்டில், தமிழ்நாட்டிலிருந்து சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட ஆரஞ்சின் மதிப்பு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவர் அவர்களே, 1971-72-ஆம் ஆண்டில், இதுவரையிலும், தமிழ்நாட்டிலிருந்து, சிங்கப்பூருக்கு ஆரஞ்சு ஏற்றுமதி செய்யப்படவில்லை. ஆனால் 1970-71-ஆம் ஆண்டில் (ஏப்ரல் 1970 முதல் மார்ச்சு 1971 முடிய) 3.987 மெட்ரிக் டன் எடையுள்ளதும், ரூ. 7,974 (இன்ஷ்யூரன்ஸ் மதிப்புடன் கூடிய விலை) மதிப்புள்ளதுமான ஆரஞ்சுப் பழங்களை சென்னையிலிருந்து சிங்கப்பூருக்கு எஸ்.எஸ். ரஜுலா என்ற கப்பல் மூலம் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனின் சென்னையிலுள்ள கிளை ஏற்றுமதி செய்துள்ளது. 1971-72-ஆம் ஆண்டின் ஆரஞ்சு ஏற்றுமதி, அப்பழங்களை சிங்கப்பூரில் உண்ணுவோரது விருப்பத்தையும் அப்பழங்களின் விலை மலிவையும் பொறுத்தது. இது இனிமேல்தான் அறியப்படவேண்டிய தொன்றாகும்.



**திரு. கா. வேழவேந்தன்:** தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் உற்பத்தியாகின்ற பழவகைகள் அயல்நாடுகளிலேயிருந்து நமக்கு அந்நியச் செலாவணியினை ஈட்டுகின்ற வகையிலே இருக்கின்றன. காஷ்மீர் போன்ற மாநிலங்களிலே உள்ளவர்கள் அயல்நாடுகளிலே இருக்கின்ற தூதுவர்களோடு தொடர்புகொண்டு அவர்களுடைய துணையுடன் ஆங்காங்கு ஷோ ரூம்ஸ் வைத்து பழவகைகளுக்கு நல்ல விளம்பரம் கொடுத்து விற்பனை பெருகியிருக்கிறது. அதைப்போன்று நம்முடைய மாநில அரசாங்கமும் மத்திய அரசின் துணையுடன் அந்த அந்த நாடுகளில் உள்ள தூதுவர்களோடு தொடர்பு கொண்டு நம் தமிழகத்தில் உற்பத்தியாகும் பழவிற்பனையை அதிகப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம்:** தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் ஆரஞ்சுப் பழம் ஏற்றுமதி செய்யப்படும் அளவிற்கு அதிகமாக இல்லை, மைசூர், கூர்க் முதலிய இடங்களிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் ஆரஞ்சு சென்னைத் துறைமுக வாயிலாக வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றது. 1970-71, 1971-72 ஆம் ஆண்டுகளில் வேறு எந்தவிதமான பழங்களும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை. பழ அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் திராட்சை பயிரிட ஒரு ஏக்கருக்கு ரூ. 1,500 விதம் ஒரு நபருக்கு ரூ. 6,000 மேற்படாமலும், மற்ற பழங்கள் பயிரிட ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300 விதம் ஒரு நபருக்கு ரூ. 2,000-க்கு மேற்படாமலும் நீண்டகாலக் கடன்கள் வழங்கப்படுகின்றன. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதைப் பொறுத்தவரையில் சீனா, பார்மோசா, ஆஸ்திரேலியா, இஸ்ரேல், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து ஆரஞ்சுப் பழத்தை சிங்கப்பூர் சந்தையில் விற்பனை செய்ய போட்டி அதிகமாக உள்ளது. வெளிநாட்டு வியாபாரிகள் பழுக்கும் தருவாயிலுள்ள தொகையை வாங்குவோரிடம் விற்ற பின்பே செலுத்துகிறார்கள் மேலும் இப்பழங்கள் எளிதில் அழியும் தன்மைவாய்ந்தவை. ஆகவே உடனடியாகச் செய்வதற்கு இயலாது.

### *Fruit Preservation Unit in Coimbatore.*

*285 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there are proposals under the consideration of Government to open a fruit preservation unit in Coimbatore; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) இல்லை.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

### வட ஆர்க்காடு மாவட்டத்தில் பழத்தோட்டங்கள்.

*286 வினா—**திரு. மா. பா. சாரதி:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழத்தோட்ட அபிவிருத்தி (Horticultural Development Scheme) திட்டத்தின் கீழ் வட ஆர்க்காடு மாவட்டத்தில் சென்ற ஆண்டு எவ்வளவு பேருக்கு எவ்வளவு கடன் தொகை அளிக்கப்பட்டது?

(இ) எத்தனை ஏக்கரில் பழத்தோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) தோட்ட வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வட ஆர்க்காடு மாவட்டத்தில் 1970-71-ல் 60 பேருக்கு ரூ. 62,500 கடனுதவி வழங்கப்பட்டது.

(இ) மொத்தப் பரப்பளவு 140 ஏக்கர்.

**திரு. கே. எ. வகாப்:** தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேலூரிலே பழப் பதனிடும் தொழிற்சாலை இருக்கிறது. அந்தத் தொழிற்சாலைக்குப் போதிய பழங்கள் கிடைக்கவில்லை. எனவே பழம் உற்பத்திச் செய்யும் தோப்புகளை அதிகமாக ஏற்படுத்துவதற்கு அரசு மானியத் தொகையும், கடன் தொகையும் அதிகமாகக் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவர் அவர்களே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பழ உற்பத்தியைப் பெருக்கும் திட்டம் தொடங்கிவைக்கப்பட்டது. புதிய பழத்தோட்டங்கள் அமைப்பதற்காக நீண்டகாலக் கடன் வழங்குவதன்மூலம் பழ உற்பத்தியைப் பெருக்கும் திட்டம் தொடங்கிவைக்கப்பட்டது. பழத்தோட்ட வளர்ச்சி சிறப்புப் பணியாளர்களின் இடைவிடா முயற்சியின் காரணமாக, பழத் தோட்டப் பரப்பளவும் பழ உற்பத்தியும் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்தன. ரூ. 13 லட்சம் நீண்ட காலக் கடன் வழங்கியதின் வாயிலாக, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கூடுதலாக 4,350 ஏக்கரில் பழத்தோட்டங்கள் உண்டாக்கப்பட்டன. பழத்தோட்டங்கள் உண்டாக்க உயர்ந்த அளவு ரூ. 2,000 என்ற வரையறைக்கு உட்பட்டு ஒவ்வொருவருக்கும் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300 என்ற விதத்தில் நீண்டகாலக் கடன் வழங்கப்படுகின்றது. திராட்சைப் பழத் தோட்டங்கள் உண்டாக்க ஒருவருக்கு உயர்ந்த அளவு ரூ. 6,000 என்ற வரையறைக்கு உட்பட்டு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1,500 நீண்டகாலக் கடன் வழங்கப்படுகின்றது.

**திரு. தொ. ப. சீனிவாசன்:** பழத்தோட்டங்கள் ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகப் பராமரிக்கப்பட்டு வந்தது. இப்பொழுது ஊராட்சிகளின் மூலம் பராமரிக்கப்படுவதால் சரியான பராமரிப்புச் செய்யமுடியாததால் அவை பாழாக்கப்பட்டுவிடுகின்றது. எனவே, ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக அவைகளைப் பராமரிப்புச் செய்ய அரசு வழிவகை செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவர் அவர்களே, அவர்களே பாழாக்கப்பட்டுவிடுகின்றது என்று சொன்னார்கள். எனவே, மேலும் பாழாக்க அரசாங்கம் விரும்பவில்லை.

### *Banana cultivation in Dharmapuri district.*

* 287 Q.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal to bring more area under expert type of banana cultivation in Dharmapuri district; and

(*b*) if so, when it will be implemented?



**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) & (இ) ஆம், வேலூரிலுள்ள சிறப்பு, மாவட்ட விவசாய அலுவலர் (வாழை) இதற்கான திட்டக் குறிப்பை அனுப்புமாறு கோரிக் கொள்ளப்பட்டிருக்கிறார். அக்குறிப்பு கிடைத்ததும், மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

### *Adayar foot bridge.*

* 288 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether it is a fact that the foot bridge over Adayar river linking the Elliots Beach with Foreshore Estate had cracked on 1st December 1969;

(*b*) if so, the details thereof;

(*c*) the total amount spent for the construction of the original bridge; and

(*d*) the estimated cost of reconstruction of the bridge?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) அடையாற்றின் மேலுள்ள நடைபாலம் 20—11—1969 இரவு பழுதடைந்தது.

(இ) நடைபாலத்தில் உள்ள 17 கண்வாய்களில் 3 கண்வாய்கள்தான் நீரை வெளியேற்றிக்கொண்டிருந்தன. மற்றவைகள் மணல்திட்டினால் மூடப்பட்டுவிட்டன. அதிக மழைபெய்ததாலும் தண்ணீர் வெளியேற்றுவதற்கு இடம் குறைந்ததாலும் ஏற்பட்ட நீர்ச்சுழியினால் வடக்குப் பக்கத்திலிருந்து 9-வது தாங்குச் சுவரின் அடிபாகம் அரிக்கப்பட்டு 1 அடி 3 அங்குலம் ஆழத்திற்கு தண்ணீரில் அமுங்கிவிட்டது. தாங்குச் சுவரின்மேல் பொருத்தப்பட்டிருந்த விட்டமும் தண்ணீரில் அமிழ்ந்துவிட்டது.

(ஈ) ரூபாய் 5,92,539-13.

(உ) ரூபாய் 19,450.

DR. H. V. HANDE: May I know whether reconstruction is over? If so, may I know the date on which the repair was made?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** 10—4—1970-இல் செப்பனிடும் வேலை நடந்து முடிவடைந்துவிட்டது.

### *Electricity supplied to agriculturists in Thiruchiroppall district.*

* 289 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Government are aware that the South Madras Electric Supply Corporation, Tiruchirappalli is charging Rs. 0-12½ per unit for the Electricity supplied to the agriculturists of Tiruchirapalli; and

(*b*) if so, whether the Government have any proposal to instruct the Corporation to reduce the charges?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (அ) ஆம்.

(இ) இல்லை.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) தோட்ட வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வட ஆர்க்காடு மாவட்டத்தில் 1970-71-ல் 60 பேருக்கு ரூ. 62,500 கடனுக வழங்கப்பட்டது.

(இ) மொத்தப் பரப்பளவு 140 ஏக்கர்.

**திரு. கே. எ. வகாப்:** தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேலூரிலே பழப் பதனிடும் தொழிற்சாலை இருக்கிறது. அந்தத் தொழிற்சாலைக்குப் போதிய பழங்கள் கிடைக்கவில்லை. எனவே பழம் உற்பத்திச் செய்யும் தோப்புகளை அதிகமாக ஏற்படுத்துவதற்கு அரசு மானியத் தொகையும், கடன் தொகையும் அதிகமாகக் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவர் அவர்களே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பழ உற்பத்தியைப் பெருக்கும் திட்டம் தொடங்கிவைக்கப்பட்டது. புதிய பழத்தோட்டங்கள் அமைப்பதற்காக நீண்டகாலக் கடன் வழங்குவதன்மூலம பழ உற்பத்தியைப் பெருக்கும் திட்டம் தொடங்கிவைக்கப்பட்டது. பழத்தோட்ட வளர்ச்சி சிறப்புப் பணியாளர்களின் இடைவிடா முயற்சியின் காரணமாக, பழத் தோட்டப் பரப்பளவும் பழ உற்பத்தியும் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்தன. ரூ. 13 லட்சம் நீண்ட காலக் கடன் வழங்கியதின் வாயிலாக, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கூடுதலாக 4,350 ஏக்கரில் பழத்தோட்டங்கள் உண்டாக்கப்பட்டன. பழத்தோட்டங்கள் உண்டாக்க உயர்ந்த அளவு ரூ. 2,000 என்ற வரையறைக்கு உட்பட்டு ஒவ்வொருவருக்கும் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300 என்ற விதத்தில் நீண்டகாலக் கடன் வழங்கப்படுகின்றது. திராட்சைப் பழத் தோட்டங்கள் உண்டாக்க ஒருவருக்கு உயர்ந்த அளவு ரூ. 6,000 என்ற வரையறைக்கு உட்பட்டு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1,500 நீண்டகாலக் கடன் வழங்கப்படுகின்றது.

**திரு. தொ. ப. சீனிவாசன்:** பழத்தோட்டங்கள் ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகப் பராமரிக்கப்பட்டு வந்தது. இப்பொழுது ஊராட்சிகளின் மூலம் பராமரிக்கப்படுவதால் சரியான பராமரிப்புச் செய்யமுடியாததால் அவை பாழாக்கப்பட்டுவிடுகின்றது. எனவே, ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக அவைகளைப் பராமரிப்புச் செய்ய அரசு வழிவகை செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவர் அவர்களே, அவர்களே பாழாக்கப்பட்டுவிடுகின்றது என்று சொன்னார்கள். எனவே, மேலும் பாழாக்க அரசாங்கம் விரும்பவில்லை.

*Banana cultivation in Dharmapuri district.*

* 287 Q.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there is any proposal to bring more area under expert type of banana cultivation in Dharmapuri district; and

(b) if so, when it will be implemented?





**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) & (இ) ஆம், வேலூரிலுள்ள சிறப்பு, மாவட்ட விவசாய அலுவலர் (வாழை) இதற்கான திட்டக் குறிப்பை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அக்குறிப்பு கிடைத்ததும், மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

*Adayar foot bridge.*

* 288 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether it is a fact that the foot bridge over Adayar river linking the Elliots Beach with Foreshore Estate had cracked on 1st December 1969;

(b) if so, the details thereof;

(c) the total amount spent for the construction of the original bridge; and

(d) the estimated cost of reconstruction of the bridge?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) அடையாற்றின் மேலுள்ள நடைபாலம் 20—11—1969 இரவு பழுதடைந்தது.

(இ) நடைபாலத்தில் உள்ள 17 கண்வாய்களில் 3 கண்வாய்கள்தான் நீரை வெளியேற்றிக்கொண்டிருந்தன. மற்றவைகள் மணல்திட்டினால் மூடப்பட்டுவிட்டன. அதிக மழைபெய்ததாலும் தண்ணீர் வெளியேற்றுவதற்கு இடம் குறைந்ததாலும் ஏற்பட்ட நீர்ச்சுழலினால் வடக்குப் பக்கத்திலிருந்து 9-வது தாங்குச் சுவரின் அடிப்பாகம் அரிக்கப்பட்டு 4 அடி 3 அங்குலம் ஆழத்திற்கு தண்ணீரில் மூழ்கிவிட்டது. தாங்குச் சுவரின்மேல் பொருத்தப்பட்டிருந்த விட்டமும் தண்ணீரில் அமிழ்ந்துவிட்டது.

(உ) ரூபாய் 5,92,539-13.

(எ) ரூபாய் 19,450.

DR. H. V. HANDE: May I know whether reconstruction is over? If so, may I know the date on which the repair was made?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** 10—4—1970-இல் செப்பனிடும் வேலை நடந்து முடிவடைந்துவிட்டது.

*Electricity supplied to agriculturists in Thiruchiroppall district.*

* 289 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether the Government are aware that the South Madras Electric Supply Corporation, Tiruchirappalli is charging Rs. 0-12½ per unit for the Electricity supplied to the agriculturists of Tiruchirapalli; and

(b) if so, whether the Government have any proposal to instruct the Corporation to reduce the charges?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (அ) ஆம்.

(இ) இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின்போது அவர்கள் தாராளமாகப் பேசலாம், அதன் விவாதம் நடந்து கொண்டிருக்கிறது, எனவே உறுப்பினர்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**மின் பங்கீட்டுப்பிரிவு, கன்னியாகுமரி.**

*** 290. வினா—திரு. ஏ. பாலையா :** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மின் திட்டத்திலிருந்து வள்ளியூர், நாகர்கோவிலாகிய இரு மின் கோட்டங்களையும் பிரித்து கன்னியாகுமரி மின் திட்டம் என்ற பெயரில் ஒரு பிரிவு நாகர்கோவிலை தலைமை இடமாக கொண்டு நிறுவ செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** பரிசீலனையில் உள்ளது.

**திரு. ஏ. பாலையா :** கன்னியாகுமரி மாவட்டத்தைத் தனி மின்திட்ட மாவட்டமாக 1971-72-க்குள் நிறுவ அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** அதற்குத்தான் சொன்னேன் பரிசீலனையில் இருக்கிறது என்று.

**கோவை முன்னாள் படையினரின் மோட்டார் போக்குவரத்துக் கூட்டுறவுச் சங்கம்.**

*** 291 வினா—திரு. ஏ. சுப்பிரமணியம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை, முன்னாள் ராணுவத்தினருக்கான மோட்டார் போக்குவரத்துக் கூட்டுறவுச் சங்கத் தொழிலாளர் சங்கத்திடமிருந்து 7—7—1971 நாள் அளவில் அரசுக்கு முறையீடு ஒன்று வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்பேரில் எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) ஆம்.

(இ) பேருந்து அதிபர் ஒருவர் 10 பேருந்து அனுமதிச் சீட்டுகள் வரை தான் வைத்திருக்கலாம் என மேல் வரம்பு வரையறுக்கும் 1971-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு இரண்டாவது திருத்த) அவசரச் சட்டத்தின் விதித்துறைகளிலிருந்து முன்னாள் படையினரின் மோட்டார் போக்குவரத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விலக்களிக்க வேண்டுமெனச் சங்கம் கோரியது. இந்த கோரிக்கை அரசால் ஆய்ந்து பரிசீலிக்கப்பட்டு மறுக்கப்பட்டது. அவ்வண்ணமே சங்கத்திற்கும் அறிவிக்கப்பட்டது.

**தமிழ்நாட்டிலுள்ள சிற்பிகள்**

*** 292 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலம் முழுவதும் அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தபதிகள் எத்தனை பேர் உள்ளனர் ?

(இ) அவர்களுக்கு தொழில் அபிவிருத்திக் கடன் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?





**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) அரசு 18—8—1971 முடிய 118 ஸ்தபதிகளை அங்கீகரித்துள்ளது.

(இ) இல்லை.

*Books on Tamil Archanas.*

* 293 Q.—Thiru R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether books on Tamil Archanas have been prepared by the Tamil Nadu Deivigha Peravai at the instance of the Government; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Thiru K. T. K. THANGAMANI : I only want to say that within one hour we have completed 48 questions. Probably this will be a record not only for this Legislature but also for other Legislatures and Lok Sabha. முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பாராட்டப்பட்டதாகயிருந்தாலும் எப்படியிருந்தாலும் அமைச்சர்களும் உறுப்பினர்களும் இன்னும் கொஞ்சம் ஒத்துழைப்பு தந்தால் இன்னும் அதிகமாக கேள்விகள் கேட்க முடியும். கேள்விகளில் பொது முக்கியத்துவம் வாய்ந்த கேள்விகளும் இருக்கின்றன. அந்த ஊரிலே பாலம் கட்டப்பட்டதா என்பதெல்லாம் அந்த ஸ்தலங்களில் அக்கறை உள்ள கேள்விகள். அவைகள் முக்கியமானவை அல்ல என்று சொல்லவில்லை. இந்த மன்றத்திலே கேள்விகளும் சுருக்கமாக இருந்து பதில்களும் சுருக்கமாக அமைந்தால் இன்னும் சிறப்பாக அமையும்.

**திரு. எம். தேவராசன் :** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள பெரிய கோயில்களில் எத்தனை கோயில்களில் இன்றைக்கு தமிழில் அர்ச்சனை நடைபெறுகின்றது. அப்படி நடைபெறாத கோயில்களில் உடனடியாகத் தமிழில் அர்ச்சனை நடைபெறுவதற்கு முயற்சியெடுக்க முன்வருவாரா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயிருக்கின்ற எல்லா ஆலயங்களிலும் தமிழிலே வழிபாடு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் அப்படி ஏதாவது நடைபெறாத ஆலயங்கள் இருந்து, குறிப்பிட்டால் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக் குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### (2) ஒத்திவைப்புத் தீர்மானம்.

*'நவசக்தி' நாளிதழ் ஆசிரியரும் மற்றொருவரும் கைதானது குறித்து.*

**Mr. SPEAKER**: Thiru R. Ponnappa Nadar and Thiru K. T. K. Thangamani have given notice of an adjournment motion. Thiru R. Ponnappa Nadar has given notice, "That the business of the House do adjourn to discuss a matter of urgent public importance, namely, to discuss about the reported arrest of Mr. Danushkodi, Editor, Printer and Publisher and Mr. Sangameswara Rao of 'Nava Sakthi', a Tamil daily. Thiru K. T. K. Thangamani has also given notice of a similar motion. Thiru Ponnappa Nadar may now briefly explain how this matter comes under an adjournment motion.

**Thiru R. PONNAPPA NADAR**: Mr. Speaker, Sir, I wish to move for adjournment of the business of the House to discuss an urgent matter of public importance, namely the reported arrest of the Printer, Publisher and Editor of the Tamil daily 'Nava Sakthi' Mr. Danushkodi and the Sub-Editor Mr. Sankameswara Rao on the early hours of 10th December 1971. So far as the arrest is concerned, we are yet to know the details from the Hon. Chief Minister. This arrest has been aimed at stifling political opposition. That is the point which I want to emphasize before this House. Because it is a time of emergency and when arrests are being made under the Defence of India Rules or under any other power vested in the Government, it should be used sparingly because the freedom of the press and of the fundamental rights are normally set at rest during the time of emergency. A person or a paper who want to ventilate their grievances or give vent to their feelings through their paper should not be stifled in this manner by arresting them like this.

Another point which I want to place before this House is that so far as the Editor of this paper is concerned, he is a person who has participated in the freedom struggle and he has not said anything against the defence efforts or against the Central Government or against this Government. For what purpose he has been arrested is a matter which will have to be enquired into or details are yet to be known. This is an extreme step that has been taken by the Government.

The arrest is said to be on the basis of the editorial which the editor has written in his paper on 8th December 1971. I say that on a perusal of the editorial and other charges that have been levelled against him, there is nothing objectionable or prejudicial to the defence efforts of India. I am sure this is only a political ruse or a weapon just to harass and terrorise people who are opposing the Government in certain political ways. This extreme step should not be resorted to and it does not lie in the mouth of the Government to say that this arrest has been made just to help the defence efforts.

Probably, there may be political reasons for all those things. I am sure that the freedom of the Press has been curtailed to the utmost and there is a scare among the Press. Therefore, this matter will have to be discussed in detail. Such arrests should be sparingly made because it is an extraordinary power that has been conferred upon the Government and it should be sparingly used. For silencing opposition this extreme step should never be used. That is my submission. Therefore, this is a fit case which will have to be discussed on the floor of the House and I want that the House should stand adjourned to discuss about this matter.



**Thiru K. T. K. THANGAMANI**: Mr. Speaker, Sir, in my adjournment motion I have stated—

"The arrest under D.I.R. on the night of 9th December 1971 of the Editor and Sub-Editor of the Tamil daily "Navasakthi" causing concern to Newspaper Editors, correspondents and the people generally."

இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை நான் கொண்டுவருவதன் நோக்கமே, தடுப்புக் காவல் சட்டம், பாதுகாப்புச் சட்டம் போன்ற சட்டங்களெல்லாம் நாடாளுமன்றத்தில் வரும்பொழுது எங்கள் கட்சி பாதுகாப்பிற்கு உதவி செய்கின்றோம் என்ற நிலையில் இருந்தால்கூட, இம்மாதிரியான சட்டங்கள் நிறைவேறினால் அந்தச் சட்டங்களை எம்மாதிரியாகப் பயன்படுத்த வேண்டுமென்பது பற்றித் தெளிவுபடுத்தியிருக்கிறோம். இந்த தடவை இந்த மசோதா நாடாளுமன்றத்திலே வரும்பொழுது எங்கள் கட்சியின் தலைவர் திரு. இந்திரஜித் குப்தா அவர்கள் இந்தச் சட்டத்தை எக்காரணத்தைக் கொண்டும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பேரிலோ அல்லது அவர்கள் நடத்தும் பத்திரிகை ஆசிரியர்கள் பேரிலோ, தொழிற்சங்கத் தலைவர், விவசாய சங்கத் தலைவர்கள் பேரிலோ, ஜனங்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கு எடுக்கப்படும் நலன்களுக்கு எதிராகவோ பயன்படுத்தக் கூடாது என்று தெளிவாகச் சொன்னார்கள். இந்த மசோதாவைப் பிரேரேபித்த அமைச்சரவர்களும் நல்ல முறையில் வாக்குறுதி கொடுத்தார்கள். இதை நான் ஞாபகப் படுத்துவது எதற்காக என்றால், எந்த முறையிலே கைது செய்யப்பட்டார்கள் என்பது சார்ஜ் ஷீட் வந்தால்தான் தெரியும். ஆனால் பத்திரிகைச் செய்தி 8-ஆம் தேதி வந்த ஒரு கட்டுரை, 9-ஆம் தேதி வந்த ஒரு தலையங்கம் இதற்காக என்று கூறுகிறது. அந்தத் தலையங்கத்தைப் படிக்கக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இப்படி ஒரு கட்டுரைக்கும், இப்படி தலையங்கத்துக்குமே இன்றைக்கு டிஃபென்ஸ் ஆஃப் இந்தியா ரூல் என்ற அடிப்படையில் கைது செய்யப்படக்கூடிய நிலை ஏற்பட்டால் fair comment அரசு செய்யக்கூடிய சில காரியங்களைப்பற்றி விமரிசனம் செய்வதே டிஃபென்ஸ் ஆஃப் இந்தியா ரூலின்கீழ் குற்றமாக வரும் என்று கருதத்தக்க ஆபத்து இருக்கிறது. அந்த முறையிலே போகக்கூடாது என்பதற்காகத்தான் நான் இதை முன்கூட்டியே கொண்டுவந்தேன்.

இப்பொழுது நாட்டிலே யுத்தம் இருக்கும் நேரத்திலே, டிஃபென்ஸ் ஆஃப் இந்தியா ரூல் என்று இருந்தாலும், அதை அமல் நடத்த இந்த அரசுக்குத்தான் அதிகாரம் இருக்கிறது என்ற முறையிலே—இன்னும் சொல்லப்போனால் ஒவ்வொரு அரசியல் கட்சிக்காரர்களும் என்ன எழுதுகிறார்கள் என்பதையும், அதே நேரத்தில் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ன எழுதுகிறார்கள் என்பதையும் பரிசீலிக்க வேண்டியிருக்கும். இன்றைக்கு நேரடியாக நம்மை பாகிஸ்தான் தாக்கும்பொழுது பாகிஸ்தானுக்கு உதவியாக அமெரிக்கா இருக்கிறது, இன்றைக்கு அந்த அமெரிக்காவைப்பற்றியும் பல பத்திரிகைகள் எழுதுகிறார்கள்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 டிசம்பர் 11

அந்தப் பத்திரிகை எழுதிகிறவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்க வேண்டியிருக்கும். ஆகவே இப்படிப்பட்ட டிஃபென்ஸ் ஆஃப் இந்தியா ஆக்ட் இப்பொழுது அமலாக இருக்கிறது. இதை எந்த முறையிலே அமல்படுத்த வேண்டுமென்பதற்காக கண்டிப்பாக ஆளுங்கட்சியிலே இருக்கக்கூடியவர்கள், பொறுப்புள்ள தலைவர்கள், எதிர்க்கட்சியிலே இருக்கும் ஒவ்வொரும் என்ன கருத்து கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவிப்பதற்கு மிகமிக முக்கியமான சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். ஆகவே, முதன்முதலாக இந்த கைதான விஷயத்தைப்பற்றி விவாதிக்க ஒரு நேரம் கொடுப்பது உபயோகமாக இருக்கும். இந்த யுத்தத்திற்கு உதவி செய்யக்கூடிய எல்லா கட்சிகளுக்கும் உதவி செய்யும் முறையில் இருக்கும் என்று கூறி, கட்சிகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் இருந்து, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சமயம் என்ற முறையில் சபாநாயகரவர்கள் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி கொடுத்து இன்றைக்கு மத்தியானம் 12 மணி முதல் 2 மணி வரையில் 2 மணி நேரம் விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மாண்புமிகு காங்கிரஸ்கட்சியின் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. தங்கமணி அவர்களும் கொடுத்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பார்த்து நான் உள்ளபடியே அதிர்ச்சியுற்றேன். ஏனென்றால் அந்தப் பத்திரிகையிலே வந்திருக்கின்ற தலையங்கத்திற்கும், கட்டுரைக்கும் அவர்கள் இருவரும் வருத்தம் தெரிவித்தார்கள். அது உட்கார்ந்திருக்கும்பொழுது செய்த காரியம், ஆனால் சபையிலே எழுந்து நின்று பேசும் நேரத்தில் அவர்கள் இதிலே ஏதோ அரசியல் காழ்ப்புகள் ஏற்பட்டதாகவும் அதன் காரணமாக, அரசியல் எரிச்சல் காரணமாக யாரையோ நசுக்க இது பயன்படுத்தப்பட்டிருப்பதாகவும் எடுத்துப் பேசியிருப்பது எனக்கு விந்தையிலும் விந்தையாக இருக்கிறது.

விமர்சனங்கள் செய்வதற்கு பத்திரிகைகளுக்கு உரிமை வேண்டும் என்று கூறுவதை நான் மறுக்கவில்லை. ஆனால் நாடு நெருக்கடியான நேரத்தில் இருக்கும்போது இந்திய நாட்டுக்கு எல்லா வகையிலும் பல்வேறு தியாகங்களுக்கு உட்பட்டு பொறுப்புணர்ச்சியோடு உதவி புரிய வேண்டுமென்று முடிவு எடுத்துக் கொண்டிருக்கின்ற இந்தப் பேரவையில் இருக்கும் ஆளும் கட்சியின் மீதும், ஆளும் கட்சியின் முதலமைச்சர் மீதும் தேசத் துரோகக் குற்றம் சாட்டி பத்திரிகையில் எழுதுவது விமர்சனந்தான் என்று திரு. தங்கமணி அவர்களும், திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் கூறுவார்களானால் உள்ளபடியே அதற்காக நான் மிகுந்த வேதனைப்படுகிறேன்.

அந்தப் பத்திரிகையிலே என்ன எழுதப்பட்டது என்பதை முதலிலே முழுவதும் எடுத்துச் சொல்லாவிட்டாலும் முடிவாகக் கூறியிருப்பதைப் படிக்கிறேன்.

"இப்போது 3 வாரம் அமெரிக்காவின் விருந்தாளியாக இருந்ததற்கு அவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டியதுதான், இதற்காக நாட்டையே பாதிக்கக் கூடிய வகையிலா விலை கொடுப்பது?"

நாட்டையே நான் விலைக்கு விற்கிறேன் என்கிறார். ஒரு மாநில முதலமைச்சரின் மீது நவசக்தி பத்திரிகையில் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது. மேலும்,



1971 டிசம்பர் 11] [டாக்டர் மு. கருணாநிதி]

"இப்படி பேசுவது கருணாநிதியாக இருந்திருந்தால் நாம் கவலைப்படத் தேவை இல்லை. இன்று முதன் மந்திரி பதவியில் இருந்து அவர் அமெரிக்காவுக்கு வால் பிடிப்பது தேசபக்தி உடையவர்களுக்குக் கவலையளிக்காமல் இருக்க முடியாது" தேசத் துரோகத் தலைமை, தேசத் துரோக அரசு என்ற அளவுக்குப் பயங்கரமான குற்றச்சாட்டை என் மீதும், அரசின் மீதும் சுமத்தி இருக்கிறார்கள். இதைவிடத் தேசத் துரோகமான காரியம் என்ன இருக்க முடியும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். அந்தப் பத்திரிகையிலே எழுதிய தலையங்கத்தில்—

"மக்கள் ஐந்தாம் படைகளை அனுமதிக்கக் கூடாது." என்று ஆரம்பித்து, நாளும் இந்த அரசும் ஐந்தாம்படை முதலமைச்சர், ஐந்தாம்படை அரசு என்பதற்கான பல்வேறு காரணங்களை வரிசையாகக் கூறிவிட்டு "நமது நாடே போரில் ஈடுபட்டிருக்கிறது. நமது நாட்டுக்காக, நாட்டு மக்களுக்காக மத்திய சர்க்கார் போரை நடத்துகிறது. இப்படிப் போரை நடத்தும் மத்திய சர்க்காருக்கு முழுமனதான ஒத்துழைப்பு நல்க வேண்டியது ராஜ்ய சர்க்கார்களின் சட்ட ரீதியான கடமையாகும்" என்று கூறிவிட்டு, "நிலைமை இப்படியிருக்க நமக்கு வாய்த்திருக்கும் முதல் மந்திரி கருணாநிதி, பகிரங்கமாக நமக்கு எதிராக பாகிஸ்தானை ஆதரித்து வரும் அமெரிக்கவுக்கு வக்காலத்து வாங்கிப் பேசியிருக்கிறார்" என்ற அளவுக்கு அதிலே கூறப்பட்டிருக்கிறது.

நான் அமெரிக்காவுக்கு வக்காலத்து வாங்க வேண்டிய அவசியமென்ன? அந்த நிலை எப்போதும் எனக்கு ஏற்பட்டது கிடையாது. திராவிட முன்னேற்றக் கழகமானாலும், திராவிடர் கழகமானாலும், பெரியார் அவர்கள் ஆரம்பித்த சுய மரியாதை இயக்கமானாலும் அந்தக் காலத்திலே இருந்தே இந்த இயக்கத்திலே ஈடுபட்டு வருகிறோம் என்ற நிலையில் உலக நாடுகளிலே அன்றிலிருந்தே எங்களுக்குப் பிடித்தமான நாடு சோவியத் நாடுதான். சோவியத் நாட்டில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சியை இந்த நாட்டில் எடுத்துச் சொல்லி, அப்படிப்பட்ட சமதர்ம மணம் நம் நாட்டிலும் கமழ வேண்டுமென்று வாதாடிப் போராடி வருகிறார்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறவர்கள். அப்படிப்பட்ட பாரம்பரையைச் சேர்ந்த என்னை அமெரிக்காவுக்கு வக்காலத்து வாங்குவதாக எழுதியிருக்கிறார்கள்.

அமெரிக்க அரசாங்கம் என்னை ஏன் அழைத்தது என்பதைப் பற்றியெல்லாம் 6-ம் தேதியன்று தீர்மானத்தின்மீது பேசுகிற நேரத்தில் தெளிவாக சொன்னேன். அப்போது 'அமெரிக்கர்கள் நம் பக்கம் இருக்கிறார்கள்; அமெரிக்க அரசு நம் பக்கம் இல்லாவிட்டாலும் அமெரிக்கர்கள் நம் பக்கம் இருக்கிறார்கள்' என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். ஹம்பிரே, கென்னடி, சாக்சபே போன்ற செனட் மெம்பர்களும், நிக்சனுடைய கட்சியை சேர்ந்த கூப்பர் என்ற செனட் மெம்பரும் இந்தியாவின் நிலையை ஆதரித்து கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆகவே, அமெரிக்க மக்கள் வேறு, அமெரிக்க அரசு வேறு என்பதைத் தெளிவாகக் கூறினேன். உலக நாடுகளில் இருக்கிற பல்வேறு மக்கள் ஆதரவு இந்தியாவின் பக்கத்தில் இருக்கிறது என்று தெரிவித்தேன். இது அமெரிக்காவுக்கு வக்காலத்து வாங்குவது என்றால், நான், பேசியது அமெரிக்காவுக்கு வக்காலத்து வாங்குவது என்றால்

தினமணி பத்திரிகையில் திரு. சிவராமன் அவர்கள் எழுதியிருப்பதைப் பார்க்க வேண்டும். நான் 6-ம் தேதி சொன்ன கருத்தை அவர்கள் 10-ம் தேதி தெளிவுபட எழுதியிருக்கிறார்கள்.

“. . . .கிழக்கு வங்கப் பிரச்சினையில், பாகிஸ்தானின் அநீதியை மறந்து நிக்ஸன் அனுஷ்டிக்கும் ‘ஒருதலைச்சார்பான’ கொள்கையை எதிர்ப்பவர்கள் அமெரிக்காவில் ஏராளமாக இருக்கிறார்கள். ‘பால்டிமோர்சன்’ போன்ற பத்திரிகைகளும், கென்னடி, ஹம்பிரீஸ், மாஜி ஸ்தானிகர் கூப்பர் போன்றவர்களும் இப்போது ஐ.நா. வில் நிக்ஸன் அனுஷ்டிக்கும் கொள்கையை ஆதரிக்கவில்லை இந்தப் பிரமுகர்கள் நிக்ஸன் அலட்சியம் செய்யக்கூடிய ‘வெறும் பேர்வழிகள்’ அல்லர்” என்று திரு. சிவராமன் அவர்கள் கட்டுரையில் 10-ம் தேதி தினமணியில் எழுதியிருக்கிறார்கள். இதே கருத்தைத்தான் முன்கூட்டி நான் 6-ம் தேதி இந்த அவையில் சொல்லியிருக்கிறேன். அமெரிக்காவுக்கு வக்காலத்து வாங்க வேண்டுமென்ற எண்ணத்தில் அந்தக் கருத்து சொல்லப் படவில்லை.

நான் சொன்னதை விமர்சிப்பதைப் பற்றிக் கவலை இல்லை. எவ்வளவோ வகையில் அதை விமர்சிக்கலாம். ‘அமெரிக்க மக்கள் அப்படித்தான் இருப்பார்கள்; அவர்களை நம்பத் தேவையில்லை’ என்று விமர்சிக்கலாம். ‘தேசத் துரோகமான காரியத்தில் இந்த மாநில அரசு ஈடுபடுகிறது; நாட்டை விலைக்கு விற்கிறது’ என்று எழுதுவது ‘இங்கே உனக்கு ஒரு நண்பன் இருக்கிறான்’ என்று யாகியாகானுக்குச் சுட்டிக் காட்டுவது போல் ஆகாதா? அது இந்தியாவைப் பலகீனப்படுத்தும் செயலாகாதா?

நவசக்தி பத்திரிகையின் ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவராகிய தனுஷ்கோடி அவர்களும், துணை ஆசிரியராக உள்ள சங்கமேஸ்வரன் அவர்களும் கைது செய்யப்பட்டிருப்பது பாதுகாப்புச் சட்டத்தின்படி. அரசுக்கு விரோதமாக இருப்பவர்களைக் கைது செய்வது என்றால், மற்ற அரசியல் கட்சித் தலைவர்களை எல்லாம் கைது செய்ய முடியும். ஆனால் அப்படிப்பட்ட இழிந்த மனப்பான்மை எங்களுக்குக் கிடையாது. பாதுகாப்புச் சட்டத்தை மொழிப் போராட்டத்திற்கெல்லாம் பயன் படுத்தியவர்கள்தான் இன்று இங்கே ஒற்றி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைக் காணுகின்ற நேரத்தில் நான் மிகுந்த ஆச்சரியப்படுகிறேன். மொழிப் போராட்டத்திற்குப் பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்திய காலமெல்லாம் இந்த நாட்டில் இருந்தது. இப்போது அந்த வகையில் பாதுகாப்புச் சட்டம் பயன்படுத்தப்படவில்லை. தேசத் துரோகமாக ஒரு அரசே ஈடுபடுகிறது என்ற அளவுக்கு தேசத் துரோகத்தைச் செய்கிற நபர்கள் மீது இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

மேற்படி நவசக்தி தினசரி, சென்னை மயிலாப்பூர் கச்சேரி சாலையின் எண் 60-ல் உள்ள நவசக்தி பதிப்பகத்தில் அச்சிடப்படுகிறது. டிசம்பர் 8-ம் தேதி வெளியான செய்திக்கும், 9-ம் தேதி வெளியான செய்திக்கும் காரணமாக திரு. தனுஷ்கோடி கைது செய்யப்பட்டார். அந்தக் கட்டுரைகளை எழுதியவர் சங்கமேஸ்வரன்தான் என்று கூறியதன் பேரில், அவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார். இது சம்பந்தப்பட்ட கையெழுத்துப் பிரதிகளும், சங்கமேஸ்வரனின் கைப்பட எழுதப்பட்ட தலையங்கமும், இது பதிவாகியுள்ள அச்சு



அட்டையும் மேற்படி அச்சுக் கூடத்திலிருந்து கைப்பற்றப்பட்டிருக்கின்றன. இது அரசியல் காரணமாக செய்யப்பட்டது அல்ல என்று எடுத்துக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

காங்கிரஸ் கட்சியின் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசும்போது கூறிய வாசகத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ‘நாடு இப்போது இருக்கும் நெருக்கடி நிலையில் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள்தான் இந்தியாவின் தலைவர் என்று ஏற்றுக்கொள்ள வேண்டும். நான் முதலமைச்சர் அவர்களை மறந்து விட்டதாகக் கொள்ள வேண்டாம். முதலமைச்சர் சொல்லுவதைக் கேட்டு அவர் காட்டும் வழியில் நடந்து கொள்ளவேண்டும்’ என்று மிகுந்த பெருந்தன்மையோடு காமராஜர் அவர்கள் பேசியதைப் பார்த்து மகிழ்ச்சியுற்றேன். அவர்களே விரும்பாத அளவுக்கு இது நடந்திருக்கிறது. திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் மற்றும் காங்கிரஸ் கட்சி நண்பர்களும் நிச்சயமாக இதை விரும்பமாட்டார்கள், அவர்களுக்கென்று ஒரு கடமை இருப்பதால் இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

திரு. தங்கமணி அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பதற்கு விஷயம் வேறாக இருக்கலாம். மற்ற அரசியல் கட்சிகளை ஒடுக்க இதைப் பயன்படுத்தக்கூடாது என்றார்கள். நிச்சயமாக உறுதி அளிக்கிறேன்—அரசியல் கட்சிகளைப் பயமுறுத்த நிச்சயமாக இது பயன்படுத்தப்பட மாட்டாது. அவர்களே அன்றைக்கு மிகுந்த துடிப்போடு சொன்னார்கள். இவ்வளவு அக்கிரமமாக எழுதியிருக்கிறார்களே என்று தங்கமணி அவர்களே சொன்னார்கள். இப்படிச் சொன்னதற்கும், ஒற்றி வைப்புப் பிரேரணையைக் கொண்டு வந்ததற்கும் இடையே உள்ள இடைவெளியை எண்ணிப் பார்க்கிறேன். இப்போது பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு வழக்கு இருக்கும் காரணத்தால் இதை விட அதிகமாக சொல்லுவதற்கில்லை. இது அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய பிரச்சினை அல்ல என்பதைத் தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, தடுப்புக் காவல் சட்டம் இருந்த காலத்திலே எங்களுடைய ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக கோஷ பந்த் நடத்தியபோது கூட கேரளாவிலே இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தவில்லை. இந்தக் குறிப்பிட்ட கட்டுரையைப் பொறுத்தவரை தனிப்பட்ட முதலமைச்சரைத் தாக்கி இருக்கும் கருத்து தவறு என்றாலும், அதில் இருக்கிற சில அரசியலை எடுத்துக் கொண்டு, இது இன்று பாதுகாப்புக்கு விரோதமாக இருக்கிறது என்ற பாணியில் நடவடிக்கை எடுப்பது வேறு விஷயம். மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இந்த விஷயத்தைப் பற்றி இரண்டு மணி நேரம் விவாதித்து எங்கள் கருத்துக்களைத் தெரிந்து கொள்ளுவது ஆளும் கட்சிக்கு உதவியாக இருக்கும். அந்த முறையில் தமிழக மக்களைப் பொறுத்தவரை நல்லமுறையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுவதற்குத் உதவியாக இருக்குமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, it is not at the instance of anybody behind the screen that this motion is tabled before the House. This is a fundamental right affecting the Press and it will have to be considered dispassionately and there may be certain aspersions cast against this Government or against the Central Government but that will in no way hamper the war effort and that aspect of the matter has to be considered. That is the reason why this motion has been brought forward and not that we want to welcome any kind of bad criticism. According to me, there is nothing wrong in the paper publishing this report and my submission is that the Hon. Chief Minister should consider it dispassionately and he need not be carried away by emotions. I am sure he will dispel all emotions in the matter of deciding these things. This law should not be used, and if it is to be used, it should be used sparingly and it should not be used for crushing the Opposition in the name of law.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மீண்டும் திரு. தங்கமணி அவர்கள் அதை விமர்சனம் என்று சொன்னார். திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் அதே தோரணையில் பேசுகிறார்கள். பத்திரிகையில் ஒரு பகுதியைப் படித்துக் காட்டுகிறேன். மக்கள் ஐந்தாம் படைகளை அனுமதிக்கக்கூடாது என்று முதலிலே சொல்லிவிட்டு "விவரம் அறிந்தவர்களும், தேச பக்தி கொண்டவர்களும், நாட்டின் நலன்களிலும், பாதுகாப்பிலும், சுதந்திரத்திலும் அக்கறை கொண்டவர்கள் ஒரு முதலமைச்சரின் இத்தகைய பேச்சை அலட்சியப்படுத்திவிட முடியாது" என்று கூறியிருக்கிறார்கள். முதலமைச்சரையும், அரசாங்கத்தைப்பற்றியும் எழுதிய எழுத்தை அலட்சியப்படுத்திவிட முடியாது என்பது தான் அரசாங்கத்தின் முடிவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்தத் தீர்மானத்திற்கு என்ன அவசியம் என்று தெரியவில்லை. முதலிலேயே மாண்புமிகு முதல் அமைச்சர் சொன்னமாதிரி இது பற்றிய வழக்கு இருக்கிறது. இது சப்ஜுடிஸ். அதன்காரணமாக விவாதத்திற்கு உரிமையை இழந்துவிடுகிறது. பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசியல் நோக்கங்களுக்காக கைது செய்யப்படுவார்களோ என்கிற அச்ச உணர்வு தேவையில்லை என்பதையும் முதல் அமைச்சர் அவர்கள் விளக்கிச் சொன்ன காரணத்தினால் இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

அடுத்து, முதல் அமைச்சர் அவர்கள் விதி 82-ன் கீழ் ஒரு அறிக்கையை இந்த மன்றத்திற்கு அளிப்பார்கள்.

### (3) அறிக்கை அளித்தல்

### மண்ணெண்ணெய் பங்கீடு குறித்து முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மண்ணெண்ணெய் வழங்குவதில் பற்றாக்குறை எதுவும் இருக்காதென்று இந்திய அரசு உறுதியளிக்கும் இதே நேரத்தில், அவசர நிலை முன்னிட்டு பிற மிக முக்கியகாரியங்களுக்கு இன்றியமையாத பொருள்களை அனுப்ப வேண்டியிருப்பதையொட்டி, மண்ணெண்ணெய் அந்தந்த இடங்களுக்கு வந்து சேருவதில் சற்றுத் தாமதம் ஏற்படக் கூடுமென்றும், அதனால் அங்கங்கே மண்ணெண்ணெய் பற்றாக்குறை ஏற்படக்



கூடுமென்றும், எனவே அவசியமான இடங்களிலும் இயன்ற இடங்களிலும் மண்ணெண்ணெயைப் பங்கிட்டு அளிக்கலாமென்றும் இந்திய அரசு கூறியுள்ளது. இதனையொட்டி குறைந்த வருமானமுள்ளவர்கள், குறிப்பாக கிராமப்புறங்களில் விளக்குகளுக்கே மண்ணெண்ணெயைப் பெரிதும் பயன்படுத்தக் கூடுமாதலால், ஏழை எளியவர்கள் தங்கள் குறைந்த அளவு தேவையைப் பெறும் பொருட்டு மாநிலத்தில் பகுதிகளனைத்திலும் மண்ணெண்ணெய் வழங்குவதற்காகப் பங்கீட்டு அட்டைகள் கொடுக்கப்படாலாமென்றும், இந்திய அரசு இம்மாநிலத்திற்குத் திங்கள் தோறும் அளிக்கிற மொத்த மண்ணெண்ணெய் அளவினையொட்டி மக்களுக்கு ஒவ்வொரு கால அளவிற்கும் வழங்கப்படும் மண்ணெண்ணெய் அளவை முறைப் படுத்தலாமென்றும் அரசு முடிவு செய்துள்ளது. வீட்டுப் பயனுக்கன்றி பிற பயன்களுக்கு மண்ணெண்ணெய் பயன்படுத்துகிறவர்கள் தங்களுக்கு வேண்டிய குறைந்த அளவு தேவைகளுக்கு அனுமதிச்சீட்டுகளைப் பெற வேண்டும். சுருங்கச் சொன்னால் மண்ணெண்ணெய் பகிர்ந்தளிப்பதில் முழு கட்டுப்பாடு கொண்டு வரப்படும்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் எவ்வளவு தேவையென்று கணக்கிட்டு மண்ணெண்ணெய் பங்கீட்டு அட்டைகள் அச்சிட்டு வழங்குவதற்கு ஒருசில காலமாகும். எனவே, அட்டைகள் வழங்கப்படும்வரை மண்ணெண்ணெய் விற்பனையை விழிப்புடன் கவனித்துவருமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். சில்லறை விற்பனையாளர் ஒவ்வொருவருக்கும் பங்களவு வரையறுத்து உணவுப்பொருள் வழங்கல்துறை அதிகாரிகள் பிறப்பிக்கும் குறிப்பிட்ட ஆணைகள் மீது அவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்குமாறு மொத்த விற்பனையாளருக்குக் கட்டளை பிறப்பிக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குச் சொல்லப்பட்டுள்ளது. மண்ணெண்ணெயை அதிகமாக வாங்கிப் பதுக்கும் வாய்ப்பினை குறைக்கும்பொருட்டு, சில்லறை விற்பனையில் ஒரு சமயத்தில் ஒருவருக்கு 3 லிட்டருக்கு மேல் விற்கக்கூடாதென்றும் வரம்பு விதிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், ஒழுங்குமுறைக்குட்பட்ட பிற நிறுவனங்கள் மூலமாகவும் மண்ணெண்ணெய் விற்பனை செய்ய இயன்றவரை ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

சென்னை மாநகரில் சில்லறை விற்பனையாளர் ஒவ்வொருவருக்கும் ஒரு நாளைக்கு 200 லிட்டருக்கு மேல் வழங்காதிருக்குமாறு மொத்த விற்பனையாளர்கள் பணிக்கப்பட்டுள்ளனர். வரையறுக்கப்பட்டுள்ள விற்பனை விலைகள் கடைகளிலும் கைவண்டிகளிலும் எழுதி வைக்கப்பட வேண்டும். ஒருவருக்கு ஒரு சமயத்தில் 3 லிட்டருக்கு மேல் விற்கக் கூடாது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் அரசுப் பங்கீட்டுக் கடைகள் மூலமாகவும் மண்ணெண்ணெய் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. கைவண்டிக்காரர்கள் மண்ணெண்ணெய் விற்பனை செய்வதைக் கூர்ந்து கவனித்து வருவதற்காக, குறிப்பிட்ட இடங்களில் அந்த வண்டிக்காரர்கள் மூலம் விற்பனை செய்ய ஏற்பாடு செய்வதாக இந்திய எண்ணெய்க் கழகம் முன்வந்துள்ளது. இந்தக் கழகத்தின் பெட்ரோல் நிலையங்கள் தவிர, அரசுக் கிடங்குகளிலும், பங்கீட்டுக் கடைகளிலும் தேவையான பணியாளர்கள் இருப்பர் என்பதைக் கருதி, இவ்வாறு மண்ணெண்ணெய் விற்க ஏற்பாடு செய்யலாமென அக் கழகத்திற்குக் கூறப்பட்டுள்ளது. மண்ணெண்ணெய் வாங்கியவரே மீண்டும் மீண்டும் வாங்கினால் இவ்விற்பனை ஒழுங்கு முறையின் நோக்கத்தையே முறியடிப்பதுடன், நெருக்கடியான இந்த நேரத்தில் மண்ணெண்ணெய் பற்றாக்குறை நிலவுகிறதென்ற உணர்வினைத் தோற்றுவிக்கும், எனவே, தங்களுக்குக் குறைந்த

[டாக்டர் மு. கருணாநிதி] [1971 டிசம்பர் 11

அளவிற்குத் தேவைப்படும் மண்ணெண்ணெயை மட்டுமே வாங்கிக் கொள்ள வேண்டுமென்றும், இயன்ற வரையில் சமையலுக்கு வேறு எரிபொருளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் பொதுமக்களை வேண்டுகிறேன்.

### (4) நடைமுறைக்கேள்வி

**ஓர் உறுப்பினர் ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்பு அறிவிக்கை கொடுத்திருக்கும்போது, அதே பொருள் குறித்து அமைச்சர் அறிக்கை அளிப்பது குறித்து.**

DR. H. V. HANDE : Sir, on a point of order. About three days ago I have given notice of a Call Attention Motion on this subject and when the Hon. Chief Minister is ready with the statement, why should the Department delay it. I would request the Hon. Speaker to help us in seeing that whenever a Call Attention Motion is given notice of and the concerned Minister is ready with the statement, the Hon. Minister should first make a statement in regard to that Call Attention Motion so that the concerned Member could have an opportunity to put one or two supplementary questions.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, அங்கத்தினர்கள் கொடுத்திருக்கின்ற கால் அட்டென்ஷன் நோட்டீசுக்குப் பதிலாக இதைக் கொடுத்ததாகக் கருதிவிடக் கூடாது. எண்ணெய் தட்டுப்பாடு தமிழ்நாட்டில் வந்து விடக்கூடாது என்பதற்கு அரசாங்கம் எண்ணெய் அதிபர்களை எல்லாம் அழைத்து வைத்து கடந்த ஒருவாரகாலமாகப் பேசிக் கொண்டிருக்கிறோம். கார்டுகள் எல்லாம் வழங்க, அச்சிட ஏற்கனவே உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த வேலைகள் எல்லாம் ஒருவாறு ஒரு முடிவுக்கு வந்த நிலையில்தான் முதல் அமைச்சர் அவர்கள் விதி 82-ன் கீழ் இந்த அறிக்கையைச் சமர்ப்பித்தார்கள். இதைக் கொடுத்ததன் மூலம் அங்கத்தினர்களுக்கு இருக்கிற உரிமையைப் பறிப்பதாக யாரும் எடுத்துக்கொள்ளக் கூடாது. அவை கூடுகிற நேரத்தில் எந்த அறிக்கையும் அவைக்குத்தான் முதலில் அளிக்கப்பட வேண்டும் என்கிற நிலையை ஒட்டி இந்த அறிக்கையை முதலமைச்சர் அவர்கள் இன்று இந்த அவையில் அளித்தார்கள். கால் அட்டென்ஷன் நோட்டீஸ் கொடுத்ததனால்தான் இந்த அறிக்கை வந்தது என்பதாகவும் தவறாகக் கருதிவிடக் கூடாது. இதனால் அங்கத்தினர்கள் உரிமை பறிக்கப்பட்டு விட்டதாகவும் கருதக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** கால் அட்டென்ஷன் நோட்டீஸ் கொடுத்த காரணத்தினால்தான் இந்த அறிக்கை வந்தது என்று சொல்லவில்லை. இதுபற்றி நான் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னமேயே கால் அட்டென்ஷன் நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன். முதல் அமைச்சர் அவர்கள் அளித்த அறிக்கையும் அதற்கு ஏற்றவகையில் விரிவாக இருப்பதனால் அந்த கால் அட்டென்ஷன் நோட்டீசையும் சேர்த்து—அதற்கு இது கொடுத்ததாக எடுத்துக்கொள்ளக் கூடாதா என்றுதான் நான் கேட்டேன். நாங்கள் கேள்வி போடுகிற நேரத்தில் அதற்கான உத்தரவுகள் முன்பே போடப்பட்டுவிட்டன என்று சில சமயம் சொல்லுவதும் உண்டு. ஆக நாங்கள் கேள்வி கொடுத்து, கால் அட்டென்ஷன் நோட்டீஸ் கொடுத்துத்தான் அரசாங்கம் அதற்குப் பிறகு நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லவில்லை. 3 நாட்கள் முன்னதாக நான் கால் அட்டென்ஷன் நோட்டீஸ் கொடுத்திருப்பதனால் அதையும் எடுத்து இந்த அறிக்கை அளிப்பதாக இருந்தால் எங்களுடைய உரிமைகளும் பாதுகாக்கப்படும். இனிமேலாவது அப்படிச் செய்ய வேண்டும் என்று நான் கோரினேன்.



1971 டிசம்பர் 11]

**திரு. ஜே. ஜேம்ஸ்:** ஆன் ய பாயிண்ட் ஆப் ஆர்டர் சார் . . . . கால் அட்டென்ஷன் நோட்டீஸ் கொடுத்திருக்கிறபோது அதனை எடுத்துக் கொள்ளாது இது போன்ற அறிக்கை அளிப்பதாவது உறுப்பினர்களுக்கு அக்கறை இல்லை, தங்கள் கடமைகளைச் செய்யவில்லை, ஆனால் அரசாங்கம் தன் கடமையைச் செய்து வருகிறது என்பதான தவறான கருத்து ஏற்பட இடமளிக்கும். இதுபோல செய்வது முறையா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அநேகமாக கால் அட்டென்ஷன் நோட்டீசும், அறிக்கையும் ஒன்றாகச் சேர்ந்துவிட்டதாகக் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நாட்டுப் பிரச்சினையில் அக்கறை இல்லை என்று சொல்ல முடியாது. அதுவும் நெருக்கடியான காலத்தில் அவர்களுக்கு இருக்கிற அக்கறையை நான் மதிக்கிறேன். அந்த அறிக்கை கால் அட்டன்ஷன் நோட்டீசுக்கு அளிக்கிற அறிக்கையில் இருந்தும் மாறுபட்ட ஒன்றாக ஆகிவிட்ட காரணத்தினால் அதற்காக இதைப் படிக்கவில்லை. அறிக்கை வந்த பிறகு, கால் அட்டென்ஷன் நோட்டீஸ் பற்றியும் அவையில் வந்துவிட்ட காரணத்தினால் இதோடு பிரச்சினையை விட்டுவிடலாம் என்று கருதுகிறேன்.

### (5) கவன ஈர்ப்பு

**நாங்குநேரியிலுள்ள 'சுந்தரம் டெக்ஸ்டைல்ஸ்' மூடப்பட்டதும் தொழிலாளர் அல்லலும்.**

**திரு. எஸ். முகமது கோதர் முகைதீன்:** தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம் நாங்குனேரியிலுள்ள 'சுந்தரம் டெக்ஸ்டைல்ஸ்' என்ற மில் மூடப்பட்டு, அங்கு வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு 7—9—1971 முதல் சம்பளமும் போனசும், ரேஷனும் கொடுக்கப்படாமல் இருப்பதால் சுமார் 640 தொழிலாளர் குடும்பங்கள் அவதியுற்றுவரும் சூழ்நிலையில் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய உடனடி நடவடிக்கைகள் குறித்த அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம் நாங்குனேரியிலுள்ள 'சுந்தரம் டெக்ஸ்டைல்ஸ்' என்ற மில் மூடப்பட்டு, அங்கு வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு 7—9—1971 முதல் சம்பளமும் போனசும், ரேஷனும் கொடுக்கப்படாமல் இருப்பதால் சுமார் 640 தொழிலாளர் குடும்பங்கள் அவதியுற்றுவரும் சூழ்நிலையில் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய உடனடி நடவடிக்கைகள் குறித்த அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவர் அவர்களே, நாங்குநேரியிலுள்ள 'சுந்தரம் டெக்ஸ்டைல்ஸ்' என்ற மில் மூடப்பட்டு அங்கு பணியாற்றும் தொழிலாளர்களுக்கு ஊதியம், பூரிப்பு ஊதியம், உணவுப் பங்கீடு முதலியவை அளிக்கப்படாதது குறித்து தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதிகளின் 41-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட விவர அறிக்கையை அளிக்கிறேன்.

நான்குநேரியில் உள்ள ஆலையின் பெயர் சுந்தரம் டெக்ஸ்டெல்ஸ் என்பதாகும். அங்கு பணியாற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 675. அந்த ஆலையில், 1. நெல்லை மாவட்ட திராவிடர் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம், நான்குநேரி; 2. 'சுந்தரம் டெக்ஸ்டெல்ஸ்' தேசியத் தொழிலாளர் யூனியன், நான்குநேரி, என்ற இரண்டு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

நெல்லை மாவட்ட திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் 21—7—1971 நாளன்று வேலை நிறுத்த அறிக்கை ஒன்றைக் கொடுத்தது. ஊதியங்கள், பணிச்சுமை ஆகியவற்றைத் திருத்தியமைத்தல், 1970-ஆம் ஆண்டிற்கான பூரிப்பு ஊதியம், தொடர்ச்சியான முறை மாற்றுப் பணியை நிறுத்தி விடுதல் ஆகியவை அதில் குறிப்பிடப் பட்டிருந்த முக்கியப் பிரச்சினைகளாகும். சமரச நடவடிக்கைகள் தொழிலாளர் நல அதிகாரியினால் மேற்கொள்ளப்பட்டன. 13—10—1971 நாளன்று இறுதி விவாதங்கள் தொழிலாளர் நல அதிகாரி முன் நடந்தன. உடன்பாடு எதுவும் ஏற்படாததால், தொழிலாளர்கள் 16—10—1971 நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து நிர்வாகத்தினர் 17—10—1971 நாளன்று கதவடைப்புச் செய்தனர்.

மதுரை தொழிலாளர் நலத் துணைக் கமிஷனர் 21—10—1971 நாளன்றும், 4—11—1971 நாளன்றும் மேற்படி சங்கங்களுடன் தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடத்தினர்.

வேலை நிறுத்தம்/கதவடைப்பு தொடங்கிய பின்னர், புதிய பிரச்சினை ஒன்று எழுந்தது. அதாவது வேலை நிறுத்தத்திற்குத் தூண்டுதலாயிருத்தல், பிற தொழிலாளர்களை அச்சுறுத்தல், தாக்குதல் ஆகியன போன்ற பல்வேறு குற்றங்களுக்காக 57 தொழிலாளர்களுக் கெதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது பற்றிய பிரச்சினை எழுந்தது. வேலை நிறுத்தம்/கதவடைப்பு திருப்பப் பெறப்படும் நாள்முதல், அவர்களைப் பணியில் அனுமதிக்குமாறு (அவர்களுக் கெதிராக முடிவு பெறாமல் உள்ள நடவடிக்கைகளுக்குப் பாதகம் இல்லாமல்) நிர்வாகத்தினருக்கு தொழிலாளர் நலத்துணைக் கமிஷனர் ஆலோசனை வழங்கினர். இதுவும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இதன் பின்னர் தொழிலாளர் நல அமைச்சர் தொழிற்சங்க பிரதிநிதிகளுடனும், நிர்வாகத்துடனும் 2—12—1971 அன்று சென்னையில் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அதன் பலனாக பூரிப்பு ஊதியம், சம்பளப் பிடித்தம் முதலிய பிரச்சினைகளைப்பற்றி நேரிடையாகப் பேசி முடிவு காண்பதென்றும். உணவுப் பங்கீட்டுக்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்படுமென்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்பட்ட 57 தொழிலாளர்களில் ஒருவர் உறுதிமொழி எழுதிக்கொடுத்து மன்னிக்கப்பட்டுவிட்டதால். மீதமுள்ள 56 தொழிலாளரின் பிரச்சினை பேசப்பட்டது. அவர்களில் வேலை அளவைக் குறைத்துச் செய்த 44 தொழிலாளரை வேலையை ஒழுங்காகச் செய்யச் சம்மதித்தால் வேலைக்கு அனுமதிக்கலாமென்றும் மீதமுள்ள 12 தொழிலாளர் பேரில் விசாரணை நடத்த வேண்டுமென்றும் நிர்வாகத்தினர் கோரினர். இறுதியில் வன்முறையில் ஈடுபட்டதாகக் கூறப்பட்ட இருவரை எக்காரணத்தைக் கொண்டும் வேலைக்கு அனுமதிப்பது இயலாது என்று கூறினர்.



எனினும் அமைச்சர் கூறிய ஆலோசனையை கருத்தில் கொண்டு சில நாட்களில் முடிவு சொல்வதாக நிர்வாகத்தினர் கூறிச் சென்றிருக்கின்றனர். பிரச்சினைக்கு மிக விரைவில் தீர்வு காணப்படுமென்ற நம்பிக்கைக்கு இடமிருக்கிறது.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம் நாங்குநேரியிலுள்ள இந்த சுந்தரம் நூற்பாலையில் பணியாற்றி வருகிற ஏறத்தாழ 640 தொழிலாளர்களில் நெல்லை மாவட்ட திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தைச் சார்ந்த 621 தொழிலாளர்கள் அவர்களது நியாயமான கோரிக்கைகளை, பண்டிகைகாலை குறித்து, சம்பள நிர்ணயம் செய்வது குறித்து, வேலைப்பளு நிர்ணயம் செய்வது குறித்து, போனஸ் குறித்து, தற்காலிகத் தொழிலாளர்களை நிரந்தரமாக்குதல் குறித்து, இப்படி பல்வேறு கோரிக்கைகளை நிர்வாகத்தினர் முன் வைத்து, ஒரு கோரிக்கையை 21-7-1971 அன்று அனுப்பி வைத்திருந்தார்கள். அவர்கள் அனுப்பிய அந்தக் கோரிக்கைகளின் பேரில் தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் இடையே தொழில் நலத் துறை அதிகாரிகளின் முன்னால் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று அது முற்றுப்பெறாத சூழ்நிலையில் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்தி வந்ததன் காரணமாகத் தொழிலாளர்களின் இந்த முக்கியமான கோரிக்கைகளை வற்புறுத்தி வந்தவர்களின் மிக முக்கியமான பங்கு ஏற்ற தொழிற்சங்கத்திலுள்ள 53 பேர்களின் மீது நியாயமான காரணங்கள் இல்லாமல் பொய் வழக்குகளை அவர்கள் மீது பதிவு செய்து அவர்களை நிர்வாகத்தினர் வேலையிலிருந்து நீக்கம் செய்திருக்கிறார்கள். அப்படி நீக்கம் செய்ததற்குப் பின்னாலும் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்யாமல் வேலைக்கு ஒழுங்காக போய் வந்தும் அந்த 53 தொழிலாளர்களும் பழிவாங்கப் பட்டிருக்கிறார்கள். அவர்களை நிர்வாகத்தினர் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். தற்காலிகமாக அவர்களை வேலை நீக்கம் செய்திருப்பதை ரத்து செய்ய வேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில், அந்த அளவிற்கு பேச்சுவார்த்தைகள் அதிகாரிகள் மத்தியில் நடைபெற்று முடிவு ஏற்படாத சூழ்நிலையில் நிர்வாகத்தினர் தாங்கள் கைக்கொண்ட நிலையில் ஆணித்தரமாக இருந்துவந்த காரணத்தினால் கொஞ்சம் கூட சமரசத்திற்கு இறங்கி வராத சூழ்நிலையில் அந்தத் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். செப்டம்பர் 16-ம் தேதி தொழிலாளர்கள் வழக்கம்போல் வேலைக்குப் போகிறநேரத்தில் நிர்வாகத்தினர் கதவடைப்பு செய்திருக்கிறார்கள். தொழிலாளர்கள் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்களே தவிர தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யவில்லை.

MR. SPEAKER: The hon. Member is making a speech. He can put only a question.

THIRU G. R. EDMUND: I will first explain and then put the question.

MR. SPEAKER: No, you should only put a question.

திரு. க. உரொ. எட்மண்ட்: நாட்டை எதிர்நோக்கியுள்ள இந்த அவசரமான சூழ்நிலையில் தொழிலாளர்களின் அத்தனை கோரிக்கைகளையும் நிர்வாகத்தினர் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் இப்போது தற்காலிகமாக வேலை நிறுத்தம் செய்யப்பட்டிருக்கிற அந்த 53 தொழிலாளர்களை நிர்வாகம் உடனடியாக வேலைக்கு எடுத்துக்கொண்டால் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பத் தயாராயிருக்கிறார்கள்.

(திரு. நா. வீராசாமி அவர்கள் தலைமை.)

அந்த நிபந்தனையின்பேரில் நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் நிர்வாகத்தினரை அணுகி அல்லது அவர்களை அழைத்து இந்த 53 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்ததை ரத்து செய்து மீண்டும் அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளும் அடிப்படையில் ஆலையை அவர்கள் உடனடியாகத் திறக்க வேண்டும். அப்படித் திறந்ததற்குப் பின்னால் அவர்களது கோரிக்கைகள் குறித்து சமரசமாகப் பேசி முடிவு செய்து கொள்ளலாம் என்பதற்கு தொழிலாளர்கள் தயாராயிருக்கிறார்கள். இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்வதற்கு நம் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் நிர்வாகத்தினரை அழைத்து ஆலையை உடனடியாகத் திறக்க தக்க ஏற்பாடுகளைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். . . .

**திரு. ஜே. ஜேம்ஸ்:** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். நண்பர் எட்மண்ட் அவர்கள் உரையாற்றியது ரூல் 41-ன் கீழா அல்லது ரூல் 42-ன் கீழா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** ரூல் 41-ன் கீழ் தான். அவைத் தலைவர் அவர்கள் ஏற்கனவே சுருக்கமாகக் கேட்க வேண்டுமென்று சொல்லிவிட்டார்கள். ஆகவே இனிமேல் உறுப்பினர்கள் சுருக்கமாக விளக்கங்கள் கேட்கவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் தெரிவித்துள்ள விவரங்களைக் கூர்ந்து கவனித்திருந்தால் நான் அதில் தக்க விடை அளித்திருப்பதைப் புரிந்து கொண்டிருக்கலாம். 57 பேர்களை வேலையிலிருந்து நீக்கவேண்டும், ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று சொன்ன மானேஜ்மென்டாரிடம் 54 பேர்களின் மேல் ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கக் கூடாது என்று சொன்னதை அவர்கள் ஏற்றுக் கொண்டு இரண்டு பேர்களின் மீது நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். அவர்கள்மீதும் நடவடிக்கைகள் எடுக்கக்கூடாது என்று நான் யோசனை சொல்லியதன்பேரில் அநேகமாக இரண்டு நாட்களில் பதில் சொல்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நல்லதொரு முடிவு ஏற்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. எனவே, இரண்டு நாட்களில் நல்லதோர் முடிவு ஏற்பட்டு ஆலை திறக்கப்பட்டு தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்புவார்கள் என்ற சூழ்நிலை வளர்ந்து வருகிறது.

## (6) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1971-72-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதம்—தொடர்ச்சி.

**திரு. சு. துரைசாமி:** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்று என் கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று விரும்புகிறேன்.

நம் தமிழக முதல்வர் அவர்கள் வருகிற 1972-ம் ஆண்டு இறுதிக்குள்ளாக தமிழ்நாடு முழுவதிலுமுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார விளக்குகள் போட்டுக்கொடுக்கிற திட்டத்தை தமிழக அரசு இந்த நாட்டுமக்களுக்குச் செய்து கொடுக்கும் என்ற அறிவிப்பை கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு தெரிவித்தார்கள். அந்த அடிப்படையில் இன்று திருப்பூர் தொகுதியை



எடுத்துக்கொண்டால் கடந்த ஒரு ஆண்டுக்கு முன்பாகவே திருப்பூர் தொகுதியைச் சார்ந்த எல்லாக் கிராமங்களும், நம் அரசும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் எடுத்துக்கொண்ட முயற்சிகள் காரணமாக அங்குள்ள எல்லாக் கிராமங்களும் மின்சாரம் பெற்றிருப்பதைப் பார்க்கிறோம்.

அதைப்போலவே மின்சாரம் எல்லாக் கிராமங்களுக்கும் கொடுக்கப்பட்டு பெரும் காரியத்தை செய்து கொடுத்ததற்கு முதலமைச்சர் அவர்களையும், மின்சார அமைச்சர் அவர்களையும், மின்சார வாரியத்தையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு நாட்டிற்கு எந்த அளவுக்கு மின்சாரம் தேவையோ அதைப் பயன்படுத்தக் கூடிய அளவிற்கு நாம் தயாரிக்க வேண்டும். முதலில் 156 மெகவாட் ஆக இருந்து மின்சாரம் பயன்படுத்தப்பட்டிருப்பது 1971-72-ம் ஆண்டு இறுதிக்குள்ளாக 2.185 மெகவாட்டாக அதிகமான மின்சாரம் பயன்படுத்தும் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. இதை எடுத்துக்கூறி அதற்கு என் பாராட்டுதலை தெரிவிக்க விரும்புகிறேன். நம் நாடு 20 ஆண்டு அல்லது 30 ஆண்டு காலத்திற்கு பின்னால் பல்வேறு விதங்களில் மின்சாரத்தை பயன்படுத்தும். அந்த அளவுக்கு அப்போது மின்சாரம் கிடைக்குமா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அதற்கேற்ப மின்சாரம் உற்பத்தி செய்யவேண்டுமென்று இந்த அரசாங்கத்தை இந்த சந்தர்ப்பத்திலே மிக பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் நமது அரசாங்கம் தாழ்த்தப்பட்ட அரிசன மக்கள் வாழும் சில பகுதிகளில் மின்சார விளக்குகள் போடும் முயற்சி அதிகமாகச் செய்து வருகிறது. அந்தத் தாழ்த்தப்பட்ட அரிசன மக்கள் வாழும் கிராமங்களில் மின்சாரம் போட்டுக்கொள்ளுகின்ற நிலைமையை சப்சிடி மூலம் அரசாங்கம் ஏற்படுத்திய காரணத்தால் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்க உதவி புரிந்திருக்கிறது என்பதை பணிவன்போடு சொல்லிக்கொள்கிறேன். மற்றும் அரிசன மக்கள் வாழக்கூடிய எல்லா பகுதிகளிலும் அவர்களுடைய மின்சாரக் கட்டணங்களையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்த அரசாங்கத்தை இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் திருப்பூர் தொகுதியை எடுத்துக்கொண்டால் போதிய மின்சாரம் அந்தத் தொகுதிக்கு கிடைக்கவில்லை. அங்கே பல்வேறு தொழிற்சாலைகள் நடைபெறுவதற்கு இன்றைக்கு தருகிற மின்சாரம் போதவில்லை. திருப்பூரில் இருக்கும் மின்சார நிலையம் 66 கே.வி. நிலையமாக இருக்கிறது. அதை 110 கே.வி. கொண்ட மின்சார நிலையமாக மாற்ற மின்சார வாரியம் முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதாக கேள்விப்பட்டேன். இன்னும் அதிகமாக தரப்படவேண்டும்.

திருப்பூரில் ஏறத்தாழ 50 பனியன் செய்யும் தொழிற்சாலைகளும், ஜின்னிங் பாக்டரிகளும், நூற்பு ஆலைகளும் இருக்கின்றன. இந்த தொழிற்சாலைகளுக்கு அந்த மின்சார சக்தி அதிகம் தேவைப்படுகிறது. அதனால் 110 கே. வி. மின்சார நிலையம் அமைக்க கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் கடந்த ஆண்டு மின்சார வாரியத்தின் அறிக்கையின் பேரில் நான் பேசியபோது குறிப்பிட்டேன். பல்வேறு பகுதிகளில் மின்சார கம்பங்கள் பாதையின்

மையத்தில் அமைந்து இருக்கின்றன என்று சொல்லும்போது அதற்கு கொடுக்கப்பட்ட விளக்கம் மேற்பார்வை பொறியாளர் உரிய நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்கள் என்று பதில் தரப்பட்டது. ஆனால் இன்று வரையில் எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை, சோமனூர், பல்லடம் போன்ற இடங்களில் முக்கியமாக பாதைகளில் மின்சார கம்பங்கள் இருக்கின்றன. இந்த அரசாங்கம் அல்லது மின்சார வாரியம் இதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்து வேகமாக இந்தக் காரியத்தை செய்து கொடுக்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு விவசாயத்திற்கு மின்சாரம் வேண்டி விண்ணப் பித்துக் கொண்டால், அந்த விண்ணப்பத்தை பெற்றுக்கொண்டதற்கு அத்தாட்சி கொடுப்பது கிடையாது. ஒரு விண்ணப்பம் சேர்ந்தது, அதற்கு உரிய நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று ஒரு தாக்கீது சம்பந்தப்பட்டவர்கள் கொடுக்கவேண்டும். யார் யார் என்ன பெற்றுக் கொண்டார்கள். யார் யாருக்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பின்னாலே யாருக்கெல்லாம் மின்சாரம் கொடுக்கப்பட இருக்கிறது என்று கண்டுகொள்ள வாய்ப்பு இருக்கும், அப்படிப்பட்ட முறையை மின்சார வாரியம் ஏற்பாடு செய்யவேண்டும்.

அதேபோல் கிராமங்களை எடுத்துக்கொண்டால் அங்கே இருக்கின்ற மின்சார விளக்குகள் எரிவது கிடையாது. அப்படிப்பட்ட இடங்களில் மின்சார வாரியம் நடவடிக்கை எடுக்கமுயற்சி செய்யவேண்டும்.

அதே போல் குழல் விளக்குகள் ஒழுங்கு முறையில் அமைந்திருப்பதைப் பார்க்கிறோம். ஆனால் அப்படிப்பட்ட மாதிரி கிடையாது விளக்குகள், அது இல்லாததன் காரணமாக மின்சார வாரியத்தின் விளக்குகள் வெளியே திருடு போவதற்கான சூழ்நிலையை பல இடங்களில் பார்க்கிறோம். இதை மின்சார வாரியம் கவனித்து திருடுதலுக்கு வழி இல்லாமல் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, மின்சார வாரியத்தின் ஊழியர்கள், நல்ல விதி முறைகள் இருந் தும், அவர்கள் அதை பின்பற்றாமல், வேஷ்டி போன்ற உடைகளை உடுப்பதால், விபத்துக்களும் ஏற்படும் வாய்ப்பு இருக்கிறது. அதை தவிர்க்க மின்சார வாரியம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல் உதவி பொறியாளர்கள், மற்ற பொறியாளர்களுக்கு கொடுக் கப்பட்டிருக்கின்ற வரம்புகளுக்கு அதிகமாக பயன்படுத்த முடியவில்லை. இன்னும் உயர்த்தினால்தான் வேகமாக சில காரியங்களை செய்வதற்கு முடியும். அப்படிப்பட்ட முறையில் ஏ.இ., டி.இ., எஸ்.இ., போன்றவர்களுக்கு இந்த வரம்பை மாற்றி நிர்ணயம் செய்யவேண்டுமென்று மின்சார வாரியத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல மின்சார வாரியத்தை பொறுத்தவரையில் இன்றைக்கு திருப்பூர் நகரத்தை எடுத்துக்கொண்டால் நகரத்திற்கு தண்ணீர் மேட்டுப் பாளையத்திலிருந்து வருகிறது. இதற்காக அந்த நகராட்சி ரூ. 3 லட்சத்திற்கு மேல் மின்சாரக் கட்டணம் கட்டிக்கொண்டு வருகிறது. இப்பேர்ப்பட்ட



அத்யாவஸ்யமான காரியங்களுக்கு கொடுக்கின்ற மின்சாரக் கட்டணத்தில் மாற்றம் செய்யவேண்டும். குடி தண்ணீர் இன்றியமையாத தேவை, அதன் அவசியத்தை உணர்ந்து கட்டண மாற்றம் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த நிதி நிலை அறிக்கையை ஆதரித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. மூ. மாரிமுத்து: தலைவர் அவர்களே, 1971-72 மின்சார வாரியம் நிதி நிலை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

நான் கடந்த ஆண்டு பல திட்டங்களை எல்லாம் இந்த மன்றத்திலே எடுத்துக் கூறினேன். அவை எல்லாம் முடிந்து விட்டன. இன்று 1967-க்கு முன்பு என்னுடைய பகுதியில் 50 சத விகிதம் மின்சார இணைப்பு கொடுக்கப் பட்டிருந்தது. மீதி 50 சத விகித இணைப்பை இன்று நிறைவேற்றப் பட்டிருக் கிறது. குறிப்பாக என்னுடைய பகுதியில் எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டிருப்பது பாராட்டக் கூடியது ஒன்றாகும். அந்த திட்டத்தை நிறைவேற்றியுள்ள பொறியாளர்களையும், மற்ற மின்வாரியத்தில் பணிபுரிகிற வர்களையும், ஊழியர்களையும் நான் பாராட்டுகிறேன். அவர்கள் பணியை வர வேற்கிறேன். அதற்காக நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இந்தத் திட்டங்களை எல்லாம் எனது பகுதியில் நிறைவேற்றியதன் மூலமாக இன்று 10,000-க்கும் மேற்பட்ட மின்சார இணைப்புகள் கொடுக்கப் பட்டு வருகிறது. இது போன்ற இன்னும் சில திட்டங்களை எல்லாம் விரைவில் நிறைவேற்றுவதற்கு, தலைவாசலில் உதவிப் பொறியாளர் அலுவலகம், சாத்துப் பாடியில் பிரிவு அலுவலகமும் தோற்றுவித்தால் அங்கே உள்ள விவசாயி களுக்கு நல்ல முறையிலே விரைவிலே மின்சார இணைப்பு கிடைக்க நல்ல ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படு கிறேன்.

ஆத்தூர் பகுதியில் இப்போது இரண்டு வருவாய் பிரிவு உள்ளது. அந்த இரண்டு வருவாய்ப் பிரிவுகளும் ஒரே இடத்தில் இருப்பதால், குறைந்தது 20 மைல்களுக்கு அப்பால் இருந்து வருகிற விவசாயிகளுக்கு காலதாமதம், பண விரயம் ஆகியவை ஏற்படுகின்றன. ஆகவே, அந்த இரண்டு அலுவலகங்களில் ஒன்றை தம்மம்பட்டிக்கு மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி மாற்றித்தருவதன் மூலம் அந்தப்பகுதியில் இருக்கும் கிட்டத்தட்ட 5,000 விவசாயிகள் பயன்பெறுவார்கள். ஆகவே, இதை உடனடியாக தம்மம் பட்டிக்கு மாற்றித் தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆத்தூர் வட்டாரத்தில் சுமார் 1 கோடி ரூபாய் செலவில் 87 திட்டங்கள் வகுக்கப்பட்டு அதில் 67 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன. மீதம் உள்ள 20 திட்டங்களையும் விரைவில் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால், மேட்டூர் மின் திட்டத் தின்கீழ் சுமார் 5 கோடி அளவில் பல திட்டங்கள் வகுக்கப்பட்டு அந்த திட்டங்கள் இப்போது செயல்படாமல் இருக்கின்றன. அரசாங்கம் இதை ஒரு சிறப்பு திட்டமாக வைத்து ஒரு ஆண்டிற்குள்ளாவது அல்லது இரண்டாண் டிற்குள்ளாவது நிறைவேற்றித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்

கொள்கிறேன். இதற்காக பொறியாளர்கள், அலுவலர்கள் உடனடியாக நியமிக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேட்டூர் மின்திட்டத்திலுள்ள மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் அந்த மாவட்டத்தின் ஒரு கோடியில் இருக்கிறது. அந்த அலுவலகத்தை மாவட்ட தலைநகரமான சேலத்திற்கு கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது போன்ற திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் மின்சாரத் துறையில் இருக்கிற இடர்ப்பாடுகள் விரைவில் நீக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி செய்வதால் விவசாயிகளுக்கும், நடுத்தர மக்களுக்கும் மின்சாரம் வழங்குவதற்கு நல்ல ஏற்பாடாக இருக்கும் என்றும் கூறிக்கொள்கிறேன். இதையெல்லாம் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வருவதன் மூலம் அரசாங்கம் அதை நிறைவேற்றித் தருவதற்கு சம்பந்தப்பட்ட பொறியாளர்களையும், தலைமைப் பொறியாளர்களையும் தகுந்த நடவடிக்கை எடுக்க ஆணையிடும் என்று கருதுகிறேன். என்னுடைய தொகுதியில் மின்சாரம் இல்லாத கிராமமே இல்லை என்று உருவாக்கிய தமிழக அரசுக்கும், மின்சார வாரிய அமைச்சருக்கும், அதிலே பணி புரிகிற பொறியாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் என்னுடைய நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொண்டு இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** தலைவரவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1971-72-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மீது ஒரு சில கருத்துக்களை நான் இம்மன்றத்தில் கூற ஆசைப்படுகிறேன்.

இன்று தமிழ்நாடு இந்தியத் துணைக் கண்டத்திலேயே மின்சார உற்பத்தியைப் பொறுத்த அளவிலும் சரி, மின்சாரத்தைப் பயன்படுத்துவதிலும் சரி, இரண்டாவது ஸ்தானம் வகிக்கிறது. ஹரியானா முதல் நிலையிலும், தமிழ்நாடு இரண்டாம் நிலையிலும் உயர்வு பெற்று இருக்கிறது என்ற செய்தி நாங்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சியை அளிப்பதாக இருக்கிறது. தமிழ்நாட்டிலே இந்த அளவு மின்சாரம் பெருகி இருப்பதற்கு அடிகோலியவர்களையும், அதற்காக பாடுபட்டவர்களையும் நான் இந்த நேரத்தில் நினைவு கூற கடமைப்பட்டு இருக்கிறேன். முந்தைய அரசு எங்கெங்கெல்லாம் நல்ல மின்வசதிகளை தோற்றுவிக்க முடியுமோ அங்கெல்லாம் தோற்று வைத்து இருக்கிறது. அதன் அடிப்படையில் அந்த வேலையைத் தொடர்ந்து இந்த அரசும் பின்பற்றி வருகிறது என்று நான் கருதுகிறேன்.

1972-க்குள்ளாக எல்லா கிராமங்களுக்கும் மின் இணைப்பு கொடுத்து விட வேண்டுமென்ற திட்டம் வரவேற்க வேண்டிய ஒரு திட்டமாகும். இருப்பினும் இன்று மற்ற மாநிலத்திலுள்ள மின் வாரியம் எப்படி செயல்படுகிறது, நம்முடைய மாநிலத்திலுள்ள மின் வாரியம் எப்படி செயல்படுகிறது என்பதை ஒப்பிட்டுப் பார்க்க நாம் கடமைப்பட்டு இருக்கிறோம். நாங்கள் பம்பாயிக்கு சென்று இருந்தபோது அங்கே இருக்கும் மின் வாரியத்தைப் பற்றி விசாரித்தோம். அங்கே மின் வாரியமும், போக்குவரத்துத் துறையும் இணைந்தே "Best undertaking" இயங்கிக் கொண்டு வருகிறது. டொமஸ்டிக் கன்சம்ஷனுக்காக கொடுக்கும் மின்சாரத்திற்கு அவர்கள் விதிக்கும் கட்டணம்



நமது மாநிலத்தில் விதிக்கப்படும் கட்டணத்தை விட மிகக் குறைவாக இருக்கிறது. இருப்பினும் ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 196 லட்சம் ரூபாய் அவர்களுக்கு லாபம் கிடைப்பதாகக் குறிப்பிட்டார்கள்.

ஆனால் அதே நேரத்தில் நான் இந்த அறிக்கையைப் பார்க்கிறபோது மின் வாரியம் லாபத்தில் நடைபெறவில்லை என்று 14-வது பக்கத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. எதற்காக இதைச் சுட்டிக்காட்டுகிறேன் என்றால், அந்த 'பெஸ்ட் அன்டர்டேகிங்" எப்படி அங்கே இயங்கி மின் வாரியத்துறையில் லாபம் காட்டுகிறது என்பதை அறியவேண்டுமென்பதற்காகத்தான். இங்கே டொமஸ்டிக் கன்சம்ஷன் சார்ஜ் யூனிட்டுக்கு 37 பைசா என்று இருக்கிறது. அங்கே இதைவிட மிகவும் குறைவு. இந்தக் கட்டணத்தைக் குறைப்பதற்கு வழி வகை என்ன என்பதைப் பார்க்கவேண்டும். அதற்கு அங்கே என்ன வழி வகை கண்டுபிடித்துக் குறைத்து இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். அவற்றை ஆராய்ந்து நம் மாநிலத்திலும் அதைப் பின்பற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அறிக்கையில் இன்னொன்றையும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். நாம் பரவலாக எல்லா இடங்களுக்கும் இந்த மின்சாரக் கம்பங்கள் மூலம் மின்சாரம் இணைப்பதால் மின்சாரம் இழப்பு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. 1968-69-ல 17.9 சதமானம் மின்சாரம் பாழாகிப்போய் இருக்கிறது. அது கொஞ்சம் குறைந்து 1969-70-ல் 17.6 சதமானம் மின்சாரம் பாழாகிப்போய் இருக்கிறது. இதற்கான காரணத்தை நான் இந்தத் துறையில் ஈடுபட்டு இருப்பவர்களிடத்தில் விசாரித்தேன். சொன்னார்கள். இந்த மின் இழப்பு பாழாகிப்போவதை 1 சதமானம் குறைத்தாலும் நமக்கு 2 கோடி ரூபாய் வருமானம் வரும் என்று குறிப்பிட்டார்கள். சாதாரணமாக மின் இழப்பு ஏற்படத்தான் செய்யும். அதற்கென்று ஒரு அளவு இருக்கிறது. அதிகமாக 15 சதமானம் மின் இழப்பு ஏற்படலாம் என்று சொல்கிறார்கள். அதற்கு மேலே ஏற்படுவது நம்முடைய நிர்வாகக்கோளாறு காரணமாகத்தான் ஏற்படவேண்டும் என்று சொல்கிறார்கள். அந்த மின் இழப்பை ஓரளவு 15 சதமானமாகக் குறைத்துக்கொண்டாலும் நமக்கு கிட்டத்தட்ட 5 கோடி ரூபாய் வருமானம் இந்த மின்சார வாரியத்தின் மூலமாக அரசுக்குக் கிடைக்குமென்று சொல்கிறார்கள். இந்த மின் இழப்பு எப்படி ஏற்படுகிறது. அதன் காரணம் என்ன என்பதை உடனடியாக கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டிரான்ஸ்பார்மரில் கோளாறு, கம்பங்களில் கோளாறு, இணைப்புகளில் கோளாறு என்று ஆராய்ந்து பார்த்து, இந்த 2.6 சதமானம் மின் இழப்பை கட்டுப்படுத்தினால் இந்த மின்சாரத்துறை லாபத்தைக் காட்டும், காட்ட முடியும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும், ஒரு கிராமத்தில் 50 விளக்குகள் இருக்கின்றன என்று சொன்னால் அதில் 20 விளக்குகள் கூட எரிவதில்லை. காரணம் என்ன என்று விசாரித்தால் பல்பு இல்லை, அல்லது அதற்குரிய சாதனங்கள் இல்லை என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். இதை எதற்காக சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றால், ஏன் இந்த மின்சார பல்புகள், குழாய் விளக்குகள் இவற்றை உற்பத்தி செய்வதை எடுத்துக் கொண்டு, தொழிற்சாலையை அமைத்து, பல்பு இவற்றிற்கு ஏற்படும் பற்றாக்குறையை போக்கக்கூடாதா? அதே போல்,

[திரு. ஏ. சுவாமிநாதஸ்] [1971 டிசம்பர் 11

வீடுகளுக்குகெல்லாம் மின்சாரம வேண்டும், மின்சாரம் வேண்டும் என்று வையரிங்கெல்லாம் செய்துவிட்டு, இணைப்பைக் கேட்கும்போது, மீட்டர் இல்லை, வையர் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஏன் மின்சார வாரியமே மீட்டர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை அமைத்து நடத்தக் கூடாது? அறிக்கையில் சொல்லுகிறார்கள், பெருவாரியான கம்பங்கள் தனியார் துறையிலிருந்து வாங்குகிறார்கள் என்று. மின்சார வாரியமே ஏன் தொழிற்சாலையை அமைத்து அதிகமான அளவில் கம்பங்களை உற்பத்தி செய்யக் கூடாது? அப்படிச் செய்தால் பல ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும். இதையெல்லாம் மின்சார வாரியம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நாம் எல்லாத் தெருக்களுக்கும் விளக்குகள் கொடுத்துவிட்டோம் என்று சொல்லிவிட்டால் மட்டும் போதாது. கொடுத்த விளக்குகள் யாவும் எரிய வேண்டும். விளக்குகள் எரிந்தால்தான் மின்சாரத் துறை சரியான முறையில் இயங்குகிறது என்று ஆகும். கம்பங்களை நட்டுவிட்டு, விளக்குகள் ஒளி வீசா விட்டால், மக்களுக்கும் பயன் இல்லை, நாம் செலவழிக்கும் பணமும் பாழான தாக இருக்கும். ஆகவே, பல்புகள் இல்லை என்கிற குறை இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

பல நண்பர்கள் குறிப்பிட்டதுபோல், கன்னியாகுமரி மாவட்டத்தில், இரண்டு ஹைட்ரோ எலெக்ட்ரிக் ஸ்கீம்கள், 100 மெக வாட் மின் விசை கொடுக்கும் திட்டங்கள் இருக்கின்றன. ஆகவே அதைத் தனியான யூனிட்டா கப் பிரிக்கலாம். அப்பொழுது அதன் செயல்திறத்தை நல்ல முறையில் நடத்த லாம். ஆகவே, அரசு அதைத் தனியாகப் பிரிக்க ஆவன செய்ய வேண்டும. அதில் கவனம் செலுத்தவேண்டும்.

தக்கலையில் ஒரு மின்சார பொறியாளர் அலுவலகம் செயல்படுகிறது. அதை மாற்றுவதற்கு முயற்சிகள் நடப்பதாக அறிகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் தக்கலைதான், பெரிய மைய்யமான இடம். ஆகவே அந்த அலுவலகத்தை அந்த இடத்திலிருந்து மாற்றக்கூடாது என்று கேட்டுக் கொள் ளுகிறேன்.

இன்னும் இந்தத் துறையில், நல்ல முறையில் ஓர்க்-லோட் சரிப்படுத்தப்பட வில்லை என்று சொல்லுகிறார்கள். நிர்வாகத்தில் ஊழியர்களுக்கும், மற்ற அலுவலர்களுக்கும், அவர்கள் எந்த எந்த வேலைகளைச் செய்ய வேண்டுமோ, அவற்றைக் குறிப்பிட்ட நேரத்தில் செய்கிறார்களா என்று ஆராய ஒரு கமிட்டி யைப் போட்டு ஆராய்ந்து பார்த்ததாக குறிப்பேட்டில் படித்தேன். ஆனால் நடைமுறையில் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதையும் வாரியம் கவனிக்க வேண்டும். அப்படிக் கவனித்து, அவரவர்கள் தங்கள் தங்கள் வேலையை, ஓர்க்-லோட் படி செய்கிறார்களா என்பதையும் கவனித்தால், இன்னும் இந்த வாரியம் திறமையாக நடக்க ஏதுவாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

**திரு. எஸ். வடிவேல் :** தலைவர் அவர்களே, இந்த மின் வாரியம் இந்தியத் துணைக்கண்டத்திலேயே இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது என்பதைக் கண்டு பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம். நீண்ட நாளாக காந்தியடிகள்



1971 டிசம்பர் 11] [திரு. எஸ். வடிவேல்]

கிராமங்கள்தோறும் ஒளிமயமாக இருக்க வேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருந்தார்கள். அவர்களுடைய கனவை நனவாக்கும் அளவுக்கு இன்று நம்முடைய மின்சார வாரியமும், அமைச்சரவையும் முனைந்து இருப்பதைப் பாராட்டுகிறேன்.

ஆனாலும், மின்சார இணைப்புகள் கிராமங்களுக்குக் கொடுப்பதில் தாமதம் ஏற்படுகிறது. என்னுடைய தொகுதியில் ஏறத்தாழ 41 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. கொள்ளிடம் யூனியனில் 11 பஞ்சாயத்துக்களில்தான்—காங்கிரஸ் அரசு இருந்த காலத்தில் 9-ம், இப்பொழுது 2-ம் ஆக 11 பஞ்சாயத் துக்களில்—விளக்குகள் எரிகின்றன. ஆனைக்காரன் சத்திரம், புத்தூர், இடை சால்புரம் முதலிய 11 கிராமங்களில்தான் எரிகின்றன. சீர்காழித் தொகுதி ஒரு கடைநிலைத் தொகுதி. அந்தத் தொகுதியில், பல்வேறு சங்கடங்கள் இருக்கின்றன. மீனவர்கள் இடையூறுக்கிடையில் வாழ்கிறார்கள். இருட்டில் வருகிறார்கள். மீனையே கடலில் கொட்டிவிட்டு வரும் நிலை இருக்கிறது. ஆகவே, அவசியமாக, சீர்காழித் தொகுதியில் உடனடியாக மின்சார வாரியம் செயல்பட்டு, காலதாமதம் இல்லாமல் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு அங்கே நட்ட கம்பங்களையே காணமல் போய்விட்டது என்று பொறியாளரிடம் சொல்லப்படுகிறது. 200 கம்பங்கள் வரையில் போய்விட்டன. பொது சொத்தாக இருப்பதால் அலட்சியமாக இருக்கிறார்கள். இதைச் சொந்த சொத்துப்போல் பாவித்து, நிர்வாகத்தினர் துரிதமான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றையை முன்தினம் மாண்புமிகு முதல் அமைச்சர், அவசரகால நடவடிக்கையாக மின்சாரக் கட்டணம் உயரும் என்று குறிப்பிட்டார்கள். அப்படிச் செய்தாலும், கிராமப் புற மக்களுக்கு உயர்த்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று அமைச்சரவர்களையும் வாரியத்தினரையும் கேட்டுக் கொள்கிறேன். போர் முனையில் இருக்கும் சிப்பாய்களுக்கு ஏர் முனை இன்றி யமையாததாக இருக்கிறது. உற்பத்தி பெருகினால்தான், எதிரிகளைத் தோற்கடிக்க முடியும். விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் மக்களுக்கு கட்டணத்தைக் குறைக்க முன்வர வேண்டும். அவசர காலத்தைப் பயன் படுத்திக் கொண்டு உயர்த்திவிடக் கூடாது என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். விவசாயத் துறையில் இருப்பவர்களுக்குக் குறைத்தால், உற்பத்திப்பெருக்கில் நாட்டம் செலுத்தவும், நாட்டின்பால் அக்கறை கொள் ளவும் ஏதுவாக இருக்கும்.

சில சமயங்களில் விளக்குகள் போடும்போது, தாழ்த்தப்பட்ட மக்கள், அரிசனங்கள் வசிக்கும் இடங்களுக்கு சாமானியத்தில் கொண்டு போக முடிய வில்லை. எந்தத் திட்டங்கள் என்றாலும், அது உள்ளேபோய், இந்த மக்கள் வசிக்கும் கிராமப் புறங்களுக்கு போவதில் ரொம்பக் கஷ்டம் இருக்கிறது; பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. அவையெல்லாம் அரிசனச் சேரிக்கு போவது சாத்தியமாகவே இல்லை. ஆகவே, விளக்குக் கம்பங்கள் பொருத்துவதில், அப்படிப்பட்ட இடங்களுக்கு முதலில் போட்டுவிட்டு, மற்ற இடங்களுக்கு அப்புறமாக வந்தால் சாலச் சிறந்ததாக இருக்கும். இப்பொழுது நெருக்கடியான நிலைமை இருக்கிறது. ஆகவே, இது சம்பந்த மாக துரித நடவடிக்கை எடுத்து, இருளோங்கிக் கிடக்கும் இந்த

இடங்களுக்கும் ஒளி கொடுத்து, எதிர்காலத்தில் புத்தம் புதிய சமுதாயத்தை உருவாக்கி, இரண்டாவது இடத்திலிருந்து முதலிடத்திற்கு வர தயாராக இருக்க வேண்டும். அந்த வகையில் ஈடுபடவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார வாரியத்தில் இருக்கும் தொழிலாளர்களுக்கு சம்பளம் போதவில்லை என்று சொல்கிறார்கள். நம்முடைய அரசு அதைப் பரிசிலனை செய்து, உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

திரு. கு. காமாட்சி: தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்களால் இந்த மன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்டுள்ள மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கை வாயிலாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய மின்சார வாரியத்தின் குறிக்கோள் 1980-81 வரையில் மிகத் தெளிவாக இருக்கிறது. அது நமக்கு நல்ல முறையில் பணிபுரிகிறது. இந்த மாநிலத்தில் இருக்கின்ற 70 சதவிகித மக்கள் வாழ்கின்ற பகுதியாக இருக்கின்ற கிராமங்களை நோக்காகக் கொண்டு, கிராமத்தில் வாழும் மக்கள் நல்ல முறையில் இருக்கவேண்டும் என்று அனைத்துக் கிராமங்களுக்கும் மின் வசதி தரவேண்டும் என்பதைக் குறிக்கோளாக வைத்துக்கொண்டு, வேளாண்மை நல்ல முறையில் பெருகவேண்டும் என்பதையும் குறிக்கோளாக வைத்துக் கொண்டு, நம்முடைய மின்சார வாரியம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைக் காண மகிழ்ச்சி அடைகின்றேன்.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 150 மெகாவாட் மின்சாரம் என்றிருந்தது, இப்பொழுது 1,070 மெகாவாட்டாக உயர்ந்திருக்கிறது. ஆனால் இந்த அளவு போதுமானதா இல்லையா என்பதை அவர்களே சொல்லியிருக்கிறார்கள். 1980-81-லே நாம் 3,000 மெகாவாட் பற்றாக்குறையை நாம் அனுபவிக்க வேண்டிவரும் என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அவர்கள் சுட்டிக் காண்பிப்பதோடல்லாமல், அதற்கான வழிவகைகள் என்ன என்பதையும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே நல்ல பல திட்டங்களும் இங்கே இருக்கின்றன. அதிலே கடம்பாறை திட்டம் மிகவும் முக்கியமானது என்று நான் கருதுகிறேன். பம்பிங் ஸ்டோரேஜ் ஸ்கீம் என்று அதைச் சொல்லுகிறார்கள். அந்தத் திட்டத்தின் வாயிலாக, 400 மெகாவாட் மின்சாரம் உற்பத்தித் திறன் கிடைக்கும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மாதிரித் திட்டத்தையெல்லாம் மிகத் தீவிரமாக எடுத்துக்கொண்டு தக்க கவனம் செலுத்தி செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அரசு 1972-க்குள்ளாக இந்த நாட்டிலே இருக்கின்ற எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது. அந்த அடிப்படை நோக்கத்தில் இன்றைக்கு திட்டமிட்டு செயலாற்றிவருகிறார்கள். 1966-ல் 22,137 கிராமங்கள் மின்சார இணைப்பு பெற்றவைகளாக இருந்தன, 1971, மார்ச்சில், 42,229 கிராமங்களாக உயர்ந்திருக்கிறது. ஆக, இந்த ஐந்தாண்டுக் காலத்தில் இந்த அளவுக்கு உயர்ந்திருப்பதைப் பார்க்கும்போது, கிராமங்களில் இருக்கின்ற மக்கள் மிக்க மகிழ்ச்சியாக இருந்து, இந்த அரசை மனமாரப் பாராட்டுகிறார்கள் என்பதையும் நான் இங்கே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





அதேபோல், வேளாண்மைக்கும் விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்ட பம்பு செட்டுகள், 1966-ல் 2,56,594 ஆக இருந்தன. அது இன்றைக்கு, 1971-ல், 5,30,444-ஆக உயர்ந்திருக்கின்றன. இதைப் பார்க்கும்போது, வேளாண்மைத் துறையில் எவ்வளவு தீவிர கவனம் செலுத்துகிறார்கள் என்பதைப் பார்க்கும் போதும் மிக்க மகிழ்ச்சி தரக்கூடியதாக இருக்கிறது. இந்த வகையில் 1972-க்குள்ளாக நாம் எல்லாக் கிராமங்களிலும் மின்சாரம் கொடுக்கவேண்டும் என்று அந்தத் திட்டத்தை தீவிரமாக செயல்படுத்தும்போது, இங்கே இதற்குத் தடையாக சில தனியார் நிறுவனங்கள் இருப்பது, ஒத்துழைக்குமா அவைகள் என்கிற சந்தேகம் ஏற்படுகிறது.

நான் இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், என்னுடைய பகுதியில், திருவெறும்பூர் பகுதியில், தென் சென்னை மின்சார சப்ளை கார்ப்பொரேஷன் என்று தனியார் நிறுவனம் இயங்கிவருகிறது. இன்னும் திருவெறும்பூர் பகுதியில் 55 கிராமங்களுக்கு, சிற்றூர்களுக்கு மின்சாரம் இணைப்புக் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதற்கான வழிவகைகளையும் பற்றி இதுவரையில் ஒன்றும் தெரியவில்லை. ஆனால் அவர்களை நாம் அணுகும்போது, அவர்கள் சர்க்காரிடத்திலிருந்து ஒரு கோடி ரூபாய் கடன் வாங்கிக் கொடுத்தால், இந்த 55 சிற்றூர்களுக்கும் நாங்களே 1972-க்குள்ளாக முடிக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அது மட்டுமல்லாமல், அவர்களிடத்தில் எதாவது ஒரு இணைப்புக்காகவோ அல்லது வேளாண்மைக்கு உபயோகமாக பம்பு செட்டுக்காகவோ அணுகும்போதெல்லாம், உடனேயே அவர்கள் சர்க்காரிடத்திலிருந்து பணம் வாங்கிக் கொடுங்கள், சர்க்காரிடத்திலிருந்து பணம் வாங்கிக் கொடுங்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆகவே, அவர்கள் எந்த நோக்கத்தோடு, இருக்கிறார்கள் என்பதை நம்முடைய அரசு தயவு கூர்ந்து அணுகி, 1972-க்குள்ளாக அந்தப் பகுதியிலே இருக்கின்ற கிராமங்களுக்கெல்லாம், மின்சார வசதி ஏற்படும் அளவுக்கு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நமது மின்சார வாரியம் லாபத்தில் நடைபெறவில்லை. இருந்தாலும், தொழிலாளர்களிடத்தில் மிகவும் அக்கறை காட்டி, சட்டப்படி 4 சதவிகித போனஸ் கொடுக்க வேண்டும் என்று இருந்தாலும், 5 சதவிகிதம் போனஸாக கொடுக்க வேண்டும் என்று இன்றைக்கு ஆணை பிறப்பித்திருக்கிறது.

தொழிலாளர்கள் மத்தியிலும் நமது மின்சார வாரியம் நல்லபெயர் பெற்றிருக்கிறது. தொழிலாளர்களும் நல்ல முறையில் பணியாற்றுகிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது மின்சார விநியோகத்தில் பூர்த்தி பெற்ற மாவட்டங்களாக செங்கற்பட்டு, வட ஆற்காடு, நெல்லை, நீலகிரி இருப்பது போல மீதமுள்ள மாவட்டங்களிலும் கூடிய விரைவில் மின்சார விநியோகம் பூர்த்தியடைந்துவிடும் நிலையிருப்பதறிந்து மகிழ்ச்சியடைகிறேன். இந்த அரசையும், மின்சார வாரியத்தையும் பாராட்டுகிறேன்.

இந்த அரிய மின்சக்தியை நாம் சிக்கனமாக உபயோகப்படுத்த வேண்டும் என்பதை மக்களுக்கு வலியுறுத்தவேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதை சினிமா மூலமாகவும், விளம்பரத் துறை மூலமாகவும்,

[திரு. கு. காமாட்சி] [1971 டிசம்பர் 11

இப்படித்தான் மின்சாரத்தை உபயோகிக்கவேண்டுமென்று விளக்கிக் காட்ட வேண்டும். நாம் மின்சார உபயோகத்தைச் சுருக்கிக்கொண்டால்தான் வேளாண்மைக்கும், இன்னும் நல்ல தொழில் வளர்ச்சிக்கும் அதிக மின்சாரத்தை பயன்படுத்த முடியும் என்று தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. ரங்கநாதன்** : தலைவரவர்களே, 1971-72-ம் ஆண்டு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது நடைபெறும் விவாதத்தில் நான் கலந்து கொண்டு ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கின்ற நேரத்தில், மின்சார வாரியம் செயல்படுகின்ற தன்மையையும், அதன் வளர்ச்சியின் வேகத்தையும் அறிந்து உள்ளபடியே மின்சார வாரியத்தையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் மின்சாரத்துறை அமைச்சர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்லாயிரக்கணக்கான கிராமங்களுக்கு மின்சார இணைப்புக் கொடுத்தாகி விட்டது. மீதமுள்ள இடங்களுக்கும் 1972-க்குள் மின்சாரம் வழங்கப்பட்டு விடும் என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். இதையெல்லாம் பார்க்கின்ற நேரத்தில் 1967-க்கு முன்னால் மின்சாரம் இல்லாமல் பல தொழிற்சாலைகள் நடத்தமுடியாமல் இருந்தன. இன்றைய தினம் அந்தத் தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் தரப்பட்டு, நல்லமுறையில் இயங்கி வருகின்றன.

இந்த நேரத்தில் நகராட்சிகளுக்கு உட்பட்ட இடங்களில் மின்சாரம் விநியோகிக்கும் பொறுப்பை மின்சார இலாகாவே வைத்திருப்பதை அந்தந்த நகராட்சிகளுக்கே விட்டுவிட்டால் நல்லதென்று கருதுகிறேன். கோவை நகராட்சியின் நிர்வாகத்திலிருந்தும் மின்சார இலாகாவை தமிழக அரசு எடுத்துக்கொள்வதாக சொல்லப்படுகிறது. அப்படி எடுத்துக்கொள்ளக்கூடாது என்று நான் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். மின்சார இலாகா மூலம் கோவை நகராட்சிக்கு ஆண்டொன்றுக்கு 3 லட்சம் ரூபாய் லாபமாகக் கிடைக்கிறது. அதை வைத்து வளர்ந்து வருகின்ற கோவை நகர வளர்ச்சித் திட்டங்களைத் தீட்ட முடிகின்றது. அப்படிச் செய்தால் நகரில் வளர்ச்சி வேகமாக முன்னேறும். அதுபோலவே ஆங்காங்கே இருக்கின்ற பஞ்சாயத்து யூனியன்களுக்கு மின்சாரம் விநியோகிக்கும் அதிகாரத்தை அந்தந்த யூனியன்களுக்குக் கொடுத்துவிட்டால் யூனியனின் வளர்ச்சிக்கு ஏற்றவிதத்தில் அவர்கள் பயன்படுத்திக்கொள்வார்கள்.

கோவை மாவட்டத்திலுள்ள பவானிசாகர் மின்சாரம் வேளாண்மைக்குப் பயன்படுத்தப்படுவதில் தாமதம் ஏற்படுகிறது. விவசாயிகளுக்குப் பயன்படக் கூடிய வகையில் அதை வேகமாகச் செயல்படுமாறு செய்ய வேண்டுமென்று மின்சார வாரியத்தைக் கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் விவசாயப் பெருங்குடி மக்கள் மோட்டார் பம்புசெட்டுகள் வைத்து, வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்திற்கு வழி பிறக்கும். மோட்டார் வைப்பதற்கு முன்னால் மின்சார வாரியத்தை அணுகினால் 'மோட்டார் வைத்து விடுங்கள், இணைப்பு கொடுத்து விடுகிறோம்' என்று சொல்லுகிறார்கள். மோட்டார் பம்புசெட் வைத்துவிட்டு போய்க் கேட்டால், 'கொடுக்கிறோம், கொடுக்கிறோம்' என்று சொல்லுகிறார்கள்.



1971 டிசம்பர் 11] [திரு. கே. ரங்கநாதன்]

அடுத்து, கோவை நகராட்சியினுடைய அதிகார எல்லையிலுள்ள மின்சார இலாகாவில் உபரியாக 56 லட்சம் ரூபாய் இருக்கிறது. இதிலே ஒரு பகுதியையாவது அந்த நகர வளர்ச்சிக்குப் பயன்படுத்தலாம். அதாவது மின் இணைப்புக் கொடுப்பது, மற்றும் சிறு அபிவிருத்திகள் செய்வது போன்றவைகளுக்குப் பயன்படுத்தலாம். இப்படி அந்தந்தப் பகுதியிலேச் செயல்படுகின்ற மின்சாரப்பிரிவு அந்தந்தப் பகுதியின் வளர்ச்சியிலும் அக்கறைக் காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மின்சார இலாகாவுக்குத் தேவைப்படும் மூலப்பொருள்கள் நம்முடைய தமிழ்நாட்டிலே தயாரானாலும், அவைகளை வாங்காமல் வெளி மாநிலங்களிலிருந்துதான் மின்சார வாரியம் வாங்குகிறது. அந்த நிலையை மாற்றி இங்கே தயாரிக்கப்படும் மூலப்பொருள்களை வாங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. என். டென்னிஸ்** : தலைவரவர்களே, மின்சார வாரியத்தில் 1971-72-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது சில கருத்துகளை கூற முற்படுகிறேன். ஒரு நாட்டின் விவசாய வளர்ச்சிக்கு தொழில் வளர்ச்சிக்கு மின்சாரம் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது. தமிழ்நாட்டில் மின்சாரத்தில் முன்னால் ஏற்படுத்தப்பட்ட அஸ்திவாரம் தகர்த்த படவில்லையானாலும் செயல்முறைகளைப் பார்க்கும்போது அதன் வேகம் குறைந்துகொண்டே போகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

1969-70-ம் ஆண்டு நிர்வாக அறிக்கையைப் பார்க்கும்போது நாம் 1951-ம் ஆண்டு முதல் ஐந்தாண்டு திட்டத்தில் இரண்டரை லட்சம் கன்ஸ்யூமர்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது. 1966-ம் ஆண்டு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் கடைசியில் 13.59 லட்சம் கன்ஸ்யூமர்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது. 1951 முதல் 1966 வரையுள்ள 15 ஆண்டுகளில் ஏகதேசம் ஆறு மடங்கு எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. ஆனால் 1970-ம் ஆண்டைப் பார்க்கும்போது ஐந்து லட்சம் கன்ஸ்யூமர்களுக்கு தான் கூடியிருக்கிறது. 1966 முதல் 1970 வரை உள்ள காலத்தில் 1966-ல் இருந்ததைவிட ½ பங்கு மாத்திரம் எண்ணிக்கை கூடியிருக்கிறது. இதைப் பார்க்கும்போது வளர்ச்சியின் வேகம் குறைந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, அதே அறிக்கையில் 'பர் காபிட்டா கன்சம்ஷன்'. 1951-ம் ஆண்டு ஒரு நபருக்கு ஏகதேசம் பத்து யூனிட் இருப்பதைப் பார்க்கிறோம். ஆனால் 1966-ம் ஆண்டைப் பார்க்கும்போது ஏகதேசம் 100 யூனிட்டாக உயர்ந்திருக்கிறது. ஆகவே 15 ஆண்டுகளில் 10 மடங்கு அதிகரித்திருப்பதைப் பார்க்கிறோம். ஆனால் 1970-ம் ஆண்டைப் பார்க்கும்போது 120 யூனிட்டாகத் தான் உயர்ந்திருக்கிறது. 1966 முதல் 1970-ம் ஆண்டு காலத்தில் 1966-ல் இருந்ததைவிட நான்கில் ஒரு பங்குதான் அதிகரித்திருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, 1951-ம் ஆண்டு ஏகதேசம் 1,813 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், 15 ஆண்டுகளுக்குப் பிறகு ஏகதேசம் 22,000 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அதாவது 15 ஆண்டுகளில் 12 மடங்கு அதிகமாக மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அதோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இப்போது மின்சார

வளர்ச்சியின் வேகம் குறைந்திருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன். ஆகவேதான், முதல் இடத்தில் இருந்த தமிழ்நாடு அந்த இடத்தை ஹரியானாவுக்குப் பறிகொடுத்துவிட்டது. ஹரியானா முதலிடத்தைத் தட்டிக்கொண்டு போய்விட்டது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

1967-ஆம் ஆண்டிற்குப் பின் மின்சார உற்பத்திக்குப் பெரிய திட்டங்கள் ஏற்பட்டதாகக் கண்டுகொள்ள முடியாது. பெரிய திட்டங்களுக்கு வாய்ப்பு இருந்தும் பெரிய திட்டங்களை ஏற்று நடத்தியிருப்பதாக நாம் கண்டுகொள்ள முடியவில்லை. பொதுவாக இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளிவிவரங்களைப் பார்க்கிறபோது மிகப் பெருமைப்படக்கூடியதாக இருக்கிறது. ஆனால் நடைமுறையில் பார்க்கும்போது பொதுமக்கள் பல்வேறான தொல்லைகளை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

முதலாவதாக மின்சார இணைப்புக் கொடுக்க காலதாமதம் ஆகிறது என்று எடுத்துக் கூற விரும்புகிறேன். இணைப்புக் கொடுப்பதற்கு அனுமதி பெற காலதாமதம் ஆகிறது. பிறகு அப்ளிகேஷன் கொடுக்க காலதாமதம் ஆகிறது. பிறகு எஸ்டிமேட் ப்ரிபேர் செய்ய காலதாமதம் ஆகிறது. எஸ்டிமேட் அப்ரூவலுக்கு காலதாமதம் ஆகிறது. வொர்க் ஆர்டர் கொடுக்க காலதாமதம் ஆகிறது. வொர்க் ஆர்டர் கொடுத்துவிட்டு மீட்டர் சப்ளை இல்லை, மெட்டீரியல் இல்லை, ஒயர் இல்லை என்று காலதாமதம் ஆகிறது. விவசாயிகள் [illegible] பம்புசெட்டுகள் வைக்கிறார்கள். அதற்காக காத்திருக்கிறார்கள். பல தொல்லைகள் ஆகியும் கனெக்ஷன் கொடுக்கப்படாமல் இருக்கிறது. இன்னும் பங்கிய செவிச்சத்தை மாற்றவோ வோல்டேஜ் கூடுதல் கொடுக்கப்பட வேண்டும். வேண்டிய இடங்களில் ட்ரான்ஸ்பாரங்கள் அதிகம் வைக்க வேண்டும்.

இன்னும் லோ வோல்டேஜ் என்ற குறைபாடு இருக்கிறது. அதனைக் கவனிப்பதில்லை. ட்ரான்ஸ்பார்மர்கள் போதுமான அளவில் இல்லை. போதாது. இதற்கு ஒரு காரணமாக அது இருக்கிறது.

அடுத்து, முக்கியமாகச் சொல்ல வேண்டியது தெருவிளக்குகள் சரியாக எரிவதில்லை. ப்யூஸ் போய்விட்டால் மாற்றுவதற்கு ஆள் இல்லை. பஞ்சாயத்துகள் நூறு பல்புகள் வேண்டுமென்று கேட்டால் 25 பல்புகள் தான் கொடுக்கப்படுகிறது என்கிறார்கள். மீதி பல்புகள் ஏன் மாற்றவில்லை என்று கேட்டால் பல்புகளே இல்லை என்கிறார்கள். தேவையான பல்புகள் வழங்கப்பட வேண்டும். பஞ்சாயத்து தலைவர்களே பல்புகளை வாங்கிப் போட்டுக்கொள்ளலாம் என்று அதிகாரம் கொடுத்தால் பல்புகள் [illegible] விலை மார்க்கெட் விலை அதிகமாக இருக்கிறது. மார்க்கெட் விலைக்கு ஏற்ப இவர்கள் பணம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் கை தட்டி இவ்வளவு அவர்கள் வாங்கி அவ்வப்போது போட முடியும்.

அடுத்து, சரியாக விளக்குகளுக்குப் பஞ்சாயத்துகள் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கிறது. இன்னும் ப்யூஸான பல்புகளைப் போட்டுவைத்து மாட்டி விடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆகவே பஞ்சாயத்துத் தலைவர்கள் நிர்வாகிகள் முன்னிலையில் அந்த பல்புகள் மாற்றப்பட வேண்டும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



இன்னும் பிற்பட்டவர்கள் வாழ்கின்ற இடங்களுக்கு மின்சார இணைப்புக் கொடுப்பதில் காலதாமதம் ஆகிறது. 1–8–1971 கணக்குப்படி கன்னியாகுமரி மாவட்டத்தில் 325 ஹரிஜன காலனிகள் இருக்கின்றன. இன்னும் 68 ஹரிஜன குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. எல்லா ஹரிஜன காலனிகளுக்கும் மின்சார வசதி அளிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்திற்குத் தனியாக ஒரு எஸ்.இ. நியமிக்கப்படவேண்டும். இவைகள் முறையாகக் கவனிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

THIRU A. PARANDHAMAN : Sir, at the outset I am thankful to you for having given me an opportunity to take part in the discussion that is going on on the Electricity Board Budget. That 5,862 villages were given power connection during 1970–71 bringing the total to 42,229 is a spectacular achievement of our Dr. Kalaignar's Government. The interest and curiosity evinced by Dr. Kalaignar has paved the way for this achievement. That 59,268 pumpsets were effected service connection during 1970–71 bringing the total to 530,044 is something which has really won the national recognition and admiration.

Though surplus power is available in the neighbouring States, I think we cannot continue to depend on that, as a day may arise when they may be in need of the power supply they have. Even otherwise, seeing the Cauveri dispute we have lost all hopes in humanity. So, Sir, as far as possible I request the Hon. Minister to find out ways and means to see that the schemes that are in store with the Department are being implemented immediately.

I request that our Government should urge the Central Government to give their concurrence to start a Power House at Neyveli which can generate 600 M.W. and a thermal Power Station which can generate 600 M.W. at Tuticorin. Our Government can kindly urge the Central Government to give their concurrence, so that we can attain self-sufficiency.

Lastly, Sir, there is a great anomaly in the co-ordination of the Electricity Department and the Municipalities. So far as Municipalities are concerned, the Electricity Department effects service connection to the newly started industries without verifying the clearance certificate issued by the Municipalities and on a later date the Department has to incur a loss on establishment. So, I request the Government and the Hon. Minister to take effective steps to see that these defects are remedied.

The prevailing acute shortage of clamps, fuse wire and other things may kindly be considered and I request the Hon. Minister to take note of this and to remedy these defects.

With these words, I conclude my speech.

**திரு. மு. சத்தியமூர்த்தி:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்வாரியத்தின் 1970–71-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். எங்களுடைய புதுக்கோட்டைப் பகுதியானது தமிழகத்திலே ரொம்பப் பின்தங்கிய பகுதியாகும். அந்தப் பகுதியை இன்று பார்க்கப்போனால் முக்கால்வாசி கிராமங்கள் இன்னும் மின்சார வசதி இல்லாது இருக்கிறது. மின்சாரம் என்ன என்பதைக்கூட மக்கள் தெரியாத நிலையில் இருக்கிறார்கள். அதைப் போக்க புதுக்கோட்டைப் பகுதிக்கு முக்கியத்துவம் கொடுத்து அங்கே பூராவாக மின்சாரம் வருவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலும் என்னுடைய தொகுதியான குளத்தூர் தாலுக்கா மிகவும் பிற்போக்கான பகுதி. என்னுடைய தொகுதியில் அன்னவாசல், திருவரங்குளம், குன்னண்டார்கோவில் என்ற 3 பஞ்சாயத்து யூனியன்கள் வருகின்றன. அங்கே இன்னும் மின்சார வசதி கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டு எங்கள் பகுதிக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பல கிராமங்களிலே இன்றைக்கு விவசாயிகள் பம்பு செட்டுகளை வாங்கி வைத்துக்கொண்டு, வட்டி கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இதைக்கருத்திலே கொண்டு உடனடியாக அவர்களுக்கு மின்சார கனெக்ஷன் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். என்னுடைய தொகுதியில் உள்ள ஒரு
முற்பகல் 1-30 கிராமத்தில் நடந்த உண்மையை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கிள்ளனூர் என்கிற கிராமத்தில் 20 பேர் பம்பு செட் மூன்று வருடத்திற்கு முன்பு வாங்கினார்கள். அவர்களுக்கு மின் இணைப்புத் தரப்படவில்லை. அவர்கள் பம்ப் செட்டை வாங்கி வைத்துக்கொண்டு அநியாயமாக வட்டி கட்டிக்கொண்டு வருகிறார்கள். இம்மாதிரியாக இருப்பவைகளையெல்லாம் நீங்கள் நல்ல முறையில் கவனித்து, நடவடிக்கை எடுத்துக்கொள்வதில் முதலிடம் கொடுக்க வேண்டும்.

கிராமங்கள் தோறும் மின்விளக்குகள் போட வேண்டும், அவை நல்ல முறையில் செயல்பட வேண்டும், 1972-க்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் அளிக்கப்பட வேண்டும், மின்வசதி இல்லாத கிராமமே இல்லை என்கிற நிலைமையை உண்டுபண்ண வேண்டும் என்பதற்காக நமது அரசு நல்ல திட்டத்தைத் தீட்டிக்கொண்டிருப்பதை வரவேற்கிறேன். அதே நேரத்தில் போட்டிருக்கின்ற மின்விளக்குகள் சரியாக எரிகிறதா என்பதையும் கவனிக்க வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்தப் பகுதியில் உள்ள கிராமங்களில் பஞ்சாயத்து யூனியன் சேர்மனாக நான் தொண்டு செய்கிற காரணத்தால், கிராமங்களிலுள்ள கஷ்டநஷ்டங்களை இங்கே சொல்ல விரும்புகிறேன். அதாவது, கிராமங்களிலே போட்டிருக்கக்கூடிய விளக்குகள் சரியாக எரிவது இல்லை. மின்சார இலாகாவைக் கேட்டால், எங்களுக்கு பல்புகள் சரிவர சப்ளை கிடையாது என்கிறார்கள். வெளிமார்க்கெட்டில் நீங்களே வாங்கிப் போட்டுக்கொள்ளுங்கள் என்கிறார்கள். அப்படி நாம் வெளி மார்க்கெட்டில் வாங்குகிறபோது ஒரு பல்பு விலை இரண்டரை ரூபாய் ஆகிறது. அந்த பல்பு வாங்கியதற்கான ரசீதைக் கொண்டுவந்து மின்சார இலாகாவில் கொடுத்தால், அவர்கள் ஒரு பல்புக்கு ஒரு ரூபாய் நாற்பது காசுதான் தருகிறார்கள். மீதி ஒரு ரூபாய் பத்து காசு நமக்கு நஷ்டம் ஏற்படுகிறது. இந்த நஷ்டத்தை எந்தவகையில் ஈடுகட்டுவது? பல்புகள் எரியாவிட்டால் பஞ்சாயத்தே வாங்கிப் போட்டுக்கொள்வதற்கும், அவற்றிற்கான தொகை விலையை அந்தக் கிராமப் பஞ்



சாயத்து கணக்கில் எழுதுவதற்கும் அனுமதி அளிக்க வேண்டும். அப்படியில்லாமல் கிராமப் பஞ்சாயத்து நஷ்டப்பட வைக்கக்கூடாது என்பதைக் கேட்டுக்கொண்டு, இம்மாதிரியான குறைபாடுகளைக் களைய உடனுக்குடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு, இந்த வாரியம் செம்மையாகப் பணிபுரிய தக்க கவனம் செலுத்த வேண்டுமென்றுகூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. மா. வெ. நாராயணசாமி:** சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மின்சார வாரியத்தின் 1971–72-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, நம்முடைய தமிழக அரசின் தீவிர திட்டத்தின் அடிப்படையில் மின்சார வாரியத்தின் வாயிலாக 1972-க்குள்ளாக தமிழ்நாடு பூராவும் மின்சார வசதி இல்லாத கிராமமே இல்லையென்று சொல்லத்தக்க அளவிலே மிகத் திறம்பட, அந்த லட்சிய நோக்கை அடைவதற்காகப் பணியாற்றிக் கொண்டு வருவதை நாம் அனைவரும் பாராட்டத்தான் வேண்டும். இப்போது உண்மையான மக்களாட்சி நாட்டிலே நடைபெற்றுக்கொண்டு வருகிறது என்பதை மனித சமுதாயத்தின் அத்தியாவசியத் தேவைகளில் மின்சாரம் ஒன்று என்பதை உணர்ந்து, அதை மக்களுடைய நன்மைக்காக பரவலாகக் கிடைத்திடச் செய்ய வேண்டுமென்கிற குறிக்கோளோடு, இந்த அரசு பாடுபட்டுக்கொண்டு வருகிறது.

ஆனால், அதே நேரத்தில் மின்சார வாரியத்திலே, பணிகள் அனைவரும் எதிர்பார்க்கக்கூடிய முறையிலே, மக்களுடைய விருப்பத்தை நிறைவேற்றக்கூடிய முறையிலே துரிதமாக, பணியாளர்களுக்கு மிகத் திருப்தி அளிக்கக்கூடிய வகையில் இருக்கிறதா என்றால் இல்லையென்று நிச்சயமாகச் சொல்லித்தானாக வேண்டும். பல்வேறு பணிகளைக் கொஞ்சம் விரைவாக முடித்துவிட்டால் சிறப்பாக இருக்கும். இந்த மன்றத்தில் உள்ள உறுப்பினர்கள் குறைபாடுகளையெல்லாம் சுட்டிக்காட்டிப் பேசியிருக்கிறார்கள். நானும் மீண்டும் அவற்றையே சொல்லி, நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. மின்சார வாரியத்திலே பணிகள் செம்மையாக நடைபெறவில்லை, விளக்குகள் எரியவில்லை, சரியான கண்காணிப்பு இல்லை. இவற்றையெல்லாம் நாம் தவிர்க்க வேண்டும்.

அடுத்தபடியாக, ஆங்காங்கே தொழிற்சாலைகளைத் துவக்குகின்ற நேரத்தில் மின்சார வாரியம் மின்சாரம் வழங்குகிறார்கள். அப்படிச் செய்யும்போது நகராட்சி மன்றங்கள் இருக்கக்கூடிய நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தொழிற்சாலையைத் துவக்கும்போது, நகராட்சி அனுமதி பெற்றுத்தான் அது துவங்கப்படுகிறதா என்பதைப்பற்றிக் கவலை கொள்ளாமல், மின்சார வாரியம் நேரடியாக மின்சாரத்தை வழங்கி விடுகின்ற நிலைமை இருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நகராட்சிகளுக்கு என்று 'டவுன் ப்ளானிங் ஸ்கீம்' என்பதாக ஒரு திட்டம் இருக்கிறது. நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகள் பல்வேறு நோக்கங்களுக்காகப் பிரிக்கப்படுகிறது. ஒன்று, குடியிருப்புப் பகுதி—ரெஸிடென்ஷியல் ஏரியா—மற்றொன்று, கடைகள்

[திரு. மா. வெ. நாராயணசாமி] [1971 டிசம்பர் 11

வைப்பதற்கான பகுதி—'ஷாப்ஸ் அண்ட் கமர்ஷியல் பர்பஸஸ்'—இந்தப் பகுதியில் 15 ஹார்ஸ் பவர்ஸ், 20 ஹார்ஸ் பவர்ஸ் உபயோகப்படுத்தினால் போதும். கடைகள், வர்த்தகத்திற்கென்று சில இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. சில இடங்கள் வரையறுக்கப்பட்ட தொழிற்சாலைப் பகுதி—'கன்ட்ரோல்டு இண்டஸ்ட்ரியல் ஏரியாஸ்'—என்ற முறையில் அறிவிப்பு செய்யப்படுகின்றன. சில இடங்கள் நேரடியாக இண்டஸ்ட்ரியல் ஏரியா என்று வரையறுக்கப்பட்டு விடுகின்றன. இப்படி பல்வேறு விதமாக நகராட்சி எல்லைக்குள் இருக்கும் பகுதிகள் பிரிக்கப்படுகின்றன.

சாதாரண தொழிற்சாலையைத் துவங்க வேண்டுமென்று, ஒருசிலர் அதற்கென ஒதுக்கப்பட்ட பகுதிகளில் தொழிற்சாலையைத் துவங்காமல், தான் நிலத்தை வாங்கிவிட்டோம் என்ற காரணத்தினால் அங்கே தொழிற்சாலையைத் துவக்கிவிடுகிறார்கள். தங்களுடைய செல்வாக்கின் காரணமாகவும், மற்ற வழிகளிலும் அத்தொழிற்சாலைக்குத் தேவையான மின்சாரத்தையும் பெற்றுவிடுகின்ற நிலைமை இருக்கிறது. இது மிகவும் வருந்தத்தக்கதாகும். நகராட்சிப் பகுதிகளில் தொழிற்சாலைப் பகுதியில் தொழிற்சாலைகளைத் துவக்கினால்தான் அதற்குரிய அனுமதி தருகிறது. நகராட்சியின் அனுமதி பெற்ற தொழிற்சாலைகளுக்குத்தான் மின்சார வாரியம் மின் இணைப்புத் தர வேண்டும். முனிசிபல் லைசென்ஸைப்பற்றி மின்சார வாரியம் கவலைப்படுவதில்லை, மின்சார இணைப்புக் கொடுத்துவிடுகிறது. நகராட்சியின் அனுமதி இல்லாமலேயே தொழிற்சாலைகள் வேலையைத் துவக்கிவிடுகின்றன. இதனால் பலவிதமான சட்டச் சிக்கல்கள் எல்லாம் உருவாகின்றன. இதுபற்றி நானேகூட தக்க அதிகாரிகளிடத்தில் கேட்டேன். 'எங்களுக்குச் சட்டபூர்வமான நிபந்தனை இல்லை' என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சொல்கிறார்கள். நகராட்சிகள் சட்டம், நகரமைப்புச் சட்டம் என்று இரண்டு சட்டங்கள் இருக்கின்றன. இந்த இரண்டு சட்டங்களுக்கு முரண்படாத வகையில் தொழிற்சாலை அமைய வேண்டும். நகராட்சி சட்டங்களுக்கு முரண் இல்லாத வகையில் நாம் மின்சார வாரியத்தின் சட்டங்களை மாற்ற வேண்டும். அரசு இதை கவனத்தில் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியான திருவொற்றியூர் பகுதியில் நிறைய தொழிற்சாலைகள் இருக்கின்றன. அந்தத் தொகுதியில் எண்ணூர் அனல் மின்நிலையம் இருக்கிறது. என்னுடைய தொகுதியில் மின்வாரியத் தொழிலாளர்கள் நிறைய இருக்கிறார்கள். அனல் மின்நிலையத்தில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் பல ஆண்டுக்காலமாக தற்காலிகமாகவே இருக்கிறார்கள். இது தொழிலாளர்களின் அரசு என்று நாம் பகிரங்கமாகச்சொல்லிக் கொண்டிருக்கிறோம். இந்த அரசின்மீது ஏழை பாட்டாளி மக்கள் நல்ல நம்பிக்கையை வைத்திருக்கிறார்கள். ஏழை எளிய பாட்டாளி மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட அரசு இது. தனியார் துறையில் உள்ள தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்கள், இத்தனை ஆண்டுக்காலம் வரைக்கும்தான் தற்காலிகமாக இருக்க வேண்டும், பின்னர் அவர்களை நிரந்தரமாக்க வேண்டும். தொழிலாளர்களுக்குத் தகுந்த முறையில் பிரமோஷன் எல்லாம் கொடுக்க வேண்டும் என்று நாம் தனியார்த் துறைத் தொழிற்சாலை முதலாளிகளுக்கு உபதேசம் செய்கிறோம். அரசுத் துறையில் உள்ள மின்சார வாரியத்திலே தற்காலிகமாக



1971 டிசம்பர் 11] [திரு. மா. வெ. நாராயணசாமி]

நிறைய பேர் இருக்கிறார்கள். குறிப்பிட்ட காலம் முடிந்தவுடன் அந்தத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டும். அரசு தனிப்பட்ட முதலாளி மனப்பான்மையில் இருக்கக் கூடாது. மேலும், மின்சார வாரியத்திலுள்ள அதிகாரிகள் பழைய முறையிலேயே, பழைய போக்கிலேயே இருந்து வருகிறார்கள். அவர்கள் முதலாளித்துவ தோரணையில் நடந்துகொள்கிறார்கள். அதையெல்லாம் நாம் திருத்தியாகவேண்டும்.

அதற்காகத்தான் நான் சொல்கிறேன், குறிப்பிட்ட காலம் முடிந்தபிறகு மின்சார ஊழியர்களை நிரந்தரம் செய்யவேண்டும், அவர்களுக்கு முறையான சம்பள விகிதங்களை ஏற்படுத்திக்கொடுத்து அவர்களுடைய புரமோஷனுக்கு வாய்ப்புகள் தரவேண்டும். அப்படிச் செய்தால்தான் அவர்கள் தங்களுடைய உண்மையான உழைப்பினை நல்குவதற்கு வாய்ப்பு ஏற்படும். அவர்கள் அப்படிப்பட்ட முறைகளில் இன்சென்டிவ் பெறக்கூடிய முறையில் இம்ப்ரூவ்மென்ட் இன் சர்வீஸ் கண்டிஷன்ஸ் என்ற வகையிலே ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த நிதிநிலை அறிக்கை நல்ல முறையிலே இருந்தாலும் இந்த மன்றத்திலே இதையொட்டி எடுத்துவைக்கப்படுகின்ற கருத்துக்களை நல்ல முறையிலே பரிசீலனை செய்து சில குறைபாடுகளையும் போக்குவதற்கு நம்முடைய அரசு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. எம். பன்னீர் செல்வம்:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், எதிர்க் கட்சி வரிசையிலே யாரும் இல்லாத காரணத்தினாலே அவர்கள் வெளிநடப்புச் செய்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. இருக்கவேண்டுமென்று விதியில்லை, இருப்பது நல்லது தான். டாக்டர் ஹாண்டே அவர்கள் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இங்கேதான் இருக்கிறோம் . . .

**திரு. பெ. மலைச்சாமி:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், அங்கத்தினர் அவர்கள் இங்கே இருந்து பேசலாமா?

**திரு. வீ. கார்த்திகேயன்:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1971-72-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையையொட்டி எனது ஒரு சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய அரசு வேளாண்மை, தொழில் துறை ஆகியவற்றின் வளர்ச்சிக்காக மின் துறை உற்பத்திக்குப் பல கோடி ரூபாய்களை ஒதுக்கியுள்ளது. அதன் காரணமாக பல மின்சார நிலையங்களும் அனல் மின்சார நிலையங்களும் நிறுவி அதிக அளவில் மின்சாரத்தை உற்பத்தி செய்து வேளாண்மை, தொழில் வளர்ச்சிக்கு உதவியுள்ளதைப் பார்க்கும் பொழுது இதைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

குறிப்பாக குறுகிய காலத்திலே விவசாயிகளின் நலன் கருதி 1971-ம் ஆண்டு மார்ச் மாதம் முடிய சுமார் 5 லட்சத்து 30 ஆயிரம் மின் மோட்டார்களுக்கு மின்னிணைப்புக் கொடுக்கப்பட்டது, மேலும் ஏப்ரல் முடிய 11,900 அரிசனக் குடியிருப்புகளுக்கு மின்வசதி அளிக்கப்பட்டிருப்பதையெல்லாம் பார்க்கும் பொழுது இந்த அரசை யாரும் பாராட்டாமல் இருக்கமுடியாது.

அடுத்து, பெரிய அளவிலே எங்குமே மின்சாரத்தைத் தடையின்றிக் கொண்டுவர 7½ சதவிதம் வட்டியிலே 375 லட்சம் ரூபாய் மதிப்புள்ள மின்சார வசதிப் பத்திரங்கள் தனிநபர்களிடம் வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய எண்ணம் 1972-க்குள் எல்லா கிராமங்களுக்கும் முழுமையாக மின்வசதி அளித்து விடவேண்டுமென்பதாகும். 1972-க்குள் 4 மாவட்டங்களுக்கு முழுமையாக மின்சாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. மீதியுள்ள எல்லா மாவட்டங்களிலுள்ள கிராமங்களுக்கும் மின்வசதி கிடைக்கச் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இது பாராட்டத் தக்கதாகும்.

மாண்புமிகு டாக்டர் முதல்வர் அவர்கள் மின்வாரியம் லாபகரமாக நடைபெறாமல் இருந்தும் பணியாளர்களின் நலனைக் கருதி அவர்களுக்கு 5 சதவிதம் போனஸ் கொடுக்க இசைந்துள்ளதைப் பார்க்கும்பொழுது தமிழக அரசை மனதார வாழ்த்தாமல் இருக்கமுடியாது.

என்னுடைய தொகுதியில் உள்ள சில தேவைகளைப்பற்றி நான் விளக்க விரும்புகிறேன்.

எனது பகுதியிலே தெருவிளக்குகள் தீய்ந்துவிட்டால் மாற்றாது விட்டுவிடுவதால் மக்கள் பெரிதும் சிரமப்படுகிறார்கள். எனவே தீய்ந்து போன பல்புகளை அவர்கள் மாற்றிவிட ஏற்பாடுசெய்யவேண்டும். தீய்ந்து போன பல்புகளை அவர்கள் மாற்றாவிட்டாலும் அந்த ஊரில் உள்ள பஞ்சாயத்து தலைவருக்குப் பொறுப்புக் கொடுத்துவிட்டால் சொந்தச் செலவிலேயே அவற்றை வாங்கிப் போடுவதற்காவது அனுமதி அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இராதாபுரம் தொகுதியில் சில பகுதிகளிலே டிரான்ஸ்பார்மர்களில் லோட் போதுமான அளவு இல்லாத காரணத்தினாலே விவசாயிகளுக்கு மின் வசதி கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். 75 கே.வி.ஏ. அல்லது 100 கே.வி.ஏ. என்று இருப்பது போதாது. அவற்றை மாற்றி 100 கே.வி.ஏ. அல்லது 150 கே.வி.ஏ. கொண்ட டிரான்ஸ்பார்மர்களைப் போட்டால்தான் விவசாயிகளுக்கு நன்மைகள் கிடைக்கும். நான் மின்வாரியத் தலைமை அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய நெல்லை மாவட்டத்தில் தென்பகுதியிலே இருக்கக்கூடிய ராதாபுரத்திலே அவ்வாறு டிரான்ஸ்பார்மர்களை விநியோகம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, என்னுடைய பகுதியில் உள்ளவர்கள் விவசாயத்தை நம்பி வாழ்கின்றவர்கள். அங்குள்ளவர்களுக்கு கிணறு வெட்டினால் அந்தக் கிணறு தூரமாக இருந்தால் மின்வசதி செய்து கொடுத்தால் அது ரெமுனரேடிவ் ஆக இருக்காது என்ற காரணத்தினால் மின்வசதி கொடுப்பதில்லை. எனவே தூரத்தில் உள்ள கிணறுகளாக இருந்தாலும்கூட ஏழை விவசாயிகள் நலனைக் கருதி அப்படிப்பட்ட கிணறுகளுக்கும் மின் வசதி செய்துகொடுக்க வேண்டும்.





நாங்குனேரி வட்டத்தில் உள்ள திசையன்விளை பெரிய கிராமம், அதைச் சுற்றி செக்ஷன் ஆபீஸ்கள் இருக்கின்றன. எனவே திசையன்விளையில் ஒரு கிளைக் கணக்காயர் அலுவலகத்தை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு பொதுவாக ஏழை விவசாயிகளுடைய நலனைக் கருதிச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற அறிக்கை இது என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

திரு. கி. ச. ஆ. சிவப்பிரகாசம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-72-ம் ஆண்டுக்கான மின்சார நிதிநிலை அறிக்கையைக் குறித்து இரண்டொரு கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன்.

இன்றைக்குத் தமிழ்நாடு மின்சார வளர்ச்சியிலே தன்னிறைவு பெற்ற இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளதால் நாம் எல்லோரும் மகிழ்ச்சியடையலாம். இருந்தபோதிலும் கிராமப்புறங்களிலே விவசாயத் துறைக்கும் தொழில் துறைக்கும் மின்சாரம் வழங்குவதற்குக் காலதாமதம் ஏற்பட்டுக்கொண்டு இருக்கிறது. இதைக் கவனிக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் கிராமப்புறங்களிலே டூரிங் சினிமாக்கள், தியேட்டர்கள் ஆரம்பிக்கும்பொழுது எலக்டிரிசிடி இன்ஸ்பெக்ஷன் என்று வருகிறார்கள். அவர்கள் வந்து பார்த்துவிட்டு எந்தவிதமான குறைபாடுகளும் இல்லாவிட்டாலும்கூட பார்மாலிடி என்ற முறையிலே ஏதாவது எழுதிவைத்துவிட்டுப் போகிறார்கள். அதன்காரணமாக 20 ஆயிரம் 30 ஆயிரம் ரூபாய் அளவுக்குப் பணம் போட்டவர்கள் காலதாமதம் ஏற்படுவதன்காரணமாக அவதிப்படக்கூடிய நிலைமை இருப்பதால் அதையும் கவனிக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பஞ்சாயத்துக்களிலுள்ள தெருவிளக்குகள் என்னுடைய பகுதியிலே பாதிக்குமேல் எரியாவிட்டாலும் கூட அதற்கும் சேர்த்துப் பணம் கட்ட வேண்டியிருக்கிறது. அநேகப் பஞ்சாயத்துக்களில் நிதிப் பற்றாக்குறை இருக்கிறது. எனவே பஞ்சாயத்துக்களுக்கு இலவசமாக தெருவிளக்குகள் எரிவதற்கு அரசு அனுமதி கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் அடிக்கடி மின்சாரத் தொடர்ப்பு அற்றுப் போய்விடுகிறது. ஏன் என்று கேட்டால் டிரான்ஸ்பார்மர்களில் கெப்பாசிடி போதாது என்று சொல்கிறார்கள். எனவே அவற்றையெல்லாம் நல்ல முறையிலே மாற்ற வேண்டும்.

மழைக்காலங்களிலே மின்சாரத் தொடர்பு விடுகளிலே கட் ஆகி விடுகிறது. கேட்டால் பழைய காலத்திலே போட்டது. வேண்டுமானால் நீங்கள் தேவையானவற்றை வாங்கிக் கொடுங்கள். போட்டுத் தருகிறோம் என்று சொல்கிறார்கள். அப்படியில்லாமல் அவர்களுக்கு வேண்டிய வையர், மோட்டார், டிரான்ஸ்பார்மர், பல்புகள் முதலியவற்றை மாற்றித்தரவேண்டும்.

கிராமங்களில் மின்சாரத் தொடர்பு அற்றுப்போய்விட்டால் லயன் மேன்கள் 7, 8 மைல்கள் சைக்கிளில் ஜே.ஈ. ஆபிசிலிருந்து செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, அவர்களுக்கு ஜே.ஈ. ஆபீஸ்களுக்கு லயன்மென்களோடு தொடர்பு கொள்வதற்கு வசதியாக டெலிபோன் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிராமங்களில் உள்ள லயன்மேன்கள் தங்குவதற்கு மின்சார வாரியத்தின்மூலம் இலவசமாக வீடுகளைக் கட்டிக்கொடுக்கும்படி. இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வாரியத்தில் டெம்பரரி ஒர்க்கர்ஸ் என்ற வகையில் கிட்டத்தட்ட 25,000 பேர், 30,000 பேர் இருப்பதாக அறிகிறேன். அவர்களெல்லாம் இரண்டு வருஷங்கள் இதிலே வேலை செய்திருந்தால் அவர்களுக்கு பர்மனென்ட் வேலை வாய்ப்புகள் கொடுக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஒர்க்கர்ஸ்லுக்கு 5 சதவிகிதம் போனஸ் கொடுப்பதாகத் தெரிகிறது. இந்த இலாக்காவில் வேலை பார்ப்பவர்களுக்கு 8 சதவிகிதம் போனஸ் என்று ஆக்க இந்த அரசு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கூறி, இந்தச் சந்தர்ப்பத்தை அளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: பேரவை மாற்றுத் தலைவரவர்களே, இன்றையதினம் 1970–71-ம் ஆண்டுக்கான இடைக்கால மின்சார வாரிய மானியக் கோரிக்கைகளையும், 1971–72-ம் ஆண்டுக்கான மின்சார வாரிய மானியக் கோரிக்கையையும் ஆதரித்து நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றையதினம் தமிழகத்திலேயுள்ள எல்லாக் கிராமங்களிலும் மிகவேகமாக மின்சாரம் பரவி வருகிறது. உலகத்திலே உள்ள இருள் எப்படி உதயசூரியன் உதித்தவுடனே அகன்று ஒளி வீசுகிறதோ அதைப்போல் தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டு திட்டமிட்டு செயல்பட்டு கிராமப் பகுதிகளிலே மின்சாரம் உடனடியாகக் கிடைக்க ஆவன செய்வதை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதே நேரத்தில் விவசாயத்துறையை எடுத்துக்கொண்டால், விவசாயிகள் கிணறு வெட்டவும், பம்பு செட்டுகள் வைக்கவும் பல்லாயிரக்கணக்கான பணத்தைக் கடனாகப்பெற்று விவசாயத்திலே ஈடுபடுகிறார்கள். கிணற்றை வெட்டி பம்பு செட்டு அமைத்து மின்சாரம் கேட்டால் ஒருசில பகுதிகளிலே மின்சாரம் கிடைக்கவில்லை. ஒரு வருஷம், இரண்டு வருஷமாக மின்சாரம் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். இப்படி ஏன் மின்சாரம் கிடைக்காமல் இருக்கின்றது என்று கேட்டால் எங்களுக்கு ஒன்றும் தெரியாது என்று விவசாயிகள் சொல்கிறார்கள். அதிகாரிகளைக் கேட்டால், அந்தப் பகுதியிலே மின்சாரம் கொடுக்க வேண்டுமென்றால் புதிய திட்டத்தைச் செயல்படுத்த வேண்டியதாகயிருக்கிறது, அப்படிச் செயல்படுத்தினால் செலவாகக்கூடிய பணத்தில் பத்தில் ஒரு பாகம் ஒரு வருஷத்திலே வருமானம் வரவேண்டும்,





அப்படி வந்தால்தான் நாங்கள் அந்த லயனிலே வேலை செய்ய முடியுமென்று அதிகாரிகள் சொல்கிறார்கள். அதன் காரணமாகப் பல ஆயிரக்கணக்கான பணத்தைக் கடனாகப்பெற்றும் அவர்களுக்கு மின்சாரம் கிடைக்காத காரணத்தினால் விவசாயம் இல்லாமலே கஷ்டப்பட வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆகவே குறைந்தபட்சம் 5 சதவிகிதம் வருமானம் இருந்தால் போதும் என்ற ஒரு நியதியை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மின்சாரக் கோளாறு திடீரென்று ஏற்பட்டுவிட்டால் சிலவர்களிலே கிராமத்திலே உள்ளவர்கள் அந்த மின்சார வாரிய ஆபீசிற்குச் சென்று சொல்ல வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, டெலிபோன் வசதியுள்ள கிராமங்களில் அம்மாதிரியான மின்சார வாரிய காரியாலயங்களுக்கு இந்த டெலிபோன் வசதியை ஏற்படுத்திக்கொடுத்தால், உடனடியாக மக்கள் டெலிபோன் மூலம் வசதியுள்ளவர்கள் ஏற்பாடு செய்து மின்சாரத்தைப் பெறுவதற்கு ஏதுவாகயிருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஏதாவதொரு கோரிக்கை, வீட்டிற்கோ அல்லது பம்ப் செட்டிற்கோ மின்சாரம் வேண்டுமென்று விண்ணப்பம் கொடுத்தால் சரியான பதிலை அதிகாரிகள் கொடுப்பதில்லை. ஆகவே, இதற்காக ஒரு வழிமுறை வகுக்கவேண்டும். விண்ணப்பம் கொடுத்த ஒரு மாதத்திற்குள் அந்த விண்ணப்பதாரர்களுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை என்றால் ஏன் மின்சாரம் கிடைக்கவில்லை என்பதற்கான காரணங்களை எழுத்துமூலம் விண்ணப்பதாரர்களுக்கு அளிக்க ஏற்பாடு செய்தால் உடனடியாக அதற்கான வேலைகளைச் செய்ய ஏதுவாகயிருக்கும்.

இன்றைக்கு மின்சார வாரியம் நம் நாட்டிலேயுள்ள எல்லாக் கிராமங்களுக்கும், எல்லா பொதுமக்களுக்கும் வசதி செய்வதை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. தோப்பூர் திருவெங்கடம்: பேரவை மாற்றுத் தலைவரவர்களே, 1971-72-ம் ஆண்டுக்கான மின்வாரியத்தின் கீழ் பேச அனுமதி வழங்கியமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மின்சாரம் இல்லையென்றால் இன்றையதினம் எந்த ஒரு வேலையும் நடைபெறாது என்ற நிலையிருக்கிறது. அது தொழிற்புரட்சியாகயிருந்தாலும் சரி அல்லது விவசாயப் புரட்சியாகயிருந்தாலும் சரி எல்லாவற்றிற்கும் அடிப்படை மின்சாரம் என்பதை நாம் அத்தனைபேரும் நன்கு உணர்ந்திருக்கிறோம். இங்கு பேசிய பல்வேறு அங்கத்தினர்கள் தங்கள் பெரிய கருத்துக்களைத் தெரிவித்தார்கள். சில மாற்றுக் கட்சி உறுப்பினர்கள் ஏதோ புதிதாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் மின்சாரத்தைக் கண்டுபிடித்ததைப்போல் சொல்கிறார்கள் என்றெல்லாம் மதிப்பிற்குரிய காங்கிரசைச் சேர்ந்த திரு. ஜேம்ஸ் அவர்கள் குறிப்பிட்டார்கள். நாம்கூட அவர்களைத் திருப்பிக் கேட்க முடியும், காங்கிரஸ் காலத்திலே மட்டும் மின்சாரம் வரவில்லை, அதற்கு முன்பே வெள்ளைக்காரர்கள் காலத்திலிருந்தே தொடர்ந்து இருக்கிறது என்று நான் கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல் ஒவ்வொரு துறையிலேயும் எடுத்துக்கொண்டால் வெள்ளைக்காரர்கள் காலத்திலேயிருந்து பல்வேறு முன்னேற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டு வந்து

அதைத் தொடர்ந்துதான் காங்கிரஸ் ஆட்சியிலே சில காரியங்களைச் சாதித்தார்கள். பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்திலும் பல்வேறு சாதனைகளை, இன்றைக்கு மாவட்ட வாரியாக மின்சாரத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்கிற சீரிய நோக்கத்தோடு செங்கல்பட்டு, நீலகிரி மாவட்டங்களில் மின்சார பூர்த்தி விழாக்கள் கொண்டாடப்பட்டு முடிவடைந்திருக்கின்றன.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, வெள்ளைக்காரர்கள் காலத்திலேயோ அல்லது காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயோ இவ்வளவு தூரம் விளம்பரம் தேடிக்கொள்ளவில்லை என்றுதான் நான் குறிப்பிட்டேன்.

**திரு. தோப்பூர் திருவேங்கடம்:** தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இப்படிப்பட்ட விளம்பரங்களைத் தேடிக் கொள்ளவில்லையென்று இன்றைக்கு விளக்கம் அளிக்கிறார்கள். ஆனால் நேற்று பேசும் நேரத்தில் குறிப்பிட்டதைத்தான் நான் குறிப்பிட்டேன் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப் பூர்த்தி செய்ததை அந்தந்த மாவட்டத்திலுள்ள மக்களுக்குத் தெரிவிக்கும் நல்ல நோக்கத்தோடுதான் இப்படிப்பட்ட விழாக்கள் கொண்டாடப்படுகின்றனவே தவிர ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு விளம்பரம் இல்லாததுபோல, இப்படிப்பட்ட விழாக்களைக் கொண்டாடித்தான் விளம்பரம் தேடிக்கொள்ள வேண்டுமென்ற பரிதாபமான நிலையிலே இல்லை கழக ஆட்சி என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எங்களுடைய வடார்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இன்னும் பத்து நாட்களுக்குள்ளாக எல்லாக் கிராமங்களும் மின்சார வசதி பெற்றுவிட்டது என்ற ஒரு நிலையை எய்தக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதற்கான விழாவையும் கொண்டாட வேண்டுமென்று நாங்கள் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். எங்கள் மாவட்டத்திலே இன்னும் மின்சார இணைப்பு பெறாத கிராமங்கள் இருந்தால் எங்களுக்கு மின்சார இலாக்காவிலிருந்து கடிதங்கள் நாள்தோறும் வந்துகொண்டிருக்கின்றன, குறிப்பிட்ட சில குக்கிராமங்கள் மின்சார வசதிபெறாமல் இருக்கின்றன, அவைகளுக்கு டெபாசிட் கட்டிவிடுங்கள், மின் இணைப்பு தந்துவிடுகிறோம் என்று மின்சார இலாக்கா துரிதமாக வேலை செய்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1966-ஆம் ஆண்டு வரையிலே மின்சார வசதி பெற்ற கிராமங்கள் 22.137 என்று இருந்ததை 1970-ஆம் ஆண்டுவரை 36,367 கிராமங்கள் மின்சார வசதி பெற்ற நிலைமையைப் பார்க்கிறோம. அதேபோல் 1974-ஆம் ஆண்டு வாக்கில் 56,463 கிராமங்கள் வசதி பெறுகின்ற ஒரு சூழ்நிலையை கழகம் ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நான் மிகத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போலவே பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுத்ததிலே நம்முடைய கழக ஆட்சிக்கு மிக முக்கியமான பங்கு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரியப்படுத்த விரும்புகிறேன். 1966-ஆம் ஆண்டு வாக்கில் 2,56,594 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கிடைத்திருக்கிறது. 1970-ஆம் ஆண்டு வாக்கில் 4,70,776 பம்பு செட்டுகள் மின் இணைப்பு பெற்றிருக்கின்றன.



அதைப்போலவே 1974-ம் ஆண்டுக்குள்ளாக 750,119 பம்ப் செட்களுக்கு மின் இணைப்புத் தருவதற்கு திட்டமிட்டிருப்பதை உள்ளபடியே வரவேற்கவும், பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயத்திற்கு, விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் மக்களுக்கெல்லாம் உற்சாகமூட்டும் வகையில் மின்வாரியம் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுத்து வந்திருக்கிறது என்பதை நண்பர்கள் யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

அதே நேரத்தில் ஒருசில இடங்களில் ஒருசில குறைபாடுகள் இருக்கின்றன. மின் இணைப்புத் தருவதில் பம்ப் செட்டுகளுக்கு மின் இலாகா கடன் பெறுகிறது. அந்தக் கடனை வசதி படைத்தவர்களிடத்தில் இருந்து வாங்கிக் கொண்டும் வசதி இல்லாத விவசாயிகளிடத்திலிருந்து கடன்களை அதிகமாக வற்புறுத்தாமலும் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரத்தை உபயோகப்படுத்துகின்றவர்கள் 1951-ம் ஆண்டில் ஒரு தனி நபர் 20 யூனிட்தான் உபயோகித்து வந்தார்கள். 1970-ம் ஆண்டுக் கணக்குப்படி ஒரு தனி நபர் 120 யூனிட் உபயோகப்படுத்துகிறார். இந்தச் சூழ்நிலையில் நம்முடைய தமிழக மின்சார வாரியம் நல்ல முறையில் செயல்பட்டு வருவதைப் பாராட்டுகிறேன்.

மன்னார்குடி, திருவாரூர் ஆகிய இடங்களில் தனியார் மின் நிறுவனங்கள் 1,15,92,216 ரூபாய் கொடுக்கப்பட்டு மின் வாரியமே ஏற்றுக் கொண்டிருக்கிறது. மற்ற தனியார் நிறுவனங்களையும் தேசியமயமாக்கும் முயற்சியில் நிச்சயமாக அரசு ஈடுபடும். இதிலே ஏதோ ஒருசிலருடைய நிறுவனங்களைத்தான் எடுத்துக் கொள்வது என்ற நிலை இல்லை. கழக அரசு யாருக்கும் பாரபட்சம் காட்டாது என்பது பஸ்களைத் தேசியமயமாக்கியதிலிருந்தே புரிந்து கொள்ளலாம். அதைப் போன்றே இதிலும் கழக ஆட்சி மற்ற நிறுவனங்களையும் தேசியமயமாக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சி மன்றங்களில் மின்சாரத்தைப் பயன்படுத்துகிற அளவுக்கு அங்கு மீட்டர் முறைகள் இருந்தால் நன்றாக இருக்கும் என்பதை வற்புறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்த மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டங்களாக இருந்தாலும் உறுப்பினர்கள் முதலில் எழுப்பும் குரலே தரமான பல்புகளாக விநியோகிக்க வேண்டுமென்பதுதான். உடனடியாக அரசு இதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். பல்புகளை உற்பத்தி செய்ய தமிழகத்தில் ஒரு தொழிற்சாலையை உருவாக்கினால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அதனால் பல ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதாகவும் இருக்கும்.

மின் இலாகாவில் டெம்பரரி காஷுவல் லேபரர்களாக ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் உடனடியாக பர்மனென்ட் ஆக்க முடியாவிட்டாலும் சிறிது சிறிதாக அவர்களை பர்மனென்ட் ஊழியர்களாகச் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி நம்முடைய தமிழகத்தின் மின்வாரியம் நல்ல முறையில் செயல்பட்டிருக்கிறது என்று பாராட்டி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. மு. இரத்தினசபாபதி:** சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1971-72-ம் ஆண்டு மின் வாரிய வரவு செலவுத் திட்டத்தின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு இந்த விநியோகத்திலும், விஸ்தரிப்பிலும் மிக வேகமாகக் கடமைகளை நிறைவேற்றி தமிழகத்தில் 1972-ம் ஆண்டு முடிவுக்குள் எந்தக் கிராமத்திலும் மின் வசதி இல்லாமல் இருக்கக்கூடாது என்ற முறையில் தனது திட்டத்தை விரைவுபடுத்தி செயலாற்றிக் கொண்டு வருகிறது.

தமிழகத்தில் நாம் பல திட்டங்களை நிறைவேற்றக் கடமைப்பட்டிருந்தாலும் இந்த மின் விநியோகத்திலே குறைந்த காலத்திற்குள்ளாக தமிழகத்தின் எல்லாக் கிராமங்களும் மின்வசதி பெற்றிருக்கிறது என்ற பெருமையை இந்த அரசு நிலைநாட்டி இருக்கிறது என்றால் இந்த அரசு நினைக்கிற காரியங்களை இவ்வளவு விரைவாக மின் வாரியம் செயல்படுத்தி இருக்கிறது என்றால் அதற்காக நான் இந்த மின் வாரியத்தையும், தமிழக அரசையும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாகும். விளாத்திகுளம் தொகுதியில் 1367-ம் ஆண்டு 19 கிராமங்கள் மாத்திரந்தான் மின்வசதி பெற்றிருந்தன. இந்த நான்கு ஆண்டு காலத்திற்குள்ளாக 247 கிராமங்களும் மின் வசதி பெற்று அங்கு எந்தக் கிராமமும், எந்த அரிசன குடியிருப்பும் மின்வசதி இல்லாமல் இல்லை என்ற நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலை விளாத்திகுளம் பகுதியில் மட்டுமல்லாது நெல்லை மாவட்டம் முழுவதும் செப்டம்பர் மாதத்தோடு எல்லாக் கிராமங்களுக்கும் மின்வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது. நெல்லை மாவட்டம் மின்வசதியைப் பொறுத்தவரையில் முழுமை பெற்று நல்ல முறையில் இருந்து கொண்டு வருகிறது.

எல்லாக் கிராமங்களுக்கும் மின்வசதியைப் பெருக்கியிருப்பதோடு விவசாயத்தைப் பெருக்கும் வகையில் பம்பு செட்டுகளை விநியோகித்து மின் வாரியம் மின் இணைப்புக் கொடுத்து வருகிறது. இன்றைக்கு சாதாரண ஏழை விவசாயி கூட மின்வாரியத்தின் மூலம் கிணற்றுக்குப் பம்ப் செட் போட்டுக் கொள்ளலாம். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு ஐந்து லட்சம் கிணறுகளுக்கு பம்ப் செட்டுகளுக்காக மின் இணைப்புக் கொடுத்திருக்கிறது. இந்த அளவுக்குப் பணியாற்றக் கூடிய மின்வாரியத்தை இன்று அனைவரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இப்போது பல பிரிவுகளில் இருக்கும் கட்டுமானப் பிரிவுகளுக்குத் தக்க வேலை இல்லாமல் இருக்கிறது. இந்தச் சபையில், கட்டுமானப் பிரிவு அந்தந்தப் பகுதிகளில் இருக்கும் கிணறுகளுக்கு மின் வசதியைத் தருவதற்கான அந்தப் பணியை மேற்கொண்டால் விநியோகப் பிரிவானது வீடுகளுக்கும் தெரு விளக்குகளுக்கும் அந்தப் பங்கைப் பிரித்துக் கொண்டால் பொதுமக்களுக்கு வசதியான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தவர்களாவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது எல்லா கிராமங்களுக்கும் மின்வசதி வந்து விட்டதால் தெரு விளக்குகள் எல்லாக் கிராமங்களிலும் நல்ல முறையில் போடப்பட்டிருக்கின்றன. ஆனால் தெரு விளக்குகளுக்குப் பல்புகள் சரியான முறையில் விநியோகிக்கப் படுகின்ற நேரத்தில் எல்லாக் கிராமங்களுக்கும் போதுமான அளவுக்கு ஒயர் மென், ஹெல்ப்பர்கள் நியமிக்கப்படாத காரணத்தால், ஒரு ஒயர்மென், ஒரு ஹெல்ப்பர் நாலைந்து கிராமங்களை மூன்று நான்கு மைல் சுற்றளவில் தங்கள்



மேற்பார்வையில் வைத்திருக்கும் காரணத்தால் குறைகளை உடனடியாக பூர்த்தி செய்ய முடியவில்லை. அவர்கள் தங்களுடைய பணியைத் தக்க முறையில் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. நான்கு கிராமங்களுக்கு ஒரு ஹெல்ப்பர், ஒரு ஒயர்மென் என்ற விதத்தில் நியமிக்க அரசு முனையவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது மின்சார வாரியத்தில் பல புதிய அமைப்புகளை பல மாவட்டங்களில் ஏற்படுத்தி வருகிறார்கள். விளாத்திகுளத்தில் உதவிப் பொறியாளர் அலுவலகம் திறக்கப்பட்டு பணியாற்றிக் கொண்டிருக்கிறது. அதற்குப் பக்கத்தில் குளத்தூர் மிகப் பெரிய கிராமம். அங்கு உப்பு தொழில்கள் பெருகி வருகிறது.

உப்பு தொழிலில் மோட்டார் மூலம் தண்ணீரை இறைத்து உப்பளத்தைப் பெருக்கி வருகிறார்கள். அந்தப் பகுதிக்கு இளம் பொறியாளர் அலுவலகம் வேண்டுமென்று கோரிக்கையை நெல்லை மாவட்டத்திலுள்ள செயற் பொறியாளர் அவர்கள் பரிசிலனை செய்து வருகிறார்கள். அதற்கும் உடனே அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அலுவலாளர்கள் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அளவுக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

திரு. வெ. ந. முத்தமிழ்ச் செல்வன் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மின்சாரத்துறை அமைச்சர் அவர்களினால் அளிக்கப்பட்டுள்ள இந்த நிதி நிலை அறிக்கையின்மீது என் கருத்துக்களை அளிக்கிறேன்.

தமிழக அரசு மேற்கொண்டுள்ள திட்டங்களின் காரணமாக நம் தமிழ் நாட்டில் எல்லாக் கிராமங்களிலும் 1972-ம் ஆண்டு இறுதிக்குள்ளாக மின் ஒளி பெறுகிற ஒரு நிலையில் பற்பல வட்டங்களில் முழுமை பெற்றும் ஒருசில மாவட்டங்களில் முழுமை பெற்றும் இருப்பதைப் பார்க்கும்போது நம் தமிழக அரசுக்கும், மின்சார வாரியத்திற்கும் நமது பாராட்டுதல்களைத் தெரிவிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். மின்சாரத் தேவையைக் கவனிக்குமிடத்து, நம் தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் மின்சார உற்பத்தியை அதிகமாகப் பெருக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

அப்படி உற்பத்தியைப் பெருக்கும் அதே நேரத்தில் நமது வேளாண்மைக்குத் தேவையான நீரைப் பார்க்கும்போது குறிப்பாக காவேரி நதியை எடுத்துக் கொண்டால் அதன் நீர்ப் பிரச்னை ஒருபுறமிருக்க வேளாண்மைப் பெருக்கம் என்று வரும்போது நமக்குத் தேவையான நீரைக் கொண்டுவந்து மின் உற்பத்தியைப் பெருக்கும் முறையில் மேட்டூர் அணைக்குக் கீழே காவேரி ஆற்றில் ஒரு அணை கட்டுவதற்கு ஏது இருக்கிறதா என்ற முறையில் மின்சாரத் துறை அதற்கான ஒரு ஆய்வை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற என் கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இப்போது மின்சாரம் கிராமப்புங்களில் வேளாண்மைக்காகப் பெருமளவில் கொடுக்கப்பட்டு வருகிறது. மின் இணைப்பு கொடுக்கும்போது, நாம் விஞ்ஞான ரீதியில் விவசாயம் செய்யவேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையில் வேளாண்மைத் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய முறையில் இப்போது ஹெலிகாப்டர்கள் மூலம் நாம் மருந்து தெளிக்கும் முறையைக்

கையாண்டு வருகிறோம். ஆனால் ஹெலிகாப்டரைப் பயன்படுத்தும்போது அதைப் பரவலாக, தாராளமாகப் பயன்படுத்தக்கூடிய முறையில் இல்லாது ஆங்காங்கு மின் கம்பிகள் இருப்பதால் நல்ல முறையில் மருந்து அடிக்கப்பட முடியாத ஒரு நிலை சில இடங்களில் இருக்கின்றன. இந்தவிதமான இடைஞ்சலைப் போக்கும் முறையில் எதிர்காலத்தில் மின்சாரத் துறையினர் இது போன்ற இணைப்புகளைக் கொடுக்கிறபோது மெயின் லைனை வெளியே இழுத்தாலும் ஒவ்வொரு நீர் ஏற்றத்திற்கும் மின் இணைப்பு கொடுக்கும்போது பூமிக்கு அடியில் கொண்டு சென்று இணைப்புகள் கொடுத்தால் ஹெலிகாப்டர் உபயோகப்படுத்துவதற்கு வசதியாக இருக்கும். அதன்காரணமாக அடிக்கப்படுகிற மருந்து நல்லமுறையில் பயிர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் நிலையில் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை நல்ல பயன் உள்ளதாக ஆக்கும்.

அடுத்து, ஊராட்சிகளில் உள்ள தெரு மின் விளக்குகள் பராமரிக்கப்படுவது பற்றிப் பல உறுப்பினர்கள் அங்குள்ள அதிருப்தியைத் தெரிவித்திருக்கிறார்கள். மின்சாரத் துறை மூலம் அங்கு மின்சார பல்ப் போடுவதில் காலதாமதம் ஏற்படுவதாகவும், சரியாக விளக்குகள் எரிவதில்லை என்ற அதிருப்தி நிலவுகிறது. அதற்கு ஒரே பரிகாரம் அந்தப் பொறுப்பை மீட்டர் வைத்து அந்தந்த ஊராட்சிகளே நிர்வகிக்கும் பொறுப்பைக் கொடுத்தால் கிராமங்களில் உள்ள இந்த அதிருப்தி மாறிவிடும். அதோடு மின்சார வாரியத்திற்கு ஏற்படும் நஷ்டத்தையும் குறைக்க அது ஒரு வாய்ப்பாக இருக்கும்.

சிறிய கிராமங்கள் என்று வரும்போது அதை நிர்வகிக்கக்கூடிய பொறுப்பு சிரமமாக இருக்கும் என்பதை நான் உணருகிறேன். அப்படி வரும்போது ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக இரண்டு மூன்று கிராமங்களைச் சேர்த்து மேற்பார்வை செய்யும் முறையில் ஒரு அமைப்பை ஏற்படுத்தினால் அந்தக் கிராமங்களில் நல்லமுறையில் விளக்குகள் எரியும், விளக்குகள் எரியவில்லை என்ற குறை நீங்கும், மின்சார வாரியத்திற்கும் நல்லதொரு பெயர் கிடைக்கும் என்ற என் கருத்தைத் தெரிவித்துக்கொண்டு இத்துடன் என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கு. திருப்பதி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அளித்துள்ள அறிக்கை மீது நான் பேசுவதற்கு அளவிலா மகிழ்ச்சியடைகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏனென்றால் நான் வந்திருக்கிற தொகுதி மின்சாரத் தேவை என்று சொல்கிற அளவிற்கு இல்லாத ஒரு தொகுதி. மதுரை நகரம் என்றால் அதில் எங்களுக்கு பம்ப் செட்ஸ் வேண்டும், மேலும் மின்சாரம் வேண்டும் என்று சொல்ல முடியாத ஒரு தொகுதியில் இருந்து நான் வந்திருக்கிறேன் என்பது ஒன்று.

இன்னொன்று, நம் அரசாங்கத்தில் மிக வேகமாகச் செயல்படுகிற இலாகா மின்சார இலாகாவாகும். 1972-ம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் நிச்சயமாக மின் வசதி அளிக்கவேண்டும் என்று சொல்லி அதை நிறைவேற்றுவதற்காக நம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், மின்சாரத் துறையில் உள்ள எல்லா அலுவலர்களும் மிகத் துரிதமாக அந்தக் காரியத்தில் இறங்கி



யிருக்கிறார்கள். அந்த ஒரு செயலைப் பார்க்கும்போது நான் மகிழ்ச்சியடைகிறேன். இரண்டு வாரங்களுக்கு முன்பு சமயநல்லூரில் ஒரு மின்சார பூர்த்திவிழா நடைபெற்றது.

மதுரையைப் பொறுத்து மதுரை தெற்கு மதுரை வடக்கு என்று இரண்டு தாலுகாக்களையும் இணைத்து மின்சாரப் பூர்த்தி விழா நடைபெற்றது. ஏதோ சர்க்கார் வேண்டுமென்றே அப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறார்கள் என்று நாம் எடுத்துக்கொள்ளக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் இங்கு பேசும்போது விழாக்களை நடத்த அரசாங்கம் பணத்தைச் செலவழிக்கிறார்கள் என்று சொன்ன நேரத்தில் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாகவும் அழகாகவும் பதிலுரைத்தார்கள். நாம் சர்க்கார் பணத்தை அதற்காகச் செலவழிக்கவில்லை. அதற்கு என்று ஒரு மலர் வெளியிட்டு அதனால் வருகிற விளம்பரப் பணத்தை வைத்துக் கொண்டு அதைச் சரிக்கட்டுகிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே சர்க்கார் பணத்தைச் செலவு செய்யாமல் இந்த விழாக்களை நடத்துவது தவறானது என்று யாரும் சொல்லிவிடமுடியாது.

நமது அமைச்சர் அவர்கள் உள்ளபடியே மதுரை மாவட்டத்தில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் விழா நடத்தியபோது மதுரை மாவட்டத்தில் மட்டுந்தான் விழா நடத்துகிறார்களோ என்று பலர் சந்தேகப்பட்டிருக்கக்கூடும். மதுரை மாவட்டத்தில் நடந்ததற்குப் பிறகு தமிழகத்திலுள்ள எல்லா மாவட்டங்களிலும் அப்படிப்பட்ட விழாக்கள் நடைபெற்றிருக்கின்றன. தமிழ்நாடு முழுவதும் மின்சாரப் பூர்த்தி விழா செய்யப்படவேண்டும் என்று அமைச்சர் அவர்களது பரந்த மனப்பான்மையைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

அதே நேரத்தில் ஒன்றிரண்டு காரியங்களை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். மின்சாரக் கம்பிகள் இப்போது மேலே போகின்றன. அவைகளை எல்லாம் கூடுமான வரையில் பூமிக்கு அடியே கொண்டுபோனால் நன்றாக இருக்கும். இதைத் தயவுசெய்து யோசித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது நல்லதாயிருந்தால் அப்படிப்பட்டதொரு செயலில் இறங்க அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது கார்ப்பரேஷன்களிலும் முனிஸிபாலிட்டிகளிலும் இருப்பவைகளை அரசு ஏற்று நடத்த இருக்கிறது. அப்படி நடத்தும்போது முனிசிப்பாலிட்டிகளுக்கு அவற்றை நடத்துகிற உரிமை இருக்குமானால் அதில் வருகிற வேலைகள் பொறுத்து பூர்த்தி செய்யக்கூடிய அதிகாரமும் முனிசிபாலிட்டிக்கும் இருக்கும். ஆனால் சர்க்கார் அல்லது மின்சாரவாரியம் நடத்தினால் அந்த வேலைகளுக்குப் போடுகிற அதிகாரம் வாரியத்திற்கு வருவதால்—வாரியத்திற்கு வரவே கூடாது என்று சொல்லவில்லை—அப்படி வாரியத்தால் நியமிக்கப்படும் அதிகாரம் முனிசிபாலிட்டிகளுக்கும் கார்ப்பரேஷன்களுக்கும் இருப்பதற்கான ஒரு வழிவகை செய்யப்படவேண்டும். இதை வாரியமும், அரசும் யோசித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்தில் சமயநல்லூரில் ஒரு மின்நிலையம் இருக்கிறது. தமிழ்நாட்டில் இன்று நீரால் எடுக்கக்கூடிய மின்சாரம் ஏறக்குறைய பூர்த்தி அடையக்கூடிய ஒரு கட்டத்தில் இருக்கிற காரணத்தினால் பல அனல் மின்சார

நிலையங்களை நாம் ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. எனவே, மதுரை மாவட்டம் பெரும் தொழிற்சாலைகள் அதிகமாக இல்லாத ஒரு மாவட்டமாக யிருப்பதால் நம் அமைச்சர் அவர்கள் அனல் மின் நிலையங்களை ஏற்படுத்தி அம்மின்நிலையங்களை மதுரை நகரத்தைச் சுற்றி அமைப்பதற்கு நிச்சயமாக நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையின்மீது என் கருத்துக்களைச் சொல்வதற்கு அனுமதி தந்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இந்த அளவோடு முடிக்கிறேன். வணக்கம்.

DR. H. V. HANDE : Mr. Chairman, Sir, while participating in the Electricity Board's budget on behalf of the Swatantra Party I wish to offer a few remarks.

Sir, at the very outset, I would like to say that it is impossible for me to sing the same song, fine song, that quite a few members of the ruling party have sung with regard to this budget. As far as I am concerned I have to clearly state that there are a number of things in this budget which are far from satisfactory, which are things to be taken serious note of and which have to be rectified in the next year or years to come.

Let me start with the deficit of the Board. From Rs. 3 crores it is likely to become Rs. 9 crores afterwards. If we have the time and patience, we can draw a graph of the deficit and the financial position of the Electricity Board. We will then know that the deficit is in geometric progression, the improvement is not even on arithmatic progression. That is the charge I level. If the officials of the Board have the patience to draw the two graphs, they will find that the benefits are much less when compared to the deficits that have accrued in the years insipite of the fact the several sections of the Electricity Board subsidised by the State Government by so many loans. It is running into huge deficits. I would like the Hon. Minister for Electricity and the Cabinet to take very serious note of this.

Another important thing is that during the last four years, the Electricity Board has been progressively deteriorating into a pucca publicity department of the ruling party. Almost every section of the board is oriented towards pleasing the ruling party. I can substantiate it. I have got some particulars. In the course of my speech I will substantiate to the extent possible, to convince the ruling party. Various 'vizhas' (the hon. Member Thiru Thirupathi was saying about some 'vizha') are being conducted to please the ruling party. At whose cost, I ask ? Take the advertisment in the papers. On what basis is the advertisement being given? Is it being given on the basis of circulation? No. I have several instances wherein papers, belonging to the ruling party with less circulation, have been given first page advertisement, huge advertisements. On what basis? Papers which have





circulation of more than a lakh and so, do not get such big advertisements. At times they don't get advertisement at all. I now come to this முழுமைக்கும் விழா, வட்டத்திற்கு வட்டம் விழா

The Hon. Leader of the House was previously Minister for Electricity. I have been a member of this House for quite some time and I have been watching its performance from the time when Thiru R. Venkataraman was Minister for Electricity even though I had my own difference of opinion with him. But during those times, I have never seen this sort of 'vizha', for 'vattam', 'mavattam', etc. What is this? At whose cost are these 'vizhas' being celebrated?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, அந்த விழாவைப்பற்றி பேசுகிறவர்கள் எமர்ஜென்சியைக் காட்டித் தவருகப் பேசக்கூடாது. நடைபெற்ற விழாக்கள் எல்லாம் 'எமர்ஜென்சிக்கு' முன்னாலே நடைபெற்றது. அதற்குப் பின்னாலே ஏதாவது நடைபெற்று இருந்தால் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): விழாக்களைப் பொறுத்தவரையில் இரண்டு நாட்களாக அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்து இருக்கிறார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : விளக்கத்திற்கு விளக்கம். I am not satisfied with Minister's 'villakkam'.

This is 'villakkam' for 'villakkam'. So I have to bring this 'villakkam'. The Hon. Minister accepts that there has been extravagance and we are not going to repeat the extravagance. To that extent we have scored the point.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, மன்னிக்கவேண்டும். அவர்கள் பேசிய பேச்சை நான் ஒப்புக்கொண்டதாகச் சொல்கிறார்கள். பதில் சொல்கிறபோது அதற்காகத் தனியாகப் பதில் சொல்லாம் என்று இருந்தேன். ஒப்புக்கொண்டதாகச் சொல்வது தவறு. சமயநல்லூர் விழாவைப்பற்றி சொன்னார்கள். அதற்குப் பெரிதாக விழா வேண்டுமென்று சொல்கிறீர்களா அல்லது வேண்டாம் என்று சொல்கிறீர்களா ? அதற்கு அரசாங்கத்தின் பணம் செலவு செய்யப்படவில்லை. மலர் போட்டுப் பணத்தைக்கூட சேமித்து வைத்து இருக்கிறோம். 'எக்ஸ்டிராவெகண்ட்' என்று சொல்கிறார்கள். எந்தப்பகுதியில் 'எக்ஸ்டிராவெகண்ட்' ஆகச் செலவு செய்யப்பட்டது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

DR. H. V. HANDE : If I am given opportunity to explain the thing, there will not be any confusion. I am not going to talk about other aspects. My whole attention is going to be diverted to Nilgiris district. I will bring it now to your notice. Of course, the Hon. Minister has conceded that this has happened but that he is not going to repeat the thing, especially in view of the fact that there is emergency. To that extent I have scored my point

being in the Opposition. After all, what is the Opposition for ? Only to point out the thing, to pinpoint the extravagance, to help the Government. It is only to help the government that we are doing this "இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன்". Only if we pinpoint like this, that such things are happening, the department will not let down the Ministry in future.

After all, we are interested in the people, in the public money not being spent on such things. That is why I am pointing out these things.

Let me come to advertisement. On what basis is this being given? Is it being done on the basis of circulation of papers? All these things remain to be gone into thoroughly. The Hon. Minister in his reply must properly explain the thing, that for such and paper advertisement, so much has being spent. He can collect the figures from the department concerned and give it in his answer. I am bringing it to the notice of Government so that such extravagant expenditure may not be repeated. I have got statistics of such extravagance.

For instance, what is the amount spent for ' pandal ' in Ooty? For ' Alangarapandal ' the amount spent is Rs. 35,000. It may be 33,000 or Rs. 34,700 and the Minister may say ' Dr. Hande is wrong in his figures '. The fact is that such huge money has been spent.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** குறிப்பு சரியான குறிப்பா? சரியான ஆதாரத்தோடு வைத்து இருக்கிறீர்களா? சரியில்லை தவறு என்று கருதுகிறீர்களா? ரூ. 30,000 செலவழித்தார்கள் என்று சொல்வது தவறு. இதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? அல்லது ஆதாரத்தோடு அதை நிரூபிக்கிறீர்களா?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** நீங்கள் கொடுக்கிற ஆதாரங்கள் இந்த மன்றத்தில் நிரூபிக்கப்படவேண்டும். நீங்கள் கொடுக்கிற புள்ளிவிவரங்கள் சரியானதுதான், தக்க ஆதாரங்கள் இருக்கின்றன என்று சொன்னால், அமைச்சரவர்கள் பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும்.

DR. H. V. HANDE : I can give facts and figures. I am going to give it. They had to bring 'வெண்மணல்' Eighty lorry loads were brought from Mettupalayam to Ooty. How can they get 'வெண்மணல்' ' in Ooty? I mean ' white sand '. For bringing such lorry loads, were private lorries used or lorries of the Electricity Board? How much of public money was spent? How many lorry loads of sand were used ? What was the expenditure? Has this been done with the knowledge of the Minister? The Minister may be unaware of it. It very often happens to people in political life. My own party man might do something to please me without my knowledge and when it comes to my



notice and when I find it is irregular, I take him to task immediately. Such things might have happened. Some officials, in order to please the ruling party (such sort of currying favour is there) might have done it. Let the Hon. Minister explain the thing. Did the persons work over-time and were some persons transferred from some other work to this work? All these answers I except from the Hon. Minister in his reply.

Another thing. The Hon. Minister for Electricity in his speech on April 26 has complained about shortage of power. That warning has come in the papers. His speech I have gone into. What are the steps taken by this Ministry to overcome this shortage of power ?. What are the effective steps proposed to be taken in that direction ?

The Hon. Lady Member Thirumathi Anandanayaki was talking about thermal power. Let me tell one thing about thermal power. Let us see what is happening in Maharashtra in that direction. The State Government should not be over-enthusiastic about this. After seven years of work, in Maharashtra they have found the one machine has broken down. So let us not be going on imagining on plans and figures based on thermal power. It is 'முதலுக்கே பிற்பகல்
ஆபத்து' That is an important point which I would like the Govern- 12-30
ment to take into consideration seriously.

Then again, they go on saying about statistics. They say ' We have done so many things, we have increased energised pumpsets. We have increased the villages eletrified '...............

Thirumathi T. N. ANANDANAYAKI : On a point of clarification. I would like to know whether the Hon. Member is meaning thermal power or atomic power.

DR. H. V. HANDE : I am sorry. I meant atomic power. I stand corrected. I thank the hon. Member very much. It is a slip of the tongue. I meant only atomic power and not thermal power which is very costly. I know what is going on in Maharashtra. Wherever I said ' thermal ', it may be read as ' atomic '.

Now I will come to another point. With regard to the pumpsets we have been making claims in our speeches 'we' means the Government or the publications. It is said that the Government have done yeoman service and there is a lot of advancement and lot of benefits with regard to pumpsets. I would request the hon. Members to turn to page 27 of the Hon. Minister's speech (English copy). There is a graph here regarding pumpsets. From what point onwards the graph becomes a steep straight line? It was from 1965–66. From 1965–66 the graph is one straight line. Naturally development must take place and the development must go on. They go on making propaganda that so

much is being done. But what I want to stress is this. I think propaganda is out of proportion to the benefits that have accrued to the villages. Then the graph is very acute. The same position is there. My point is, let us not go on claiming much more than what we have done. This is very important and I would request the Hon. Minister to take particular note of this.

Then, I come to another important point. What is the financial position of the Board? In the beginning itself I had said there is geometrical progression that is, they are having losses. How to improve the Board's financial position? What is the method? The Board's financial position will improve, with proportionate benefit to the consumer public, if radical progressive steps are taken on systematic studies pertaining to collective and individual power zones, namely, each generating station, each Extra High Tension Receiving Station, and each Transformer Sub-Station.

Have we made a systematic study of the individual power zone of each generating station? What is the production? Have we made a systematic study of each Extra High Tension Receiving Station ? Have we made a systematic study of each Transformer Sub-Station? Have we made a separate study of these things ? Are we also making a study of the various curves? The Electricity Board is supposed to discharge daily so much electricity from the stations at a particular rate and the whole thing is put in a graph. It is in a curve. Then again every day the Department of Electricity is pumping out to the consumer section. Day to day there is a graph. In other words, this graph is of two dimensions. One is in a day—24 hours. The other is in a year—365 days. What is the situation everywhere? Wherever there is an Electricity Board that functions properly, systematic attempt is made to find out where the hollows are. Have the department done it? Have they given graphs to us about this in any of these books? I have been going through these books for the last few days. I do not find any graph in this regard in any of these books. Wherever there is a hollow, wherever there is concavity, wherever there is a hollow in a particular place, the Electricity consumed is that much less. The Electricity production is in a particular quantity in a particular place and from that production point to the consumption point there is a huge gap. Wherever the curve is higher or a convex, that means the difference is much less.

Have the department done anything? Have they put persons in the rural sector where the pumpsets are working to find out the pattern of consumption? Have they found out and have they given any statistics and said 'this is the pattern of consumption'? Have they made any attempts in that direction? They have not taken proper steps to find out whether these gaps can be filled. How can the Board run economically, unless these



curves are properly filled up, releasing more power making people consume more power in a staggering manner on a particular point where power is at a high level at the Electricity generating station? It is a very simple thing. I am not talking about any technical point on the Electricity subject. It is a very simple thing. Wherever the consumption is less, wherever you find out on a particular day that the production is more, it is the duty of the Electrcity Board to see that it is also filled up. Have they done it? My submission is, my charge is, that they have not done it. They have not done it to the satisfaction of the Hon. Members of this House. I am quite sure that if the Hon. Minister forgets that he is a Minister and dispassionately looks at the points which I have made, he will be in a position to change his frame of mind and pull up the department.

Then I come to violation of Rules. Rule 54 made under the Indian Electricity Act restricts variation of voltage from declared voltage of supply to consumer to 12½ per cent in the case of high or extra high voltage, and to 5 per cent in the case of low or medium voltage. Has the department concerned taken any particular care to see that this Rule 54 is not violated? If the variation of voltage is more than 12½ per cent in the case of high voltage and if it is more than 5 per cent in the lower level, it is a violation of the Act and the Rule. In a number of cases they have violated the Rule. The answers given are far from satisfactory. I would like to know whether in this book at any point have they listed the concrete steps they have taken to see that this Rule is not violated. They have not given it in any place.

Hon. Members take so much trouble to put questions. Last year also they have said. Year after year I have been watching this pathetic exhibition. Not even in a single year the department concerned has taken steps to say 'look here, these are the steps we have taken'. This is a very serious charge—violation of the Electricity Act and the Rules. Have they said 'we have taken the following concrete steps'? No, they have not done it. There is voltage at power, source, and corresponding voltage at remote end of transmission line, distributor, service line to consumer, has served from the same power source, during peak load hours. Have they taken any steps to see that variation of voltage is restricted to the percentage allowed under the Rule? They have not done anything about it. I would like the Hon. Minister to take note of this. As it is, do domestic consumers in Madras City receive their supply to lamps, etc., at voltages between 220 and 240 volts? My submission is this. In how many places they are able to get supply at this voltage? In many places they are not getting. Other Members also have mentioned about it so many times—Members belonging to all parties have said this. It goes on varying. It is much less than 220. What steps they have taken to see that this is remedied.

[Dr. H. V. Hande] [1971 டிசம்பர் 11

Then, there is another violation of Rule, Rule 57. This assumes regular testing and maintenance of all meters for recording energy—units delivered at power source, and corresponding units of power sold at a point—within the error of 3 per cent permitted by Rule 57 made under the Indian Electricity Act. My charge is that this particular rule has been violated in every place and the Government have not done anything about this. Suppose we put some units 'X' at a particular transmitter. It should not be less than 3 per cent at the consumption level. If it is more than 3 per cent, if it is 95 per cent of what we have put in, then there is violation of Rule 57. I want the Government to take note of this also.

Then again, I now come to 'action taken'. I have made a note about several points, but I would like to mention only a few points. I would like to refer to Item No. 28 wherein the Hon. Member Thiru M. Shanmugam had made a point that line losses should be reduced. I had made this point several times for the past two years, i.e., line losses should be reduced. What is the answer?

> "Concerted measures are being taken towards this end. Rationalisation of the grid transmission, distribution net work, pattern of Power purchase, tariff-structure, advice to Agricultural and Industrial consumers regarding their installations, etc., are all under review in an attempt to reduce the losses."

Nothing concrete, all vague, jumbling of words. What is the position? Have we achieved any improvement in line losses, I would like to know. I shall read the line losses. The line loss for 1969–70 is 17.6 per cent. For 1970–71 we do not have the figure. This is another tragedy. We are two years behind. We are having this book two years behind. Why should we not get it in time? This book we got on the previous day before the discussion began on the Electricity Budget. What makes them delay, I do not know. There may be some explanation. But they should see to it that this book is given every year without any delay. The line losses are as follows :—

For 1969–70 it is 17.6 per cent.

For 1968–69 it is 17.9 per cent.

In other words, in 1968–69 it turned out to be 3 per cent more.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: வாதத்திற்குச் சரியாக இருக்கும் என்பதற்காகச் சொல்கிறேன். முன்பாகவே சொல்லிவிடுகிறேன். இந்த இரண்டு மூன்றாண்டுக் காலங்களில் எவ்வளவு தூரம் 'ஹை டென்ஷன்', 'லோ டென்ஷன்' லைன்கள் புதிதாகப் போடப்பட்டிருக்கின்றன என்று பார்த்து, வேறு மாநிலங்களில் அதைப் பொறுத்து என்ன நிலை என்பதையும் பார்த்தால்தான் வாதம் சரியாக இருக்கும். அதைப் பார்க்காமல் பேசினால் அது நிறைவுள்ளதாக இருக்காது.



1971 டிசம்பர் 11]

DR. H. V. HANDE : Yesterday also the Hon. Minister had stated that as compared to other States, we are better. My point is entirely different. As compared to other States we are better in several things. Even in respect of quality, we are better. For instance, take the Vijayanta tank. It is one of the best things produced in our State. Whether it is the Indian Administrative Service or technical service, from top to bottom, the quality of our men is the best. Tamil Nadu is even better than Maharashtra. Without Bombay City what is Maharashtra? Therefore, there is no question of comparing our State with other States.

I was referring to line loss. In 1965–66 the line loss was 16.5 per cent. It could have been reduced to 16 per cent. I know it is difficult to reduce but it is stated in the Statement of Action that they have reduced the line loss. It is a serious thing if it is intended to misguide us. They should have compared the line loss with those of the last four or five years and taken steps to reduce the line loss. What are the steps taken by the Board to see that the line losses are reduced considerably? The line losses for 1969–70 are 17.6 per cent and in page 9 of the Report, it is stated—

> "In spite of increase in power generation, consumption, etc., the line losses have actually come down from 17.9 per cent in 1968–69 to 17.6 per cent in 1969–70; in 1965–66 the line losses were least at 16.5 per cent......".

Even one per cent loss is a serious thing. In 1965–66 each one per cent line loss meant a loss of Rs. 21 lakhs per annum to the Board, loss to the exchequer and loss to the tax-payer. For 1969–70, the figure works out to Rs. 30 lakhs and this is a conservative estimate. If it is a liberal estimate, it would come to Rs. 50 to 75 lakhs. I do not know how that line loss had occurred. We have sold 457 millions of units and if the loss is one per cent it is a very, very serious thing. I would like the Government to give an explanation in regard to this matter. We should find out what exactly has happened and then only we can pinpoint it and prevent such a loss.

In the Foreward to the Report for 1969–70, in paragraph 7, the Chairman of the Board has referred to engaging renowned consultants in the country for better working of the Board, and its operations. It is a very interesting point and I would request the hon. Members to note it. They are going to appoint experts to solve the problem. Is this the method of solving the problem? This is just like ordering a judicial enquiry and leaving the matter there. We also appoint a committee to go into the whole thing. But what is the material that the Electricity Board is going to give to the Committee? There is no use of

simply appointing a Committee and providing them with electric fans, etc. In this connection I would make the following suggestion :—

The following data pertaining to each transformer served zone should be furnished :—

(1) Voltages at transformer-end and at the far end of the line during peak-load hours.

This particular information should be placed before this Committee. In answer to a question recently, the Government had stated that the voltage would be maintained. But they have not specified the method by which the voltage would be maintained.

The second point relates to Line losses and percentage of power delivered by each sub-station. What is the line loss for each sub-station and I would like that information to be given to the Committee. The third point to be furnished to the Committee would be the average power factor of utilisation of power. This is a little complicated thing and the Board would understand the expression 'average power factor of utilisation of power'. Then another point which I have explained earlier is about typical load curves. If we want to improve the financial position of the Board, we have to study the typical load curves. This can be found out by an instrument called 'Recording Ammeter'. If you place it in the generation point, uniform consumption can be maintained and maximum advantage can be taken of the generation of Electricity with the help of this instrument. Then we should provide data covering the lines to enable assessment of conductor size, etc. If all the data I have mentioned is collected we cannot only reduce line losses but also detect theft of energy. Last time also there was mention about the theft of energy and nobody is able to find it out. If the data I have suggested is collected, they can prevent theft of energy. This is a very important point and I would like the Government to look into the matter.

Then I come to Figure 9 of the Report for 1969-70 which furnished the following figures :—

| Class of Load. | | A percent of total consumption. | B percent of conneted Load. | A/B |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| 1 Agriculture | .. | 23·0 | 4·16 | 0·55 |
| 2 Industrial | .. | 50·0 | 2·59 | 1·93 |

The ratio A/B indicates best utilisation of power by Industries and worst by Agriculture. In the case of industries it is 1.93 whereas in the case of agriculture it is only .55. This shows that we have not been able to tap the maximum from agriculture and that is because we have not done, as I have stated earlier, scouting.



Then I want to point out one important thing. In the place where electric connections have been given, there is loss of electricity. I would give a concrete example. In the Tirunelveli district, there is Athur Township. In that township, they do not have electricity connections even though there is already electricity there. This is a very important point. We should properly see that extension of electricity takes place simultaneously. We are thinking of Rural Agro Industries, but we do not give connections to places where there is already electricity. Under the Rural Electrification Scheme, we are giving connections to agricultural pumpsets and there is a tremendous loss on that account. To minimise the loss I would make the following suggestion. Let Hon. Minister not think that because it is coming from this side, he should not hear it. Let him consult the Hon. Minister for Industries and have small agro industries, wherever it is possible. You can then give power to several villages. The component character of industries is very important. Let them have it in one case. Then they will find lot of improvement.

There should be preferential tariffs by way of discounts for operations of specific classes of loads in restricted hours only. This will improve the over-all load factor, section-wise. I think the present international seminar on rural electrification will discuss this.

Finally I have only two or three points. I would request the Hon. Minister to give clearly the following figures in the next administration report of the Board. That is very important. The Administration Report should contain the following figures relating to :—

(a) hours of powers *outages* and their proportionate impact on sale of energy. (From this it will be known what power has gone from such and such sub-station).

(b) units consumed in street lighting under its control and corresponding connected kilowatts.

(c) minimum voltage of LT supply to domestic lighting and small power consumers, including pumpsets, and

(d) total number of meters in service and meters tested in a year.

Finally one thing, Sir.

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMI) : The hon. Member has taken 35 minutes.

DR. H. V. HANDE : One minute, Sir, and I am done. We have agricultural pumpsets. I am not going to repeat what had been said previously.

There are pumpsets for which connection has not been given for years. What I say is this. In front of every sub-station, put a board saying ' so much of power will be available for pumpsets '. Let them also indicate the power already given and power available. It is something like what is done in a Government store, stock on hand and quantity sold out. The Hon. Minister Thiru P. U. Shanmugham knows about it. If such an indication is given, it will be of great benefit. But now such a thing is not there.

' பவர் வந்தால்தான் முடியும். வராவிட்டால் போச்சு, நாங்கள் என்ன செய்யமுடியும் ' என்று போய் கேட்பவர்களிடம் சொல்லிவிடுகிறார்கள்.

People have to wait for years to get connection and they do not know whether there will be power to be given to their pumpsets.

I do hope the Hon. Minister will take note of what all I have said with the best of intentions, in the correct manner and in the proper spirit and give answer to the points I have raised in his reply.

* திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு தலைவரவர்களே. அவை முன் வைக்கப்பட்டிருக்கின்ற மின்சார வாரியத்தின் 1971-72-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைக்கு நாமெல்லாம் பெருமைப்படத் தக்க வகையில் மின்சார வாரியம் தன் பணியைச் செம்மையாக நடத்தி வருகிறது என்பதை அவைமுன் வைக்கப் பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கை மிகத் தெளிவாகக் காட்டுகிறது. குறிப்பாக, 1971-ம் ஆண்டுத் தேர்தலுக்கு முன்னால் முடிந்த அளவுக்குத் திட்டமிட்டு செயலாற்றி, எந்த அளவுக்கு மக்களுக்குச் சேவை செய்ய முடியுமோ, அந்த அளவுக்கு மின்சார வாரியம் செய்திருக்கிறது. அதன் அயராச் சேவையினால்தான் தமிழ்நாட்டிலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் ஒன்று திரண்டு, கழகத்திற்கு மீண்டும், வாக்களித்திருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அந்த அளவுக்கு மின்சார வாரியம் பணியாற்றியிருப்பது உண்மையிலே மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

என்னுடைய தொகுதியான பெரம்பலூர் பகுதியில் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார இணைப்புக் கொடுக்கப்பட்டு, முழுமை விழா நடத்தலாம் என்ற அளவில் இருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே கூறிக்கொள்ள மகிழ்ச்சியடைகிறேன்.

1967-ம் ஆண்டுக்குப் பின்னால் மின்சார வாரியம் வேகமாக வளர்ச்சியடைந் திருக்கிறது. அதன் வளர்ச்சிக்கு கிராம மக்களும் ஒத்துழைக்கிறார்கள். உதாரணமாக என் பகுதியிலே எடுத்துக்கொண்டால், மின்சார இணைப்பு கொடுப்பதற்கான பொருள்கள் கொண்டுவருவதற்கு மின்சார வாரியத்தில் சில காரணங்களால், தாமதம் ஏற்படும்போது கிராம மக்களே, குறிப்பாக விவசாயிகள் தாங்களே சென்று, மின்சாரக் கம்பங்கள், கம்பிகள், மற்றும் இதரப் பொருள்களை ' நாங்களே எடுத்துச்சென்று, தருகிறோம். சீக்கிரமாக எங்களுக்கு மின்சார இணைப்புக் கொடுங்கள் ' என்று கேட்டு செய்கிறார்கள். அதனால்





மின்சார வாரியத்திலே பணியாற்றக்கூடியவர்களுக்கும் அந்த மக்களுக்கு விரைவில் மின்சார இணைப்புக் கொடுக்கவேண்டுமென்ற ஒரு ஆர்வம் ஏற்படுகிறது. அவர்கள் பணியும் சுலபமாகிறது. இந்த நிலை என் தொகுதியில் மட்டுமல்ல, நாட்டிலே பல இடங்களில் இம்மாதிரியான சூழ்நிலை உருவாகி இருப்பதை நாம் பார்க்கிறோம். இந்த முறையிலே மின்சார வாரியமும், பொது மக்களும் ஒத்துழைப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன் ; பாராட்டுகிறேன்.

இந்த நேரத்தில் பெரம்பலூர் தொகுதியிலிருக்கும் விவசாயிகளுக்குள்ள சில குறைகளையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மின்சாரம் வழங்க மின்சாரத் துறை எனது தொகுதியில் தயாராக இருக்கிறது. ஆனால் பம்புசெட்டுகள் வைப்பதற்கும், கிணறுகள் வெட்டுவதற்கும் வசதியில்லாமல் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே கிணறுகள் வெட்டுவதற்கும், பம்புசெட்டுகள் வைப்பதற்கும் விவசாயிகளுக்கு பழைய முறைப்படி நிலவளவங்கி மூலமோ பாங்கு மூலமோ அல்லது அரசாங்கமே ஊராட்சி ஒன்றியத்தின் வழியாக பண உதவி செய்தால்தான் திட்டங்களை நல்லமுறையில் நிறைவேற்ற முடியும் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

நேற்று என்று நினைக்கிறேன் ; மதிப்புக்குரிய உறுப்பினர் திருமதி அனந்த நாயகி அவர்கள் ' தெரு விளக்குகள் சரியாக எரியவில்லை ' என்றெல்லாம் சில குறைகளைச் சொன்னார்கள். அவர்கள் குறிப்பிட்டதைப்பற்றி நான் மகிழ்ச்சி யடைகிறேன். ஏனென்றால் ஏற்கெனவே ஒருமுறை அறிஞர் அண்ணா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, அனந்தநாயகியும் சட்டமன்றத்தில் இருந்தார். அப்போதும் அம்மையார் அவர்கள் அதே கருத்துக்களைத்தான் பேசினார். அண்ணா அவர்கள் அதை தன் பத்திரிகையில் எழுதிக்காட்டி, எடுத்துக்காட்டி, அம்மையாருக்குப் பாராட்டுத் தெரிவித்தார்கள். அன்று ஆளும் கட்சியாக இருந்த அம்மையார் அவர்கள் இன்று சந்தர்ப்பவசத்தினால் எதிர்க் கட்சியிலே இருக்கிறார்கள். இருப்பினும் அன்று சொன்ன அதே கருத்தை தொடர்ந்து வலியுறுத்தி வருவதற்காக அவர்களுக்கு என் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எவ்வளவோ பிரம்மாண்டமான திட்டங்களைப் போட்டு, நிறைவேற்றிக் கொண்டு வருகின்ற நேரத்தில், எங்கோ ஒரு பஞ்சாயத்தில் தெரு விளக்கு எரியவில்லை, நகராட்சியில் நான்கு விளக்குகள் எரியவில்லை, பம்புசெட்டுக்கு மின்சார சப்ளை கிடைக்க தாமதம் ஏற்படுகிறது என்பவைகளைப்பற்றி பெரிதுபடுத்தி பேசுவது அவ்வளவு சுவையானதல்ல என்பதோடு அவசியம்தானா என்றும் கனம் உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அரசின் சீரிய திட்டங்களை நிறைவேற்றி வருகிற மின்சார வாரியத்தையும், பொது மக்களையும் இப்படிப்பட்ட சில சின்னஞ்சிறு குறைகளை பெரிதாகக் காட்டி, வேறுபடுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரம் விநியோகிக்கும் சில தனியார் கம்பெனிகள் சரியாகச் செயல்படவில்லை. விவசாயிகளிடம் மின்வாரியம் வசூலிப்பதைவிட அதிகமாக கட்டணம் வசூலிக்கிறார்கள். தேவைப்படுகின்ற நேரத்தில் மின் இணைப்புக் கொடுக்கப் படுவதில்லை. இந்தக் குறைகளைப் பற்றி மின்சார வாரியத்திற்கும், மின்சார இலாகாச் செயலாளருக்கும் தெரிவித்திருக்கிறோம். சம்பந்தப்பட்ட கம்பெனிகளிடம் ஏன் அதிகமாக வசூலிக்கிறீர்கள் என்று கேட்டால் ' அரசாங்கத்திட

மிருந்து மின்சாரத்தை வாங்கித்தான் நாங்கள் விநியோகம் செய்கிறோம். அதனால் எங்களுக்கு ஏற்படுகிறச் செலவையும் சேர்த்துத்தான் மக்களிடம் வசூலிக்கிறோம். உடனடியாக சப்ளை செய்யவேண்டுமென்றால் எங்களிடம் பணம் இல்லை; அரசாங்கத்திடமிருந்தோ, மக்களிடமிருந்தோ கடன் பெற்றுத் தாருங்கள்; என்று சொல்கிறார்கள். அரசாங்கம் எப்போதும் கடன் கொடுப்பது என்பது இயலாத காரியம். அரசாங்கம் தீட்டுகிற வளர்ச்சிப் பணிகள், குறிப்பாக வேளாண்மை உற்பத்திப் பணிகள் சீரிய முறையில் நடைபெற, எல்லாத் தனியார் மின்சாரக் கம்பெனிகளையும் நாட்டுடைமையாக்கிவிட வேண்டும். ஏற்கெனவே சில தனியார் கம்பெனிகளை நாட்டுடைமையாக்கிவிட்டோம், எஞ்சியுள்ள தனியார்க் கம்பெனிகளையும் நாட்டுடைமையாகிவிட்டால், நிச்சயமாக, மின்சார விநியோகப் பூர்த்தியிலும், வளர்ச்சிப் பணிகளிலும் வெற்றிபெறுவோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00 என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலும் காட்டு நிலங்கள் எல்லாம்—தரிசு நிலங்கள் எல்லாம் கழக ஆட்சியில் ஏழை எளிய மக்களுக்கு பட்டா செய்துகொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த ஏழை எளிய மக்கள் எல்லாம் இன்றையதினம் தங்கள் நிலத்தில் கேணி வெட்டவேண்டும், பம்புசெட்டு போடவேண்டும், நல்லமுறையில் விவசாயம் செய்யவேண்டும் என்கிற வெறி—ஆர்வம் மிகுதி உடையவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய ஆசை ஆர்வம் எல்லாம் நிரம்பி வழிகிற சூழ்நிலையில் பூலம்பாடி கிராமத்தில் ஒரு எஸ்.ஓ. ஆபீஸ் போடவேண்டும் என்று கோரினோம். அதற்கு ஏற்றபடி அந்த ஆபீசைப் போட்டார்கள். ஆனால் இதுவரை அதற்கு எஸ்.ஓ. அதிகாரி நியமனம் செய்யப்படாமல் இருந்தது. இப்போது அந்த ஆபீசையே வேறு ஒரு ஊருக்கு மாற்ற இருப்பதாக அறிந்து நாங்கள் எல்லாம் மிகவும் வருந்துகிறோம். அதுபற்றி வாரியத்தின் தலைவருக்கும், தலைமைப் பொறியாளருக்கும் தெரிவித்து இருக்கிறேன். வீதி விளக்குகள் போடப்பட்டு—பம்புசெட்டுகளுக்கு கனெக்‌ஷன் தரப்படாமல் இருக்கிற இந்தச் சூழ்நிலையில் அங்கே அமைக்கப்பட்ட எஸ்.ஓ. ஆபீசை வேறு இடத்திற்கு மாற்றக்கூடாது. ஒரு செக்‌ஷன் ஆபீசரை நியமித்து அந்த இடத்திலேயே அது நல்லமுறையில் செயல்பட ஆவன செய்யவேண்டுமென்று மாண்புமிகு டாக்டர் முதல் அமைச்சர் அவர்களையும், மின்சார வாரிய அமைச்சர் அவர்களையும், அந்த இலாக்கா அதிகாரிகளையும் கேட்டுக் கொண்டு, பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. சோ. கருணைநாதன்: மாற்றுத் தலைவர் அவர்களே, மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் மின்சாரத்தினுடைய முழுமை விழா கொண்டாடுகிற நேரத்தில் நம்முடைய மின்சார வாரியத்தைச் சேர்ந்த ஊழியர்கள் அங்கே குளிரிலும், பனியிலும் சுறுசுறுப்பாக நல்லமுறையில் பணியாற்றியதற்கு அந்த வாரியத்தினர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலே அங்கே நீலகிரி மாவட்டத்தில் சோலைக்கிடையே இருக்கிற குக்கிராமங்களில் எல்லாம் இன்று நல்லபடியாக விளக்குகள் போடப்பட்டு ஆங்காங்குள்ள மக்கள் எல்லாம் இன்றைக்கு எவ்வளவோ திருப்தி அடைந்திருக்



கிறார்கள். அங்கே கிராமங்களில் வெளிச்சம்போட்டு மக்கள் எல்லாம் தமிழக அரசைப் பாராட்டிக்கொண்டிருக்கிற நேரத்தில் எதிர்க்கட்சிக்காரர்கள் எரிந்து விழுந்துகொண்டிருக்கிற நிலை மிகவும் வேதனை தரக்கூடியதாக இருக்கிறது. அழகான ஆண்செல்வத்தை ஈன்றெடுத்த தாய் அதைக் கண்டு கொஞ்சிக் கொண்டிருப்பதைப் பார்த்த குழந்தை இல்லாத மலடி ஆத்திரப்படுவதுபோல அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

நீலகிரி மாவட்டத்தில் மின்சார முழுமைவிழா கொண்டாடுவதற்கு முன்பு அந்தந்த மாவட்டப் பகுதிகளை எல்லாம் சுற்றிப்பார்த்தேன். மின்சார விளக்கு போடப்படாத இடமே இல்லை. புலி வாழ்கிற பகுதிகளில் எல்லாம்கூட மின்சார வாரியத்தினர் மிகச் சாதுர்யமாகச் சென்று காரியத்தைச் செய்திருக்கிறார்கள்.

மேலும் நீலகிரி மாவட்டத்தில் உக்கல் கிராமத்தில் உள்ளவர்கள் பம்பு செட்டு வைத்து தண்ணீர் இறைத்து காய்கறி பயிரிட விரும்புகிறார்கள். அங்கே பம்பு செட்டுகளுக்குக் கனெக்‌ஷன் கொடுக்கப்படுமானால், அங்கே உற்பத்தியாகிற காய்கறிகள் சென்னைக்கு வருவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே அந்தக் காரியத்தைச் சரியான முறையில் செய்துதரவேண்டுமென்று மின்சார வாரியத்தைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் காலையில் ஏழரை எட்டு மணிக்குள் ரோல் கொடுப்பதற்கு வரவேண்டியிருப்பதால் காலை ஐந்து மணி, நான்கு மணிக்கே எழுந்து தாய்மார்கள் உலை வைத்துச் சோறு சமைக்கின்ற நேரத்தில் மசாலை அரைக்கும்போது இருட்டில் அரைக்க வேண்டியிருக்கிறது. பூச்சி புழு இருந்தால்கூடத் தெரியாது. ஆகவே தோட்டத் தொழிலாளர்கள் இருக்கும் வீடுகளுக்கு சர்க்கார் செலவிலோ, தோட்ட முதலாளிகள் செலவிலோ மின்சார விளக்குகள் போட்டுத்தர அரசு முன்வந்திருப்பதாகக் கருதுகிறேன். அதை உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அந்த இலாக்காவில் பல வருஷங்களாக நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறவர்களை எல்லாம் கூடுமானவரையில் அதிகமானபேர்களை நிரந்தரமாக்க முன்வரவேண்டும்.

பொதுவாக, தெருவிளக்குகள் மற்றவைகள் எல்லாம்பற்றிக் குறை சொல்லுகின்ற நிலைமை இன்றைக்கு இல்லை. நல்லமுறையில் நீலகிரி மாவட்டத்தில் மின்சாரத் துறையினர் நிறைவேற்றி வருகிற தன்மையை நான் அறிவேன். தோட்டத் தொழிலாளர்களது வீடுகளுக்கு உடனடியாக மின்சார விளக்குகள் போட்டுத்தரவேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. கோ. சிவபெருமான்: தலைவர் அவர்களே, 1971-72-ம் ஆண்டுக்கான மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையை நான் ஆதரிக்கிறேன்.

தமிழகத்தில் மின்சார வாரிய வேலைகள் மின்வேகத்தில் நடைபெறுகின்றன. மிக விரிவான முறையில் கிராமப்பகுதிகள் எல்லாம் மின் விளக்குகள் போடப்பட்டு வருகின்றன. கிராமப்பகுதிகள் எல்லாம் வளர்ச்சியுறச் செய்கின்ற வகையில் திறமையோடு இந்த நிர்வாகம் நல்லமுறையில் செயல்பட்டு இயங்கி வருகிறது.

ஆனால் சில சமயங்களில் போடப்பட்ட பல்புகள்தான் ப்யூஸ் ஆகிவிடுகின்றன. நான் அரியலூர் பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருக்கிற காரணத்தினால் இதைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். எங்கள் யூனியனின் கீழ் இருக்கக்கூடிய கிராமங்களுக்கு 6 மாதங்களுக்கு முன்புதான் விளக்குகள் போட்டோம்—பல்புகள் ப்யூஸ் ஆகியிருக்கின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குக் காரணம் அரசு மிகத் துரிதமாக வேலையை முடித்தாக வேண்டும் என்கிற வேகத்தில் இருப்பதால் இலாக்காவினர்—வேலை தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் எல்லோரையும் சேர்த்து வேலையைச் செய்கிறார்கள் போல் இருக்கிறது. சரியாக ஒயர் போடப்படாத காரணத்தினால் மழைக் காலத்தில் தண்ணீர் லீக்கேஜினால் பல்புகள் ப்யூஸ் ஆகியிருக்கும் என்று அவர்களே காரணம் சொல்கிறார்கள். இப்படி அவசரம் அவசரமாக சரியான முறையில் வேலை நடைபெறாது போவதைக் காட்டிலும் நிதானமாகச் செய்கிற வேலைகள் சுத்தமாக இருக்கும்படி இந்த இலாக்காவினர் செய்தால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சாரக் கட்டணத்தைப் பொறுத்தவரையில்—பஞ்சாயத்துகளிடம் பணம் இல்லை என்றால், அந்தக் கட்டணத்தை யூனியனில் இருந்து வசூல் செய்கிறார்கள். நாங்கள் கட்டுகிறோம் என்றாலும் ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் எவ்வளவு மின்சாரம் தேவை என்பதைக் கணக்கிட்டு அவற்றை அந்தந்த பஞ்சாயத்துகளிடம் இருந்து வசூலித்துக்கொள்ள ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும். பல்புகள் ப்யூஸ் ஆனாலும் பல்பு வாங்கிப் போட்டுக்கொள்ள அந்த பஞ்சாயத்துக்கே அதிகாரம் கொடுக்கலாம். இல்லையென்றால் யூனியனுக்குக் கொடுக்கலாம். இல்லையென்றால் அங்கே உள்ள மின்சார வாரியத்தைச் சேர்ந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கே கொடுக்கலாம்.

எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் கூறினார்கள். எங்கள் பகுதி புஞ்சைக்காடுகள் நிறைந்த பகுதி. அரசாங்க நிலங்கள்—நமது சர்க்காரினால் நிலமில்லாத ஏழைகளுக்கு எல்லாம் வழங்கப்பட்டிருக்கிறது. அவற்றில் கடன்களை வாங்கிக் கிணறு வெட்டியிருக்கிறார்கள். அவற்றுக்கு எல்லாம் மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டால் அது வளமான பகுதியாக மாறுவதற்கு ஏற்ற நிலை இருக்கிறது. மோட்டார் போட்டு, நமது ஆதித்தனார் அவர்கள் கூறியதைப்போல, புளிச்சக்கீரையைப் பயிரிட்டால்கூடப் போதும், கடலை, மிளகாயைவிட அதிகமான விலை கொடுத்து வாங்கிக்கொள்வதாகச் சொன்னார்கள். இதுபோன்ற புளிச்சக் கீரை போன்ற பயிர்களை வறட்சிப் பகுதிகளில் பயிர் செய்தால் நல்ல வருவாய் கிடைக்கும். இதைத்தான் மாண்புமிகு அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். நம்முடைய குமாரி அனந்தநாயகி அவர்கள் . . . . (பெருத்த சிரிப்பு) . . . . இல்லை, இல்லை, திருமதி அனந்தநாயகி அவர்கள்கூடக் குறிப்பிட்டார்கள். அதாவது, மின்சார விழாவிலே ஏன் இவ்வாறு இவ்வளவு பல்புகளைப் போட்டு அலங்காரம் செய்து, ஜெகஜ்ஜோதியாக இருக்கும்படிச் செய்து விழாக் கொண்டாடுகிறீர்கள் என்றார்கள். நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மின்சார விழா என்றால் என்ன அர்த்தம்? முன்பெல்லாம் வீடுகளில் அரிக்கேன் லைட் இருந்தது. ஒரு விழா என்றால் சாதாரணமாக வேடிக்கை பார்க்க கிராம மக்கள் கூடுவார்கள். அரிக்கேன் இருந்த இடங்களில் புதிதாக மின்சார விளக்கு போடுகிறார்கள் என்றால் அதைப் பார்க்க மக்கள் திரளாகக்கூடுவார்கள். அப்படி மக்கள் கூடுகிறபோது, விழா கொண்டாடும்போது மின்சார பல்புகளால்



அலங்காரம் செய்யாமல், கார்த்திகை தீபம் போல், அகல் விளக்குகளை வைத்தா அலங்காரம் செய்ய முடியும்? அப்படி அகல் விளக்குகளை வைத்தால் நன்றாகவா இருக்கும்?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவர் அவர்களே, அனுவசியமாக . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** நீங்கள் கேட்க விரும்புவதைப் பிறகு கேளுங்கள். அவர் புது உறுப்பினர்.

**திரு. கோ. சிவபெருமாள்:** தலைவர் அவர்களே, மின்சார விழா என்றால் என்ன அர்த்தம்? பெட்ரோமாக்ஸ் லைட்டுகளை வைத்தா விழா கொண்டாட முடியும்? அல்லது, அகல் விளக்குகளை வைத்தா கொண்டாட முடியும்? அல்லது அரிக்கேன் லைட்டுகளை வைத்தா விழா கொண்டாடுவது? ஜனங்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக விழா கொண்டாடுகிறோம். நாம் எந்த அளவிற்கு வளர்ந்திருக்கிறோம் என்பதைக் காட்டிக்கொள்வதற்காகத்தான் விழா கொண்டாடுகிறார்கள் என்பதாக சில அங்கத்தினர்கள்கூட சட்டமன்றத்தில் பேசுகிறார்கள். டாக்டர் ஹாண்டே, திருமதி அனந்தநாயகி அவர்கள் எல்லாம் இங்கே வாதாடுகிறார்கள் என்றால், எதற்காக வாதாடுகிறார்கள். மற்றவர்களுக்காக வாதாடும்போது தங்கள் பெயர் விளம்பரமாகும், தங்கள் கட்சியை விளம்பரப்படுத்திக் கொள்ளலாம் என்பதற்காகத்தானே பேசுகிறார்கள். கட்சி விளம்பரத்திற்காகத்தான் பேசுகிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார், நான் நேற்றையதினம் பேசியபோது, சாதாரண நிகழ்ச்சிகள், சாதாரண வரவேற்புகளுக்குக்கூட அதிக அளவில் பல்புகள் போட்டு, அலங்காரம் செய்து மின்சாரத்தை விரயம் செய்கிறார்களே என்றுதான் பேசினேன். மின்சார விழாவிலே மின்சார பல்புகள் போடாமல் அகல் விளக்குகள் ஏற்ற வேண்டும், பெட்ரோமாக்ஸ் லைட்டுகள் வைக்க வேண்டும் என்கிற அளவில் நான் சொல்லவில்லை. கனம் உறுப்பினர் அவர்கள் இந்த அடிப்படை உண்மையை எங்களுக்குச் சொல்லி, நாங்கள் புரிந்துகொள்ள வேண்டிய நிலைமையில் நாங்கள் இல்லை. சாதாரண வரவேற்புகளுக்கு ஏன் இவ்வளவு மின்சார விளக்கு அலங்காரம் என்றுதான் கேட்டேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லிக்கொண்டு, அதிகாரகப் பேசிக் கொண்டே போகிறீர்கள். அடிக்கடி குறுக்கிட வேண்டாம்.

**திரு. கோ. சிவபெருமாள்:** தலைவர் அவர்களே, அவரவர்களுடைய அரசின் சாதனைகளை விளம்பரப்படுத்தத்தான் செய்வார்கள். நீங்கள்

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

ஆட்சியை நடத்தியபோது இருந்ததை நினைத்துப் பார்க்க வேண்டும். எந்த அளவிற்கு நீங்கள் வெளியில் விளம்பரம் செய்தீர்கள்? உங்களுக்காகப் பல ஏடுகள் இருந்தனவே. நாங்கள் உங்கள் அளவுக்குச் செய்யாவிட்டாலும் இயன்ற அளவில் செய்கிறோம். காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு என்பதுபோல நாங்கள் ஏன் எங்கள் சாதனைகளை விளம்பரப்படுத்திக் கொள்ளக் கூடாது.

மின்சார வாரியமானது நல்ல நிலைமைகளை ஏற்படுத்தி, மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருக்க வேண்டும். அதற்காக இந்த அரசையும், மாநிலத்தின் முதலமைச்சர் அவர்களையும், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும் பாராட்டுகிறேன் என்றி கூறி, விடை பெறுகிறேன். வணக்கம்.

**திரு. செ. சதாசிவம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் 1971-72-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைக் கண்டு நான் பெருமைப்படுகிறேன்.

டாக்டர் கலைஞர் அவர்கள் 1972 டிசம்பருக்குள் தமிழ்நாட்டிலுள்ள எல்லா கிராமங்களுக்கும் மின்சார இணைப்பு கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக மின்சார வாரியம் வெகு வேகமாகக் காரியங்களை ஆற்றிவருகிறது. இதற்கு முன்னாலே கிராமங்களுக்கு மின்சாரம் வேண்டுமென்றால், அந்தக் கிராமத்திற்கு மின்சாரம் தருவது என்றால், எவ்வளவு ரூபாய் செலவாகும், அந்தக் கிராமத்திலிருந்து எவ்வளவு ரூபாய் வருவாய் கிடைக்கும் என்பதையெல்லாம் கணக்கெடுத்து, அந்தக் கிராமத்திற்கு மின்சார இணைப்புக் கொடுப்பதனால் லாபம் வருமா என்பதைப் பார்த்து, லாபம் வரும் என்று தெரிந்த பின்னர்தான் அதற்கு அனுமதி அளிக்கும். லாபம் வரவில்லையென்றால் மின்சார இணைப்புக்கு அந்த ஊர் தகுதியில்லை, பின்னால் பார்க்கலாம் என்று சொல்லி பிரச்சினையைத் தட்டிக் கழிப்பார்கள். தற்சமயம் லாப நஷ்டம் பாராமல் எல்லாக் கிராமங்களுக்கும் மின் இணைப்புத் தர வேண்டுமென்று முயற்சி எடுத்துக்கொண்டதற்காகத் தமிழக அரசைப் பாராட்டுகிறேன்.

இப்போது மாவட்டங்களிலும், தாலுக்காக்களிலும் முறையே மின்சாரம் கட்டுமானம், மின்சாரம் பராமரித்தல், கோட்டப் பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள் அலுவலகம் இருக்கிறது. அதில் கோட்டப் பொறியாளர் ஓ. அண்ட் எம். தனியாகவும், கன்ஸ்ட்ரக்ஷன் தனியாகவும் இருக்கிறது. இந்த இரண்டையும் ஒன்றாக இணைத்தால்தான் நல்லது. இரண்டு பிரிவுகளிலும் தினக்கூலிகள் நிறைய பேர் எடுக்கிறார்கள். ஓ. அண்ட் எம்.-லிருந்து வேறு பதவி உயர்வு மூலம் சர்வீஸுக்கு வரும்போது அவர்கள் லைன்மேன்களாக நியமிக்கப்படுகிறார்கள். அவர்களில் சில பேர் மரம் ஏறி, பல்ப் போடத் தெரியாதவர்களாகவும் இருக்கிறார்கள். கன்ஸ்ட்ரக்ஷனிலே இருப்பவர்களுக்கு எல்லோருக்கும் மரம் ஏறி, பல்ப் போடத் தெரியும். ஓ. அண்ட் எம்.-ல் உள்ளவர்கள் சில இடங்களில் மரம் ஏறி பல்புகளைப் பொருத்தத் தெரியாதவர்கள், அங்குள்ள கிராம மக்களிடம் கொடுத்து பல்பு போடச் சொல்கிறார்கள். அப்படி கிராம மக்கள் பல்பு போடும்போது சில விபத்துக்களும் உண்டாகின்றன. மரம் ஏறத் தெரியாமல் சிலர் விழுந்தும் விடுகிறார்கள். ஆகவே, இதைத் தவிர்க்க இந்த இரண்டு பிரிவுகளையும் ஒன்றாக இணைக்க வேண்டும். இரண்டு கோட்டப் பொறியாளர்களையும் ஒன்றாக இருக்க வழிவகை செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக ஊராட்சி மன்றங்களின் விளக்குகளைப் பற்றிச்சொன்னார்கள். ஒவ்வொரு ஊராட்சிக்கும் தனித்தனி மீட்டர் வைப்பது அரசாங்கத்திற்கு உதவியாக இருக்கும். இதனால் மின்சார வாரியத்தின் பெயர் கெடாமல் இருக்கும். பஞ்சாயத்து யூனியன் ரேடியோக்களையும், ரோடுகளையும், மற்ற தெருக்களையும் பழுது பார்ப்பதற்கு சூபர்வைசர்கள் இருக்கிறார்கள். அதுபோல பல்புகள் வாங்குவதற்கும் பல்பு போடுவதற்கும் மின்சார வாரியத்தின் சார்பாக



ஒரு சூபர்வைசர் போடலாம். பஞ்சாயத்துக்கள் பல்புகளை வாங்கும்போது மின்சார வாரியத்தின் மூலமாக வாங்கலாம். ஒவ்வொரு கிராமத்திற்கும் தனித்தனி மீட்டர் பொருத்தப்பட வேண்டும்.

அடுத்தபடியாக விழாக்களைப்பற்றிச் சொன்னார்கள். நானும் சொல்ல விரும்புகிறேன். விழா மிகமிக அவசியம். என் பகுதியைப் பொறுத்த மட்டில் எல்லாக் கிராமங்களுக்கும் ரோடு வசதிகள் சரியாக இல்லை. பஞ்சாயத்துத் தலைவர்கள், உதவித் தலைவர்கள் உதவி இல்லாமல் எந்த வேலையையும் அரசு செய்துவிட முடியாது. அப்படியே மின்சார வாரியம் மட்டும் முயற்சி செய்தால் எல்லாக் கிராமங்களுக்கும் மின்வசதி கிடைத்துவிடாது. ஒரு கிராமத்திலே மின்வசதி வேலைகள் முடிந்துவிட்டன என்றால், அதை விழாவாகச் செய்யும்பொழுது அதைப் பார்த்து மற்றக் கிராமங்களிலும் உள்ளவர்கள், தம்முடைய கிராமங்களுக்கும் இப்படிப்பட்ட வசதிகள் வேண்டுமென்று கேட்பார்கள். இதற்கு விழா மிகவும் அவசியம். இதனால் அரசுக்கும் நஷ்டமில்லை.

திருச்சி மாவட்டத்திலே 1971 டிசம்பருக்குள் மின் இணைப்பு விஷயம் முடியாது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். கோட்டப் பொறியாளர்கள் பிரிவுகள் இரண்டையும் ஒன்றாக இணைத்துவிட வேண்டும். மற்ற இலாக்காக்கள் கல்வி, விவசாயம், கால்நடை போன்றவைகளுக்கு அரியலூரில் மாவட்ட அலுவலகங்கள் உள்ளதுபோல் மின்சார வாரியத்திற்கும் ஒரு பிரிவு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் அரியலூரில் ஒரு கோட்டப் பொறியாளர் சப்டிவிஷனை ஏற்படுத்தினால் வேலைகளை முடித்துவிடலாம். என்னுடைய தாலுக்காவும் என்னுடைய மாவட்டமும் மின்சார வசதிபெற்று விளங்க வழி செய்ய வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த வேண்டுகோளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. அ. சின்னசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1971-72-ஆம் ஆண்டிற்கான மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின்மீது நான் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும் இன்றைக்கெல்லாம் எங்கு பார்த்தாலும் எப்பொழுது பார்த்தாலும் காலை மாலை எல்லா நேரங்களிலும் எங்கும் மின்சாரம், மின்சாரம் என்று பேசப்பட்டுக்கொண்டிருக்கிறது. மின்சாரம் என்றால் என்ன என்று இருந்த நிலைமை மாறி இன்றைக்கு மின்சாரம், மின்சாரம் என்று பேசுகின்ற நிலைமையை ஏற்படுத்திய நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்களையும் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து பணியாற்றுகின்ற நம்முடைய அன்புச் சகோதரர் மின்சாரத்துறை அமைச்சர் அண்ணன் திரு. ஓ. பி. இராமன் அவர்களுக்கும் எங்களுடைய பாராட்டுதலகளையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் சென்றவிடமெல்லாம் அதிகாரிகளையெல்லாம் அழைத்து என்ன முடிந்துவிட்டதா, எவ்வளவு மீதம் இருக்கிறது, டி.இ. அவர்களைக் கூப்பிட்டு எத்தனை இடம் இன்னும் பாக்கியிருக்கிறது, இன்னும் ஒரு வாரத்திற்குள் முடித்துவிடவேண்டும் என்று ஆணையிடுகிறார்கள். அவர்கள் உற்சாகமாக உழைத்து எடுக்கின்ற முயற்சிகளைப் பார்த்தால், எங்களுடைய பகுதியைப் பொறுத்தவரையில் இன்னும் ஒரு வாரத்திற்குள் முடிக்கவேண்டு

மென்று மிகவும் அறுதியிட்டுக் கூறுவதைப் பார்த்தால், அவர்கள் எடுத்து வருகின்ற முயற்சிகளைப் பார்த்தால் ஆறு மாதங்களுக்குள் தமிழ்நாடு முழுவதும் முடித்துவிடுவார்கள் என்று நம்புகிறோம்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசினார்கள், குற்றச்சாட்டுக்களைச் சாட்டினார்கள். ஆகா, விழாவா? ஊர்வலமா? கூட்டமா? எதற்கு? என்று பேசினார்கள். நாங்கள் செய்கிறோம், அதை மக்களுக்கு எடுத்துக் காட்டுகிறோம். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது, பத்து வருடங்களுக்கு முன்னால் அரும்பாவூர் என்ற ஊரில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. அங்கே அப்போது இருந்த ஒரு அமைச்சர் வந்தார். அதற்காக 20 ஆயிரம் ரூபாய் செலவு செய்தார்கள். அப்படி வந்தவர் எதற்காக வந்தார் தெரியுமா, ஒரு சிறிய கன்றை ஊன்றி விட்டுச் சென்றார், அதற்காக அவ்வளவு செய்தார்கள். ஆனால் இன்றைக்கு நாங்கள் என்ன செய்கிறோம்? ஆங்காங்கேயுள்ள மக்கள் அதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறார்கள். ஆனால் அன்றைக்கு அமைச்சர் வருகிறார் என்பதற்காக இரண்டு நாட்களுக்கு முன்பாகவே போலீஸ் வந்துவிடும், மணியக்காரர், தாசில்தார்கள் இவர்களை வாருங்கள் என்று சொல்வார்கள். அவ்வளவு அதிகாரத்தோடு அன்றைக்கு நடத்தினார்கள். இன்றைக்கு கழக உறுப்பினர்களும், ஊராட்சித் தலைவர்களும், ஒன்றியத் தலைவர்களும் முயற்சியெடுத்து நடத்துகிறார்கள். மின்விசை கிடைத்துவிட்டால் ஊழியர்களைக் கூப்பிட்டுப் பாராட்டி அவர்களுக்கு உடைகள் வழங்குகிறோம். அப்படிப்பட்ட முறையிலே அங்கே இருக்கின்ற அதிகாரிகளை ஊக்கப்படுத்துகிறோம். அவர்களிடத்திலே பெற வேண்டியதைப் பெற்றுக்கொண்டிருக்கிறோம். எங்களுடைய தொகுதியில் இருக்கக்கூடிய டி.இ. அவர்கள் ஊர் ஊராகச் சென்று ஒவ்வொரு ஊரிலும் 4, 5 நாட்கள் தங்கி ஐயா, எழுதிக்கொடுங்கள், சால்வன்ஸி சர்டிபிகேட் கொடுங்கள் என்று கேட்டுவாங்கி மிகவும் உன்னிப்பாகக் கவனிக்கிறார்கள். எங்களுடைய பகுதியிலே இருக்கிற மாப்பிள்ளையாக இருப்பதால் டி.இ. அவர்கள் உற்சாகத்தோடு பணியாற்றுகிறார்கள். அதற்காக எங்களுடைய மாவட்டத்தின்மூலம் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியாகிய செயங்கொண்டாம் தொகுதியிலே கடந்த ஆறு மாத காலத்திலே 100 முறைகள் லைட் ஆப் ஆகிவிட்டது. ஏன் என்று கேட்டோம். செக்ஷன் ஒன்றாக இருப்பதால் மெயின்டெயின் செய்யமுடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே செயங்கொண்டாம் பகுதியை நார்த் என்றும் சௌத் என்றும் பிரிக்கவேண்டும். அங்கே இரண்டொரு வயர்மேன்களையும், ஹெல்ப்பர்களையும் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டி.சி.எல். வேலை செய்கிறவர்கள் வேலை செய்கின்ற நேரத்திலே சிலபல விபத்துக்கள் ஏற்படுகின்றன. பெரும்பாலும் அவர்கள் எல்லாம் ஏழைகளாக இருக்கின்ற காரணத்தினாலே அவர்கள் வேலை செய்யும்பொழுது விபத்துக்கள் ஏற்பட்டால் மின்சார வாரியத்தின் மூலமாக அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

எங்கள் பகுதியில் உள்ள ஏ.இ.-க்கு ஓ. அண்ட் எம். ஜீப் இல்லாத காரணத்தினால் பலபகுதிகளுக்குச் சென்று வரமுடியாத நிலைமை இருக்கிறது. அவருக்கு ஒரு ஜீப் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவுடன் முடிவடைகின்றன. பேரவை மீண்டும் 13—12—1971-ஆம் நாள் திங்கட்கிழமையன்று காலை 9 மணியளவில் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது. பிற்பகல் 1-25

(7) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

## A. Statutory Rules and Orders

112. Notification issued with G.O. Ms. No. 2541, Home, dated the 18th September 1971 in regard to levy of concessional rate of tax in respect of certain vehicles belonging to the Action for Food Production (AFPRO) Bangalore. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

113. Notification issued with G.O. Ms. No. 1870, Rural Development and Local Administration, dated the 10th August 1971 in regard to an amendment relating to constitution of Valparai Township Committee of Coimbatore district, published at page 2 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 11th April 1963 as subsequently amended. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

114. Notification issued with G.O. Ms. No. 2098, Agriculture, dated the 26th July 1971 in regard to declaration of notified areas in Ramanathapuram district for the purpose of Tamil Nadu Land Improvement Schemes Act, 1959 (Tamil Nadu Act 31 of 1959). [Laid on the Table of the House under section 44 (3) of the Tamil Nadu Land Improvement Schemes Act, 1959 (Tamil Nadu Act 31 of 1959).]

## B. Reports, Notifications and Other Papers.

57. Erratum issued with Roc. No. 28369/70-P1, dated the 22nd April 1970 to the notification published at page 193 of Part II—Section 2, of the *Tamil Nadu Government Gazette*, dated the 15th April 1970, relating to bifurcation of Chinnababusamudram Panchayat.

58. Report of the Committee on Rules of the Tamil Nadu Legislative Assembly constituted in 1971.

[1971 டிசம்பர் 11

## இணைப்பு—1.

[93-ம் பக்கத்தில் 263-ஆம் எண்ணுள்ள, வெள்ளிக் குறியிட்ட வினவிற் குரிய விடையைக் காண்க.]

### மாவட்ட மகளிர் நல அதிகாரியின் கடமைகளும் பொறுப்பும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட மகளிர் நல அதிகாரி ஒருவர் (அரசிதழ் பதிவு பெறுதவர்) உள்ளார். இவர் மாவட்டத்தில் மகளிர் சிசு நலத் திட்டங்களுக்குப் பொறுப்பு வகிக்கிறார். இந்த அதிகாரி மகளிர் நலத்துறை இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் பணி புரிகிறார். மகளிர் நலத்துறை மாநில சமூகநல வாரியத்துடன் இணைக்கப்படுவதற்கு முன் மாவட்ட மகளிர் நல அதிகாரி, காப்பு இல்லங்களில் சேர்க்கப்பட வேண்டியவர்களின் நேர்வுகளை ஆய்வு செய்யும் பணியைத் தவிர மகளிர் நல கிளைகள், பணி நிலையங்கள் ஆகிய வற்றின் பொறுப்பு மட்டுமே வகித்து வந்தார்.

இப்போது, மாவட்ட மகளிர் நல அதிகாரி—

(1) மாவட்டத்தின் மகளிர்—சிசு நல திட்டத்தைச் செயல்படுத்து வதற்கும் பொறுப்பாகவுள்ளார் ;

(2) முக்கிய சேவிகள், கிராம சேவிகள் ஆகியோரது பணியை மேற் பார்வையிடுகிறார் ;

(3) அலுவல் முறையில் மாவட்ட மகளிர் நலக் குழுவின் செயலாளராகப் பணியாற்றி அதன் கூட்டத்தை இரண்டு திங்களுக்கொருமுறை கூட்டுகிறார். அக் கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகளைத் தயாரிக்கிறார் ;

(4) ஒரு திங்களில் 20 நாட்கள் மாவட்டத்தில் சுற்றிப் பயணம் செய்ய வேண்டும். மகளிர் நல சிசு நலத் திட்டங்கள் செயல்படும் நிலையைக் கண்டறி யவும், மகளிர் மன்றங்களையும் அவற்றின் நடவடிக்கைகளையும் கண்காணிக் கவும், மகளிர் நலக் கிளைகள், மானியம் பெறும் தொண்டு நிறுவனங்கள், பாலர் பள்ளிகள், குடும்ப-சிசு-நலத் திட்டம், செயலுக்கு ஊட்டச் சத்துணவுத் திட்டம், "கேர்" நிறுவன உணவு வழங்கல் திட்டம், செயல்முறை விளக்க உணவு வழங்கல் திட்டம் முதலிய திட்டங்களைக் கண்காணிப்பதற்காகவும் இவர் இவ்வாறு சுற்றுப் பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இவர் திங்களொன்றுக்குக் கண்டிப்பாக 12 இரவுகள் அந்தந்த இடங்களில் தங்க வேண்டும் ;

(5) திங்கள் தோறும் நடக்க வேண்டிய பணியாளர் கூட்டத்தை நடத்த வேண்டும் ;

(6) மகளிர் பயிற்சி முகாம்களை ஊராட்சி ஒன்றிய ஆணையாளரோடு சேர்ந்து நடத்த வேண்டும் ;

(7) ஊராட்சி ஒன்றியங்களின் திட்ட வாரியான வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள மகளிர் நலத் திட்டம் பற்றிய வரவு-செலவு மதிப் பீடுகளைப் பரிசீலனை செய்து அவற்றிற்கு ஒப்புதல் வழங்கவேண்டும் ;

(8) வட்டார நிலைக் குழுக் கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும் ;



1971 டிசம்பர் 11]

(9) மகளிருக்கான கைப்பணிப்பயிற்சி நிலையங்களையும் கூட்டுறவுச் சங்கங்களையும் வட்டார வளர்ச்சி அதிகாரிகளின் உதவியோடு தொடங்க வேண்டும் ;

(10) திட்டப் பணிகளின் கீழ், பணி நிலையங்களையும் உற்பத்தி நிலையங் களையும் நடத்துவதற்கான திட்டங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் ; அங்கே பணி நடைபெற்று வருவதைக் கண்காணிக்க வேண்டும் ; மேலும், அங்கு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கும் அவரே பொறுப்பாவார்.

(11) மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையில் கூடும் மாவட்ட வளர்ச் சிக்குழுவின் கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும் ;

(12) பிற துறைகளால் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் அனைத்திலும் பங்கு கொள்ள வேண்டும் ;

(13) முக்கிய சேவிகள், கிராம சேவிகள், கார் நிலைப் பணியாளர் ஆகியோருக்கு விடுப்பு, ஊதிய உயர்வு ஆகியவற்றிற்கு ஒப்பளிப்பு வழங்க வேண்டும்.

## இணைப்பு—2.

[96-ம் பக்கத்தில் 272-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினவிற்குரிய விடையைக் காண்க]

திருச்சி மாவட்டத்தில் கீழே கண்ட முக்கியமான கனிவளங்கள் இருப்ப தாகத் தெரியவருகிறது :—

1. **சுண்ணாம்புக்கல் :** திருச்சி மாவட்டத்தில் பெரம்பலூர், அரியலூர், லால்குடி, ஆகிய வட்டங்களில் உள்ள கல்லக்குடி, ரெட்டிப்பாளையம், பெரிய நாகலூர், கல்பாடி, திருப்பத்தூர், சாலைமங்கலம், நெய்குளம், செந்துறை, அமினாபாத், ஹஸ்தினாபுரம் ஆகிய இடங்களில் சுண்ணாம்புக்கல் இருக்கின்றது.

2. திருச்சிமாவட்டம், குளித்தலை வட்டம் மீனாட்சிபுரத்திற்கும், மதுரை மாவட்டம், வேடசந்தூர் வட்டம் கஜிலம்பட்டிக்கும் இடையே 30 கிலோ மீட்டர் நீளத்திற்கும் சுண்ணாம்புக்கல் கிடைக்கின்றது.

வேதியல், சிமெண்ட் இதர தொழிற்சாலைகளுக்கு ஏற்றதான சுண்ணாம் புக்கல் மொத்தத்தில் சுமார் 42 மில்லியன் டன்கள் கிடைப்பதாக மதிப்பிடப் பட்டு இருக்கிறது.

2. **ஜிப்சம், செலஸ்டைட், பாஸ்பாட்டிக் நாடுல் :** பெரம்பலூர் வட்டம், குன்னத்திற்கும் லால்குடி வட்டம் பெரிய கொருக்கைக்கும் இடையே ஜிப்சம் கிடைக்கிறது. ஜிப்சத்துடன் கலந்து செலஸ்டைட்டும் (Celestite) பாஸ்பாட்டிக் நாடுலும் இந்த இடங்களில் கிடைக்கின்றன. இவ்விடங்களில் சுமார் 13 மில்லியன் டன்கள் ஜிப்சம் கிடைப்பதாக மதிப்பிடப்பட்டு இருக் கிறது. செலஸ்டைட்டும், பாஸ்பாட்டிக் நாடுல் மிகவும் சிறிதளவே கிடைச் கின்றது.

[1971 டிசம்பர் 11

3. களிமண் ] பெரம்பலூர், லால்குடி வட்டங்களில் உள்ள தேரணி, தேரணிப்பாளையம், கல்பாடி ஆகிய இடங்களில் சூடு தாங்கும் கல், கழிவு நீர்க்குழாய்கள், பானைகள் தயாரிப்பதற்கு ஏற்ற களிமண்கள் கிடைக்கின்றது. இவ்விடங்களில் 6,00,000 டன்கள் களிமண் கிடைப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

4. வெங்கச் செங்கல் (குவார்ட்ஸ்), களிமம் (பெல்ஸ்பா): குளித்தலை, மணப்பாறை, கரூர் ஆகிய வட்டங்களில் பல பகுதிகளில் பீங்கான் தொழிற்சாலைக்கு ஏற்ற வெங்கச் செங்கல்லும், களிமண்ணும் கிடைக்கின்றன. இவ்விடங்களில் சுமார் 2 இலட்சம் டன்கள் வெங்கச் செங்கலும், 3 இலட்ச டன்கள் களிமமும் கிடைப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

5. சிலிமனைட், கார்டியரைட்: குளித்தலை வட்டத்தில் கீரனூர், சக்காரக்கோட்டை ஆகிய கிராமங்களில் இந்தக் கனிவளங்கள் கிடைக்கின்றன. சுமார் 4,000 டன்கள் சிலிமனைட் இவ்விடத்தில் கிடைப்பதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. சூடு தாங்கும் கனிவளமாக சிலிமனைட் உபயோகப்படுகிறது.

6. சாதாரண மதிப்புள்ள கற்கள்: குளித்தலை, கரூர் வட்டங்களில் கீரனூர், சக்காரக்கோட்டை, உப்பிடமங்கலம் ஆகிய இடங்களுக்கு அருகாமையில் பெக்மடைட்டில் சாதாரண மதிப்புள்ள கற்கள் கிடைக்கின்றன. இவைகள் இயற்கையில் இங்குமங்குமாகக் கிடைக்கின்றன. தனியாக இக்கற்களை மட்டும் வெட்டி எடுக்க இயலாது.

The following important mineral deposits have been recorded in Tiruchirappalli district.

1. *Limestone.*—

(1) Near Kallakkudi, Reddipalayam, Periyanagalur, Aminabad, Hasthinapuram, Kallai, Kalpadi, Tirupathur, Shanamangalam, Neykulam, Sendurai, etc., falling in Perambalur, Ariyalur and Lalgudi taluks of Tiruchirappalli district.

(2) In a belt about 30 kilo metres long between Meenakshipuram in Kulithalai taluk, Tiruchirappalli district and Gapilampatti iin Vedasandur taluk, Madura district.

In all about 42 million tonnes of limestone suitable for use in Chemical and cement Industries have been estimated to occur in these areas.

2. *Gypsum, Celesthe and Phosphatic Nodules,*—

Gypsum occurs between Kunnam in Perambalur taluk and Periyakorukkai in Lalgudi taluk, Celestite (Sr SO4) and Phosphatic nodules also occur associated with gypsum in this area. About 13 million tonnes of gypsum have been estimated to occur in these areas. The occurrences of celestite and phosphatic nodules are in small quantities.



1971 டிசம்பர் 11]

3. *Clays.*—

Clays suitable for the manufacture of refractories, stoneware pipes and earthernwares are found in Therani, Theranipalayam and Kalpadi villages in Perambalur and Lalgudi taluks. About 6.00,000 tonnes of clay are estimated to occur in these areas.

4. *Quartz and Feldspar*—

Quartz and Feldspar which find use in Ceramic Industries are found in several parts of Kulitalai, Manaparai and Karur taluks. About 2 lakhs tonnes of quartz and 3 lakhs tonnes of feldspar are estimated to occur in these areas.

5. *Sillimanite and Cordierite*—

These minerals occur in Keeranur and Sakkarakottai villages of Kulithalai taluk. About 4,000 tonnes of Sillimanite have been proved in these areas. Sillimanite finds use as refractory mineral.

6. *Semi-Precious stone*—

Semi-previous stones occur in pegamatites near Keeranur, Sakkarakottai and Uppidamangalam in Kulithalai and Karur Taluks. The occurrences are sporadic in nature and cannot be mined exclusively for these stones.

[1971 டிசம்பர் 11

## இணைப்பு 3.

[101-ம் பக்கத்தில் 279-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

| | கூட்டுறவுப் பண்டகசாலையின் பெயர். | அரசினால் நியமனம் செய்யப்பட்ட டைரக்டர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை. | 1 |
| 2 | காஞ்சிபுரம் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை. | 1 |
| 3 | வடசென்னை கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை. | 1 |
| 4 | தஞ்சாவூர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை. | 3 |
| 5 | மாயூரம் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை. | 1 |
| 6 | திருச்சிராப்பள்ளி கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை. | 2 |
| 7 | திண்டுக்கல் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை. | 2 |
| 8 | ராஜபாளையம் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை. | 1 |
| 9 | விருதுநகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை. | 1 |
| 10 | ஈரோடு கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை. | 1 |
| 11 | திருப்பூர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை. | 1 |
| 12 | பொள்ளாச்சி கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை. | 1 |
| 13 | வால்பாறை கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை. | 1 |
| 14 | செங்கல்பட்டு மாவட்ட கூட்டுறவு வினியோக விற்பனைச் சங்கம். | 1 |
| 15 | வடஆற்காடு மாவட்ட கூட்டுறவு வினியோக விற்பனைச் சங்கம். | 3 |
| 16 | திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு வினியோக விற்பனைச் சங்கம். | 3 |
| 17 | புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு வினியோக விற்பனைச் சங்கம். | 2 |
| 18 | தென்னாற்காடு மாவட்ட கூட்டுறவு வினியோக விற்பனைச் சங்கம். | 2 |
| 19 | கன்யாகுமரி மாவட்ட கூட்டுறவு வினியோக விற்பனைச் சங்கம். | 2 |
| 20 | ராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு வினியோக விற்பனைச் சங்கம். | 2 |
| 21 | சேலம் மாவட்ட கூட்டுறவு வினியோக விற்பனைச் சங்கம். | 2 |
| 22 | கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு வினியோக விற்பனைச் சங்கம். | 2 |
| 23 | நீலகிரி மாவட்ட கூட்டுறவு வினியோக விற்பனைச் சங்கம். | 3 |



971 டிசம்பர் 11]

| Name of the Society. | Number of Directors nominated by Government. |
|---|---|
| (1) | (2) |
| 1. Park Town Co-operative Wholesale Stores ... ... ... ... | 1 |
| 2. Kancheepuram Co-operative Wholesale Stores ... ... ... ... | 1 |
| 3. North Madras Co-operative Wholesale Stores ... ... ... ... | 1 |
| 4. Thanjavur Co-operative Wholesale Stores ... ... ... ... | 3 |
| 5. Mayuram Co-operative Wholesale Stores ... ... ... ... | 1 |
| 6. Tiruchirappalli Co-operative Wholesale Stores ... ... ... ... | 2 |
| 7. Dindigul Co-operative Wholesale Stores | 2 |
| 8. Rajapalayam Co-operative Wholesale Stores ... ... ... ... | 1 |
| 9. Virudhunagar Co-operative Wholesale Stores ... ... ... ... | 1 |
| 10. Erode Co-operative Wholesale Stores... | 1 |
| 11. Tiruppur Co-operative Wholesale Stores | 1 |
| 12. Pollachi Co-operative Wholesale Stores | 1 |
| 13. Valparai Co-operative Wholesale Stores | 1 |
| 14. Chingleput District Co-operative Supply and Marketing Society ... ... | 1 |
| 15. North Arcot District Co-operative Supply and Marketing Society ... | 3 |
| 16. Tiruchy District Co-operative Supply and Marketing Society ... ... | 3 |
| 17. Pudukottai Co-operative Supply and Marketing Society ... ... | 2 |
| 18. South Arcot District Co-operative Supply and Marketing Society ... | 2 |
| 19. Kanyakumari District Co-operative Supply and Marketing Society ... | 2 |
| 20. Ramanad District Co-operative Supply and Marketing Society ... ... | 2 |
| 21. Salem District Co-operative Supply and Marketing Society ... ... | 2 |
| 22. Coimbatore District Co-operative Supply and Marketing Society ... | 2 |
| 23. Nilgiris District Co-operative Supply and Marketing Society ... ... | 3 |

# தமிழ் நாடு சட்டப் பேரவை.

## திங்கட்கிழமை. 1971 டிசம்பர் 13.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

### ஹஜ்ஜிக் கப்பல்கள்

* குறுகிய கால வினா எண் 1—திரு. எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜித்தாவுக்குச் செல்ல வேண்டிய ஹஜ்ஜிக் கப்பல்கள் தற்காலிகமாக நெருக்கடி நிலையை உத்தேசித்து ரத்துச் செய்யப்பட்டு, தமிழ்நாட்டிலிருந்து ஹஜ்ஜிக்கு கிளம்பிச் சென்ற பலர் பம்பாயிலிருந்து திரும்பிச் செல்ல வேண்டுமென்று கூறப்பட்டிருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இது விஷயமாக அரசு என்ன நடவடிக்கை எடுப்பதாக உத்தேசம் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) மத்திய அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதன் தொடர்பாக மத்திய அரசினடமிருந்து நமக்குக் கிடைத்திருக்கும் தகவலையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்து விடுகிறேன்.

Two Haj Pilgrimage ships due to start on the 7th and 9th December 1971 have been stopped on the advice of the Naval authorities. The cancellation of sailings is only for the time being and the position is expected to be reviewed after a week and a decision has to be taken with reference to the circumstances prevailing there. The pilgrims have therefore been advised to go back to their places and not to return to Bombay till they are advised by Mogul lines (Shipping Company). Instructions have been issued to Mogul Lines to advise the pilgrims individually and through newspapers in advance when arrangements are made for the sailings next.

[1971 டிசம்பர் 13

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவர் அவர்களே, இந்த இரண்டு ப்பல்கள் ரத்து செய்யப்பட்டிருப்பதால் எத்தனை ஹாஜ் ராயணிகள் அதனால் பம்பாயிலிருந்து மீண்டும் தமிழ் நிலத்திற்குத் திரும்பி வரவேண்டும் என்று கூறப்பட்டிருக் றார்கள். அவர்களுடைய எண்ணிக்கை எத்தனை? அவர்களுடைய ண்ணிக்கை அதிகமாக இருக்கிற காரணத்தினால், அவர்களுக்கு ம்பாயில் டிக்கட் கிடைப்பது அரிதாக இருந்து, அவர்கள் ஷ்டப்படுகிறார்கள் என்று தகவல் வந்திருக்கிற காரணத்தினால் ரு தனி ரயில் விட்டு அவர்களையெல்லாம் ஒட்டுமொத்தமாகத் மிழ்நாட்டுக்கு அனுப்பும்படியாக மத்திய அரசுக்கு இந்த அரசு ரிந்துரை அனுப்பி உடனடியாக ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** எத்தனை ஹாஜ் ரயாணிகள் என்கிற விவரம் இல்லை. என்றாலும், ஏற்கனவே வர்கள் அனுமதிக்கப்பட்டவர்கள். 7-ந் தேதி, 9-ந் தேதி புறப் டுகிற கப்பல்களை ரத்து செய்த காரணத்தினால் அவர்கள் மீண்டும் ம்பாய்க்கு வர வேண்டாம் என்று அரசாங்கத்தின் மூலமாகவும் த்திரிகையின் மூலமாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறார்கள். தனி ரயில் பற்றி என்னிடத்தில் குறிப்பு இல்லை. மாண்புமிகு உறுப் னர் அவர்கள் அதுகுறித்து எழுதியனுப்பினால் மத்திய அரசுக்கு னுப்பி வைக்கலாம்.

### திரைப்படத் தணிக்கை வாரியம் அமைப்பு

* 294 வினா—திரு. ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு முதல் மைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) இந்தப் பகுதிக்குத் திரைப்படத் தணிக்கை வாரியம் அமைப்பது குறித்து, மத்திய அரசு மாநில அரசைக் கலந்து செயல் படுகிறதா?

(இ) ஆமெனில், அதுபற்றிய விவரங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) இல்லை.

(இ) இந்த வினா எழவில்லை.

### திரைப்பட நடிகர்களின் வருமானம்

* 295 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

தமிழகத்தில் திரைப்பட நடிகர்களின் ஊதியத்தைக் கட்டுப் படுத்த ஏதேனும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இல்லை. திரைப்படக் கலை ஞர்கள் வருவாய்க்கு மேல் வரம்பு விதிப்பதற்கு இந்த அரசுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை.



1971 டிசம்பர் 13]

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, திறமை இருந்தும் மிகவும் குறைந்த ஊதியத்தைப் பெற்றுவரும் அடித்தளத்திலுள்ள திரைப்படக் கலைஞர்களுக்குப் போதிய ஊதிய உயர்வு கொடுக்கப் பட அரசு வழிசெய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அவர்கள் அப்படிப்பட்ட தொழிலுக்கு அழைக்கப்படும்போது அந்தக் கலைஞர்களே தங்க ளுக்கு இந்த ஊதியம் இருந்தால்தான் இதில் ஈடுபட முடியும் என்று கூறுவதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அதிக ஊதியம் பெறக்கூடிய சில நடிகர்கள் வருமான வரி கொடுக்காமலிருக்கிறார்கள் என்று சொல் லப்படுகிறதே; அப்படியானால் அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய ஊதியங்கள் பரிபூரணமாக வெளியே கொண்டுவரப்பட்டதா? அல்லது ஊதியங்கள் வாங்கியும் வேறு சில விவரங்களைத்தான் வருமான வரி அதிகாரிகளுக்குக் கொடுத்திருக்கிறார்களா என்ற தகவல் தமிழக அரசுக்கு இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்படிப்பட்ட தகவல் எதுவும் தமிழக அரசுக்கு இல்லை. ஆனால், வருமான வரி அதிகமாக பாக்கி இருப்பதாகப் பல நடிகர்களின் பெயர்கள் பத்திரிகையில் வந்திருக்கின்றன. அந்த விவரம்தான் அரசுக்குத் தெரியும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, நடிகர்களின் வருமா னத்தைப் பரவலாக்கும் முறையில் ஒரு நடிகை இத்தனை ஃபிலிம் களில்தான் நடிக்க முடியும் என்ற கட்டுப்பாட்டை விதிக்க இந்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கலைக்குக் கட்டுப்பாடு எதுவும் விதிக்க முடியாது. படம் எடுப்பவர்கள் வேண்டுமானால் அந்தக் கட்டுப்பாட்டைத் தங்களுக்குள் வைத்துக் கொள்ளலாம். அப்படிப் படத் தயாரிப்பாளர்கள் அந்தக் கட்டுப்பாட்டை விதித்து அது நடைமுறைக்கு வராமல் போய்விட்டதையும் நாடு அறியும்.

**திரு. எம். முத்தையா :** தலைவர் அவர்களே, நடிகர்களுடைய ஊதியத்தைக் கட்டுப்படுத்த முடியாது என்று முதலமைச் சரவர்கள் சொன்னார்கள். ஆனால், இத்தனை வயது வரைக்கும் நடிக்கலாம் என்று அரசு உச்சவரம்பு விதிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** 90 வயது உள்ளவர்கள் கூட படத்திலே நடிக்கலாம். ஆகவே, அப்படி, அதற்கெல்லாம் வயது வரம்பு வைத்தால் இத்தனை வயது உள்ளவர்கள்தான் படம் பார்க்கலாம் என்று அதற்குக்கூட வயது நிர்ணயம் செய்ய வேண்டும்.

**திரு. நா. வீராசாமி :** சில புதிய நல்ல நடிகர்கள் நடிப்புத் தொழிலில் ஈடுபடும்போது, நல்ல அனுபவம் பெற்ற பெரிய

நடிகர்கள், அவர்கள் முன்னணிக்கு வரவொட்டாமல் முட்டுக் கட்டையாக இருப்பதைப்பற்றி அரசுக்கு ஏதாவது தகவல் தெரியுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஒருவருடைய முன்னேற்றத்தில் இன்னொருவர் முட்டுக்கட்டையாக இருப்பது கலைத் துறையில் மட்டுமல்ல ; அது எல்லாத் துறைகளிலும் இருக்கும் சகஜமான ஒன்றுதான்.

**THIRU K. S. KOTHANDARAMIAH :** Sir, Cinemas and cinema industries are expanding. May I know from the Hon. Chief Minister whether it comes under the Central List, Concurrent List or the State List?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில் கேட்கப்பட்டிருக்கிற விவரம் இப்பொழுது மத்திய அரசினுடைய விவகாரத்தில்தான் இருக்கிறது.

**திரு. கோ. இளங்கோவன் :** நமது அரசு நடத்தும் நடிப்புக் கலைக் கல்லூரியில் தேர்ச்சி பெற்றவர்கள் நல்ல நடிகர்களாக வந்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அப்படிப்பட்ட விவரங்கள் எதுவும் என்னிடத்தில் இப்பொழுது இல்லை.

### மதுரை நகருக்கு வானொலி நிலையம்

* 296 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகரில் வானொலி நிலையம் அமைத்திட தமிழ்நாடு அரசு மத்திய அரசினை கோரியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) மதுரை மாநகரில் வானொலி நிலையம் அமைக்க வேண்டிய அவசியத்தை தமிழக அரசு மத்திய அரசிடம் வலியுறுத்திக் கூறியது. அதற்கு நான்காவது திட்டக் காலத்தில் எல்லைப்புறம் போன்ற பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலும், மலைப் பகுதி, பின்தங்கிய பகுதி மற்றும் இதுவரை வானொலியால் பயன் பெறாத பகுதி ஆகிய இடங்களில் வானொலி நிலையம் அமைக்க முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்படி திட்டங்கள் தீட்டி ஏற்கனவே செயல்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டு விட்டது. இதன் காரணமாகவும், நிதி வசதியின்மையாலும் புதிய திட்டங்கள் எதுவும் எடுத்துக்கொள்ள இயலவில்லை. எனினும் இனிமேல் மேற்கொள்ளப்படும் திட்டங்களின்போது மதுரை மாநகரின் தேவையையும் கருத்தில் கொள்ளப்படும் என்று மைய அரசு கூறியுள்ளது.





**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, மதுரை அண்மையில் மாநகராட்சியாக ஆகியுள்ளது. இது தமிழகத்தின் இரண்டாவது மாநகராட்சியாக உருவெடுத்துள்ளதால், இதனைச் சுட்டிக்காட்டியேனும் மதுரைக்கு அத்தகைய வானொலி நிலையத்தை அமைக்க அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மைய அரசுக்கு அடுத்து ஒரு கடிதம் எழுதும்போது மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன இந்தப் புதிய கருத்தும் அதிலே சேர்க்கப்படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இந்த அவசர காலத்திலே வடக்கே வேண்டுமென்றால் இப்பொழுது ரேடியோ ஸ்டேஷன் திறக்கக் கஷ்டம் இருந்தாலும்கூடத் தென்பிராந்தியத்திலே கொஞ்சம் வலுவான ஸ்டேஷன் அமைக்க வாய்ப்பிருக்கிறது. எனவே, அம்மாதிரி அமைக்கும் பெரிய ஸ்டேஷனை மதுரையில் அமைக்க, நான்காவது திட்டத்தில் ஆக்க. மீண்டும் அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** அதைத்தான் ஏற்கனவே சொன்னேன், அடிக்கடி, மதுரையில் வானொலி நிலையம் அமைப்பது சம்பந்தமாக, மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்திக்கொண்டே இருக்கும்.

* 287 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசின் திட்டங்களை வானொலியில் பிரச்சாரம் செய்ய மத்திய அரசிடம் வானொலியில் தனியே நேரம் ஒதுக்கக் கோரி மாநில அரசு வலியுறுத்தியுள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** "வளரும் தமிழகம்" என்ற தலைப்பில் திங்கள் இருமுறை முதல் ஞாயிறும், மூன்றும் ஞாயிறும் தமிழக அரசால் மக்களின் நலனுக்காக நிறைவேற்றப்படும் பல்வேறு திட்ட ஆக்கப்பணிகளைப் பற்றி பொது மக்களுக்கு எடுத்துக்கூறும் நோக்கத்துடன், பல்வேறு துறைத் தலைவர்களும் வானொலி உரை நிகழ்த்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட நாட்களில் மாலை 6.30 மணிக்கு இதற்காக சுமார் 10 முதல் 12 நிமிடங்கள் வரை வானொலி நிலையத்தார் ஒதுக்கி இருக்கின்றனர். இத் திட்டம் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக செயலில் இருந்து வருகிறது.

### அரசு அலுவலகங்களில் வேலை நாட்கள்

* 298 **வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு அலுவலங்களில் வாரத்துக்கு ஐந்து தினங்கள் மட்டும் வேலை நாட்களாக்குவதற்கு செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

[1971 டிசம்பர் 13

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இல்லை.

**திரு. பி. எஸ். மணியன் :** தலைவரவர்களே, சில வெளிநாடுகளிலே செய்வதுபோல் காலை 8 மணிக்கே அரசாங்க அலுவலகங்களைத் துவக்கி, 2 மணி அளவில் முடிக்கின்ற முறையில் மாற்றியமைக்க அரசு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** வெளிநாடுகளிலுள்ள பல்வேறு மாற்றங்களை இங்கே எடுத்துரைக்கும் நேரத்தில், இங்கேயிருப்பவர்கள் அதைச் சுலபத்தில் ஒத்துக்கொள்வதாகயில்லை.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவரவர்களே, யுத்த நெருக்கடியை முன்னிட்டு மத்திய அரசாங்க அலுவலகங்களில் 11-ம் தேதி இரண்டாவது சனிக்கிழமைகூட வேலைநாட்களாக வைக்கப்பட்டிருக்கிறது. அதுபோல மாநில அரசும் இரண்டாவது சனிக்கிழமைகளை யுத்த நெருக்கடியை முன்னிட்டு வேலைநாட்களாக ஆக்க முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அவசியமேற்பட்டால் அதுபற்றி யோசிக்கலாம். இப்பொழுதே அரசு ஊழியர்கள் பலர் அரை மணி நேரம் அதிகமாக வேலை செய்யத் தாங்கள் தயாராக இருப்பதாகக் கூறியிருக்கிறார்கள்.

### *Pavement vendors in Madras*

* 299 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state the steps taken by the Government to eliminate the nuisance caused by the pavement vendors in Madras City?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நடைபாதைகளில் பண்டங்கள் விற்போர் போக்குவரத்துக்குத் தடையாகக் காணப்படும் பொழுதெல்லாம் சென்னை மாநகரக் காவலர் சட்டத்தின் கீழ், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அவர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. மாநகரக் காவல் துறையினர் சென்னை மாநகராட்சியின் ஒத்துழைப்புடன், 1971 ஆகஸ்டில் சிறப்பு நடவடிக்கை எடுத்து, மாநகரின் சில முக்கியச் சாலைகளிலிருந்து அவர்களை அகற்றி, ஆக்கிரமிப்பு நீக்கினர். நடைபாதைகளில் தொடர்ந்து எவ்வித ஆக்கிரமிப்புகளும் ஏற்படாதிருப்பதை உறுதிப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, இந்த நடைபாதையில் கடை வைத்திருந்தவர்கள் பெரும்பாலோர் மலேசியாவிலிருந்தும், பர்மாவிலிருந்தும் இங்கே அகதிகளாக வந்தவர்கள். அவர்கள்



1971 டிசம்பர் 13]

இங்கேயிருந்து வெளியேற்றப்பட்டவுடன் அவர்களுக்கு மாற்று இடம் அளிக்கப்பட்டு, அவர்கள் வாழ்க்கைக்கு வழி செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பெரும்பாலும் பர்மா போன்ற நாடுகளிலிருந்து வந்தவர்கள் என்று கூறுவது அவ்வளவு சரியான தகவல் அல்ல. அவர்கள் வருவதற்கு முன்பே இப்படி நடைபாதைகளை இங்கேயுள்ள வியாபாரிகள் பயன்படுத்திக் கொண்டு வந்தார்கள். அவர்களுக்கும் இவர்களுக்கும் சேர்த்து மாற்று இடங்களை அளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, பல பகுதிகளில் மாற்று இடங்கள் தரப்பட்டிருக்கின்றன. இன்னும் தரப்படாதவர்களுக்கு இடங்கள் தரப்படுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவரவர்களே, சென்னையில் நடைபாதையிலே ஆங்காங்கு உள்ளவர்கள் பல கோயில்களைக் கட்டி நடைபாதைகளில் பொதுமக்களுக்குத் தொல்லை கொடுத்துக்கொண்டிருக்கிறார்களே, அதனால் அரசாங்கம் அந்த நடைபாதையிலுள்ள கோயில்களை அகற்ற உடனடியாக ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கேள்வி நடைபாதை வியாபாரிகளைப் பற்றியது. பக்திபூர்வமாக ஏற்கனவேயிருக்கும் கோயில்கள் அனுமதிக்கப்படும். வியாபாரத்திற்காக ஏற்படும் கோயில்கள் அனுமதிக்கப்படமாட்டாது.

### *Ramaswamy Raja Polytechnic*

* 300 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether any accused wanted in connection with the alleged misappropriation of funds in 1965, 1966 and 1967 at the Ramaswamy Raja Palytechnic Rajapalayam is still at large ; and

(b) if so, the details of the steps taken to apprehend him ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### *Staff of aided Colleges*

* 301 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government has any proposal to extend to the staff of aided Colleges the same benefits as granted to the staff of Government Colleges;

(b) if so, the details thereof; and

(c) if not, the reasons therefor?

[1971 டிசம்பர் 13

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) இரண்டாவது சம்பளக் குழுவின் பரிந்துரையின்பேரில், அரசுக் கல்லூரி அலுவலகர்களுக்கு அளிக்கப்படும் சம்பள விகிதங்கள் பஞ்சப்படி, வீட்டு வாடகைப்படி. நகர ஈட்டுப்படி முதலியன தனியார்/ஆசிரியர்கள் மேலும்/கல்லூரி அலுவலர் களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. கீழ் ஓய்வு ஊதியத்தை தனியார் கல்லூரி அலுவலர்கட்கும் விரிவாகும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

(உ) வினாவுக்கு இடமில்லை.

*Inscriptions of the Chola period near Tiruthani*

* 302 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the State Department of Archaeology has unearthed inscriptions of the Chola period near Tiruthani in 1971, and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) திருத்தணிக்கு அருகில் விளக்கணாம்பூண்டியில் உள்ள தொன்மையான ஆலயம் ஒன்றில் இரு கல்வெட்டுகள், அரசு தொல் பொருள் ஆய்வுத் துறையால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. ஒன்று கி.பி. 9-ம் நூற்றாண்டின் இறுதியில் இப்பகுதியை ஆண்ட அரசனது கால கல்வெட்டு ; மற்றொன்று கி.பி. 13-ம் நூற்றாண்டில் ஆண்ட விஜய கண்ட கோபாலன் என்னும் சோழ மன்ன னுடையது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Some three months back Archaeological Department of our State published new inscription connected with the Chola and Pallava Kings, and specially with regard to Mahendravarman I. They are important for fixing the Pallava chronology. But it is published piecemeal. May I request the Hon. Minister to instruct the University to publish the entire details in the interest of the public?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் அப்படிப்பட்ட ஆராய்ந்த கருத்துக்களையெல்லாம் வெளியிடுகின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கி றார்கள். விரைவில் அதுபற்றி முடிவுகள் வெளிப்படும்.

**திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, திருத்தணிக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த சோழர் கால கல்வெட்டில் அடங்கியுள்ள செய்திகள் என்ன என்பதை அரசு அறியுமா ?



1971 டிசம்பர் 13]

**மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதைப்பற்றிய விவரங்களைத் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் கோயிலைப்பற்றிய குறிப்புகள் தெரிகின்றன. அந்தக் கோயில் விசயாலய சோழச் சுரம் என்று கோயிலுக்குப் பெயரிடப்பட்டிருக்கிறது. தஞ்சையில் சோழப் பேரரசை நிறுவியவன் விசயாலய சோழன். அந்த அரசனின் காலத்திலோ அல்லது அவன் கீழ்ப்பட்ட சிற்றரசன் ஒரு வனாலோ கட்டப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இந்தக் கல்வெட்டைப்பற்றித் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் ஆராய் கிறார்கள், பிறகு வெளியிடப்படும்.

*Tamil in Indore University*

* 303 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government has received any communication from Indore University regarding introduction of Tamil in that University; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இந்தூர் பல்கலைக் கழகத்தில் தமிழ் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்பதற்காக 3 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தமிழாசிரியரைத் தமிழ்நாட்டிலிருந்து கொடுக்க வேண்டுமென்றும், அதற்காக பாதி அளவாவது தாங்கள் சம்பளம் கொடுப்பதாகவும், மற்ற பாதியை தமிழக அரசு கொடுக்க வேண்டு மென்றும். பின்னால் தாங்களே ஏற்றுக்கொள்வது என்றும் சொல்லி ஏதாவது கடிதம் வந்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இந் தூர் பல்கலைக் கழகத்திலிருந்து இப்படிப்பட்ட குறிப்பு எதுவும் அரசாங்கத்திற்கு வந்ததாகத் தெரியவில்லை. வேறு பல்கலைக்கழ கங்களைப் பொறுத்தவரையில், பஞ்சாப் பல்கலைக் கழகம் தமிழ்ப் பிரிவிற்காக 3 லட்சம் ரூபாய் ஒதுக்கி தமிழ் சொல்லிக்கொடுக்க வழிவகை செய்யப்பட்டிருப்பதாக பஞ்சாப் அரசு தமிழக அரசுக்கு அறிவித்திருக்கிறது. 16–7–1969 அன்று உஸ்மானியா பல்கலைக் கழகத்திற்கு தமிழ் பாடத்திற்காக ஆண்டு ஒன்றுக்கு 25,000 ரூபாய் விதம் 5 ஆண்டுக் காலத்திற்கு இந்த அரசு வழங்க ஒப்புதல் அளித் திருக்கிறது. 27–10–1969 அன்று ஸ்ரீ வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத்திற்கு தமிழ்ப் பாடத்திற்காக ரூ. 10,000 ஆண்டு ஒன்றுக்கு விதம் 5 ஆண்டுகளுக்கு இந்த அரசு வழங்க ஒப்புதல் அளித்திருக் கிறது. 1—4—1970-ல் ஆக்ரா பல்கலைக் கழகத்திற்கு 1970-71-ல் தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சிக்காக ரூபாய் 1,532 வழங்கப்பட்டிருக் கிறது.

### *Mufassal Bus Stand at Broadway*

* 304 *Q.*—DR. H. V. HANDE:
THIRU K. A. WAHAB: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether this Government have any proposal to remodel the Mufassal Bus Stand at Broadway?

(*b*) if so, the details thereof; and

(*c*) the total number of incoming and outgoing buses per day therein?

***மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்*** : (அ) சென்னை மாநகராட்சி பிராட்வேயிலுள்ள புறப்பகுதி பேருந்து நிலையத்தை புது மாதிரியாக அமைக்க உத்தேசித்துள்ளது.

(இ) விவரங்கள் உருக்கொடுக்கப்பட்டு வருகின்றன.

(உ) ஒவ்வொரு நாளும் பேருந்துகள் புகுவன நூற்று இரண்டும், புறப்படுபவை அதற்குச் சமமான எண்ணிக்கையும் ஆகும்.

***திரு. கே. ஏ. வகாப்*** : தலைவரவர்களே, பிராட்வேயிலுள்ள இந்த வெளியூர் பேருந்து நிலையம் மிகவும் நெருக்கடியாகயிருப்பதால் அதை விரிவடையச் செய்தாலும்கூட பல சிரமங்கள் ஏற்படும். ஆகவே அந்த இடத்தை மிகவும் பரவலாக உள்ள மூர்மார்க்கெட் அருகிலாவது அல்லது மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதியைப் பெற்று தீவுத் திடலிலாவது அமைக்க அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்*** : தலைவரவர்களே இந்த பிராட்வே பேருந்து நிலையத்தை சீர்திருத்தி மாற்றியமைப்பது, வேறு இடத்திற்கு மாற்றுவது போன்ற கருத்துக்கள் சென்ற 10, 12 ஆண்டு காலமாக இருக்கிறது. முதலில், சைதாப்பேட்டையில் ஒரு பேருந்து நிலையமும், திருவொற்றியூரில் ஒரு பேருந்து நிலையமும், பூந்தமல்லி நெடுஞ்சாலையில் ஒரு பேருந்து நிலையமும் ஆக 3 பகுதிகளாக வைக்கலாம் என்று கருத்து இருந்தது. ஆனால் அப்படிச் செய்தால் வருகிறவர்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு வைத்துக்கொள்ள முடியாது என்று கருதப்பட்டு பிறகு அந்தத் திட்டத்தை மாற்றி பிராட்வே பேருந்து நிலையத்தை விரிவு படுத்துவது என்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்காக போட்ட திட்டம் 13,95,000 ரூபாய் என்று போட்டிருக்கிறது. இது தலைமைப் பொறியாளரின் ஆய்வில் இருக்கிறது. அதில் சில மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று தலைமைப் பொறியாளர் மாநகராட்சி மன்றத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாநகராட்சி மன்றம் 6 இலட்சம் ரூபாய் கடன்





வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இது பரிசீலனையில் இருக்கிறது. விரைவிலே முடிவெடுக்கப்பட்டு பிராட்வேயைச் சீர்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

***திருமதி ஜோதி வெங்கடாசலம்*** : தலைவர் அவர்களே, இந்தப் பிராட்வே பேருந்து நிலையத்தினை விரிவுபடுத்த ஏற்பாடுகள் நடக்கின்றன என்று சொன்னார்கள். அங்கு பல ஆண்டுகளாக கூடை பின்னுகிறவர்கள், தட்டி பின்னுகிறவர்கள் போன்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன வசதிகள் செய்து கொடுக்கப் போகிறார்கள்?

***மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்*** : அவர்களுக்கு வேறு மாற்று இடம் ஏதாவது பார்த்துத் தரவேண்டுமே தவிர, அந்தப் பேருந்து நிலையம் நீண்ட நாட்களாக மக்களுக்கு அசௌகரியமான தன்மையில் அமைந்திருக்கிறது. பஸ்கள் வந்தாலும். பயணிகள் தங்குவதற்கோ அல்லது பஸ்களைப் பிடிப்பதற்கோ அல்லது அவர்களுக்கு ஓய்வு பெறவோ அங்கு வசதி வாய்ப்பில்லாமல் இருக்கிறது. ஆகவே, அதை எடுத்துக்கொள்ள வேண்டும். அங்குதான் பேருந்து நிலையத்தினை சீர்படுத்தி அமைக்க வேண்டும். கூடை பின்னுகிறவர்கள், மற்றவர்களுக்கு மாற்று இடம் பார்த்துத் தர வேண்டும். அதை நகராட்சி மன்றம் முறைப்படி கவனிக்கும்.

***திருமதி த. ந. அனந்தநாயகி*** : பல ஆண்டுக் காலமாக இந்தப் பிரச்சினையை ஆராய்ந்து வருகிறோம், ஆராய்ந்து வருகிறோம் என்ற பதிலைத்தான் நாம் பெற்றுக்கொண்டிருக்கிறோம். எனவே, குறைந்த பட்சம் இந்த ஆண்டிலாவது அதைச் சீர்படுத்துவதற்காக அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுக்குமா? அதற்கு எவ்வளவு காலமாகும் என்பதை தயவுசெய்து அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவார்களா?

***மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்*** : மாநகராட்சிமன்றம் அதற்கான திட்டத்தைத் தீட்டிவிட்டது. சிலபல மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று தலைமைப் பொறியாளர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு ஒரு நாள் கூட குறிப்பிடப் பட்டது அடிக்கல் நாட்டுவதற்காக. அரசாங்கத்தின் அனுமதி இல்லாததால், அதைப் பெற்று விட்டு பிறகு அடிக்கல் நாட்டலாம் என்று ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. விரைவில் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

### நகராட்சிப் பேருந்து நிலையங்கள்

* 305 ***வினா—திரு. என். கிட்டப்பா*** : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகராட்சிப் பேருந்து நிலையம் கட்ட அந்த நகராட்சியால் செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

[1971 டிசம்பர் 13

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : மாயூரம் நகராட்சியால் பேருந்து நிலையம் கட்டுவதற்கு இதுவரையில் ரூ. 1,70,284.37 செலவு செய்யப்பட்டுள்ளது.

**திரு. என். கிட்டப்பா** : மாயூரம் நகராட்சிப் பேருந்து நிலையம் கட்டுவதற்கான மொத்த மதிப்பீட்டையும், அதற்கு நம் அரசாங்கம் கடனாகவும் மானியமாகவும் வழங்கியிருக்கிற தொகையையும், அந்த இடத்தில் பேருந்து நிலையம் எப்போது கட்டி முடிக்கப்பட இருக்கிறது என்பதையும் அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 1,70,284.37. பேருந்து நிலையத்தில் மாற்று வேலைகள், பயணிகள் தங்குமிடம், டிக்கட்ஸ் கொடுக்கப்படும் இடம், அலுவலர்கள் அறை போன்றவைகளுக்கு கடனாக ரூ. 18,000 கொடுக்கப்பட்டது. அந்த ரூபாய் 18,000-ம் செலவழிக்கப்பட்டது. பிறகு ரூபாய் 40,000 கடனாகப் பெற்றார்கள். அதையும் செலவழித்திருக்கிறார்கள். பிறகு ரூ. 15,000 பெற்றார்கள். அதுவும் இந்த வகைகளுக்காகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. நகராட்சிப் பேருந்து நிலையத்தில் கடைகள் கட்டுவதற்காக ரூ. 10,000 கொடுக்கப்பட்டது. ரூ. 18,263.55 காசு அதற்காகச் செலவழித்திருக்கிறார்கள். பிறகு நகராட்சி மன்ற பேருந்து நிலையத்தில் கட்டைச் சுவர் கட்ட, வடபாகத்தை அகலப்படுத்த ரூ. 15,000 கடன் பெற்றார்கள். அதில் ரூ. 7,500-யை செலவிட்டுவிட்டு மீதி ரூ. 7,500-ஐ அரசாங்கத்தினிடம் திருப்பித் தந்திருக்கிறார்கள். மூன்றாம் நிலைக்கட்டத்தில் ரூபாய் 20.000 பெற்றார்கள். அதையும் செலவழித்திருக்கிறார்கள். கடைகள் கட்டுவதற்காக ரூ. 20,000 பெற்றார்கள் 21—5—70-ல் மேற்கொண்டும் செலவாகியிருக்கிற அவ்வளவையும் சேர்த்து ரூ. 1,70,284.37.

*306 **வினா—திரு. கே. ஏ. வகாப்** : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராணிப்பேட்டையில் முனிசிபல் பஸ் நிலையம் அமைக்க அரசு கடன் தொகை ஏதும் வழங்கியுள்ளதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. ஏ. வகாப்** : இராணிப்பேட்டை பெரிய நகராட்சி. அங்கு பஸ்கள் வந்து தங்குவதற்கு போதிய இடவசதி இல்லை. ஷாப் வசதியும் இல்லை. ஆகவே அந்த முனிசிபாலிட்டி இது குறித்து தீர்மானம் போட்டு அரசாங்கத்தை அணுகியிருக்கிறார்கள். இப்போதாவது இதைக் கவனித்து ஆவன செய்வார்களா ?



1971 டிசம்பர் 13]

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : இராணிப்பேட்டையில் ஒரு பேருந்து நிலையம் கட்ட ஒரு லட்சம் ரூபாய் கடனும், கோட்டாசித் தலைவர் அலுவகத்தில் 51 சென்ட் நிலமும் கேட்டார்கள். அதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மறுத்துவிட்டார்கள். வேறு இடம் பார்த்த பிறகு கடன் கேட்டால் பிறகு யோசிக்கப்படும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : எந்தெந்த முனிசிபாலிட்டிகளில் பஸ் ஸ்டாண்ட்கள் கட்டப்பட்டிருக்கின்றன ? எங்கெங்கு கட்டப்படும் ? எவ்வளவு செலவாகும் என்பதற்கு ஏதாவது கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறதா இந்த அரசாங்கத்தினால் ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்** : பொதுவாக நகராட்சிமன்ற பஸ் நிலையங்களில் பப்ளிக் கன்வீனியன்ஸ் இல்லை. இருக்கிற இடங்களில் கூட அவை சரிவர பராமரிக்கப்படவில்லை. அதனால் பொது மக்களின் சுகாதாரம் பாதிக்கப்படுகிற நிலை இருக்கிறது. ஆகவே, அதுகுறித்து ஆலோசித்து அரசாங்கம் ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : நகராட்சிமன்றங்களிலுள்ள பேருந்து நிலையங்களைக் கண்காணிக்கும் பொறுப்பை அந்தந்த நகராட்சி மன்றங்கள் மேற்கொண்டிருக்கின்றன. ஆகவே, குறைபாடுகள் இருக்குமானால் அதை அந்த அந்த நகராட்சி மன்றங்களின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். அப்படி அங்கு வசதிகள் ஏற்படுத்தப்படாமல் இருக்குமானால் ஏற்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளலாம். நகராட்சி மன்றங்கள் மூலம் அணுகினால் தக்க நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும்.

## *Report of National Labour Commission*

"307 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the report of the National Labour Commission has been received by the Government; and

(b) if so, whether the report will be placed on the Table of the House?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்** : (அ) ஆம்.

(இ) இவ்வறிக்கை ஐந்நூறுக்கும் மேற்கொண்ட பக்கங்களைக் கொண்டதாக இருப்பதால், அவையின் முன் வைக்க இயலவில்லை. உறுப்பினர்களின் பார்வைக்காக சில நகல்கள் சட்டப் பேரவையின் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த அறிக்கையிலுள்ள முக்கியமான அம்சங்களையாவது தொகுத்து இந்தச் சட்ட சபைக்குத் தருவதற்கு அமைச்சர் அவர்கள் வழி செய்வார்களா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : உறுப்பினர் அவர்களின் யோசனையை அரசாங்கம் பரிசீலனை செய்து ஆவன செய்யும்.

## ஈ.எஸ்.ஐ. மருந்தகங்கள்

* 308 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு தொழிற்சாலையிலும் அரசு E.S.I. மருந்தகங்களை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஒவ்வொரு தொழிற்சாலையிலும் E.S.I. மருந்தகங்களை ஏற்படுத்தும் செயற்குறிப்பு எதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. பி. எஸ். மணியன் : ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் இடையே நீண்டதூரம் பலவிடங்களில் இருக்கிறது. அந்த வசதிகளை தொழிற்சாலைகளில் இருக்கக்கூடிய தொழிலாளர்கள் பெறுவதற்கு இயலவில்லை. ஆகவே அந்தக் குறையை நிவர்த்திக்கும் வகையில் அதிக தூரத்திலுள்ள தொழிற்சாலைகளிலாவது, சிறிய அளவில் மருந்தகங்களை அமைப்பதுபற்றி அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இப்போதே ஈ.எஸ்.ஐ.-க்கு மத்திய அரசு தரும் உதவியோடு, நமது மாநில அரசு ஒன்றரைக் கோடி ரூபாய் அதிகமாகச் செலவழித்து வருகிறது. ஆகவே' இன்னும் அதிகமாகத் தரவேண்டுமென்று மாநில அரசு, மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது. நிதி வசதி கிடைத்தவுடன் உறுப்பினர் அவர்களின் யோசனை நடைமுறைக்கு வர பரிசீலனை செய்யப்படும்.

* 309 வினா—திரு. ஏ. சுப்பிரமணியம் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை, சிங்காநல்லூரில் கட்டப்பட்டுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்ட மருத்துவ மனையில், படுக்கை எண்ணிக்கையை தொடக்கத்தில் திட்டமிட்டிருந்தபடி 500 ஆக உயர்த்திட செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தற்போது எதுமில்லை.



## மீன் ஏற்றுமதி

* 310 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மீன் வளர்ப்புத் துறையின் மூலம் வெளிநாடுகளுக்கு மீன் ஏற்றுமதி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், கேரள மாநிலத்திலிருந்து வெளிநாடுகளுக்கு ஏராளமான இரால் மீன்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அதைப்போல இங்கிருந்தும் இரால் மீன்கள் ஏற்றுமதி செய்யும் திட்டத்தை அரசாங்கம் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கிட்டத்தட்ட 2.49 கோடி ரூபாய் பெறுமானமுள்ள இரால் மீன்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆனால் மீன் வளத்துறை மூலமாக அவை ஏற்றுமதிச் செய்யப்படவில்லை. எண்ணூரில் குளிர்பதன அறை கட்டி, தனியாருக்குக் குத்தகைக்கு விட்டிருக்கிறோம். அவர்கள் மீனைப் பதப்படுத்தி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். அரசாங்கமே இதை நடத்தும் திட்டம் இல்லை. மு.ப. 9·30.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், இப்போது சென்னை கடற்கரையில் இரால் மீன்கள் கிடைப்பதில்லை என்று ஒரு புகார் வந்திருக்கிறது. அதுகுறித்து அரசாங்கம் ஏதாவது ஆராய்ச்சி செய்ததா; நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இரால் மீன்கள் கிடைக்காமல் இல்லை. தனியார்கள் இந்த மீன்களைப் பிடித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் அதிக அக்கறை காட்டுகிறார்கள். அவர்கள் பெரிய மீன்களை ஏற்றுமதி செய்து விடுவதால், இங்கு சிறிய இரால் மீன்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, கன்னியாகுமரி ஜில்லா கடல் பகுதியில், கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் வந்து மீன் பிடித்து, வெளிநாடுகளுக்கு அனுப்பி, அதிக லாபம் சம்பாதிக்கிறார்கள். அதனால் நமக்கு அதிக லாபம் கிடைப்பதில்லை. எனவே, கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் இங்கு வந்து மீன் பிடிக்கக் கூடாது என்று நமது அரசாங்கம் தடை விதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்து வருகிறது. ஆனால், கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்களை இங்கு வந்து மீன்பிடிக்கக்கூடாது

[1971 டிசம்பர் 1

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) ஆம். சென்ற 1970-ம் ஆண்டு குளித்தலை வட்டம், கோணப்பாராயன்குளம் கிராமத்து அரிசன பொதுமக்கள் அக்கிராமத்திற்கு குடிநீர் தேவை என்று திருச்சிராப்பள்ளி மாவட்ட நல அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர். அதன்பேரில் அக்கிராமத்தில் புது குடிநீர் கிணறு தோண்ட ரூ. 4,500-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விரைவில் வேலையை முடிக்க மாவட்ட ஆட்சித் தலைவரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பிச்சைக்காரர் மறுவாழ்வு

*313 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ், கோவையில் ஓர் மையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு பணம் திரட்டியதில், தமிழ்நாட்டிலே அதிகமாக—ஒன்பது லட்ச ரூபாய்—வசூலித்துத் தந்த கோவை மாவட்டத்தில் ஒரு பிச்சைக்காரர் மறுவாழ்வு விடுதி திறக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஏற்கெனவே கோவையில் ஒரு பிச்சைக்காரர் மறுவாழ்வு விடுதி நகராட்சியால் நடத்தப்பட்டு வருகிறது. எனவே மீண்டும் அங்கு ஒரு விடுதியை ஏற்படுத்தும் செயற்குறிப்பு இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வளிப்பதற்காக நமது மாநிலத்தில் திட்டம் வகுக்கப்பட்டு, நிதி வசூலிக்கப்பட்டு, அக்காரியங்கள் நடைபெற்று வருகின்றன. இதைப்போல இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலாவது பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கு நிதி வசூலிக்கப்பட்டு, இப்படிப்பட்டத் திட்டம் செயல்படுகிறதா ? இதைச் சுட்டிக்காட்டி மத்திய அரசாங்கத்திடம் ஏதாவது பணம் பெற அரசாங்கம் முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : வேறு எந்த மாநிலத்திலும் இப்படிப்பட்டத் திட்டம் செயல்பட்டு வருகிறது என்பது குறித்துத் தகவல் இருப்பதாகத் தெரியவில்லை. மத்திய அரசாங்கத்தில் நிதி பெறும் கோரிக்கை ஏதுவும் எழவில்லை.



1971 டிசம்பர் 13]

திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏற்கனவே கோவையில் நடைபெற்றுவரும் பிச்சைக்காரர் விடுதியை விரிவுபடுத்தினால் நன்றாக இருக்கும். [illegible] அவசியம் இருக்கிறது. அதேமாதிரி மதுரையில் இருக்கும் பிச்சைக்காரர் விடுதியை விரிவுபடுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் [illegible] பிச்சைக்காரர் விடுதிகள் [illegible] திட்டத்தின்படி. ஒருங்கிணைத்துக்கொள்ளும் [illegible] அரசு பரிசிலனை செய்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதியாக கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய்க்குமேல் இந்த அரசாங்கம் [illegible]. ஆனால் [illegible] 200 [illegible] தொழுநோயாளி பிச்சைக்காரர்களை தங்குவதற்கு [illegible] செய்யப்பட்டிருக்கிறது. [illegible] பிச்சைக்காரர்கள் [illegible] சற்று [illegible] நோயாக [illegible] நட[illegible], சமூக [illegible] சேவை [illegible] ஆர்கனைசேஷன்கள் இதிலே ஈடுபடவும் அரசாங்கம் திட்டமிடுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஒரு கோடி ரூபாய் [illegible] 290 பிச்சைக்காரர்கள் தான் தங்குவதற்கு [illegible] என்று கூறினார்கள். அந்தத் தகவல் சரியானதல்ல. [illegible] திறக்கப்பட்ட பிச்சைக்காரர் மறுவாழ்வு விடுதி திறக்கப்பட்ட அன்றே இருநூறுக்கு மேற்பட்டவர்கள் அதிலே சேர்ந்துவிட்டார்கள். அதிலே 700 முதல் 800 வரை பிச்சைக்காரர்களை வைப்பதாகத் திட்டம் இருக்கிறது. [illegible] இடங்களில் திட்டம் போடப்பட்டு, மூன்று இடங்களில் வேலை [illegible] தயாரில் இருக்கிறது. இதிலே சமூக சேவகர்களை ஈடுபடுத்துவது என்பது இயலாது. ஏனென்றால், அரசாங்கமே இதை நடத்த வேண்டுமென்று, அரசாங்க அதிகாரிகளைப் போட்டிருப்பதால் அரசாங்கமே முழுமையாகப் பொறுப்பேற்றுக்கொள்கிறது. ஆனால் சமூக சேவகர்களின் தொண்டினையும் பணியினையும் இந்த அரசு ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறது.

DR. H. V. HANDE : Sir, is it not a fact that the Estimates Committee had given certain suggestions, two years ago, to this Government, as to how exactly to solve this problem of beggers, especially beggars who have leprosy and if so, whether the Government have considered them? Also, whether it is possible for the Government to link this work that they are doing now with the work that has been done in the Dharmapuri district and other places so that concentrated attenion would be given to beggars who have leprosy?

[1971 டிசம்பர் 13

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** எஸ்டிமேட் கமிட்டியின் ஆலோசனைகளையும் நாங்கள் இதிலே இணைத்துக்கொண்டுதான் இந்தத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறோம். தர்மபுரி மாவட்டத்தில் மாத்திரம் அல்ல; மற்ற இடங்களிலும் தொழு நோய்ப் பிச்சைக்காரர்களுக்குத் தனித்தனி விடுதிகள் அமைக்க விருக்கிறோம். முதலிலே அவர்கள் ஏற்கனவே இருக்கின்ற விடுதிகளை விரிவுபடுத்தி, இந்தத் திட்டத்தோடு சேர்த்து நிறை வேற்ற அரசு கருதி இருக்கிறது.

**திரு. எம். தேவராசன் :** தமிழ்நாட்டில் சுமார் எவ்வளவு பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள்? அவர்கள் பிச்சைக்காரர்கள் என்று எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** கிட்டத்தட்ட ஆறாயிரம் பிச்சைக்காரர்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக் கிறது. தெருவிலே, எதுவும் இல்லாமல் பிச்சை எடுப்பவர்கள் பிச்சைக்காரர்கள் என்று கருதப்படுகிறார்கள்.

**திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, தொழில் வளம் சிறந்து இருக்கும் சிவகாசியில் புதிதாக பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லம் திறப்பதற்காக முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** சிவகாசியில் இல்லை. சிவகெங்கைக்குப் பக்கத்தில் தொழுநோய்ப் பிச்சைக்காரர் களுக்காக ஒரு இல்லம் திறக்கப்பட இருக்கிறது.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவரவர்களே, தெருவில் பிச்சை எடுப்பவர்களைப் பிச்சைக்காரர்கள் என்று கருதுகிறோம் என்று சொன்னார்கள். தெருவிலே பிச்சை எடுப்பவர்கள் அத்தனைபேரும் உண்மையில் பிச்சைக்காரர்கள் அல்ல. வசதி வாய்ப்புப் பெற்று 4-5 பிள்ளைகள் பெற்று எடுத்தவர்கள் கூட தங்கள் பிள்ளைகளைவிட்டு பிச்சை எடுக்கச் சொல்கிறார்கள். இப்படிப்பட்டவர்களையும் பிடித்துக்கொண்டுபோய் அந்த இல்லங்களில் ஆட்களை அதிக மாக்குவதுடன், அப்படிப்பட்ட வசதி வாய்ப்பு பெற்றவர்களைப் பற்றிய விவரங்களை அறிந்து அவர்களை அந்த இல்லத்திலிருந்து வெளியே அனுப்ப அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** வசதி வாய்ப்பு இருந்தால் தெருவில் வந்து பிச்சை எடுக்க மாட்டார்கள். பிச்சை எடுப்பவர்களைப் தடுக்கும் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர் களைத்தான் அந்த இல்லங்களில் வைத்து இருக்கிறோம். அவர்களைப் பற்றிய விவரங்களை அறிந்து உறவினர்களுக்கு அவர்களை வந்து அழைத்துச் செல்லுங்கள் என்றால் யாரும் வந்து அழைத்துச் செல்வதில்லை. தாயை அழைக்க மகனே மறுக்கிறான்.



1971 டிசம்பர் 13]

**திரு. என். இராஜாங்கம் :** தலைவரவர்களே, கடலூரில் பெக்கர் ஹோம் ஒன்று நடந்து வந்தது. இப்போது அது அனாதை மாணவர் இல்லமாக மாறி இருக்கிறது. அந்தப் பிச்சைக்காரர்கள் விடுதிக்கு அரசாங்கம் கொடுத்து வந்த உதவித் தொகை நிறுத்தப்பட்டு இருக்கிறதா, அல்லது அது மாணவர் இல்லத்திற்கு மாற்றப்பட்டு இருக்கிறதா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அதைப் பற்றிய தகவல் எதுவும் இல்லை.

**திரு. கே. எஸ். குப்பல் இராமகிருஷ்ணன் :** தலைவரவர்களே, மதுரையில் ஹிந்த் குஷ்ட நிவாரண சங்கம் என்று சில ஆண்டு களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டு, பல குஷ்ட ரோகிகளுக்கு நிவாரணம் அளித்து வருகிறார்கள். அந்தச் சங்கத்தில் தொழு நோய்க்காரர்களை சேர்ப்பது இல்லை. அந்தச் சங்கத்தில் தொழு நோய்க்காரர்களையும் சேர்த்துக் கொண்டு, அவர்களுக்கும் மறு வாழ்வு அளிக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அவர்களையும் சேர்த்துக்கொள்ள அரசு உத்தேசித்துள்ளது.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, கடந்த காலத்தில் பிரவென்ஷன் ஆப் பெக்கிங் ஆக்ட் என்ற சட்டம் நடைமுறையில் இருந்தாலும், அது அமல் படுத்தப்படாமல் இருந்தது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்காக ரூ. 1 கோடி திரட்டி, அதை இன்று முழுமூரமாக அமல் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எல்லா மாவட்டங்களிலும் இந்த இல்லங்கள் திறக்கப்பட்டு, எவ்வளவு விரைவாக எல்லாப் பகுதிகளிலும் இருக்கிற பிச்சைக் காரர்களையும் இந்த இல்லங்களுக்கு அழைத்து வந்து மறுவாழ்வு அளிக்க வேண்டும் என்று ஒரு கால்வரையறையை அரசு நிர்ணயித்து செயல்படுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இப்போது முதலில் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்குத்தான் மறுவாழ்வு அளிப்பதற்காக வேண்டி அரசு அக்கறை காட்டி, அந்தத் திட்டத்தை நடத்திக்கொண்டு வருகிறது. அதற்குப் பிறகு மற்ற பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு பற்றி அரசு சிந்தித்து, திட்டங்களைத் தீட்டி அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க முயற்சிகளை மேற் கொள்ளும்.

*** 314 வினா—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டத்தில் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு உள்ள அட்டைகள் விற்பனை மூலம் அண்மையில் கிடைத்த பணம் எவ்வளவு?

(இ) அந்தப் பணத்தை அந்த மாவட்டத்திற்கு மட்டும் செலவு செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) ரூ. 1,10,000.

(இ) இல்லை.

### மனுநீதி நாள்

* **315 வினா—திரு. எம். முத்தையா :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) " மனுநீதி நாள் " திட்டத்தின் அடிப்படையில் நெல்லை மாவட்டத்தில் எத்தனை கிராமங்களில் 1—1—1970 முதல் 1—6—1971 வரை மனுநீதி விசாரணை நடத்தப்பட்டுள்ளது ?

(இ) மனுநீதி விசாரணைக்கு வந்த மகஜர்கள் எத்தனை ?

(உ) மனுநீதி நாள் திட்டத்தின் மூலம் பயனடைந்தவர்கள் எத்தனை பேர் ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) மனுநீதி திட்ட அடிப்படையில் 1—1—1970 முதல் 1—6—1971 வரை நெல்லை மாவட்டத்தில் 1,273 கிராமங்களில் விசாரணை நடத்தப் பட்டுள்ளது.

(இ) 23,844 மனுக்கள் மனுநீதி விசாரணைக்கு வந்தன.

(உ) இத்திட்டத்தின் மூலம் 7,340 பேர் பயனடைந்தனர்.

**திரு. எம். முத்தையா :** தலைவரவர்களே. இந்த மனுநீதி திட்டத்தின் காரணமாக அதிகமாக கிராம மக்கள் பயன் பெறுகிறார்கள். ஆகவே, இந்த மனுநீதித் திட்டத்தை தீவிரப் படுத்தி, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு தனி அதிகாரியை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மனுநீதித் திட்டம் நிரந்தரமாக வைப்பது என்பது இல்லை. ஆங்காங்கு அதிகாரிகள் சென்று மக்களுடைய குறைகளை விசாரித்து நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். ஒவ்வொரு கிராமம் கிராமமாகச் சென்று இப்படிச் செய்து வருகிறார்கள். எல்லா கிராமங்களிலும் இப்படி செய்து முடித்த பின்னர், மறுபடியும் எல்லாக் கிராமங்களுக்கும் ஒரு முறை வருவார்கள்.

### *Eviction of peasants in Saptur.*

* 316. Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :

(*a*) whether representations have been received from Saptur in Tirumangalam taluk, Madurai district about illegal orders by Tahsildar in regard to the eviction of authorised peasants in support of Zamindar;





(*b*) whether it is a fact that a protest meeting was held in the village on 23rd September 1971; and

(*c*) the steps taken to quieten the unrest?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) அவ்வித முறையீடு வரவில்லை.

(இ) இல்லை. கம்யூனிஸ்ட் (வலதுசாரி) கட்சியின் சாதாரணக் கூட்டம் ஒன்று 23—9—1971-ல் நடைபெற்றது.

(உ) இவ்வினாவிற்கு இடமில்லை.

THIRU K. T. K. THANGAMANI : I want to make some correction in the question. Clause (c) says ' steps taken to quicken the unrest '. What I wanted to say was to ' quieten ' the unrest.

சார், இந்தத் திருமங்கலம் தாலுக்காவில் இருக்கிற ஜமீன்தார்கள், ஜமீன்தார் ஒழிப்புச் சட்டத்திற்குப் பிறகும், தங்களுக்குச் சொந்தமான பண்ணை நிலம் என்று ஏராளமான நிலங்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். வேறு யாருக்கும் தண்ணீர் விடாமல் ஏரி தண்ணீர் முழுவதையும் அவர்களே உபயோகித்து வருகிறார்கள்.

MR. SPEAKER : May I know whether it has been wrongly printed or the hon. Member has drafted it wrongly?

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இப்படி வைத்துக்கொண்டிருப்பது மாத்திரமல்லாமல் அந்த விவசாயிகளையும் பல விதமான இன்னல்களுக்கு ஆட்படுத்துகிறார்கள். அவர்களை பல விதத்திலும் கோர்ட்டுக்கு கொண்டு செல்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சி தொழிற் சங்கத்தில் இருக்கிற தொழிலாளர்களும் இருக்கிறார்கள். ஆகவே தான் நான் கம்யூனிஸ்ட் கட்சி பொதுக்கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன் என்று கேட்டேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அன்று நடந்த கூட்டத்தில் சாதாரணமாக பல அரசியல் விவகாரங்களைப்பற்றி பேசப் பட்டதாகத்தான் அரசாங்கத்திற்கு தகவல் வந்திருக்கிறது. அங்கத்தினர் சொன்ன குற்றச்சாட்டுகள் எழுதி அனுப்பப் படுமானால், அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

MR. SPEAKER : So ' quieten ' has become ' quicken '.

### பந்தலூரிலுள்ள ஆதிவாசிகளுக்கு நிலங்கள்

* **317 வினா—திரு. கு. அ. பொம்மன் :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1971 டிசம்பர் 13]

(அ) நீலகிரி மாவட்டம், நெல்லியாளம் பஞ்சாயத்து பந்தலூரிலுள்ள ஆதிவாசிகளுக்கு விவசாய நிலங்கள் ஏதேனும் ஒதுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எத்தனை பேர்கள் அந்த ஒதுக்கப்பட்ட நிலங்களில் விவசாயம் செய்கின்றனர் ?

(உ) இல்லை எனில், காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) 94 ஆதிவாசிகள்.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கு. அ. பொம்மன் :** போவைத் தலைவரவர்களே, ஆதிவாசிகளுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்களை நிலச்சுவான்தார்கள் பறிமுதல் செய்து வருகிறார்கள். ஆகவே, அதை அரசு பரிசீலித்து. உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அப்படி எந்த இடத்தில் நடைபெறுகிறது என்று தெரிவித்தால் அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

### பென்னலூர்ப்பேட்டைத் துணைவட்ட அலுவலகம்

* 318 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பென்னலூர்ப்பேட்டை துணை வட்ட அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பென்னலூர்ப்பேட்டை துணை வட்ட அலுவலகத்திற்கும் துணை பதிவாளர் அலுவலகத்திற்கும் கட்டடம் கட்ட ஊத்துக்கோட்டையில் நிலம் பெற வருவாய் வாரியம் பிரேரேபித்துள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, அப்படி வருவாய் வாரியம் அனுப்பியிருக்கும் செயற்குறிப்பை விரைவாக ஏற்று அந்த இடத்தில் கட்டடம் கட்டுவதற்கு, இருக்கின்ற நெறிசலில் ஊத்துக்கோட்டை துணை வட்டத்திற்கு உரிய அலுவலகத்திற்கு வாடகைக்குக் கூட இடம் கிடைக்காமல் இருக்கும் நிலைமையில், விரைவில் அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் செய்யப்படும்.



1971 டிசம்பர் 13]

### *Harijans as Village Officers.*

* 319. Q.—THIRU E. S. THYAGARAJAN : Will the Hon. Minister for Food and Revenue be pleased to state :

(a) the number of Harijans holding the post of Village Munsiffs and Karnams in the State as on this date; and

(b) the details thereof?

The Honble Thiru P. V. Shanmusham.

| | | |
|---|---|---|
| *Clause* (a).—Village Munsiffs | .. .. | 35 |
| Karnams | .. .. .. | 15 |
| Triune Office | .. .. .. | 2 |

*Clause* (b).—

| | District. | | Village Munsiffs. | Triune Officer. | Karnam. |
|---|---|---|---|---|---|
| 1 | Coimbatore | .. | — | — | — |
| 2 | South Arcot | .. | 1 | — | — |
| 3 | North Arcot | .. | 2 | — | 1 |
| 4 | Chingleput .. | .. | 4 | — | — |
| 5 | Tirunelveli .. | .. | 4 | 1 | 2 |
| 6 | Salem .. | .. | — | — | 3 |
| 7 | Dharmapuri | .. | 1 | — | — |
| 8 | Madurai .. | .. | 2 | 1 | — |
| 9 | Ramanathapuram | .. | 5 | — | 1 |
| 10 | Tiruchirappalli | .. | 11 | .. | 6 |
| 11 | Thanjavur .. | .. | 5 | — | 2 |
| 12 | The Nilgiris .. | .. | — | — | — |
| | | | 35 | 2 | 15 |

DR. H. V. HANDE : In view of the fact that percentage of Harijans represented is very low as compared to the Harijan population which is almost 1/3 or 1/4 and in view of the fact that Government are taking steps to see that Harijans are given better representation so that Harijans' problems could be solved, may I know the steps taken by the Ministry to give greater representation for Harijans in this particular department

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, இது மற்ற இலாக்காக்களைப் போன்றது அல்ல. கிராம அதிகாரிகள் உத்யோகமானது நில வருவாயைப் பொறுத்து இருக்கிறது.

அரசாங்க பணம் எவ்வளவு வசூலாகிறதோ, அந்த அளவுக்கு அந்த கிராம அதிகாரிக்கு சொத்துக்கள் இருக்கவேண்டும். அவர் கணக்குப் பார்க்கத் தெரிந்து இருக்கவேண்டும். அவற்றைப் பரிசீலிக்க வேண்டும். ஆகவே, மற்ற இலாக்காவைப் போன்று இந்த இலாக்காவில் இந்தப் பணிக்கு கம்யூனல் ரொடேஷன் போட முடியாது.

## Cardamom Estates.

* 320 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether all the Cardamom Estates have been registered with the Cardamom Board in this State;

(b) the steps taken in this regard to get the registration ;

(c) the details of the classification; and

(d) the incentives offered for their development?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) மாவட்டத்திலுள்ள 817 ஏலத் தோட்டங்களில் 326 தோட்டங்கள் மட்டுமே பதிவு செய்யப் பட்டுள்ளன.

(இ) கூடிய சீக்கிரம் பதிவு செய்யும் நோக்கத்துடன், ஏலம் நடத்தப்பட்டுள்ள மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியாளர்கள் பதிவு செய்யும் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

(உ) (1) உடைமையாளர் தோட்டம்

(2) ஒத்திதார் தோட்டம்

(3) குத்தகைதார் தோட்டம்

(4) இதர நபர்கள் வசமிருக்கும் தோட்டம்

(எ) ஏலம் வாரியம் ஐந்து அபிவிருத்தித் திட்டங்களைக் கொண்டுவர உத்தேசித்துள்ளது, அவையாவன:—

(1) ஏலச்செடியில் காணும் " காட்டே " என்னும் நோயைக் கட்டுப்படுத்துவதற்கான திட்டம்.

(2) ஏலத்திற்கு அரசாங்கத்துறை நாற்றங்கால் ஆரம்பிப்பதற்கான திட்டம்.





(3) சிறிய அளவில் ஏலச்செடி வளர்ப்பவர்களுக்கு நிதி உதவி கொடுக்கும் திட்டம்.

(4) தவணை முறையில் வாங்கும் நிபந்தனையின்கீழ் தூவும் பாசன தளவாடங்களை வழங்குவதற்கான திட்டம்.

(5) ஏலத்தொழிலின் மறுவாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் ஒரு ஆராய்ச்சித்துறை அமைப்பதற்கான திட்டம்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவர் அவர்களே, தமிழ் நாடு பூராவிலும் இருக்கக்கூடிய ஏலத்தோட்டங்கள் எத்தனை ? அவற்றில் 326 தான் பதிவாகியிருப்பதாக சொன்னார்கள். இன்னும் எத்தனை பதிவு செய்யப் படவேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மொத்தம் 817 என்றும், அதில் 326 பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றும் சொன்னேன். பதிவு செய்ய தனி அலுவலர் வேண்டும் என்று கேட்டார்கள். அதைப் போர்டே ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும் சொல்லி, இப்பொழுது அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். புதிய அலுவலர் நியமிக்கப் பட்டிருக்கிறார்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் உற்பத்தியாகும் ஏலக்காய் எந்த, எந்த வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. அதன் மூலம் நமக்குக் கிடைக்கும் வருவாய் எத்தனை என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

* 321 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the time-limit for the registration of owners under the Cardamom plants, has been extended from time to time; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) 1971 டிசம்பர் 31-ம் தேதி வரை கால வரையறை நீட்டப் பட்டுள்ளது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், உலகச் சந்தையில் ஏலத்தின் விலை சரிந்துவிட்டதாகச் சொல்லப் படுகிறதே. அதைக் குறித்து அந்தத் தொழிலுக்கு புனர்வாழ்வு அளிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மத்திய சர்க்கார் அதற்குத் தக்க நடவடிக்கை எடுப்பார்கள்.

### *Copper Mines.*

* 322 Q.—THIRU R. R. MUNUSAMW: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that Copper Mines are functioning in this State; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவர் அவர்களே, நாம் ஆராய்ச்சி நடத்தாவிட்டாலும், வேறு மாநிலத்தில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் விளைவாக, செம்பு எடுக்கப்படுமா என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** காப்பர் தனியாக எடுக்கப்படுவதில்லை copper sulphides of lead, zinc, nickel, molybdenum, etc. இவைகளோடு கிடைக்கிறது. தென்னாற்காடு மாவட்டத்தில், மாமண்டூர் பகுதியில் 0.63 சதவீதம் காப்பர் உள்ள பொருள் கிடைப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பொருளாதார அளவில் அதை எடுக்க முடியுமா என்பது பரிசீலனையில் இருக்கிறது.

### *Closed Mills.*

* 323 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have taken steps to reopen the closed textile mills at Coimbatore; and

(b) if so, the details of the same?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) தொழில்கள் (வளர்ச்சி முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் ஆய்வுக் குழுக்கள் அமைக்குமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் முடிவு இன்னும் தெரியவில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** ஏற்கனவே கோவையில் முருகன் மில் திறக்கவும், நகரத்திலுள்ள பங்கஜா மில் போன்ற மூன்று மில்கள் சீக்கிரத்தில் திறக்கப்படும் என்ற வாக்குறுதி கொடுக்கப்பட்டதே. அதை துரிதப்படுத்த படிப்படியாக ஒவ்வொரு மில்லாகவாவது திறக்கப்படும் என்ற ஒரு முடிவை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதிலே இரண்டு ஆலைகள் நீதி மன்றத்தில் இருக்கின்றன. முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்



கின்றன. மீதி ஆலைகள் புதிய சட்டத்தின் அடிப்படையில் எடுக்க மத்திய சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது. மத்திய சர்க்காருக்கு இந்தச் சட்டத்தின் கீழ் உத்தரவு பிறப்பிக்கவேண்டும் என்று கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM: May I know whether there is any Government watch over the textile mills to see that the managements are not manipulating closure of mills when they are likely to incur losses?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** வேண்டுமென்றே மூடுவதாகத் தெரியவில்லை. பல ஆண்டுகளாக திறக்கப்படாமல் இருக்கிறது. நம் முயற்சியில் ஐந்து ஆலைகள் திறக்கப்படுகின்றன. ஒரு கோடி ரூபாய் அளவில் வங்கிகளுக்கு காரண்டி கொடுத்து, இந்த ஆலைகளைத் திறக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அதில் கிடைத்திருக்கும் வெற்றி ஓரளவுதான். எந்த ஆலையையும் வேண்டுமென்றே மூடுவதில்லை.

**திரு. க. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் 5 ஆலைகள் திறந்து இருப்பதாகச் சொன்னார்கள். அதற்கான பணத்தை மத்திய சர்க்கார் கொடுத்து விட்டார்களா? இல்லை என்றால். கொடுக்க வேண்டும் என்று கேட்க முயற்சி எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அவர்கள் 51 சதவிகிதம் கொடுக்க வேண்டும். ஆனால் மிகக் குறைவாகத் தந்தார்கள். அந்தத் துறை அமைச்சரிடம் நானும், மாண்புமிகு முதல் அமைச்சரும் சொன்னபோது, அன்று மாலை 3 மணிக்குள் உத்தரவு வரும் என்று சொன்னார்கள். ஆனால் வரவில்லை. சில மாதங்கள் ஆகிறது என்று நினைக்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: May I know whether it is not necessary to have a watch over the mills when the mills are incurring heavy losses and under that excuse they will demand closure or taking over by the Government after some time? May I know whether even with the permissiion of the Central Government, the local Government have made any arrangements for such investigations or watch or research?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பொதுவாக மூடிய ஆலைகளை 'ஸிக் மில்ஸ்' என்ற அடிப்படையில் நாம் பரிசீலனைக்கு எடுக்க இரண்டு குழுக்கள் அமைத்திருக்கிறோம். அது மத்திய சர்க்காரின் கவனத்தில் இருந்து வருகிறது. எல்லா ஆலைகளும் எப்பொழுதும் மூடப்படும் என்று எதிர்பார்ப்பது சரியில்லை.

**திரு. எஸ். வடிவேல் :** தலைவர் அவர்களே, இந்த அவசர காலத்தை உத்தேசித்து, மூடிய ஆலைகளைத் திறக்க முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1971 டிசம்பர் 13

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : அவர்கள் திறக்கத்தயாராக இருக்கிறார்கள். நாம் தான் பணம் நஷ்டம் ஏற்படக்கூடாது என்று, எந்த ஆலைகள் நஷ்டமில்லாமல் நடக்கும் என்பதைப் பார்த்து, அதை எடுக்க முயற்சி செய்கிறோம்.

* 324 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the closed mills in Madurai have been reopened?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி** : ராஜாமில், முருகன் மில் போன்றவைகள் மூடப்பட்டிருக்கின்றன. ஏதாவது ஒரு மில்லையாவது சீக்கிரமாக எடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : அங்குள்ள மூன்று ஆலைகளையும் எடுக்க மத்திய சர்க்காரால் பரிசீலிக்கப்பட்டு, லாபத்தில் நடத்த முடியாது என்று அறிவித்துவிட்டார்கள்.

### இசைக்கருவிகள் உற்பத்தி

* 325 வினா—**திரு. கே. ஏ. வகாப்** : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீணை, புல்லாங்குழல் போன்ற இசைக்கருவிகள் தமிழகத்தில் உற்பத்தி செய்யும் கூட்டுறவு தொழிற்சாலை ஏதேனும் தற்போது செயல்படுகிறதா ?

(இ) ஆம் எனில், அவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா ? எந்தெந்த நாடுகளுக்கு ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : (அ) ஆம்.

(இ) இல்லை.

**திரு. கே. ஏ. வகாப்** : தலைவர் அவர்களே, நம்முடைய இசைக் கருவிகள் வெளி நாட்டில் நல்ல கிராக்கியுள்ளவைகளாக இருக்கின்றன. கூட்டுறவு சங்கங்கள் மூலம் இவற்றை உற்பத்தி செய்து, விற்பனை செய்தால், அந்நியச் செலாவணியும் ஈட்ட முடியும். அந்த வகையில் முயற்சி எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : தஞ்சை மாவட்டத்தில் இது போன்ற கூட்டுறவு சொசைடி இருக்கிறது. இதிலே சென்ற ஆண்டு 1970–71-ல் ரூ. 38,000-க்கு விற்பனை ஆகியிருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I request the Hon. Minister to state the particular wood from which these instruments are prepared and the places where such wood is available?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : தகவல் என்னிடத்தில் இல்லை.



1971 டிசம்பர் 13]

**திருமதி த. ந. அனந்தநாயகி** : தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தி செய்து விற்பனை ரூ. 38,000-க்கு ஆகியிருக்கிறது என்று சொன்னார்கள். அதற்கு மேலும் வெளிநாட்டிலிருந்து ஆர்டர்ஸ் வருகிறதா ? அதற்கு ஈடான உற்பத்தி செய்ய முடியாமல் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : கூட்டுறவுத் துறையில் இருப்பதை மட்டும் சொன்னேன். மற்ற விவரங்கள் என்னிடத்தில் இல்லை.

### *Prevention of sea erosion*

* 326 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state the steps taken by the Government to prevent sea erosion in Kanyakumari coast?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : பேரவைமுன் விவர அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

* 327 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to construct groynes to check sea erosion at pad in Tirunelveli district; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : (அ) ஆம்.

(இ) பூண்டி பாசன ஆராய்ச்சி நிலையம் நடத்திய மாதிரி ஆய்வுகளின் அடிப்படையில் நிலையான ஏற்பாடாக ரூ. 2.62 லட்சம் செலவில் 46 மீட்டர் (150 அடி) நீளத்திற்கு கருங்கற்களைக் கொண்டு தடுப்புச் சுவர் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இப் பணியை நிறைவேற்றும் பொறுப்பை மேற்கொள்ளும் நிறுவனத்தை முடிவு செய்த பின்னர் இப்பணி மேற்கொள்ளப்படும்.

### தரங்கம்பாடியிலுள்ள பயணிகள் விடுதி

* 328 வினா—**திரு. எஸ். கணேசன்** : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தரங்கம்பாடியில் உள்ள பயணிகள் விடுதியை புதுப்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : இல்லை

---

@ 262—263 ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

## கரிம்பேடு கிராமத்தில் அணை

* 329 வினா—திரு. இ. எஸ். தியாகராஜன் : மாண்புமிகு பொதுபணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம், பள்ளிப்பட்டு துணை வட்டத்தில் கரிம்பேடு கிராமத்தில் அகடகொட்ட—தலாரி குட்ட எனும் இடத்தில் அணைக்கட்டு ஒன்றுக்காக எஸ்டிமேட் தயார் செய்யப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அந்த வேலை எப்போது துவங்கப்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இத்திட்டம் உள்ளூர் அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளது.

(இ) பரிசீலனைக்குப்பின் தகுந்த அதிகாரிகளின் ஒப்புதல் பெற்று இத்திட்டம் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## பரமக்குடி—கீரந்தை சாலை

* 330 வினா—திரு. எஸ். காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவங்கை நெடுஞ்சாலை கோட்டம், பரமக்குடி—கீரந்தை சாலையில் கல் பரப்பும் வேலை அரசாங்க பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் என்றால். எப்பொழுது செயல்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) பரமக்குடி--கீரந்தை சாலையை (மைல் 0/0—16/2) சீர்படுத்தும் (கல்பரத்தல் உட்பட) வேலைக்கு அரசு, ரூ. 12.50 லட்சம் அனுமதி வழங்கியுள்ளது.

(இ) இவ்வேலை இந்த நிதியாண்டில் (1971-72) எடுத்துக் கொள்ளப்படும்.

## பெண்ணாகடம் அருகில் வெள்ளாற்றின் குறுக்கே பாலம்

* 331 வினா—திரு. செ. சதாசிவம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தையும், தென்னார்க்காடு மாவட்டத்தையும் இணைக்கும் வகையில் பெண்ணாகடம் அருகில் வெள்ளாற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்ட செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.





## *Tapioca Research Station, Salem*

* 332. Q.—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to hav. a tapioca research unit in Salem district; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) 1971-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9-ம் நாளிலிருந்து சேலத்தில், மரவள்ளிக் கிழங்கு ஆராய்ச்சி நிலையம் ஒன்று செயல்படத் தொடங்கியுள்ளது.

(இ) இந்தியாவிலுள்ள, மரவள்ளி பயிரிடும் முதன்மைப் பகுதிகளிலிருந்தும், ஆராய்ச்சி நிலையங்களிடமிருந்தும், ஏனைய நாடுகளிலிருந்தும் பெறப்படும் மரவள்ளி விதைக் கிழங்குகள், ஏற்பளிக்கப்பட்ட பயிர்செய் முறைகள் மூலம் அதிக அளவில் பயிரிடுவதற்கென நமது உழவர்களுக்குப் பரிந்துரைக்கு முன்பு, அவற்றின் பயிர்க் காலம், கிழங்கு விளைச்சல், அவற்றில் அடங்கியுள்ள மாவுச் சத்து, நோய்களைத் தாங்கும் சக்தி ஆகியவை குறித்து ஆராய்ச்சி நிலையத்தில் பரிசோதிக்கப்படுகின்றன.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister whether any hybrid tapioca has been discovered in that Research Station?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அப்படி ஒன்றும் இல்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** மரச் சீனி பயிர் விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் ஒரு லட்சம் ரூபாய் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வழங்கப்பட்டு அந்த ரூபாய் முழுவதும் மோசடி செய்யப்பட்டது. அப்படி மோசடி செய்தவர்கள் மீது வழக்குத் தொடர முடிவு செய்யப்பட்டது. அந்த வழக்கு எந்த நிலையில் இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** வழக்கு இப்போது பரிசீலனை செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. விரைவில் அதுபற்றி முடிவு செய்யப்படும்.

## *Cocoa Plantation*

* 333 Q.—THIRU N. K. PALANISWAMY :
THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there is any proposal to encourage cocoa plantation in the State; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) & (இ) ஆம். வேளாண்மை மறுநிதிக்கழகம், வேளாண்மை நிதி உதவிக் கழகம் ஆகியவற்றிலிருந்து முறையே நிதி உதவி பெறுவதன் மூலம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1,000 ஏக்கரிலும் மதுரை மாவட்டத்தில் 2,000 ஏக்கரிலும் கோக்கோ பயிரிடுவதற்கான செயற்குறிப்பு ஒன்று வேளாண்மைத்துறை இயக்குநரிடமிருந்து வந்துள்ளது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** கன்னியாகுமரி மாவட்டத்தில் கோக்கோ பயிர் செய்யப்பட்டு இப்போது விளைவு எடுக்கப்பட்டு வருகிறது. அதை வாங்குவதற்கு ஆள் இல்லாமல் விவசாயிகள் வருந்துகின்ற நிலை இருக்கிறது. ஆகவே, அந்த கோக்கோ விளைபொருள்களை வாங்குவதற்கு அரசாங்கம் தேவையான ஏற்பாடுகளைச் செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மதுரையில் இரண்டாயிரம் ஏக்கர் இதற்காக ஒதுக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது எவ்வளவு ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. அதனுடைய பலன் என்ன ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தனிக் கேள்வி போடவும்.

### தென்னை தீவிர சாகுபடித்திட்டம்

* 334 **வினா—திரு. மா. பா. சாரதி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னை தீவிர சாகுபடி திட்டம் எந்தெந்த மாவட்டங்களில் அமுல்படுத்தப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தென்னை தீவிரசாகுபடித்திட்டம், கோவை மாவட்டத்திலுள்ள பொள்ளாச்சியிலும் மதுரை மாவட்டத்திலுள்ள கொட்டாம்பட்டியிலும் நடைபெற்று வருகிறது.

THIRU B. VENKATASWAMY : Sir, cocoanut is coming very nicely in the Dharmapuri and Salem districts. So, may I know whether any such crash programme would be implemented in those districts?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** சேலம், தருமபுரி மாவட்டத்தில் இன்னும் செயல்படுத்த முடியவில்லை.

**திரு. த. சோலையா :** இரண்டு மாவட்டங்களிலே தென்னை அபிவிருத்தித் திட்டங்கள் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இராமநாதபுரத்தில் இருக்கும் கடலோரப் பகுதிகளும், வைகை ஆற்று வண்டல் பகுதிகளும் தென்னை தீவிரச் சாகுபடிக்கு ஏற்ற அருமையான இடங்களாக இருக்கின்றன. அந்தப் பகுதிகளையும் அமைச்சர் அவர்கள் தென்னை சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளுவார்களா ?





**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தற்சமயம் இல்லை. ஆனால் வட ஆற்காடு மாவட்டத்தில் தென்னை தீவிர சாகுபடித் திட்டம் பற்றிப் பதில் சொன்னேன். இந்தத் தென்னை தீவிர சாகுபடித் திட்டம் 1963-64. 1965-66-ல் தஞ்சை மாவட்டத்தில் அதிகாரம்பட்டினத்தில் செயல்படுத்தப்பட்டது. 1966-67, 1968-69-ல் வட ஆற்காடு மாவட்டத்தில் குடியாத்தம் பகுதியிலும், தஞ்சை மாவட்டத்தில் குருவிகொம்பை பகுதியிலும், கன்னியாகுமரி மாவட்டத்தின் ஒரு பகுதியிலும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு தற்சமயம் வட ஆற்காடு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்களுடைய கேள்வி இராமநாதபுரத்தில் இந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படுமா என்பதுதான். அதற்குப் பதில் சொன்னால் போதும். திரு. ஏ. எம். இராஜா . . . .

**திரு. ஏ. எம். இராஜா :** அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சியில் தென்னை சாகுபடி செய்யத்திட்டம் ஏற்படுத்தியிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். தென்னையில் புதிய ஹைபிரிட் வெரைட்டிஸ் கண்டுபிடித்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் அதற்கு முயற்சி எடுத்திருக்கிறார்களா ? அப்படி எடுத்துக் கொண்டிருந்தால், இப்போது ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு ஹைபிரிட் கன்றுகளை அரசு உற்பத்தி செய்கிறது? அதை விவசாயிகளுக்கு எந்த முறையில் பகிர்ந்து கொடுக்கிறார்கள் ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தனியாக கேள்வி போடவும்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தென்னை பயிரிட பாலாறு படுகை முழுவதும் சிறந்த ஏற்ற இடமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. பாலாறு படுகையைச் சுற்றி அரசாங்கம் தென்னைப் பயிர் வைக்க முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தற்சமயம் இல்லை.

**திரு. கோவை செழியன் :** இந்தத் தென்னை சாகுபடி செய்கிற இடங்களிலும், மற்ற இடங்களிலும், குறிப்பாக கோவை மாவட்டத்தில் இதற்கு ஒருவித சோகை நோய் ஏற்பட்டு மருந்து எதுவும் போடப்பட்டதாகக் காணவில்லை. அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இப்போது துரிதமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் தீவிரமான நடவடிக்கை எடுக்கப்படும்.

### பூச்சி மருந்துகள் இலவசமாகத் தெளித்தல்

* 335 **வினா—திரு. ந. நாச்சியப்பன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இம்மாநிலத்தில் பயிர்களுக்குப் பூச்சி மருந்து இலவசமாக தெளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இம்மாநிலத்தில் பயிர்களுக்கு பூச்சி மருந்து இலவசமாக தெளிக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால், பூச்சி மருந்துகள் தற்போது 15 சதவிகித மான்ய விலையில் விற்கப்படுகின்றன.

**திரு. ந. நாச்சியப்பன் :** நம்முடைய விவசாயிகளில் ஒரு ஏக்கர், அரை ஏக்கரில் நெல் சாகுபடி செய்கிறவர்கள் நிறைய பேர் இருக்கிறபடியால் அனைவரும் ஒரே நேரத்தில் பூச்சி மருந்து தெளிக்காத நிலையில் ஒருவர் பூச்சி மருந்து தெளித்து பக்கத்தில் இருப்பவர் மருந்து தெளிக்காமல் இருந்தால் பூச்சிகள் அழிக்கப்படுவதில்லை. இதை உத்தேசித்து அரசே இந்தப் பொறுப்பை ஏற்று மருந்து தெளிக்க ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இப்போதே விமானம் மூலமாக மருந்து தெளிக்கப்படுகிறது என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று கருதுகிறேன்.

### சிங்காநல்லூரிலுள்ள தொழிலாளர் குடியிருப்புகள்

* 336 வினு—**திரு. ஏ. சுப்பிரமணியம் :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூரில் அரசுதவி பெற்ற குடியிருப்புக் காலனியில் வசிக்கும் தொழிலாளர்கள், குடியிருப்புகளை குறிப்பிட்ட காலத்திற்குப் பின் தற்போதுள்ள அனுபோகதார்களுக்குக் கொடுத்து விடுமாறு கோரிய விண்ணப்பம் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன்பேரில் எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) & (இ) தொழிலாளர் துறை ஆணையர் 5—8—1970-ல் கோயம்புத்தூர் தொழிலாளர் நல அமைப்புச் சங்கச் செயளாலரிடமிருந்து மனு ஒன்றை பெற்றதாக கூறியுள்ளார். மனுவில் உள்ள கோரிக்கையை தொழிலாளர் துறை ஆணையருடனும், வீட்டு வசதி வாரியத் தலைவருடனும் கலந்தாலோசித்து ஒரு பொதுக்கொள்கையாக (General Policy) கருதி முடிவெடுக்க அரசு பரிசீலனை செய்துவருகிறது.

**திரு. சு. துரைசாமி :** வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக இப்போது இந்த வீடுகள் கட்டி தொழிலாளர்களுக்கு விடப்பட்டு வாடகை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்கள் 20 வருஷ காலத்தில் வாடகையோடு கொஞ்சம் சேர்த்துக் கட்டி அதை அவர்களுக்கே கிரயம் செய்து கொடுக்கும் வகையில் திட்டம் கொண்டு வரப்படுமா?



**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தொழிலாளர்களுக்காகக் கட்டப்படுகிற வீடுகள் ஆங்காங்குள்ள தொழில் பேட்டைகளுக்குப் பக்கத்திலே தொழில் செய்கிற இடங்களுக்குப் பக்கத்திலே கட்டப்படுகின்றன. இந்த இடங்களில் கட்டப்படுகிற வீடுகளை 20 ஆண்டு காலத்தில் பெறும் வகையில் தொழிலாளர்களுக்கே கொடுத்து விட்டால் அதற்குப் பிறகு வரக்கூடிய தொழிலாளர்கள் நீண்ட தூரத்தில் குடியேறி அங்கிருந்து வேலைக்குவர வேண்டிய நிலை ஏற்படும். ஆகவே, அதைப் பற்றிப் பரிசீலனை செய்து முடிவு எடுக்க வேண்டுமென்ற சூழ்நிலையில் அரசு அதைப்பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, will the Hon. Minister consider that by selling these houses to the original allottees, they would get money? Also this will result in a sort of revolving fund at the disposal of the Government and with that money, they can construct further houses and why not the proposal be adopted?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** இப்போது இந்த வீடுகள் தொழில் பேட்டைக்குப் பக்கத்தில், தொழில் செய்யும் இடத்திற்கு பக்கத்தில் இருக்க வேண்டுமென்ற முறையில் கட்டிக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இந்த வீடுகளை அவர்களுக்கே சொந்தமாகக் கொடுத்து விட்டால், அடுத்த தலைமுறையில் வரும் தொழிலாளர் வரவேண்டிய நிலை ஏற்படும். ஆகவே, அதுபற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நம்முடைய மாநிலத்தில் ஹவுசிங் போர்ட் இன்டஸ்ட்ரியல் ஒர்க்கர்சைப் பொறுத்தவரையில் பின்தங்கியிருக்கிறோம் என்பதைப் பின்தங்கியோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் உணருவார்களா? இதிலே தீவிரமான நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதில் இந்த ஆண்டு துரிதமாகச் செயல்பட்டு வருகிறது என்பதை இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

### *Houses in Foreshore Estate*

* 337 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether rents sent to the Housing Board by the occupants of the Foreshore Estate, Santhome, Madras City, are being refused by the Board;

(b) if so, the details thereof ; and

(c) the amount not so far collected on this score?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) இல்லை.

(இ) & (உ) கேள்விக்கு இடமில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** எத்தனை பேர் அங்கு வாடகை கொடுக்காமல் இருக்கிறார்கள்? யாருக்கு ஒதுக்கப்பட்டதோ, அவர்கள் குடியில்லாமல் வேறு யாராவது இருக்கிறார்களா? இதையெல்லாம் கவனித்து சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** அதைப் பற்றிய புள்ளி விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. அதற்கான நடவடிக்கைகளை வீட்டு வசதி வாரியம் தக்கபடி மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி வீட்டு வாடகை கொடுக்காததை பற்றி அல்ல வீட்டு வாடகை வாங்க மறுத்தது பற்றி.

*Procession by staff of Electricity Board*

* 338. Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether there was any protest procession by the staff of the Electricity Board at Madras about 18th August 1971 against the transport crew; and

(b) if so, ,the details of the action taken in this connection?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) & (ஆ) விவர அறிக்கை @ மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பேரவைத் தலைவரவர்களே, மின்சாரத் தொழிலாளர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கின்ற போது, வேறு பகுதிகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறது, ஆகவே, மோதல் ஏற்பட்டது என்று அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. எனவே, மின்சாரத் தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடிய நேரத்தில் மற்றவர்களுக்கு இடைஞ்சல் இல்லாத முறையில் வேலை செய்யும் சூழ்நிலையை அரசு உண்டாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, இந்த இடைஞ்சல் தற்செயலாக ஏற்பட்ட ஒன்று. வழக்கமாக ஏற்படுவதல்ல. மின்வாரியத் தொழிலாளர்கள் மின் கம்பங்களை நட்டுக் கொண்டிருக்கும்போது, வீதியில் நடந்தது. எனினும், இடைஞ்சல் இல்லாத முறையில் இனிமேல் நடைபெற போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மின்வாரியப் பணியாளர்களுக்குச் சம்பள உயர்வு

* 339. **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1970-ம் ஆண்டு மே மாதம் மின்வாரிய ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்பட்டதா?

@ 85-ம் பக்கத்தில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தமிழ்நாடு மின்சார வாரியப்பணியாளர் சம்பள விகிதங்கள் 1—12—1969 நாளிலிருந்து செயல்படுமாறு 1970-மேத் திங்களிலும், ஜூன் திங்களிலும் மாற்றி அமைக்கப்பட்டன.

பழைய சம்பள விகிதங்களையும் புதிய சம்பள விகிதங்களையும் காட்டுகின்ற அறிக்கை † பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீநகரில் அனைத்துஇந்திய போக்குவரத்து ஏற்பாடு

* 340. **வினா—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 16—8—1971 அன்று போக்குவரத்து அமைச்சர் அவர்கள் ஸ்ரீநகரில் நடைபெற்ற அகில இந்திய போக்குவரத்து மாநாட்டில் கலந்து கொள்ளச்சென்றாரா?

(ஆ) ஆம் எனில், அங்கு எடுக்கப்பட்ட முடிவுகள் யாவை?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) போக்குவரத்து மேம்பாட்டு மன்றத்தின் ஒன்பதாவது கூட்டம் 1971 ஆகஸ்டு 18, 19 நாட்களில் ஸ்ரீநகரில் நடந்தது. அதில், போக்குவரத்து அமைச்சரும் மாநில அரசின் ஏனைய அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

(இ) கூட்டத்தின் முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**திரு. கே. ஏ. வகாப் : பேரவைத் தலைவரவர்களே, இந்த இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள மற்ற மாநிலங்கள் எல்லாவற்றையும் விட** கேரளாவில் போக்குவரத்து இலாக்கா மிகவும் சீராக பணியாற்றி வருகிறது என்று சொல்கிறார்கள். எனவே, அம்மாநிலத்தின் போக்குவரத்து இலாக்காவின் நடைமுறைகளை இம் மாநிலமும் பின்பற்ற ஆலோசனை செய்து பலன் பெற முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவரவர்களே இந்த மாநாட்டில் இந்தியத் துணைக்கண்டத்தின் பொதுப் படையான போக்குவரத்து பிரச்னைகள் மட்டுமே பேசப்பட்டன. கேரள மாநிலத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்னார்கள். அம் மாநிலத்தில், சென்னையைப் போல ஒரு பெரிய நகரம் இல்லை என்பதைக் கூற விரும்புகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, பக்கிங்காம் கால்வாயில் போட்டி வர் என்ற யோசனை இருந்தது. அந்த யோசனை ஸ்ரீநகரில் விவாதிக்கப்பட்டதா? மத்திய அரசு என்ன சொன்னது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவரவர்களே, பக்கிங்காம் கால்வாய் விரிவு படுத்தப்பட வேண்டும் மேம்பாடு செய்யப்பட வேண்டும், அதை போக்குவரத்துக்கு

† [redacted]ம் பக்கத்தில் மூன்றாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1971 டிசம்பர் 13

உகந்ததாக ஆக்க வேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அதற்கு ஒரு தனி ஸ்டடி டீம் போட்டிருக்கிறார்கள். நாம் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்த ஸ்டடி டீம் போடப்பட்டிருக்கிறது. ஆறு மாதம் என்று கால நிர்ணய வரையறை செய்து ரிப்போர்ட் கேட்டிருக்கிறார்கள். அந்த ரிப்போர்ட்டை தருவார்களேயானால், அதன் மேல் மத்திய அரசு பரிசீலனை செய்வதாக ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், நகரத்தில்தான் அதிகமான கஷ்டம் இருக்கிறது. காலையிலும் மாலையிலும் அதிகமானவர்கள் பஸ்களில் பிரயாணம் செய்கிறார்கள். ஆகவே, அந்த நேரங்களில் கண்டக்டர்களுக்கு கஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, அந்தக் குறிப்பிட்ட நேரங்களில், நிரந்தரமாகவே, ஒவ்வொரு பஸ்ஸுக்கும் இரண்டு கண்டக்டர்களை போட அரசு முடிவு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, மூலக்கேள்விக்கும், இக்கேள்விக்கும் தொடர்பே இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

THIRU K. T. K. THANGAMANI : It arose out of the reply to the supplementary.

### அரிசனநல கூட்டுறவு போக்குவரத்து சங்கம், மதுரை

*341. **வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் அரிசன நல கூட்டுறவு போக்குவரத்து சங்கம் அமைக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அச்சங்கத்தின் சார்பில் எத்தனை பேருந்துகள் எங்கெங்கு விடப்படுகின்றன ?

**மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன் :** (அ) ஆம்.

(இ) இச்சங்கம், மதுரை மாவட்டத்தில் கீழ்க்காணும் வழித் தடங்களில் இரண்டு பேருந்துகளை இயக்கி வருகிறது.

(1) மதுரையிலிருந்து புதுவார்பட்டி வரை.

(2) மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலிருந்து திருமங்கலம் வரை.

**திரு. பி. எஸ். மணியன் :** தலைவரவர்களே, இந்தப் போக்குவரத்துச் சங்கம் நல்ல லாபத்தில் நடைபெறுவதாக அறிகிறோம். ஆகவே, இந்தச் சங்கத்திற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் இன்னும் பல பஸ் ரூட்கள் இந்தச் சங்கத்திற்கு அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1971 டிசம்பர் 13]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இந்தச் சங்கத்திற்கு மதுரையிலிருந்து கிருஷ்ணன் கோயில் வரை, அதாவது 64 கிலோமீட்டர் தூரம் அளவுக்கு ஒரு பஸ்ஸுக்கு தற்காலிகமாக அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்தச் சங்கம் இன்னும் பஸ்ஸை கொண்டுவரவில்லை.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுகிற போக்குவரத்து பஸ்கள் சரிவர இயங்குவதில்லை. கொடுக்கப்படுகின்ற பஸ் ரூட்டுகள் விற்கப்படுகின்றன. அரசு இதையெல்லாம் கண்காணிக்க வேண்டும். அன்றாடம் அரசு ஊழியர்கள் கண்காணித்து அன்றன்றைக்கு வசூலைக் கணக்குப் பார்த்து, ஊழியர்களுக்கு லாபத்தை பகிர்ந்து தரப்படக்கூடிய முறையை அரசு ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இது கூட்டுறவு நிர்வாகம் பற்றிய பிரச்னை. பல கூட்டுறவு நிறுவனங்கள் நல்ல முறையில் இயங்கி லாபம் அடைகின்றன. மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிந்து எந்த நிறுவனம் நஷ்டத்தில் நடக்கிறதோ தெரியவில்லை. எழுதித் தந்தால் கூட்டுறவுத் துறை அமைச்சரிடம் கொடுத்தால் நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும்.

**திரு. மா. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, தமிழகத்தில், ஹரிஜன கூட்டுறவுச் சங்கங்கள் மொத்தம் எவ்வளவு இயங்கி வருகின்றன என்பதை அமைச்சர் அறிவிப்பாரா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தனிக் கேள்வி போடவும்.

### மயிலைச் சித்திரக்குளம்.

*342. **வினா—திரு. ரா. ரா. முனுசாமி :** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாப்பூர், சித்திரக்குளத்தைச் சென்னை மாநகராட்சி குத்தகைக்கு எடுத்துள்ளதா ?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) ஆம்.

(இ) மைலாப்பூர் ஆதிகேசவப் பெருமாள் மற்றும் பேயாழ்வார் தேவஸ்தானங்களின் அறங்காவலர்கள் சித்திரக் குளத்தை சென்னை மாநகராட்சிக்கு 14—10—1953 முதல் 99 ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் ஒன்றுக்கு குத்தகை விட்டிருக்கிறார்கள்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவரவர்களே, சித்திரக் குளம் தூர் வாரப்படாமல், நாற்றம் அடித்துக்கொண்டு சுகாதாரத்திற்குக் கேடான முறையில் இருக்கிறது. உடனடியாக தமிழக அரசு மாநகராட்சிக்கு இதைச் சுத்தப்படுத்துமாறு உத்திரவு இடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, இக் குளத்தை மாநகராட்சிக்கு விட்டதன் நோக்கமே, இதைத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடுதான். மாநகராட்சி, குத்தகை விடும்போது, சில முக்கியமான விதிகளை விதிக்கிறார்கள். குத்தகை விதிகளில், நல்ல முறையில் வைத்துக் கொள்ள வேண்டுமென்ற விதியும் இருக்கிறது. ஆகவே, குளம் அசுத்தமாக வைக்கப்பட்டிருந்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு ஏற்பாடு செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், குத்தகை விதிகளின் படி குளத்தை குத்தகைக்காரர்கள் சுத்தமாக வைத்துக்கொள்ளாத காரணத்தால், அறங்காவலர்கள், அந்தக் குத்தகையை ரத்து செய்து அந்தக் குத்தகையை மீண்டும் வேறொருவருக்கு அந்தப் பொறுப்பைக் கொடுக்கும்படியான நடவடிக்கையை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, குளம் தூய்மையாக வைக்கப்படாமல் இருந்தால், மாநகராட்சியிடம் கூறலாம். அவர்கள் மேற்கொண்டு நடவடிக்கை எதும் எடுக்கவில்லை என்றால் அது பற்றி யோசிக்கலாம்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, இந்தக் குளத்தினால் யாருக்கும் நன்மை இல்லை. கார்ப்பரேஷனுக்கோ, அரசுக்கோ வருமானம் இல்லை. மேலும், இந்தக் குளம் மிகவும் நெருக்கடியான இடத்தில் இருக்கிறது. ஆகவே, குளம் யாருக்கும் பிரயோசனம் இல்லை என்ற காரணத்தால், அதை மூடி, அந்த இடத்தில் வீடுகள் கட்டுவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** கோயிலுக்கு வருமானம் வர வேண்டும் என்றால், குளம் தேவைப்படுகிறது.

**திரு. எம். ஆர். கண்ணன் :** தலைவரவர்களே, பெரும்பாலான கோயில் குளத்தில் யாரும் குளிப்பதில்லை. இப்பகுதி குளங்கள் உண்மையிலேயே யாருக்கும் பயன்படுவதில்லை. என்னுடைய தொகுதியில் கிருஷ்ணப்ப நாயகர் குளம் இருக்கிறது. இது வறண்டிருக்கிறது. பாழாக இருக்கிறதே தவிர, இதனால் எந்தப் பிரயோசனமும் இல்லை. எனவே, சர்க்கார் உபயோகமில்லாத குளங்களை மூடி, அந்த இடத்தை வீடு கட்டுவதற்கோ, பூங்காக்களாக்குவதற்கோ உபயோகப்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, அக் குளத்தில், ஆண்டுதோறும் தெப்போற்சவம் நடைபெறுகிறது. எனவே, தெப்போற்சவத்திற்கு அது பயன்படுகிறது. எதற்கும் பயன்படவில்லை என்று சொல்வது தவறு.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** குளத்தை வெட்டுவது கஷ்டம். தூர்ப்பது எளிது. வெட்டப்பட்ட குளங்கள் சரியான முறையில் பராமரிக்கப்படாமல், தண்ணீர் வாய்க்கால் அடைக்கப்பட்டிருக்கின்றன. எல்லாக் குளங்களையும் தூர் வாரி, செப்பனிடப்பட்டு, தண்ணீர் வாய்க்கால் சரியான முறையில் திறந்துவிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** அப்படி எந்த எந்தக் குளங்கள் செப்பனிடப்படாமல் இருக்கின்றனவோ, அவற்றை எல்லாம் பரிசீலனை செய்து, தூர் எடுத்து, தூய்மைப்படுத்த வேண்டிய ஏற்பாடுகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம்.

### கோவை, திருப்பூர் நகரங்களுக்குப் பால் வழங்கல்

* 343. **வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை, திருப்பூர் போன்ற நகரங்களில் குறைந்த விலைக்கு நல்ல பால் தரும் திட்டத்தை விரிவுபடுத்தும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இல்லை.

**திரு. சு. துரைசாமி :** கோவை, திருப்பூர் போன்ற நகரங்கள் தொழிலாளர்கள் நிறைந்திருக்கிற பகுதி, அங்கே சத்து உணவுத் திட்டத்தின்கீழ் உணவுப் பொருள் வருவதுபோலவே கோயம்புத்தூர், திருப்பூர் போன்ற இடங்களில் மலிவான விலையில் பால் கொடுக்க முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மலிவான விலையில் பால் வழங்குகிற திட்டம் மதுரையில் செயல்பட்டு வருகிறது. யுனிசெப் மூலம் இயந்திரங்களை வாங்கி அங்கே வைத்திருக்கிறோம். அவர்கள் இயந்திரம் கொடுக்கும்போது போட்ட விதிக்கிணங்க அங்கே மலிவுவிலையில் பால்வழங்கப்படுகிறது. ஆனால் கோவை, திருப்பூர் போன்ற இடங்களில் இப்போது உள்ள இயந்திரங்களே போதுமானதாக இருக்கிறது. ஆகவே யுனிசெப் உதவியை நாடுவதாக இல்லை.

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம் தொகுதியில் பால் அதிகமாக உற்பத்தியாகிறது. அந்தப் பாலை சரியான முறையில் வாங்குவதற்கு வியாபாரிகள் இல்லாததால் அரசாங்கமே மில்க்போர்டு அமைத்து அதன்மூலம் அங்கு உற்பத்தியாகிற பாலை வாங்க முன்வருவார்களா?

[1971 டிசம்பர் 13

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** காங்கேயம், ஈரோடு பகுதியில் உற்பத்தியாகிற பாலை ஈரோடு டயரிக்கு சேர்த்து சென்னைக்குக் கொண்டு வருகிறோம். மேலும் அங்கே அதிக உற்பத்தி இருந்தால் அவற்றையும் வாங்க ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. எம். தேவராசன்:** தலைவர் அவர்களே, உதகை கூட்டுறவு பாலை சென்னைக்கு அனுப்பிவந்தார்கள். இவர்கள் வாங்காததால் அங்கே ஆயிரக்கணக்கான லிட்டர் பாலை கொட்டிவிட்டார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தனிக் கேள்வி போடவும்.

THIRU K. M. SUBRAMANIAM : When this country, particularly, Tamil Nadu is facing shortage of milk and the per capita consumption is so low how can the Hon. Minister say that there is excess of milk? It may be that the price is so high that the poor people are not able to buy it. Can I have an explanation on this?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, கோவை, திருப்பூர் நகரத்தைப் பொறுத்தவரையில் எந்த அளவுக்கு பால் வாங்குகிற மக்கள் இருக்கிறார்களோ, அந்த அளவுக்குமேல் உற்பத்தி அதிகமாக இருக்கிறது என்று குறிப்பிட்டேன். அதிகமான மக்கள் வாங்க முன்வந்து தேவை அதிகப்படுகிற நேரத்தில் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்கவும் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒற்றிவைப்புத் தீர்மானம் குறித்தும்

சுதேசமித்திரன் பத்திரிகை மூடப்பட்டதும் அதனால் ஏற்பட்ட வேலையின்மையால் அவதியுறும் தொழிலாளர், செய்தியாளர் நிலை குறித்தும்.

MR. SPEAKER : Under Rule 42 of the Tamil Nadu Assembly Rules Thiru R. Ponnappa Nadar has given notice of a motion for the adjournment of the business of the House to discuss a matter of urgent public importance, namely :—

" The closure of the ' Swadesamitran ' Press since November 10th 1971 and the consequent hardship of unemployment caused to several working journalists and other press workers."

Thirumathi T. N. Anandanayaki has also given notice of a similar motion.

I now call upon Thiru R. Ponnappa Nadar to explain briefly how it comes under an adjournment motion.



1971 டிசம்பர் 13]

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, 1971-ஆம் ஆண்டு நவம்பர் 10-ஆம் தேதியில் இருந்து சுதேசமித்திரன் பத்திரிகை மூடப்பட்டது குறித்தும், அதனால் பாதிக்கப்பட்ட வொர்க்கிங் ஜெர்னலிஸ்டு, தொழிலாளர்கள் நிலைமை குறித்தும் விவாதிக்கவேண்டுமென்ற இந்த அவசர முக்கியமான கருத்தைப் பற்றிய தீர்மானத்தை நான் கொடுத்திருக்கிறேன். திடீரென்று அந்தப் பத்திரிகை மூடப்பட்டது. அதன்காரணமாக வேலையிழந்த வொர்க்கிங் ஜெர்னலிஸ்டுகள் இன்றைய தினம் கஷ்டப்படுகிறார்கள். தொழிலாளர்கள் கஷ்டப்படுகிறார்கள். இதுபோன்ற முக்கியமான நிறுவனங்கள் மூடப்படுவது சரியல்ல. அதை உடனடியாக திறக்க அரசாங்கம் உடனடியாக உதவி செய்து, ஊக்கம் அளிக்கவேண்டும் என்பதை வற்புறுத்த இந்தச் சந்தர்ப்பத்தில் விரும்புகிறேன். மூடப்பட்ட அந்த நிறுவனம் திறக்கப்படுவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்த இந்த அவசரத் தீர்மானத்தைத் கொடுத்திருக்கிறேன். இதற்கு அனுமதி வழங்கவேண்டும் என்று கோருகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, 1971-ம் ஆண்டு நவம்பர் மாதம் சுதேசமித்திரன் நிர்வாகத்தினர் பண நெருக்கடியால் தங்கள் தொழிலாளருக்கு உரிய காலத்தில் ஊதியம் கொடுக்க இயலவில்லை என்றும் தங்களுக்கு அவசியமான மாஜெடைப் மீஷின் வாங்க முடியவில்லை என்றும் தங்களுக்குக் கடன் வசதி கிடைக்கும் வரை நிறுவன வேலையைத் தற்காலிகமாக நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறதென்று தொழிலாளர் நல ஆணையருக்கு முறையீடு செய்தனர்.

அதன்பேரில் 17—11—1971 அன்று ஆணையர் முன்னிலையில் நிர்வாகத்தினரும், சுதேசமித்திரன் தொழிலாளர் சங்கமும் சென்னை பத்திரிகையாளர் சங்கமும் பேச்சு வார்த்தை நடத்தி கீழ்க்கண்டவாறு உடன்பாடு ஏற்பட்டது—

1. அக்டோபர் மாத ஊதியம் 23-11-1971-க்குள் கொடுத்துவிட வேண்டும்.

2. பத்திரிகையை 18-11-1971 முதல் 22-12-1971 வரை நிறுத்தி வைக்க இருதரப்பினரும் இசைந்தனர்.

3. 1-11-1971 முதல் 17-11-1971 வரை முழுச் சம்பளமும் 18-11-1971 முதல் 22-12-1971 வரை 75 சதவிகிதம் சம்பளமும் கடன் கிடைத்த ஒரு வாரத்தில் கொடுக்கப்படும். மீதமான 25 சதவிகிதம் ஜூன் 1972-இல் கொடுக்கப்படும்.

4. இடைக் காலத்தில் காகிதத்தை தவிர வேறு சொத்துக்களை விற்கக் கூடாது.

5. கடன் கிடைக்காமல் நிறுவனத்தை மூடிவிடும் நிலைமை ஏற்பட்டால் சட்டப்படி நோட்டீஸ் சம்பளமும் நஷ்டஈடும், கிராஜுவிடி தொகையும் 15 நாட்களுக்குள் கொடுக்கப்படும்.

6. இந்தக் கம்பெனியோ அல்லது இத்துடன் இணையும் வேறு கம்பெனியோ பத்திரிகை ஆரம்பித்தால் இன்றுள்ள தொழிலாளர் சம்பளத்திற்குக் குறையாமல் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். 22-12-1971 க்குள் வங்கியிலிருந்து கடன் கிடைத்து வேலை ஆரம்பிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** 22-11-1971 க்குள்ளாக கடன் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருப்பதாகச் சொன்னார்கள். இன்றைக்குத் தேதி என்ன? கடன் கிடைத்ததா, இல்லையா? இல்லை என்றால் அரசாங்கமே கடன் கொடுத்து உதவ முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** 22-12-1971 க்குள் கடன் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருப்பதாகச் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று கருதுகிறேன். ஆகவே, அதற்கான அனுமதியை நான் மறுக்கிறேன்.

### (3) அறிவிப்புகள்

(அ) 1971-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1971-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

### (4) அரசினர் சட்டமுன் வடிவுகள்.

(அ) 1971-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த சட்டமுன்வடிவு.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, 1971-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, 1971-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1971-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

### (3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு பந்தைய—கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பந்தைய—கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவை இப்பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

### (4) அரசினர் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பந்தைய கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவு.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பந்தைய-கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பந்தைய-கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பந்தைய-கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

### (5) 1971-72-ம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதி அறிக்கை அளித்தல்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, 1971-72-ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மன்றத்தின்கண் வைக்க முன்வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கை ஒன்றும் இம்மன்றத்தின்முன் வைக்கப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கைகளின் மொத்தத் தொகை ரூ. 14.45 கோடியாகும். இதில் . 7.32 கோடி வருவாய்க் கணக்கின் கீழ் வருவதாகும். எஞ்சிய தொகை, மூலதன, கடன் கணக்குகளைச் சார்வதாகும். இந்தத் துணை மதிப்பீடு எங்ஙனம் ரூ. 14.45 கோடி ஆயிற்று என்பதற்குச் சில செலவினங்களைச் சுட்டிக்காட்டுவது எனது கடமை எனக் கருதுகிறேன்.

இந்திய அரசு கிராமப்புற வேலை வாய்ப்புக்கான திட்டத்திற்கு முதலில் ஒதுக்கிய தொகை நமது மாநிலத்தின் ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கையையும் மக்கள் தொகையையும்

ஒப்பு நோக்கத்தின் மிகக் குறைவாக இருந்தது. இத் திட்டத்தை செம்மையாக நிறைவேற்ற ரூ. 295 லட்சம் தேவைப்படும். இதை நாம் மத்திய அரசுக்கு எடுத்துக் கூறியதன் பேரில் நமக்கு அளிக்கவிருந்த உதவியின் தொகை ரூ. 1,62.50 லட்சத்திலிருந்து ரூ. 2,65.50 லட்சத்திற்கு உயர்த்தப்பட்டது. நாம் கோரிய நிதி உதவி கிட்டும் என்ற அடிப்படையில், ஆண்டுதோறும் இதற்காக ரூ. 295 லட்சம் தொடர் செலவில் நிறைவேற்றுவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

உணவில் ஊட்டச் சத்தின்மையை நீக்கி, குழந்தைகளுக்கு சத்துணவு வழங்க, சென்னை மாநகரிலும், கோயம்புத்தூர், மதுரை, திருச்சி நகராட்சிகளிலும், ஒரு லட்சத்திற்குமேல் மக்கள் தொகை கொண்ட ஏனைய 17 நகரங்களிலும் குடிசைப் பகுதிகளில் மூன்று வயது வரை உள்ள குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துணவு அளிக்கும் திட்டம், ரூ. 66 லட்சம் தொடர் செலவில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஊட்டச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் மொத்தம் 1,56,000 சிறுவர்கள் பயனடைகிறார்கள்.

கிராமங்களில், குறிப்பாக அரிசனக் குடியிருப்புகளில், மின்வசதி செய்து கொடுப்பதற்கு இந்த அரசு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. இதற்காக, மின்சார வாரியம் மேற்கொள்ளும் மூலதனச் செலவில் ஒரு பகுதியை ஈடுசெய்ய வேண்டியுள்ளது. இந்த ஆண்டு இப் பணிக்காக மின்சார வாரியத்திற்கு மூலதனச் செலவிற்கு முன்கூட்டியே உதவித்தொகை அளிக்கும் வகையில் ரூ. 20 லட்சம் கொடுக்கப்பட்டுள்ளது.

இம்மாநிலமெங்கனும் வடகிழக்குப் பருவமழை பரவலாகப் பெய்தது நமக்கு மனநிறைவு அளித்துள்ளது என்றாலும் இவ்வாண்டின் முற்பகுதியில் இம் மாநிலத்தின் சில பகுதிகளில் வறட்சிநிலை இருக்கத்தான் செய்தது. அந்தப் பகுதிகளில் உள்ள மக்களின் இன்னலை களையவும், குடிநீர் வசதி வழங்கவும், ரூ. 120 லட்சம் செலவு செய்ய அரசு ஒப்பளிப்பு வழங்கியது.

இளைஞர் அணிக்காக ஆண்டுதோறும் ரூ. 36.80 லட்சம் செலவழிக்க அரசு அனுமதித்துள்ளது.

இடைக்கால வரவு-செலவுத் திட்ட காலத்தில் அறிவிக்கப்பட்ட மாநில தொழில் மேம்பாட்டுக் கழகம் State Industries Promotional Corporations of Tamil Nadu. இப்போது நிறுவப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கு முனைந்து பாடுபடுவதே இக் கழகத்தின் முதன்மை நோக்கமாகும். அரசிற்கே முழுதும் சொந்தமான இக் கழகத்தின் பங்கு மூலதனத்திற்காக ரூ. 100 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. கூட்டுத் துறையில் (Joint Sector) தூத்துக்குடியில் நிறுவப்பட்டுவரும் உரத் தொழிற்சாலை நிறுவனத்தின் பங்கு மூலதனத்திற்கு கூடுதலாக நிதி அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்கேற்ப, முன்பு பெற்றுள்ள



நிறுவனத்திற்கு, அரசின் சார்பில் பங்கு மூலதனம் செலுத்த வகை செய்யும் பொருட்டு தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிதி ஒதுக்கத்துக்கு மேலாக ரூ. 80 லட்சம் செலுத்த இந்தத் துணை மதிப்பீடுகளில் மன்றத்தின் ஒப்புதல் கோரப்பட்டுள்ளது. மு.ப. 10·30

தமிழ் நாடு கைத்தறி-நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்) துணிகளை வாங்கி விற்பனை செய்யும் கொள்கையினை முனைந்து மேற்கொள்வதற்காக, குறைந்த வட்டி வீதத்தில் இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து பெருந்தொகை கடன் வாங்க வகை செய்யும் பொருட்டு, இந்த அரசு இச்சங்கத்தின் பங்கு மூலதனத்திற்கு மேற்கொண்டும், ரூ. 20 லட்சம் வழங்கியதற்கும் இத்துணை மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ளது. தமிழ் நாடு கூட்டுறவு மாநில நில வள வங்கியின் பங்கு மூலதனத்திற்கும் அரசு மேற்கொண்டு வழங்கிய ரூ. 75 லட்சத்திற்கும் இத் துணை மதிப்பீடுகளில் வகை செய்யப்பட்டுள்ளது. வேளாண்மை மறு நிதி உதவிக் கழகம், உலக வங்கி இவற்றின் உதவி கொண்டு, பெரும் அளவில் கடன் கொடுக்கும் வேலைத் திட்டத்தினை மாநில நில வள வங்கி மேற்கொண்டிருக்கும் இந்நிலையில் இந்த வங்கியின் நிதி வசதியினை செம்மைப்படுத்துவதற்கு இது உறுதுணையாக இருக்கும்.

இம் மாநிலத்தில் உள்ள எல்லா நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் குடிநீர் வழங்குவதென்ற திட்டவட்டமான நோக்கத்துடன் நிறுவப்பட்டுள்ள தமிழ் நாடு குடிநீர் வழங்கு கழிவு நீரகற்று வாரியத்திற்கு நடைமுதல் மூலதனக் கடனாக ரூ. 2 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத் தொகையினையும் துணை மதிப்பீடுகளில் சேர்த்துள்ளோம்.

தமிழ் நாடு காவல்துறை ஆணைக்குழு செய்த பரிந்துரைகள் சிலவற்றை அரசு ஏற்றுக்கொண்டு, இம் மாநிலக் காவல் படையினைப் புதுமைப்படுத்தி மாற்றியமைக்க ரூ. 40.63 லட்சம் செலவு செய்வதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

துணை மதிப்பீடுகளில் சேர்த்துள்ள முக்கியமான செலவினங்கள் சிலவற்றையே நான் சுருங்கக் கூறியுள்ளேன். உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விரிவான விளக்கக் குறிப்பில் இந்த இனங்களைப் பற்றிய மேல் விவரங்களைக் காணலாம். துணை மதிப்பீடுகளில் சேர்த்துள்ள ஏனைய திட்டங்கள் குறித்து சிறப்பாகக் குறிப்பிட்டு சொல்ல வேண்டிய அவசியம் இல்லை எனக் கூறிக்கொண்டு, 1971-72 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன்.

(6) 1967-68-ஆம் ஆண்டில் அதிகப்படியான செலவிற்கான நிதிக் கோரிக்கைகள் அளித்தல்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, 1967-68 ஆம் ஆண்டில் சில மானியங்களின்கீழ் ஏற்பட்ட செலவினம் அவ்வாண்டிற்காக ஒப்பளிப்பு வழங்கப்பட்ட இறுதி

நிதி ஒதுக்கத்திற்கு மேற்பட்டு விட்டதால், அம்மாதிரி ஏற்பட்ட அதிகப்படியான செலவினங்களை ஈடுசெய்வதற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய விவர அறிக்கையை மன்றத்தின் முன் வைக்க முன்வந்துள்ளேன்.

இந்த அதிகப்படியான செலவினங்களை ஆய்வு செய்த 1970-71 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவினர், 1967-68 ஆம் ஆண்டிற்கான அனுமதித்த மானியங்களுக்கும் சாட்டிய ஒதுக்கீடுகளுக்கும் மேல் அதிகப்படியான செலவினங்களைப்பற்றிய தங்கள் அறிக்கையில் 5-வது பத்தியில் கண்டுள்ளபடி, அதிகப்படியான செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகளைச் சட்ட மன்றத்தின் இசைவிற்காக அனுப்புமாறு பரிந்துரைத்தனர். பொதுக் கணக்குக் குழுவினரின் இப் பரிந்துரைக்கிணங்க, 1967-68 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவினங்களை ஈடுசெய்யும் வகையில், மானியக் கோரிக்கைகள் அடங்கிய விவர அறிக்கை இப்போது அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு செலவினமும் அதிகரித்ததற்கான காரணங்கள் மானிய விவர அறிக்கையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. இம் மிகைச் செலவினங்களின் மொத்தம் 1.78.44 லட்சம் ரூபாயாகிறது. இம் மிகைச் செலவினை முறைப்படுத்துவதற்குச் சட்ட மன்றத்தின் இசைவு தேவை. இம் மன்றம் இதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## (7) தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1971-72 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. நா. வீராசாமி:** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 1971-72-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். மின்சார வாரியத்தின் விவாதம் என்று சொன்னாலே அது ஒரு தனித்தன்மை உடையதாக இருக்கும். கடந்த பதினைந்து ஆண்டுகளாக அந்த நிகழ்ச்சிகளையெல்லாம் நோக்கியிருக்கிறேன். மின்சார வாரியத்தின் விவாதம் என்றால் பல நேரங்களிலே சூடான வாதமாக இருக்கும். சில சமயங்களிலே சுவையான நிகழ்ச்சியாகவும் இருக்கும். இந்த ஆண்டும் நிதிநிலை அறிக்கை விவாதிக்கப்படுகிறதா என்று கேட்கக்கூடிய அளவிற்கு, எதிர்க்கட்சிக்காரர்களோ அல்லது மற்ற எந்த உறுப்பினரும் மின்சார வாரியத்தை இடித்தும் பழித்தும் சொல்லியோ, வேறு எதாவது காரணம் காட்டியோ சொல்லியிருக்கிறார்களா என்றால், இதுவரையில் இல்லை. மின்சார வாரியத்தில் அப்படிப்பட்ட நிலைமை ஒரு காலத்தில் இருந்தது. "அங்கே தவறு நடந்திருக்கிறது, இங்கே ஊழல் நடந்துவிட்டது" என்று இன்றையதினம் எடுத்துச் சொல்வதற்கு எந்தவிதமான வழிவகையும் இல்லாதபடி, எந்த உறுப்பினரும் குறைபாடுகளை எடுத்துச்சொல்ல முன்வராதபடி மின்சார வாரியம் நல்லமுறையில் பணியாற்றிக்கொண்டிருப்பதைப் பாராட்டுகிறேன்.



(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மின்சார வாரியத்தைப்பற்றிப் பேசினார்கள். அவர்கள் பேசியதில் ஏதாவது பொருள் இருக்கிறதா என்று பார்த்தால் ஒன்றும் இல்லை. மின்சார வாரியத்தில் ஏதாவது குறை காண வேண்டுமென்பதற்காக, 'விழாக்களையெல்லாம் நடத்துகிறார்கள்' என்று குறை சொன்னார்கள். உள்ளபடியே விழாக்களை நடத்துவதைக்கூட எதிர்க்கட்சிக்காரர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகுதான் விழாக்கள் நடக்கின்றனவா? அதற்கு முன் விழா நடத்தப்படாத நிலையா? அவர்கள் ஆட்சியில் பல விழாக்களை நடத்தியிருக்கிறார்கள். ஆனால் அது அவர்கள் கண்களை உறுத்தவில்லை. 1960-ஆம் ஆண்டு மின்சார வாரியத்தின் பாபநாசம் தந்தப்பகுதி நவீன் திறப்பு விழாவை பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் வந்து திறந்து வைத்தார்கள். அந்தத் திறப்பு விழாவிற்கு வழியில் உள்ள அத்தனை பேரும் ஆட்களை அழைத்து வந்து விழாக்களை நடத்தினார்கள். சாதாரண திறப்பு விழாதான். அதற்கு அத்தனை பெரிய ஏற்பாடுகள். நாம் பெரிய வெற்றி விழாவைக் கொண்டாடுகிறோம். அதாவது 1972-க்குள் இந்த மாநிலத்திலுள்ள அத்தனை கிராமங்களுக்கும் மின்சார வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்கிற நோக்கத்தோடு, ஒவ்வொரு மாவட்டமாக எடுத்துக்கொண்டு, வேலைகளை முடித்துக்கொண்டு வருகிறோம். நாம் விழா நடத்துகின்ற நோக்கில் எதிர்க்கட்சியினர் குறை சொல்கிறார்கள். நாம் ஆடம்பரமாக எதாவது செய்திருக்கிறோமா என்றால் இல்லை. விழாவில் மின்சார பல்புகள் போடுவதைப் பற்றிச் சொன்னார்கள். மின்சார வாரியத்தின் விழாவிலே மின்சார பல்புகள் போடாமல், மின் குழம்பா வைப்பார்கள். இது ஒரு பெரிய குறையா?

எதிர்க்கட்சி உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் சில அருமையான கருத்துக்களைச் சொன்னார்கள். அது எந்த அளவிற்கு உண்மை என்று பார்க்க வேண்டும். மின்சார விநியோகத்தில் 'லைன் லாஸ்' ஆகிறது. இதைக் குறைக்கக் கூடாதா? என்று சொல்கிறார்கள்.

1968-69 ஆம் ஆண்டிலே 17.6 சதவிதம். 1969-70 ஆம் ஆண்டிலே 17.9 சதவிதம், மீண்டும் 17.6 சதவிதம் ஏன் இப்படிக் கூடுகிறது, குறைகிறது. இது முறைதானா என்று கேட்டார்கள். மின்சாரத் துறையிலே லைன்-லாஸ் என்பது என்ன, அது எப்படி வருகிறது என்பதை முதலிலே பார்த்தால் புரிந்து கொள்ளலாம்.

1966-ஆம் ஆண்டிலே நம் நாட்டிலே இருந்த லைன்களின் நீளம் 39.806 கிலோ மீட்டர்கள். அப்பொழுது லைன் லாஸ் 17.6 சதவிதம், ஆனால் இன்றையதினம் அவற்றின் நீளம் 55.064 கிலோ மீட்டர்கள்.

இந்த அளவுக்கு நாம் விஸ்தரிப்புச் செய்திருக்கிறோம். ஹெச்.டி. லைன்களை அதிகப்படுத்தியிருக்கிறோம். அதனால்தான் அப்படிப் பட்ட நிலைமை என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

எல். டி லைன்கள் எடுத்துக்கொண்டால் 73,198 கிலோ மீட்டர்கள் முன்பு இருந்தது. இந்த ஆண்டு 1,34,814 கிலோ மீட்டர்கள் என்ற அளவு உயர்த்தப்பட்டிருப்பதை கம்பேர் செய்யும்போது லைன் லாஸ் மாறாமல் இருக்குமா என்பதைப் பார்க்கவேண்டும். உண்மை யாகவே அவ்வளவு அளவுக்கு லைன்கள் அதிகப்பட்டிருப்பதைப் பார்க்கும்பொழுது லைன் லாஸ் 23.8 சதவீதம் என்ற அளவுக்கு ஆகியிருக்க வேண்டும். ஆனால் 17.6 சதவீதம் என்ற அளவுக்குத் தான் குறைவாக ஆகியிருக்கிறது.

அது மட்டுமல்ல, அவர்கள் கேட்டார்கள் இப்படி குறைவதும் அதிகமாவதும் நியாயமா என்று கேட்டார்கள். உலகத்திலே லைன் லாஸ் இல்லாத நாடு ஒன்று இருக்கிறது என்று யாராவது சொல்லமுடியுமா? நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரை யிலே நாம் இந்த அளவுக்கு விஸ்தரிப்புச் செய்திருக்கிறோம், ரூரல் எலக்டிரிபிகேஷன் செய்திருக்கிறோம் என்றால் லைன் லாஸ் சதவீதம் கூடும்.

எடுத்துக்காட்டாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள மற்ற மாநிலங்களில் லைன் லாஸ் என்ன சதவீதம் ஆகியிருக்கிறது என்பதைப் பார்த்தால் தெரிந்து கொள்ளலாம். லைன் லாஸஸ் ஆந்திராவிலே 25.3 சதவீதம் ஆகியிருக்கிறது, அஸ்ஸாமிலே 20.9 சதவீதம் ஆகியிருக்கிறது, பீகாரிலே 18.7 சதவீதம் ஆகியிருக்கிறது, ஹரியானாவிலே 27.8 சதவீதம் ஆகியிருக்கிறது, ஜம்மு அண்ட் காஷ்மீரில் 29.5 சதவீதம் ஆகியிருக்கிறது, அஸ்ஸாமிலே 20.9 சதவீதம் ஆகியிருக்கிறது. ராஜஸ்தானிலே 23.2 சதவீதம் ஆகியிருக்கிறது. உத்திரப் பிரதேசத்திலே 20.9 சதவீதம் ஆகியிருக்கிறது. ஆனால் நாம் மட்டும் 17.6 சதவீதம்தான், மற்ற மாநிலங்களில் எல்லாம் லைன் லாஸ் 20 சதவீதம் என்ற அளவுக்கும் அதிகமாக இருக்கும் பொழுது நம்முடைய மாநிலத்திலே குறைவாக இருக்கிறது என்பதை அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

சரி, இந்தியாவிலே மட்டுமல்ல, இப்பொழுது விரைவாக விஞ்ஞான வளர்ச்சி பெற்றுவருகின்ற பெரிய சாதனைகளைப் புரிந்து வருகின்ற அலாஸ்கா, கனடா போன்ற இடங்களிலே 23.6 சதவீதம், போர்ட்டோரிகோ. சௌத் அமெரிக்காவிலே 20 சதவீதம், மெக்ஸிகோவிலே 19 சதவீதம் தான். இந்த அளவுக்கு உலக நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் நம் மாநிலத்தில் லைன் லாஸஸ் குறைந்து இருக்கிறது என்ற அளவிலே நாம் பெருமைப்பட வேண்டும்.



மேலும் கேட்டார்கள் விழாக்கள் எடுக்கிறார்களே, நாங்கள் நீண்டகாலம் உறுப்பினராக இருந்திருக்கிறோம், வெங்கட்டராமன் காலத்திலே உறுப்பினராக இருந்திருக்கிறேன். அப்பொழுது எல்லாம் விழாக்கள் எடுக்கவில்லையே என்று கேட்டார்கள். விழாக்கள் எப்பொழுது எடுக்கிறோம்? வெற்றிபெற்றபோதுதான் விழாக்கள் கொண்டாடுகிறோம், இப்பொழுது வெற்றிபெறுகின் றோம் அதனால் விழாக்கள் எடுக்கிறோம். ஆனால் அவர்கள் குறிப்பிட்ட காலத்திலே குறைகள்தான் இருந்தன, அதனால் 128/248 டபிள்யு. எல். பி.ஓ. 27-3-72 பா ஆனந்தகிருஷ்ணமூர்த்தி அவர்கள் குறைகளைத்தான் சுட்டிக்காட்ட வேண்டிய நிலைமை இருந்தது. இப்பொழுது குறைகள் இல்லை, வெற்றி கிடைக்கின்றது, அதனால் விழாக்கள் எடுக்கிறோம்.

மேலும் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டபொழுது கிராப் எல்லாம் தாயரிக்கப்பட்டது முறையாக இல்லை என்று சொன் னார்கள். கிராப் என்பது ஒவ்வொரு நாளுக்கும் ஒன்று, ஒவ்வொரு ஆண்டுக்கு ஒன்று என்று தயாரிக்கப்படவேண்டும். டாக்டர் ஹாண்டே அவர்கள் நல்ல டாக்டராக இருக்கிறார்கள். . .

DR. H. V. HANDE : For the information of the hon. Member I can say that the graph is already there. Probably he is thinking that I am asking the Board to take a new graph. The only point I have made is that the Board should fill up the curves.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, திரு. வீராசாமி அவர்கள் வெளிநாட்டுக்கணக்குகளையெல்லாம் எடுத்துக்கூறினார்கள் அவற்றிற்கு என்ன ஆதாரம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இவ்வளவு பெரிய பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுதான் ஆதாரம்.

**திரு. நா. வீராசாமி :** திரு. ஜேம்ஸ் அவர்கள் எதிர்க்கட்சியிலே நல்ல உறுப்பினர். அவருக்கு ஆதாரங்கள் வேண்டுமென்றால் உண்மையா இல்லையா என்று கேட்டுக்கொள்ளலாம். இவற்றிற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. கிராப் இருந்தால்கூட—ஒரு டாக்டருக்கே ஒரு நாளைக்கு எத்தனை நோயாளிகள் வருகிறார்கள் என்று கணக்குத் தயாரிப்பது கடினம்—ஒரு ஹோட்டலிலே ஒவ்வொரு சாமானையும் தனித்தனியாக வைத்துக்கொள்ள முடியுமா என்பதைப் பார்க்கவேண்டும். ஸ்டோரேஜ் வைத்துக் கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள். மேலும் உணவு ஹோட்டலைப் போல தனித்தனியாக அரிசி இவ்வளவு மூட்டைகள் இருக்கின்றன, சர்க்கரை இவ்வளவு மூட்டைகள் இருக்கின்றன என்று தனித்தனியாக கணக்கு வைப்பதுபோல் வைத்துக் கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள். மின்சாரத் துறையைப் பொறுத்தவரையில் உலகத்திலே எங்காவது இப்படி ஸ்டோரேஜ் கணக்கு வைத்திருக்கிறார்களா என்பதைப் பார்க்கவேண்டும்.

DR. H. V. HANDE : Sir, may I just correct the hon. Member. How much electricity is surplus in each sub-station should be let known to the farmers and this has been suggested by the Estimates Committee and I am not saying anything new. I only requested the Hon. Minister to implement that suggestion.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஹாண்டே அவர்கள் என்ன குறிப்பிட்டார்கள் என்றால்,

"In front of every sub-section, put a board saying 'so much of power will be available for pumpsets'. Let them also indicate the power already given and power available. It is something like what is done in a Government store, stock on hand and quantity sold out............' என்று பேசியிருக்கிறார்கள். மின்சார இலாகா மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற நேரத்திலே ஒவ்வொரு சப்-ஸ்டேஷனிலும் எவ்வளவு மின்சாரம் இருக்கிறது, எவ்வளவு செலவாகியிருக்கிறது என்பது எப்படிப் போடுவது? அதிகமாக மின்சாரத்தைத் தேக்கினால் தீப்பற்றி எரிந்துவிடும். நாம் அதிகமாகச் சேர்க்கிற நேரத்திலே போர்டு போடவேண்டுமென்று சொன்னால் (டாக்டர் ஹாண்டே அவர்கள் எழுந்தார்கள்) டாக்டர் ஹாண்டே அவர்கள் அவர்களுக்குப் பின்னாலே வாய்ப்பு இருக்கும்பொழுது சொல்லிக்கொள்ளலாம்—எவ்வளவு செலவாயிற்று. எவ்வளவு மீதம் இருக்கிறது என்பதை எடுத்துக் காட்ட முடியுமா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

மின்சார வாரியத்திலே என்ன குறைகள் அவர்களால் சொல்ல முடிந்தது? இன்ன இன்ன குறைகள் இருக்கின்றன என்று சொன்னால் அவர்கள் யோசனைகளைச் சொல்லியிருந்திருக்கலாம். ஆனால் அப்படியில்லை. இந்த நாட்டிலே எந்த அளவுக்கு மின்சாரத் துறை வெற்றிபெற்றிருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தால் காமதேனுவைப்போல் வேண்டியதைக் கொடுக்கும் நிலைமையில் இருக்கிறது. 1966-ஆம் ஆண்டிலே 64 ஆயிரம் பேர்களாக இருந்தவர்கள் இன்றைக்கு 84 ஆயிரம் பேர்களாக வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். இப்படி 4, 5 ஆண்டுகளிலே 20 ஆயிரம் தொழிலாளர்கள் குடும்பத்தை வாழவைக்கின்ற பெருமையை இந்த இலாகா பெற்றுக் கொண்டிருக்கிறது என்பதால் உற்பத்தியைப் பெருக்கத் திட்டம் போட்டோம் என்றும் அதை நீங்கள் இப்பொழுது செய்கிறீர்கள் என்றும் சொன்னார்கள். இப்பொழுது உற்பத்தியைப் பெருக்கியது யார்? இந்த ஆட்சியிலே. மின்சாரத்தை எடுத்துக் கொண்டால் 1966-ஆம் ஆண்டு 1,070 மெகாவாட் ஆக இருந்தது இன்றையதினம் 1,325 மெகாவாட் என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது. அதையே யூனிட்களில் சொல்ல வேண்டுமானால் அன்றைக்கு 1103 மெகா யூனிட்களாக இருந்தது, இன்றையதினம் 5.547 மெகா யூனிட்களாக விநியோகித்துக் கொண்டிருக்கிறோம்.



அவர்களுடைய ஆட்சியிலே 22 ஆயிரம் பேர்கள்தான் மின்வசதி பெற்றிருக்கிறார்கள். இன்றைக்கு இந்த ஆட்சியிலே 42,229 பேர்கள் மின்வசதிகளைப் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால், இதைச் சாதனையில்லை என்று யாரும் நிச்சயமாக மறுக்க முடியாது.

பம்புசெட்டுகளை எடுத்துக்கொண்டால் 1966-ஆம் ஆண்டிலே 2,56,594 ஆக இருந்தது இன்றைக்கு 5,30.000 என்ற அளவுக்கு உயர்ந்திருக்கின்றது.

தெருவிளக்குகளை எடுத்துக்கொண்டால் அன்றைய தினம் 2 லட்சமாக இருந்தது இப்பொழுது 3 லட்சம் என்ற அளவுக்கு அதிகமாக்கப்பட்டிருக்கின்றது.

தொழில்களுக்கு மின்சாரம் போதுமான அளவு அளிக்கவில்லை, இன்னும் அதிகமாக அளிக்கவேண்டுமென்று கேட்டார்கள். 1966-ஆம் ஆண்டிலே 33,400 மின் இணைப்புகள்தான் கொடுக்கப் பட்டன, இப்பொழுது 63,400 என்ற அளவுக்கு அதிகமான மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம் இந்த இலாகாவிலே எவ்வளவு வேகமாகப் பணிகளை ஆற்றி நாட்டுக்கு எவ்வளவு அதிகமான நன்மைகள் அளித்துக்கொண்டிருக்கிறோம் என்பதைக் காட்டுவதற்குத்தான்.

இந்த இலாகா இன்னும் நல்ல முறையிலே செயல்படவேண்டுமென்ற அளவிலே சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் அளிக்கப்படவேண்டும், லட்சக்கணக்கான விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க வேண்டுமென்று நாம் சொல்லிவருகிறோம். ஆனால் இவ்வளவு வேலைகளையும் கவனிப்பதற்கு அங்கே இருப்பது ஒரு சீப் இஞ்சினியர்தான். வேலைகள் பரந்து இருக்கின்ற தன்மையைப் பார்த்து வேலைகளைத் துரிதப்படுத்த வேண்டும். வேலைகள் திறமையாகவும் வேகமாகவும் நடக்கவேண்டுமென்றால் இன்னும் சில பிரிவுகளைக் கூட அதிகமாக்கலாம். அதற்காக நான் சொல்லிக் கொள்வது என்னவென்றால், இந்த இலாகாவிலே சீஃப் இன்ஜினியர் (ஜெனரேஷன்), சீஃப் இன்ஜினியர் (ஆபரேஷன்), சீஃப் இன்ஜினியர் (டிஸ்டிரிபியூஷன்), சீஃப் இன்ஜினியர் (ஜெனரல்) என்று நிர்வாகத்தைக் கண்காணிப்பதற்காக இப்படி 4 சீஃப் இன்ஜினியர்களை, எப்படி பொதுப் பணித்துறையில் ஹைவேஸ், இர்ரிகேஷன் என்று இருக்கிறதோ அதைப்போல இந்த இலாகாவிலும் நியமிக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. நா. வீராசாமி] [1971 டிசம்பர் 13

இந்த நேரத்தில் இன்னும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தியத் துணைக் கண்டத்திலே வேறு எங்கும் இல்லாத அளவிற்கு தமிழகத்திலே, தாழ்த்தப்பட்டவர்கள் வாழும் பகுதிகளில் மின்சாரக் கட்டணம் செலுத்தாத காரணத்தினால். இன்றைக்கு மின்சாரத்தைத் துண்டித்து விடும் நிலை இருக்கிறது, அப்படிப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளுக்குக் கட்டணம் செலுத்தாத காரணத்தினால் துண்டிக்கிறார்கள். அரசாங்கமே அதை மானியமாகக் கொடுப்பது என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் நேற்றைக்கு முன்தினம் கவுன்சிலிலே சொல்லியிருக்கிறார்கள். இதெல்லாம் பாராட்டுக்குரியது. இதெல்லாம் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக நம்முடைய தமிழகம் அமைந்திருக்கிறது என்பதற்காக எதிர்க்கட்சிக்காரர்கள் பாராட்ட வேண்டும்.

இந்த அரசுக்கு ஒன்றே ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்குத் தமிழகம் பல துறைகளில் நல்ல வெற்றியைப்பெற்றிருக்கிறது. இரவு நேரங்களில் உற்பத்தி செய்யும் மின்சாரத்தைப் பயன்படுத்திக்கொள்ள சரியான தொழில் நிறுவனங்கள் வருவதில்லை. ஆகவே பல மின்சார உற்பத்தி நிலையங்களை நாம் நிறுத்தி வைத்திருக்கிறோம். இரவு நேரங்களில் 'ஸீரோ அவர்' நேரங்களில் பயன்படுத்தக்கூடியவர்கள் தமிழகத்தில் அதிகமாக வரவில்லை. ஆகவே, தொழில் அதிபர்கள் இரவு 10 மணிக்கு ஆரம்பித்து காலை 6 மணிக்குள் நாங்கள் தொழில் நடத்த வருகிறோம் என்று யாராவது முன்வந்தால் அவர்களுக்கு 50 சதவிகிதம் கன்செஷன் தருவதற்கு முன்வந்தால் பல முதலாளிகள், வடநாட்டிலே நடத்தப் பயப்படுகின்றவர்கள் அல்லது வேறு சில காரணங்களில் எங்கேயாவது தூக்கிக்கொண்டு செல்லலாம் என்று நினைப்பவர்கள் இப்படிப்பட்ட சலுகைகளைக் கொடுத்தால் தமிழகத்திலேயே உருவாக்க முன்வருவார்கள். எனவே தமிழகத்தைப் பொறுத்தவரையில் விரைவில் தொழில்களை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குப் பாகிஸ்தான் படையெடுத்திருக்கும் நேரத்தில், நம்முடைய முதலமைச்சரவர்கள் கூறினார்கள், அந்தக் கட்டணங்களைச் சீராக்க வேண்டுமென்றும், அது விவசாயிகளுக்கும் மற்ற எல்லா தொழில் துறையில் இருப்பவர்களுக்கு ஒரே பர்சென்டேஜ் என்று போட்டு வருமானத்தைப் பெருக்கவேண்டுமென்று சொல்வது உள்ளபடியே மின்சாரத் துறை பல வெற்றிகளை ஈர்க்க உருவாக்குவது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதுவரையில் மின்சாரத்துறை தொழிலாளர்கள் பல ஆண்டுகளாகப் போராடிப்போராடி வேலை நிறுத்தம் செய்து இன்னல்களை அனுபவித்து பல தியாகங்களைச் செய்து எவ்வளவோ போராடினார்கள். திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு அவர்களுடைய போராட்டம் அடங்கியிருக்கிறது.



1971 டிசம்பர் 13] [திரு. நா. வீராசாமி]

அவர்களுடைய கோரிக்கைகள் வெற்றி பெற்றிருக்கின்றன. பல ஆண்டுகளாகச் செய்த தியாகங்களுக்கு இந்த ஆட்சி பரிசுகள் கொடுத்திருக்கிறது, அதன் விளைவாகத் தொழில் அமைதி ஏற்பட்டிருக்கிறது. எல்லா நிறுவனங்களிலும் இன்னும் பல வெற்றிகளை ஈர்க்க வேண்டுமென்றும், இந்த மின்சார இலாகா தொடர்ந்து வெற்றிபெற வேண்டுமென்றும் தெரிவித்துக் கொண்டு, நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. தங்கமணி: மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், இந்த மின்சார வரவு செலவுக் கணக்குகள் பேரிலே பல மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களையெல்லாம் சொல்லியிருக்கின்றார்கள். அவைகளை நான் திருப்பிச் சொல்ல வேண்டுமென்ற நிலை இல்லை. சில நல்ல அம்சங்களைப் பலர் சொல்லியிருந்தாலும்கூட அதை முதலிலே குறிப்பிட்டு விட்டு நான் சொல்லக் கூடிய சில கருத்துக்களை ஆலோசனை என்ற முறையிலே உடனடியாகச் சிறப்பாக நடத்தக்கூடிய ஏற்பாடுகளில் இறங்கி அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற முறையிலே சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

பொதுவாக, 1953-ஆம் வருஷத்திலிருந்தே தமிழகம் மின்சாரத் துறையிலே முதலிடம் பெற்று வந்திருக்கிறது. அது கடந்த நான்கைந்து ஆண்டுகாலமாக இன்னும் கொஞ்சம் தீவிரத் தன்மையை அடைந்தது என்றால் அது மிகையாகாது. அதற்காக அதில் ஈடுபட்டுள்ள அமைச்சர் அவர்கள், அதிகாரிகள் எல்லோரும் பாராட்டிற்குரியவர்கள் ஆவார்கள்.

அடுத்தபடியாக, இன்றைக்குக் கிராமம் பூராவிலும் மின்சாரம் வேண்டுமென்ற அந்தக் கொள்கையை நாம் வைத்திருக்கும் பொழுது அகில இந்திய ரீதியிலே பார்த்தால் நமக்குச் சரியான அளவில்தான் எல்லா கிராமங்களிலும் முடிந்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது. தமிழகத்தில்கூட எல்லாக் கிராமங்களிலும் இன்றைக்கும் மின் அமைப்பு ஏற்படாமலிருந்தாலும் கூட ஏற்பட்டிருக்கும் மின் அமைப்பு ஹரியானா அளவைவிட இன்னும் கொஞ்சம் தீவிரமாக இருக்கிறது என்ற அந்த உண்மையைச் சொல்ல வேண்டும்.

There is more depth in this electrification than in Haryana.

அதேநேரத்தில், 1967-க்கு முன்பு தொழிலாளர்களைப்பொறுத்த வரையில் தொழிற்சாலையில் பணியாற்றுபவர்கள் மின்சார வெட்டுக்களின் காரணமாக வேலையிழந்திருந்தார்கள்.

**They had to be paid compensation for involuntary unemployment.**

அப்படிப்பட்ட நிலைமை இப்பொழுது இல்லை என்பது இன்னும் நல்ல அம்சமாக இருக்கிறது. இவைகளை நான் சொல்லிவிட்டு அடுத்து ஆரம்பத்தில் சொன்னபடி என்னுடைய ஆலோசனையைத் தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 டிசம்பர் 13

எப்படி இந்தியாவிலே ரயில்வே ஒரு முக்கியமான பொதுத் துறையோ அதேமாதிரி பொதுத்துறையாக தமிழகத்திலே இருக்கும் மின்சாரமானது இருக்கிறது. நம்முடைய மின்சார வாரியத்தில் நாம் போட்டிருக்கும் மூலதனம் 400 கோடிக்கும் அதிகம். 400 கோடிக்கும் அதிகமாக இருக்கும் ஒரு மூலதனத்தை இன்றைக்குத் தமிழக அரசு ஏற்று நடக்கின்றது என்றால் அதைப்பற்றி முழு கண்காணிப்பிலும், முழு நடவடிக்கைகளிலும் ஈடுபட எல்லா உறுப்பினர்களுக்கும் மட்டுமல்லாமல். நாட்டு மக்கள் பூராவும் அதில் ஈடுபட வேண்டும். அப்படி ஈடுபடுத்துவது அது சிறப்பாகச் செயல்பட உதவும். மத்தியிலே, நீண்டநெடுங் காலமாக நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்புகூட ரயில்வேக்குக் கூட தனி பட்ஜெட் சமர்ப்பித்து, அந்த பட்ஜெட்டின் பேரிலே தீர்க்கமான விவாதம் நடத்தப்படுகிறது. இங்கு நமக்கு சட்ட அடிப்படையிலே அம்மாதிரி வைத்து ஒரு தீர்க்கமான விவாதத்தை நடத்தி வெட்டுப்பிரேரணைகளைக் கொண்டுவந்து சில விஷயங்களை வற்புறுத்த வசதி வாய்ப்புகள் இல்லை. ஆகவே இதற்கு முன் இருந்த சட்டமன்ற உறுப்பினர்களும் இதற்கு முன் இருந்த நிர்வாகஸ்தர்களும் in their wisdom thought fit to submit to this House the Statement of Action taken on the suggestions givenby the Members. அந்த அளவிற்கு பரவாயில்லை என்றுதான் சொல்ல முடியும். இருந்தாலும் கூட இந்த விவாதத்தின் தன்மையிலே இன்னும் கொஞ்சம் நுணுக்கமான தன்மையில் ஏற்படுத்தி அதைப் பல பிரிவுகளாகப் பிரித்து, இந்தப் பட்ஜெட்டைத் தயாரிப்பது, பத்தாண்டுக் காலமாக ஒரு முறை மாதிரிதான் வாய்ப்பளிக்கப்பட்டது. அம்மாதிரியில்லாமல் சில டிமாண்ட்ஸ் என்ற அடிப்படையில் பலவகையாகப் பிரிக்க வேண்டும். அந்த முறையில் தயாரித்தல் நம்முடைய கவனத்தை ஒவ்வொரு பகுதியிலேயும் ஈடுபடுத்த முடியும் என்ற ஆலோசனையைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டாவதாக அகில இந்திய ரீதியிலே ஒரு கிரிட் வேண்டுமென்று அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்கள் தெரிவித்தார்கள். பொதுவாக வளர்ச்சியுற்ற நாடுகளில் ஒரேவிதமான கிரிட் வேண்டுமென்று கூறப்படுகிறது. பொதுவாக கிரிட் என்று பத்திரிகைகளிலே வரும்பொழுது எந்த அளவில் அது மக்களுக்குப் புரிகிறது என்பது எனக்குத் தெரியாது. இன்றைக்குக்கூட இங்கு ஆந்திராவிலே உற்பத்தியாகும் மின்சாரம் தமிழகத்திற்கு வருவதற்கு இணைப்பு உண்டு. அதேமாதிரி மைசூரில் உற்பத்தியாகும் மின்சாரம் இங்கே கொண்டுவரப்படுவதற்கு இணைப்பு உண்டு. கேரளத்தில் உற்பத்தியாவதைக் கொண்டுவருவதற்கும் இணைப்பு உண்டு. இந்த இணைப்புகளை உண்டாக்கக்கூடியது கிரிட்டுகள் அது எந்த வகையிலே இருக்கிறது என்று சொல்ல முடியவில்லை.



1971 டிசம்பர் 13] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இன்றைக்குத் தென்னகத்தைப் பொறுத்தவரையில் 4 மாநிலங்களுக்கும் இப்பொழுது தலைவர் இருக்கிறார்கள். அந்தத் தலைவரை, இன்றைக்கும் வருஷாவருஷம் ஒரு தலைவரை நியமிக்கிறார்கள். இந்த ஆண்டு அந்தத் தென் பிராந்தியங்களுக்கு இருக்கும் அமைப்பின் தலைவராக நம் வாரியத்தின் தலைவர் திரு. ரங்கபாஷ்யம் அவர்கள் இருக்கிறார்கள். ஏதோ இந்த சதர்ன் ஏரியாவைச் சேர்ந்த கோ-ஆர்டிவேஷன் கமிட்டிக்கு இருக்கும் தலைவர் என்ற முறையில் அவர் இல்லாமல் இந்தச் சமயத்திலே தமிழகத்தை மனத்திற்கொண்டு தென் பிராந்தியங்கள் பூராவிற்கும்—மின்சார உற்பத்தி விநியோகம் என்ற முறையில் கொஞ்சம் கவனம் மு.ப.
செலுத்த வேண்டும். 11-00

முதலிலே ஒரு விஷயத்தை எடுத்துக் கொள்வோம். ஹொகனேகல் திட்டம் என்ன ஆனது என்று தெரியவில்லை. மைசூர் அரசை வற்புறுத்தி நடவடிக்கை எடுத்துச் செய்வார்களானால் மைசூருக்கும் பலன் உள்ளதாக இருக்கும். தமிழகத்திற்கும் பலன் உள்ளதாக இருக்கும்.

இந்தத் துறையிலே டாக்டர் நடராஜனுடைய சிபாரிசுகள் இருக்கின்றன. அந்த சிபாரிசுகளுடைய ஒரு பகுதி இப்போதைய கட்டணத்தை உயர்த்தும் பகுதியாக வந்து விடுமோ என்ற அச்சம் இருக்கிறது. அதிலே ஒரு விஷயம் என்னவென்று சொன்னால் மின்சாரம் சப்ளை பண்ணுகிற போது விவசாயிகளாக இருக்கட்டும், தனியாராக இருக்கட்டும், தொழில் அதிபர்களாக இருக்கட்டும், ஒரே மாதிரி ஸ்லாப் இருக்க வேண்டுமென்று சொல்லுகிறது. இன்றைக்குத் தொழில் அதிபர்களுக்குச் சப்ளை செய்யக்கூடிய முறை மிக மிக டெலிகேட்டாக இருக்கிறது. அதிகமாக மின்சாரம் பயன்படுத்திக் கொண்டார்களானால் அந்த அளவுக்குக் கட்டணம் குறைகிறது. அதிகம் ஆக, ஆகக் கட்டணம் குறைகிறது என்று நடராஜன் கமிட்டி அறிக்கையில் வெகு தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நான் முன்னால் பணியாற்றிய சில எஞ்சினியர்களைக் கலந்து கொண்டுதான் சொல்லுகிறேன்—எல்லோருக்கும் ஒரே ரீதியாகக் கட்டணத்தை அமல் நடத்தினால் தமிழகத்தில் ஐந்து கோடி ரூபாய் அதிகமாக வருமானம் வர வாய்ப்பு இருக்கிறது. பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் 10 கோடி ரூபாய் வருவாயாக இருந்த இந்த இலாகாவில் இப்போது 65 கோடி ரூபாய் அளவுக்கு வருவாய் வந்து கொண்டிருக்கிறது. இந்த அளவுக்கு 65 கோடி ரூபாய் வருவாய் வந்து யாராவது ஒருவர் நஷ்டத்தில் நடத்துகிறோம் என்று சொன்னால் அது உண்மையல்ல. 12 பர்சண்டுக்கு மேல் வருவாய் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

அந்த வருவாய் அதிகமாகக் கிடைக்க என்ன செய்ய வேண்டும்? வருவாய் குறைவதற்குக் காரணம் என்ன? இதையெல்லாம் கொஞ்சம் அரசு விளக்கினால் நிலைமை இலகுவாகப் புரியும்.

ஒரு விஷயம் எல்லோரையுமே குழப்பம் உண்டாக்கக்கூடிய விவகாரமாக இருக்கிறது. டிரான்ஸ்மிஷன் லாஸ் இந்த ஆண்டு 17.6 சதவிகிதம் என்று நினைக்கிறேன். இவ்வளவு ஆகுமா என்பதைப் பற்றி எங்களுக்கெல்லாம் ரொம்பச் சந்தேகமாக இருக்கிறது. இது எந்தக் கணக்கில் ஆகுமென்று சொல்லுகிறார்கள்? ஒருவர் இங்கே சொல்லியிருக்கிறார்கள்—அதை ஆங்கிலத்தில் சொல்லுகிறேன்.

Units delevered at the power source *multiplied* by 95 per cent (to account for meter errors) *minus* (units sold *plus* self-consumption of power sources) multiplied by 100 divided by units delivered will be the sum of power losses in transmission, distribution, etc., and ' theft ' of electricity with or without corrupt practices.

இது ஒரு ஃபார்முலா. இதன்படி பார்த்தால் 17.6 சதவிகிதம் ஏன் வருகிறது என்று தெரியவில்லை. இப்போது மின்சாரம் திருட்டுப் போகிறது. அப்படித் திருட்டுப் போகிற மின்சாரத்தை இதனோடு இணைக்காமல் இருந்தால் ஓரளவு இந்த சதவிகிதம் குறையும். 12 சதவிகிதமாக வரலாம். மேலை நாடுகளிலே டிரான்ஸ்மிஷன் லாஸ் என்பது மிக மிகக் குறைவு. எந்த நாடு என்று நான் சொல்லவில்லை. சோவியத் யூனியனைப் பற்றி மட்டும் சொல்லவில்லை. வளர்ச்சி பெற்ற மேலை நாடுகளில் எல்லாம் இதன் சதவிகிதம் குறைவாக இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஆன் எ பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன். திரு. வீராசாமி அவர்கள் பேசும்போது மேலை நாடுகளிலே 20 சதவிகிதம், 24 சதவிகிதம் டிரான்ஸ்மிஷன் லாஸ் ஏற்படுகிறது என்றார்கள். திரு. தங்கமணி நாடார் அவர்கள் பேசும்போது மேலை நாடுகளிலே இது குறைவாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இவர்கள் இரண்டு பேரும் எந்த ஆதாரத்தை வைத்து இப்படிக் கூறுகிறார்கள்?

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, கிளாரிபிகேஷன் கேட்டார்கள், சொல்லிவிடுகிறேன். நான் மின்சார வாரியத்தில் பணியாற்றியவன். அப்போது ஒவ்வொரு நாட்டையும் கேட்டு இதுபோன்ற விவரங்களை அறிவது வழக்கம். அப்படி அறிகின்ற நேரத்தில் கனடா நாட்டில் 23.6 சதவிகிதம் என்றும், போர்டிரிகோ நாட்டில் 20 சதவிகிதம் என்று பதில் வந்திருக்கிறது. அந்த ஆதாரத்தை வைத்துக் கொண்டுதான் நான் கூறினேன். திரு. தங்கமணி அவர்கள் எந்த ஆதாரத்தை வைத்து குறைவாக இருக்கிறது என்று கூறுகிறார்கள் என்பது எனக்குத் தெரியாது.

திரு. கே. டி. கே. தங்கமணி : 'நாடார்' என்பதை மறந்து ஆண்டுகள் பல ஆகிவிட்டன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை ஞாபகப்படுத்துகிறார்கள். (மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஜாதியை நாடார். . .) பிறந்த ஜாதியில் நாடாகை இருக்கலாம். அதை இன்று நாடார்களே ஏற்றுக் கொள்ளாமல் இருக்கிறார்கள்.





இந்த விவரங்களிலே இம்மாதிரியான சச்சரவுகள் வரக்கூடிய விஷயங்களிலே மின்சார வாரியமே வெளிநாடுகளில் இருந்து விவரங்களைச் சேகரித்து அவர்கள் டிரான்ஸ்மிஷன் லாஸ் என்பதை எப்படி ஓர்க் பண்ணுகிறார்கள் என்று விவரங்களை எல்லாம் சேகரித்து நமக்கு அறிவித்தால் உதவிகரமாக இருக்கும்.

டிரான்ஸ்மிஷன் லாஸைப் பற்றிப் பிரதானமாகப் பேசுவதன் நோக்கம் எங்கும் இல்லாத அளவுக்கு இருக்கிற மின்சாரத் திருட்டு இதிலே உட்பட்டு வருகிறது என்பதால்தான். மின்சாரத் திருட்டு எவ்வளவு என்பதை வெகு லகுவாகப் பார்த்து விடலாம். மின்சாரத் திருட்டையும் டிரான்ஸ்மிஷன் லாஸில் கணக்கிடுகிறோம் என்று சொன்னார்கள். எவ்வளவு உற்பத்தி ஆகிறது, எந்த அளவுக்கு சப்ளை ஆகிறது என்று பார்க்கக்கூடிய நேரத்தில் டிரான்ஸ்மிஷன் லாஸைப் பார்க்கும்போது மின்சாரத் திருட்டு அதிகமாக இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. இந்தத் திருட்டினால் மின்சாரம் போவது மட்டும் ஐந்து கோடி ரூபாய். ஐந்து கோடி ரூபாய் மின்சாரத் திருட்டில் போகக்கூடிய முறைகளை மின்சார இலாகாவில் இருப்பவர்கள் நன்றாக அறிவார்கள். மின்சார மீட்டரைச் செயல்படுத்தாமல் வைப்பார்கள்; நேரடியாக கனெக்ஷனிலிருந்து மின்சாரத்தை எடுப்பார்கள். பல முறையில் இந்தத் திருட்டு நடக்கிறது. இந்த முறையில் திருட்டுக்கள் நடக்காமல் இருக்க அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். இது நீண்ட நெடுங்காலமாகக் கூறப்பட்டு வந்திருக்கிறது. ஐந்தாறு ஆண்டுகளாக நடந்த விவாதத்தை எல்லாம் பார்த்தேன். ஒவ்வொரு உறுப்பினரும் ஏதாவது ஒரு முறையில் மின்சாரத் திருட்டைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இங்கே திருட்டின் மூலமாக எவ்வளவு மின்சாரம் போயிருக்கிறது என்ற கணக்கைத் தனியாகச் சொல்லுவது கிடையாது. இதிலே மின்வாரியம் நல்ல முறையில் நடவடிக்கை எடுத்து தனியாக அந்தக் கணக்கைச் சொல்லுவது உதவிகரமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தது, தொழிற்சாலைகளுக்கும், கிராமங்களுக்கும் மின்சாரக் கட்டணம் வசூலிப்பதிலே ஏற்படக்கூடிய பாகுபாடு. நான் சில விவரங்களை ரிசர்ச் டிப்பார்ட்மென்டில் இருந்து கேட்டு வாங்கினேன். விவரங்கள் தவறாக இருந்தால் திருத்திக் கொள்கிறேன். இதன்படி ஹைடல் பவர், தெர்மல் பவர், நெய்வேலியிலிருந்து பெறுவது, கேரளா, மைசூர் மாநிலங்களிலிருந்து பெறுவது எல்லாவற்றையும் வைத்து சராசரியாகப் பார்த்தால் ஒரு யூனிட்டுக்கு 5 பைசாதான் வருகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை நாம் சப்ளை செய்யும்போது அதிகமாகக் கேட்க வேண்டுமா ? வீட்டிலிருக்கக்கூடிய கனெக்ஷன், கடைகளுக்கான கனெக்ஷன் இதிலிருந்து வரக்கூடிய வருமானம் என்ன? 65 கோடி ரூபாய் மொத்தமாக வருவதிலே அதில் ஒரு கோடி ரூபாய் வருகிறது. யூனிட்டுக்கு 31 பைசா, 38 பைசா என்று கட்டணம்

வாங்க வேண்டுமா ? 10 பைசா யூனிட்டுக்கு என்று ஆக்கினால் அதனால் ஏற்படக் கூடிய நஷ்டம் அரைக் கோடி ரூபாயாக இருந்தாலும் சாதாரண ஜனங்களுக்குப் பேருதவியாக இருக்கும்.

சர்க்கரைச் செட்டியார் அவர்கள் சொல்லுவார்கள் ஒரு கிராமத்தில் போஸ்ட் ஆபீஸ் இல்லாமல் இருந்து அங்கு அரசு போஸ்ட் ஆபீஸ் அமைத்த பிறகு போஸ்ட் ஆபீஸ் அமைத்ததற்காக கிராம மக்கள் பேரில் புதிய வரி போட்டால் எவ்வளவு தவறாக இருக்குமோ, அதேமாதிரிதான், மின்சார இலாகாவிலே கூறுவது அமைந்திருக்கிறது. கிராமத்தில் பம்ப் செட்டுக்கு மின்சாரம் கொடுக்க செலவு அதிகமாகிறது என்று அந்த ஒரு இனத்தை வைத்து மட்டும் பார்க்காமல், மின்சார இலாகாவுக்கு பூராவாக, மொத்தமாக எவ்வளவு செலவாகிறது என்ற வகையில் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால் விவசாயிகளுக்குக் கொடுப்பதால் 9 பைசா நஷ்டம் வருகிறது தவறு என்பது புரியும். மொத்தத்தில் உற்பத்திச் செலவு எவ்வளவு, டிரான்ஸ்மிஷன் லாஸ் எவ்வளவு என்றெல்லாம் பார்த்தால் விவசாயிகளுக்கு நாம் ரிபேட் கொடுக்கிறோம் என்று சொல்லுவது தவறு என்பதை புரிந்து கொள்ள முடியும். இந்த நிலையில் மின்சாரம் இணைந்திருக்கும் தொழில்களுக்கும், மின்சாரத்தால் ஓடக் கூடிய அலுமினியம் பாக்டரிக்கு, சிமென்ட் தொழிற்சாலைகளுக்குக்கூட, மின்சாரத்தை அதிகமாகப் பயன்படுத்தக்கூடிய கெமிகல்ஸ் போன்றவைகளுக்கு மின் கட்டணத்திலே கன்செஷன் கொடுத்திருப்பது அவசியந்தானா என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும் இந்தப் பிரச்னை எழுப்பப்படுகிறது. மேடூர் அலுமினியம் பாக்டரியில் ஒரு கோடி ரூபாய் 'நம் பணத்திலிருந்து நாம் நஷ்டப்படுகிறோமே, இது அவசியந்தானா? அப்படி ஆரம்பக் காலத்தில் கொடுத்திருந்தாலும், இப்போது அது நல்ல லாபத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. ஆகவே, சிமென்ட், கெமிக்கல்ஸ், அலுமினியம் போன்ற பாக்டரிகளுக்கு இப்படி ரிபேட் கொடுக்க வேண்டியது அவசியந்தானா என்பதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எனக்கு முன் பேசிய உறுப்பினர் அவர்கள் ஒரு சீப் என்ஜினியர் (கன்ஸ்ட்ரக்ஷன்) சீப் என்ஜினியர் (ஆப்பரேஷஷஸ்), சீப் என்ஜினியர் (டிஸ்ட்ரிப்யூஷன்) என்றெல்லாம் வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் எல்லாம் இப்போதே இருக்கிறார்கள். ஏற்கனவே ஒரு சீப் என்ஜினியர் இருக்கிறார். ஒரு என்ஜினியர் (கன்ஸ்ட்ரக்ஷன்) இருக்கிறார். அவர் நான்கு ப்ராஜக்ட்டுகளை கவனித்துக்கொண்டு வருகிறார். ஒரு என்ஜினியர் (ஆப்பரேஷன்ஸ்) இருக்கிறார். அவர் நான்கு ஜெனரேட்டிங் ஸ்டேஷன்ஸ்களைக் கவனித்துக்கொண்டிருக்கிறார். ஒரு என்ஜினியர் (டிஸ்ட்ரிப்யூஷன்) இருக்கிறார். அவர் 13 ஸர்க்கிள்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறார். நான் சொல்வது, இந்த என்ஜினியர்களுக்கு தனியாக இன்னும் கொஞ்சம் அதிகாரங்களைக் கூடுதலாகக்





கொடுக்க வேண்டும். 13 ஸர்க்கிளுக்கும் ஒரு என்ஜினியர் (டிஸ்ட்ரிப்யூஷன்) என்பதை விட இன்னொருவரைக் கூட போடலாம். ஆகவே உடனடியாக கூடுதல் அப்படி ஒரு என்ஜினியர் (டிஸ்ட்ரிப்யூஷன்) போடவேண்டும். டிஸ்ட்ரிப்யூஷன் தான் மிக முக்கியமானது. அங்கு வேலைப் பளுவும் ஜாஸ்தி. ஒருவர் அல்லது இருவரைப் போட்டாலும் நான் குறை கூற மாட்டேன். கீழேயிருந்து மேல் வரை மிகத் திறமையான என்ஜினியர்கள் நமக்கு இருக்கிறார்கள். அதை எந்த நாட்டோடும் நாம் ஒப்பிட்டுப் பார்க்க முடியும். அவர்களுக்குப் ப்ரமோஷன்ஸ் கிடைப்பதற்கும் இன்னும் அதிக அதிகாரங்கள் கொடுப்பதற்கும் இது உதவிகரமாகயிருக்கும்.

**திரு. நா. வீராசாமி:** டிஸ்ட்ரிப்யூஷன் என்ஜினியர் இருக்கிறார். அவர் சீப் என்ஜினியரின் கீழ் இருக்கக்கூடியவர். நான் சொல்வது, சீப் என்ஜினியர் தகுதிக்கு ஏற்றாற்போல் அவரவர்கள் அதிகாரங்களைப் பரவலாக்கி தனியாக டிஸ்ட்ரிப்யூஷனுக்கு ஒரு சீஃப் என்ஜினியர் என்ற வகையில் எப்படி பொதுப்பணித் துறையில் சீஃப் என்ஜினியர் (இரிகேஷன்), சீஃப் என்ஜினியர் (ஹைவேஸ்) என்றிருப்பதைப் போல் இங்கு அப்படி சீஃப் என்ஜினியர்களை நியமித்து அவர்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுத்து நல்ல முறையில், திறமையான வகையில் மின்சாரத்தை அதிகமாக உற்பத்தி, அங்கு எப்படி இருக்கிறது என்றுதான் குறிப்பிட்டேனே உற்பத்தி செய்து வழங்க வேண்டும் என்றுதான் குறிப்பிட்டேனே தவிர, அங்கு எப்படி இருக்கிறது என்பதுபற்றி எனக்கும் தெரியும். நான் அங்கே பணியாற்றியவன்தான்.

**திரு. கே. டி. கே தங்கமணி:** தகுதியை உயர்த்தினால் எனக்கும் சந்தோஷம்தான். உறுப்பினர் அவர்கள் சொன்னதை மறுக்க வேண்டுமென்ற நோக்கத்தில் நான் சொல்லவில்லை. என் பாயின்ட் என்னவென்றால், சீப் என்ஜினியர் அந்தஸ்துக்கு உயர்த்துவது மட்டுமல்லாமல் டிஸ்ட்ரிப்யூஷன் என்ஜினியர் ஒருவர் என்றிருப்பதை இரண்டு அல்லது மூன்றாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழ் நாட்டில் இன்றுள்ள தேவைக்குத் தகுந்தபடி ஹைடல் பவர் மூலமோ அல்லது தர்மல் பவர் மூலமோ மின்சாரம் பரிபூர்ணமாகக் கிடைக்கவில்லை. நெய்வேலியைச் சார்ந்திருக்க வேண்டியதாகயிருக்கிறது. ஆகவேதான் கேரளாவிலிருந்தும் குமரூரிலிருந்தும் கேட்டு வாங்கவேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது. அப்படி வாங்கும்போது நாம் கேரள அரசையும், மைசூர் அரசையும் கேட்கலாம். இந்த "க்ரிட்" பூராவிற்கும் ஒரேமாதிரி ரேட் இருக்கவேண்டுமென்று வரும்போது நம் வாரியத் தலைவர் கேட்கலாம். வேறு ஒரு மாநிலத்திற்கு சப்ளை செய்யும்போது, உங்களுடைய உற்பத்திச் செலவு 2.5 பைசாதான் ஆகிறது, தமிழ்நாட்டிற்குக் கொடுக்கிறபோது 5 புள்ளிக்கு மேல் போகிறதே, இதைக் கொஞ்சம் குறைத்துக் கொள்ளக்கூடாதா

என்று கேட்கலாம். அப்படிக் கேட்டு செய்வது—அவர்கள் சப்ளை செய்வது கொஞ்சமாக இருக்கலாம். கொஞ்சமாக இருந்தாலும் கூட அது நமக்குக் கொஞ்சம் உதவி செய்யக்கூடிய முறையில் இருக்கும். ரிலீப் குறைவாக இருக்கலாம் ஆனால் கொள்கை அளவில் சொல்கிறேன். மேட்டூரில் அலுமினியம் அதன் இருக்கும். ரிலீப் குறைவாக இருக்கலாம். ஆனால் கொள்கை உற்பத்திச் செலவு 2 பைசாகூடக் கிடையாது. ஆகவே அங்கு ஒரு பைசாவிற்கு போடு என்று வாதாடுவது சரியல்ல. அந்தமாதிரி பார்க்கக்கூடாது. எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துப்பார்த்து, மொத்த உற்பத்திச் செலவு எப்படி, டிரான்ஸ்மிஷன் செலவையும் சேர்த்துக் கவனித்து அதைச் சராசரிப்படுத்தித்தான் விலையிட வேண்டுமே தவிர, அப்படிப்பட்ட பாகுபாடு இருக்கக்கூடாது.

இன்று ஹிந்துவில் ஒரு தலையங்கம் பார்த்தேன். காங்க்ரீட்டான ஒரு ஆலோசனை சொல்லக்கூடிய தலையங்கமாக அது இருக்கிறது. மின்சாரம் எந்த அளவிற்கு மேலும் மேலும் வளருகிறதோ, அதைப் பொறுத்து சோஷலிசம் வளரும் என்று லெனின் சொன்னார். மேலும் மேலும் எல்லாவற்றிற்கும் மின்சாரத்தை உபயோகப்படுத்த மக்கள் விரும்புவார்கள். இன்னும் பத்தாண்டுகளில் இப்போது இருப்பதைவிட இரண்டு மடங்கு அதிகமாக இருக்கும் மின்சாரத்திற்கான டிமாண்ட். ஆகவே, நமது மின்சார கப்பாஸிட்டியினை நாம் அதிகப்படுத்தவேண்டும். அப்போது கல்பாக்கம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆகிறது. ஆகவே கல்பாக்கம் திட்டத்தை நாம் துரிதப்படுத்த வேண்டும். மேலவையில் பெரியதாகப் பார்த்தேன் இராமநாதபுரம் அல்லது வேறு மாவட்டத்தில் தர்மல் ஸ்டேஷனோ அல்லது இம்மாதிரியான ஆட்டாமிக் ஸ்டேஷனோ ஏற்படுத்துவதற்கு நாங்கள் முயற்சி செய்வோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் கூட பத்து ஆண்டுகள் கழித்து நாட்டுக்கு ஏற்படக்கூடிய தேவையை மனதில் கொண்டு நாம் உற்பத்தியைப் பெருக்கவேண்டும்.

நேற்று நான் கும்பகோணத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்தேன். கும்பகோணத்தில் இருக்கக்கூடிய லைட்ஸ் எல்லாம் மங்கலாகத்தான் இருக்கின்றன. 40 வால்ட்ஸ் பல்பைப் பார்த்தால் 20 வால்ட்ஸ் பல்பாகத் தெரிகிறது. இருபதைப் பார்த்தால் பத்தாகத் தெரிகிறது. வோல்டேஜை கம்மி செய்கிறார்கள் என்று நினைக்கிறேன். இதை அங்குள்ள கன்ஸ்யூமேர்ஸ் எதிர்த்திருக்கிறார்கள். நாம் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறோம். சேஷசாயி க்ரூப், மதுரை ராமசாமி க்ரூப் இன்னும் ஒரு கல்கத்தா க்ரூப். இந்த மூன்று க்ரூப்புகளுக்கு சப்ளை செய்கிறோம். அப்படி நாம் சப்ளை செய்தவுடன் அவர்கள் அவர்கள் இஷ்டப்படி விநியோகம் செய்கிறார்கள்.

நேற்று கூட இங்கு அதுபற்றி ஒரு கேள்வி வந்தது. திருச்சியில் தனியார் துறையில் உள்ள ஒரு கம்பனி மின்சாரத்தை, மற்ற யிடங்களில் ஒன்பது பைசா என்று வாங்கிக்கொண்டிருக்கக்கூடிய



சமயத்தில்—அதுவே அதிகம் என்று விவசாயிகள் வற்புறுத்தக்கூடிய நேரத்தில்—அங்கு 12½ பைசா வசூலிக்கப்படுகிறதே என்ற கேள்வி வந்தது. அப்படிப்பட்ட நிலைக்குக் காரணம், அது தனியாரிடம் இருக்கிறது. முன்பு இந்தத் தனியார்த் துறை நிறுவனங்களை எடுக்கவேண்டுமென்று நிலை வந்தபோது அவர்களுக்கு ஒரு கோடிக்கு மேல் நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும் என்ற நிலைமை இருந்தது. இப்போது 25-வது திருத்தம் வந்தாகிவிட்டது. இன்று அவசர கால நிலைமையும் இருக்கிறது. இவை பூராவும் நம் வாரியத்திற்குள் வரவேண்டும்.

இப்போது இந்த ஆண்டு 90 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம். ஒருசில பகுதிகளை எடுப்பது என்றில்லாமல் தனியார் துறையிலுள்ள எல்லா லிஸ்டுங்களையும் நாம் எற்றெடுத்து நடத்தவேண்டும் என்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். பலரும் இக்கருத்தை எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

அடுத்து, தொழிலாளர்கள் சம்பந்தமாக வரும்போது ஒரு சிறிய உதாரணம் சொல்ல விரும்புகிறேன். நிர்வாகத்தில் இருப்பவர்கள் யாரும் கோபித்துக்கொள்ளக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். காவல் பேர் இருக்கிறார்கள். நான்கு மாத காலத்திற்கு 100 பேர்கள் வேலை செய்யவேண்டுமென்று நிச்சயிக்கிறார்களே தவிர [illegible] செக் செய்து பாருங்கள், பேரில் நூறு பேர்கள் [illegible] அந்த நூறு பேர்களைக் கூப்பிட்டுச் சொல்லுங்கள் அங்குள்ள பொறுப்புள்ள என்ஜினியரை. நான் சொல்கிறேன் [illegible] அந்த 100 பேர்களை ப்ரொடக்ஷன் செய்யமுடியாது. என்ன செய்கிறார்கள் என்பதை ஒரு [illegible] தெரிந்துகொள்ளமுடியும். வேலை செய்யக்கூடியவர்கள் 50 பேர்கள் இருப்பார்கள். பத்து பேர்கள் நிர்வாகஸ்தர்களின் [illegible]. 100 பேர்களின் வேலையை 50 பேர்கள் [illegible] வேலைப் பளுவும் அதிகமாகிறது. [illegible] அந்த நாற்பது பேர்களுக்கு உள்ள பணம் ஒரு [illegible] ரூபாய் என்றால் அந்தப் பணத்தை [illegible] போகிறது? இதை சீரியஸாக [illegible] இருக்கும்.

சாதாரணமாக தொழி[illegible] சொல்கிறார்கள், இது எல்லாத் துறைகளிலும் நடைபெறுகிறது. நாங்கள் இதைச் சொன்னால் [illegible] வாய்ப்புக் [illegible] சொல்லி பயப்படுகிறார்கள். கொடுக்காமல் [illegible] வாரியத்தில் வேலை செய்பவர்கள் எல்லோருக்கும் பெயர் இருக்கிறது. அவர்களும் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு ஊதியம் கொடுக்கப்படுகிறது. அப்படி ஊதியம் கொடுப்பதில் ஒரு சல்லிக் காசு கூட [illegible] வெளியில் செல்லவில்லை என்கிற நிலைமை இந்த மின்சார வாரியத்தில் ஏற்பட்டால்தான். அந்த மின் வாரியம் சரியாக வேலை செய்யமுடியும். பலரும் [illegible]

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 டிசம்பர் 13

லாவண்யம் எல்லா இடங்களிலும் இருக்கிறது என்று சொல்கிறார்களே, அது இந்த மின் வாரியத்தைப் பொறுத்தவரையில் இல்லாது இருக்கச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மின் வாரியத்தில் 31,000 பேர் கேசுவல் லேபரர்களாகப் பணியாற்றுகிறார்கள். மொத்தம் 80,000-த்து சொச்சம் பேர் வேலைசெய்கிறார்கள் என்று அமைச்சரின் ரிபோர்ட்டில் இருக்கிறது. இன்னும் 25,000 பேரை எடுக்கப்போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ரூ. 400 கோடி மூலதனம் போட்ட ஸ்தாபனத்தில் ஒரு லட்சம் பேர் வேலை செய்வது என்பது வரவேற்கத் தகுந்த அம்சம்தான். ஆனால் இந்த 31 ஆயிரம் பேர் கேசுவல் லேபரர்களாக இருப்பவர்களில், 21.000 பேர் எஸ்.எஸ்.எல்.சி தேறியவர்கள், எல்.டி.டி தேறியவர்கள், சிறந்த முறையில், நல்ல முறையில் பணியாற்றக்கூடியவர்கள் இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரம் ஆக்காமல் மற்றவர்களை எடுப்பது என்பது சரியல்ல. ஆகவே, அவர்களுக்கு முதலில் வேலை கொடுத்து விட்டு, அவர்களை நிரந்தரம் செய்து விட்டு, மற்றவர்களை ரெக்ரூட் செய்யவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மின்வாரியத்தில் பணிபுரிகிறவர்களுக்கு இப்போது சம்பள உயர்வு அளிக்கப்பட்டது. இன்று 5 நகராட்சிகள் மூலமாக மின்சாரம் விநியோகம் செய்யப்படுகிறது. நகராட்சிகளும் பொதுத்துறையைச் சார்ந்த காரணத்தால் அவற்றை இப்போது எடுத்துக்கொள்ளவேண்டுமென்பது இல்லை. அவற்றை இப்போது மாற்ற வேண்டாம். ஆனால் அந்த இடத்தில் பணிபுரியும் அந்தத் தொழிலாளர்களுக்கு, மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியம் கிடைக்கச் செய்யவேண்டுமென்று பல நாளாகக் கேட்டுக்கொண்டு வருகிறார்கள். சமீபத்தில் பேச்சு வார்த்தை நடந்து அந்த முறையில் சம்பளம் கொடுக்கவேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டு, ஒரு ஆண்டு காலத்திற்கு முன்பிருந்தே கொடுக்கப்படும் என்று சொன்னார்கள்.

இன்றைக்கு பல "அனாமலீஸ்" இருக்கின்றன. அவற்றை மாற்றி, அந்த நகரசபைகளில் பணிபுரியும் அந்தத் தொழிலாளர்களுக்கும் மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் ஊதியத்தைக் கொடுக்கச் செய்ய, மின்சார வாரிய அமைச்சர், இதற்கு நகரசபை பொறுப்பேற்று இருக்கும் அமைச்சர்தான் பார்க்கவேண்டுமென்றாலும், விசேஷ கவனம் செலுத்தி அந்த அனாமலீஸ் தவிர்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதேபோல் தனியார் துறையில் இருக்கும் தொழிலாளர்களுக்கும் மின் வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு கிடைக்கும் சம்பளம் கொடுக்க வழிவகை செய்யவேண்டுமென்று கொள்கிறேன்.



1971 டிசம்பர் 13] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இன்னொரு முக்கியமான விஷயத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அநேகமாக எல்லா மத்தியத் தொழிற்சங்கங்களும் தமிழக அரசும் கூட நஷ்டம் இருந்தாலும் கூட தொழிலாளர்களுக்கு 1 மாத சம்பளம் போனசாக கொடுக்கவேண்டுமென்று, அதாவது 8.33 சதவிகிதம் கொடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே ஒப்புக்கொண்டு இருக்கிறோம். இதைப்பற்றி முதலமைச்சர் மாநாட்டில் சொல்லியிருக்கிறோம். அப்படி இருக்கிறபோது மின்சாரத் துறையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குத் தமிழக அரசு 8.33 சதவிகிதம் போனஸ் கொடுத்தால் அது ஒரு எடுத்துக் காட்டாக இருக்கும். இந்த வருஷம் அரசு கொடுத்து இருப்பது 5 சதவிகிதம்தான். அதை அடுத்த ஆண்டாவது 8.33 சதவிகிதம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டு விஷயங்களைச் சொல்லி முடித்து விடலாம் என்று கருதுகிறேன். இந்த மின்சார வாரியத்திலே பணியாற்றும் சிப்பந்திகள் தொழிற்சங்கத்தில் ஈடுபட்டு இருக்கிறார்கள். நாட்டிலே இருக்கும் அத்தனை தொழிற் சங்கங்களும் அங்கே இடம்பெற்று இருக்கின்றன. நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பு பல சிஸ்டத்தில் இருக்கும் தொழிலாளர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு சம்மேளனம் அமைத்து, அன்றையதினம் மின்சாரத் துறை அமைச்சராக இருந்த இராமநாதபுரம் ராஜா அவர்களிடத்தில் ஒரு மெமோராண்டத்தைக் கொடுத்து, மின்சாரத்தொழிலாளர்களுக்குத் தொழிற்கோர்ட் மூலமாக நிவாரணம் தேடித்தர வேண்டுமென்று கேட்டார்கள். அவர் ஒரு தொழிற்கோர்ட்டை நியமித்தார்கள். அந்தத் தொழிற்கோர்ட்டின் தீர்ப்பு இருக்கிறது. அந்தத் தொழிற்கோர்ட்டின் தீர்ப்பு அமுல் நடத்தப்பட வேண்டும். தமிழ்நாடு மின்சாரவாரியத்தில் உள்ள எல்லா சிப்பந்திகளின் வற்புறுத்தலின்பேரில் மீண்டும் ஒரு சம்மேளனம் அமைக்கப்பட்டு வர இன்றைக்குச் செயல்பட்டு வருகிறது. மற்ற சங்கங்களும் இணைந்து செயல்படக்கூடிய அந்த சம்மேளனத்தை நிர்வாகம் பாரபட்சம் காட்டாமல் இதைக் கட்டி மாச்சரியம் இல்லாமல் கொடுத்து நடத்தப்பட வேண்டுமென்று நான் விரும்பி வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

உற்பத்தி அதிகமாக வேண்டுமென்று நான் சொன்னதன் பேரில் ஒன்றிரண்டு அலோசனைகளைக் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். என்னூரில் 5 பாய்லர் வைப்பதாகச் சொல்லி, இன்றைக்கு அங்கே 2 பாய்லர்கள்தான் இருக்கின்றன. அதை 5 ஆக ஆக்கலாம்.

நம்முடைய அவை இந்த மின்சார இலாகாவிலே பணியாற்றுகிற எல்லா தொழிலாளர்களையும் பாராட்டுகிற இந்த நேரத்தில், நானும் அவர்களைப் பாராட்ட விரும்புகிறேன். அப்படி பாராட்டுகிற போது, சில சான்றுகளையும் ஞாபகப்படுத்துவது நல்லது என்று நினைக்கிறேன். இந்த கிராமங்களிலே மின்சாரம் போடவேண்டுமென்று கருத்து ஆழமாக இருந்தது. அன்றைக்கு சீப் என்ஜினீய

ராக இருந்த திரு. அப்பாத்துரை காலத்தில்தான், தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவரிடத்தில் பல கோளாறுகள் இருந்த போதிலும், மின்சாரத்தை அதிகப்படுத்தவேண்டும் என்பதில் சிறந்த அக்கறை காட்டினார். அவரது ஏற்பாட்டின் காரணமாகத் தான் வெகு சீக்கிரத்தில் மின்சாரத்தை கிராமத்தில் பரப்ப வேண்டுமென்று இயக்கம் உண்டு பண்ணி, அந்த இயக்கம் இன்று வெற்றி பெற்று வருவதைப் பார்க்கிறோம். இன்றைக்கு அகில இந்திய ரீதியில் கிராமத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கு என்று ஒரு கார்ப்பரேஷன் இருக்கிறது. அந்த கார்ப்பரேஷன் நம் மாநிலத்தில் இல்லாமல் வேறு மாநிலத்தில் கவனம் செலுத்தலாம். நான் கேட்டுக்கொள்வது. அந்தக் கார்ப்பரேஷன் நாம் இப்போது கிராமத்தில் மின்சாரம் போட்டு வருவதற்கு என்று ரூ. 1 கோடியோ, ரூ. 2 கோடியோ உதவி செய்து வருகிறது என்று நினைக்கிறேன். அது போதாது. இன்னும் அதிகமாக கொடுக்க வேண்டுமென்று அதை வற்புறுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சதர்ன் க்ரிட் சம்பந்தமாக நான் முன்பு சொன்ன ஆலோசனைகளை மீண்டும் வற்புறுத்துகிறேன்.

சென்ற சட்ட மன்றத்தின் விவாதங்களைப் பார்த்தால் எருக்கஞ்சேரி நிலம் தகராறு மிகப்பெரிய தகராறாக இருந்து விவாதத்திற்கு வந்து இருக்கிறது. இன்றைக்கு பொறுப்பில் இருப்பவர்கள் எல்லாம், அதை ஒரு பெரிய பிரச்னையாக கிளப்பி, அது பப்ளிக் அகௌண்ட்ஸ் கமிட்டி விசாரணைக்குக் கூட வந்தது. அது வாங்கப்பட்ட நோக்கம் என்ன என்றால், அந்த இடத்தில் தொழிலாளர்களுக்கு வீடுகட்டிக் கொடுக்க வேண்டும் என்கிற காரணத்தால் தான். ஆனால் இந்த இடத்தில் தொழிலாளர்களுக்கு என்று இது வரையில் ஒரு வீடு கூட கட்டிக்கொடுக்கப்படவில்லை. இனிமேலாவது அந்த எருக்கஞ்சேரியில் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் ஏற்பாட்டை அரசு மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆரம்பத்தில் நான் சொன்ன மாதிரி இந்த இலாகாவிற்கு பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கும் அமைச்சர் மிகவும் இளைஞர். அவர்கள் ஏற்கெனவே செய்து வரும் காரியங்களை இன்னும் கொஞ்சம் தீவிரமாக செய்ய வேண்டும். மின்சாரம் எல்லா இடங்களுக்கும் பரப்புவதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

ஒரு சிறு விமர்சனம் செய்ய விரும்புகிறேன். அதைத் தவறாக நினைக்கக்கூடாது. கட்சி சார்பாக நடத்தக்கூடிய கூட்டங்கள் ஆடம்பரமாக நடக்கலாம். அதற்கு என்று நிறைய மின்சார விளக்குகள் போடலாம். ஆனால் மின்சார வாரியத்தால் நடத்தப்படும் விழாக்களுக்கு அப்படிப்பட்ட அலங்காரங்கள் தேவையில்லை. அதை என்னைப்போன்ற பொது வாழ்வில் இருப்பவர்கள் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. போன மாதம் 30-ம்



தேதி சமயநல்லூரில் மின் இணைப்பு பூர்த்தி விழா கொண்டாடப் பட்டது. எனக்குக்கூட சந்தோஷம் தான், மதுரை மாவட்டம் முழுவதிலும் மின் இணைப்பு வந்து விட்டது. இப்படி சந்தோஷம் இருந்தபோதிலும், ஒரு பக்கத்தில் பாக்கிஸ்தான் தாக்குதலால் நம் ஆட்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் ஞாபகம் வைத்துக்கொள்ளவேண்டி இருக்கிறது. அதை நினைக்கிறபோது மனதிற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. சமயநல்லூரில் 1 மைல் நீளத்திற்கு டியூப் லைட்டுகள் போட்டு இத்தகைய ஆடம்பரம் செய்யவேண்டுமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

(திரு. நா. வீராசாமி—தலைமை)

நம்முடைய மின்சார வாரியத்தால் நடத்தப்படும் விழாக்கள் சிறப்பாக இருக்கவேண்டும். கருத்து செறிந்ததாக இருக்க வேண்டும். ஆடம்பரமாக இருக்கக்கூடாது. இதைத் தவறாக புரிந்து கொள்ளக்கூடாது. நம்முடைய மின்சார வாரியத்தில் மு.
இருக்கும் அதிகாரிகள். அதிகாரிகள் இதை தவிர்க்கவேண்டும். 11·:
இதற்கு மின்சார வாரியம் ஏற்பாடு செய்யாமல் இருந்தால் இப்படி அலங்காரங்கள் செய்வது ஒரு கட்சிக்கு சாத்தியமல்ல. அந்த மாதிரி மக்களுக்கு எண்ணம் வராமல் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மாதிரியான எண்ணங்கள் மக்கள் மத்தியில் வராமல் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

I want this to be taken in the spirit in which it is advanced

கடைசியாக, உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்து விநியோகத்தில் சாதாரண விவசாயிகளுக்கு அதிகமாகக் கொடுத்து, பம்பு செட்டுகளுக்கு கட்டணத்தை உயர்த்தாமல், குறைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொண்டு, இந்த வரவுசெலவுத் திட்டத்தின் மீதான பேச்சை முடிக்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : Mr. Chairman, Sir, at the very outset I want to lay stress on certain facts regarding the subject that is before the House.

Sir, knowing the limitations which we have regarding the Electricity Board, we have got only a limited power of discussion and we do not have the power to vote. Whatever comments we make before this House will be taken note of by the Department and adequate steps will be taken for rectifying the comments that have been made by the hon. Members. Several hon. Members have participated in the discussion regarding this subject which is now placed before this House.

I would like to say, Sir, that the Hon. Minister for Electricity gave a very rosy picture of the targets and achievements that have been made by this Department and he took us to energising of the many pumpsets and he would say that the green revolution has been ushered in by the Department at the instance of the frequent connections that have been given by this Department.

At the very outset I wish to point out that theere are certain inordinate delays in the matter of giving connections to the agricultural pumpsets in the locality. So far as the rural areas are concerned, the agriculturists loans and they install the pumsets and instalments become payable either to the co-operative society or to the other Department. Even after the payments of the first and second instalments, electricity connection is not given to the pumpsets. Such inordinate delays should be avoided. I have had occasion to bring this to the notice of the Superintending Engineer, Electricity of Tirunelveli System and he has taken certain steps. I once again urge and request the Hon. Minister that such inordinate delays should be avoided so that confidence may be reposed in the minds of the agriculturists. Recurrence of such delays may cause much concern. Pakistan aggression is there and we have to produce food. So far as the food front is concerned, giving connections to the pumpsets should be given top priority.

Now we hear that there is to be an enhancement of the power tariff or the power rate so far as the electric connections that are given to the pumpsets are concerned. A Committee has been appointed and a study group examined certain proposals and what the enhancement would be, we are yet to learn. The Hon. Chief Minister made a statement under Rule 82 before the House stating that there would be enhançement. What the enhancement will be, we are not in a position to know at this stage. But I am sure that there would be enhancement.

It has been stated that there has been rise in cost in power generation and in order to meet that, the tariff rates are likely to be revised. I should say, Sir, that this should not be a Damocle's sword hanging on the agriculturists. There should be no increase so far as the agricultural pumpsets are concerned. That is my submission. On behalf of the poor agriculturists who produce the food for us I once again reiterate that even though a recommendation might have been made to enhance it, I would, on the floor of this House, once again entreat the Hon. Chief Minister and the Hon. Minister for Electricity that no enhancement should be made regarding the power tariff in respect of agricultural pumpsets.

Then, another point which I want to bring to the notice of this House is regarding the power generation. Sir, we have exhausted many hydel schemes and we are now at the thermal generation schemes and also we are contemplating generation of atomic power. In the speech that has been made by the Hon. Minister it is said that there are certain schemes for the generation of hydel power. I would once again say that the generation of hydel power is cheaper and it should be attended to properly.

There are many small schemes in certain districts for example Suriliyar and so many other schemes are detailed. I do not want to take the time of the House in once again cataloguing a long list. I want to entreat the Hon. Minister once again that these schemes





may be given top priority in the matter of generation of power because hydel power is cheaper. There are certain projects which we can bring into force with the collaboration of the adjoining States. We can have contact with the Mysore State as well as the Kerala State so far as Hoganekkal Scheme is concerned. It is time for us that we negotiate with the Mysore Government so that this Scheme may come into fruition and more power is generated for Tamil Nadu as well as Mysore. We shall not be carried away by local considerations and we should be in a spirit of negotiation and we should have the spirit of give and take. With that object in view I am sure we will be able to put through the Hoganekkal scheme which is one of our cherished dreams. Several steps have been taken previously and somehow or other it has been kept in the cold storage. I once again request the Hon. Minister to take steps to revitalise it. That is the point which I wanted to stress.

Regarding thermal power, there are certain projects. I would incidentally say that the thermal project that is contemplated in Tuticorin may be speeded up and top priority should be given to that scheme as well. So far as atomic power is concerned, the assistance of the Central Government is needed and I am sure with the good offices that this Government have with the Central Government they will be able to influence the Central Government and bring in more atomic power in our State. We have to produce more power. The consumption of power is day-to-day increasing and the increase in per-capita consumption will have to be taken into account in the matter of generation of electricity.

Then the next point I want to stress is regarding the constitution of the Board. Sir, now there is a Board which have full-time members as well as part-time members. Several times it has been stated on the floor of this House that the part-time members may be made full-time members. For instance, the Director of Industries, the Director of Agriculture, the Director of Technical Education, the Finance Secretary and so forth are part-time members of the Electricity Board. Will it be possible, will it be worthwhile to appoint more full-time members, so that there may be effective meeting of the Board and the Board may take prompt steps and quick decisions so that this lacuna or this delay can be avoided? That is the next point which I wanted to stress before this House.

The next point which I want to stress before this House is regarding the nomination of members to the Tamil Nadu Electricity Consultative Council. Sir, hitherto only members of the ruling party are nominated to this Council. Members hailing from other parties should also be nominated, so that they may also be in the know of things, they may also be taken into confidence, better and efficient administration may go on, and their suggestions may also be taken into account.

Then the next point which I want to urge is regarding the uniform power tariff in the States. It may be rather difficult and the Central Government will have to come forward, so that a uniform power tariff may be made in all the southern States. Sir,

[Thiru R. Ponnappa Nadar] *[1971 டிசம்பர் 13]*

power is cheaper in Mysore and in Kerala and in the adjoining States, whereas power is costlier in our State. It is all because we spend much for power generation and the hydel projects we have almost exhausted. That is my submission.

So in the matter of uniform power tariff, we will have to influence the Central Government and take proper and prompt steps to see that a uniform power tariff is adopted in the four Southern States. Then only the indusrialists will be prepared to come forward in Tamil Nadu and there shall not be any unhealthy competition between the four Southern States. That is the point I want to stress.

The next point which I want to stress before this House is that a Southern Electricity Grid should be formed and it has also been suggested by the hon. Member, Thiru Thangamani that it is high-time that such a Southern Electricity Grid should be formed. Sir, the Central Minister, Thiru K. L. Rao has stated that we can link the Grid with Ceylon and that is what we have read in the newspapers. It is a good suggestion worthy of acceptance by the Central Government and our Government also should be associated in that regard.

So far as the generation cost and other difficulties are concerned, there may not be much difficulty. Now there is a reference to the inter-linking of the Grid and that is also seen in the speech of the Hon. Minister. Nellore and Madras have been linked; Kerala and our systems have been linked; and Mysore and our system have been linked. The formation of Southern Electricity Grid may not be an ambitious scheme and I am sure the Electricity Board and the Hon. Minister will take steps in that regard so that we should be in a position to say that we are a model so far as the generation and distribution of electricity is concerned.

Another point which I want to stress is with regard to the boundaries of the circle. There are various circles and those circles are under the control of the Superintending Engineers. I would say that they have got a large jurisdiction and the boundaries of a circle will have to be redrawn.

In this connection I would also bring to the notice of the Hon. Minister that Kanyakumari needs a separate circle because there are two major projects which have now been commissioned and the work also justifies the formation of a separate circle. I am sure the Board and the Hon. Minister will take effective steps to see that a new circle is formed there.

Similarly in the matter of construction, it should be co-terminus with the divisions. Now in certain divisions the construction is in charge of another division and so much so there is so much of time-lag and there is inordinate delay in the matter of execution and in the matter of giving connections. Also it would be advantageous and fair that the existing power system should be co-terminus with the construction system and that is a point which the Board may take note of.



*1971 டிசம்பர் 13]* [Thiru R. Ponnappa Nadar]

Another point is with regard to the rate of power supplied to the domestic consumers. Times without number many Members have stated on the floor of the House that the power tariff as far as the domestic consumers are concerned, is the highest. Now the rate is 32 paise plus some surcharge which comes to nearly 37 paise per unit and that is the highest so far as our State is concerned. I would emphatically plead that it should be reduced. I would say that at least in the case of small consumers, a small slab may be fixed. The persons who spend electrical energy beyond a certain number of units may be charged a separate tariff and those who consume more should come under a higher slab. I am sure that the rationalisation of the tariff would not affect th edomestic consumers and if it affects it would be a bad day for us because there is already a shortage of kerosene due to emergency and so much so it may not be fair and proper if we enhance the power tariff so far as the domestic consumers are concerned.

Then I want to stress about the nationalisation of private electricity systems. Sir, there are some private electricity systems which have yet to be nationalised and some of them have gone to the Supreme Court and I know that there are certain difficulties on that account. But one point which I want to stress is that certain electricity systems have already been nationalised but others are still kept pending. There are certain systems which are working in Tirunelveli, Thanjavur and other districts and such systems should be immediately notionalised so that a uniform tariff may be levied. Now some of them are charging a very high rate and they also find it difficult to give connections to agriculturists. Their rate is more than the rate of the Electricity Board and they are charging 12 paise or so and that point has been brought to the notice of the Board an dseveral Members have also previously ventilated their grievances on the floor of the House. So this is a matter which requires examination and I am sure that anomaly will be speedily rectified. We have agreed that we are going to nationalise them and then why all this time-lag? We shall not pick and choose the private operators with regard to nationalising their systems first. Let all the systems be nationalised immediately.

Then I come to a local problem concerning the Kodayar system. Both the power house projects have now been commissioned and the opening ceremony has not yet been done and I am sure that will be celebrated with due pomp and splendour. The difficulty we experience is that if we want to go to the Kodayar Power House No. 2, we have to take the winch. Formerly there was a road from Balasoor Estate to the Kodayar Power House No. 2. Now, Sir, that road is not in a proper condition and the proposal to repair it is now in cold storage and I am sure the Hon. Minister will take steps to see that at least that proposal is implemented. Now, if we want to go to that Power House, we will have to go via Manjcholai Estate from the Tirunelveli district and then descend downwards. It is a very difficult terrain and it is very difficult to go there and I am sure that this Board will take steps to see that that is being attended to.

[Thiru R. Ponnappa Nadar] [1971 டிசம்பர் 13]

Then I come to another local problem which relates to interviews. Clerks and others are interviewed. So far as the candidates coming from the Kanyakumari district are concerned, they have to go to Thakkalai where there is no facility at all. Many of our young men and women have to go there and they do not get accommodation there and they do not get good drinking water or even food. They are put to a very great difficulty. I think that the officers who conduct interviews can very well go to Nagercoil where there are facilities and also the officers are only few in number. They can just go and camp there and interview candidates. This is a healthy suggestion which the Hon. Minister should appreciate in the right spirit.

So far as recruitment is concerned, I would request the Hon. Minister that adequate representation should be given to all the districts in proportion to their population. Certain districts are getting more representation and certain other districts are getting less. I am sure that the Board will take the suggestion in the spirit in which it has been put forward.

Then I come to the problem relating to fused bulbs. The question of fused bulbs and their replacement is a problem. The Board has got the power to change them. Now there are certain important junctions where fused bulbs have not been replaced for months together and I think the Board will take adequate steps to replace these bulbs at least in important traffic junctions.

Especially in Nagercoil and other places, in some junctions fused bulbs remain there and they are a source of hindrance to the traffic. I am sure the department will also take effective steps.

Why not this department take upon itself the task of manufacture of bulbs? A unit can be started. We have been spending large sums of money, more than Rs. 400 crores, and we are employing more than 84,000 workers. Is it not time for us to think of starting a factory to manufacture bulbs? We can start it in a backward district like Dharmapuri. Hosur would be the proper place having excellent climatic conditions for starting a unit to manufacture bulbs. This is a suggestion I am making and I hope the department would take note of it.

Another point I want to bring to the notice of the House is this. There is a proposal to bring in the meter system in the panchayats. It would help the panchayats. Then they will be in a position to know what they consume. Some of the panchayat unions are unable to pay the charges. If this meter system is there, they need not pay for fused bulbs. This is a suggestion which can be examined.

Lastly, I want to say that so far as this department is concerned, it will have to provide more employment for many electrical engineers. There are several electrical engineering graduates and diploma holders who are out of employment. Some of them are working as daily labourers and some of them are working as casual labourers as well. It is time that we should regularise their services.



1971 டிசம்பர் 13] [Thiru R. Ponnappa Nadar]

It has been stated that a pay revision has been made and in the speech of the Hon. Minister he was saying that the staff are well-contented and that is the sum and substance which we were able to read from his speech.

Some more encouragement may be given and especially during the emergency, all the workers should be absorbed. Many projects are nearing completion and many persons would be thrown out of employment. Such of those who are thrown out of employment should be given priority. That is the submission which I want to make. When a new scheme is started, their experience would be of use and they should be given priority in the matter of recruitment.

I am sure that this department will take steps to see that power tariff so far as agriculural pump sets are concerned will not be enhanced. I am sure Government will not enhance the power tariff so far as agricultural pump-sets are concerned will not be ment as 12 P. but, I would say that on no account should the ceiling limit be adhered to, so far as agricultural pum-sets are concerned We should not discourage the agriculturists during national emergency by such rise in power tariff. With these words I conclude.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்** : மாண்புமிகு தலைவரவர்களே, 1971-72-ம் ஆண்டு மின் வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீதும் 1970-71-ம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கை மீதும் நடந்த விவாதங்களில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கலந்து கொண்டு, தங்களுடைய நல்ல ஆலோசனைகளையும், கருத்துக் களையும் சொன்னதற்காக முதலிலே அவர்களுக்கு நன்றி செலுத்திக் கொள்ள நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். இருசாராரும் பேசிய பேச்சுகளைப் பற்றிப் பார்க்கும்போது, இந்த ஆண்டு வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது சற்று காரத்தையும் குறைத்துக்கொண்டு, வேகமாகவும், கண்ணிய மாகவும் பேசியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது உள்ளபடியே நான் மகிழ்ச்சியடைகிறேன்.

ஆளும் கட்சி தரப்பிலே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் இன்றைக்கு நாட்டிலே ஆற்றியிருக்கின்ற நல்ல காரியங்களை எடுத்துச் சொல்லி, குறைகளைப் போக்கவேண்டுமென்று சொல்லி யிருக்கிறார்கள். அதேபோன்று எதிர்க்கட்சியிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் நல்ல காரியங்கள் நடந்திருக் கின்றன என்று ஒப்புக்கொண்டாலும், மேலும் நல்ல காரியங்கள் நடைபெற வேண்டுமென்ற கருத்திலே பல்வேறு குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினார்கள். இதையெல்லாம் நான் பாடமாக எடுத்துக் கொண்டு, வாரியத்தின் மூலமாக மேலும் நற்பணிகளைச் செய்வோம் என்று உறுதி சொல்லி, கடந்த காலங்களிலே நாம் எந்த அளவுக்கு வாரியத்தின் மூலம் முன்னேறி இருக்கிறோம். இன்று எந்த அளவுக்கு முன்னேறி இருக்கிறோம் என்பதை சிந்தித்துப் பார்க்க கடமைப்பட்டிருக்கிறோம் என்றும் சொல்லிக்கொள்கிறேன்.

1967-ம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பிலே அறிஞர் அண்ணா அவர்கள் அமர்ந்த பிறகு, இந்த வாரியத்தில் சீறுசிறப்பு வேண்டுமென்று கருதி முதலிலே இந்த இலாக்காவை சற்று விரிவுப் படுத்தவேண்டுமென்று கருதினோம். அப்படிச் செய்தால் பலருக்கு வேலை கொடுக்க முடியும் என்ற யோசனையில் ஒரு நல்ல திருத்தமாக இத்திட்டத்தை நினைத்தோம். அதன் காரணமாக இன்றைக்கு மூன்று புதிய சிஸ்டங்கள் புதிதாக உருவாக்கப் பட்டுள்ளன.

தர்மபுரி மாவட்டத்திற்கு என்று தனியாக மாநில அந்தஸ்து உள்ள சிஸ்டம் இல்லாமல் இருந்தது. அதை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே ஏற்படுத்தியிருக்கிறோம். கிட்டத்தட்ட பத்து லட்சம் ரூபாய் செலவிலே அந்தத் தனி சிஸ்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதற்குப் பின்னால் தஞ்சைக்கும் திருச்சிக்கும் சேர்த்து ஒரு சிஸ்டம் இருந்ததை, தஞ்சைக்கு தனி சிஸ்டம் இருந்தால் நல்ல தென்று கருதி, பிரித்து இன்றைக்கு தஞ்சை மாவட்டத்திற்கு தனி சிஸ்டத்தை கிட்டத்தட்ட பத்து லட்சம் ரூபாய் செலவில் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் பைக்காரா சிஸ்டத்தை நீலகிரியில் ஊட்டியும், கோவையில் ஈரோடும் தனியாகக் கேட்டுக் கொண்டிருந்தன. இன்றைக்கு ஈரோடு சிஸ்டம் என்று அவர்கள் கோரிய காரணத்தினால் மாற்றி அமைத்திருக்கிறோம்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒரு தனி சிஸ்டம் வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதை உத்தேசித்து தான் திருநெல்வேலியில் ஒரு தனி சிஸ்டம் ஏற்படுத்தலாம் என்று ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம். அது கூடிய சீக்கிரத்தில் வருமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். வேலை நடைபெறுவதற்கு எந்த அளவிலே விஸ்தரிக்கிறோம் என்ற புள்ளி விபரங்களைச் சொன்னால் உங்களுக்குப் புரியும். இந்த நான்கு ஆண்டுகளில் 16 புதிய டிவிஷன்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதற்கு முன்னாலே 33 டிவிஷன்கள் இருந்தன. எல்லாம் சேர்த்து இன்றைக்கு 49 டிவிஷன்கள் இயங்கி வருகின்றன. நான் இந்த புள்ளி விபரங்களைச் சொல்லும்போது, கட்சி மாச்சரியத்திற்காகச் சொல்கிறேன் என்று யாரும் எண்ணவேண்டாம். வாரியம் எந்த அளவில் முன்னேறி வருகிறது; அதன் பணிகள் எவ்வாறு விஸ்தரிக்கப்படுகின்றன என்பதைச் சுட்டிக்காட்டவே இவைகளைக் குறிப்பிடுகிறேன் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஏற்கெனவே 102 சப்-டிவிஷன்கள் அமைந்திருந்தன. இப்போது புதிதாக 105 சப்-டிவிஷன்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆக மொத்தம் 207 சப்-டிவிஷன்கள் இன்று செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதுபோன்று வாரியம் பல துறைகளில் விரிவுபடுத்தப் பட்டு, பல்வேறு நல்ல காரியங்களை செயல்படுத்தி வருகின்றன. வாரியத்தின் பணியினை இங்கு பேசியவர்கள் மட்டுமல்ல, பிற





மாநிலங்களிலுள்ளவர்கள் கூட பாராட்டுகின்ற வகையிலே நமது வாரியம் பணியாற்றி வருகிறது. நான் மேலவையில் பேசும்போது குறிப்பிட்டேன். இந்திய ஜனாதிபதி அவர்கள் இன்றைக்குத் தமிழ் நாட்டில் மின்சார வாரியம் ஆற்றுகின்ற பணியினைப் பாராட்டி இருக்கிறார்கள் என்று. பல்வேறு காரியங்களை இந்தியா பாடமாக ஏற்றுக்கொள்கின்ற அளவில் தமிழ்நாட்டைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு மின்சார வாரியத்தைச் சொல்லியிருக்கிறார்கள். . .

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** குடியரசுத் தலைவர் அவர்களைப் பற்றி இங்கே குறிப்பிடாமல் இருப்பது நல்லது என்று விதிமுறையில் இருக்கிறது. ஆகவே அவரைப்பற்றிச் சொல்லாமல் இருப்பது நல்லது.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** நான் விதி முறைகளைத் தெரிந்திருக்கிறேன். விதிமுறைக்கு மாறாகப் பேசமாட்டேன். தமிழ்நாடு முன்னேற்றப் பாதையில் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டவே ஜனாதிபதி அவர்கள் பாராட்டைப்பற்றி இங்கே குறிப்பிட்டேனே அல்லாமல் வேறு உள்நோக்கம் எதுவுமில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

DR. H. V. HANDE : On a point of Order, Sir ந. ப. 12–00

THIRU S. KANDAPPAN : Mr. Chairman, I do not think there is any rule in our Assembly Rules that we should not bring in the name of the President of India. We should not speak so as to cause embarrassment or reflection on the august post he holds.

DR. H. V. HANDE : To influence one's argument, one should not drag in the name of President.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. நா. வீராசாமி) நம்முடைய விதிமுறைகளில்**

A member, while speaking must not, use his right of speech for the purpose of obstructing the busipess of the Asrembly என்பதாகவும் அதற்கு மேலே or use the Governor's or President's name for the putpose of influencing a debate.

என்றும் தான் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் இன்புளுவன்ஸ் பண்ண அதை மேற்கோளாகக் காட்டினார் என்று கொள்ள வேண்டாம்.

THIRU R. PONNAPPA NADAR : Let the Hon. Minister avoid such things.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** அப்படிக்கூட நான் விளம்பரம் தேடிக்கொள்ள விரும்பவில்லை. நாங்கள் என்ன செய்திருக்கிறோம் என்பதைத்தான் வெளிப்படையாகச் சொல்ல விரும்புகிறேன். விவசாயத்துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்படவேண்டும் என்பதற்காக அரசு கடந்த நான்காண்டுக் காலத்தில் மின்சார பம்பு செட்டுகளுக்கு அதிகமான அளவில்

[திரு. ஓ. பி. இராமன்] [1971 டிசம்பர் 13

கனெக்ஷன் கொடுத்திருக்கிறார்கள். நான் உள்ளபடியே சொல்கிறேன். உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள். பம்பு செட்டு கடன் வாங்கிப்போட்டுவிட்டார்கள். வட்டி கட்டிக்கொண்டிருக்கிறார்கள், இன்னமும் பல இடங்களில் கனெக்ஷன் கொடுக்கப்படவில்லை என்பதாகப் பேசினார்கள். கிட்டத்தட்ட இன்னும் 6 லட்சம் பேர்களுக்குக் கனெக்ஷன் கொடுக்கப்பட வேண்டும் என்கிற நிலை இருக்கத்தான் செய்கிறது.

ஆயினும், இந்த நான்கு ஆண்டுகளில் செய்த சாதனை என்ன என்பதை உறுப்பினர்கள் புரிந்துகொள்ளவேண்டும். வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்தையும். காங்கிரஸ்காரர்கள் ஆட்சிக் காலத்தையும் சேர்த்துப் பார்த்தாலும் 31-3-1967 வரை தமிழ்நாடு முழுவதிலும் இருந்த விசையேற்றங்களின் எண்ணிக்கை 2,89,903 தான். ஆயினும் கடந்த நான்காண்டுகளில் மட்டும் அதைச் சேர்க்காது 2,80,732 விசையேற்றங்களுக்கு கனெக்ஷன் கொடுத்திருக்கிறோம். திரு. ஹாண்டே அவர்கள்கூடக் குறிப்பிட்டார்கள். ஆண்டுக்கு 60 ஆயிரத்திற்குமேல் கொடுத்துக் கொண்டு வந்திருக்கிறோம். பிறமாநிலங்களில் இந்த நான்கு ஆண்டுகளில் மொத்தமாக 60 ஆயிரத்திற்குக் கூடக் கொடுத்திருக்கமாட்டார்கள். இன்னும் நிறையப்பேர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் மின்சார வாரியம் எதுவுமே செய்யவில்லை என்று எண்ணிவிடக்கூடாது. கடந்த நான்காண்டுகளில் ஆண்டுக்கு 60 ஆயிரத்திற்கு மேல் நாம் கொடுத்து வந்திருக்கிறோம். இந்திய உப கண்டத்தில் இருக்கிற எல்லா மாநிலங்களிலுமே 17,23,913 தான் போட்டிருக்கிறார்கள். அப்படியிருக்கையில் திராவிட முன்னேற்றக்கழக அரசு ஏற்பட்டபிறகு நாம் எவ்வளவு முன்னேறியிருக்கிறோம் என்பதை ஒருகணம் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

இன்னும் மின்சார விஸ்தரிப்பைப்பொறுத்தவரையில்—ரூரல் எலெக்டரிபிகேஷனை எடுத்துப்பார்த்தால் 31-3-1967இல் 20,250 கிராமங்களில் தான் மின்சாரம் போடப்பட்டிருந்தது. ஹரிஜன சேரிகள் 2,354. ஆனால் இந்த நான்காண்டுகளில் டாக்டர் கலைஞர் ஆட்சி ஏற்பட்டவுடன் மட்டும் 26,609 கிராமங்கள் மின் விளக்குப் பொருத்தப்பட்டிருக்கின்றன. அரிசன சேரிகள் 1.255-க்கு விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அதோடு டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். ஹரிஜன காலனிகளுக்கு மின் விளக்குப் போடுவதற்குமட்டும் அரசு 20 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அது இல்லாமல் கரண்டு சார்ஜுக்காக என்று 20 ஆயிரம் ரூபாய் தாழ்த்தப்பட்ட கிராமங்களுக்கு அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது என்றால் இது மிகமிகப் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

மொத்தம் தமிழகத்தில் 79,544 கிராமங்கள் இருக்கின்றன என்றால் 61,568 கிராமங்களுக்கு மின் விளக்குப் போட்டாகிவிட்டது. அதுபற்குறி எல்லாம் விவரமாக ஒரு புத்தகமே பட்டு;டு உறுப்பினர்களுக்கு வழங்கலாம் என்று நான் வாரியத்த



1971 டிசம்பர் 13] [திரு. ஓ. பி. இராமன்]

இருக்கிறேன். இன்னும் 17,976 கிராமங்களுக்கு விரைவில் மின்சாரம் போடப்படும் என்பதையும் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன், இன்னும் சொல்ல வேண்டுமானால் இந்த 9 நாட்களில் மட்டும் 1,089 கிராமங்களுக்கு மின்சாரம் போட்டிருக்கிறார்கள். டிசம்பர் மாதத்திற்குள் இவ்வளவு இலக்கை முடித்து விடவேண்டும் என்று நான் கொடுத்திருக்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்** :இந்த 9 நாட்களில் 1,089 கிராமங்களுக்கு மின்சாரம் போட்டிருப்பதாகச் சொல்கிறார், எந்த எந்த மாவட்டத்தில் எந்த எந்தக் கிராமத்திற்குப்போட்டிருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்**: அதுபற்றி விவரமாக ஒரு புத்தகமே அச்சிட்டுக்கொடுத்துவிடுகிறேன்.

அடுத்தாற்போல மின்விஸ்தரிப்பைப்பொறுத்தவரையில், நாம் மற்ற மாநிலங்களோடு நம்முடைய வளர்ச்சியை ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும். ரூரல் எலெக்ட்ரிபிகேஷன் என்கிறபோது ஆந்திரப் பிரதேசத்தில் 30.5 சதவிகிதம் கிராமங்களுக்குப் போட்டிருக்கிறார்கள், அஸ்ஸாம் 2.8 சதவிகிதம், பீகார் 11.8 சதவிகிதம் ஹரியானா-உறுப்பினர்கள் எல்லாம் கூடச் சொன்னார்கள்--நூற்றுக்கு நூறு. இமாசல் 33.6 சதவிகிதம், ஜம்மு, காஷ்மீர் 10.4 சதவிகிதம், கேரளா 76.6 சதவிகிதம், மத்தியப் பிரதேசம் 11 சதவிகிதம், மகாராஷ்டிரா-மிகவும் முற்போக்கான மாநிலம் என்று சொல்லப் படுவது-35.2 சதவிகிதம் தான். ஒரிசா 2.8 சதவிகிதம், பஞ்சாப் 52.5 சதவிகிதம், இராஜஸ்தான் 10 சதவிகிதம். தமிழகத்தைப் பார்த்தால் 82.5 சதவிகிதம். ஹரியானாவுக்கு அடுத்தது தமிழகம் தான். ஹரியானா என்பது நம்முடைய முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல நம்முடைய தொண்டை மண்டல விஸ்தீர்ணம்தான். நாலில் ஒரு பங்கு, அந்தச் சின்னஞ்சிறு மாநிலத்தோடு நம்முடைய மாநிலத்தை ஒப்பிடுகிறபோது ஏரியா அளவில் பார்த்தால் நாம்தான் முதன்மையாக இருப்பதாகச் சொல்ல வேண்டும்.

அடுத்தபடியாக, லைன் லாஸ் பற்றிச் சொன்னார்கள். அது பற்றிய புள்ளிவிவரங்களையும் நாம் பார்க்கவேண்டும். ஸி.பி.டபிள்யூ கொடுத்த புள்ளிவிவரங்களையே அளிக்கிறேன். லைன் லாஸ்ட் ஆந்திரப் பிரதேசத்தில் 25.80 சதவிகிதம். அஸ்ஸாம் 20 சதவிகிதம், குஜராத் 16.6 சதவிகிதம். பீகார் 18.7 சதவிகிதம். ஹரியானா 27.8 சதவிகிதம், ஜம்மு காஷ்மீர் 29.3 சதவிகிதம், கேரளா 15.8 சதவிகிதம், மத்தியப் பிரதேசம் 15.4 சதவிகிதம். மகாராஷ்டிரா 13.5 சதவிகிதம், மைசூர் 15.6 சதவிகிதம், நாகாலாந்து 12 சதவிகிதம், பஞ்சாப் 34.1 சதவிகிதம், இராஜஸ்தான் 23.2 சதவிகிதம், யு.பி. 20.9 சதவிகிதம், தமிழ்நாட்டில் 17 சதவிகிதம்.

[திரு. ஓ. பி. இராமன்] [1971 டிசம்பர் 13

இதுபற்றிக் கூட கணக்கு என்ன சொல்கிறார்கள் என்றால் Power loss is an inherent feature in transmission and distribution of electric energy. Whenever electric current passes through an electrical conductor, an equipment, a certain amount of energy is dissipated in the form of heat. The total loss is அதாவது தமிழ் நாட்டைப் பொறுத்த வரை 17 per cent.

சாதாரணமாக மின்சாரம் கம்பியிலே செல்கிறபோது சிறிது சக்தியை வாங்கிக் கொண்டுதான் மற்றதை வெளிப்படுத்துகிறது. கொஞ்சம் சக்தியை ஈர்த்துக்கொள்கிறது. அதேபோன்று, Step-up transformers in Power stations சட்டப்படி 0.5 பர்சென்ட் ஈர்த்துக்கொள்வது நியாயம். எக்ஸ்ட்ரா ஹை டென்ஷன் லைனில் 5.5 சதவீதம் ஈர்த்துக்கொள்வது நியாயம். ஷட் டவுன் ட்ரான்ஸ்ஃபார்மர்ஸில் 2 சதவீதம் ஈர்த்துக்கொள்வது நியாயம். எச்.டி. லைனில் 1 சதவீதம் ஈர்த்துக்கொள்வது நியாயம், டிஸ்ட்ரிப்யூஷனில் 2 சதவீதம் ஈர்த்துக்கொள்வது நியாயம். எல்.டி.யில் 6 சதவீதம் ஈர்த்துக்கொள்வது நியாயம் என்று சொல்கிறார்கள். கணக்குக்கு மாறாக 17 சதவீதம் என்று அதிகமாக இருந்தாலும், இந்திய உபகண்டத்திலேயே நாம்தான் குறைவான அளவில் இருக்கிறோம். நமது மாநிலத்தில்தான் மிகவும் குறைவான அளவில் லைன் லாஸ் இருக்கிறது.

Dr. H. V. HANDE : My point was, between 1965 and 1967 the line loss was 16.5 per cent. What I was trying to argue was that there is an increase. I found a statement in the report that they have reduced the line losses. Because I found that statement I took exception to that saying that between 1965 and 1967 the line loss was 16.5 per cent and it was increased to 17 and odd per cent.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, அதற்குச் சில காரணங்கள் இருக்கின்றன. கூடலாம், குறையலாம். ட்ரான்ஸ்ஃபார்மர்ஸ் சப்ஸ்டேஷன் அதிகமாக அதிகமாக லைன் லாஸ் குறையும். இதைக் குறைப்பதற்கு 900 கிலோ மீட்டருக்கு இடையே 110 கே.வி. சப்ஸ்டேஷன் போட வேண்டும். இதை உடனடியாக செய்ய முடியாது. இதற்கு ஐந்தாண்டுக் காலம் என்று வரையறுத்துக்கொண்டு, 50 கோடி ரூபாய் திட்டத்திலே செய்தால் இதை எளிதாக்க முடியும். நாம் சப்ஸ்டேஷன்களை அதிகரிக்க வேண்டும், ட்ரான்ஸ்ஃபார்மர்களை அதிகரிக்க வேண்டும். அதற்காக ஒரு சீரமைப்புத் திட்டம் வகுத்திருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே பேசியவர்கள் எல்லாம் விழாக்களைப் பற்றிச் சொன்னார்கள். உள்ளபடியே நான் கணக்குப் பார்த்தேன். இந்த விழாக்களிலே என்ன செலவாயிற்று என்று கணக்குப் பார்த்தேன். அதிகமாக ஒன்றும் செலவு செய்துவிடவில்லை. சமயநல்லூரில் நடந்த விழாவிலே 84 ஆயிரம் ரூபாய் செலவாயிற்று.



1971 டிசம்பர் 13] [திரு. ஓ. பி. இராமன்]

இரண்டு வட்டங்கள் மின் இணைப்புத் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு விழா கொண்டாடப்பட்டது. நமது மாண்புமிகு திரு. செ. மாதவன் அவர்கள் வந்திருந்தார்கள், மதுரை மேயர் அவர்கள் விழா மலரை வெளியிட்டார்கள். அந்தத் தொகுதி உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் வந்திருந்தார்கள். அந்த விழாவிலே நல்ல ஜோடனை செய்திருந்தார்கள். ஒரு பைசாகூட அதிகமாகச் செலவிடவில்லை. மலரை வெளியிட்டோம், விளம்பரத்தின் மூலமாக வந்த பணத்தைக் கொண்டு செலவு செய்தோம் என்றார்கள். இருந்தாலும், அதிகமான அளவில் விளக்கைப் போட்டு கரண்டை வீணாக்கக்கூடாது என்றார்கள். யுத்தம் நடக்கிற நேரத்தில் இந்த விழாவெல்லாம் அவசியமா என்றார்கள். உள்ளபடியே சொல்கிறேன். அந்த விழா நேரத்தில் எந்தவிதமான பிரகடனமும் செய்யப்படவில்லை. அம்மாதிரியான பிரகடனத்திற்குப் பிறகு இந்த அளவிற்கு நடந்துகொள்ளக்கூடாது என்பதை உறுதியாகச் சொல்லிக்கொள்கிறேன்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் ஊட்டியிலே நடந்த விழாவைப் பற்றிச் சொன்னார்கள். அந்த விழாவிற்கு திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் வந்திருந்தார்கள். பத்து மணிக்குப் பனி கொட்டிக்கொண்டிருந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் பனியில் காத்துக்கொண்டு வருத்தப்பட்டுக்கொண்டிருந்தார்கள். விழாவைக் காண வேண்டுமென்பதற்காக ஏழை எளிய மக்கள் கொட்டும் பனியில் காத்திருந்தனர். பந்தலில் அவர்கள் உட்காருவதற்குக் கூட இடம் இல்லை. அவ்வளவு பெரிய கூட்டமாக மக்கள் வந்திருந்தார்கள். விழா என்றாலே முன்பெல்லாம் வெள்ளைச் சட்டை போட்டவர்கள்தாம் வருவார்கள். இன்றைக்குக் கிராமத்திலுள்ள மக்கள் எல்லாம் கலந்துக்கொள்ளக் கூடிய வகையில் நாங்கள் விழா நடத்துகிறோம். இது பெரிய விழா என்று சுதந்திராக் கட்சி உறுப்பினர்கள் குறிப்பிட்டார். அந்தச் சமயத்தில் ஊட்டியில் மலர்க் கண்காட்சி நடந்துகொண்டிருந்தது. அதற்காக வேறு கூட்டம் வந்திருந்தது. வசதி படைத்தவர்கள் தாம் உல்லாசமாகப் பொழுதைக் கழிக்க ஊட்டிக்கு வருவார்கள். நாங்கள் ஏற்பாடுசெய்திருந்த மின்சார விழாவிலே கலந்துகொண்ட மக்கள் கூட்டத்தைப் பார்த்தால், அந்த மக்கள் எல்லாம் ஆங்காங்கு இருக்கின்ற மலைவாழ் மக்கள். ஆதிவாசிகள், அரிஜனங்கள், தோடர்கள் எல்லாம் வந்திருந்தார்கள். மனிதசஞ்சாரத்தின் பழக்கம் இல்லாதவர்கள் எல்லாம் விழாவிற்கு வந்திருந்தார்கள். விழா ஆரம்பமாகும் சமயத்தில் அந்த விழாவில் ஒலித்த பாட்டுகளை அந்த மக்கள் பாடிக்கொண்டிருந்தார்கள். நமது முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய பாட்டுக்களைத் திரும்ப திரும்ப வாய்விட்டு ஒலித்தார்கள். அவர் முதலமைச்சர் என்பதற்காகவோ, நான் அமைச்சர் என்பதற்காகவோ எங்களைப் பாராட்டவில்லை. எங்களுக்காக, எங்களைப் பாராட்ட வேண்டுமென்பதற்காக அந்த விழா ஏற்பாடுசெய்யப்பட்

நேரத்தில் பொது விழாவாக, பொதுமக்கள் வைத்த நம்பிக்கையின் விழாவாக ஏற்பாடு செய்கிறார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் மழையில் நனைந்துகொண்டே டாக்டர் அவர்களுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஆடம்பரம் என்றால் என்ன? அங்கே செய்யப்பட்டது ஆடம்பர விழா அல்ல என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

மின்சார வாரியம் பொதுத் துறை. இதில் 84 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்களும், அதிகாரிகளும் பணியாற்றுகிறார்கள். இந்த மின்சார வாரியம் இவ்வளவு சீரும் சிறப்பும் பெற்றிருக்கிறதென்றால், அதற்கெல்லாம் காரணமான, பொறியாளர்கள், ஊழியர்கள், தொழிலாளர்கள் ஆகிய எல்லோருக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். நாம் பல கண்காட்சிகளை நடத்தி வருகிறோம். மின்சார விழாவின் ஆரம்பத்திலே நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் எழுதிய பாடல் ஒலிக்கிறது, அதாவது,

“பொன்சாரம் இட்டழைக்கும் பூமான்கள் வீட்டுக்கே
மின்சாரம் போகுமென்ற நிலைமாற்றி
எழுபத்திரண்டுக்குள் எங்கணுமே எந்தமிழ்நாட்டில்
மின் இணைப்பு ஏற்படவே உழைக்கின்றோம்”

என்ற பாடல் ஒலிக்கும். அந்தச் சமயத்தில் திரை மெல்ல விலகும். இந்தக் காட்சிகளையெல்லாம் எக்ஸிபிஷன்களில்தான் காட்டுவார்கள். சாதாரண மக்கள் இந்தக்காட்சியைப் பார்க்க வேண்டுமென்றால் எக்ஸிபிஷனுக்கு ஒரு ரூபாய் கொடுத்துத்தான் பார்க்க முடியும். இப்போது மக்கள் இம்மாதிரியான விழாக்களிலே இந்த மாதிரியான காட்சிகளைக் கண்டு ரசிக்கிறார்கள். ஓரிடத்தில் ஒரு பட்டன் அழுத்தினால் இன்னொரு இடத்தில் திரை விலகுகிறது. “இந்திய நாட்டின் கிராமங்கள் எல்லாம் மின்னொளி பெற வேண்டும்” என்று கூறிய வாசகங்களுடன் அண்ணல் மகாத்மா காந்தியடிகள் தோன்றுகிறார்கள். ‘இந்திய நாட்டின் கிராமங்கள் மின்னொளி பெறவேண்டும், அதுதான் என்னுடைய லட்சியம்’ என்ற ஒலியுடன் பேறிஞர் அண்ணா அவர்களுடைய உருவம் தெரியும். ‘பேரறிஞர் அண்ணா அவர்களின் லட்சியங்களை ஈடேற்றுவதுதான் என்னுடைய லட்சியம்’ என்ற முழக்கத்துடன் நமது டாக்டர் கலைஞர் அவர்கள் தோன்றுவார். இந்தக் காட்சிகளைக் கண்டு கூடியிருக்கும் மக்கள் ஆரவாரித்துத் தங்கள் மகிழ்ச்சியைக் காட்டிக் கொள்கிறார்கள். பின்னர் எந்த எந்த மாவட்டத்தில் எவ்வளவு எவ்வளவு திட்ட வேலைகள் முடிந்திருக்கின்றன என்பதைக் காட்டுகிறார்கள், குறிப்பிட்ட மாவட்டமாக இருந்தால் வேலை பூர்த்தியான இடங்கள் எவ்வளவு விரைவில் பாக்கி வேலைகள் முடிக்கப்படும் என்பதற்கான விவரங்கள் திரை காண்பிக்கப்படும். இம்மாதிரியான காட்சிகளைக் கண்டு மக்கள் பல விவரங்களை



அறிந்து கொள்வதோடு, மகிழ்ச்சியடையவும் செய்கிறார்கள். நாங்கள் செய்வது மக்களுக்கு மகிழ்ச்சியூட்டுவதாய்த்தான் அமைகின்றன.

அடுத்தபடியாக, விளக்கு போடுவதுபற்றிச் சொன்னார்கள். நமது நண்பர் திரு. கே. என். குமாரசாமி அவர்கள், பொங்கல் பாளையம், கரால் பாளையம், கணபதி பாளையம் போன்ற ஊர்களைப் பற்றிச் சொன்னார்கள். நான் கையெழுத்துப் போட்டு, அங்கு உடனடியாக மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்தப்படியாக, நண்பர் திரு. லத்தீப் அவர்கள் வடார்க்காடு மாவட்டத்தில் எல்லா இடங்களுக்கும் தெரு விளக்குகள் போட்டு விட்டார்கள். இரண்டு, மூன்று இடங்களுக்குப் பாக்கி இருக்கிறது என்றார். தெல்லிவசைநாடு, பொங்கம்பட்டு நாடு, இல்லிசை நாடு முதலான பகுதிகளுக்கு 4-12-1971-ம் தேதியன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் எதையும் விடவில்லை. உறுப்பினர்கள் கூறுவதை யெல்லாம் மனதில் கொண்டு செயலாற்றுகிறோம்.

இன்னும் சில குறைகள் இருக்கின்றன சீரமைப்பு என்று சொல்கிறார்கள். ஆபரேடிங், மெயின்டனன்ஸ் பற்றிச் சொன்னார்கள். பைக்காரா திட்டத்தில் நல்ல அமைப்புகளைச் செய்திருக்கிறோம். நமது கலைஞர் அவர்கள் குளித்தலை சட்டமன்ற உறுப்பினராக இருந்து நல்ல காரியங்களைச் செய்தார். நான் அமைச்சராகப் பொறுப்பு ஏற்றுக் கொண்ட பிறகு வேலை பூர்த்தியான மாவட்டங்களில் சீரமைப்பு உடனடியாகச் செய்யப்படும் என்று கூறியிருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்டப் பொறியாளர் போன்றவர்களுடன் பத்து இருபது நாட்களுக்கு ஒரு இடம்சென்று அங்குள்ள வேலைநிலைமைகளைக் கண்டறிந்து ஆவன செய்தால், திட்டவேலைகள் விரைவில் முடிவடையும். வேலை பூர்த்தியான இடம் என்று அறிவிப்புச் செய்துவிட முடியும்.

அடுத்ததாக மீட்டர்கள்பற்றிப் பேசினார்கள். 90 லட்சம் ரூபாய் வரையிலும் ஒதுக்கியிருக்கிறோம். இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர் அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மீட்டர் போடுவதை எதிர்த்தார்கள், ஆனால் இங்கே பேசிய பல உறுப்பினர்கள் மீட்டர்கள் போட வேண்டுமென்று சொன்னார்கள். உங்களுடைய எண்ணத்தை நிறைவேற்றுவதுதான் எங்களுடைய எண்ணம். எனவே போடச் சொன்னால் போடுகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இலாகாவிலே இதைப்பற்றி ஆலோசிக்கச் சொல்லியிருக்கின்றேன், எனவே அதைப்பற்றி விரைவில் முடிவு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மின்சார இலாகா நல்ல முறையில் பல்வேறு பிரிவுகளிலும் மிக வேகமாக மக்கள் எல்லாம் திருப்தியடைக்கூடிய வகையில் வேலை செய்து வருகின்றது. அதனுடைய ஊழியர்களுக் கெல்லாம் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ஓ. பி. இராமன்] [1971 டிசம்பர் 13

மின்சாரத் துறை இவ்வளவு சுறுசுறுப்பாக இயங்குவதற்குக் காரணம் என்னுடைய தலைவர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுடைய தூண்டுதல்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமென்றால் அவர்கள் சமீபத்திலே அமெரிக்காவிற்குச் சென்றிருந்த நேரத்திலே அங்கேயிருந்து எனக்கு எழுதும்பொழுது 'விளக்கொளி பெருக்கும் நகரங்கள் விழியைப் பறிக்கின்றன' நாமும் 1972-ம் ஆண்டிற்குள் விளக்கொளி பெருக்கிட வேண்டுமென்று எழுதியிருக்கின்றார்கள். பத்தாயிரம் மைல்களுக்கு அப்பால் அவர்கள் இருந்தாலும்கூட கடமையை மறக்காது, விழியைப் பறிக்கின்ற அளவுக்கு நாமும் செய்யவேண்டும் என்ற முறையிலே கடமையை உணர்த்தியிருக்கிறார்கள். அவர்களுடைய ஒருங்கிணைந்த மிகப் பெரிய தலைமையின் கீழ்தான் இன்றைக்கு இந்தத் துறை சீராகச் செயல்படுகின்றது. துரிதமாகச் செயல்படுகின்றது, கேட்கின்ற நேரத்தில் எல்லாம் பணத் தட்டுப்பாடுகள் இருந்தாலும் இந்தத் துறைக்குத் தேவையான பணம் ஒதுக்கி உதவியிருக்கிறார்கள், அவர்களுக்கு என்னுடைய நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் எடுக்க வேண்டிய பல நடவடிக்கைகளைப்பற்றி யெல்லாம் குறிப்பிட்டார்கள். அவற்றைப் பற்றி யெல்லாம் பரிசீலித்து நாங்கள் ஆண்டுக்கான்டு தயாரித்து அறிக்கை வைக்கின்ற நேரத்திலே இவற்றைப்பற்றித் தெரியப் படுத்துகிறோம் என்று தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தனியார் துறையிலுள்ளவற்றை அரசாங்கம் எடுத்துக்கொள்வதற்காக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன? 30 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். அவற்றை எடுக்கப்போகிறோமா, எந்த அளவுக்கு எடுக்கப் போகிறோம், முழுமையாக எடுக்கப் போகிறோமா இல்லை கைவிட்டு விட்டோமா என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** கைவிடப்படவில்லை, தீவிரமாக்கப்படுகிறது. தனியார்கள் என்னுடன் வந்துபேசிக் கொண்டு இருக்கிறார்கள். 25-வது அரசியல் சட்ட திருத்தம் வந்துவிட்டதாலே கொடுத்துவிட வேண்டுமென்று நினைக்கிறார்கள். இப்பொழுது எடுத்துக் கொண்டால் மின்சார வாரியத்திற்கும் 3. 4 கோடி ரூபாய் லாபம்கூட வரலாம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** விவாதம்
பி.ப. 12.23. முடிவுற்றது. பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்தஅளவோடு முடிவுற்றன. நாளை காலை 5 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.



1971 டிசம்பர் 13]

## (8) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. Statutory Rules and Orders

'Nil'

### B. Reports, Notifications and Other Papers.

● 59. Statement made by Hon. Dr. M. Karunanidhi, under Rule 82 of the Tamil Nadu Legislative Assembly Rules on 10th December, 1971 in regard to the decisions taken by the Cabinet to augument the resources in order to meet the serious situation caused by the emergency.

@ 60. Copy of G.O. Ms. No. 3691, Public (Civil Defence-II) Department dated 10th December 1971, in regard to consitution of a State Committee for National Defence Aid and three other Committees.

---

£ 61. The Tamil Nadu Co-operative Societies (Second Amendment) Bill, 1971 (L.A. Bill No. 40 of 1971) with Annexure.

---

● Laid on the table of the House on 11th December 1971.

£ Despatched to Members on 10th December 1971.

## இணைப்பு

[201-ம் பக்கத்தில் 326-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க]

### விவர அறிக்கை.

மிடாலம்துறை, எரமன்துறை, பள்ளம்துறை, மேல்மணக்குடி ஆகிய கன்னியாகுமரி மாவட்ட கடலோரக் கிராமங்களில் கடலரிப்பைத் தடுக்க மேற்கொண்ட நடவடிக்கைகள் :—

**மிடாலம் துறை :** கரையோரமாக 3,300 அடி நீளத்திற்கு கரடுமுரடான கற்களை நிரப்பி, 2 அடி, 6 அங்குல இடைவெளிகளில் இரண்டு வரிசைப் பனைமரக் கம்பங்களை இறக்கும் பணி ரூ. 89,500 மதிப்பீட்டுச் செலவில் 1971-ஆம் ஆண்டு மே மாதத்தில் முடிக்கப் பட்டது.

**எரமன்துறை :** ஏ.வி.எம். கால்வாய் கடலுடன் கூடுமிடத்தில் மேற் புறத்தில் 100 அடி இடைவெளிகளில் 20 அடி நீளம் கொண்ட நீர் அரிப்புத் தடுப்பிகள் மூன்றும் நீரோட்டத் திசையில் 300 அடி இடைவெளிகளில் 100 அடி, 60 அடி நீளம் உள்ள நீர் அரிப்புத் தடுப்பிகள் மூன்றும், ரூ. 63,000 மதிப்பீட்டுச் செலவில் பெரும்பாலும் முடிக்கப்பட்டன.

**பள்ளம் துறை:** கடற்கரை நெடுக R. R. கல்கட்டுமான வேலையுடன் 450 மீட்டர் நீளத்துக்கு ஒரு தடுப்புச் சுவர் ரூ. 99,000 செலவில் கட்டப்பட்டது.

**மேலமணக்குடி கிராமம்.** கரையரிப்புத் தடுப்புப் பணிகளில் கீழ்க்கண்டவை அடங்கும்--

மேற்குப் புறமாக உள்ள அலைதடுப்புச் சுவர் மீறி 355 அடி நீளத்திற்கும் பழையாற்றின் முகத்துவார இறுதியிலிருந்து, கரையின் தெற்குப் பக்கத்தின் மீது 100 அடி நீளத்திற்கும் 5 கன அடிக்குக் குறையாத அளவுள்ள பெரிய கற்கள் 2,600-ஐ அடுக்குதல் 1970 மே திங்களில் ரூ. 47,200 செலவில் இப்பணி முடிக்கப் பட்டுள்ளது.

**The steps taken to prevent sea erosion in the coastal villages of Midalamthurai, Eramanthurai, Pallamuthurai and Melamanakudi in Kanyakumari district are indicated below—**

***Midalamthurai.*—Construction of protection work with two rows of palmyrah piles driven at 2 feet 6 inches apart with rough stone filling for a total length of 3,300 feet along the shore was completed during May 1971 at an estimated cost of Rs. 89,500.**



*Eramanthurai* -The work of providing three groynes of 20 feet length at 100 feet intervals at above the Confluene of A.V.M. Canal and also down stream, groyers of 100 feet and 60 feet lengths at 300 feet intervals at an estimated cost of Rs. 63,000 has almost been completed.

*Pallamthurai* —A retaining wall of 450 M with R.R. Masonry along the shore-line at a cost of Rs. 99,000 was constructed.

*Melamanakudi village.*—Protective measures consist of dumping 2,600 numbers of large sizes stones not less than 5c. feet in volume for a length of 355 feet on the western retaining wall and 100 feet on the southern side of the coast from the mouth end of the Pazhayar river. The work has been completed at a cost of Rs. 47,200 during May 1971.

## இணைப்பு-2.

[214-ம் பக்கத்தில் 339-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(அ) & (இ) : 1971-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19-ம் தேதி அன்று சென்னை மின் திட்டத்தைச் சேர்ந்த சுமார் 2,000 தொழிலாளர்கள் மைலாப்பூரில் ஒன்று கூடி ஊர்வலமாக வந்து அண்ணாசாலை 157-ம் எண்ணில் உள்ள தமிழ் நாடு மின்சார வாரிய அலுவலகம் வந்து அடைந்தார்கள். தொழிலாளர் பிரதிநிதிகள் மின்வாரியத் தலைவரைச் சந்தித்து சாஸ்திரி நகர் அடையாற்றில் முதலாவது மெயின் ரோட்டில் ( 1st Main Roap மின் சம்பங்களை மின் வாரியத் தொழிலாளர்கள் சிலர் நட்டுக் கொண்டிருக்கும் போது சென்னை அரசாங்க போக்குவரத்து இலாகா தொழிலாளர்கள் அவர்களைத் தாக்கியதைக் குறித்து விவரமாக தெரிவித்து தாக்கியவர்களின்மேல் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும். மின் வாரியத் தொழிலாளர்களுக்கு அவர்கள் தங்கள் பணிகளில் ஈடுபட்டுள்ளபோது தகுந்த பாதுகாப்பு தரவேண்டும் என்றும் தெரிவித்தார்கள். தொழிலாளர் பிரதிநிதிகளிடம் மின் வாரியத் தலைவர் இது குறித்து ஏற்கெனவே மின்வாரிய அதிகாரிகள் காவல்துறையினரிடம் தகுந்த நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்து விட்டார்கள் என்றும், காவல் துறை இலாகா அதிகாரிகள் இவ்விஷயத்தை விசாரித்துத் தகுந்த நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்து இருக்கிறார்கள் என்றும் தெரிவித்தார். பிறகு ஆர்ப்பாட்டக்காரர்கள் அமைதியாகக் கலைந்து சென்று தம் பணியில் மீண்டும் ஈடுபட்டனர்.

(*a*) and (*b*): On 19th August 1971 about ,000 workers of the Madras Electricity System (Distribution) met at Mylapore and came in a procession to the Office of the Tamil Nadu Electricity Board also, 157, Anna Salai, Madras-2. The representatives of the workers met the Chairman, Tamil Nadu Electricity Board and explained the way in which certain workers of the Board were assaulted by the Transport Department workers, while they were erecting tubular poles along 1st Main Road, Shastrinagar, Adyar and wanted appropriate action to be taken besides the provision or adequate protection to the workers of the Board while discharging their duties. The representatives were informed by the Chairman that the Departmental Authorities had already taken up the matter with the Police Department and that the latter had promised to enquire into the matter expeditiously and render all possible assistance. On the assurance given by the Chairman, the demonstrators dispersed peacefully to resume their work.

## இணைப்பு-3.

[37-ம் பக்கத்தில் 339-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

**Statement showing 'Existing' and 'Revised' scales of pay of Employees of Tamil Nadu Electricity Board.**

| Serial number. (1) | Designation. (2) | Scale of pay up to 30th November 1969. (3) | Scale of pay sanctioned with effect from 1st December 1969. (4) |
|---|---|---|---|
| | | RS. | RS. |
| TECHNICAL— | | | |
| 1 | Special Grade Foreman .. .. .. | 325—15—400 | 375—25—650 |
| 2 | Chief Head Draughtsman .. .. .. | 300—15—450 | 375—25—650 |
| 3 | Head Draughtsman .. .. .. | 305—15—380 | 375—25—650 |
| 4 | Testing Assistant .. .. .. | 300—12½—375 | 375—25—650 |
| 5 | Special Winder .. .. .. | 265—15—400 | 300—25—650 |
| 6 | Junior Chemist .. .. .. | 240—15—375 | 300—25—650 |
| 7 | Assistant Chargeman .. .. .. | 240—15—375 | 300—25—650 |
| 8 | Junior Engineer (Electrical, Mechanical, and Civil)/ Supervisor, Grade I (Electrical, and Mechanical). | 240—15—375 | 300—25—650 (For existing incumbents the minimum will be Rs. 325). |

| Serial number. (1) | Designation. (2) | Scale of pay up to 30th November 1969. (3) | Scale of pay sanctioned with effect from 1st December 1969. (4) |
|---|---|---|---|
| TECHNICAL—*cont.* | | | |
| 9 | Draughtsman, Grade I | 230—15—305 | 282—17-1/2—352—25—502 |
| 10 | Senior Construction Foreman | 200—10—250 | 265—17-1/2—300—25—450 |
| 11 | Supervisor (Civil) | 160—7½-190-10-240-15-375 | 230—17-1/2—300—25—650 |
| 12 | Assistant Special Winder | 180—10—300 | 230—17-1/2—300—25—425 |
| 13 | Foreman, Grade I | 180—10—300 | 230—17-1/2—300—25—425 |
| 14 | Supervisor, Grade II | 160—7½—190—10—240 | 230—17-1/2—300—25—425 |
| 15 | Junior Chargeman | 160—7½—190—10—240 | 230—17-1/2—300—25—425 |
| 16 | Foreman, Grade II (W.C.) | 160—7½—190—10—240 | 230—17-1/2—300—25—425 |
| 17 | Senior Machine Operator | 160—7½—190—10—240 | 230—17-1/2—300—25—425 |
| 18 | Surveyor (Qualified) | 160—7½—190—10—240 | 230—17-1/2—300—25—425 |
| 19 | Draughtsman, Grade II | 180—10—230 | 230—17 1/2—300—25—400 |
| 20 | Surveyor (unqualified) | 160—(fixed) | 210-10—250-12-310-15-355 |
| 21 | Heavy Vehicle Driver (Workshops) | 150—(fixed) | 210-10—250-12-310-15-355 |
| 22 | Construction Foreman | 135—5—175 | 160—10—240—12—300 |
| 23 | Line Inspector, Grade I | 135—5—175 | 160—10—240—12—300 Redesignated as Line Inspector. |
| 24 | Line Inspector, Grade II | 115—5—150 | |
| 25 | Winder, Grade I | 135—5—175 | 160—10—240—12—300 |
| 26 | Foreman, Grade II (O.S.S.) | 135—5—175 | 150—10—240—12—300 |
| 27 | Foreman, Grade III (W.C.) | 135—5—175 | 160—10—240—12—300 |
| 28 | Driver (Tractor, Trailers of heavy vehicles), Grade I. | 135—5—175 | 160—10—240—12—300 |
| 29 | Assistant Chemist | 125—6—185 | 160—10—240—12—300 |
| 30 | Tester Chemical, Grade I | 125—6—185 | 160—10—240—12—300 |
| 31 | *Draughtsman, Grade III* | *125—4—165—5—180* | *160—10—240—12—300* |
| 32 | Syrang, Grade I | | |
| 33 | Maistry, Grade I | | |
| 34 | Meter Inspector | | |
| 35 | Loco Driver/Transport | | |
| 36 | Mechanical Estimator | | |
| 37 | Instrument Mechanic, Grade I | | |
| 38 | Mechanic, Grade I | | |
| 39 | Telephone Inspector, Grade I | 115—5—150 | 160—10—240—12—300 |
| 40 | Tester, Grade I | | |
| 41 | Winder, Grade II | | |
| 42 | Foreman, Grade III (O.S.S.) | | |
| 43 | Commercial Inspector | | |
| 44 | Junior Machine Operator | | |
| 45 | Senior Store Assistant (W.C.) | | |
| 46 | Foreman, Grade IV (W.C.) | | |
| 47 | Driver (Tractor, Trailers of heavy vehicle), Grade II | | |
| 48 | Tester Chemical, Grade II | | |
| 49 | Sergeant | | |
| 50 | Inspector of Recorders (O.S.S. and W.C.) | | |
| 51 | Oil Tester | | |
| 52 | Instrument Repairer, Grade I | | |
| 53 | Transport Overseer, Grade I | | |
| 54 | Switch Board Attendant/Operator | 105—4—145 | 140—7—210—8—250 |
| 55 | Crane Driver-*cum*-Electrician | | |
| 56 | Lorry Driver, Grade I | | |
| 57 | Sub-station Operator | | |
| 58 | Mechanic, Grade II | | |

| Serial number. (1) | Designation. (2) | Scale of pay up to 30th November 1969. (3) RS. | Scale of pay sanctioned with effect from 1st December 1969. (4) RS. |
|---|---|---|---|
| | TECHNICAL—*cont.* | | |
| 59 | Maistry, Grade II | | |
| 60 | Telephone Inspector, Grade II | | |
| 61 | Foreman, Grade IV (O.S.S.) | | |
| 62 | Shop Assistant | | |
| 63 | Calyx Drill Driver (W.C.) | | |
| 64 | Compressor Driver (W.C.) | | |
| 65 | Road Roller Driver (W.C.) | | |
| 66 | Crusher Driver (W.C.) | | |
| 67 | Blacksmith, Grade I (W.C.) | 105—4—145 | |
| 68 | Welder, Grade I (W.C. | | 140—7—210—8—250 |
| 69 | Pattern Maker, (W.C.) | | |
| 70 | Fitter, Grade I (W.C) | | |
| 71 | Foreman, Grade V (W.C.) | | |
| 72 | Mechanic, Class II (Workshops) | | |
| 73 | Fitter, Grade I (Workshops) | | |
| 74 | Blacksmith, Grade I (Workshops) | | |
| 75 | Pattern Maker (Workshops) | | |
| 76 | Welder (Workshops) | | |
| 77 | Carpenter, Grade I (O.S.S. and W.C.) | | |
| 78 | Forman, Transport | | |
| 79 | Plate Layer, Transport | 98—3—128 | |
| 80 | Tool Keeper, Grade I | | 140—7—210—8—250 |
| 81 | Filter Operator | | |
| 82 | *Instrument Repairer (Telephone)* | | |
| 83 | Fitter, Grade I (O.S.S.) | | |
| 84 | Fitter, Grade II (W.C.) | | |
| 85 | Winch Driver | | |
| 86 | Crane Driver | | |
| 87 | Electrician, Grade I | | |
| 88 | Lineman Driver | | |
| 89 | Lineman Grade I | | |
| 90 | Lineman, Fitter | | |
| 91 | Lineman, Turner | | |
| 92 | Lineman Operator | | |
| 93 | Lorry Driver, Grade II | | |
| 94 | Driver, Power House | | |
| 95 | Instrument Mechanic, Grade II | 98—3—128 | 140—7—210—8—250 |
| 96 | Mechanic, Grade III | | |
| 97 | Tester, Grade II | | |
| 98 | Foerman, Grade V (O.S.S.) | | |
| 99 | Syrang, Grade II | | |
| 100 | Mixer Driver (W.C.) | | |
| 101 | Machineman, Grade I (W.C.) | | |
| 102 | Maistry, Grade III | | |
| 103 | Time Keeper, Grade I | | |
| 104 | Job-Clerk | | |
| 105 | Foreman, Grade VI (W.C.) | | |
| 106 | Blacksmith, Grade II (W.C.) | | |
| 107 | Painter (W C.) | | |
| 108 | Tinsmith (W.C. | | |
| 109 | Fitter, Grade II (Workshops) | | |

| Serial number. (1) | Designation. (2) | Scale of pay up to 30th November 1969. (3) | Scale of pay sanctioned with effect from 1st December 1969. (4) |
|---|---|---|---|
| | TECHNICAL—*cont.* | RS. | RS. |
| 110 | Machineman, Grade I (Workshops) | | |
| 111 | Blacksmith, Grade II (Workshops) | | |
| 112 | Painter (Workshops) | | |
| 113 | Tinsmith (Workshops) | 98—3—128 | 140—7—210—8—250 |
| 114 | Assistant Store Keeper | | |
| 115 | Instrument Repairer, Grade II | | |
| 116 | Trasport Overseer, Grade II | | |
| 117 | Gauge Reader | | |
| 118 | Senior Attendant, Filter House | | |
| 119 | Head Filter *cum*-Pump Driver | | |
| 120 | Pump Driver | | |
| 121 | Filter Mechanic | | |
| 122 | Mechineman (O.S.S.) | | |
| 123 | Caulker and Rivetter | 85—3—130 | 120—5—135—6—195 |
| 124 | Fitter Slinger | | |
| 125 | Valve House Attendant | | |
| 126 | Trolley Guard | | |
| 127 | Turbine Operator | | |
| 128 | Mason, Grade I | | |
| 129 | Carpenter, Grade II (L) | | |
| 130 | Packer | | |
| 131 | Tyndals | | |



| Serial number. (1) | Designation. (2) | Scale of pay up to 30th November 1969. (3) | Scale of pay sanctioned with effect from 1st December 1969. (4) |
|---|---|---|---|
| 132 | Cleaner, Transport | | |
| 133 | Assistant to Hydraulic Operator | | |
| 134 | Assistant to Operator, Grade I | 85 3—130 | 120—5—135—6—195 |
| 135 | Mechanic Leather | | |
| 136 | Mechanic, Grade IV | | |
| 137 | Maistry, Grade IV | | |
| 138 | Wireman/Wireman Meter Reader | | |
| 139 | Instrument Mechanic, Grade III | | |
| 140 | Lineman, Grade II | | |
| 141 | Commercial Assistant | | |
| 142 | Telephone Operator, Graed I | | |
| 143 | Machineman, Grade II (W.C.) | | |
| 144 | Rota Print Operator | | |
| 145 | Warden (W.C. and O.S.S.) | | |
| 146 | Moulder (W.C.) | 85—3—118 | 120—5—135—6—195 |
| 147 | Welder, Grade II (W.C.) | | |
| 148 | Blacksmith, Grade III (W.C.) | | |
| 149 | Carpenter, Grade III (W.C.) | | |
| 150 | Fitter, Grade III (W.C.) | | |
| 151 | Time Keeper, Grade II | | |
| 152 | Fitter, Grade III (Workshops) | | |
| 153 | Machineman, Grade II (Workshops) | | |
| 154 | Blacksmith, Grade III (Workshops) | | |
| 155 | Welder (Workshops) | | |
| 156 | Carpenter (Workshops) | | |
| 157 | Moulder (Workshops) | | |
| 158 | Gurkha Watchman (Madras) (O.S.S.) | 80—2½—100 | 120—5—135—6—195 |
| 159 | Semi-skilled Workman | | |

| Serial number. (1) | Designation. (2) | Scales of pay up to 30th November 1969. (3) RS. | Scales of pay sanctioned with the effect from 1st December 1969. (4) RS. |
|---|---|---|---|
| | **TECHNICAL**—*cont.* | | |
| 160 | Coal Maistry | | |
| 161 | Telephone Operator, Grade II | | |
| 162 | Mason, Grade II | | |
| 163 | Stone Cutter | | |
| 164 | Fitter, Grade II (O.S.S.) | | |
| 165 | Fitter, Grade IV (W.C.) | | |
| 166 | Electrician, Grade II | | |
| 167 | Boiler House Fireman | | |
| 168 | Assistant Wireman | 80—2½—100 | 120—5—135—6—195 |
| 169 | Plumber | | |
| 170 | Assistant Operator, Grade II | | |
| 171 | Machineman, Grade III (W.C.) | | |
| 172 | Blacksmith, Grade IV (W.C.) | | |
| 173 | Maistry, Grade V (W.C.) | | |
| 174 | Fitter, Grade IV (Workshops) | | |
| 175 | Machineman, Grade III (Workshops) | | |
| 176 | Blacksmith, Grade IV (Workshops) | | |
| 177 | Tracer | 80—2½—100 (Holders of S.S.L.C. with Engineering as their special subject in the bifurcated course in Secondary Schools who have secured not less than the marks prescribed for the minimum general educational qualification to start on Rs. 90.) | 110—8—150—10—250 S.S.L.C. qualified will start on Rs. 118. |



| Serial number. (1) | Designation. (2) | Scales of pay up to 30th November 1969. (3) RS. | Scales of pay sanctioned with the effect from 1st December 1969. (4) RS. |
|---|---|---|---|
| 178 | Blue Printer, Grade I | 64—2—80 | |
| 179 | Fitter, Grade V (W.C.) | | |
| 180 | Machineman, Grade IV (W.C.) | | |
| 181 | Mazdoor (W.C.) | | |
| 182 | Blacksmith, Grade V (W.C.) | | |
| 183 | Hammerman (W.C.) | | |
| 184 | Gurkha Watchman (O.S.S.) (Muffassal and W.C.) | | |
| 185 | Sanitary Maistry | | |
| 186 | Junior Attendant (Pump House) | | |
| 187 | Windermate | | |
| 188 | Pump House Attendant | | |
| 189 | Oiler | | |
| 190 | Cleaner, Grade I | | |
| 191 | Lascar, Grade I | 64—2—80 | 84—4—120—5—150 |
| 192 | Helper | | |
| 193 | Turbine Cleaner | | |
| 194 | Boiler House Attendant | | |
| 195 | Store Helper/Lascar, Grade I | | |
| 196 | Rest House Attendant | | |
| 197 | Tool-keeper, Grade II | | |
| 198 | Pipeline Fitter | | |
| 199 | Matty-*cum*-Watchman (O.S.S.) | | |
| 200 | Groundsman-A | | |
| 201 | Warden, Grade II (W.C.) | | |
| 202 | Road Roller Cleaner | | |
| 203 | Fitter, Grade V (Workshops) | | |
| 204 | Machineman, Grade IV (Workshops) | | |
| 205 | Blacksmith, Grade V (Workshops) | | |

| Serial number. (1) | Designation. (2) | Scales of pay up to 30th November 1969. (3) RS. | Scales of pay sanctioned with effect from 1st December 1969. (4) RS. |
|---|---|---|---|
| | **TECHNICAL—*cont.*** | | |
| 206 | Hammerman (Workshops) | 64—2—80 | 84—4—120—5—150 |
| 207 | Mazdoor (Workshops) | | |
| 208 | Blue Printer, Grade II | 55—1½—70 | 80—4—120—5—145 |
| 209 | Anti-Malarial Mazdoor | 55—1½—70 | 65—3—95—4—115—5—125 |
| 210 | Fitter Mazdoor | | |
| 211 | Coal Mazdoor | | |
| 212 | Groundsman-B | | |
| 213 | Store Helper | | |
| 214 | Laboratory Helper (O.S.S. and W.C.) | | |
| 215 | Mazdoor (O.S.S. and W.C.) | | |
| 216 | Watchman | | |
| 217 | Gardener | | |
| 218 | Sweeper | | |
| 219 | Sanitary Worker | | |
| 220 | Telephone boy/Messenger boy | | |
| 221 | Cleaner, Grade II | | |
| 222 | Lascar, Grade II (O.S.S. and W.C.) | | |
| 223 | Nursing Orderly | | |
| 224 | Menial | | |
| 225 | Matty-cum-Watchman (W.C.) | | |
| | **ADMINISTRATIVE.—** | | |
| 226 | Personal Assistant | 375—20—475 | 400—25—525—30—645—35—750. (Existing incumbents will have a minimum of Rs. 450). |
| 227 | Senior Superintendent | 240—10—330 | 300—20—380—25—505—30—655. |
| 228 | Chief Store-keeper/Stock Verifier | 190—7½—250 | 250—16—330—18—420—20—500. |
| 229 | Inspector of Cashiers | Do. | Do. |
| 230 | Accountant/Junior Superintendent | Do. | Do. (15 per cent of posts of Accountants will be in the Special Grade of 300—20—380—25—505—30—655.) |
| 231 | Store-keeper, Grade I | 135—6—195 | 160—12—280—15—355. |
| 232 | Sub-Inspector of Cashiers | 125—6—185 | Do. |
| 233 | Assistant | Do. | Do. |
| 234 | Store-keeper, Grade II | 100—5—150 | 140—7—210—8—250. |
| 235 | Junior Assistant | 90—5—140 (Graduates to start on Rs. 105.) | 126—8—150—10—250. (Graduates to start on Rs. 150.) |
| 236 | Typist (qualified)/Tamil Typist | Do. (Plus Typewriting Special pay.) | Do. (Plus Typewriting Special pay.) |
| | NOTE :—Typist who are not fully qualified— Typists who are fully qualified under the general rules for the Tamil Nadu State and Subordinate Services as adapted by the Board but who have passed the Lower Grade Typewriting. | Rs. 90. | Do. |

| Serial number. (1) | Designation. (2) | Scale of pay up to 30—11—1969. (3) RS. | Scale of pay sanctioned with effect from 1—12—1969. (4) RS. |
|---|---|---|---|
| | **ADMINISTRATIVE—*cont.*** | | |
| | Typists who are not qualified under the general rules for the Tamil Nadu State and Subordinate Services as adapted by the Board but whose Secondary School-Leaving Certificates show that they took the examination on the completion of their School Course up to and including Form VI and have passed the Higher Grade Test in Typewriting. | 90—5—115 | 126—8—150—10—250. (Plus Typewriting Special pay). |
| 237 | Steno-typist .. .. .. .. .. | 90—5—140 (Graduates to start on Rs. 105) (Plus Shorthand Special pay.) | 126—8—150—10—250. (Graduates to start on Rs. 150.) (Plus Shorthand Special pay.) |
| 238 | Cashiers .. .. .. .. .. | 90—5—140 | 126—8—150—10—250. |
| 239 | Attender .. .. .. .. .. | 64—2—80 | 84—4—120—5—150. |
| 240 | Duffadar .. .. .. .. .. | 60—1½—75 | 70—3—100—4—120—5—130. |
| 241 | Last Grade Servant .. .. .. .. | 55—1½—70 | 65—3—95—4—115—5—125. |
| | **BARD'S SECRETARIAT AND ACCOUNTS WING.** | | |
| 242 | Superintendent .. .. .. .. .. | 250—25—500 | 325—25—525—30—645—35—750. |
| 243 | Accountant (Surprise Inspection Squad) .. .. | 190—7½—250 | 250—16—330—18—420—20—500. |
| 244 | Assistant/Assistant-*cum*-Steno-typist .. .. | 140—10—240 | 178—12—286—15—376. |



| Serial number. (1) | Designation. (2) | Scale of pay up to 30—11—1969. (3) RS. | Scale of pay sanctioned with effect from 1—12—1969. (4) RS. |
|---|---|---|---|
| 245 | Junior Assistant .. .. .. .. | 90—5—140 (Graduates to start on Rs. 105). | 126—8—150—10—250. (Graduates to start on Rs. 150.) |
| 246 | Typist (qualified) .. .. .. .. | 90—5—140 (Graduates to start on Rs. 105 Plus Typewriting Special pay). | 126—8—150—10—250. (Graduates to start on Rs. 150, plus Typewriting special pay). |
| | Note:—Typist who are not fully qualified— | | |
| | Typist who are fully qualified under the general rules for the Tamil Nadu State and Subordinate Services as adapted by the Board but who have passed the Lower Grade Typewriting. | Rs. 90 | 126—8—150—10—250. (Plus Typewriting special pay.) |
| | Typist who are not qualified under the general rules for the Tamil Nadu State and Subordinate Services as adapted by the Board but whose Secondary School-Leaving Certificates show that they took the examination on the completion of their School Course up to and including Form VI and have passed the Higher Grade Test in Typewriting. | 90—5—115 | Do. |
| | Other unqualified typists who do not come under any of the above categories. | 64—2—80 | 110—8—150—10—250. |
| 247 | Steno-Typist .. .. .. .. .. | 90—5—140 (Graduates to start on Rs. 105). | 126—8—150—10—250. (Graduates to start on Rs. 150, plus shorthand special pay.) |
| 248 | Tamil Steno-typist .. .. .. .. | Do. | Do. |

| Serial number. (1) | Designation. (2) | Scale of pay up to 30—11—69. (3) RS. | Scale of pay sanctioned with effect from 1—12—69. (4) RS. |
|---|---|---|---|
| | **BOARD'S SECRETARIAT AND ACCOUNTS WINGS**—*cont.* | | |
| 249 | Tamil Typist .. .. .. .. .. | 90—5—140 (plus Typewriting special pay.) | 126—8—150—10—250. (plus Typewriting special pay). |
| 250 | Telephone Operator .. .. .. .. | 90—5—140 | 126—8—150—10—250. |
| 251 | Special Grade Driver .. .. .. .. | 135—5—175 (plus Rs. 10 special pay.) | 160—10—240—12—300. |
| 252 | Gurka Watchman .. .. .. .. | 80—2½—100 | 120—5—135—6—195. |
| 253 | Attender .. .. .. .. .. | 64—2—80 plus Rs. 5 special pay.) | 84—4—120—5—150. |
| 254 | Duffadar .. .. .. .. .. | 60—1½—75 (plus Rs. 5 special pay.) | 70—3—100—4—120—5—130. |
| 255 | Last Grade Servant .. .. .. .. | 55—1½—70 | 65—3—95—4—115—5—125. |
| 256 | Chowkidar .. .. .. .. .. | Do. | Do. |
| 257 | Menial and Sanitary Worker .. .. .. | Do. | Do. |

The existing Supervisory Special pay for the Assistant in the Accounts Branch, and the Special pay for Typists, Steno-Typists and Duffadars will be increased by Rs. 5 per mensem.



**OFFICERS.**

| | | | |
|---|---|---|---|
| 1 | Assistant Engineers (Civil, Mechanical and Electrical). | 375—25—650 | 450—30—750—40—950. |
| 2 | Divisional Engineers (Civil, Mechanical and Electrical). | 600—40—1,000 | 700—40—1,100—50—1,250. |
| 3 | Superintending Engineers (Civil and Electrical) .. | 1,100—50—1,300 | 1,300—50—1,600. |
| 4 | Chief Operation Engineers/Chief Distribution Engineer/Chief Construction Engineer. | 1,300—50—1,50 | 1,500—60—1,800. |
| 5 | Chief Engineer (Electricity) .. .. .. | 1,500—50—1,800 | 1,700—100—2,000. |
| 6 | Stores Superintendent .. .. .. .. | 300—25—500 | 400—25—525—30—645—35—750. |
| 7 | Deputy Chief Accountant .. .. .. | 300—25—500 | 400—25—525—30—645—35—750. |
| 8 | Chief Accountant/Assistant Accounts Officer (Accounts Wing). | 450—30—750 | 500—30—800—40—960. |
| 9 | Accounts Officer (including Accounts Officer, Accounts Wing). | 600—40—840 | 700—50—1,100. |
| 10 | Chief Controller of Accounts .. .. .. | 1,000—50—1,300 | 1,300—60—1,600. |
| 11 | Personnel Officer .. .. .. .. | 450—30—750 | 500—30—800—40—960. |
| 12 | Assistant Secretary to Board .. .. .. | 550—40—750—50—800 | 650—50—1,000. |
| 13 | Chemist .. .. .. .. .. | 375—25—650 (13 and 14) | 450—30—750—40—950. |
| 14 | Senior Chemist .. .. .. .. .. | | |
| 15 | Chief Chemist .. .. .. .. .. | 600—40—1,000 | 700—40—1,100—50—1,250. |

'இப்போதுள்ள', 'மாற்றியமைக்கப்பட்ட' சம்பள விதங்களைக் காட்டுகிற விவர அறிக்கை.

| தொடர் எண். (1) | பதவிப் பெயர். (2) | 30-11-1969 வரை சம்பள விதங்கள். (3) | 1-12-1969 முதல் அமைக்கப்பட்ட சம்பள விதங்கள். (4) |
|---|---|---|---|
| தொழில் நுட்பத் துறை. | ரூ. | ரூ. | ரூ. |
| 1 | தனித்தர முதலாள் (Special Grade Foreman) | 325-15-400 | 375-25-650 |
| 2 | முதல் தலைமை வரைவாளர் (Chief Head Draftsman) | 300-15-450 | 375-25-650 |
| 3 | தலைமை வரைவாளர் | 305-15-380 | 375-25-650 |
| 4 | சோதித்திடும் உதவியாளர் | 300-12½-375 | 375-25-650 |
| 5 | தனி ஒயிண்டர் (Special Winder) | 265-15-400 | 300-25-650 |
| 6 | இளநிலை ரசாயணி | 240-15-375 | 300-25-650 |
| 7 | உதவிப் பொறுப்பாளர் | 240-15-375 | 300-25-650 |
| 8 | இளநிலைப் பொறியாளர் (மின்சார, யந்திர கட்டிட) இளநிலைப் பொறியாளர் (மின்சார யந்திர) மேற்பார்வையாளர் தரம் I. | 240-15-375 | 300-25-650 (இப்போது பதவியில் இருப்பவர்களுக்குக் குறைந்த அளவுச் சம்பளம் ரூ. 325 ஆக இருக்கும்.) |
| 9 | வரைவாளர், தரம் I | 230-15-305 | 282-17½-325-25-502 |
| 10 | முதுநிலைக் கட்டுமான முதலாள் | 200-10-250 | 265-17½-300-25-450 |
| 11 | (கட்டிட) மேற்பார்வையாளர் | 160-7½-190-10-240-15-375 | 230-17½-300-25-650 |
| 12 | உதவித் தனி ஒயிண்டர் | 180-10-300 | 230-17½-300-25-425 |
| 13 | முதலாளர், தரம் I | 180-10-300 | 230-17½-300-25-425 |
| 14 | மேற்பார்வையாளர், தரம் II | 160-7½-190-10-240 | 230-17½-300-25-425 |
| 15 | இளநிலைப் பொறுப்பாளர் | 160-7½-190-10-240 | 230-17½-300-25-425 |
| 16 | முதலாள், தரம் II (W.E.) | 160-7½-190-10-240 | 230-17½-300-25-425 |
| 17 | யந்திரம் இயக்குபவர் (முதுநிலை) | 160-7½-190-10-240 | 230-17½-300-25-425 |
| 18 | (தகுதி பெற்ற) மேற்பார்வையாளர் | 160-7½-190-10-240 | 230-17½-300-25-425 |
| 19 | வரைவாளர், தரம் II | 180-10-230 | 230-17½-300-25-400 |
| 20 | (தகுதி பெறாத) மேற்பார்வையாளர் | 160 (நிலையானது) | 210-10-150-12-310-15-355 |
| 21 | கனரக வண்டி ஓட்டுநர் (பணிக்களரிகள்) | 150 (நிலையானது) | 210-10-250-12-310-15-355 |
| 22 | கட்டுமான முதலாள் | 135-5-175 | 160-10-240-12-300 |
| 23 | லைன் இன்ஸ்பெக்டர், தரம் I | 135-5-175 | 160-10-240-12-300 |
| 24 | லைன் இன்ஸ்பெக்டர், தரம் II | 115-5-150 | 160-10-240-12-300 (லைன் இன்ஸ்பெக்டர் என்று பதவிப் பெயர் மாற்றி அமைக்கப்பட்டது.) |
| 25 | ஒயிண்டர், தரம் I | 135-5-175 | 160-10-240-12-300 |
| 26 | முதலாள், தரம் II (ஒ எஸ்.எஸ்) | 135-5-175 | 160-10-240-12-300 |
| 27 | முதலாள், தரம் III (W.E.) | 135-5-175 | 160-10-240-12-300 |
| 28 | ஓட்டுநர் (டிராக்டர், கனரக தொடர் வண்டிகள்) தரம் I | 135-5-175 | 160-10-240-12-300 |
| 29 | உதவி ரசாயணர் | 125-6-185 | 160-10-240-12-300 |
| 30 | ரசாயண சோதனையாளர் தரம் I | 125-6-185 | 160-10-240-12-300 |
| 31 | வரைவாளர். தரம் III | 125-4-165-5-180 | 160-10-240-12-300 |
| 32 | கப்பல் எவலர் தலைவர் (சிராங்) தரம் I | | |
| 33 | மேஸ்திரி, தரம் I | | |
| 34 | மீட்டர் இன்ஸ்பெக்டர் | | |
| 35 | ஓட்டுநர்/போக்குவரத்து லாக்கேர் சிற்றூழியர் | | |
| 36 | யந்திர மதிப்பாய்வாளர் | | |
| 37 | நுண்கருவிகம்மியர், தரம் I | 105-5-150 | 160-10-240-12-300 |
| 38 | யந்திரக்கம்மியர் தரம் I | | |
| 39 | தொலைபேசி இன்ஸ்பெக்டர், தரம் I | | |
| 40 | சோதனையாளர், தரம் I | | |
| 41 | ஒயிண்டர் தரம் II | | |
| 42 | முதலாள் தரம் III (ஒ.எஸ்.எஸ்.) | | |

| தொடர் எண். | பதவிப் பெயர். | 30—11—1969 வரை சம்பள வீதங்கள். | 1—12—1969 முதல் அமைக்கப்பட்ட சம்பள வீதங்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | ரூ. | ரூ. |
| 43 | வணக்கவியல் இன்ஸ்பெக்டர் .. | | |
| 44 | யந்திரம் இயக்குபவர் (இளநிலை) .. | | |
| 45 | பண்டக உதவியாளர் (முதுநிலை) (W.E.) .. | | |
| 46 | முதலாள், தரம் IV (W.E.) | 115-5-150 | 160-10-240-12-300 |
| 47 | ஓட்டுநர் (டிராக்டர் கனரக தொடர் வண்டிகள்), தரம் II | | |
| 48 | ரசாயனச் சோதனையாளர் தரம் II .. | | |
| 49 | சார்ஜெண்ட் .. .. | | |
| 50 | ஆவணம் ஆய்வாளர் (O.S.S. அண்டு W.E) .. | | |
| 51 | எண்ணெய்ச் சோதனையாளர் .. | | |
| 52 | நுண் கருவிகள் பழுது பார்ப்பவர், தரம் I .. | | |
| 53 | போக்குவரத்து மேற்பார்வையாளர், தரம் I .. | | |
| 54 | விசைத் தொகுதி உதவியாள்/இயக்குபவர் .. | | |
| 55 | பாரந்தூக்கி ஓட்டுநர், மின்பணியாளர் .. | | |
| 56 | சுமையுந்து ஓட்டுநர், தரம் I .. | | |
| 57 | துணை நிலையம் இயக்குபவர் .. .. | | |
| 58 | இயந்திரக்கம்மியர், தரம் II .. .. | 105-4-145 | 140-7-210-8-250 |
| 59 | மேஸ்திரி தரம் II .. .. | | |
| 60 | தொலைபேசி ஆய்வாளர், தரம் II .. | | |
| 61 | முதலாள், தரம் IV (O.S.S.) .. | | |
| 62 | களரி உதவியாளர் .. .. .. | | |
| 63 | காலிக்ஸ் துளையிடும் வலவர் (W.E.) .. | | |
| 64 | அழுத்துபொறி இயக்குபவர் (W.E.). Compressor Driver) .. .. .. .. | | |
| 65 | சாலை உருளை ஓட்டுநர் (W.E.) .. .. | | |
| 66 | சாறுபிழிக் கருவியை இயக்குபவர் (W.E.) | | |



| தொடர் எண். | பதவிப் பெயர். | 30—11—1969 வரை சம்பள வீதங்கள். | 1—12—1969 முதல் அமைக்கப்பட்ட சம்பள வீதங்கள். |
|---|---|---|---|
| 67 | கருமார், தரம் I (W.E.) .. .. | | |
| 68 | பற்றவைப்பவர், தரம் I (W E.) .. .. | | |
| 69 | வடிவமைப்பவர் (W.E.) .. .. | | |
| 70 | பொறுத்துபவர், தரம் I (W.E.) .. .. | | |
| 71 | முதலாள். தரம் V (W.E.) .. .. | | |
| 72 | இயந்திரக் கம்மியர், வகுப்பு II (பணிக்களரிகள்) | 105-4-145 | 140-7-210-8-250 |
| 73 | பொருத்துபவர், தரம் I (பணிக்களரிகள்) .. | | |
| 74 | கருமார், தரம் I (பணிக்களரிகள்) .. | | |
| 75 | வடிவமைப்பவர் (பணிக்களரிகள்) .. | | |
| 76 | பற்றவைப்பவர் (பணிக்களரிகள்) .. | | |
| 77 | தச்சர். தரம் I (O.S.S. அண்டு W.E.) .. | | |
| 78 | முதலாள், போக்குவரத்து .. .. | | |
| 79 | தண்டவாளம் பழுது பார்ப்பவர், போக்குவரத்து | | |
| 80 | கருவிகள் பொறுப்பாளர், தரம் I .. | | |
| 81 | வடிமுனைக் துளை இயக்குபவர் .. .. | | |
| 82 | நுண் கருவிகள் பழுது பார்ப்பவர் (தொலைபேசி) | | |
| 83 | பொருத்துபவர், தரம் I (O.S.S.) .. | 98-3-128 | 140-7-210-8-250 |
| 84 | பொருத்துபவர், தரம் II(W.E.) .. | | |
| 85 | ஏற்றப்பொறி வலவர் (winch Driver) .. | | |
| 86 | பாரம் தூக்கி ஓட்டுநர் .. .. | | |
| 87 | மின்பணியாளர், தரம் I .. .. | | |
| 88 | லைன் மேன், வலவர் .. .. | | |
| 89 | லைன்மேன், தரம் I .. .. .. | | |
| 90 | லைன்மேன் பொருத்துபவர் .. .. | | |
| 91 | லைன் மேன், கடைசல் செய்பவர் .. .. | | |

| தாண்டர் எண். | பதவிப் பெயர். | 30—11—1969 வரை சம்பள வீதங்கள், | 1—12—1969 முதல் அமைக்கப்பட்ட சம்பள வீதங்கள் |
|---|---|---|---|
| (1) | (1) | (3) | (4) |
| | | ரூ. | ரூ. |
| 92 | லைன் மேன் இயக்குபவர் .. .. | | |
| 93 | சுமையுந்து ஓட்டுநர், தரம் II .. | | |
| 94 | வலவர், மின் உற்பத்தி நிலையம் .. .. | | |
| 95 | கருவிக் கம்மியர், தரம் II .. .. | | |
| 96 | இயந்திரக் கம்மியர், தரம் III .. .. | | |
| 97 | பரிசோதகர், தரம் II ... .. .. | | |
| 98 | முதலாள், தரம் V (O.S.S.) .. | | |
| 99 | கப்பல் ஏவலர் தலைவன், தரம் II .. | | |
| 100 | கலவை இயந்திர வலவர் (W.E.) .. .. | | |
| 101 | இயந்திரங்களை இயக்குபவர், தரம் I (W.E.) .. | | |
| 102 | மேலாள், தரம் III .. .. | | |
| 103 | காலம் குறிப்பவர், தரம் I .. .. | 98-3-128 | 140-7-210-8-250 |
| 104 | பணி எழுததர் .. .. .. | | |
| 105 | முதலாள், தரம் VI (W.E.) .. .. | | |
| 106 | கருமார், தரம் II (W.E.) .. .. | | |
| 107 | வர்ணம் பூசுவோர் (W.E) .. .. .. | | |
| 108 | தகர வேலை செய்பவர் (W.E.) .. | | |
| 109 | பொருத்துபவர், தரம் II (பணிக்களரிகள்) .. | | |
| 110 | இயந்திரத்தை இயக்குபவர், தரம் I (பணிக் களரிகள்) | | |
| 111 | கருமார், தரம் II (பணிக்களரிகள்) .. | | |
| 112 | வர்ணம் பூசுபவர் (பணிக்களரிகள்) .. | | |
| 113 | தகர வேலை செய்பவர் (பணிக்களரிகள்) .. | | |
| 114 | உதவி பண்டகக் காப்பாளர் .. .. .. | 85-3-130 | 120-5-135-6-195. |
| 115 | கருவி பழுது பார்ப்பவர், தரம் II .. .. | | |
| 116 | போக்குவரத்து மேற்பார்வையாளர், தரம் II .. | | |
| 117 | அளவுமானி வாசகர் .. .. .. | | |
| 118 | முதுநிலைப் பணியாள், வடிகட்டும் அறை .. | | |
| 119 | தலைமைப் பொறுத்துபவர் நீரேற்றுயந்திர வலவர். | | |
| 120 | நீரேற்றுயந்திர வலவர் .. .. .. | | |
| 121 | வடிகட்டும் பொறிக்கம்மியர் .. .. | | |
| 122 | இயந்திரத்தை இயக்குபவர் .. .. | | |
| 123 | இலாடம்தறைபவர், ஆணி தறைபவர் .. | | |
| 124 | பொருத்துபவர் .. .. .. .. | | |
| 125 | மின்பொறிக்கதவு பணியாள் (Valve) .. | | |
| 126 | மின்னூர்திக் காவலாள் (Trolley Guard) .. | | |
| 127 | மின்சுழல் தட்டுயெந்திர ஓட்டுநர் (Turbine Operator) | 85-3-118 | 120-5-135-6-195. |
| 128 | கல்தச்சர், தரம் I (Mason) .. .. | | |
| 129 | தச்சர், தரம் II (O.S S) .. .. .. | | |
| 130 | சிப்பஞ் செய்பவர் (Packer) .. .. .. | | |
| 131 | தண்டலாள், கப்பல் ஊழியர் தலைவன் (Tindal) | | |
| 132 | துப்புரவாளர், போக்குவரத்து .. .. | | |
| 133 | நீரியல்யந்திர ஓட்டுநரின் உதவியாளர் (Assistant to Hydraulic Operator) | | |
| 134 | உதவி ஓட்டுநர், தரம் I .. .. .. | | |
| 135 | யந்திரக் கம்மியர், தோல் .. .. .. | | |
| 136 | யந்திரக் கம்மியர், தரம் IV .. .. | | |
| 137 | மேலாள், தரம் IV .. .. .. | | |
| 138 | ஒயர்மேன், மீட்டர் வாசகர் ஒயர்மேன். | | |
| 139 | நுண் கருவிக் கம்மியர், தரம் III .. .. | | |
| 140 | லைன்மேன், தரம் II .. .. .. | | |

| தொடர் எண். (1) | பதவிப் பெயர். (2) | 30-11-1958 வரை சம்பள வீதங்கள். (3) | 1-12-1969 முதல் அமைக்கப்பட்ட சம்பள வீதங்கள். (4) |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| 141 | வணிக உதவியாளர் .. .. .. | | |
| 142 | தொலைபேசி இயக்குபவர், தரம் I .. .. | | |
| 143 | இயந்திரத்தை இயக்குபவர், தரம் II (W.C.) .. | | |
| 144 | ரோடா அச்சு ஓட்டுநர் .. .. .. | | |
| 145 | காப்பாளர் (W.C. & O.S.S.) .. .. | | |
| 146 | வார்ப்படஞ் செய்பவர் (W.C.) .. .. | | |
| 147 | உலோகப் பற்றவைப்பவர், தரம் II (W.C.) .. | | |
| 148 | கருமார், தரம் III (W.C.) .. .. | | |
| 149 | தச்சர், தரம் II (W.C.) .. .. .. | | |
| 150 | பொறுத்துபவர், தரம் III .. .. | 85-3-118 | 120-5-135-6-195. |
| 151 | நேரம் குறிப்பவர், தரம் II .. .. | | |
| 152 | பொறுத்துபவர், தரம் III (பணிக்களரிகள்) .. | | |
| 153 | இயந்திரத்தை இயக்குபவர், தரம் II (பணிக்களரிகள்.) | | |
| 154 | கருமார், தரம் III (பணிக்களரிகள்) .. | | |
| 155 | உலோகப் பற்றவைப்பவர் (பணிக்களரிகள்) .. | | |
| 156 | தச்சர் (பணிக்களரிகள்) .. .. .. | | |
| 157 | வார்ப்படஞ் செய்பவர் (பணிக்களரிகள்) .. | | |
| 158 | கூர்கா காவற்காரன் (சென்னை) (O.S.S.) .. | | |
| 159 | ஓரளவு பயிற்சி பெற்ற தொழிலாளர் .. | | |
| 160 | நிலக்கரி மேலாள் .. .. .. | | |
| 161 | தொலைபேசி இயக்குபவர், தரம் II .. .. | | |
| 162 | கல்தச்சர், தரம் II .. .. .. | | |
| 163 | கற்கருமான (Stone cutter) .. .. | | |
| 164 | பொறுத்துபவர், தரம் II (O.S.S.) .. | 80-2½-100. | 120-5-135-6-195. |
| 165 | பொறுத்துபவர், தரம் IV (W.C.) .. .. | | |
| 166 | மின்பணியாளர், தரம் II .. .. .. | | |
| 167 | கொதிகலன் நிலைய உலைக் காப்பாளர் (Boiler station Fireman) | 80-2½-100 | 120-5-135-6-195. |
| 168 | உதவி கம்பியாள் (Wireman) | | |
| 169 | குழாய் போடுபவர் (சயக்கம்பியர்) .. .. | | |
| 170 | உதவி இயக்குபவர், தரம் II .. .. | | |
| 171 | இயந்திரத்தை இயக்குபவர், தரம் III (W.C.) | | |
| 172 | கருமார், தரம் IV (W.C.) .. .. | | |
| 173 | மேலாள், தரம் V (W.C.) .. .. | | |
| 174 | பொருத்துபவர், தரம் IV (பணிக்களரிகள்) .. | | |
| 175 | இயந்திரத்தை இயக்குபவர், தரம் III (பணிக்களரிகள்). | | |
| 176 | கருமார், தரம் IV (பணிக்களரிகள்) | | |
| 177. | வரைபடப்படி எடுப்பவர் .. .. .. | 80-2½-100 (தொடக்கப் பள்ளிகளில் இரு கூட்டுக்கப்பட்ட பாடத் திட்டத்தில் பொறியியலைச் சிறப்புப் பாடமாகக் கொண்டும் குறைந்த அளவு பொதுக்கல்வி தகுதிக்கென்று குறிப்பிட்ட மதிப்பெண்களுக்குக் குறையாமல் பெற்றிருப்பவர்களுமான எஸ்.எஸ்.எல்.சி. தேறியவர்கள் ரூ. 90 சம்பளத்தில் தொடங்குதல்.) | 110-8-150-10-250 (எஸ்.எஸ்.எல்.சி. தேறியவர்கள் ரூ. 118 சம்பளத்தில் தொடங்க வேண்டும்.) |
| 178 | வரைபடம் தயாரிப்பவர், தரம் I .. .. | 64-2-80 | 110-5-135-6-195. |
| 179 | பொருத்துபவர், தரம் V (W.C.) .. .. | | |
| 180 | இயந்திரத்தை இயக்குபவர், தரம் IV (W.C.) .. | | |
| 181 | மஸ்தூர் (W.C.) .. .. .. | 64-2-80 | 84-4-120-5-150. |
| 182 | கருமார், தரம் V (W.C.) .. .. | | |
| 183 | கருமான் (W.C.) .. .. .. | | |

| தொடர் எண். (1) | பதவிப் பெயர். (2) | 30-11-1969 வரை சம்பள வீதங்கள். (3) ரூ. | 1-12-1969 முதல் அமைக்கப்பட்டச் சம்பள வீதங்கள். (4) ரூ. |
| --- | --- | --- | --- |
| 184 | கூர்கா காவற்காரன் (O.S.S.) (வெளியூர்) (W.C.). | | |
| 185 | துப்புரவு மேலாள் .. .. .. | | |
| 186 | இளநிலை பணியாள் (விசையேற்ற நிலையம்) .. | | |
| 187 | சுழல் ஏற்ற மின் பொறி இயக்குபவர் (Wintermate) | | |
| 188 | நீரேற்று நிலையப் பணியாள் .. .. | | |
| 189 | எண்ணெய் பூசுபவர் .. .. .. | | |
| 190 | சுத்தம் செய்பவர், தரம் I .. .. | | |
| 191 | சுற்றூழியர், தலைவன், தரம் I (Lascar) .. | | |
| 192 | உதவியாள் .. .. .. .. | | |
| 193 | சுழல்தட்டு யந்திரம் சுத்தம் செய்பவர் (Turbine Cleaner) | 64-2-80 | 84-4-120-5-150 |
| 194 | கொதிகல நிலைய பணியாள் .. .. | | |
| 195 | பண்டக உதவியாள் சிற்றூழியர், தரம் I .. | | |
| 196 | ஓய்வு இல்லம் பணியாள் .. .. .. | | |
| 197 | கருவிக் காப்பாளர், தரம் II .. .. | | |
| 198 | குழாய் பொருத்துபவர் .. .. .. | | |
| 199 | மேட்டி-காவலாள் (O.S.S.) .. .. | | |
| 200 | மின்நிலையத் தொழில் நுட்ப வேலைக்காரர் (Groundsman). | | |
| 201 | மின்நிலைய மேற்பார்வையாளர், தரம் II (W.C.) | | |
| 202 | சாலை உருளையந்திரம் சுத்தம் செய்பவர் .. | | |
| 203 | பொருத்துபவர், தரம் V (பணிக்களரிகள்) .. | | |
| 204 | இயந்திரத்தை இயக்குபவர், தரம் IV (பணிக்களரிகள்). | | |
| 205 | கருமார், தரம் V (பணிக்களரிகள்) .. .. | 64-2-80 | 84-4-120-5-105 |
| 206 | கருமார், (பணிக்களரிகள்) .. .. | | |
| 207 | மஸ்தூர் (பணிக்களரிகள்) .. .. .. | | |
| 208 | வரை படம் தயாரிப்பவர், தரம் II .. | 55-1½-70 | 80-4-120-5-145 |
| 209 | முறைக் காய்ச்சல் தடுப்பு மஸ்தூர் (Anti-Malaria Mazdoor) | | |
| 210 | பொருத்துபவர் மஸ்தூர் .. .. .. | | |
| 211 | நிலக்கரி மஸ்தூர் .. .. .. | | |
| 212 | மின்நிலைய தொழில் நுட்ப வேலைக்காரர் .. | | |
| 213 | பண்டக உதவியாளர் .. .. | | |
| 214 | ஆய்வுக்கூட உதவியாளர் (O.S.S.) & (W.C.) .. | 55-1½-70 | 65-3-95-4-115-5-125 |
| 215 | மஸ்தூர் .. .. .. .. | | |
| 216 | காவலாள் .. .. .. .. | | |
| 217 | தோட்டக்காரர் .. .. .. .. | | |
| 218 | பெருக்குபவர் .. .. .. .. | | |
| 219 | துப்புரவுப் பணியாளர் .. | | |
| 220 | தொலைபேசி அலுவலகச் சிற்றூள் .. .. | | |
| 221 | சுத்தம் செய்பவர், தரம் II .. .. | | |
| 222 | சிற்றூழியர், தரம் II (O.S.S.) & (W.C.) .. | | |
| 223 | செவிலிப் பணியாளர் (Nursing Orderly) .. | | |
| 224 | குற்றேவலர் (Menial) .. .. .. | | |
| 225 | மேட்டி காவலாள் (W.C.) .. .. | | |
| | நிர்வாகம் | | |
| 226 | நேர்முக உதவியாளர் .. .. .. | 375-20-475 | 400-25-525-30-645-35-750 (தற்போது பதவியிலிருப்பவர்களது குறைந்த அளவுச் சம்பளம் ரூ. 450). |
| 227 | முதுநிலை கண்காணிப்பாளர் .. .. | 240-10-330 | 300-20-380-25-505-30-655 |
| 228 | தலைமை பண்டகக் காப்பாளர்கள் இருப்பு சரிபார்ப்பவர். | 190-7½-250 | 250-16-330-18-420-20-500 |
| 229 | காசாளர் ஆய்வாளர் .. .. .. | „ | „ |

| தொடர் எண். | பதவிப் பெயர். | 30-11-1969 வரை சம்பள வீதங்கள். | 1-12-1969 முதல் அமைக்கப்பட்ட சம்பள வீதங்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | ரூ. | ரூ. |
| 230 | கணக்காளர்/இளநிலைக் கண்காணிப்பாளர் .. | 190-7½-250 | 250-16-330-18-420-20-500 (கணக்காளர்களின் 15 சதவீத பதவிகள் ரூ. 300-20-380-25 505-30-655 (சிறப்புத் தரத்தில் இருக்கும்.) |
| 231 | பண்டகக் காப்பாளர், தரம் I .. .. | 135-6-195 | 160-12-280-15-355 |
| 232 | காசாளர், உதவி ஆய்வாளர் .. .. | 125-6-185 | ,, |
| 233 | உதவியாளர் .. .. .. | ,, | ,, |
| 234 | பண்டகக் காப்பாளர், தரம் II .. .. | 100-5-150 | 140-7-210-8-250 |
| 235 | இளநிலை உதவியாளர் .. .. .. | 90-5-140 (பட்டதாரிகளுக்கு ரூ. 105-லிருந்து தொடங்கும்.) | 126-8-150-10 250 (பட்டதாரிகளுக்கு ரூ. 150-லிருந்து தொடங்கும்). |
| 236 | தட்டச்சர் (தகுதியுடையவர்)/தமிழ் தட்டச்சர் .. | ,, (தட்டச்சுச் சிறப்புச் சம்பளமும் சேர்ந்து.) | ,, (தட்டச்சு சிறப்புச் சம்பளமும் சேர்ந்து.) |
| | குறிப்பு.—முழுத் தகுதி பெறாத தட்டச்சர் மின்வாரியம் ஏற்றுள்ள தமிழ்நாடு சார்நிலைப் பணிப் பொது விதிகள் கீழ் முழுத் தகுதி பெற்றவர்களும் இளநிலைத் தட்டச்சு தேர்வு பெற்றிருப்பவர்களுமான தட்டச்சர்கள். | ரூ. 90 | ,, |
| | மின்வாரியம் ஏற்றுள்ள தமிழ்நாடு சார்நிலைப் பணிப் பொது விதிகளின் கீழ் தகுதி பெறாதவர்களும் VI-ம் பாரமும், அது வரையிலும் தேர்வு எழுதி தட்டச்சில் உயர்தரத் தேர்வில் | 90-5-115 | ,, |



| தொடர் எண். | பதவிப் பெயர். | 30-11-1969 வரை சம்பள வீதங்கள். | 1-12-1969 முதல் அமைக்கப்பட்ட சம்பள வீதங்கள். |
|---|---|---|---|
| | தேறியவர்கள் என்று பள்ளி இறுதிச் சான்றிதழ் காட்டப்பட்டிருப்பவர்களுமான தட்டச்சர்கள். | | |
| 237 | சுருக்கெழுத்து தட்டச்சர் .. .. .. | 90-5-140 (பட்டதாரிகளுக்கு ரூ. 105-லிருந்து தொடங்கும். இத்துடன் சுருக்கெழுத்துச் சிறப்புச் சம்பளமும் உண்டு.) | 126-8-150-10-250 (பட்டதாரிகளுக்கு ரூ. 150-லிருந்து தொடங்கும். இத்துடன் சுருக்கெழுத்துச் சிறப்புச் சம்பளமும் உண்டு. |
| 238 | காசாளர்கள் .. .. .. .. | 90-5-140 | 126-8-150-10-250 |
| 239 | சிற்றெழுத்தர் .. .. .. .. | 64-2-80 | 84-4-120-5-150 |
| 240 | தஃபேதார் .. .. .. .. | 60-1½-75 | 70-3-100-4-120 5-3-130 |
| 241 | கடைநிலை ஊழியர் .. .. .. | 55-1½-70 | 65-3-95-4-115 5-125 |
| | வாரியச் செயலகமும் கணக்குகள் பிரிவும் | | |
| 242 | கண்காணிப்பாளர் .. .. .. | 250-25-500 | 325-25-525-645-35-750 |
| 243 | கணக்காளர் (திடீர்ச் சோதனைப் பிரிவு) .. | 190-7½-250 | 250-16-330-18-420-20-500 |
| 244 | உதவியாளர்/உதவியாளர் சுருக்கெழுத்து தட்டச்சர். | 140-10-240 | 178-12 286-15 376 |
| 245 | இளநிலை உதவியாளர் .. .. .. | 90-5-140 (பட்டதாரிகளுக்கு ரூ. 105-லிருந்து தொடங்கும்). | 126-8-150-10-250 (பட்டதாரிகளுக்கு ரூ. 150-லிருந்து தொடங்கும்). |
| 246 | தட்டச்சர் (தகுதி பெற்றவர்) .. .. | 90-5-140 (பட்டதாரிகளுக்கு ரூ. 105-லிருந்து தொடங்கப்படும். தட்டெழுத்துச் சிறப்புச் சம்பளமும் இத்துடன் சேரும்.) | 126-8-150-10-250 (பட்டதாரிகளுக்கு ரூ. 150-லிருந்து தொடங்கப்படும். இத்துடன் தட்டெழுத்துச் சிறப்புச் சம்பளமும் சேரும்). |
| | குறிப்பு.—முழுத்தகுதி பெறாத தட்டச்சர்கள் மின்வாரியம் ஏற்றுள்ள சார்நிலைப் பணிப் பொதுவிதிகளின்கீழ் முழுத் தகுதி பெற்றவர்களும், இளநிலைத் தட்டச்சுத் தேர்ச்சி பெற்றவர்களுமான தட்டச்சர்கள். | ரூ. 90 | 126-8-150-10-250 (இத்துடன் தட்டச்சுச் சிறப்புச் சம்பளமும் உண்டு). |

| தொடர் எண்) | பதவிப் பெயர். (2) | 30—11—1969 வரை சம்பள வீதங்கள். (3) | 1—12—1969 முதல் அமைக்கப்பட்டச் சம்பள வீதங்கள். (4) |
|---|---|---|---|
| 6 | பண்டகக் கண்காணிப்பாளர் | 800-25-500 | 400-25-525-30-645-35-750 |
| 7 | துணைத் தலைமைக் கணக்கர் .. .. | 300-25-500 | 400-25-525-30-645-35-750 |
| 8 | தலைமைக் கணக்கர்/உதவி கணக்கு அதிகாரி (கணக்குகள் பிரிவு). | 450-30-750 | 500-30-800-40-960 |
| 9 | கணக்குகள் அதிகாரி (கணக்குகள் பிரிவு, கணக்குகள் அதிகாரி உள்பட). | 6,00-40-8,40 | 700-50-1,100 |
| 10 | கணக்குகள் தணிக்கைத் தலைமை அதிகாரி .. | 1,000-50-1300 | 1,300-60-1,600 |
| 11 | நேர்முக அலுவலர் .. .. .. | 450-30-750 | 500-30-800-40-960 |
| 12 | வாரிய உதவிச் செயலாளர் .. .. | 550-40-750-50-800 | 650-50-1000 |
| 13 | இரசாயன வல்லுநர் .. .. | 375-25-650 | 450-30-750-40-950 |
| 14 | முதுநிலை இரசாயன வல்லுநர் .. | | |
| 15 | தலைமை இரசாயன வல்லுநர் .. .. | 600-40-1,000 | 700-40-1,100-50-1,250 |

## தமிழ் நாடு சட்டப் பேரவை

### செவ்வாய்க்கிழமை, 1971 டிசம்பர் 14

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### சென்னை மாநகருக்குக் குடிநீர்

*344 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னைக்கு காவிரி குடிநீர் கொண்டு வரும் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டு வரும் திட்டம் 1974-ஆம் ஆண்டு இடையில் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. என் கிட்டப்பா**: தலைவர் அவர்களே, தற்போது சென்னை நகரில் உள்ளவர்களுக்கு ஒரு நாளைக்கு எவ்வளவு தண்ணீர் கிடைக்கிறது என்பதையும், காவிரி குடிநீர் திட்டம் நிறைவேற்றப்படும் போது எவ்வளவு தண்ணீர் கிடைக்க இருக்கிறது என்பதையும் அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: இப்பொழுது சென்னை நகரத்தில் உள்ளவர்களுக்காகக் கிட்டத்தட்ட மூன்று கோடி காலன் தண்ணீர் ஒரு நாளைக்கு கிடைத்துக் கொண்டிருக்கிறது. திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு எவ்வளவு கிடைக்கும் என்பதை இப்பொழுது அறுதியிட்டுக் கூறுவதற்கான விவரங்கள் என்னிடத்தில் இல்லை.

**திரு கா. காளிமுத்து**: வீராணம் திட்டத்திற்கு மத்திய அரசின் காரணமாக இடையில் ஏதேனும் முட்டுக்கட்டை ஏற்பட்டதா? திட்டச் செலவு மதிப்பீடு இடையில் மாற்றியமைக்கப்பட்டதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: செலவு மதிப்பீடு எதுவும் இப்பொழுது மாற்றியமைக்கப்படவில்லை. ஆனால், மத்திய அரசாங்கத்திடமிருந்து அன்னியச் செலாவணி வழங்குவதில் ஏற்பட்ட காலதாமதத்தினால் ஏற்கெனவே பல கட்டங்களில் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த அந்த வேலை சற்றுத் தாமதப்பட்டது.

**திரு. எம். தேவராசன் :** காவிரியுடன் கங்கையை இணைக்கும் திட்டம் ஏதாவது உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்படியொரு யோசனை இருக்கிறது. அது விரைவில் திட்டம் ஆவதற்கான நடவடிக்கைகள் நடைபெறும் என்று நம்புகின்றோம்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவர் அவர்களே, காவிரி ஆற்றின் தண்ணீரைக் கொண்டுவருவதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கும்போது, கிருஷ்ணாவிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் திட்டம் கைவிடப்பட்டதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கிருஷ்ணா தண்ணீர் பற்றி மற்றொரு கேள்வி இருக்கிறது. அந்தக் கேள்வியிலே பதிலளிக்கலாம் என்று கருதுகிறேன். இருந்தாலும், காவிரிக்காக கிருஷ்ணா கைவிடப்படவில்லை.

**திரு. கு. காமாட்சி :** சென்னைக்குக் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்படுவது போல, தமிழகமெங்குமுள்ள கிராமங்களுக்கு நல்ல குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்தும் முறை அரசிடம் இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதற்காகவே குடிநீர் வாரியம் ஒன்று அமைக்கப்பட்டிருப்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும் என்று கருதுகிறேன்.

* 345 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Chief Minister be pleased to state the steps taken by the Government to augment the drinking water supply in the City of **Madras?**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** காவிரி ஆற்றுப்பாசனப் பகுதியின் கடைக்கோடியிலுள்ள வீராணம் ஏரியிலிருந்து நீரைப் பெற்று, நாளொன்றுக்கு 4 கோடி காலன் தூய நீர் வழங்குவதன் மூலம் மாநகருக்கு நீர் வழங்குதலை மேம்படுத்தும் திட்டத்துக்கு ரூ. 21.3 கோடி மதிப்பீட்டுச் செலவுக்கும், அதனைப் பெறுவதற்காக ஆண்டொன்றுக்கு ரூ. 35.00 லட்சம் செலவுக்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

மேற்சொன்ன திட்டத்திற்குக் கூடுதலாக, ஏற்கெனவே கிடைக்கும் நீர்வளத்தைப் பாதுகாக்கவும், ஏற்கெனவே நீரைத் தேக்கிவைப்பதற்குள்ள தேக்கும் கொள்திறன் அளவை உயர்த்தவும், குடத்தலையாற்றுப் பள்ளத்தாக்கில் ஊற்றுநீரை எடுக்கவும், கீழ்க்கண்ட குறுகியகாலச் செயற்குறிப்புகள் அரசாலும் சென்னை மாநகராட்சியாலும் மேற்கொள்ளப்படுகின்றன :

1. பூண்டியிலிருந்து தாமரைப்பாக்கத்திற்கும் அங்கிருந்து புழலேரிக்கும் திறந்த தாரைப்பூச்சுக் கால்வாய் ஒன்றை அமைத்தல் ;

2. சோழவரம், புழலேரி ஆகிய ஏரிகளின் கரைகளை உயர்த்துதல்;





3. நீரைத் தேக்குவதற்காக சோழவரம், புழலேரி ஆகிய ஏரிகளைச் சேர்ந்த அயக்கட்டு நிலங்களைக் கையகப்படுத்துதல்.

* 346 வினா—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆந்திரத்தில் உள்ள சோமசீலா அணைத்திட்டம் முடிந்தவுடன், அதிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டு வரும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) &(இ) கிருஷ்ணா—கோதாவரி பாசன ஆணைக்குழு அளித்த தீர்ப்பின்படி சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குவதற்காக 1,500 கோடி கன அடி நீர் தமிழ்நாடு அரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 500 கோடி கன அடி நீரை சோமசீலா நீர்த்தேக்கத்திலிருந்து தர ஆந்திர மாநில அரசும் ஒப்புக்கொண்டுள்ளது. சோமசீலா திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டவுடன் இதுபற்றி ஆந்திர மாநில அரசுடன் தொடர்பு மேற்கொள்ளப்படும்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, இப்பொழுது வீராணம் ஏரிக்குக் காவிரி நீர் வருகிறது. காவிரி நீர் குறித்து நமக்கும் மைசூருக்கும் உள்ள தகராறின் காரணமாக அதனுடைய நீர் வரத்து குறையக்கூடுமோ என்று சந்தேகிக்கத்தக்க அளவில் இருப்பதால், சோமசீலா திட்டத்தின் மூலம் இன்னும் அதிகமான அளவில் தண்ணீரைப் பெறுவதற்கு அதற்கு வேண்டிய திட்டங்களை மத்திய அரசையும் ஆந்திர அரசையும் நாடிப் பெற நம்முடைய அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** வீராணம் தண்ணீர் சென்னைக்கு வருவதைப் பற்றிச் சந்தேகப்படத் தேவை இல்லை. இப்பொழுது மைசூருக்கும் நமக்கும் ஏற்பட்டிருக்கிற நதி நீர்ப் பிரச்சினைக்கும் இந்த வீராணம் தண்ணீரைச் சென்னைக்குப் பெறுவதற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதைப்போல, வீராணத் திட்டம் மூலம் வரும் தண்ணீர் மாத்திரம் போதாது. மேலும் சென்னைக்குத் தண்ணீர் வேண்டும் என்ற அடிப்படையில் கிருஷ்ணா—கோதாவரித் தண்ணீரை சென்னைக்கு நாம் பெற வேண்டியவர்களாகவும் இருக்கிறோம். ஆந்திர அரசு 500 கோடி கன அடி நீரை சோமசீலா நீர்த்தேக்கத்திலிருந்து தர ஒப்புதல் அளித்திருக்கிறது. சோமசீலா திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அவர்களுக்குப் பல இடையூறுகள் ஏற்பட்டுவிட்டன. குறிப்பாக, நிலங்களை அர்ஜிதம் செய்வதிலே பல இடையூறுகள் இருக்கின்றன. அந்தத் திட்டத்தை அவர்கள் நிறைவேற்றத் தொடங்கிவிட்டால் நாம் அவர்களோடு தொடர்பு கொண்டு நமக்குத் தேவையான தண்ணீரைப் பெற இயலும்.

[1971 டிசம்பர் 14

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** இந்த சோமசிலா திட்டத்திலிருந்து நமக்குத் தண்ணீர் கொடுப்பதற்கு ஆந்திர அரசு ஒப்புக் கொண்டாலுங்கூட, அதற்காகச் செலவாகின்றதில் ஒரு தொகையை தமிழ் நாடு அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஏதாகிலும் கேட்டிருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அவர்கள் அப்படிச் சொல்லவில்லை. ஆனால், முன்னால் ஆந்திராவினுடைய முதலமைச்சரிடத்தில் பேசுகிற நேரத்தில் அதுபோன்ற ஒரு கருத்தை அவர்கள் சாதாரணமாக வெளியிட்டார்களே அல்லாமல், வலியுறுத்தி ஒன்றும் எடுத்துச் சொல்லவில்லை. சோமசிலா நீர்த்தேக்கம் அங்கு தோன்றப்பெற்றதால் நாம் தண்ணீர் பெறுவதற்கு வழி இருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சோமசிலா நீர்த்தேக்கத்திற்கு ஆகக்கூடிய பரிபூரணச் செலவைக் கூட தமிழக அரசு ஏற்றுக் கொண்டால் அதிகமாகத் தண்ணீர் கொடுக்கவேண்டும் என்று சில நாட்களுக்கு முன்பு அமைச்சர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அத்துடன், கிருஷ்ணாவிலிருந்து வேறு முறையிலும் தண்ணீர் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய நம்முடைய அரசு ஆந்திர அரசோடு கலந்து யோசிக்குமா

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அம்மையார் அவர்கள் கேட்ட கேள்வியையொட்டி பதிலளிக்கின்றேன். அந்த சோமசிலா நீர்த்தேக்கம் கட்டுவதற்கு நாம் பங்குத் தொகை செலுத்திவிடலாம். சோமசிலா திட்டத்திலிருந்து நாம் தண்ணீர் எடுத்துக் கொள்வதற்கு அந்தத் திட்டத்திலே செலவாகின்ற பகுதிகளுக்காக நாம் ஓரளவுக்கு அந்தப் பணத்தைத் தரவேண்டியவர்களாக இருக்கிறோம். அதை நாம் மறுக்கவில்லை. அவைகளைப்பற்றியெல்லாம் இப்போதே நாம் உறுதியாக எதுவும் கணக்கிட்டுச் சொல்வதற்கில்லை. அந்தத் திட்டத்திற்கு என்ன செலவு ஆகிறது என்பதைப் போன்ற விவரங்களையெல்லாம் அவர்கள் அளித்த பிறகுதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் விளக்கமாகப் பதில் அளிக்க முடியும்.

தமிழ்நாடு அரசுச் செய்திப்படங்கள்

* 347 வினா.—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசின் சாதனைகளை விளக்கும் செய்திப் படங்களைக் கிராமப்புறங்களில் காட்டுவதற்குத் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஏற்கெனவே திட்டம் நடைமுறையில் உள்ளது.



1971 டிசம்பர் 14]

**திரு. கா. காளிமுத்து:** தலைவரவர்களே, செய்திப் படங்களை மட்டுமல்லாமல் தமிழக மக்களின் வாழ்க்கை இயல், பண்பாடு, வரலாற்றுச் சிறப்பு ஆகிய இவைகளை விளக்கும் வண்ணப்படங்களையும் அரசு தயாரிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அவைகளைத் தயாரிப்பதில் எந்தவிதமான தடையுமில்லை. இப்பொழுதே உலகத் தமிழ் மாநாட்டுப் படம் ஒன்றைப் பார்த்தே நம்முடைய தமிழகத்தின் வரலாறு, இலக்கியம், காவியம் இவைகளை மக்கள் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப்படம் பழமையானபிறகு புதியதொரு முயற்சியை மேற்கொள்ளலாம்.

**திரு. கோவை செழியன்:** பேரவைத் தலைவரவர்களே, தமிழக அரசு வெளியிடும் செய்திப்படங்களைத் திரையிட மறுக்கும் தியேட்டர்களுக்கு லைசென்ஸை மறுக்க இந்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அப்படியொன்றும் எந்தத் தியேட்டர்காரர்களும் அந்தப் படங்களை வெளியிட மறுத்ததாக என்னிடத்தில் தகவல் இல்லை.

**திரு. கா. வேழவேந்தன்:** தலைவரவர்களே, இப்பொழுது மாவட்டங்களில் இதுமாதிரி செய்திப்படங்கள் காட்டப்படுகின்றன என்று முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் எல்லா யூனியன்களிலும் அவ்வளவு விரிவாகக் காட்டப்படவில்லை. ஆகவே எல்லா ஒன்றியங்களிலும் விழாக்கள் நடைபெறும் பொழுதாவது இவைகளைக் காட்ட வேண்டிய வசதிகளையும், மின்சாரத்தால் ஏற்படும் விபத்துக்கள் மற்றும் குடும்ப நலத் திட்டத்தைப் பற்றியும், நவீன விவசாயப் பண்ணை பற்றிய திட்டங்கள் ஆகியவைகளையும் இம்மாதிரி விழாக்கள் நடைபெறும் நேரங்களிலும், அமைச்சர்கள் பங்கேற்கும் நேரத்தில் விழாக்களின் பின்னால் காட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்பொழுது மக்கள் தொடர்பு அதிகாரிகளின் மூலம் மாவட்டத்தின் தலைநகரங்களிலும், பேரூர்களிலும், சிற்றூர்களிலும் இப்படிப்பட்ட செய்திப்படங்கள் காட்டப்படுகின்றன. மேலும் அமைச்சர்கள் பங்குபெறும் நிகழ்ச்சிகள் மட்டுமல்லாமல், பொதுவாக மக்கள் எங்கெங்கு கூடுகிறார்களோ அப்படிப்பட்ட இடங்களிலும் இந்தப் படங்கள் வெளியிடப்படுவதால் மக்களை அழைத்து அவர்களுக்கு அரசின் சாதனைகளை விளக்கும் வகையிலே மக்களுக்கும் அரசுக்கும் ஏற்பட வேண்டிய தொடர்புகளைக் கொண்டிருக்கிறது. இந்தத் தொடர்புகளை வெளியிடும் பொறுப்பை மக்கள் தொடர்பு அதிகாரிகள், மண்டல அதிகாரிகள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். மேலும் அதை விரிவாக்க மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி பயன்படும் என்று கருதுகிறேன்.

[1971 டிசம்பர் 14

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இந்த டாகுமெண்டரி பிலிம்கள் எத்தனை தயாரிக்கிறார்கள், ஒரு ரிலீசிலே எத்தனை தயாரிக்கிறார்கள்? நம்முடைய தமிழகம் பூராவிலும் ரிலீஸ் செய்ய நிறைய வேண்டுமென்று கோரிக்கை வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எத்தனை தயாரிக்கிறார்கள் என்னும் விபரம் என்னிடத்தில் இல்லை. கோரிக்கைகள் வருகின்றன, அவைகள் முடிந்தவரையிலும் நிறைவேற்றப் படுகின்றன.

* 348 வினா.—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

தமிழ்நாடு அரசு செய்திப் பிரிவினால் எடுக்கப்படும் செய்திப் படம், தமிழ்நாட்டிலுள்ள எல்லாத் தியேட்டர்களிலும் காட்டப் படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆம்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இந்தச் செய்திப் படங்கள் நகரங்களில்தான் எடுத்த ஒரு வாரத்திற்குள் காட்டப்படுகின்றன. ஆனால் கிராமங்களுக்கு வருவதற்கு 6 அல்லது 7 மாத காலம் ஆகின்றது. எனவே கிராமப்புற மக்கள் செய்திகளை உடனடியாகத் தெரிந்துகொள்ள குறுகிய காலத்தில் ஏறத்தாழ ஒரு மாத காலத்திற்குள் எல்லாக் கிராமங்களிலும் காட்ட ஏற்பாடுகளை அரசு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஏறத்தாழ இரண்டாயிரம் தியேட்டர்கள் தமிழ்நாட்டில் இருப்பதாக நான் அறிகிறேன். நாம் எடுக்கும் இந்தப் படங்களின் பிரதிகள் 50 அல்லது 55 பிரதிகள்தான். இது மட்டுமல்ல பொதுவாகவே திரைப்படங்கள்-முழு நீளத் திரைப்படங்கள் எடுப்பவர்கள் கூட 40 அல்லது 50 பிரதிகள்தான் எடுக்கிறார்கள். அவர்களும் அந்தப் படங்களைத் தமிழகம் முழுவதும் எல்லாயிடங்களிலும் திரையிட 6 மாத காலம் ஆகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது போல் சென்னையிலே மட்டுமல்லாமல், சென்னையிலே பத்து இடங்களிலே காட்டப்படுகின்ற அதேநேரத்தில் தமிழ்நாட்டிலே பல்வேறு கிராமங்களிலும் அப்படிப்பட்ட படங்கள் காட்டப்படுகின்றன. எனவே ஒரு வட்டம் வருவதற்கு, 1,360 தியேட்டர்களில் இந்த 55 பிரதிகளைக் கொண்டு காட்டுவதற்கு 6 மாத காலமாகிறது. அதைத் தவிர்க்க வேண்டுமென்றால் நாமும் 1,000 பிரதிகள் எடுக்க வேண்டும். அதற்காகும் செலவு மிக அதிகமாகும்.



1971 டிசம்பர் 14]

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, அரசியல் இயக்கங்கள், இன்னும் மாநாடுகள், தொழிற்சங்க மாநாடுகள் போன்றவைகள் இந்தச் செய்திப்படங்களில் அரசு எடுப்பதற்கு அனுமதிக்குமா? அப்படிப்பட்ட செய்திப்படங்களை வெளியிடுவது நாட்டிற்கு நல்லதுதானே என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: குறிப்பிட்ட அரசியல் கட்சிகளின் எந்த மாநாடும் எடுக்கப்படுவதில்லை. ஆனால் அரசியல் தலைவர்கள் எவரிடத்திலும் எந்தவிதமான கட்சி மாறுபாடும் இல்லாத அளவிற்கு அவர்களுக்கு நடைபெறும் விழாக்கள், அவர்கள் பொதுவாகக் கலந்துகொள்ளும் பொது நிகழ்ச்சிகளை, எந்தப் பாகுபாடும் காட்டாமல் எல்லா அரசியல் தலைவர்களையும் [illegible] வெளியிடப் ஒரேவகையில் இந்த அரசு தரும் செய்திப்பட[illegible] படுகின்றன.

திரு. இ. எஸ். தியாகராசன்: தலைவரவர்களே, இந்தப் படங்களை விநியோகிக்க தனிப்பிரிவு ஏதேனும் அமைக்கப் படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது இந்தப் பிரதிகளையெல்லாம் மத்திய அரசின் பிலிம் டிவிஷன் மூலமாகத்தான் விநியோகிக்கிறோம். அதிலே சில இடர்ப்பாடுகள் இருக்கின்றன. [illegible]டை மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய [illegible] தமிழ்நாட்டில் ஏற்கனவேயிருக்கும் அந்தக் குறைபாடுகளை [illegible] தமிழ்நாடு திரைப்படப் பிரிவு தயாரிக்கும் செய்திப்படங்களைத் தமிழ்நாடு அரசே விநியோகிக்கலாமா என்ற யோசனை இப்பொழுது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, நம்முடைய தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட படங்களுக்கு மக்களிடத்திலே நல்ல வரவேற்பு இருக்கிறது. இதை இன்னும் விரிவுபடுத்தி, கிராமங்களில் நடைபெறும் கிராமிய நடனங்கள், ஸ்போர்ட்ஸ் போன்ற இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளையும் அதிலே சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுதே அதிலே ஸ்போர்ட்ஸ் போன்றவைகள் சேர்க்கப்படுகின்றன, கிராமிய நடனங்கள் இவைகளெல்லாம் இணைக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் எல்லாப் படங்களையும் பார்க்கவில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா 349.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இவ்வினாக்கள் எல்லாவற்றையும் ஒன்றாக எடுத்துக் கொண்டிருக்கலாம்போல் இருக்கிறதே.

*349. வினா—திரு. என். கிட்டப்பா : முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசின் செய்திப்படங்களைத் தயாரிப்பதற்கென்று அரசுத் துறையில் ஒரு ஸ்டுடியோ அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அரசின் செய்திப் படங்களையும் விளக்கப் படங்களையும் தயாரிப்பதற்கென்று அரசுக்குச் சொந்தமான திரைப்படக் கூடமொன்று பொது (செய்தி—விளம்பரத்) துறையின் கீழ் ஏற்கனவே உள்ளது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, தமிழக அரசு ஸ்டுடியோ அமைக்க போட்டிருக்கும் முதலீட்டையும், அதில் பணியாற்றும் தொழிலாளர்கள் எவ்வளவு என்பதையும் அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்பொழுது அவைகளை அறிவிக்க இயலாது. மாண்புமிகு உறுப்பினரும் அவைகளைப் பற்றி அவ்வளவு அவசரமாக அறிய வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் அதை விற்பதாக இல்லை.

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவரவர்களே, அரசுக்குச் சொந்தமான இந்த ஸ்டுடியோக்களில் தனிப்பட்ட பட முதலாளிகள் படம் எடுக்க அனுமதிக்கப்படுகின்றார்களா? அப்படி அனுமதிக்கப்பட்டால் அதற்கான ரேட் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அனுமதிக்கப்படுகிறார்கள். பல படங்கள் அதிலே எடுக்கப்பட்டு அந்த ஸ்டுடியோவின் ராசியின் காரணமாக வெற்றிகரமாக ஓடியிருக்கின்றன என்பதைப் பட முதலாளியாகிய மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குக் கூறிக் கொள்கிறேன். இப்பொழுது அங்கு பெரிய ஃப்ளோர், சிறிய ஃப்ளோர் என்று இரண்டு இருக்கின்றன. சிறிய ஃப்ளோர் மாணவர்களின் பயிற்சிக்கு மட்டும் பயன்படுத்தப்படுகிறது. பெரிய ஃப்ளோர் வாடகைக்கு விடப்படுகிறது. ஒரு மணி நேரத்திற்கு மற்ற ஸ்டுடியோக்களை விட குறைந்த வாடகையாக, 50 ரூபாய் தான்.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, தமிழக அரசு செய்தித்துறை நீலகிரி போன்ற எழில் கொஞ்சும் பகுதிகளைப் படமாக்கி நம் நாட்டிற்கும் வெளிநாட்டவர்களுக்கும் காட்ட ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** உதகை போன்ற குளிர்ச்சி மிகுந்த, வளம் மிகுந்த இடங்களைப் படமாக்கி அதை மற்றவர்களெல்லாம் பார்க்கிறார்கள், அங்கேயிருக்கும் மாண்புமிகு உறுப்பினரைத் தவிர.



**திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, அரசின் சார்பாக இங்கே அமைக்கப்பட்டிருக்கும் திரைப்பட நிலையத்தைப்போன்று வேறு மாநிலங்களில் அரசின் சார்பாக திரைப்படக் கூடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** வேறு இடங்களில் மாநில அளவிலே இருப்பதாக எனக்குத் தகவல் இல்லை. ஆனால் பூனாவில் மத்திய அரசாங்கத்தின் சார்பில் ஒரு ஸ்டுடியோ இருப்பதாக அறிகிறேன்.

## கிருஷ்ணராயபுரம் உயர்நிலைப்பள்ளிக்கு அறிவியல் ஆய்வுக்கூடம்

*350 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் உயர்நிலைப்பள்ளியில் அறிவியல் ஆய்வுக்கூடம் ஏற்படுத்த வேண்டும் என அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(ஆ) கல்வி ஆண்டு 1971-72-ல் இப்பள்ளியில் அறிவியல் ஆய்வுக்கூடம் ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, இந்த ஆய்வுக்கூடத்திற்கு அரசாங்கம் எவ்வளவு தொகை ஒதுக்கியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இதற்காக கட்டடத்திற்காக 25,000 ரூபாயும், அறிவியல் கருவிகளுக்காக 15,000 ரூபாயும் ஆக 40,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

## பொன்னேரி கலைக்கல்லூரியில் பட்ட மேம்படிப்புத் துவக்கம்

*351. வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொன்னேரி கலைக்கல்லூரியில் எம்.ஏ., எம்.எஸ்சி., பட்ட வகுப்புகளைத் தொடங்க செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பொன்னேரிக் கல்லூரியில் பட்ட மேற்படிப்புப் பயிற்சிக்கு வசதி செய்வதற்கான செயற்குறிப்பு இப்போது இல்லை.

## ராவ்பகதூர் சுந்தரம்பிள்ளைக்கு நினைவுச்சின்னம்

*352. வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை இயற்றிய ராவ் பகதூர் சுந்தரம் பிள்ளைக்கு நினைவுச் சின்னம் எழுப்பும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) அம்மாதிரியான கருத்து ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## இராசசிங்கமங்கலம் கண்மாய் குறுக்கே பாலம்

*353. வினா—திரு. வீ. மலைக்கண்ணன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், இளையான்குடி தொகுதியில் உள்ள இராசசிங்கமங்கலம் கண்மாய்க்குக் குறுக்கே பாலம் அமைத்து, செங்குடி என்ற கிராமத்தை இராசசிங்கமங்கலம் சாலையோடு இணைக்க வேண்டுமென்று ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

## நிலுவையான ஊராட்சி மன்ற வரிகள்

*354. வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நிலுவையில் உள்ள ஊராட்சி மன்ற வரிகளை வசூலிக்கும் புதிய திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. கா. வேழவேந்தன்: ஊராட்சி மன்றங்களுக்குக் கிராமங்களில் இருந்து கட்ட வேண்டிய வரிப்பணம் வந்தால்தான் நடைமுறை வேலைகளைச் செய்ய முடியும். என்ன காரணத்தாலோ கிராமாதிகாரிகள் கடந்த காலங்களில் வரி வசூல் செய்வதைத் தாமதப்படுத்தினார்கள். அதன் காரணமாக பல கிராமங்களில்



மின்சார விளக்குகள் எரிக்கப்படாமல் இருட்டான நிலைமை இருக்கிறது. இதைத் தடுக்கும் முறையில் அரசாங்கத்தில் ஏதேனும் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இப்பொழுது இந்த வரிகளை வசூல் செய்யும் பொறுப்பு வருவாய்த் துறையின் சார்பாக கட்டாயம் வசூல் செய்ய வேண்டுமென்று கூறப்பட்டு விட்டு நடவடிக்கை எடுக்க புதிய திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. வரி வசூலிக்கும் பட்டாமணியம் போன்றோர் கவனிக்க வேண்டுமென்று இருக்கிறது. அந்தப் பொறுப்பை வேறு யாரிடத்தில் ஒப்படைத்தால் சரியாக நடைபெறும் என்று பார்த்து அவர்களைக் கொண்டு வசூலிக்க தீவிரமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## சிங்காநல்லூர் நகராட்சியில் சொத்து வரி.

*355. வினா—திரு. ஏ. சுப்பிரமணியம்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் நகராட்சியில் சொத்து வரி விதிப்பு சம்பந்தமாக நகராட்சி மன்றத்திலிருந்து அரசுக்கு கோரிக்கை மனு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது?

(உ) கோரிக்கை மனுவின் பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) & (உ) அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: இந்த மனு வந்து வெகு நாட்களாயிற்று. இந்த வரிப் பிரச்சினை சம்பந்தமாக நகர மன்றத்தின் கோரிக்கை மீது முடிவு செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிற காரணத்தால் லட்சக்கணக்கான வரிப்பணம் வசூலாகாமல் நிலுவையாக இருக்கின்றது. பின்னர் அதற்காக அந்த நகராட்சி மன்றத்தின் மீதே குற்றச்சாட்டாக வரக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே பரிசீலனையை அரசு விரைவில் முடித்து கோரிக்கையை ஏற்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் முடிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுபற்றிய முடிவை விரைவில் எடுக்க எல்லாவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

*Strike in Bharat Heavy Electricals at Tiruverambur.*

*356. Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether there was strike in Bharat Heavy Electricals at Tiruverambur on 30th July 1971 and subsequent days;

(b) if so, the reasons therefor; and

(c) whether settlement has been reached on the issues raised and subsequent action of the Management?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) ஆம்.

(இ) திருச்சிராப்பள்ளி பாரத் ஹெவி எலெக்டிரிகல்ஸ் தொழிலாளர் முன்னேற்ற சங்கமும், திருச்சிராப்பள்ளி பாரத் ஹெவி எலெக்டிரிகல்ஸ் தொழிலாளர் சங்கமும், 1970-71 கணக்கு ஆண்டிற்கு தொழிலாளர்களின் மொத்த ஊதியத்தில் 40 சதவிகிதம் பூரிப்பூதியமாக வழங்கப்படவேண்டுமென்று கோரினர். நிர்வாகத்தினர் 20 சதவிகிதம் பூரிப்பூதியம் வழங்கப்படும் என்று அறிவித்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து, மேற்சொன்ன தொழிலாளர் சங்கங்கள் இரண்டையும் சேர்ந்த தொழிலாளர்கள், 29—7—71, 30—7—71, 31—7—71 ஆகிய நாட்களில் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தனர்.

(உ) இது குறித்து 5—8—71 அன்று சமரசப் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது; இப்பேச்சு வார்த்தைகளில் நிர்வாகத்தின் பிரதிநிதிகளும், தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளும் பங்கு கொண்டனர். இப்பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து தொழிலாளர் நல ஆணையாளர் தகவல் ஒன்றை நிர்வாகத்தினருக்கு அனுப்பினார். அதன்கண், தொழிலாளர்களுக்கு ஏற்கனவே வழங்கப்படும் பண்டிகை முன்பணத் தொகை ரூ. 100-ஐ கூடுதலாக்கித் தருமாறும், இத்தொகையை திருப்பிச் செலுத்தும் முறையையும் கால அளவையும் பின்னர் விவாதித்து முடிவு செய்வதற்கு விட்டுவிடுமாறும் நிர்வாகத்தினருக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** திருவெறும்பூரில் இருக்கக்கூடிய பி.எச்.இ. தொழிற்சாலையில் ஆறாயிரம் தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். சென்ற ஆண்டு 3½ கோடி ரூபாய் லாபம் கிடைத்தபோது 20 சதவிகிதம் போனஸ் தரப்பட்டது. இப்போது ஐந்து கோடி ரூபாய் லாபம் கிடைத்த போதும் அதே தொகை கொடுக்கப்பட்டதை எதிர்த்து தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு முன்பணமாக 100 ரூபாய் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். இப்போது அந்த 100 ரூபாய் திரும்பப் பிடித்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதை போனஸாகக் கருதி அவர்களுக்குக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தொழிற்சாலைகளில் ...ழிற்சங்கத் தலைவர்களும், நிர்வாகிகளும் சேர்ந்து முடிவுக்கு ...த ஒப்பந்தங்களை முறைப்படி பின்பற்றினால்தான் ஒப்பந்தங் ...ருக்கு மரியாதையும், நம்பிக்கையும் ஏற்படும். பாரத் ஹெவி ...லெக்ட்ரிகல் கம்பெனி தொழிலாளர்களுக்கு 100 ரூபாய் அதிக ...க அட்வான்சாகத் தரப்பட வேண்டுமென்று தொழிற்சங்கத் ...ல் கேட்கப்பட்டது. அப்படி அட்வான்சாகத் தரப்பட்ட ...ாகையை இப்போது பிடித்துக் கொள்ளுகிறார்கள். எனவே ...தை போனஸாகக் கருத இடமில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தொழிலாளர்கள் மீது ...வடிக்கை எடுக்கப்படமாட்டாது என்று வாக்குறுதி கொடுத்த ...ன்னர் ஒரு குறிப்பிட்ட சங்கத்தைச் சேர்ந்த 23 தொழிலாளர் ...ருக்கு சார்ஜ் ஷீட். வேலை நிறுத்தம் செய்தார்கள் என்ற ...ரணத்தைக் காட்டி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ...தைத் தடுத்து நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இந்த அரசு, தொழி...ளர்கள் தவறு செய்து, அதைத் தொடர்ந்து வேலை நிறுத்தம் ...ய்தவர்கள் மீது பின்னர் முதலாளிகள் ஏதாவது நடவடிக்கை ...த்தால் கூட இறுதியாக நடவடிக்கையைக் கைவிடுமாறு ...ல்லி வருகிறோம். அந்த வகையில் பெரும்பாலும் நடவடிக்கை ...து செய்யப்பட்டு வருகிறது. இத் தொழிலாளர் நிலை பற்றியும் ...சு பரிசீலனை செய்யும்.

*Prosperity Brigade*

*357 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the ...nister for Labour be pleased to state—

(a) whether any official of the Central Government visited ...is State to study the Prosperity Brigade and its work about the August 1971; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) ஆம்.

(இ) தமிழகத்தில் இயங்கிவரும் சீரணித் திட்டத்தைப் ...றியும் அதன் செயல் முறைகளைப் பற்றியும் நேரில் பார்த்து ...ிந்துகொள்ள மத்திய அரசிலிருந்து பொருளாதாரத் தொடர்பு ...க்குநர் டாக்டர் பால் செனாத்தி அவர்கள் 4—8—1971 அன்று ...ன்னைக்கு வருகை தந்தார்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** சென்னைக்கு வந்த மத்திய ...திகாரியை மாவட்ட வாரியாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு ...ழைத்துச் சென்று சீரணி ஆலயமாகத் தமிழகம் எங்கும் செய்யப் ...ட்ட வேலைகளைக் காட்டி தமிழகத்தில் சீரணி வேலைகள் எந்த

அளவுக்குத் திறமையாக நடைபெற்று வருகிறது என்பதை மத்திய அரசுக்கு எடுத்துக்காட்டி மத்திய அரசிலிருந்து அதிகமாக நிதியை ஒதுக்க வழி செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** சேனைத் தனி அதிகாரி, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் மத்திய அரசு பொருளாதாரத் தொடர்பு இயக்குநர் அவர்களை அழைத்துச் சென்று சென்னையில் சேனைத் தொண்டர்கள் செய்துள்ள திட்டங்களைக் காட்டியிருக்கிறார்கள். சேனை அங்கத்தினர்கள், ஆயிரம் விளக்குப் பகுதியில் செய்த துப்புரவுப் பணியையும் காட்டியிருக்கிறார்கள். கோயம்பேடு பகுதிகளில் சேனைத் தொண்டர்களின் அடையாறு கரையில் செய்த [illegible] பணியை [illegible] பகுதிகளில் சேனைத் தொண்டர்கள் செய்த பணிகளைக் காண்பதற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு சேனைத் திட்டத்தைப் பற்றி நன் கருத்தைப் பார்வையாளர்கள் புத்தகத்தில் அந்த அதிகாரி எழுதியிருக்கிறார். அதன் பின்னர் பெயரளவில் [illegible] சேனைத் தனி அதிகாரி ஆகியோரிடம் சேனைத் திட்டத்தைப் பற்றிய விளக்கங்களைப் பெற்று இந்தச் சேனைத் திட்டத்தை மற்ற மாநிலங்களுக்கும் பரிந்துரைப்பதாகக் கூறிச் சென்றுள்ளார் மத்திய அதிகாரி அவர்கள்.

திரு. தொ. ப. சீனிவாசன் : நாட்டின் இன்றைய நிலையை முன்னிட்டு தமிழகம் முழுவதும் சேனைத் தொண்டர்களுக்குத் துப்பாக்கிப் பயிற்சி அளிக்கும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** கனம் உறுப்பினர் அவர்களே. இந்தக் கேள்வியைப் பற்றி ஏற்கனவே பதில் கூறப்பட்டிருக்கிறது. அவசியமானால் இந்த அரசு இதைப் பற்றிப் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMY : Sir, now the prosperity brigade work is going on. The Panchayat Union Councils or the public will have to pay two-thirds of the contribution. Now so many works are pending because the contribution from the Panchayat Union Council or from the public is not forthcoming. Will the Government consider and introduce 50/50 per cent contribution from the prosperity brigade side or from the Panchayat Union Council side or from the public side?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவித்த இந்தக் கருத்தை, நிதிநிலையில் வசதி ஏற்பட்ட பிறகு பரிசீலனை செய்யலாம்.

திரு. இ. எஸ். தியாகராசன் : இந்த ஆண்டு சேனைத் திட்டத்திற்கு செங்கற்பட்டு மாவட்டத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தனியாகக் கேள்வி போட்டால் விவரம் தெரிவிக்க இயலும்.



**திரு. ரா. ரா. முனுசாமி :** மத்திய அதிகாரி அவர்கள் தமிழகத்திற்கு வந்து சென்னையைப் பொறுத்தமட்டில் சேனையின் பணிகளை அறியும் வகையில் சுற்றிப் பார்த்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இங்கு நடைபெற்ற வேலைகளைப் பாராட்டிச் சொன்னதோடு கூட, இந்த மாதிரி தமிழகத்தில் அதிக வேலைகள் நடைபெற இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி அதிகமான நிதியை மத்திய அரசிலிருந்து பெறுவதற்கு நம்முடைய அரசு முற்படுமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** நிதியை ஒதுக்க வேண்டிய பொறுப்பிலுள்ளவர்களே இதற்குத் தாமதம் காட்டும் போது அங்கிருந்து வந்த தனி அதிகாரியிடத்தில் நிதியைக் கேட்பது முறையாகாது. சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லி இருக்கிறோம்; தொடர்ந்து சொல்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## *Repatriates.*

* 358. *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether a number of new concessions have been granted to repatriates from Ceylon and Burma about August 1971; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) & (இ) 1971, ஆகஸ்டு திங்கள் அளவில், புதிய சலுகைகள் எவையும் வழங்கப்படவில்லை. எனினும், வீட்டு மனைகள் வாங்குவதற்குரிய விற்பனைப் பத்திரங்களுக்கு முத்திரைத்தாள் தீர்வைச் செலுத்தப்படுவதிலிருந்து அரசு விலக்கு அளித்துள்ளது. இத்துடன், வர்த்தகக் கடன்களையும் வீட்டு வசதிக் கடன்களையும் திருப்பிச் செலுத்துவதற்கான கால அளவையும் நீட்டித்துள்ளது.

**திரு. எம் சுரேந்திரன் :** இதுபோன்று இலங்கையிலிருந்தும் முற்பகல் 9-30
மற்ற இடங்களிலிருந்தும் வருகிற அகதிகளுக்கு அதிகபட்சமாக எவ்வளவு தொகை தனியாகத் தரப்படுகிறது? ஆதலால் கடனாகவும் தரப்படுகிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அதற்குரிய முன் தகவல் இல்லை. கேள்வி இந்த ஆண்டு இந்த மாதம் என்ன சலுகைகள் தரப்பட்டன என்பதுதான். என்னென்ன சலுகைகள் இந்த அகதிகளுக்குத் தரப்படுகின்றன என்றளவில் கேள்வி போட்டால் முழு விவரங்களும் அளிக்க முடியும்.

* 359. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அருள்கூர்ந்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1971 செப்டம்பர் மாதம் முடிய இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு வந்து சேர்ந்த அகதிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :

| | |
|---|---|
| ஒப்பந்தத்தின்படி வந்தவர்கள் | 43,830 |
| ஒப்பந்தத்தின்படி அடங்காதவர்கள் | 14,728 |
| மொத்தம் இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு வந்து சேர்ந்த அகதிகள். | 58,558 |

*Pre-school children in Dharmapuri district*

* 360. Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether there is any proposal to feed pre-school children with the aid of UNICEF or Central Government in the Dharmapuri district; and

(b) if so, when it will be implemented?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) 'யூனிசெப்' நிறுவன உதவியுடன் சத்து உணவு வழங்கு திட்டம் எதுவும் தற்போது அரசாங்கத்தின் இல்லை எனினும், சில பாலர் பள்ளிகளில் மகளிர் பாலர்களுக்கான செயல்முறை சத்து உணவுத் திட்டம், இந்திய அரசின் ஒருங்கிணைந்த திட்டத்தின்படி செயல் படுத்தப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில், தருமபுரி மாவட்டம் பென்னாகரம், காவேரிப்பட்டணம் ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள் உட்பட தேர்ந்தெடுக்கப்பட்ட 28 வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

THIRU B. VENKATASWAMY : Sir, as the entire Dharmapuri district especially Hosur and Denkanikottah taluks are backward areas, may I know whether the Hon. Minister will introduce such a scheme at least in Hosur and Denkanikottah taluks ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதுபோன்ற திட்டங்கள் பென்னாகரம், காவேரிப்பட்டணம், பிறகு கிருஷ்ணகிரி ஆகிய வட்டங்களில்தான் மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டின்படி செயமுறைத் திட்டமும், சத்துணவுத் திட்டமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் அத்திட்டம் இதுவரையில் போதுதாலாம். மேலும், குழந்தைகளுக்காக அத்திட்டத்தை நீட்டிக்கும் திட்டம் என்பதை ஒரு சிறப்புத் திட்டமாக தனியாக சத்துணவுத் மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் குடிசைவாழ் குழந்தைகளுக்கும் பாலர் குழந்தைகளுக்கும் தரப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் இப்போது தர்மபுரிக்கு நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

*Office building for Social Welfare Board.*

* 361 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether the State Social Welfare Board has made any request to the Government for grant of money for constructing an office building; and

(b) if so, the details thereof?



மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. என் டென்னிஸ் : இதுபோன்ற பொது நிறுவனங்களுக்கு இத்தகைய காரியங்களுக்காக நிதி வழங்க அரசாங்கம் திட்டம் ஏதாவது வகுத்துள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கோவையில் நடை பெற்ற மாநாட்டின்போது மாநில சமூக நல வாரியத்தின் தலைவர் அவர்கள் இப்படி ஒரு கட்டடம் நிறுவுவதற்கு அரசு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். எந்த அளவிற்கான கட்டடத்திற்கு கேட்டிருக் போகிறார்கள் என்ற செயற்குறிப்பு அனுப்பாமல் கேட்டிருக் கிறார்கள். அவர்கள் அனுப்பிய பிறகு அதுபற்றி பரிசீலனை செய்து கட்டடத்திற்கான ஏற்பாட்டைச் செய்யலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த சோஷியல் வெல்பேர் போர்டு ஆபீஸ் மிகவும் நெருக்கடியான இடத்தில் இருக்கிற படியால் கட்டடம் கட்டுவதற்கு தற்போது பணம் கொடுத்து உதவுவதற்கு இயலாவிட்டாலும் அரசாங்க அலுவலகங்கள் இருக்கிற கட்டடத்தில் ஒரு பகுதியையாவது ஒதுக்கிக் கொடுப்பார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அவசியம் என்று கருதினால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கலாம்.

வெல்லம் முதலியவை விற்க உரிமம்

* 362 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வெல்லம், கண்டசாரி சர்க்கரை இவைகள் விற்பதற்கு லைசென்ஸ் தேவை இல்லையென அரசு ஆணை பிறப்பித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தமிழ்நாட்டின் தேவையை விட அதிகமான அளவில் வெல்லம் இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது என்ற அளவில் அதை வெளி மாநிலங்களுக்கு அனுப்பக்கூடிய செயல்முறைகள் ஏதாவது எடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தமிழ்நாட்டிலிருந்து வெளிமாநிலங்களுக்கு வெல்லம் அனுப்பப்படுவது உண்மைதான். அதிகமாக உற்பத்தியாகியிருக்கிறது என்று சொல்வதற்கில்லை.

திரு. த. சோனையா : வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அரசாங்கத்திற்கு வியாபாரிகளிடமிருந்து ஏதாவது விணப்பங்கள் வந்துள்ளனவா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

அரூர் வட்டத்திலுள்ள கிராமங்களின் பெயர்கள்

*363 வினா—டாக்டர் ச. அ. சின்னராசு: மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரூர் வட்டத்திலுள்ள சக்கிலிப்பட்டி, பறையப்பட்டி போன்று சாதியின் பெயரால் உள்ள கிராமங்களின் பெயர்களை மாற்றி புதிய பெயர்கள் வைக்கும் அரசின் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தற்போது இல்லை.

டாக்டர் ச. அ. சின்னராசு: சாதிபேதமற்ற சமதர்ம சமுதாயத்தை நிறுவ முன்வந்துள்ள நம் அரசு கேட்பதற்கே அருவருப்பாக உள்ள சாதியின் அடிப்படையில் பெயர்களை உள்ள ஊர்களின் பெயர்களை மாற்றியமைக்க இனியாவது இவ்வரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அந்தப் பகுதி மக்கள் விரும்புவார்களேயானால் அரசாங்கம் பரிசீலித்து முடிவு செய்யும்.

*Bifurcation of major districts.*

*364 Q.—THIRU T. GANAPATHY: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether there is a proposal with the Government to bifurcate the major districts into small ones; and

(b) whether there is any proposal with the Government to enlarge the size of Kanyakumari district?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) இல்லை.

*Drought relief schemes in Kanyakumari district.*

*365 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether it is a fact that an I.A.S. Officer was sent to Kanyakumari district to enquire into the alleged malpractices in the Famine Relief Fund recently; and

(b) if so, the details thereof and the result of the enquiry and the action taken thereon to punish the offenders?

THE HON. THIRU P. U. SHANMUGAM: (a) Yes.

A Member of the Board of Revenue enquired into certain allegations of irregularities in the implementation of the drought relief schemes in the district.

(b) The Board Member after the enquiry concluded that the allegations were not sustainable. However he noticed certain procedural deficiencies in the implementation of the drought relief schemes in the district. The Collector of Kanyakumari and the Chief Engineer (Highways and Rural Works) were requested to rectify these defects. The Collector has reported that action has been taken to rectify the defects. The Chief Engineer (Highways and Rural Works) has reported that the defects noticed at the time of preparation of estimates were rectified during execution. Their reports are under consideration.



DR. H. V. HANDE: Sir, may I know the amount allotted for drought relief for the Kanyakumari district and whether the entire amount was spent and whether any amount was spent under different heads? Also, arising out of the answer given by the Hon. Minister, what are the procedural defects that have been noticed and what action has been taken on that?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டது என்ற புள்ளி விவரம் என்னிடம் இல்லை. ஆனால் ப்ரோஸீஜரல் இர்ரெகுலாரிட்டீஸ் என்ற விதத்தில். போர்ட் மெம்பர் சென்று பார்த்து விட்டு வந்தார்கள். வேறு எந்தவிதமான தவறும் நடக்கவில்லை என்று போர்ட் மெம்பர் எழுதியிருக்கிறார். மாவட்ட ஆட்சி மன்றத் தலைவரும் அதை ஊர்ஜிதம் செய்திருக்கிறார்கள். இது தவிர வேறு விவரம் இல்லை.

DR. H. V. HANDE: May I know by what method this was brought to the attention of the Government and whether it was done through a complaint by a private individual?

THE HON. THIRU P. U. SHANMUGHAM: On the report of the Director of Vigilance and Anti-Corruption.

DR. H. V. HANDE: May I know whether the Vigilance Commissioner himself came to the conclusion that a *prima facie* case has been made out or the Department itself was satisfied that there was a *prima facie case*?

THE HON. THIRU P. U. SHANMUGHAM: The Director of Vigilanec has not enquired into the matter. He has sent it to the Collector and the Collector has forwarded it to the Government and the Government nominated one member of the Board to enquire into it.

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்தப் புகாரில் அன்றிருந்த கலெக்டரும் உட்பட்டவரா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU P. U. SHANMUGHAM: Sorry, no, Sir.

DR. H. V. HANDE: The Hon. Minister has stated that the report is under the consideration of the Government. When was the report sent to the Government and when the Government are likely to take action on that?

THE HON. THIRU P. U. SHANMUGHAM: The Chief Engineer (Highways and Rural Works) in his letter, dated 4th August 1971 reported that the Superintending Engineer (Highways and Rural Works), Tirunelveli, inspected 15 works under overhead

tanks, pipe lines, extensions and ground level reservoirs of Nagercoil, Thackalay and Kuzhithurai subdivisions. It is reported that no major irregularities were noticed by the Superintending Engineer (Highways and Rural Works) both during inspection and perusal of records.

## அமெரிக்காவிலிருந்து கோதுமை அன்பளிப்பு

* 366 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் சர்வோதய இயக்கத்தினருக்கு அமெரிக்காவிலிருந்து கோதுமை நன்கொடையாகத் தரப்படுகிறதா ?

(இ) ஆம் எனில், அக்கோதுமை எந்த அடிப்படையில் விநியோகிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) இனம், சாதி, கட்சி என்ற வேறுபாடு கருதாமல் ஏழைகளுக்கும் தேவையுள்ளோர்க்கும் சர்வோதய இயக்கத்தினரால் கோதுமை விநியோகிக்கப்படுகிறது.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவர் அவர்களே, அமெரிக்காவிலிருந்து வருகிற கோதுமையை பெறுவதால், அமெரிக்காவுக்கு வால் பிடிக்கிறார்கள் சர்வோதயக்காரர்கள் என்று சில பத்திரிகைக்காரர்கள் எழுதுகிறார்கள் அல்லவா ? ஆகவே, அந்த டொனேஷனை ஏற்றுக்கொள்ளாமல், மறுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது எப்போதிருந்தோ வருகிறது. இப்போது தான் அமெரிக்க அரசாங்கத்திற்கும், இந்திய அரசாங்கத்திற்கும் கருத்து வேறுபாடு இருக்கிறது. சர்வோதயத்திற்கும் அரசாங்கத்திற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. கு. காமாட்சி : தலைவர் அவர்களே, எல்லா வகைகளிலும் அமெரிக்கா தன்னுடைய உதவியை ரத்து செய்து விட்டதாகத் தெரிகிறது. அதிலே இந்த உதவி அடங்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

## டால்மியாபுரத்திலுள்ள அரசு சிமிட்டி தொழிற்சாலை

* 367 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

டால்மியாபுரத்தில் உள்ள தமிழ்நாடு அரசு சிமெண்ட் தொழிற்சாலையை மூடும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?





மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை. முதுவத்தூரிலுள்ள முன்னோடி சிமெண்ட் தொழிற்சாலையை குறைந்த அளவு பணியாளர்களுடன் ஒரு செய்முறை பகுதியாக நடத்துவது என தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் செயற்குறிப்பை அரசு அண்மையில் ஏற்றுக்கொண்டது.

## கைத்தறி நெசவாளர்களுக்குக் கூலி நிர்ணயம்

* 368 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கைத்தறி நெசவாளர்களுக்குக் கூலி நிர்ணயம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, மற்ற இலாகா தொழிலாளர்களுக்கு அப்படிப்பட்ட ஒரு பாதுகாப்பு, சலுகை அளிக்கப்பட்டு இருக்கிறபோது நெசவுத் தொழிலாளர்கள், மிகவும் பின் தங்கியவர்கள், சமுதாயத்தில் மிகவும் வறுமையில் வாடுபவர்கள். அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க அப்படிப்பட்ட சட்டங்கள் கொண்டு வர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தப் பிரச்னை ஆல் இந்தியா ஹேண்ட்லூம் போர்டால் விவாதிக்கப்பட்டது. இந்தத் தொழில் பெரும்பாலும் வீட்டளவில் தொழிலாக இருப்பதால், அது தேவை இல்லை என்று முடிவு எடுத்து ஆலோசனை கூறியுள்ளார்கள்.

திரு. எ. க. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நெசவு தொழிலாளர்களுக்கு கூலியை நிர்ணயம் செய்வதில் ஏற்படும் சிக்கல்களுக்குக் காரணம், நாட்டில் இருக்கும் நெசவாளர்கள் ஒன்று சேர்ந்து கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்காதது தான் என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்த நெசவாளர்களை ஒன்று சேர்த்து, கூட்டுறவு நெசவாளர்கள் சங்கங்கள் ஏற்படுத்தி, அதன் மூலம் உற்பத்தியைப் பெருக்கி, அவர்களுக்கு நிரந்தரமான வகையில் கூலி நிர்ணயம் செய்ய அரசாங்கம் முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது நெசவாளர்களுக்கு விடப்படும் வேண்டுகோள்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : தலைவரவர்களே, சமீபத்தில் நெசவாளர்கள் கூலி உயர்வு கேட்டு போராட்டங்கள் நடத்தி, கூட்டுறவுச் சங்கங்களில் இருப்பவர்களுக்கு கூலி உயர்வு கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். அந்தக் கூலி உயர்வை எந்தக் கூட்டுறவுச் சொசைட்டியிலும் கொடுக்கவில்லை. அதைக் கொடுப்பதற்கு அரசாங்கம் சீக்கிரத்தில் உத்தரவு பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் ஆங்காங்கே இருக்கும் அரசாங்க அதிகாரிகள் நிர்ணயம் செய்கிறார்கள்.

ஆனால் தனியாரிடத்தில் வேலை செய்யும் நெசவாளர்களைப் பொறுத்த வரையில், மாவட்ட ஆட்சியாளருக்கும், மாஸ்டர் வீவர் தொழிலாளர்களுக்கும் ஏற்படும் ஒப்பந்தம் அப்போதைக்கப்போது ஆங்காங்கு முடிவு எடுக்கப்படுகிறது.

**திரு. அ. தியாகராசன் :** தலைவரவர்களே, தற்போது ஏற்பட்டு இருக்கிற யுத்த நிலைமை காரணத்தால் கைத்தறி துணிகளுக்கு விலை குறைந்து இருக்கிறது. அதைத் தடுக்க அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது நெசவாளர்கள் கூலி பற்றிய கேள்வி.

THIRU K. M. SUBRAMANIAM : In view of the importance of this subject and in view of the fact that the wages of handloom weavers have gone up by only 100 per cent during the last 20 years from Rs. 48 to Rs. 96 according to the data available, will this **Government take into consideration the question of fixing minimum** wages for handloom weavers in this State at least? Without that I think the whole industry will collapse.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான் ஏற்கெனவே பதில் சொன்னேன். இது அகில இந்திய லெவலில் தான் போடப்பட்டு அகில இந்திய அளவில் பரிசீலிக்கப்பட்டது. வேண்டாம் என்று முடிவு செய்து இருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இதைத் தனியாக மாநாடு கூட்டி யோசிக்கலாம் என்று சிந்தித்து வருகிறார்கள்.

**திரு. மு. நல்லசாமி :** தலைவரவர்களே, தமிழ்நாடு கூட்டுறவு சொசைடியின் அதிகாரம் பிராந்தங்களை தமிழ்நாடு பூராவும், கரூர் போன்ற கணிசமான கைத்தறி நெசவுத் தொழில் இருக்கிற பகுதியில், திறக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாநில கூட்டுறவுச் சங்கம் எங்கெங்கே வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றனவோ அங்கே எல்லாம் திறக்கப்படுகிறது.

**திருமதி. த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, நெசவுத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறதே, அதற்குக் காரணம் என்ன? கூட்டுறவுச் சங்கங்களை அதிகப்படுத்துவதற்குக் கூலி உயர்வு கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா ?



**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, எண்ணிக்கை அதிகமாகத்தான் இருக்கிறது. ஆனால் செயல்படுகிற கூட்டுறவுச் சங்கங்களுடைய எண்ணிக்கை குறைந்து வருகிறது. அப்போதைக்கப்போது மாவட்ட அளவிலே நம்முடைய மாநில கூட்டுறவுச் சங்கமும் இவைகளை உற்பத்தி செய்கிறது. துணிகளை ஏராளமாக வாங்கி ஊக்கம் தருகிற முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். இப்போது இது நல்ல நிலையில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. சொ. காவேரிமணியம் :** பேரவைத் தலைவரவர்களே, நெசவாளர்கள் இன்டஸ்டிரியல் டிஸ்பியூட் ஆக்டின்படி தொழிலாளர்களாக கருதப்படாமல் இருக்கிறார்கள். இதைப் போக்குவதற்கு அரசு ஏதாவது முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதைப்பற்றி ஆராய நம்முடைய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் நம்முடைய மாநில அளவில் மாநாடு எடுக்கலாம் என்று யோசனை செய்து பரிசீலித்து வருகிறார்கள்.

DR. H. V. HANDE : In view of the fact that sales of handloom products have increased in the last three years, may I know whether it would be possible that this extra turnover is distributed to a certain extent to the labourers? Especially in view of the fact that in a house, the labourer (handloom weaver) alone does not work but his wife and children also work and since it works out to not even 1 per cent, will this Government think of appointing a small committee to see how best the excess turnover is distributed to the handloom workers at least at this State level?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாநில கூட்டுறவுச் சங்கம், கூட்டுறவு நெசவாளர் சங்கங்களிடமிருந்து வாங்குகிறார்கள். கூட்டுறவு நெசவாளர் சங்கங்களைப் பொறுத்தவரையில் அப்போதைக்கப்போது அங்கே உள்ள ஓர்க்கிங் ரிசல்ட்டின் அடிப்படையில், வைத்து, ஆங்காங்கு உள்ள உதவிப் பதிவாளர்கள், அந்தத் துறையினரால் அமர்த்தப்பட்டவர்கள், அதைப் பரிசீலித்து, எந்தெந்த கூட்டுறவுச் சங்கங்கள் எந்த மாதிரி உற்பத்தியை அதிகமாக்கி, லாபத்தை அதிகமாக்கி இருக்கிறார்களோ, அந்த அடிப்படையில் கூலியை நிர்ணயம் செய்கிறார்கள். சமீபத்தில் கூட காஞ்சிபுரத்தில் இப்படி ஒரு கூலி உயர்வு அந்த மாவட்ட டிபுடி ரிஜிஸ்டிரார் ஆப் கோவாபரேடிவ் சொசைடீஸ் அவர்களால் செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** தலைவரவர்களே, மாநில அளவில் எல்லா நெசவாளர்களையும் போர்டு அமைத்து, அவர்களுக்குக் கூலியை நிர்ணயித்து, அதைத் தொழில் அதிபர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற உத்தரவை அரசு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதைப்பற்றி பரிசீலிக்கத் தான் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மாநாடு கூட்ட யோசனை செய்து கொண்டிருக்கிறார் என்று மூன்றாம் முறையாகச் சொல்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், கைத்தறித் தொழில் பரம்பரையாக ஒரு சில சமுதாயத்தினரால் சொந்தமாக செய்து கொண்டு வருகிற ஒரு தொழில். இப்போது வேலை இல்லாதவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கும் நேரத்தில், வேலை செய்தவர்களுக்கு குறைந்த பட்சம் இவ்வளவு கூலி கொடுக்கப்படும் என்ற உறுதியாவது ஏற்படும்படி செய்வது ஒரு சாதாரண நியதியாகும். இந்த நெசவுத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச சம்பளம் நிர்ணயிக்க வேண்டுமென்று சொல்கிறோம். இந்தக் கோரிக்கையை அரசாங்கம் வருங்காலத்திலாவது பரிசீலித்து நம் மாநிலத்தில் செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** குறைந்த பட்ச சம்பளம் வேண்டுமென்பதற்கு ஆதாரமாக இது ஒரு விஷயம்.

## நூற்பு ஆலைகள்

* 369 **வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள நூற்பு ஆலைகளை அரசுடைமையாக்குவது அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, இந்த கூட்டுறவு ஆலைகளும் பொதுத்துறையைச் சார்ந்தவைகள்தானே. இந்தக் கூட்டுறவு ஆலைகள் தமிழகத்தில் மொத்தம் எத்தனை இருக்கின்றன ? எல்லாம் லாபகரமாக நடக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது நூற்பு ஆலைகளைப் பற்றிய பொதுவான கேள்வி. கூட்டுறவு நூற்பு ஆலைகளைப்பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, நூற்பு ஆலைகளை அரசுடைமை ஆக்குகிற எண்ணம் இல்லை என்று சொன்னார்கள். இருக்கின்ற ஆலைகள் ஒழுங்குற நடைபெறுகின்றனவா என்று கண்காணிப்பதற்கும், ஆலைகள் மூடப்படுவதற்கு முன்னாலே அரசு மேற்கொள்வதற்கும், அரசிடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஆலைகள் மூடப்படுவதற்கு முன்னாலே, அவை எப்போது மூடப்படும் என்று கணிக்க முடியாது. ஆனால் மூடப்பட்ட ஆலைகளை பரிசீலித்து, சிக் மில்ஸ், மூடப்படுகிற தருவாயில் இருக்கும் ஆலைகளை பரிசீலித்து, நாயுடு குழு அதற்கான சிபாரிசுகளை செய்து இருக்கிறார்கள்.



**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, கோவையில் மூடப்பட்ட ஆலைகள் அனைத்தையும் திறக்க என்ன நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுத்து இருக்கிறது ? எப்போது திறக்கப்படும் என்பதை அரசு அறிவிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நேற்று இந்தக் கேள்விக்குப் பதில் சொன்னதாக நினைக்கிறேன். 6 ஆலைகளை திறப்பதாக பரிசீலனை செய்தார்கள். அதிலே சில ஆலைகளைப்பற்றி நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருக்கிறது. சில ஆலைகளை திறக்க முடியாது என்ற நிலைமை இருக்கிறது. இரண்டு ஆலைகளை எடுத்து நடத்துவதற்கு நம்முடைய அரசாங்கம் முடிவு செய்து, மத்திய அரசுக்கு அதை எழுதிக் கேட்டு இருக்கிறோம்.

**திரு. க. துரைசாமி :** பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இப்போதைக்கு இல்லை என்று சொல்லிவிட்டார்கள். என்றாலும், நாம் இப்போது பஸ்களைத் தேசியமயமாக்கிக்கொண்டு வருகிறோம். இதனால் ஏற்படும் லாபம் அரசாங்கத்திற்கே வந்து சேருகிறது. ஆகவே, இந்த ஆலைகளையும் தேசியமயமாக்கும் திட்டத்தை இப்போதைக்கு இல்லையென்றாலும், இனிமேலாவது ஏற்று நடத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான் இப்போது அந்த ஜோஸ்யத்தில் இறங்கத் தயாராக இல்லை.

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு ஸ்பின்னிங் மில் ஏற்றுமதி செய்து ஏராளமாக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பொது நூற்பாலைகள் பற்றிய கேள்வி. கூட்டுறவு மில்கள் பற்றியதல்ல. கேள்வி அனுமதிக்கப்படவில்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, கமிட்டி சிபாரிசுகள் வந்திருக்கின்றன. மத்திய சர்க்காருக்கு கமிட்டியின் சிபாரிசுகள் வழங்கப்பட்டு 2½ மாதங்கள் ஆகின்றன. மத்திய சர்க்காருக்கு எழுதியிருப்பதாக அமைச்சர் சொன்னார். மத்திய சர்க்காரிடத்தில் பல விஷயங்களுக்கு, நேரில் சென்று உட்கார்ந்து, நகர்த்துவதைப் போல், கோவை தொழிலாளர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் முறையில், இந்த அரசு மத்திய சர்க்காரை நிர்ப்பந்தித்து, வெகு விரைவில் ஒரு முடிவு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதைப் பற்றி ஏற்கெனவே இந்த மன்றத்தில் பதில் சொல்லப்பட்டிருக்கிறது. நானும், முதலமைச்சரும் சம்பந்தப்பட்ட அமைச்சரைக் கண்டு, உடனடியாக உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டபோது அவர்கள் அன்றைக்கே மாலை மூன்று மணிக்குள் உத்தரவு வரும் என்று சொன்னார்கள். இப்பொழுதுதான் அதைப் பற்றி கமிட்டி போட

ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்கிற தகவல் கிடைத்திருக்கிறது. இப்பொழுது புதிய சட்டம் வந்திருக்கிற காரணத்தால், அந்தக் கமிட்டி தேவையில்லாமலே, நாங்களே எடுக்க அனுமதி தரவேண்டும் என்று மத்திய சர்க்காருக்கு எழுதியிருக்கிறோம்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, நூற்பாலைகளைத் தேசியமயமாக்குவது சம்பந்தமாக, தேசத்தில் நிதி வருவாய் உள்ள, வளர்ச்சியடைந்துள்ள தொழில்களைப் படிப்படியாகச் செய்ய இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறதா ? படிப்படி என்று சொல்லும்போது, வளர்ச்சியடைந்துள்ள நூற்பாலைகளும் வருகின்றன என்பதும் அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கொள்கைப் பிரச்சினைகள் பற்றி கேள்வி நேரத்தில் விவாதிக்கத் தயாரில்லை.

THIRU K. M. SUBRAMANIAM : Is there any proposal under this Government to appoint a technical expert—textile expert—to go into the question of the profitability or the workability of taking these closed mills and running by the Government?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மூடப்பட்ட ஆலைகளைப் பற்றி ஏற்கெனவே பதில் சொல்லப்பட்டிருக்கிறது. 5 ஆலைகளை எடுத்திருக்கிறோம். மேலும் சிலவற்றை எடுக்க மத்திய சர்க்காரிடம் அனுமதி கேட்டிருக்கிறோம். ஒரு எக்ஸ்பர்ட் கமிட்டி அமைக்கப்பட்டு, அவர்களும் யோசனைகள் தந்திருக்கிறார்கள். சிலவற்றை எடுக்கலாம் என்றும், வேறு சிலவற்றை எடுக்க வேண்டாம் என்றும் அவர்கள் சொல்லியிருப்பதாகத் தெரிகிறது. புதிதாக ஒரு குழு தேவையில்லை.

### மாடல் வார்ப்படத் தொழிற்சாலை

* 370 வினா—**திரு. மா. பா. சாரதி :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தற்போது எத்தனை மாடல் பவுண்டரிகள் உள்ளன ?

(இ) வேலூரிலுள்ள மாடல் பவுண்டரியில் சென்ற ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு என்ன ?

(உ) விற்பனை செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :**

(அ) நான்கு

(இ) 1970-71-ல் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு ரூ. 10,25,000 (ரூபாய் பத்து லட்சத்து இருபத்தைந்தாயிரம்)

(உ) விற்பனை செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு ரூ. 11,28,000 (ரூபாய் பதினொரு லட்சத்து இருபத்தெட்டாயிரம்)



### திருப்பூர் ஒன்றியத்தில் அரசு மேற்கொண்டுள்ள சாலைகள்

* 371 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1970-ம் ஆண்டில் திருப்பூர் ஊராட்சி ஒன்றிய, ஊராட்சி மன்ற சாலைகளில் அரசு எடுத்துக்கொண்ட சாலைகள் எத்தனை கிலோ மீட்டர் ?

(இ) அப்படி எடுக்கப்பட்ட சாலைகள் தார் ரோடாக மாற்றப்பட்டுள்ளனவா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :**

(அ) 21.2 கிலோ மீட்டர்

(இ) அரசு எடுத்துக்கொண்ட நான்கு சாலைகளில் இரண்டு சாலைகளின் சில பகுதிகள் தார் ரோடாக மாற்றப்பட்டுள்ளன.

### புத்தாம்பூர் குளம்

* 372 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கரூர் வட்டம், புத்தாம்பூர் குளத்தை புதுப்பிக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ரூ. 1,20 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையிலுள்ளது.

### வங்காரம் காட்டில் பாசன ஏரி

* 373 வினா—**திரு. செ. சதாசிவம் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம், அயன்தத்தனூர் பஞ்சாயத்திலுள்ள வங்காரம் பாதுகாக்கப்பட்ட காட்டில் ஆயக்கட்டு ஏரி அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசு செயற்குறிப்பில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது வேலை துவக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :**

(அ) இத் திட்டம் ஆய்வு நிலையில் உள்ளது.

(இ) வனத்துறையினரின் இசைவு பெற்று, மேற்பார்வைப் பொறியாளரின் ஒப்புதல் பெற்றபின், திட்டம் எடுத்துக் கொள்ளப்படும்.

## ஆனைவிழுந்தான் ஓடையில் அணை

* 374 வினா—திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல் வட்டம், கீழ்க்கோட்டை கிராமத்தில் ஆனை விழுந்தான் ஓடையில் அணை கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், திட்ட வேலை எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) மதுரை மாவட்டம், திண்டுக்கல் வட்டம் கீழ்க்கோட்டை கிராமத்தில் ஆனைவிழுந்தான் ஓடையின் குறுக்கே ஓர் அணை கட்ட ரூபாய் 99,000 மதிப்பீட்டுச் செலவில் ஒரு திட்டத்திற்கு 1969-ல் தலைமைப் பொறியாளரால் (பாசனம்) ஒப்புதல் அளிக்கப்பட்டது. அணைக்கட்டுப்பகுதி வேலையும் நான்கு கண்மாய்களுக்கான மராமத்து வேலையும் முடிந்துவிட்டன. தேவையான படுகை மட்டத்திற்கு வாய்க்காலும் வெட்டப்பட்டுள்ளது.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் : இந்த ஆனைவிழுந்தான் ஓடை அணையிலிருந்து வரும் தண்ணீர் தனிப்பட்டவர்களுடைய நிலத்தில் வருவதால், தண்ணீரை அவர்கள் தடுக்கிறார்கள். ஆகவே தனியார்களுடைய நிலங்களை நஷ்டஈடு கொடுத்து சர்க்காரே எடுத்துக் கொண்டு அந்த வழியை நல்லமுறையில் பயன்படுத்த முற்படுவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். சாதிக்பாட்சா : திட்டப்படி, தனியார்கள் தங்களுடைய இடங்கள் சம்பந்தமாக ஆட்சேபணை தெரிவித்திருக்கிறார்கள். நில ஆர்ஜிதச் சட்டத்தின் கீழ் அவற்றை ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## சரபங்கா ஆற்றின் குறுக்கே அணை

* 375 வினா—திரு. எம். பரமசிவம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சரபங்காநதி அணைக்கட்டு திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஓமலூர் தாலூக்கா பாலபாஹி கிராமத்தின் அருகே சரபங்கா ஆற்றின் குறுக்கே ஒரு நீர்த் தேக்கத் திட்டம் அமைப்பது பற்றி ஆய்வில் உள்ளது.





## *Farm Engineering Units.*

* 376. THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up Farm Engineering Units in this State; and

(*b*) if so, the details thereof?

THE HON. THIRU SI. PA. ADITANAR :

(*a*) Yes.

(*b*) The Central Government have proposed a scheme to afford employment opportunities to Engineers by commencing Agro-Service Centres in Block, District and State levels. Each Block-level Agro-service Centre will be entitled to a loan of Rs. 4 lakhs and an interest subsidy of Rs. 20,000. Each District Level Centre will be entitled to Central assistance of Rs. 2.89 lakhs and the State Level Centre will receive assistance of Rs. 5 lakhs. There will be no financial commitment to the State Government. We have undertaken to implement the Scheme in right earnest.

THIRU N. DENNIS : May I know from the Hon. Minister whether all the Units started functioning?

THE HON. THIRU SI. PA. ADITANAR : We are just commencing to implement the scheme.

## *Rigs.*

* 377 Q.—THIRU B. VENKATASAMY : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) whether there is any proposal to purchase rigs to dig bore wells in the State; and

(*b*) if so, when they will be purchased?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :

(அ) ஆம்.

(இ) நடப்பாண்டில்.

THIRU B. VENKATASWAMY : Sir, we are digging open wells through the Co-operative Societies which will take more time. May I request the Hon. Minister for Co-operation to introduce rigs by which we can dig a well within one or two days?

THE HON. THIRU SI. PA. ADITANAR : We have proposed to import 30 drilling rigs—Power drills—from the Soviet Union and to buy 10 such drills from the Heavy Engineering Corporation, Ranchi, which is a public sector Corporation.

THIRU K. NAGARAJAN : Mr. Speaker, Sir, I would like to know from the Hon. Minister whether preference will be given to the rigs manufactured at Coimbatore or indigenous rigs like that?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, the rigs manufactured in Ranchi are indigenous rigs. They are manufactured in our country. But I cannot say whether any preference will be given to the rigs manufactured in Coimbatore.

THIRU M. A. LATHEEF : Will the Hon. Minister be pleased to state whether the agricultural engineering workshop at Washermanpet at Madras manufactures power drills and if so, the number of drills manufactured last year and the number of specifications given to the said workshop to produce the power drills?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, the Engineering workshop at Washermanpet is being upgraded and is being equipped with better machinery so that it can itself produce these drilling rigs. Last year, there was a proposal to manufacture some drilling rigs at this engineering workshop, and they were able to produce a few. I am not able to say off-hand how many.

### நீலகிரியிலுள்ள பட்டு நூல் தொழிற்சாலை

*378 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கதர் கிராம கைத்தொழில் வாரியத்தின் மூலம் நீலகிரியில் நடைபெறுகின்ற பட்டுநூல் உற்பத்தி தொழிற்சாலையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

முற்பகல் 10-00 திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, இந்தப் பட்டு நூல் தொழிற்சாலையானது லாபத்தில் ஓடுகிறதா? அந்தப் பட்டு நூற் தொழிற்சாலையில் ஒரு ஆண்டுக்கு எவ்வளவு பட்டு உற்பத்தி ஆகிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இங்கே கேட்கப்பட்ட மூலக் கேள்வியானது, நீலகிரியில் கதர் கிராமக் கைத்தொழில் கூட்டுறவு கைத்தொழில் வாரியத்தில் நடைபெறுகின்ற இந்தப் பட்டு நூற்தொழிற் சாலையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசுக்கு இருக்கிறதா என்பதாகும். அதற்கு, இல்லை என்று பதில் சொன்னேன். அடுத்தாற்போல் உறுப்பினர் அவர்கள் இது லாபத்தில் ஓடுகிறதா, நஷ்டத்தில் ஓடுகிறதா என்று கேட்கிறார்கள். பதில், லாபத்தில் ஓடவில்லை, நஷ்டத்திலும் ஓடவில்லை. ஏனென்றால், அப்படி ஒரு தொழிற்சாலையே இல்லை.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் மசனகுட பகுதியில் பட்டு எடுக்கிறார்கள். அதற்கு எத்தனை ஏக்கரில் மல்பேரி பயிர் செய்யப்படுகிறது, எவ்வளவு பட்டு எடுக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இக்கேள்விக்கும் சம்பந்தமே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



### கூட்டுறவுச்சங்கங்களுக்கு தனி வாரியம்

* 379. வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுச் சங்கங்களில் அதிகமானவர்கள் பணிபுரிவதனால் அதனை தனி வாரியமாக அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

திரு. சு. துரைசாமி :. தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கங்களை தனி வாரியமாக அமைக்கும் உத்தேசம் இல்லை என்று அமைச்சர் பதில் சொன்னார்கள். கூட்டுறவுச் சங்கங்கள் ஏராளமாக இருப்பதால், அவற்றை ஒழுங்குபடுத்துவதற்காக, அவற்றை தனி வாரியமாக அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட எண்ணம் இல்லை. கூட்டுறவுச் சங்கங்களுக்கு தனி வாரியம் தேவையில்லை என்று கருதுகிறேன். காரணம், ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும், ஒவ்வொரு வாரியமாகவே செயல்படுகின்றது.

### பவானி கூட்டுறவு விற்பனைச் சங்கம்

* 380. வினா—திரு. ஈ. எம். நடராசன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், பவானி கோவாப்பரேடிவ் மார்க்கெட்டிங் சொசைட்டியின் நிர்வாக சபை எப்பொழுது ஏன் கலைக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கோவை மாவட்டம், பவானி கூட்டுறவு விற்பனைச் சங்கம் செயல்படுவதில் பல ஒழுங்கீனங்கள் காணப்பட்டதால் 5—10—1968 அன்று அதன் செயற்குழு கலைக்கப்பட்டது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, பவானி கூட்டுறவு விற்பனைச் சங்கம் செயல்படுவதில் பல ஒழுங்கீனங்கள் காணப்பட்டதால் அது கலைக்கப்பட்டது என்று குறிப்பிட்டார்கள். அந்தக் குழுவின் தலைவர் கையாடல் செய்ததாக பரவலாகப் பேசப்படுகிறது. அவர் பேரில் இது வரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? அந்தப் பணத்தை திருப்பிப் பெற அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, கலைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் மீதும், இன்னும் 9 பேர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சர்சார்ஜ் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் முடியவில்லை.

**திரு. சோ. கருணாநாதன் :** தலைவரவர்களே, தேர்ந்தெடுக்கப் பட்டப் பகுதிகளைப் பற்றி அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். மொத்தம் எத்தனை ஏக்கர் இந்தத் திட்டத்தில் அடங்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, ஒவ்வொரு ஆலைப் பகுதியிலும் 4,000 ஏக்கர் வீதத்தில் கரும்பு முனைப்புத் திட்டத்தின் கீழ் பயிராகும் மொத்தப் பரப்பளவு 32,000 ஏக்கராகும்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, இந்தத் தீவிர கரும்பு சாகுபடித் திட்டத்தின்கீழ் கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் பிற மாநிலங்களில் கரும்புக்கு அதிக விலை கொடுக்கப்படுகிறது. நமது மாநிலத்தில் பிற மாநிலங்களைவிட குறைவாகக் கொடுக்கப்படுகிறது. எனவே, நம் மாநிலத்திலும் கரும்பின் விலையை அதிகரிக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, இன்னும் அது பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை.

### நவ்லாக் வேளாண்மைப் பண்ணை

*385 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராணிப்பேட்டை அருகில் உள்ள நவ்லாக் விவசாயப் பண்ணையை விரிவுபடுத்தும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) ஆம்.

(இ) நவ்லாக் விவசாயப் பண்ணையில் முதன்மையான விதைகள் பயிரிட பண்ணையை விரிவு படுத்துவதற்காக மேலும் 524.16 ஏக்கரா நிலம் தமிழ் நாடு இயங்கா உடைமைகளைக் கேட்டுப் பெறுதல்—கையகப்படுத்தல் சட்டத்தின் கீழ் கைப்பற்றும்படி ஆணையிடப்பட்டுள்ளது.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவரவர்களே, அந்த இடம் ஒரு தனியாரிடம் இருப்பதால், அதைப் பெறுவதில் சிரமம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதுபோல் இன்னும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இருப்பதால், அவற்றை விவசாயத்திற்கு எடுத்துக் கொள்ளவும், நவ்லாக் விவசாயப் பண்ணையில் ஒரு ஆராய்ச்சிக் கல்லூரியை ஏற்படுத்தவும் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இன்னும் இடமே கையகப்படுத்தப்படவில்லை. அதற்குள் மற்றவர்களைப் பற்றிச் இப்போது சொல்வது அவசியமில்லாதது. இருந்தாலும் தனியாருக்குச் சொந்தமான நிலத்தை எடுத்துக்கொள்ள ஆணை பிறப்



பித்தபோது, அவர்கள் அதை எதிர்த்து வழக்குப் போட்டிருக்கிறார்கள். வழக்கில் இருந்தாலும் மீண்டும் அந்த நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு வருவாய் அதிகாரிக்கு தக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, நவ்லாக் விவசாயப் பண்ணையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு இருப்பதாகச் சொன்னார்கள். ஒரு காலத்திலே அந்த இடம் ஒன்பது லட்சம் பழ மரங்களைக் கொண்ட ஒரு பெரிய பழத்தோட்டமாக இருந்ததாகச் சொல்கிறார்கள். அந்த வழியாகச் செல்கிறவர்கள் ஒரு அணா கொடுத்தால் எவ்வளவு பழம் வேண்டுமானாலும் சாப்பிட்டுக் கொள்ளக்கூடிய நிலைமை இருந்தது என்று சொல்லப்படுகிறது. ஆகவே நவ்லாக் பண்ணையில் ஒரு பழத் தோட்டம் அமைக்கும் திட்டத்தை அரசாங்கம் மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** நானே அந்தப் பண்ணையை நேரில் சென்று பார்த்தேன். அங்கு பழ மரங்கள் எதுவும் இல்லை. அது பழங்கதையாக இருப்பதால், புதுக் கதையைப் பற்றி யோசிப்போம்.

### *Examinations for All India Services*

*386 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether there is any proposal with the Government to set up a training centre in this State, to assist the members of the Backward Classes sitting for the All India Examinations; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) ஆம்.

(இ) அனைத்திந்தியப் பணிகளுக்கான போட்டித் தேர்வு களுக்காக, பின்தங்கிய வகுப்பினர்களிலிருந்து 50 மாணவர் களுக்குப் பயிற்சியளிக்க சென்னையில் சிறப்புப் பயிற்சி நிறுவனம் ஒன்று நிறுவப்பட வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவரவர்களே, அப்படி நிறுவப் பட்ட இந்தத் திட்டத்தின்கீழ் மாவட்ட வாரியாகப் பின்தங்கிய மாணவர்களைச் சேர்க்க உத்தரவிடப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** இந்தத் தேர்வுக்குப் பயிற்சி பெறுவதற்காக இதுவரையில் குறைவாகவே விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. ஆகவே, மாவட்டவாரியாகப் பிரித்து, மாணவர்களைச் சேர்க்கவேண்டுமென்ற நிலை எழவில்லை. 50 பேர்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டியதற்கு இதுவரையில் 13 பேர் தான் விண்ணப்பங்களை அனுப்பியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: How long will the training be given to the backward students and what are the facilities given to the students staying here?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அது கால கட்டம். அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

DR. H. V. HANDE: In view of the fact that I.A.S. is not the only all India service, but there is the entry into 'Dufferin', Indian Institute of Medical Science, All-India Medical Service, etc., and in these services the number of candidates getting through from our State is low, will the Government try to expand it a little so as to cover all the above services like entry to Dufferin, technical services, etc., so that more applicants may be coming forward?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, தற்போது இந்த நிறுவனத்தைப் பொறுத்தமட்டில் ஐ. ஏ. எஸ். தேர்வுக்கு மட்டுமே பயிற்சி அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*Government Servants' Co-operative House and Land Society*

* 387 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether the Madras Government Servants' Co-operative House and Land Society Limited (Regd. XXC 644) was liquidated;

(b) if so, whether arrangements had been made to refund the amounts due to the members; and

(c) the present position of the affairs of the Society?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இதுவரை கலைக்கப் படவில்லை.

(இ) & (உ) இந்த சங்கத்தில் பணத்தை கையாடல் செய்த குற்றத்திற்காக சங்கத்தின் நிர்வாகிகள் ஐந்து பேர்களின் மேல் சென்னை VIII-வது குற்றவிசாரணை மாநகர நீதிபதியிடம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அவர்களில் ஒருவர் மட்டுமே குற்றவாளி என்று அவருக்கு 9 மாத கடுங்காவல் தண்டனை கொடுத்து மற்றவர்களை விடுதலை செய்தும் நீதிபதி தீர்ப்பளித்தார். விடுதலை செய்யப்பட்ட நான்கு பேர் மேலும் குற்றம் இருப்பதால், இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பின் மேல் அப்பீல் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. சங்கத்தின் புத்தகங்களும் பதிவேடுகளும் நீதிமன்றத்தில் இருக்கின்றன. நீதிமன்றத்திலிருந்து இவைகள் திரும்பக் கிடைத்ததும் சங்கத்தை கலைப்பதற்கும் அங்கத்தினர்களுக்குச் சேர வேண்டிய பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கும் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.



DR. H. V. HANDE: May I know whether it is a fact that some top Officers like the Chief Record Section Officer of the Co-operative Stores and Chief Officer of the Food and Agriculture Department—Chief Promoter—were involved in this and whether it is a fact that Rs. 100 was collected from each of the members or constituents and the amount is not returned even though the amount is due? When they were not getting these houses—now according to the Minister himself there was cheating—may I know whether it is possible for the Government to see without waiting for the Supreme Court's or High Court's Judgment to return the amount to the persons who are involved because some of them have also retired?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, இதில் தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த 5 பேர்கள் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். உணவு விவசாய இலாகாவைச் சேர்ந்த கே. ஆர். சுப்பிரமணியம், எம். வி. கோதண்டம், எம். பி. இராமச்சந்திரன், பொதுத் துறையைச் சேர்ந்த ராஜேந்திரலால், கிராம வளர்ச்சித் துறையைச் சேர்ந்த அப்பன்லால் ஆகிய இவர்களைத் தவிர கனம் உறுப்பினர் சொன்னதைப்போல மற்றவர்கள் சம்பந்தமாக ஒன்றும் இருப்பதாகத் தகவல் இல்லை.

DR. H. V. HANDE: I meant the same K. R. Subramaniam, Food and Agriculture Department—Promoter. But may I know whether it is possible to return the amount because many of them have retired and they have already given the amount—Rs. 100 and odd? I want to know whether it is possible without waiting for the judgment to reimburse the amount or return the amount taken from them.

THE HON. THIRU K. RAJARAM: The books are lying with the Court. Without it, it is not possible for the Society to return the amount at all.

*பீடி [illegible]*

* 388 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பீடிக் கம்பெனிகளை ஒழுங்குபடுத்தப் புதிய சட்டம் இயற்றச் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: இப்பொழுது தனியார் லைசென்ஸ் பெற்று நடக்கப்படுகிற பீடிக் கம்பெனிகளால் மக்கள் மோசடி செய்யப்பட்டு நட்டமடைகிறார்கள். ஆகவே, அரசாங்கமே பீடிக் கம்பெனிகளை நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அப்படிப்பட்ட உத்தேசம் இன்றைக்கு இல்லை. எங்காவது தவறு நடந்தால் புகார் கொடுக்கலாம். தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

[1971 டிசம்பர் 14

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சீட்டு, மணி லெண்டிங், பான் ப்ரோக்கர்கள் ஆகியவற்றுக்கு மூன்று சட்டங்கள் இருக்கின்றன. அவற்றை அமலாக்குவதில் பல சிரமங்கள் இருக்கின்றன என்பதனால் அந்தச் சட்டங்களுக்குச் சரியான திருத்தங்களைக் கொண்டுவர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** அந்தச் சட்டங்களுக்கு எத்தகைய திருத்தங்கள் தேவை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்லலாம். அந்தச் சட்டங்கள் புதியதாகக் கொண்டுவரப்பட்டன. அனுபவத்தின் பேரில்தான் அதில் உள்ள சிக்கல்கள் அகற்றப்பட வேண்டும்.

**திரு. என். கணபதி:** இப்போது இருக்கிற சீட்டுக் கம்பெனி சட்டத்தின்படி 25 உறுப்பினர்களைக் கொண்டு ஒரு சீட்டு என்றால் ஒரு உறுப்பினர் தொகையை மாத்திரம் டெபாசிட் பண்ணினால் போதும் என்று இருக்கிறது. பாக்கி 24 பேர்களுக்கு எந்தவிதமான செக்யூரிடியும் இல்லை. ஆகவே, செக்யூரிடி தொகையை அதிகப்படுத்த அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** இந்தச் செக்யூரிடி 3 வகையாக வாங்கப்படுகிறது. ஒன்று, சீட்டு கம்பெனி செக்யூரிடி இண்டென்ஷர் ஆப் மார்ட்கேஜ் அண்டு டிரஸ்ட் மூலம் செலுத்தலாம். அல்லது அரசாங்கப் பத்திரங்களின் மூலம் செலுத்தலாம். அல்லது அங்கீகரிக்கப்பட்ட பாங்குகளில் செலுத்தலாம்.

**திரு. என். கணபதி:** நான் செக்யூரிடி தொகையை அதிகப்படுத்தும் உத்தேசம் உண்டா என்று கேட்டேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை. குறைவாக இருப்பதனால்தான் மோசடி நடைபெறுகிறது என்பதற்கு ஆதாரம் இல்லை.

**திரு. எஸ். வடிவேல்:** கிராமப்புறங்களில் உள்ள ஏழை மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, சீட்டுக் கம்பெனிக்கே லைசென்சு கொடுக்காமல் இருப்பார்களா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** அதற்குச் சட்டம் இருக்கிறது. 25 ஆயிரம் வரை லைசென்சு பெற்று நடத்துகிறார்கள். லைசென்சு வாங்காமல் நடத்துகிறவர்களால் மோசடி நடைபெறக்கூடும். அதைப்பற்றி அரசாங்கத்திற்குத் தெரிவித்தால் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

THIRU K. M. SUBRAMANIAM: When we are thinking of progressive financial reforms in this country, is it not better to abolish this sort of short-cuts to prosperity by having chit funds and usurions interest by the system of Hundies and all that?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** அப்படி ஒன்றும் உத்தேசம் இல்லை.



1971 டிசம்பர் 14]

## கிண்டியில் பாம்புகள் பூங்கா

* 389 **வினா—திரு. பெ. மலைச்சாமி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிண்டியில் பாம்புப் பூங்கா அமைப்பதற்கு அரசு நிலம் வாங்கியுள்ளதா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

## அரசுப்பேருந்துகளில் முடவர்களுக்கு இலவசப் பயணம்

* 390 **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகர அரசுப் பேருந்துகளில் நடக்க முடியாத முடவர்களுக்கு இலவசமாகப் பயணம் செய்ய செயற்குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** முடவர் ஒருவர் தமது உடல் ஊனத்திற்கான சிகிச்சை பெறுங்காலத்து சென்னை மாநகரில் அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்யலாம். ஆனால், அவர், அவரது உறுப்பு இழப்பு அல்லது ஊனம் குறித்து அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்புகள் வாதத்தினால் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து சர்ஜன் ஒருவரிடமிருந்து சான்றிதழ் ஒன்றையும் அவர் சிகிச்சை பெற்று வருகிறார் என்று குறிப்பிடும் மருத்துவ மனைச் சீட்டு ஒன்றையும் அல்லது மருத்துவரின் சான்றிதழ் ஒன்றையும் காண்பிக்க வேண்டும்.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, முடவர்கள், கண் தெரியாதவர்கள் ஆகியோர் சிகிச்சைக்குப் போகும்போது பஸ்களில் இவர்களுக்கென்று சில இடங்களை ஒதுக்கி வைக்க அரசு முன்வருமா?

(மாண்புமிகு பேரவை துணைத்தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** இத்தகையவர்களுக்கு பொதுமக்களே மனிதாபிமானத்தோடு இடம் அளிப்பார்கள் என்பதனால் இதற்காக தனிப்பேருந்து நிலைகள் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இத்தகையவர்கள் மருத்துவர்களிடம் இருந்து சான்றிதழ் பெற்றிருக்கவேண்டும் என்றார்களே, முடவர்கள்,

குருடர்கள் ஆகியோர்களுக்கு இலவசமாக பஸ்களில் பிரயாணம் செய்ய தனி பாசே அரசு வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இந்த வசதி சிகிச்சை காலத்தில் மட்டும் அளிக்கிற நிலை இருப்பதால் அதுபோன்று சான்றிதழ்கள் தேவைப்படுகின்றன.

### சில பேருந்துகளில் இரண்டு நடத்துநர்கள்

* 391 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் அதிக நெரிசல் உள்ள சில ரூட்களில் ஓடும் பேருந்துகளில், இரண்டு கண்டக்டர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா ?

(இ) ஆம் எனில், இம்முறையை மேலும் பல பஸ் ரூட்களுக்கு விரிவுபடுத்த அரசு உத்தேசித்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) சோதனை நடவடிக்கையாக, 4-ஆம் எண் பேருந்து வழித்தடத்தில் செல்லும் (மந்தவெளி-தண்டையார்பேட்டை) ஒவ்வொரு பேருந்திலும் நெரிசல் மிகுந்த நேரங்களில் 25—6—1971-ஆம் நாளிலிருந்து, இரண்டு நடத்துநர்கள் நியமிக்கப்பட்டனர். இது பலனளிக்கத் தக்க வகையில் இல்லாததால், 4—11—1971-ஆம் நாளிலிருந்து இச் சோதனை நடவடிக்கை நிறுத்தப்பட்டது.

(இ) இனிமேல், பேருந்து ஒன்றில், இரண்டு நடத்துநர்களை நியமிக்கும் உத்தேசமில்லை.

**திரு. என் கிட்டப்பா :** மகளிர்களுக்கு மட்டும் என்று ஓடுகிற பஸ்களில் பெண் கண்டெக்டர்களை நியமிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அப்படி ஒன்றும் யோசனை இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இதோபாதிரி இன்னமும் 2 கண்டெக்டர்கள் டி.வி.எஸ். பஸ்ஸில் இருந்து வருகிறார்கள். ஆனால் இங்கே 25—6—1971-இல் ஆரம்பிக்கப்பட்டு பலன் அளிக்கவில்லை என்ற காரணத்தினால் கைவிடப்பட்டதாகச் சொல்கிறாரே, மீண்டும் ஒரு முறை பரிசீலித்து பஸ்கள் வேகமாகப் போவதற்காக 4-ஆம் நம்பர் பஸ்களிலாவது இரண்டு கண்டெக்டர்களை நியமிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இரண்டு கண்டெக்டர்களைப் போட்டால் பஸ் வேகமாகப் போகக்கூடும், டிக்கெட்டு கொடுக்க வசதியாக இருக்கும் என்று கருதித்தான் போடப்பட்டது. ஆனால் அவர்களுக்குள் எதுவரை தாங்கள் டிக்கெட்





கொடுப்பது என்கிற பிரச்சினையும், அவர் கொடுத்திருப்பார் என்று இவர் கொடுக்காமலும், இவர் கொடுத்திருப்பார் என்று அவர் கொடுக்காமலும் இருக்கிற நிலையும் காணப்பட்டது. இதனால் பஸ் வேகமாகப் போவதற்கு அனுகூலம் ஏற்படவில்லை. ஆகவே அங்கங்கே பஸ் ஸ்டாப்புகளில் ஸ்டாண்டிங் கண்டெக்டர்களைப் போட்டு டிக்கெட் கொடுத்துவிடுவதனால் பஸ் வேகமாகப் போவதற்கு அனுகூலமாக இருக்கிறது என்பதைக் கண்ட பின்னர்தான் 2 கண்டெக்டர்கள் தேவையில்லை என்ற முடிவு செய்யப்பட்டது. இதனால் அதிகச் செலவு ஆவதும் தவிர்க்கப்படும்.

**திரு. எஸ் முருகையன் :** தலைவர் அவர்களே, நெரிசல் மிகுந்த முற நேரங்களில் சென்னை மாநகரத்தில் 50 இடங்களில் பஸ்கள் கட்டா யமாக நிறுத்தப்படும் என்று பத்திரிகைகளில் செய்தி வந்ததே, அந்தத் திட்டத்தின் விவரங்கள் என்ன ?

பகல் 10.30.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, நெரிசல் மிகுந்த நேரங்களில் கூட்டம் அதிகமாக இருப்பதனாலும், அடிக்கடி பஸ்கள் ஸ்டாப்புகளில் நிற்பதில்லையென்கிற புகார் வந்ததாலும், சென்னை நகரில் போக்குவரத்து நெரிசல் மிகுந்தவை என்று 50 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த ஐம்பது இடங்களிலும் பஸ்கள் கட்டாயமாக நின்று போக வழி செய்யப்பட்டது. பயணிகள் ஏறினாலும் ஏறாவிட்டாலும், இறங்கினாலும் இறங்காவிட்டாலும் பஸ்கள் அந்த இடங்களில் கட்டாயமாக நிற்க வேண்டும் என்று திட்டமிட்டு, அது 1—12—1971 முதல் அமலாகியிருக்கிறது. மேலும், பயணிகள் வரிசையாக நின்று பேருந்துகளில் ஏறுவதற்காக விசேஷ ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பயணிகள் நல்ல ஒத்துழைப்புத் தருகிறார்கள். போக்குவரத்துத் துறையில் இருக்கிற தொழிலாளர்களும் பஸ்களை நிறுத்தி நல்ல முறையில் ஒத்துழைப்புத் தருகிறார்கள். ஏற்கனவே 3 மணி நேரம் நெரிசலைத் தவிர்க்க தேவை ஏற்பட்டது என்கிற நிலைமையை மாற்றி, ஒரு மணி நேரத்தில் நெரிசலைத் தவிர்க்க முடிகிறது. இந்தக் கட்டுப்பாட்டைக் கொண்டு வந்ததன் மூலம் நெரிசல் ஒரு மணி நேரத்தில் தவிர்க்கப்படுகின்றது.

### கோபுரம், விமானம் கட்டும் பணிகளுக்குப் பயிற்சி

* 392 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவில் கோபுரத் திருப்பணிக்கான ‘சுதைவேலை’ பயிற்சியளிக்கும் பள்ளி ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** இல்லை.

**திரு. என். இட்டப்பா:** தலைவர் அவர்களே, 'சுதை வேலை' செய்யும் கலையே தமிழ்நாட்டில் அழிந்துவிடும் நிலையிலிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அதில் பயிற்சி அளிப்பதற்காக பயிற்சிப் பள்ளி ஒன்றை நிறுவி, பயிற்சி அளித்து, பயிற்சிபெற்றவர்களுக்கு அறநிலையத் துறையின் மூலமாக அவர்களை வேலைக்கு அமர்த்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, தற்போது மகாபலிபுரத்தில் தொழில்துறை மூலமாக 'சுதை வேலை' பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. ஆகவே, அறநிலையத் துறை மூலமாக தனியாக பயிற்சிப் பள்ளியை ஆரம்பிக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை.

**திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, வடபழனி ராஜ கோபுரம் கான்கிரீட் மூலமாக அமைக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா? அப்படி அமைப்பதால் பழைய கலைச் சிறப்புக்கள் கெட்டுப் போய்விடாதா?

**மாண்புமிகு திரு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, அது அரசுக்குத் தெரியும். அதனால் எந்தவிதமான பழைய நிலைகளும் கெட்டுவிடாது.

### மதுரையில் கிராம தான இயக்கம்

***393 வினா—திரு. பி. எஸ். மணியன்:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போது மதுரை மாவட்டத்தில் கிராம தானத்தின் கீழ் எத்தனை கிராமங்கள் தானமாகக் கொடுக்கப்பட்டுள்ளன?

**மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் :** 18 கிராமங்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் கிராமதானத்திற்குக் கொடுக்கப்பட்ட கிராமங்கள் சரியான முறையில் பரிபாலிக்கப்பட முடியவில்லையென்று கிராமதான ஊழியர்களே தகவல் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அரசு இதைக் கவனித்து, இது எந்தத் திசையில் போகவேண்டுமென்று அரசு வழிகாட்டி, உதவி செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார்கள் அரசாங்கத்திற்கு நேரடியாக எதுவும் வரவில்லை. அந்தப் பதினெட்டு கிராமங்களுக்கும் மத்திய, மாநில அரசுகளிலிருந்து 1968-69-ம் ஆண்டில் விவசாய அபிவிருத்திக்காக 64,105 ரூபாய் கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1969-70-ம் ஆண்டில் 74,500 ரூபாய் கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. விவசாயத் துறையில் புதிய கிணறுகள் வெட்டுதல், மின்சார பம்பு



செட் அமைத்தல், உழவு மாடுகள் வாங்குதல் போன்ற காரியங்களுக்கு அந்தப் பகுதியிலுள்ள விவசாய மக்களால் இத்தொகை செலவிடப்படுகிறது.

**திரு. அ. ப. சண்முகசுந்தரம் :** தலைவர் அவர்களே, 18 கிராமங்கள் கிராமதானமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதில் எத்தனை ஏக்கர் நிலம் தானமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நிலமில்லாத எத்தனை விவசாயிகளுக்கு நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு அளிக்கப்படும் நிதி உதவிகள் சரியாகச் செயல் பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, பதினெட்டு கிராமங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. நிலத்தின் மொத்தப் பரப்பளவு 1,309.14 ஏக்கரும், அதன் மதிப்பு 17,23,613 ரூபாயும் ஆகும். இதற்கு வழங்கப்பட்ட கடன்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதியின்பேரில் ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் மூலமாக அந்த விவசாயிகளுக்குச் சேர்க்கப் படுகிறது.

**திரு. ரா. ரா. முனுசாமி:** தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திற்கு மட்டும் பதினெட்டு கிராமங்கள் கிராமதானமாகக் கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். அது எந்தெந்தக் கிராமங்கள்? மற்ற மாவட்டங்களில் கிராமதானத்திற்கு நிலம் வழங்கப்படவில்லையா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் மேலூர், உசிலம்பட்டி, நிலக்கோட்டை ஆகிய வட்டங்களில் 18 கிராமங்கள் கிராமதானமாகக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. மற்ற மாவட்டங்களைப் பொறுத்த விவரம் தேவையானால், தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

### (2) அறிவிப்பு

**(அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1971).**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

128-249—7

## (3) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

**(அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1971).**

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவை * ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென நான் முன்மொழிகிறேன்.

இப்பொழுது சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கடமைகளைச் செய்யும்போது பற்பல செலவுகள் ஏற்படுகின்றன. அவற்றை ஓரளவு சரிக்கட்டிக்கொள்வதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாதம் ரூ 100ஐ ஈட்டுப்படியாக 1971-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் அளிப்பதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.

பேரவை உதவித் தலைவருக்கும், மேலவை உதவித் தலைவருக்கும் கொடுக்கப்படும் ஊர்திப்படியினை மாதத்திற்கு ரூ. 100-ல் இருந்து ரூ. 200 ஆக உயர்த்துவதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.

இறந்துபோன சட்டமன்ற உறுப்பினரது பதவிக் காலம் முடிவடையாத காலத்தில் அன்னார் குடும்பத்தினருக்கு மாதம் ரூ. 100 படி வழங்கப்படும் என்று 1970-ம் ஆண்டில் இவ்வரசு சட்டமியற்றியது. இச்சட்டம் அமுலுக்கு வருமுன்பே இறந்துபோன பல சட்டமன்ற உறுப்பினர்களது குடும்பத்தினர் இந்தப் படியை தங்களுக்கும் வழங்க விண்ணப்பித்திருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கும் இந்தச் சலுகையை தருவதற்கு இந்த படியினை 1967-ம் ஆண்டு சனவரி திங்கள் முதல் நாள் அல்லது அதற்குப் பின் இறந்துபோன சட்டமன்ற உறுப்பினர்களது குடும்பத்தினருக்கு வழங்குவது என்று அரசு முடிவெடுத்திருக்கிறது.

தற்பொழுது தமிழ்நாடு 1951-ம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தில் சம்பளம் அல்லது படியினது உரிமை விடுதல் ரத்து செய்ய யாதொரு விதித்துறை இல்லை. எனவே, இந்தச் சம்பளம் அல்லது படியினை உரிமை விடுதல் ரத்து செய்வதற்காக மேற்படி சட்டத்தைத் திருத்துவதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

இப்போது பேரவை முன்னுள்ள இம்மசோதாவில் இதுகுறித்த விதித் துறைகளும் அமைந்துள்ளன. இப்பேரவை இத் தீர்மானத்தை ஏற்குமாறு நான் வேண்டுகிறேன்.

---

* 23-10-1971-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.



**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் பேரிலே அதிகமான அளவில் விவாதிப்பது அவசியமில்லையென்று கருதுகிறேன். அதேநேரத்தில் சென்ற சட்டமன்றத் தொடரிலே இந்த மசோதாவானது தாக்கல் செய்யப்பட்ட நேரத்தில் இங்கு இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, சோஷலிஸ்ட் கட்சி, சுதந்தரா கட்சி ஆகிய நான்கு கட்சிகளின் சார்பிலும் ஒரு திருத்தம் கொடுத்திருந்தோம். இந்தச் சட்ட அமைப்பின் பிரகாரம் அக்டோபர் 1-ம் தேதியிலிருந்து உறுப்பினர்களுக்குக் கிடைக்கக்கூடிய 100 ரூபாய் அலவன்ஸ் கிடைக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அறிவிப்பானது ஜூலை மாதத்தில் கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்டது. என்றைக்கு அந்த அறிவிப்பு கொடுக்கப்பட்டதோ, அந்த அறிவிப்புத் தேதியிலிருந்து இது அமுலுக்கு வர வேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறோம். அது ஜூலை 1-ம் தேதியிலிருந்து ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் முறையுடன் என்கிற அந்தத் திருத்தத்தை அரசே கொண்டு வந்தாலும், அல்லது எங்கள் திருத்தத்தை ஏற்றுக் கொண்டாலும் மிக்க உதவியாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்படும் 100 ரூபாய் ஈட்டுப்படியை, எந்தத் தேதியில் முடிவு செய்யப்பட்டதோ, அதாவது அக்டோபர் மாதம் என்று போட்டோம். எதிர்க்கட்சி சார்பிலே முன்கூட்டியே கொடுக்கலாம் என்கிற கருத்தைச் சொன்னார்கள். இந்தச் சட்டம் வரும்போது அன்றைக்கு இருந்த நிலைமை வேறு. இன்றைக்கு இருக்கும் பொருக்கால நிலைமையை உத்தேசித்து எதிர்க்கட்சித் தலைவர்கள் இதை வற்புறுத்த மாட்டார்கள் என்ற நம்பிக்கையில் தான் அரசாங்கமும் இது வேண்டாம் என்று முடிவு எடுத்தது. கனம் ஒரு வேளை நாங்களே அப்படிச் சொல்லியிருந்தாலும், உறுப்பினர்கள் வேண்டாமென்றுதான் சொல்வார்கள். ஆகவே, இது இப்போதைக்குத் தேவையில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை முன்வடிவு எண் 38/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவின் இரண்டாவது பிரிவிற்கான திருத்தங்களுக்கு ஆளுநருடைய இசைவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவுக்கு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1971) அரசு கொண்டு வந்துள்ள திருத்தங்களுக்கு ஆளுநர் அவர்கள் தம்முடைய இசைவைத் தெரிவித்து உள்ளார்கள்.

(3) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவு—தொடர்ச்சி.

பிரிவு 2.

MR. DEPUTY SPEAKER: The question is:

'That Clause 2 do stand part of the Bill'.

THE HON. THIRU S. MADHAVAN: Sir, I move the following amendment:—

For Clause 2, substitute the following clause, namely:—

"2. *Amendment of sections 4 and 5, Tamil Nadu Act XX of 1951*:—

In sub-section (2) of section 4 and sub-section (2) of section 5 of the Tamil Nadu Payment of Salaries Act, 1951 (Tamil Nadu Act XX of 1951) (hereinafter referred to as the principal Act, for the words "a conveyance allowance of one hundred rupees per mensem", the words "a conveyance allowance of two hundred rupees per mensem" shall be substituted.

The amendment was put and carried.

Clause 2, as amended was put and carried".

*Clause 3.*

MR. DEPUTY SPEAKER: The question is:

"That Clause 3 do stand part of the Bill"

THE HON. THIRU S. MADHAVAN: Sir, I move the following amendment:—

In Clause 3,—

(i) for sub-clauses (1) and (2), substitute the following sub-clauses, namely:—

(1) after sub-section (1), the following sub-section shall be inserted, namely:—

"(1-A) Every member of the Legislative Assembly or of the Legislative Council, who does not hold any of the offices referred to in sections 3 to 6 and in sub-section (1) of section 6-A shall be entitled to receive a compensatory allowance of one hundred rupees per mensem."



(2) in sub-section (2),—

(a) after the expression "clause (a) of sub-section (1)", the expression "and the compensatory allowance referred to in sub-section (1-A)" shall be inserted;

(b) in the proviso, after the word "salary", the words "and the compensatory allowance" shall be inserted.

(ii) for sub-clause (4), substitute the following sub-clause, namely:—

"(4) in sub-section (5) after the expression "clause (a) of sub-section (1)", the expression "and the compensatory allowance referred to in sub-section (1-A)" shall be inserted.

The amendment was put and carried.

Clause 3, as amended, was put and carried.

Clause 4 was put and carried.

*Clause 5.*

MR. DEPUTY SPEAKER: The question is:

Clause 5 do stand part of the Bill.

Thiruvalargal R. Ponnappa Nadar, K. T. K. Thangamani, Dr. H. V. Hande and Thiru A. R. Marimuthu did not move their amendments.

THE HON. THIRU S. MADHAVAN: Sir, Consequent on our amending Clause 3, this amendment has become necessary. The expression "and 6-A" is a printing mistake. I move the following amendment:—

"In Clause 5, for the expression "and 6-A", substitute the expression "and in sub-section (1) of section 6-A".

The amendment was put and carried.

Clause 5, as amended was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried

THE HON. THIRU S. MADHAVAN: Sir, I move—

"That the Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 38 of 1971), as amended, be passed."

The motion was put and carried and the Bill, as amended was passed into law.

(ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சட்டமன்ற (தகவின்மை நீக்கல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1971)

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சட்டமன்ற (தகவின்மை நீக்கல்) திருத்த சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1967-ம் ஆண்டு சட்டமன்ற (தகுதியின்மை நீக்குதல்) (திருத்த) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1967) 2-வது பிரிவு, மேற்சொன்ன சட்டத்தின் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பதவிகள் எதுவும், அந்தப் பதவி வகிப்பவர் சட்டமன்றப் பேரவை அல்லது சட்டமன்ற மேலவை உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்படுவதை அல்லது அவ்வாறு உறுப்பினராக இருப்பதைத் தகுதியற்றதாக ஆக்காது அல்லது இதுவரை என்றுமே தகுதியற்றதாக ஆக்கியிருப்பதாகக் கருதப்படமாட்டாது எனக் கூறுகிறது. இது சட்டமாகிய பின் பல்வேறு நிர்வாகக் காரியங்களுக்காகப் பல குழுக்களும் வாரியங்களும், தமிழ்நாடு அரசாலும் இந்திய அரசாலும் அமைக்கப்பட்டன. (இந்திய அரசு அமைத்த) ஆதாயப் பதவிகள் குறித்த இணைக்குழு, இத்தகைய அமைப்புக்களில் ஒருவர் உறுப்பினர் பதவி, செயலாளர் பதவி அல்லது தலைவர் பதவி வகிப்பது, நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு அவரைத் தகுதியற்றவராக்கக் கூடாது என்று பரிந்துரை செய்துள்ளது. இத்தகைய அமைப்புக்களில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கலாம் அல்லது சட்டமன்றப் பேரவைக்காயினும், மேலவைக்காயினும் தேர்தலில் போட்டியிட விரும்புபவர்கள் இருக்கலாம். எனவே, இத்தகைய அமைப்புக்களில் உறுப்பினர் பதவி அல்லது செயலாளர் பதவி அல்லது தலைவர் பதவியை வகிப்பவர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை அல்லது மேலவை உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்படுவதற்கு அல்லது அவ்வாறு உறுப்பினராக இருப்பதற்குத் தகுதியற்றவராகாமலிருக்க தமிழ்நாடு 1967-ஆம் ஆண்டு சட்டமன்ற (தகுதியின்மை நீக்குதல்) சட்டத்தின் விவர அட்டவணையில் இத்தகைய குழுக்களும், வாரியங்களும் சேர்க்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்போது இப்பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ள சட்ட முன்வடிவு அதற்கிணங்க சில விதித்துறைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இப்பேரவை இதனை ஏற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** டிப்டி ஸ்பீக்கர் சார், இந்த மசோதாவை இன்னும் சில காலத்திற்கு முன்பே கொண்டு வந்திருக்கலாம் என்பது என்னுடைய கருத்து. ஏற்கனவே மத்திய அரசைப் பொறுத்தவரையிலும் யார் நாடாளுமன்றத்திலே உறுப்பினராக இருக்க முடியாது என்று அவர்கள் தகுதிகளோ அவர்களைத் தனியாக எடுத்து அவர்களுக்கு பங்கவா விதிவிலக்கு இல்லை என்ற முறையிலே செய்திருக்கிறார்கள். இப்பொழுது போதாதாகவே what is office of profit என்ற விஷயம் ஒரு சர்ச்சைக்குரிய விஷயமாகவே இருக்கிறது. இப்பொழுது இப்படி ஒரு பட்டியல் கொடுத்து ஏற்கனவே இருக்க

* 9-12-1971-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



27 பட்டியலோடு இப்பொழுது கொடுத்துள்ள 31 பட்டியலையும் சேர்த்துக் கொடுத்ததோடு நிற்காமல் இன்னும் இம்மாதிரியான ஸ்தாபனங்களிலே அங்கம் வகிக்கக்கூடியவர்களுடைய உரிமை பறிக்கப்படமுடியாத நிலைமையில் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மசோதா வரும்பொழுது துண்டுதுண்டாக அவ்வப்பொழுது இருக்கும் நிலையில் சிலவற்றைச் சேர்த்துக்கொள்வதும், சிலவற்றை விட்டுவிடுவதுமாக இருக்கக்கூடாது. உதாரணமாக நாளைக்கு நாம் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் கொண்டுவரப் போகிறோம். அம்மாதிரி அமைப்புகள் எல்லாம் அமைக்கப்பட்டால் அதிலே வரக் கூடியவர்கள் உறுப்பினர்களாகச் சட்டமன்றத்திலோ நாடாளு மன்றத்திலோ இருப்பதற்குத் தகுதியுண்டா இல்லையா என்று பரிசீலிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே அம்மாதிரி அமைப்புகள் ஏற்படுகின்றபொழுது அம்மாதிரி ஸ்தாபனங்களிலே பணியாற்றக்கூடியவர்களில் யாருக்கு ஊதியம் கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறதோ அவர்களுக்கு that will not be considered as office of profit என்ற நிலைமை இருக்க வேண்டும்.

ஆகவே, அடுத்த தொடரிலே இதைப்பற்றி எல்லாம் விசாரணை செய்து என்ன என்ன அமைப்புகள் கொண்டு வருவதாக இருக்கிறோம், அந்த அமைப்பிலே அவர்கள் வருகின்ற காலத்திலே அவர்களுக்கு எல்லாம் சட்டமன்றத்திலோ நாடாளுமன்றத்திலோ வாய்ப்பு இல்லாமல் போய்விடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மசோதாவைப் பொறுத்தவரையிலும் அந்த அளவுக்கு யாருக்கும் ஆட்சேபனை இருக்கமுடியாது. தமிழ்நாடு அக்ரோ-இண்டஸ்ரீஸ் கார்ப்பரேஷன் அமைந்திருக்கிறது, அதிலே பணியாற்றக்கூடியவர்கள் இன்னும் பல்விதமான வாரியங்கள் எல்லாம் இருக்கின்றன, அவற்றில் பணியாற்றக்கூடியவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அட்வைசரி கமிட்டி வேறு சில கமிட்டிகள் எல்லாம் இருக்கின்றன. சுமால் சேவிங்ஸ் கமிட்டி இருக்கிறது. இப்படிப் பல கமிட்டிகள் இருக்கின்றன. அவர்களுக்கு அலவன்ஸ் என்ற பெயராலே 25 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அதைக்கூட ஆபீஸ் ஆப் ப்ராஃபிட் ஆக கிளப்பிவிடுவார்களோ என்ற ஐயம் எனக்கு இருக்கிறது. எனவே இதைத் தீர்க்கமாகப் பரிசீலித்து அரசிடம் இம்மாதிரிப் பணியாற்றக்கூடியவர்களுக்கு ஆபீஸ் ஆப் ப்ராஃபிட் இல்லை என்ற முடிவு எடுக்க வேண்டும். இந்த அளவுக்கு விஷயத்தைச் சொல்லிவிட்டு இந்த மசோதாவைப் பொறுத்த வரையிலும் வேறு ஆட்சேபணையில்லை என்பதைச் சொல்லிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Mr. Deputy Speaker, Sir, I would like to say a few words on this Bill.

This Bill is called—'The Tamil Nadu Legislature (Prevention of Disqualification) Amendment Bill, 1971'. This catalogues the disqualifications for a member to be elected to the Assembly or

Council. But the list shows a lot of All India bodies like Railway Catering and Passengers Amenities Committee. That is completely the responsibility of the Central Government. The State has nothing to do with that Committee. When we have nothing to do with that, why should that be included in that list and also be thought over by the Government because this is only regarding the State Legislature-Assembly and Council. Why should a number of bodies which are purely All India bodies, Central Government bodies and committees be brought under this list and should be thought over by this Government?

Apart from that Sir, I think that this Bill itself is not necessary because though the Act has been passed in 1967, it will only lead to some trouble because the Courts can be left to define what is an office of profit. Supposing you catalogue certain things and leave certain other organisations, that will bring about trouble to the members, because you cannot exhaustively catalogue all the organisations. For instance, it was pointed out by the hon. Member Thiru K. T. K. Thangamani that only Tamil Nadu Agro Industries Corporation is included. We have a number of Corporations constituted by the Government—Water and Sanitary Board, Tourists Corporation—So many Corporations are being newly brought about by this Government. When we are not cataloguing all those and one is included and some are left out, it will be difficult for the Courts to decide what is an office of profit and what is not an office of profit. So, this list cannot be exhaustive.

My submission would be, we need not have this bill at all. We can leave it to the election authorities to decide what is an office of profit. Instead of that, we would be only bringing in trouble by cataloguing a few and leaving a very big list. In this catalogue also we have got many All India bodies with which the State Legislature is not concerned. For instance, the State Government has nothing to do with the Railway Passenger Amenities Committee.

My submission is, the Government may again think of cataloguing all the Corporation which have connection with the State Government and leave all those which are connected with the Central Government with which the Parliament Members are concerned. As pointed out, the Parliament has brought about a statute regarding this and so, we need not bring these All India bodies in this Bill.

My submission is, it is better that we give up this Bill. By bringing it forward, we will be bringing more trouble to the members who would like to contest the elections. If the Government think that it is not possible for them to give up this Bill, let them think of other Corporations and make an exhaustive list and then bring this Bill. So, the Bill may be referred to a Select Committee which may go into the point raised in greater detail in the interest of those who would like to contest the elections.



THIRU M. A. LATHEEF: Sir, I welcome the Bill with the observation that in the matter of removing the disqualifications of persons who are seeking elections for the State as well as Central Legislatures, there are certain persons who are not wholly employed either under the Government or under a private concern. For example, there are part-time employees. There are legal luminaries, economic experts and people possessing considerable knowledge in a particular branch of the public field.

For example a part-time lecturer in law has got considerable legal knowledge. There are doubts whether he can seek election while being a part-time lecturer in law. So, in the matter of removing disqualifications or to make it a matter of certainty or to remove the doubt whether he can stand for the elections while continuing as a lecturer in law or a lecturer in audit, accountancy or in such subjects, it must be made clear. I would respectfully submit to the Hon. Minister to see that these people are also included so that such people who possess considerable knowledge in a particular branch or a particular field may be utilised for the public benefit in the legislatures. If the Government feel that those who are employed in the Government colleges and Government institutions, even though they are part-time lecturers and part-time employees, should not be included, at least the case of all persons who are employed in private institutions as part-time employees may be included.

Then I think a long-time felt grievance of these people will be removed. With these observations I would respectfully request the Hon. Minister to consider this suggestion seriously.

Apart from this, I do not have any further observations to make and I generally welcome this Bill.

DR. H. V. HANDE: Mr. Deputy Speaker, Sir, I shall offer a few remarks purely from a different point of view and from a different angle than from what my predecessors have spoken.

At the very outset before I go into that, I would like to explain a point which has been raised by the Hon. Member Thirumathi Ananthanayaki. I think once we accept the fact that there are certain offices which are headed by political persons who may have to contest a particular constituency of Assembly or Council or Parliament, then this Bill will be necessary that way. The Parliament has passed an Act saying that those persons who are holding these offices can contest for Parliament seats. So, naturally the State also has to pass another Act saying that such persons are eligible for Assembly and Council elections. We are looking after our area and the Parliament members are looking after their area. That is the point which I am raising because that issue was brought to the attention of the House by the Hon. Member.

[Dr. H. V. Hande] [1971 டிசம்பர் 14

**Another** point which I would like the Government to take note **of is something** entirely different and it is from purely a political **angle**. We have already started ramifying so many departments **and** increasing the number of departments. For instance, we have **several** departments today in our State. But at the same **time** we are going on claiming that we have reduced the number of Ministers. In other words, on one side, there is a tendency for us to go on assuming that the number of Ministers will have to be reduced, the Cabinet will have to be kept to a particular size.

In fact this was mentioned by several committees. Even recently some Parliamentary Committee which went into the whole issue raised the point saying wherever it is possible there should be a particular ratio between the number of M.L.As. and the number of Ministers. That is, the ratio should be one-tenth or something like that, if I remember right. That was what was spoken at the Speakers' Conference also (Interruption—11 per cent). So, in other words if the number of M.L.As. is 100, the cabinet Ministers should be eleven or something like that. That has been brought to the attention of politicians and of all political parties and members of the Legislatures and Parliament. It was also very clearly explained and it was probably accepted by various parties also. Certain States had gone against that and they are now in trouble. They want to cut down the size of the cabinet. But there is a tendency to obviate or to get over this. There is another possibility that is likely to happen which I want the Government to take note of.

For instance, the cabinet can be cut to a particular size, but then we can bring in so many Boards. I would not like to mention any particular Board and I would not like to offend any of the members or any Board. I would not like to mention it as a sort of personal issue, but I would like to refer to it in a general way. I would like this Government to take particular note of it and be careful about the hazards involved in ramifying the number of the Boards (1) which will ultimately end up in duplicating the work and (2) which will also end up in increasing the expenditure on the part of the Government. That is an important point which I would like the Government to take note **of.**

The Government want to restrict the expenditure of the cabinet and of the Government. But at the same time we ask questions with regard to the particular aspect as to how much money the Cabinet spent, how much money the Ministers spent on travelling allowance, etc. Even a few days ago such a question was answered in the Council. But it is possible to answer to the members saying that the Government have restricted the expenditure on the cabinet, that they have restricted the expenditure of a particular Ministry. It is possible to argue in that way and the public might get away with the impression and the members also be lulled into a false sense of feeling that there is reduction of expenditure on behalf of the Ministers and the **cabinet.**



1971 டிசம்பர் 14] [Dr. H. V. Hande]

What we have done in one direction is set at nought in another direction by this method of ramifying the number of Corporations. முற் பகல் 11-00
Now let us take a particular Department "A" and let us also take a similar Corporation which practically does the work of the same department. The Minister concerned might be holding the same subject which is dealt with by the Corporation Chairman. The Departmental head will be finding it difficult to know from whom he has to take orders, the concerned Minister or the Corporation Chairman. Of course, strictly speaking I am supporting this Bill. If a political person is taken in as Corporation Chairman, it is not fair to restrict him from contesting a constituency.

In this connection, I would like to point out the other aspect of the matter. If a separate Corporation is constituted it will ultimately lead to extra expenditure on the exchequer and duplication of work. I am not trying to hurt the feeling of any person who is the Chairman of a particular Corporation and most of them are my personal friends. Another point is that the public will be under the impression that the Ministry is spending less and the Cabinet is small and on that account they would appreciate it. So, I request the Hon. Minister for Law who is piloting the Bill in the absence of the Hon. Chief Minister to think over this matter and convey our feelings to the Hon. Chief Minister and the Cabinet so that it can put a brake on the speed with which they are increasing the number of Corporations. Once the Corporation has been set up and a Chairman has been appointed, we cannot disqualify him.

Thank you, Sir.

மாண்புமிகு திரு. சே. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த மசோதாவினுடைய கருத்து பெரும்பாலும் வரவேற்கப்பட்டது. இந்தச் சட்டம் ஏற்கனவே நம்முடைய சட்ட மன்றத்திலே ஒப்புக் கொள்ளப்பட்டது. அந்தச் சட்டத்திலே யார் யாரைச் சேர்க்க வேண்டுமென்பதைப் பற்றித்தான் இந்த மசோதா வந்திருக்கிறது. இதிலே பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்களுக்குரிய குழுக்களும், சட்டமன்றத்திற்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்ன சம்பந்தம் என்ற சந்தேகம் எழும். முதல் உரையிலேயே நான் குறிப்பிட்டேன். மத்திய அரசு குழு இதைப் பற்றிச் சிபாரிசு செய்யும்போது இந்தக் குழுக்களுக்கு யாரை அவர்கள் அமர்த்தினாலும் அவர்களுக்கு இந்த டிஸ்குவாலிபிகேஷன் வரக் கூடாது என்று கருத்துத் தெரிவித்தார்கள். ஆகவேதான் மாநில சட்டப் பேரவை, மேலவை உறுப்பினர்களும் வரலாம் என்ற எண்ணத்திலே அதையும் சேர்த்து விடலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்வளவு கருத்து. இந்தச் சட்ட மன்றத்திலே இப்படிப்பட்ட பிரிவுகளைச் சேர்க்கும்போது வராத பிரிவுகள் ஏதாவது இருக்குமா என்பதைப் பற்றியும் ஆலோசிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது.

[திரு. செ. மாதவன்] [1971 டிசம்பர் 14

உதாரணமாக, டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனில் நான்-அபிஷியல் வரலாம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. சட்ட மன்ற உறுப்பினர்கள் வரலாம். மொத்தமாக அரசாங்கம் அந்த அதிகாரத்தை எடுத்துக் கொண்டு அப்போதைக்கப்போது யார் யார் [illegible] வருவார்கள் என்று அறிவிப்பது ஒன்று. அதற்கு பதிலாக [illegible] யாரைச் சேர்க்க வேண்டுமென்பது பற்றி இந்தச் சட்டத்தின் [illegible] நடவடிக்கை முறையாக எடுக்கும்போது அப்போதைக் [illegible]ப்போது சட்டமன்றத்தில் வந்து அனுமதி இருக்கச் சட்டத்தின் மூலம் வாங்கப்பட வேண்டுமென்பது மற்றொரு கருத்து. இரண்டாவது கருத்துதான் தமிழ்நாட்டில் பின்பற்றப்பட்டு வந்திருக்கிறது. பின்னால் சட்டங்கள் [illegible] அப்போது [illegible] போடவும் வாய்ப்பு இருக்கிறது. இது போன்ற மற்ற வாரியங்கள், ஸ்லம் போர்டு, வாட்டர் போர்டு பற்றித் தெரிவித்தார்கள். அந்தச் சட்டங்கள் ஹவுசிங் போர்டு [illegible] என்ற பிரிவு அதிலே இணைக்கப்பட்டிருக்கிறது. [illegible] கூடாது முறையைப் பின்பற்றுவதில் தவறு இல்லையென்று தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கடைசியாக, டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்தச் சட்டத்திற்குச் சம்பந்தம் இல்லாத கருத்தை, பொதுவான கொள்கையைப் பற்றிச் சொன்னார்கள். பல போர்டுகளிலே சட்டமன்ற உறுப்பினர்களைப் போடுவதைப்பற்றி மறைமுகமாகக் குறிப்பிட்டார்கள். அமைச்சர்களுடைய எண்ணிக்கையில் வராமல் வேறு வகையில் எண்ணிக்கை அதிகப்படுத்தப்படுவதாகக் [illegible] குறிப்பிட்டார்கள். இந்தக் கருத்து [illegible] என்று பட்ட வாரியங்கள் தேவையா என்ற கருத்து [illegible] தனிப் வாரியங்கள் தேவை என்பதற்கு ஆதாரங்கள் [illegible] கின்றன. அதை மறந்தாலும் [illegible] இருக்கி யங்கள் எந்தெந்தத் துறையில் கொண்டு [illegible] வாரி துறையில் நன்மைகள் [illegible] அந்த கிறோம் [illegible] பார்க் நம்முடைய அரசாங்கம் [illegible] கொண்டால் மல்லாமல், தனி வாரியமாக இருக்கின்ற [illegible] வங்கி [illegible] பெறு வதற்கும் வாய்ப்பு இருக்கும் என்ற காரணத்தால் இந்த வாரியங்கள் உருவாக்கப்படுகின்றன.

எற்கெனவே வீட்டு வசதி வாரியம் [illegible] அந்த வாரியத்தின் மூலமாக [illegible] எழுப்ப லாம். வங்கிகளிலிருந்தும், [illegible] பணத்தைப் பெறலாம். தனி வாரியம் என்ற [illegible] பணம் எல்லாம் [illegible] அவர்கள் [illegible] வங்கிகளின் மூலம் பணம் பெறும் வாய்ப்பைப் பெற்றார்கள் [illegible] காரண மாகத்தான் புதிய வாரியங்கள் தேவை என்று அரசாங்கம் முடிவு



1971 டிசம்பர் 14] [திரு. செ. மாதவன்]

எடுத்தது. ஆகவே, இந்த வாரியங்கள் தேவைதானா என்று வா[illegible]டுவது நியாயமல்ல. வெளியிலே இதைப் பற்றித் தவறாகச் சொ[illegible]லலாம். இதிலே உருவாக்கப்பட்ட வாரியங்களிலே யாரைத் தலை[illegible]ராகப் போடுவது என்பதிலேதான் கருத்து வேறுபாடு. இதி[illegible] சட்ட மன்ற உறுப்பினர்களைப் போடக்கூடாது என்று வாதாடுவா[illegible]களேயானால், அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. சட்[illegible] மன்ற உறுப்பினர்கள் மக்கள் பிரதிநிதிகள். ஆற்றல் உள்ளவர்க[illegible] இருக்கிறார்கள். இவர்கள் மக்கள் உணர்ச்சிக்கேற்றவாறு வாரிய[illegible]களை நடத்திச் செல்ல வாய்ப்பு இருக்கிற காரணத்தால் அவ[illegible]களைப் போடக்கூடாது என்று சொல்லுவது சரியான கருத்[illegible] அல்ல என்று கருதுகிறேன்.

இப்படி வாரியங்கள் போட்டுவிட்ட காரணத்தாலே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களை அதிலே போட்ட காரணத்தால் அவர்களுக்குக் கொஞ்சம்கூட வெறுப்பு கிடையாது என்று திருப்பித் திருப்பிச் சொன்னார்கள். நாங்களும் அப்படி நினைக்கவில்லை. மேடையிலே அப்படிச் சொல்லுகிறார்களா இல்லையா என்பது வேறு பிரச்சினை. ஆனால் இங்கே நேராக தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். அவருடைய பயம் எல்லாம் எங்கே இப்படிப்பட்ட வாரியத்தினால் அதிகமாகச் செலவு ஏற்பட்டு விடுமோ என்பதுதான். அப்படி ஏற்படுகின்ற செலவு அமைச்சரவை பட்டியலில் வராமல் தனியாகப் போய்விடுவதால் அமைச்சரவை செலவு குறைந்து அமைச்சரவைக்கு நல்ல பெயர் ஏற்பட ஒரு சந்தர்ப்பம் ஏற்படுகிறது என்ற விதத்திலே கூறினார்கள். செலவைக் குறைத்துக் காண்பித்தால் அமைச்சரவைக்கு நல்ல பெயர்தான். ஆனால் அதற்கு அவர்கள் சொன்ன கருத்து சரியான கருத்து அல்ல என்று கருதுகிறேன். யாரைத் தலைவராகப் போட்டாலும் செலவு உண்டு. ஹவுசிங் போர்டு இருக்கிறது. மெட்ராஸிலே எஞ்சினியர் தலைவராக இருந்தார், இப்போது ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போட்டிருக்கிறோம். அப்போதும் செலவு, இப்போதும் செலவு இருக்கிறது. நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர்களைப் போட்ட காரணத்தால் செலவு அதிகரித்துவிட்டது என்ற காரணத்தை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அதிகாரிகளைப் போட்டாலும் செலவுதான், சட்ட மன்ற உறுப்பினர்களைப் போட்டாலும் செலவுதான். சட்டமன்ற உறுப்பினர்களைப் போடுவது எந்த விதத்திலும் தவறான கொள்கை அல்ல. ஜனநாயக ஆட்சி முறையில் மக்கள் பிரதிநிதிகளுக்கு அதிக வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்பதை யார் ஆட்சியிலிருந்தாலும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டுமென்றுகூறி, டாக்டர் ஹாண்டே அவர்களுடைய கருத்தினை இதிலே ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** சட்டமன்ற உறுப்பினர்களைப் போட வேண்டாமென்று சொல்லவில்லை. தாராளமாகப் போடலாம். அதை வரவேற்கிறேன். நான் சொன்னது, ஆண்டு

தோறும் இந்த மாதிரி வாரியங்களை ஆங்காங்கு உருவாக்கும் நேரத்தில் டுப்ளிகேஷன் ஆப் ஒர்க் ஏற்படக்கூடாது என்பதுதான். ஒரு கார்ப்பரேஷன் தலைவர் அந்த இலாகா மந்திரி என்ற வகையிலே அதே இலாகாவிலே டுப்ளிகேஷன் ஆப் ஒர்க் வராத வகையில் திட்டங்களை வகுக்க வேண்டுமென்று சொன்னேன். இதிலே அரசாங்கத்திற்கு நல்ல பெயர், கெட்ட பெயர் என்பது பொது மக்கள் முடிவு செய்ய வேண்டியது. அதைப்பற்றி நான் ஒன்றும் குறிப்பிடவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** செலவைப் பற்றிக் குறிப்பிட்டார்கள், விவரமாக குறிப்பிட்டார்கள். அதற்கு விளக்கம் சொன்னேன். அதிகாரம் பற்றிச் சொல்கிறார்கள். அதுவும் தவறான கருத்து. வாரியத்தின் நிர்வாகத்திலுள்ள அன்றாடப் பொறுப்புகளில் அரசாங்கம் தலையிடக்கூடாது. அங்கிருந்து அரசாங்கத்திற்கு வந்து அரசாங்கத்தின் ஒவ்வொரு இலாகாவையும் தாண்டி அமைச்சரிடம் வந்து பரிசீலிக்கப்பட்டு முடிவு எடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது என்பதற்காக அன்றாட வேலைகள் வேகமாக நடைபெறவேண்டும் என்று தான் வாரியம் அமைக்கப்படுகிறது. டூப்ளிகேஷன் ஆஃப் ஒர்க் என்றால், காலதாமதம் அந்தப் பொருள் சரியல்ல. பொதுவாக கொள்கைப் பிரச்சினை மட்டும்தான். நேரடியாக அந்தத் துறை அமைச்சரிடம் வருகிறது. அவர் கொள்கைப் பிரச்சினையை வரையறுத்துக் கொடுக்கிறார்கள். ஆகவே வாரியம் உருவாக்கியதால், அதற்கு ஒரு தலைவரைப் போட்டதால் இரட்டிப்பு வேலை ஏற்படுகிறது என்று சொல்வது தவறு. காலதாமதம் ஏற்படுகிறது என்று சொல்வதும் தவறு. வேகமாகச் செயல்படவும் காலதாமதத்தைக் குறைக்கவும்தான் இந்த வாரியம் அமைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இந்த மசோதாவை ஏற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, may I know whether the enumeration given is illustrative or exhaustive ? That is one point. Another point for clarification is this. There is a corresponding legislation passed by Parliament. Is it proper to re-enact it here? For these two, clarifications are requested from the Hon. Minister.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** 'ஆபிஸ் ஆப் பிராபிட்' என்ற வார்த்தையைப்பற்றி சட்டத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. பல நீதிமன்றங்களின் தீர்ப்புகள் இருக்கின்றன. நம்மைப் பொறுத்தவரையில் சட்டமன்றத்திற்கு [illegible] வரக்கூடிய பிரச்சினைகளை மட்டும் ஆராய்ந்து இருந்து என்று ஒரு சட்டம் இன்றல்ல, பல ஆண்டுகளாகவே சட்டப் புத்தகத்தில் இருக்கிறது. 1951-ம் ஆண்டிலிருந்து அப்போதைக்கப்போது எந்தெந்தப் பதவிகளுக்கு டிஸ்க்வாலிபிக்கேஷன் வரக்கூடாது என்று கருதுகிறோமோ அவற்றையெல்லாம் சொல்லி விளக்கம்



கொடுக்கிறோம். விளக்கங்கள் இருக்கின்றன. இதில் வராத விளக்கங்கள் இருக்குமானால், நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு, ஆபிஸ் ஆப் பிராபிட் பற்றி விளக்கம் தர வாய்ப்பிருக்கிறது. இது எக்ஸாஸ்டிவ் என்று சொல்லமுடியாது. அரசாங்க உத்தரவுகளின் படி என்னென்ன வாரியங்கள், என்னென்ன பதவிகள் வருகின்றனவோ அவற்றைச் சேர்க்கிறோம்.

பாராளுமன்றத்தைப் பொறுத்தவரையில் பாராளுமன்றத்தில் அவர்கள் சட்டம் இயற்றியுள்ளார்கள். பாராளுமன்றக் குழுக்கள், அல்லது மத்திய அரசு நியமிக்கிற குழுக்கள் இவைகளில் சட்டமன்ற, மேலவை உறுப்பினர்கள் வருவார்களேயானால் அது இந்த மன்றத்தைப் பொறுத்தவரையில் டிஸ்குவாலிபிகேஷனாக வரக்கூடாது என்ற விளக்கத்தை மட்டும் தந்திருக்கிறோம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அந்தந்தக் கார்ப்பரேஷன்ஸ் பற்றி, குறிப்பாக டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் பின்னால் வரும் என்று சொன்னார்கள். அப்படி வரும்போது செய்து கொள்கிறோம் என்று சொன்னார்கள். இப்போதுள்ள பல கார்ப்பரேஷன்ஸ் விடப்பட்டிருக்கின்றனவே. இப்போது ஸ்லம் க்ளியரன்ஸ் போர்ட் இருக்கிறது. அதன் தலைவரான மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம அரங்கண்ணல் அவர்கள் மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் அவரை இதில் சேர்க்கவில்லையே என்று. டிஸ்குவாலிபிகேஷன் இப்போது இருக்கிறது. அதைப் பற்றி ஒன்றும் சொல்லாமல் விட்டிருக்கிறீர்களே, அக்ரோ இண்டஸ்ட்ரீஸ்-ஐ மட்டும் சேர்த்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** என் பதிலைக் கவனித்திருந்தால் தெரிந்து கொண்டிருக்கலாம். அந்தந்தக் கட்டங்கள், ஸ்லம் போர்ட் அல்லது வாட்டர் போர்ட் ஆக்ட் வரும்போது சட்டத்தில் இணைந்து டிஸ்குவாலிபிகேஷன் இல்லை என்று போட்டு விடுகிறோம். வராது விடப்பட்டவர்களை இதில் கொண்டு வருகிறோம் என்று சொன்னேன்.

MR. DEPUTY SPEAKER : The question is :

"That the Tamil Nadu Legislature (Prevention of Disqualification) Amendment Bill, 1971 (L.A. Bill No. 41 of 1971) be taken into consideration".

The motion was put and carried and the Bill was taken into consideration clause by clause.

Clause 2 was put and carried.

Clause 1, the Enacting formula and the Long Title were put and carried.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move "That the Bill be passed".

The motion was put and carried and the Bill was passed into law.

## (இ) 1971-ம் ஆண்டு மதுரை நகர மாநகராட்சி (திருத்த-பதவிக் கால நீட்டிப்பு) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, "1971-ம் ஆண்டு மதுரை நகர-மாநகராட்சி (திருத்த-பதவிக் கால நீட்டிப்பு) சட்டமுன்வடிவு * ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட வேண்டும்" என்று விழைகிறேன்.

1971-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த-பதவிக் கால நீட்டிப்பு) சட்டத்தினால், சென்னை மாநகராட்சி மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களின் பதவிக் காலம் 1—11—1973 வரையிலும், நகராட்சி மன்றங்களின் தற்போதைய உறுப்பினர்களின் பதவிக் காலம் 1—5—1974 நண்பகல் வரையிலும், நீட்டிக்கப் பட்டுள்ளது. இக் காலத்திற்குப் பின்னர் தேர்ந்தெடுக்கப்படும் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், நகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக் காலமானது மேற்கூறிய சட்டத்தினால் ஐந்தாண்டுகளாக நிர்ணயிக்கப்படுள்ளது. மதுரை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக் காலத்திற்கும் இது போன்றது [illegible] நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கேற்ப, 1971-ம் ஆண்டில் மதுரை மாநகராட்சி (திருத்த-பதவிக் கால நீட்டிப்பு) சட்டமுன்வடிவு இப் பேரவையின் ஆய்விற்கு வைக்கப்பட்டுள்ளது. அதில்—

(அ) மதுரை மாநகராட்சி மன்றத்தின் தற்போதைய உறுப் பினர்களின் பதவிக் காலம் 1-5-1974-ம் நாள் நண்பகல் வரை நீட்டிக்கப்படவும்;

(இ) அதற்குப் பின்னர் சாதாரணத் தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் மதுரை மாநகராட்சி மன்ற உறுப்பினர் களின் பதவிக் காலத்தை ஐந்து ஆண்டுகளாக நிர்ணயிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

இவை தவிர, இன்னொரு பிரிவும் இச் சட்டமுன்வடிவில் சேர்க் கப்பட்டுள்ளது. அதாவது, இதர சட்டங்களில் நகராட்சிக்குப் பொருந்தக்கூடிய இனங்களெல்லாம் மதுரை மாநகராட்சிக்கும் சமமாகப் பொருந்துவதற்கு வகை செய்யும் முறையில் நான்காம் பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது. மதுரை நகராட்சி மாநகராட்சியாக உயர்த்தப்பட்டதால், சட்டங்களை [illegible] மாநகராட்சிக்குப் பொருந்துமாறு செய்ய அல்லது பொருள் விளக்கங்களை அளிப் பதிலுள்ள சிரமங்களை அல்லது இடையூறுகளை இப்பிரிவு அகற்றும்.

இச் சொற்களோடு இச் சட்டமுன்வடிவை ஆய்ந்து எடுத்துக் கொள்ளுமாறு இப் பேரவைக்குப் பரிந்துரை செய்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே இந்த மசோ தாவில் சென்னை, மதுரை கார்ப்பரேஷன் இவைகளின் பதவிக்காலம் ஐந்தாண்டுகளாக உயர்த்தப்பட்டிருக்கிறது

---

* 20-10-1971-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





என்பது ஒரு அம்சம். இரண்டாவதாக வரும் அம்சம் மதுரை கார்ப்பரேஷனைப் பொறுத்தது. மதுரை கார்ப்பரேஷனைப் பொறுத்தவரையில் சில விஷயங்களை இந்த மசோதாவின் பேரில் தெரிவிக்க வேண்டிய அவசியமிருக்கிறது என்று கருதுகிறேன். இங்கே கொடுப்பதில் ஐந்தாவது பிரிவில் பிரிவில்

Notwithstanding anything contained in the principal Act as amended by this Act, or in any other law for the time being in force, the term of office of the councillors of the Municipal Corporation of Madurai holding office as such on the date of the commencement of this Act shall extend up to the noon of the first day of May 1974 and thereafter the provisions of section 61 and 62 of the principal Act as amended by this Act shall, so far as may be, apply to the next ordinary election to be held.

என்றிருக்கிறது. இந்தப் பகுதியை எடுத்து வைத்துப் பார்த்தால் இந்த ஆண்டு மே மாதம் 1-ம் தேதியிலிருந்து மதுரை நகராட்சி மாநகராட்சியானது என்பது எல்லோரும் வரவேற்கக் கூடியதொரு அம்சமாகும். மாநகராட்சியானதற்குப் பின்னால் சில பகுதிகளை இந்த நகரத்தோடு சேர்க்கக்கூடிய ஒரு அதிகாரமும் மூலச் சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கான நடவடிக்கைகள் எடுத்தால்தான் மதுரை நகரசபை என்பது விட்டு மாநகராட்சி மன்றமாக அது தெளிவாக அமையமுடியும். அப்படி வரும்போது ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட நகரசபை உறுப்பினர்கள் காலம் ஒரு ஆண்டு கம்மியாகிறது. ஒரு ஆண்டு கம்மியாக இருக்கக்கூடிய காலத்தை முடித்துவிட்டு பின்னால் கார்ப்பரேஷன் தேர்தல்கள் நடத்தினால்தான் மதுரை மாநகராட்சியின் அந்தஸ்து நீடிக்கப்படும். அப்படியில்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரசபை உறுப்பினர்கள், அன்றிருந்த நிலைமையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை தொடர்ந்து வைத்துக் கொண்டு அவர்கள் மாநகராட்சியை நிர்வாகம் செய்யவேண்டும் என்ற நிலை ஏற்பட்டால் அது மக்கள் மத்தியில், நாம் குறிப்பிட்ட ஒரு தொகுதியில், குறிப்பிட்ட ஒரு வார்டில் யார் யார் வரவேண்டும் என்று நினைத்தோமோ அவர்கள் இல்லாதிருக்கிறார்களே, பொறுப்பானவர்கள் இன்னும் சிலர் வந்திருக்க முடியுமே என்று கருத்து மக்களிடம் இருக்கிறது. ஆகவே மதுரை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், ஏற்கனவே இருக்கக்கூடிய உறுப்பினர்கள் காலம் எப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டார்களோ அந்தக் காலத்தோடு முடிய வேண்டும். முடிந்து, அதற்குப் பின்னால் மாநகராட்சிக்கு அவர்கள் தேர்தலிலே நிற்கிறார்கள். தேர்தல் நடைபெறுகிறது என்ற முறை இருக்கவேண்டும். வேண்டுமானால் 3 மாதம் 6 மாதம் இந்த அவசரக் காலத்தை ஒட்டி ஒத்திப்போடலாம். ஏற்கெனவே நகரசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களே கார்ப்ப ரேஷனுக்கும் உறுப்பினர்களாக 5 ஆண்டுகாலம் தொடர்ந்து இருப்பார்கள் என்று சொல்வது அவ்வளவு சரியானது அல்ல. [illegible]தோ அவசரமாகச் செய்தோம், ஆதலால் உடனடியாக தேர்தல்

[திரு கே. டி. கே. தங்கமணி] [1971 டிசம்பர் 14

நடத்த முடியவில்லை, ஆகவே, நகரசபை உறுப்பினர்களையே மாநகராட்சி உறுப்பினர்களாக நாம் ஒப்புக்கொண்டோம். அந்த நிலையை இந்தத் திருத்தத்திலே கொண்டு வருவது சரியல்ல என்று நினைக்கிறேன்.

அடுத்து, இப்படி எத்தனை ஆண்டுகாலம் என்பதைப் பொறுத்த வரையில் இன்னும் கொஞ்சம் அரசாங்கம் ஆலோசித்து செய்வது நல்லது என்று நினைக்கிறேன். கார்ப்பரேஷன், நகரசபை உறுப்பினர்களின் பதவி காலம் 3 ஆண்டு காலம் என்று இருப்பதை திடீரென்று மாற்ற வேண்டுமா என்பதை அரசாங்கம் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த இரண்டு அம்சங்களை மனதில் கொண்டு இந்தத் திருத்தம் இப்போது வருவதற்கு உடனடியாக அவசியம் இல்லை, இந்தத் திருத்தத்தால் ஏற்படக்கூடிய பலன் என்ன, நான் சொல்லியபடி நகரசபை கவுன்சிலர்கள் கார்ப்பரேஷன் கவுன்சிலர்களாக இருப்பார்கள், இன்னும் 2-3 வருஷங்கள் இருப்பார்கள், இதைத் தவிர வேறு எந்த முக்கியமான நிலையும் வந்ததாகத் தெரியவில்லை. இந்தத்திருத்தம் வராமலேயே சென்னைக்கார்ப்பரேஷனும், மதுரைக்கார்ப்பரேஷனும் இயங்கமுடியும். அந்த காலக்கட்டத்தை ஒட்டி, மதுரைக்கார்ப்பரேஷனுக்கும் தேர்தல் நடத்த தேர்தல் தேதி குறிப்பிட்டு தேர்தல் நடத்தினால் நல்லதாக இருக்கும் என்று கூறி, இந்த மசோதா உண்மையிலேயே தேவை தானா, தேவை இல்லை என்று கருத்தை இந்த நேரத்தில் நான் வலியுறுத்தி கூற ஆசைப்படுகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: Mr. Deputy Speaker, Sir, when the Hon. Minister presented this Bill he brought in a comparison between Madras Corporation and Madurai Corporation. Madurai Corporation is constituted under a new Bill and it has been formed as a new Corporation. There are many aspects in the new Bill which need thorough analysis. First of all, the question is whether this Council is empowered to elect the minimum number of scheduled caste members as required under the Madurai City Municipal Corporation Act. That has to be considered. The second point is, the maximum number of women members are also fixed under this Act. So, the next question is who are the electoral to elect these new people under the new Act. That has got to be considered. There have been many, many discrepancies, particularly in the Madras City Municipal Corporation new Amendment Act.

We are at a loss to understand if the elected members exceed 12 amongst the scheduled castes, whether any co-option can take place or not-that itself is a question of law. Similarly I do not want this Assembly to hasten into any mistake by passing this Bill at this stage without going thoroughly into this question. As Mr. K. T. K. Thangamani has stated, if new areas have to be added to the Madurai Corporation, they cannot wait for two years



1971 டிசம்பர் 14] [Thiru K. M. Subramanian]

to get into the Council and bring in their representatives to the Council. Because new areas have been added, there should be representatives for them. Who are going to represent these new areas and who are the electorates that are going to elect the new Harijan members? Who are the electorates that are going to elect women members that are necessary under the Act for the Madurai Municipal Corporation.

I would strongly support Mr. K. T. K. Thangamani and request the Hon. Minister not to bring in any legislation bit by bit, but a comprehensive legislation by which the present Municipal Council will be abolished. Because it is not like other Municipalities and it has no continuity. Up to now it was a Municipality and it has been upgraded into a Corporation. When a Municipality grows into a Corporation, the natural concomitants that are necessary for the constitution of the Corporation must also follow. I therefore, suggest that the Bill be kindly dropped and a new Bill brought forward after taking all aspects into consideration.

DR. H. V. HANDE: Sir, I oppose this Bill for the following reasons.

Recently, we passed an enactment in this House converting this Madurai Municipality into a Corporation and we also passed an amendment in this House with regard to the Madras Corporation. In that context we brought in certain matters and certain assurances were given by the Hon. Minister here on the floor of this House in connection with the various Commitees and other things. Assurances were given as to the method of election and selection and all sorts of things.

Now with regard to the Madurai Municipal Corporation I submit that we have to elect so many other bodies. We have to co-opt members—women, Harijans and others. In that process I do not know what the Hon. Minister is going to assure this House. But my submission is whatever assurances are given in this House, they are not properly carried out. That is an important point which I would like to bring to the notice of the hon. Members of this House.

The House is above the Corporators. The House has greater powers and wider powers and the House has got superseding powers of the Corporation of any particular town or City in this State. This is the highest body as far as the State is concerned, just as the Parliament is the highest body as far as the country is concerned. As far as the State affairs are concerned, this House is the highest body and any assurances given in this House has to be properly protected by the Ministers outside. We raise a debate here, we argue and we try to persuade the Ministers and sometimes we request the Ministers and the Hon. Ministers give some assurances. But those assurances are summarily watered down and summarily rejected. Entirely different resolutions having opposite ideas are given in the Corporation.

[Dr. H. V. Hande] [1971 டிசம்பர் 14

Then are we subservient to the ideas of the Corporation? That is something which we cannot understand. How is it? Resolutions passed in the Corporation get preference over the resolutions passed in the Assembly. Assurances given in the Assembly are completely set at nought, completely negatived in the Corporation Council. That is something I cannot understand. I would request the Hon. Ministers to protect the self-respect and dignity and the powers of the members of this House. Ministers must be assertive about the assurances given in this House.

In this House we passed a resolution saying that proportional representation has to be given in the Committee. The resolution received support from all sides and there was no contradiction or conflict. The Minister clearly said that he was going to 'o.k' it and it was passed. What happened to proportional representation? I think they have passed a resolution giving no proportional representation. Hereafterwards it is going to be according to the old system itself. In what context it was brought here and the assurance was given here? It was brought under a particular context.

Especially when the Opposition is of a smaller size, the Hon. Minister said that the Opposition has to be given proper representation. Under that context it was brought. In fact, I was so much upset when I read that resolution passed in the Corporation

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இது நாளைக்கு வர இருக்கிறது. நாளைக்கு பேச வேண்டியதை மாண்புமிகு உறுப்பினர் இன்று பேச வேண்டியதில்லை. மதுரை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் பெர்மனென்ட் 'ஸ்டாண்டிங் கமிட்டி' யைப் பற்றி நாளைக்கு வர இருக்கிற காரணத்தால், அதைப் பற்றி நாளைக்கு கருத்து தெரிவிக்கலாம், இன்று பேச வேண்டியதில்லை என்று கேட்டுக்கொள்கிறேன்.

Dr. H. V. Hande: I know what is going to happen. Because it is coming in the form of a resolution. I know the fate of it. Atleast now when we are drafting certain legislation at this stage, let us be cautious. If the fate of a statutory assurance itself is what we are seeing, then what is the fate of resolutions, I know. I know fully that it is coming tomorrow. But I am only bringing it earlier to the attention of the Government because at least at this stage some decision may be taken. What is going to happen? Once a resolution is brought in, no amendment will be accepted. I know all these things. At least at this stage let the Government take note of what happened.

Madurai Municipality was elected long ago. About 30 to 40 members are there as Municipal Councillors. But now it has been upgraded into a Corporation. It is something like suddenly declaring that all the M.L.As. will hereafter become M.Ps. Afterwards they may give extension for two or three years. It is something which I cannot understand [illegible] tic.



1971 டிசம்பர் 14] [Dr. H. V. Hande]

So, how are you going to create an impression among the public that we are believers in democracy? That is the most important point which I want the Hon. Minister to take into consideration. In other words, the people who have actually voted them to become Municipal Councillors have been given no chance to express their opinion. Now we want to ride rough shed over their heads by asking for the extension of the period by two years. After two years, what is the legislation which the Hon. Minister is going to bring forward in this House?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** துணைத்தலைவர் அவர்களே, மதுரை நகராட்சியை, மாநகராட்சியாக ஆக்கிய கருத்தையே ஏற்றுக்கொள்கிறீர்களா? அதுவே சட்டமாகிவிட்டது. அதை ஏற்றுக் கொள்ளும் நிலையில் இருக்கிறீர்களா அல்லது அதையும் மறுக்கிறீர்களா?

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** ஏற்றுக் கொண்டாகிவிட்டது. அப்பொழுது சில வாக்குறுதிகள் கேட்டோம். ஏராளமாக, பல வாக்குறுதிகளைக் கேட்டோம். மதுரை மாநகராட்சி நல்ல வகையில் நடக்கவேண்டும் என்றுதான் அப்படிக் கேட்டோம். அந்த நேரத்தில் வாக்குறுதிகள் கொடுத்தார்கள். இரண்டு ஆண்டு களில் பதவிக் காலம் முடியும் வரையில் நகராட்சி உறுப்பினர் தொடர்ந்து இருப்பார்கள் என்று சொன்னார்கள். அப்படி இந்த மன்றத்தில் ஒத்துக்கொண்டார்கள் அந்த வாக்குறுதியின் நிலை இப்பொழுது என்ன என்று கேட்கிறேன். மூன்று ஆண்டு களுக்குதான் இந்த நகராட்சி உறுப்பினர்கள் இருப்பார்கள் என்று சொல்லப்பட்டது. இப்பொழுது மீண்டும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்க வேண்டும் என்று கேட்கும்போது, அப்பொழுது கொடுக்கப் பட்ட வாக்குறுதியோடு ஒப்பிட்டுப் பார்த்து, அந்தமாதிரி இதுவும் ஆகிவிடக்கூடாது என்றுதான் சொல்லுகிறேன். அமைச்சர் அவர்களுடைய வாக்குறுதிகளில் நாங்கள் நம்பிக்கை இழந்து விடக்கூடாது என்கிற நிலை இருக்க வேண்டும் என்று கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

* **திரு. எம். சுரேந்திரன்:** துணை சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவின் மீது திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கூறிய கருத்தை எனது கட்சியின் சார்பில் ஏற்றுக்கொள்கிறேன். ஜனநாயகக் கொள்கைகளுக்கு அங்கீகாரம் கொடுக்கும் நாம். உங்களிடத்தில் நம்பிக்கை வைக்க வேண்டும். தேர்தல் நடக்கும் காலம். உறுதி அளிக்கப்பட்டது. அதை மீண்டும் மாற்றுவது அவ்வளவு சரியானது அல்ல. அதோடு நகர சபையாக இருந் தாலும், கார்ப்பொரேஷனாக இருந்தாலும், பஞ்சாயத்தாக இருந்தாலும், அவையெல்லாம் ஜனங்களுடைய பிரதிநிதி ஸ்தா பனம். சட்ட மன்றத்தையோ, பாராளுமன்றத்தையோ போல இவற்றையும் கருதவேண்டும். சட்டமன்றம், பாராளுமன்றம் இவற்றை நீடிக்க முடியாதது போல், இவற்றையும் செய்ய வேண்டும். திரு. தங்கமணி அவர்கள் குறிப்பிட்ட கருத்தை என் கட்சியின் சார்பில் ஆதரிக்கிறேன் என்று சொல்லி முடிக் கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இந்தப் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ள மதுரை மாநகராட்சி (திருத்த பதவிக்கால நீட்டிப்பு) மசோதா ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்கிற தீர்மானத்தின் பேரில், உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். மதுரை மாநகராட்சியாக ஆகிவிட்டாலும், நகராட்சி மன்றமாக இருந்தால் எப்படி ஐந்தாண்டுக்காலம், 1972 வரையில் இருப்பார்களோ அப்படித்தான் மாநகராட்சிக்கும். 96 நகராட்சிகளின் காலத்தை இந்த ஆண்டில் தேர்தல் நடத்த முடியாது என்று மேற்கொண்டு ஐந்தாண்டு என்று நீட்டித்திருப்பதுபோல்தான் மதுரை மாநகராட்சிக்கும், மாநகராட்சி ஆகிவிட்டது என்பதால் அதன் நிலை வேறு என்பதல்ல.

மதுரையை மாநகராட்சியாக ஆக்க சட்டதிட்டங்கள் நிறைவேற்றியிருக்கிறோம். அதேபோல் பேரூராட்சிகளை நகராட்சிகளாக மாற்றுகிறோம். பல்வேறு வார்டுகளாகப் பிரித்து, பேரூராட்சியின் காலத்தை நீட்டித்து, [illegible] ஆணையர் போட்டு, அதற்கான முன்னேற்பாடுகள் எடுத்து, தேர்தல் நடத்த ஏற்பாடு செய்கிறோம். இப்பொழுது நகராட்சியை மாநகராட்சியாக ஏற்றுக்கொள்வது என்றும், இப்பொழுது இருக்கும் தலைவரை மேயராக ஏற்றுக்கொள்வது என்றும், துணைத் தலைவரை, துணை மேயராக ஏற்றுக்கொள்வது என்றும், சட்டத்தை இயற்றி, ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

அது மட்டுமல்லாமல், இரண்டு பேரு[illegible]மானத்தைத் தாண்டியிருக்கிறது என்று மாநகராட்சி ஆக்கியிருக்கிறோம் என்றாலும், இன்னமும் நகராட்சியின் இலக்கணத்தைப் பெற்றிருக்கிறது. இரண்டு [illegible] நகராட்சிக்குப் பொருந்தும் என்பதை, ஐயப்பாடு இன்றி, மாநகராட்சிக்கும் பொருந்தும் என்ற [illegible] போடுகிறோம். ஆகவே, ஐந்தாண்டுக் கால நீடிப்பதில் தவறு இல்லை. இதில், கோ-ஆப்டெட் உறுப்பினர்கள் [illegible] பெண்கள். ஒரு அரிசன உறுப்பினர்—[illegible]. இதில் சந்தேகமான சட்டப் பிரச்சினையோ தவறோ இல்லை. வேறு பகுதிகள் சேர்க்கப் படுவது என்பது [illegible] பிரச்சினை. சென்னையில் பிரிப்பது [illegible] செய்யப்படும். [illegible] என்பது 81 [illegible] 53 இடம் இருக்கிறது.

ஆகவே, இந்தத் திருத்தத்தில் சட்ட [illegible] பிரச்சினை இல்லை. நானே [illegible] பேசவேண்டிய கருத்துக்களை [illegible] சொன்னார்கள். எதையும் அவைக்குக் கொண்டுவராமல் செய்தால் [illegible] தவறு. திருத்தங்கள் கொண்டு வர எப்பொழுதும் உரிமை உண்டு. ஆகவே, அவையில் கொண்டு வந்து உறுப்பினர்களுடைய





கருத்துக்களைக் கேட்டுச் செய்வதில் தவறு இருக்கவில்லை. அவைக்கு வராமல், உறுப்பினர்கள் கருத்து கேட்காமல் செய்தால் அப்பொழுது உறுதிமொழியை மீறியதாக இருக்கும். நாளை உறுப்பினர்களுடைய அபிப்பிராயங்களையும் கேட்கப்போகிறோம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** சார், ஐ வாண்ட் தி ஆனரபிள் மினிஸ்டர் டு கீப் அப் ஓபன் மைண்ட்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, எல்லா உறுப்பினர்களும் திறந்த மனதோடுதான் சொல்கிறார்கள். காரணகாரியங்களை உறுப்பினர்கள் நாளைக்கு எடுத்துச் சொல்லப் போகிறார்கள். அதற்குப் பிறகு முடிவு நாளைக்கு வர இருக்கிறது. எனவே, இந்தச் சட்டத்தைக் கொண்டுவரக் கூடிய முறையில் சட்டப் பிரச்சினை ஒன்றுமில்லை. எனவே, இதைச் சட்டமாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: The question is—

'That the Madurai City Municipal Corporation (Amendment and Extension of Term of Office) Bill, 1971 be taken into consideration'.

The motion was put and carried and the Bill was taken into consideration clause by clause.

Clauses 2 to 5 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1971-ஆம் ஆண்டு மதுரை நகர மாநகராட்சி (திருத்த—பதவிக் கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## (ஈ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே "தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவை * ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

1964-ம் ஆண்டு இந்திய நாணய (திருத்த) சட்டம் (மத்தியச் சட்டம் 17/1964) நிறைவேற்றப்பட்டதன் விளைவாக, மேற்படி சட்டத்தில் வருகிற 'நயா பைசா', 'நயா பைசே' என்னும் சொற்களுக்குப் பதிலாக "காசு" என்னும் சொல் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அதற்கேற்ப தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரிச்சட்டத்தின் 4-வது பிரிவைத் திருத்தக் கருதப்படுகிறது.

---

* 20—10—1971ல் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. ப. உ. சண்முகம்] [1971 டிசம்பர் 14

ஒவ்வொரு காட்சிக்கும் 'காட்சி வரி' எனப்படும் கூடுதல் வரியை விதிக்க, மேற்படி சட்டத்தின் 4-வது பிரிவு வகை செய்கிறது. ஆனால், 'காட்சி' என்ற சொல்லுக்குச் சட்டத்தில் பொருள் விளக்கம் கூறப்படவில்லை. எனவே, தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கைகள் சட்டத்தின் 4-வது பிரிவுக்குப் புதிய ஒரு விளக்கத்தைச் சேர்த்துக்கொள்வதன் மூலம் 'காட்சி' என்னும் சொல்லுக்குப் பொருள் விளக்கம் கொடுப்பதென்று கருதப்படுகிறது.

மேற்படிச் சட்டத்தின் கீழ்ச் சேர வேண்டிய நிலுவைகளை, நிலவரி நிலுவையைப் போல வசூலிப்பதற்கு, மேற்படி சட்டத்தின் 10-வது பிரிவு வகை செய்கிறது. அத்தகைய வசூல்கள் தற்போதைய விதித் துறையின்கீழ் முன்னரே உள்ள வில்லங்கங்களுக்கு உட்பட்டவையாகும் என்று ஐயங்கள் தெரிவித்துள்ளன. எனவே, மேற்படி சட்டத்தின்கீழ்ச் சேரவேண்டிய தொகைகள், நிலவரி தொடர்பாக ஆகக்கூடிய உரிமைக்குட்பட்டு, உரிமையாளர்களின் சொத்தின்மீதுள்ள எல்லா உரிமைக் கோரிக்கைகளையும்விட மேலோங்கி நிற்கும்.

யாரிடமிருந்து உரிமையாளருக்குத் தொகை சேரவேண்டுமோ அல்லது தொகை சேரவேண்டியதாயிருக்குமோ அவரிடமிருந்து அல்லது உரிமையாளருக்குத் தக்காக அல்லது அவரது கணக்கில் தொகை வைத்துள்ள அல்லது பின்னர் வைத்திருக்கக் கூடிய ஒருவரிடமிருந்து மேற்படி சட்டத்தின்கீழ்ச் சேரவேண்டிய தொகைகளை வசூலிக்க தற்போதைய சட்டத்தில் வகை செய்யப்படவில்லை. மேலும், கலைக்கப்பட்ட கூட்டாண்மை நிறுவனங்களிடமிருந்தோ அல்லது பாகப் பிரிவினையான இந்துக் குடும்பங்களிடமிருந்தோ மேற்படி சட்டத்தின்கீழ்ச் சேரவேண்டிய தொகைகளை வசூலிக்கவும் இச்சட்டத்தில் வகை செய்யப்படவில்லை.

(Some hon. Members were seen talking with the officials in the Officials' Gallery).

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, on a point of order. Some hon. Members are speaking with the officials.

MR. DEPUTY SPEAKER : Let the hon. Members come to their seats.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மேற்படி சட்டத்தின்கீழ்ச் சேரவேண்டிய தொகைகளைச் சொல்லிய முறையில் வசூலிக்க வகை செய்யும்பொருட்டு, தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தில் கண்டுள்ள விதித் துறைகளைத் தழுவி இச்சட்டத்திலும் ஏற்ற விதித் துறைகளைச் செய்வதென அரசு முடிவு செய்துள்ளது.

மேற்படிச் சட்டத்தின்கீழ் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளின் கீழ் நடக்கும் ஒரு விசாரணையின் தொடர்பாக சாட்சியம் கூறவும் ஆவணங்களைக் கொண்டுவந்து காட்டவும் ஒருவருக்கு



1971 டிசம்பர் 14] [திரு. ப. உ. சண்முகம்]

சம்மன் அனுப்பி வரவழைப்பதற்கு தமிழ் நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரி விதிகளைச் சேர்ந்த 58-ஏ, 59, 60-ஆம் விதிகள் வகை செய்கின்றன. இது குறித்து சட்டத்திலேயே திட்டவட்டமான விதித்துறை செய்யப்பட வேண்டுமென்று அரசு கருதுகிறது. மசோதாவின் 7-வது பிரிவு இதற்கு வகை செய்கிறது.

7-வது பிரிவின் 2-வது உட்பிரிவு சம்மனில் கூறியபடி நடக்கத் தவறினால் ரூ. 500-க்கு மேற்படாத தண்டத்தை விதிக்க வரி விதிக்கும் அதிகாரி, மேல் முறையீட்டு அதிகாரி, மற்றும் சீராய்வு அதிகாரிக்கு அதிகாரம் அளிக்கின்றது. மறுபரிசிலனையில் அரசு இந்த உட்பிரிவை நீக்கிவிட முடிவுசெய்துள்ளது. இதற்கேற்ற ஒரு அரசுச் சார்புடைய திருத்தம் தக்க தருணத்தில் முன்னுரைக்கப்படும்.

இச்சட்டத்திற்கெதிரான குற்றங்களை இசைந்து தீர்த்துக்கொள்வதற்கு சட்டம் இப்போது வகைசெய்கிறது. விதிகளுக்கெதிரான குற்றங்களையும் இசைந்து தீர்த்துக்கொள்ள இந்த விதித்துறையில் வகைசெய்யப்பட வேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது.

நடைமுறைக்கு வசதியாய் இருக்கும்பொருட்டு, வரி கட்டணம், அபராதம் அல்லது செலுத்தத்தக்க வேறு ஒரு கட்டணத்தையும் திருப்பிக் கொடுக்கவேண்டிய தொகையையும் மிக அண்மையிலுள்ள ரூபாய்க்கு முழுமையாக்க இம்மசோதா வகை செய்கிறது.

தமிழ்நாடு 1864-ஆம் ஆண்டு வரிவசூல் சட்டம் சென்னை மாநகருக்கு நீடிக்கப்பட்டதன் விளைவாக மேற்படிச் சட்டத்தின் 10-ஏ பிரிவைத் தக்கவாறு திருத்த இம்மசோதாவின் 5-வது பகுதி முற்படுகிறது.

பேரவைத் துணை தலைவர் அவர்களே, இம்மசோதாவை ஏற்குமாறு இப்பேரவையினை நான் வேண்டுகிறேன்.

THIRU J. JAMES : Sir, I move the following amendment :—

That the Tamil Nadu Entertainments Tax (Amendment) Bill, 1971 be referred to a Select Committee of the House consisting of.........members of the House. (Names to be given later).

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I second the amendment.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மிஸ்டர் டெபுடி ஸ்பீகர், சார், இந்த மசோதாவில் கூறியிருக்கக்கூடிய சில அம்சங்கள் வரவேற்கப்படக் கூடியவை. முதலில் 8-வது பிரிவை குறிப்பிட்டு எனது கருத்தைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். இந்தப் பிரிவில், சட்டத்திற்குப் புறம்பான, விரோதமான காரியங்கள் எல்லாம் குற்றம் என்று கருதப்படும் என்றும், அதேமாதிரி அந்தச் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ள விதிகள், புறக்கணிக்கப்படவில்லை என்றாலும் கூட அவைகளும் குற்றமாகக் கருதப்படும் என்று சேர்க்கப்பட்டுள்ளது. பொதுவாக, ஒருவர்

சட்டத்தை மீறுகிறார் என்ற நிலைமை ஏற்பட்டாலே அந்தச் சட்டத்தின்கீழ் வந்திருக்கக் கூடிய விதிகளை மீறுகின்றபோது பாதிப்பு ஏற்படுகிறது என்று ஜெனரல் கிளாஸஸ் ஆக்ட்-இல் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. எனவே, ஒவ்வொரு சட்டத்தையும் கொண்டுவருகிற காலத்திலே எல்லாம் அந்தச் சட்டத் திருத்தம், அதிலே கொண்டு வரக்கூடிய விதிமுறை அவசியம் இல்லை என்று கருதுகிறேன். அது இல்லாமலேயே கூட அந்த விதி புறக்கணிக்க கூடிய காலத்தில் அதன் பேரிலுள்ள நடவடிக்கைகளை எடுக்க முடியும். ஏனென்றால், இந்த மூலச் சட்டத்திலேயே இந்தச் சட்டத்தின்கீழ் விதிகள் விதிக்க என்று அதிகாரம் வாங்கிவிட்டு அந்தச் சட்டத்தை யாராவது மீறுகிறார்கள் என்று சொன்னால், அந்த மீறுவதற்குரிய தண்டனை கண்டிப்பாகக் கொடுக்கப்படும். ஆகவே, இது தேவையற்ற தீர்மானம் என்று முதலில் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, 4-வது பிரிவு. இது வரவேற்கத்தக்க ஒரு அம்சம், என்று நான் கருதுகிறேன். இந்த நான்காவது பிரிவிலே,

"Without prejudice to the provisions of sub-section (1), and notwithstanding anything contained in any other law for the time being in force, any tax assessed on, or any other amount due under this Act from, the proprietor shall subject to the claim of the Government in respect of land revenue, have priority over all other claims against the property of the said proprietor."

என்று கூறப்பட்டிருக்கிறது. இது உண்மையிலேயே வரவேற்கத்தக்க நல்லதொரு திருத்தம் ஆகும் என்று கருதுகிறேன். ஏனென்றால், இம்மாதிரியான வரிகளையெல்லாம் ஏய்க்கிறார்கள். அப்படி ஏய்க்கிறவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னால் இப்போது லேண்ட் ரெவின்யூ அரியர்ஸ் மாதிரி நாம் வசூலிக்க வேண்டுமென்று சொன்னாலும், காலதாமதம் ஏற்படுகிறது. லேண்ட் ரெவின்யூ அரியர்ஸ் என்ற முறையிலேதான் வரி வசூல் செய்ய வேண்டும் என்றால், கலக்டர் உத்தரவு வாங்க வேண்டும். அதற்குப் பல சங்கடங்கள் எல்லாம் ஏற்படுகின்றன. யார், யார் பணம் கொடுக்க வேண்டுமோ, அவர்களுடைய சாமான்களையும், பண்டங்களையும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்த பின்பு எவ்வளவோ காலம் ஆகிவிடுகிறது. அப்படியிருந்தும்கூட இதைக் கூடச் செய்யக் கூடாது என்ற அளவில் குறைகள் எல்லாம் காணப்படுகிற காரணத்தால், இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பது மிகவும் பொருத்தமானது.

அதே நேரத்தில் வரி ஏமாற்றிக்கொண்டிருக்கிறவர்கள் பேரில் இம்மாதிரி ரெவின்யூ அரியர்ஸ் என்ற முறையில் வசூலிக்கலாம் என்ற அதிகாரம் இருக்கிறதே, இதைப் பயன்படுத்துகிறபோது மாவட்டக் கலெக்டர் போன்றவர்களுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.





மூன்றாவது, இந்த பங்குதாரர்கள் விஷயம். பங்குகளைப் பிரித்ததற்குப் பிறகு பங்குதாரர்கள் கொடுக்க வேண்டிய கடனை தனிப்பட்டவர்கள் கொடுக்க வேண்டாம் என்று ஒரு வாதம் இப்போது எழுந்து இருக்கிறது. இங்கு மட்டுமல்ல, எல்லா இடங்களிலும் பொதுவாக இப்படிப்பட்ட வாதம் இருக்கிறது. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய அளவில் 10-டி பிரிவை கொண்டு வந்தது பொருத்தம் என்றுதான் நினைக்கிறேன்.

ஆகவே இந்த இரண்டாவது, மூன்றாவதுத் திருத்தங்களை அரசு கொஞ்சம் கவனமாகக்கொண்டு, அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இந்தத் திருத்தங்களை எல்லாம் நல்ல முறையில் அமல் நடத்த தக்க அதிகாரிகளிடத்திலே விட்டுவிட வேண்டுமென்றுச் சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவைப் பற்றி ஒரு சில கருத்துக்களைக் கூறிக்கொள்ளலாமென்று ஆசைப்படுகிறேன். முதலிலே இந்த கேளிக்கை வரிச் சட்டத்தைச் சரியான முறையிலே திருத்தி அமைப்பதற்கு இந்த அரசாங்கம் ஆலோசனை நடத்தி, அந்த வகையிலே கேளிக்கை வரியைக் கொண்டு வருவது நல்லது, வரவேற்கத்தக்கது என்று கூறிக்கொள்கிறேன்.

இன்றைக்கு டூரிங் டாக்கீஸ் வைத்து நடத்துப்பவர்கள் உண்மையிலே மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் கேளிக்கை வரி கொடுத்து, சேல்ஸ் டாக்ஸ் கொடுத்து, டிஸ்டிரிபியூட்டர்ஸுக்குச் சேரவேண்டியப் பங்கைக் கொடுத்துவிட்டு, இன்னும் யார் யாருக்கெல்லாமோ கொடுக்க வேண்டியதைக் கொடுத்துவிட்டு, மீதி இருப்பதைப் பார்த்தால் லாபமா வரும்? லாபம் எங்கிருந்து வரும்? நஷ்டம்தான் வரும் என்று சொல்கிறார்கள். பின் எப்படி டூரிங் டாக்கீஸ் வைத்து நடத்துகிறீர்கள் என்று கேட்டால் 'நாங்கள் திருட்டுத்தனமாக டிக்கட்டுகள் போட்டு நடத்தினால் தான் லாபம் வரும்; அப்படித்தான் நடத்திக்கொண்டு வருகிறோம், என்று சொல்கிறார்கள். சினிமாத் தொழிலிலே உங்களுக்கு நிரம்ப அனுபவம் இருக்கும். ஏனென்றால் சினிமாத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களோடும் உங்களுக்கு நெருங்கிய தொடர்பு இருக்கிறது. அவர்களை எல்லாம் கலந்து ஆலோசித்து, சினிமாத் தொழிலை நடத்துவதிலே என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன; என்னென்ன நஷ்டங்கள் வருகின்றன; எந்தெந்த வகையிலே செயல்பட்டால் திருட்டுத்தனமாக டிக்கட்டுகள் போடுவதைத் தடுக்கலாம்; அதிலுள்ள தில்லுமுல்லுகளை எப்படிப் போக்கலாம் என்பதை அறிந்து கொள்ளவேண்டும்.

அந்த அடிப்படையிலே டூரிங் டாக்கீஸ் நடத்துகிறவர்களுக்கு இருக்கிற கஷ்ட நஷ்டங்களைப் போக்கி, அவர்களுக்கு உண்மையிலே என்ன வருமானம் கிடைக்கிறது என்பதை நியாயமான முறையில் ஆராய்ந்து ஆலோசித்துப் பார்ப்பது மிகமிகப் பொருத்தமாக இருக்கும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

நகராட்சிகளிலும், ஊராட்சிகளிலும் என்டர்டெய்ன்மென்ட் டாக்ஸ் விதிப்பதற்குள்ள பவர் அவர்களுக்கே இருக்கிறது. சில பஞ்சாயத்துக்களில் உச்சவரம்பு டாக்ஸ் வசூலித்து விடுகிறார்கள். சில பஞ்சாயத்துக்களில் கொஞ்சம் குறைவாக வசூலிக்கிறார்கள். இவ்வளவுதான் வசூலிக்கலாம் என்று எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும் ஒரு உத்தரவு போட்டால் சாலச் சிறந்தாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

'லான்ட் ரெவின்யூ' எப்படி வசூலிக்கிறார்களோ அதேமாதிரி சினிமா வரியும் வசூலிக்கப்படலாம். அதுபோன்ற அதிகாரம் இருக்கவேண்டும். மற்ற சங்கடங்கள் எல்லாம் பின்னால் சட்டத்தை அமல் நடத்தும்போதுதான் தெரியும்.

இப்பொழுது போட்டிருக்கிற இந்தச் சட்டங்களையெல்லாம் பார்க்கும்போது இனிமேல் யாரும் கடன் கொடுக்கமாட்டார்கள். எல்லோருமே கடன் வாங்கித்தான் தொழில் நடத்துகிறார்கள். பெரிய பெரிய கம்பெனிகள், தொழில் அதிபர்கள், தனிப்பட்டவர்களும் அரசாங்கமும் சேர்ந்து நடத்துகிற ஜாயின்ட் செக்டார்கள் கூட கடன் வாங்கித்தான் தொழில் நடத்துகிறார்கள். இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன், எல்.ஐ.சி. போன்ற நிறுவனங்களிடமிருந்தும் அரசாங்கத்திடமிருந்தும் கடன் பெறுகிறார்கள்.

ஆனால் இப்போது போடப்பட்டிருக்கும் சட்டங்களைப் பார்த்தால், இனிமேல் சினிமாக்காரர்களுக்கு யாரும் கடன் கொடுக்க மாட்டார்கள். இந்தச் சட்டத்தின்படி அந்தத் தொழிலில் சம்பந்தப்பட்டவர்களையெல்லாம் கடனைத் திருப்பிச் செலுத்தும்படி கேட்க உரிமை இருக்கிறது. கடன்பட்டவர் யாராக இருந்தாலும், அவர் இல்லாவிட்டால் அவருடைய மகன், பேரன், அதற்குப் பின்னால் வரக்கூடியவர்களிடமிருந்துக் கூட கடனை வசூல் செய்து கொள்ளலாம் என்றிருக்கிறது. டிஸ்ஸால்வ்டு பார்ட்னர்ஷிப்பாக இருந்தால்கூட விடமாட்டார்கள். 'கடன் பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான், என்று அந்தக் காலத்தில் இருந்ததை 'கடன் கொடுத்தான் நெஞ்சம்போல் கலங்கினான்' என்று மாற்றிக் கொள்ளும் நிலையை இன்று உருவாக்கியிருக்கிறது.

சினிமா நடத்தியவர்கள் அந்தத் தொழிலை விட்டுவிட்ட பிறகும், வரி பாக்கியிருந்தால், அவருடையச் சொந்தக்காரர் 'அன்டிவைடட் ஹிண்டு ஃபேமிலி'யில் யாராக இருந்தாலும், மனைவியானாலும், மனைவிக்குச் சம்பந்தியானாலும், மாமனானாலும், பேரனானாலும், டிஸ்ஸால்வ்டு பார்ட்னர்ஷிப்பாக இருந்தாலும், கடன் கொடுத்தவர்கள் யாரானாலும்/அவர்களிடம் போய் வசூலித்துக் கொள்ளலாம் என்றிருக்கிறது. புரோப்பரைட்டருக்குப் பிறர் பணம் கொடுக்க வேண்டியிருந்தாலும் 'மணி ட்யூ டு புரோப்பரைட்டர் பை சம்படி எல்ஸ்' அதையும் வசூலித்துக்கொள்ளலாம் என்றிருக்கிறது. இப்படிப் பணத்தைக் கொண்டா, கொண்டா என்று உறவினர்களையெல்லாம் கேட்பது ஒரு 'ரெகுலர் ஹராஸ்மென்டாக' அமைந்துவிடும்.



ஒரு தொழிலை நடத்துபவர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அதாவது இரண்டு வருஷம் அல்லது மூன்று வருஷம் என்று வைத்து, அதற்குள் ஒழுங்காக வரியைச் செலுத்துகிறாரா என்று பார்க்கவேண்டும். இல்லாவிட்டால் அப்பொழுதே தொழிலை நிறுத்தச்செய்து, சேரவேண்டிய பணத்தை வசூல் செய்து கொள்ளவேண்டும். அதை விட்டு விட்டு, ஐந்து வருடங்களுக்குப் பின்னால், 10 வருடங்களுக்குப் பின்னால் டிப்பார்ட்மென்டார் மெதுவாக நடவடிக்கை எடுத்தால் அது அவ்வளவு நல்லதாக இருக்காது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அரசாங்கத்தின் பணத்திற்குப் பாதுகாப்பு வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால் கனம் உறுப்பினரின் பேச்சு வரி ஏய்ப்பவர்களுக்கு வழிசொல்வதுபோல் வழக்கறிஞர் பாணியில் இருக்கிறது. சட்டத்திற்கு வக்காலத்துபெற்று வாதாடினால் நல்லது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நான் அரசாங்கத்திற்கு அனுகூலமாகத்தான் பேசுகிறேன். எந்த ஒரு விஷயத்திலும் லிமிட்டேஷன் இருக்கவேண்டும். இரண்டு வருஷம் அல்லது மூன்று வருஷம் என்று ஒரு லிமிட் வைத்துக்கொண்டால் அந்தக் காலக்கெடுவிற்குள் அவரிடமிருந்து வரியை வசூலிப்பதை விட்டுவிட்டு, அவர் எங்காவது போன பின்னால் டிஸ்ஸால்வ்டு பார்ட்னர்ஷிப் அல்லது மற்றவர்களிடம் போய் ஈடாக்குவது என்பது நல்லதல்ல என்பதை அரசாங்கத்திற்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சினிமாத் தொழிலில் ஈடுபட்டவர்கள் இப்போது நல்ல வசதியில் இல்லாமல் இருப்பவர்கள் எத்தனை பேர்? அதனால் அழிந்து போனவர்கள் எத்தனை பேர்? அது போலவே சினிமாத் தொழிலில் முதல் போட்டு, அதை உடைத்துவிட்டதால் நசுக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் என்று கணக்கெடுத்துப் பார்த்தால் இங்கு பேசிய சகோதரி அவர்கள் குறிப்பிடுகிற அளவுக்கு யாரும் இல்லை என்பது மிகத் தெளிவாகத் தெரியும். சென்னையில். .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் கிளாரிஃபிக்கேஷன் கொடுக்கிறீர்களா அல்லது பேசிக்கொண்டிருக்கிறீர்களா? இப்போது உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசட்டும். நீங்கள் பின்னால் பேசிக்கொள்ளலாம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நான் சினிமாத் தொழில் லாபமானதா அல்லது நஷ்டமானதா என்று சொல்லவில்லை. சினிமாத் தொழிலிலே உள்ள கஷ்டங்களைச் சொன்னேன். டூரிங் டாக்கீஸ் நடத்துபவர்களும் பொதுமக்கள் தான். பொதுமக்களுக்குச் சில சமயங்களில் வரி வஜா செய்யப்படுகிறது. அந்தமுறையில் அவர்கள் நிலையையும் யோசித்துப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். பாக்கியை வசூல் செய்வதற்கு ஒரு லிமிட் வைத்துக்கொள்ள வேண்டும். அந்த கால

[திருமதி த. ந. அனந்தநாயகி][1971 டிசம்பர் 14

வரையறைக்குள் பாக்கி செலுத்தப்படவில்லையானால், உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அதிலே காலதாமதம் ஏற்படக் கூடாது. அவர் யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுப்பதில் காலங்கடந்தாமல், குறிப்பிட்ட கால வரையறைக்குள் வசூலித்து விட வேண்டும். பின்னால் ஐந்து வருடம், பத்து வருடம் கழித்து வசூல் செய்யப்போகும்போதுதான் பல கடுமையான விளைவுகளும் சங்கடங்களும் ஏற்படக்கூடும் என்பதை இந்த அரசாங்கத்திற்குச்
நண் பகல் 12-00 சொல்லிக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். வரி வசூல் செய்யக்கூடாது என்று சொல்லவில்லை, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் செய்துவிடவேண்டும். சேல்ஸ் டாக்சை எடுத்துக் கொண்டால்கூட 8 வருஷம் என்கிற டைம் லிமிட் இருக்கிறது. அதுவே பல பேர்களுக்குக் கஷ்டத்தை உண்டாக்குகிறது.

திரு. ஆ. பரந்தாமன் : துணைத்தலைவர் அவர்களே, ஒரு கிளாரிபி கேஷன். அம்மையார் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் ஒரு காலவரம்பை நிர்ணயிக்கவேண்டுமென்று சொன்னார்கள். அந்தக் காலவரம்புக்குள் டாக்ஸ் வசூலாகவில்லை என்றால் அரசு என்ன செய்யவேண்டுமென்று கேட்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: குறிப்பிட்ட கால வரம்புக்குள் வசூல் செய்தாகவேண்டும். ப்ராமிசரி நோட் எழுதிக்கொடுத்தால் 3 ஆண்டுக்குள் வசூலாகவில்லை என்றால் 'காலாவதியாகிவிடும். அதற்குள் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதைப் போல ஒரு காலவரம்புக்குள் வசூல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். பேசாமல் தூங்கிவிட்டு பன்னிரண்டு வருஷங்கள் கழித்தும் நடவடிக்கை எடுத்துக்கொள்வோம் என்று சொல்வது சரியல்ல. காலவரம்பு நிர்ணயிப்பதுதான் டிபார்ட்மெண்டு ஆபீசர்களிடையே ஒரு சுறுசுறுப்பை உண்டாக்கும் டிபார்ட் மெண்டு எபிஷியன்டாக செயல்பட உதவும், குறிப்பிட்ட காலத்திற்குள் வசூலிக்கவேண்டுமென்று போட்டால் அதற்குள் வசூலிக்காத அதிகாரிகளின்மீது அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவும் முடியும். சட்டத்தில் செய்ய முடியாவிட்டாலும் ரூல்ஸ் போடுகிற போதாவது அதைக் கவனிக்க வேண்டும்.

அடுத்து, நான் ஒரு திருத்தம் கொடுத்தேன். வரிவிதிப்பவர்களைச் சம்மன் பண்ணும்போது ரெக்கார்டுகளைக் கொண்டுவந்து கொடுக்காதவர்களுக்கு ரூ. 500 தண்டம் விதிக்கப்படுவதை 100 ஆகக் குறைக்கவேண்டும் என்பதாக, அமைச்சர் அவர்கள், ரேகையே எடுத்துவிடுகிறேன் என்று சொல்லிவிட்டார். அதை வரவேற்று என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

THIRU T. GANAPATHI : I suppose the hon. Lady Member being a lawyer is aware that there is what is known as ' garnishee proceedings in respect of ordinary citizens. There is also the Limitation Act applicable to ordinary citizens. Is it the hon. Lady Member's contention that these things should not be applied to Government at all. I want to know.



1971 டிசம்பர் 14]

THIRUMATHI T. N. ANANDANAYAKI : What I was saying
is that Government should not take its own time to assess. It
should fix a time-limit within which it would assess and recover
the money. They should not say that the Act will come into
operation at any time. You must finish it within a certain period.
Otherwise it will take a long time.

திருப்பூர். திரு. ஏ. எம். மொய்தீன் : சபாநாயகர் அவர்களே,
நான் முன்பு குறிப்பிட்டதுபோலக் கஷ்டம் அவர்களுக்கு
இருக்கிறது என்கிற வாதத்தை நான் ஒப்புக்கொள்ளவில்லை
என்பதற்காகத்தான் நான் அதை முன்பு குறிப்பிட்டேன்.
நஷ்டம் அவர்களுக்கு இருக்குமானால் அவர்கள் இந்தத் தொழிலை
நடத்தமாட்டார்கள். நிச்சயமாக லாபம் இருக்கிறது என்றால்
மக்களிடம் இருந்து வாங்குகிற வரிப்பணத்தை அவர்கள்
சர்க்காருக்குச் செலுத்தத்தான் வேண்டும். சர்க்காரை
ஏய்ப்பதற்கு நாம் இடமளிக்கக் கூடாது என்பதை வற்புறுத்து
கிறேன். என்னைப் பொறுத்தவரையில் நான் சினிமாப் பார்த்து 25
வருஷமிருக்கும். அதாவது தியாகராஜ பாகவதர் காலத்துப் படம்
பார்த்தவன் நான், அதற்குப் பின்னால் பார்த்தது இல்லை. ஆனால்
அந்தக் கலையே மக்களுக்குச் சரிதானா என்பது சந்தேகமாக
இருக்கிறது. அது வேறு பிரச்சினை, மக்கள் விரும்புகிறார்கள்.
அந்தத்துறை செழிக்கிறது. பலர் அதில் ஈடுபட்டுக்கொண்டிருக்
கிறார்கள். நியாயமான முறையில் அதற்கு வரிவிதிப்பதைப்பற்றிக்
கவலையில்லை. ஆனால் அம்மையார் அவர்கள் குறிப்பிட்டதைப்போல
ஒரு டென்ட், ஒரு தியேட்டர் வைத்திருப்பவர்கள் உண்மையிலேயே
நஷ்டத்திற்கு உள்ளாகிவிட்டார்கள் என்றால் அவர்களுக்கு வரி
விலக்குக் கொடுக்கலாமேதவிர, லாபகரமாக இருக்கும்போது வரி
விலக்குக் கொடுக்கக்கூடாது, கொடுப்பதை ஆட்சேபிக்கிறேன்
என்று தெரிவித்து அமர்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Mr. Speaker, I was surprised
when this Bill was introduced. I think the time is ripe for a
Comprehensive Entertainment Tax Bill because there has been
a lot of misunderstanding or evasion. But instead of a comprehen-
sive Bill, we are getting Bills by bits. I am surprised to find there
are arrears in the cinema entertainment tax. First of all, all the
tickets are to be stamped and then only issued and sold to the
public. Just as for excise duty, it is stamped and collected first
by Central Government, why not this Government think of
collecting the entertainment tax in advance or demand advance
payment from the concerned proprietors? If they refuse to pay,
Government should refuse the sale of tickets for the next day by
the theatre owner.

I think Government should come forward with a Bill that will
plug all possibilities of evasion and creation of arrears. I think
from the Bill that is introduced, the method of collection of
arrears will cause harassment. Suppose one has retired and
started some other business. If one has genuinely retired. I think
it is wrong to run after him and collect. Government must keep

a watch on collection. If they fail to collect in time, who is responsible for it? That is why I say these provisions are not proper and it would be better if Government withdraws the Bill.

So far as the city is concerned, the total collection on this entertainment tax is given to the Corporation of Madras, but Government takes collection charge of 10 per cent. I do not know the exact percentage. But Government always follow the policy "heads we win, tails you lose". When Corporation collects library cess for Government, no collection charge is paid to Corporation. But here Government gets collection charge. That is why I say this Bill should be reviewed. Collection of entertainment tax has to be improved and especially during emergency, Government should be scrupulous in collecting the taxes. But for that, we should not have incongruencies, mistakes and ignorance. Now, there are people who are crying that Corporation funds are dwindling and that they are not able to discharge their functions. Here is a definite case of Corporation being charged for the collection of entertainment tax by the Government. Once again I am repeating. Corporation collects library cess for Government, but the Government are not paying any collection charges to the Corporation.

With these remarks, I request the Hon. Minister to drop this Bill for the present and come forward with an exhaustive Bill because there are so many things to go into. There are many entertainments taking place and there is a lot of evasion. These things have to be plugged and if we plug these things and collect the entertainment tax in advance just like excise duty, there will not be any need for this sort of collection of arrears.

DR. H. V. HANDE: Sir, in this connection I wish to offer a few remarks, especially with regard to the manner in which the number of theatres are evading this entertainment tax. Especially in certain villages and mofussil parts we are having these tents, and also it has been brought to the notice of the Government that several people try to evade the entertainment tax. In fact some time—about three or four years—ago when our Hon. Speaker was the Hon. Finance Minister, I had brought this to his notice and he had also assured this House that all the points from where evasion took place, those loopholes would be throughly plugged. But I am sorry, still there is evasion. Evasion is a malpractice and unnecessarily we will be taxing more to make good this amount, the amount which we lose in this connection.

Another important point which I want to stress is this. I think there is no other method by which I can bring it to the notice of the Government. Fortunately or unfortunately we are having control over these theatre-owners and the managers who run these theatres. Whenever these Managers or the Managerial departments are brought under the purview of the Government, I want this Government to take note of two important factors,



particularly. The way in which these theatres are being run should be taken note of. Because the Government have got control over these managers, I am drawing the attention of the Government to these important factors. Firstly, these theatres are run in a very, very insanitary condition. In several theatres they do not promptly open the air-conditioning plant. It is very dangerous. Either they must keep open the windows or work the air-conditioning plant in full. Otherwise, it will definitely harm the health of the people and it is injurious to the health of the people. It will be a health hazard. If it is possible to bring in comprehensive legislation in this regard as the Hon. Member Thiru K. M. Subramanian said, it is well and good. Thereby sufficient control may be exercised over the managements of these theatres so that the theatres may be kept in good hygienic condition. I will be very happy if the Government will do that.

Another important point which I would like the Government to take note of is this. Whatever extra money is collected by way of plugging these loopholes, the Government should also insist on the Managers of the theatres to see that the employees working there are properly paid. I have got authoritative information that many of the workers who are employed in these theatres are very ill-paid and very shabbily paid. They do not get even the benefits which the other workers normally get. These theatres are making huge profits. The tax collection reveals this fact. Several theatres are running in profit. I will be happy if the Government exercise proper control and see it to that the workers employed in the theatres—I think there will be about 40 or 50 employees in a theatre and there are about 100 theatres in Madras—are paid adequately. Whenever the Government meet the theatre managers for collecting the tax, they must also see to it, if necessary, in conjunction with the Labour Minister that the workers are paid properly. Or at least from the entertainment tax collection the workers may be paid something—a particular portion of the tax may be paid to the workers.

Especially two points I would like to stress very much. The theatres should be kept in a hygienic condition. The air-conditioning plant should not be shut before half-an-hour or one hour the play is over. If it is shut like that people are compelled to inhale bad air. The other point is, the working condition of the employees of these theatres should also be taken note of by this Government.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவு மீதான விவாதத்தில் கலந்துகொண்ட அங்கத்தினர்களுக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கத்தினர்கள் தமது கருத்துக்களையெல்லாம் தெரிவித்தார்கள். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் ரூல்ஸ்லே இருப்பது, சட்டத்திலே இருப்பது நீதிமன்றத்தின் தீர்ப்புக்குப் பற்றியெல்லாம் சொன்னார்கள். பிறகு இதைக் கொண்டுவர வேண்[illegible] [illegible]வசியம் ஏற்பட்டது.

பொதுவாக சட்டத்தை வரவேற்றார்கள். திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களும், திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களும் இந்தச் சட்டத்தை விட்டுவிட வேண்டுமென்று சொன்னார்கள். கேளிக்கை வரி வசூலிப்பதிலே கொடுமை செய்வது மிக அதிகம் என்று சொன்னார்கள். திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பேசும்போது இன்னும் அதிகமாகப் பேசினார்கள். அரசாங்கத்திலே வரி ஏய்ப்பவர்களுக்குப் பாதுகாப்பாகப் பேசினார்கள். சினிமா கொட்டகை நடத்துகிறவர்கள் நஷ்டத்திற்காளாகி விடுகிறார்கள் என்றும் பேசினார்கள். . .

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, சினிமா கொட்டகையை நடத்துகிறவர்கள் நஷ்டப்படுகிறார்கள் என்று நான் பேசவில்லை. ஆனால் நீங்கள் போட்டிருக்கும் முறை அவர்களைக் கஷ்டப்படுத்தும் என்றேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, கேளிக்கைவரி என்பது சினிமாக் கொட்டகைக்காரர்கள் கொடுப்பது அல்ல. படம் பார்க்க வருபவர்களிடமிருந்து கிடைப்பதுதான், சினிமா கொட்டகைக்காரர்கள் சினிமா பார்க்க வருபவர்களிடத்திலிருந்து வசூலிக்கும் பணத்தை ஒழுங்காகக் கொடுக்க வேண்டும். அந்தப் பணத்தை ஏமாற்றக் கூடாது. சினிமாக் கொட்டகைக்காரர்கள் கேளிக்கை வரியை தங்களுடைய கையிலிருந்து கொடுக்க வேண்டிய அவசியமில்லை. நண்பர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் கூட போடப்படுகிற கேளிக்கை வரியில் எத்தனை சதவீதம் அரசாங்கம் எடுத்துக்கொள்கிறது, எத்தனை சதவீதம் நகராட்சிகளுக்குக் கிடைக்கிறது என்று கேட்டார்கள். கேளிக்கை வரியில் பத்து சதவீதம் நிர்வாகச் செலவுகளுக்காக எடுத்துக் கொள்ளப்படுகிறது. பாக்கி தொண்ணூறு சதவீதம் உள்ளாட்சித் துறைகளுக்குக் கொடுக்கப்படுகிறது. சர்சார்ஜ் சென்ட் பர்சென்டையும் கொடுத்துவிடுகிறோம். இப்படி பல ஆண்டுகளாகக் கொடுத்து வருகிறோம்.

இந்த நேரத்தைப் பயன்படுத்தி ஒரு வேண்டுகோள் விடுக்கலாம் என்று கருதுகிறேன். பொதுவாக தமிழ்நாட்டில் கேளிக்கை வரி ஏய்ப்பு இருப்பதாகப் பேசப்பட்டது. அதற்காக, வரி ஏய்ப்பவர்களைக் கண்டு பிடித்து தண்டிக்க தனியாக 'ஸ்க்வாட்' போட்டிருக்கிறோம். அவர்கள் திடீர் திடீரென சோதனைகள் போட்டு கண்டு பிடிக்கிற நிலைமை இருக்கிறது. வரி ஏய்ப்பவர்களைக் கண்டு பிடித்து, அவர்கள் மீது வழக்குகள் போட்டிருக்கிறோம். உள்ளாட்சித் துறை பொறுப்பிலே இருக்கின்றவர்கள் கேளிக்கை வரி ஏய்ப்பு இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். சென்னைமாநகரக் கார்ப்பொரேஷனைக் கூட நான் கேட்டுக் கொள்கிறேன். மாநகராட்சி அதிகாரிகள், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு, சினிமா கேளிக்கை வரிச் சட்டத்தின் துணை கொண்டு சோதனை போடும் அதிகாரம் இருக்கிறது. எல்லா ஊராட்சித் தலைவர்கள், எல்லா நகராட்சித் தலைவர்கள், நகராட்சி ஆணையர், நகராட்சி சுகாதார அதிகாரிகள் ஆகிய எல்லோருக்கும்





அதிகாரம் இருக்கிறது. அவர்கள் எல்லாம் எங்கேயாவது போய் இதைப் பார்த்திருக்கிறார்களா என்றால், இல்லை என்கிற பதில்தான் கிடைக்கும். அவர்கள் போய் சோதனை போடவேண்டும். ஏதோ விற்பனை வரி இலாகா மட்டும்தான் இந்தப் பணியைச் செய்ய வேண்டும் என்பதல்ல.

திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது, டிக்கெட்டுகளின் மீது முத்திரை போட வரும்போது ஏன் அட்வான்ஸாக பணம் வாங்கக்கூடாது என்றார்கள். ஒரு வாரத்திற்குண்டான பணத்தை முதலில் வாங்கிக்கொண்டுதான் வருகிறார்கள். சீல் போட வரும்போது அதை வாங்கிக் கொண்டு விடுகிறார்கள். மற்றும் ஒன்றைப்பற்றிச் சொன்னார்கள். அதாவது 'போகஸ்' டிக்கெட்டுகளைப் போட்டு வரி ஏய்ப்பு செய்கிறார்கள் என்றார்கள். அப்படிச் செய்கின்றவர்களைக் கண்டுபிடித்து வழக்குப் போடுகிறோம். அப்படி வழக்குப் போடுகின்ற நேரத்தில் அவர்கள் அப்பீல் செய்கிறார்கள். பொதுவாக அட்வான்ஸ் வாங்கிக்கொண்டுதான் சீல் போடுகிறோம்.

THIRU K. M. SUBRAMANIAM : May I know whether these arrears are due to bogus tickets only or any other factors ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, சினிமாக்களைப் பொறுத்தமட்டில் ஒரு தியேட்டருக்கு போகஸ் டிக்கெட் விற்பனை செய்ததற்காக நீதிமன்றத்தில் தடை கூட விதித்திருக்கிறார்கள். சென்னையிலே போகஸ் டிக்கெட்டுகளை அச்சடித்தார்கள். இந்தக் கேளிக்கை வரிச் சட்டத்தைப் பொறுத்தவரையில் நிறைய திருத்த வேண்டும். அதை நான் ஒப்புக்கொள்கிறேன். இதில் நிறைய ஓட்டைகள் இருக்கின்றன. இவைகளை அடைப்பதற்கு முயற்சி செய்கிறோம். போகஸ் டிக்கெட் விற்பனை செய்தவர்களைப் பிடித்து வழக்கு போட்டோம். கேளிக்கை வரிச் சட்டத்தின்படி, என்டர்டெயின்மென்ட் சர்டிபிகேட்டை ரத்து செய்தோம். தொடர்ந்து போகஸ் டிக்கெட் விற்ற ஒவ்வொரு காட்சிக்கும் வழக்கு என்ற விதத்தில் 152 வழக்கு போட்டோம். ஆனால் தொடர்ந்து சினிமா நடந்து கொண்டிருக்கிறது. சினிமாட்டோகிராப் ஆக்டுக்கோ அல்லது என்டர்டெயின்மென்ட் டாக்ஸ் ஆக்டுக்கோ அதை ரத்து செய்கிற அதிகாரம் இல்லை.

ஆனால் அவர்கள் மீது நாங்கள் வழக்கு போட்டவுடன் அவர்கள் உயர்நீதி மன்றத்திற்கு மனுக் கொடுத்து வரி வசூலிக்கக் கூடாது என்று தடை விதியுங்கள் என்று கேட்டார்கள். அங்குள்ளவர்கள் சினிமாக் காட்சியை நிறுத்தக் கூடாது, தொடர்ந்து சினிமா நடத்தலாம், ஒரு காட்சி வசூலை மட்டும் பாக்கிக்காக எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். அப்பொழுது பாக்கி 45 ஆயிரம் ரூபாய் இருந்தது. அவர்கள் தொடர்ந்து நடத்திவந்ததன் காரணமாக பாக்கி 1½ லட்சத்திற்குப் போய்விட்டது. மறுபடியும் நாங்கள் அந்தத் தடையை எடுக்கவேண்டுமென்று கேட்டோம். அதற்கு அவர்கள் இரண்டு காட்சிப் பணத்தை எடுத்துக் கொள்ளுங்கள்,

[திரு. ப. உ. சண்முகம்] [1971 டிசம்பர் 14

ஆனால் சினிமா காட்சியை நிறுத்தக் கூடாது என்று சொன்னார்கள். நீதிமன்றம் சொன்னது சரியா தவறா என்று சொல்ல நான் முன் வரவில்லை. மீண்டும் வழக்கு மன்றத்திற்குப் போவதாக இருக்கிறோம். வரி ஏய்ப்புகளைத் தடுப்பதற்கும், சட்டத்தில் உள்ள ஓட்டைகளை அடைப்பதற்கும் துரிதமான நடவடிக்கைகள் எடுக்க இருக்கிறோம். மேலும் திருத்தங்கள் அவ்வப்பொழுது செய்ய முயற்சிக்கப் போகிறோம்.

திருமதி அனந்தநாயகி அவர்கள் ஐந்தாண்டுகளாக இருப்பதை எட்டாண்டுகளாக மாற்றுவது சரியில்லை என்று சொன்னார்கள். பொது விற்பனை வரிச் சட்டத்திலே எட்டாண்டுகள் என்று இருக்கிறது. இதைக்கொண்டு வந்து இணைக்கிறோம் என்பதைத் தவிர வேறு அல்ல. இதிலே நாம் வசூலித்த பணத்தைத்தான் எடுத்துக் கொள்கிறோம். நிலவரியைப் பொறுத்தவரையில் பர்ஸ்ட் சார்ஜ் ஆக, தங்கள்மீது சொத்தில்லை, கடன் இருக்கிறது என்று சொன்னாலும் ஏற்றுக் கொள்ளாமல், வசூலிக்கப்படுகிறதோ, அதேபோன்று நிலவரிக்கு அடுத்த சார்ஜாக இதை ஆக்குகிறோம். வரி ஏய்ப்புகளைத் தடுப்பதற்கும், ஏமாற்றுதல்களை நீக்குவதற்கும்தான் இவற்றைக் கொண்டு வருகிறோமே தவிர யாரையும் கொடுமைப் படுத்தவேண்டுமென்ற எண்ணம் இல்லை. இதனால் இந்தத் தொழிலே நசித்துப் போகும் என்று சொன்னார்கள். யாரும் சினிமாக் கொட்டகைக்காரன் கடன் கேட்டால் கொடுக்க மாட்டான் என்று சொன்னார்கள். நான் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் தொழில் நசித்துவிடாது. கடன் கொடுக்கிறவர்கள் கொடுத்துக் கொண்டுதான் இருப்பார்கள். எனவே அதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை.

டாக்டர் ஹாண்டே அவர்கள் சினிமாவில் ஏர்கண்டிஷன் இல்லை, சுகாதார வசதிகள் இல்லை என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அதையெல்லாம் இந்தச் சட்டத்தின்கீழ் கொண்டுவர முடியாது. சினிமாட்டோகிராப் சட்டத்தின்கீழ் தான் வரும். திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் இருக்கிற கார்ப்பரேஷன் தான் செய்ய வேண்டும். அவர்கள் செய்யலாம், அவர்கள் செய்ய வேண்டும்.

**திரு. கே. எம். சுப்பிரமணியம் :** நாங்கள் மைனாரிட்டியாகத் தான் இருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** எண்ணிக்கை குறைவாக இருக்கலாம், அதனாலேயே நாற்றம் மூக்குக்குள் போகாது என்று சொல்ல முடியாது. போகும். அதையெல்லாம் அவர்கள் அங்கே செய்யவில்லை. அவை இந்தச் சட்டத்தின் கீழே வராது.

இந்தச் சட்டத்திலே 500 ரூபாய் என்று நாம் போட்டு இருப்பதை—சாட்சிகள் வரவில்லையென்றால் புத்தகங்களைக் காட்டவில்லையென்றால் டி.சி.டி.ஓ. 500 ரூபாய் போடலாம் என்று இருப்பதை நாம் இப்பொழுது தேவையில்லை என்று எடுத்து விட்டோம். 100 ரூபாயாக அதைக் குறைக்கவேண்டுமென்று எதிர்க்கட்சியினர்



1971 டிசம்பர் 14] [திரு. ப. உ. சண்முகம்]

சொன்னார்கள். நாம் அந்த 100 ரூபாய் கூட தேவையில்லை என்ப தால் அதை முழுவதும் ரத்து செய்துவிட்டோம். வரி ஏய்ப்புகளைத் தடுப்பதற்காக அரசு எடுத்துக் கொள்ளும் இந்த முயற்சிக்கு எல்லோரும் ஆதரவு தெரிவிப்பார்கள் என்று நம்புகிறேன். இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

The amendment of Thiru J. James was, by leave, withdrawn.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"1971-ம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

Clauses 2 to 6 were put and carried.

*Clause 7.*

MR. SPEAKER : The question is—

"That clause 7 do stand part of the Bill."

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move the following amendment :—

"In the Tamil Nadu Entertainments Tax (Amendment) Bill, 1971, in clause 7, in new section 12-B,—

(1) sub-section (2) shall be omitted; and

(2) sub-secion (3) shall be renumbered as sub-section (2)."

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, my amendment has become infructuous as the Hon. Minister himself has moved an amendment. He could have mentioned that we have given notice of a similar amendment and in lieu of that, they are moving the Government amendment.

MR. SPEAKER : Anyhow the purpose has been served. The question is—

"In the Tamil Nadu Entertainments Tax (Amendment) Bill, 1971, in clause 7, in new section 12-B,—

(1) sub-section (2) shall be omitted; and

(2) sub-section (3) shall be renumbered as sub-section (2)."

The amendment was put and carried.

Clause 7, as amended, was put and carried.

Clause 8 was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move—

"That the Tamil Nadu Entertainments Tax (Amendment) Bill, 1971, as amended, be passed.

The motion was put and carried and the Bill, as amended, was passed into law.

(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் அவர்கள் தம்முடைய இசைவைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

(3) சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(உ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு.

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Mr. Speaker, Sir, I beg to move—

"That the Tamil Nadu General Sales Tax (Fifth Amendment) Bill *, 1971 be taken into consideration ".

Since the passing of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959) several difficulties have arisen in giving effect to the provisions of the Act in the course of administration and also consequent on certain judicial pronouncements. In order to overcome the above difficulties, it has become necessary to amend certain provisions of the said Act.

In order to achieve the above object the Tamil Nadu General Sales Tax (Fifth Amendment) Bill, 1971 has been prepared and the same is before the House for consideration.

As the Bill is an important one involving amendments to various sections of the Tamil Nadu General Sales Tax Act, 1959, it is considered desirable that it should be referred to a Select Committee of this House for detailed scrutiny. I request the House, Sir, to accept this motion for referring the Bill to a Select Commitee.

இதற்கான பொறுக்குக் குழுவில் பணியாற்றுகின்றவர்களின் பெயர்ப் பட்டியலைப் படிக்கின்றேன்.

1. திரு. எஸ். முருகையன்.
2. திரு சி. வி எம் அண்ணாமலை
3. திரு. என். இராஜாங்கம்.
4. திரு. சு. துரைசாமி.

* Published in the *Tamil Nadu Government Gazette*, Extraordinary, dated 20th October 1971.



5. திரு. என். கிட்டப்பா.
6. திரு. கு. காமாட்சி.
7. திரு. கே. எஸ். இராமகிருஷ்ணன்.
8. திரு. கா. காளிமுத்து.
9. திரு. மு. இரத்தினசபாபதி.
10. திரு. வி. கே. இராஜாப்பிள்ளை.
11. திரு. எம். சத்தியமூர்த்தி.
12. திரு. ஜே. ஜேம்ஸ்.
13. திரு. க. சுப்பு.
14. திரு. என். மருதாசலம்.
15. திரு. கே. ஏ. வகாப்.
16. டாக்டர் எச். வி. ஹாண்டே.
17. திரு. எம். சுரேந்திரன்.
18. திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

MR. SPEAKER : Under rule 97, the Hon. Minister for Food and Revenue is a member of the Committee. Under rule 99 (1), I nominate the Hon. Minister for Food and Revenue as Chairman of the Committee.

(ஊ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, " தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன் வடிவை * அறிமுகம் செய்து மேற்படி சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் " என்று கோருகிறேன்.

இந்தச் சட்டத்திற்கான காரணங்களும், விளக்கங்களும் சட்ட முன்வடிவோடு இணைக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்ட முன் வடிவிற்கு உறுப்பினர்கள் எந்தத் திருத்தமும் கொடுக்கவில்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, தமிழ்நாடு கூட்டுறவு சட்டத்திற்கு திருத்தம் ஒன்றினை அமைச்சரவர்கள் முன் மொழிந்திருக்கிறார்கள். இன்னும் இரண்டாவது திருத்தம் ஒன்று வேறு வரவிருக்கிறது. கூட்டுறவுத் துறை சம்பந்தமாக அந்தச் சட்டத்தை விரிவாகப் பரிசிலனை செய்து விரிவான சட்டம் ஒன்றைக் கொண்டு வரவேண்டுமென்ற கருத்து வெகு காலமாகச் சொல்லப்பட்டு வருகிறது. அரசாங்கத் தரப்பிலேயும் அத்தகைய சட்டம் வரும் என்று அடிக்கடி சொல்லப்படுகிறது. இதற்குக்

* 18—11—71-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1971 டிசம்பர் 14

காரணம் உண்டு. இந்தச் சட்டம் 1961-லே நிறைவேற்றப் பட்டது. அதற்குப்பிறகு அந்தச் சட்டம் இயங்கும் முறையைப் பார்க்கும் பொழுது கூட்டுறவின் கொள்கையே போய்விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது.

கூட்டுறவின் அடிப்படை மக்கள் தாங்களாகவே முன்வந்து ஒன்று சேர்ந்து தங்களுடைய காரியங்களை அமைத்துக் கொள்ள வேண்டுமென்பது. கூடுமான வரையிலே அரசாங்கத்தின் தலையீடோ அல்லது வியாபாரிகளின் தலையீடோ மற்றபடி மக்களைச் சுரண்டுபவர்களின் தலையீடோ இல்லாமல் மக்கள் தங்கள் வாழ்க்கையைச் செப்பனிட்டுக் கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் இந்த இயக்கத்திற்குரிய சட்டம் இயற்றப்பட்டது. ஆனால் ஒன்றைப் பார்க்கிறேன். வரவர அந்தக் கொள்கைக்கு நேர்மாறாக அரசாங்கத்தின் அல்லது அரசாங்க அதிகாரிகளின் தலையீடு அதிகமாகி கூட்டுறவின் கொள்கையே குலைந்துவிடுமோ என்ற நிலை ஏற்படுகிறது. ஆகவே இந்த நிலைமைகளைத் தவிர்க்க, கூட்டுறவு இயக்கத்தின் அந்தக் கொள்கையை அமலாக்கும் முறையிலே இந்தக் கூட்டுறவுச் சட்டத்தையே அடியோடு திருத்தி அமைக்க வேண்டுமென்ற அவசியம் வெகு நாட்களாகவே ஏற்பட்டிருக்கிறது. அத்தகைய சட்டத்தைக் கொண்டு வரும் முறையிலே, இதுபோல் திருத்தச் சட்டங்களைக் கொண்டு வராமல் விரிவான சட்டமாகவே கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தத் திருத்தங்களை வாபஸ் பெற்றுக் கொண்டு, கூட்டுறவின் சிறப்பான கொள்கைகளை ஒழுங்குற, தடையில்லாமல் அமலாக்கும் முறையில் விரிவான சட்டத் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டுமென்று அமைச்சரவர்களையும், அரசாங்கத்தையும் கேட்டுக்கொண்டு அமர்கிறேன், வணக்கம்.

திருமதி. த. ந. அனந்தநாயகி : கனம் சபாநாயகர் அவர்களே, எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினரின் கருத்துக்களை வலியுறுத்தும் பொருட்டு மீண்டும் நான் இந்த அரசாங்கத்திற்குச் சொல்லிக்கொள்வதெல்லாம் இந்தக் கூட்டுறவுச் சட்டத்தை முழுதாக ஆராய்ந்து ஒரு காமப்ரெஹின்சிவ் பில்லாகக் கொண்டு வர நாம் முயற்சிக்க வேண்டும். அதற்குக் காரணம் என்னவென்றால், இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் இப்பொழுது அமல் நடத்தும் விதத்தைப் பார்க்கும்பொழுது அவைகள் கூட்டுறவாகத் தெரியவில்லை. ஏதோ சில கட்சி மாச்சரியங்களின் அடிப்படையில் இன்றைக்கு அவைகள் நடத்தப்படுகின்றனவோ என்று எண்ணக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரிஜிஸ்திரார் நாமினேட் செய்யலாம், அரசாங்கம் நாமினேட் செய்யலாம் என்று இப்படியெல்லாம் நாமினேஷன்கள் மூலம் சங்கங்களை அமைத்துக் கொள்ளலாம் என்றால், அதற்குரிய அதிகாரத்தைக் கையில் வைத்துக் கொள்வது என்றால், ஜனநாயக முறையில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படுகின்றதா என்பதே கேள்விக்குறியாக ஆகிவிடும்.



1971 டிசம்பர் 14] [திருமதி த. ந. அனந்தநாயகி]

அது மட்டுமல்ல, இப்பொழுதும் நாங்கள் சொல்வது என்னவென்றால், மூன்று தவணை இருக்கும் முறைக்கு மேல் கூட்டுறவு இயக்கத்தில் இருக்கக்கூடாது என்பது. ஒருவரே பல ஆண்டு காலம் தலைவராகயிருப்பதால் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் அவர்களுடைய சொந்த சொத்து மாதிரியாகிவிட்டது.

Parallel Governments run by co-operatives என்று சொல்லக்கூடிய அளவிற்கு பரவலாக அரசாங்கமே நடக்கிறது. இதையெல்லாம் மாற்றியமைக்க வேண்டுமென்று அந்தக் காலத்திலும் சொன்னேன், இப்பொழுதும் சொல்கிறேன். இப்பொழுதும் விமோசனம் ஏற்படவில்லை. முக்கியமான அந்தத் திட்டங்களையெல்லாம் விட்டுவிட்டு இன்றைக்கு சாதாரண திருத்தங்கள் இவற்றை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. 'Government will notify any society as a Central Society' என்றெல்லாம் மீண்டும் மீண்டும் அதிகாரத்தை அரசாங்கமே அதிகமாக எடுத்துக்கொள்வதைப் பார்க்கும் பொழுது அது கூட்டுறவு இயக்கமாக இருக்கவில்லை என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது.

அதேமாதிரி கூட்டுறவுச் சங்கங்களைக் கலைக்க என்னென்ன வகையில் செய்கிறார்கள் என்று புரியவில்லை. சில சங்கங்களில் 'inefficient administration, losses' என்று இதையெல்லாம் சொல்கிறார்கள். இதைப் பார்க்கும் பொழுது வேறுபாடு உள்ளது மாதிரி இருக்கிறது. சில இடங்களில் 'overdue' இருந்தாலும் சங்கங்களுக்கு நோட்டீஸ் கொடுக்கிறார்கள். பிடிக்காதவர்களை உடனே குளோஸ் செய்கிறார்கள். சில இடங்களில் குளோஸ் செய்யக்கூடிய நேரங்களில் நடவடிக்கை எடுக்கப் பல வருஷங்கள் ஆகின்றன. திருநெல்வேலியில் எனக்குத் தெரிந்து பல வருஷங்களாக, இன்வெஸ்டிகேஷனுக்காக பல வருஷங்கள் எடுத்துக் கொள்கிறார்கள், பல வருஷங்கள் எடுத்துக் கொண்டும் கூட்டுறவுத் துறையினர் அதற்காகக் கவலைப்பட மாட்டார்கள். எனவே இது இப்படிப்பட்ட ஒரு இயக்கமாகயிருந்தால் மக்களுக்கு அதில் நம்பிக்கை பிறக்காது, யார் குற்றம் செய்திருந்தாலும் உடனடியாகக் கண்டுபிடித்து, குறைந்தது 5 வருஷத்திலோ அல்லது 6 வருஷத்திலோ தண்டிக்கப்பட்டார்கள் என்று சொல்ல வேண்டும். இன்னும் ஆராய்ச்சியில் இருக்கிறது, இன்வெஸ்டிகேஷனில் இருக்கிறது என்ற நிலைமையிருந்தால் அது மக்களின் கூட்டுறவு இயக்கமாகத் தென்படவில்லை, அரசாங்கம் அதிக அதிகாரத்தை வைத்துக் கொள்வதற்கும், அவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றதாகவும் இருக்கிறது என்று எண்ணக்கூடிய நிலைமை உருவாகும். எனவே, அதற்கு முடிவு கட்டவேண்டுமென்று சொன்னேன். இப்படிப்பட்ட திருத்தங்கள் அதற்குப் போதாது. முழுச் சட்டத்தையும் இன்றைக்கிருக்கும் சூழ்நிலையில் யோசித்து மாற்றிக்கொண்டுவர இந்த அரசாங்கம் முன் வந்தால் அது வரவேற்கத்தக்கதாயிருக்கும். 'piecemeal amendments would not satisfy the people' என்று சொல்லிக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

[1971 டிசம்பர் 14

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்தக் கூட்டுறவு சங்கங்கள் திருத்த மசோதாவின்மீது எங்கள் கட்சியின் சார்பாக சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு முன் பேசிய மாண்புமிகு அங்கத்தினர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் சொன்ன கருத்தை, கூட்டுறவு சம்பந்தமாக விரிவான ஒரு பரிசீலனையின் அடிப்படையில் நல்லதொரு சட்டமாகக் கொண்டுவரும்வரையில் இம்மாதிரி திருத்தங்கள் அவசியமில்லை; இதை வாபஸ் பெற வேண்டுமென்ற கருத்தை நான் வலியுறுத்திச் சொல்லிக் கொள்கிறேன்.

பொதுவாகவே, நமது கூட்டுறவில் இருக்கும் பலவிதமான சங்கங்களைப்பற்றி அவைகள் எந்தெந்த மாதிரி இருக்க வேண்டுமென்பதைப்பற்றி ஆராய கடந்த காலத்தில் சந்தானம் கமிட்டியை அமைத்தார்கள். அந்தக் கமிட்டி விரிவான பரிசீலனை செய்து எல்லா இடங்களிலும் சம்பந்தப்பட்டவர்களை, சாட்சியங்களைக் கேட்டு ஒரு பரிந்துரையை அளித்திருக்கிறது. அதிலே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், இன்றைக்கு இந்த ஸ்தாபனங்கள் செயல்படுவதில் அரசாங்கத்தின் நியமனமாகயிருந்தாலும், இன்றைக்கு நிர்வாகஸ்தர்களை அமைப்பதாகயிருந்தாலும் எத்தனை பேர் இருக்க வேண்டும் என்றும், அதுவும் நியமனம் செய்யும் முறையில் அரசாங்க அதிகாரிகளாகத்தான் இருக்க வேண்டுமேயொழிய வேறு அரசாங்கப் பற்றுள்ளவர்கள், அதிகாரப்பற்றுள்ளவர்கள் இருக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள்.

இன்றைக்கு ஒரே நேரத்தில் ஒருவர் எத்தனை சங்கங்களுக்கு இருக்கலாம் என்றால் 3 சங்கங்களுக்குத்தான் நிர்வாகஸ்தர்களாக இருக்கலாம் என்று சொல்லியிருக்கிறது.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு அரசாங்கம் நியமிக்கும் அந்த நியமன மெம்பரும் சாதாரணமாக ஒரு சங்கத்திற்கு, பிரைமரி சங்கத்திற்கு மூன்றாகவும், சென்ட்ரல் சொசைட்டிக்கு மூன்றாகவும், அபெக்ஸ் சொசைடிக்கு இரண்டு பேர்களுக்கும் மேல் போகக் கூடாது என்றும் சொல்லியிருந்தார்கள். மேலும் பிரைமரி சொசைட்டிகளுக்கு மொத்தம் 7-லிருந்து 15-க்கு அதிகப்படாமலும், அபெக்ஸ் சொசைட்டிகளுக்கு 9-லிருந்து 21-க்கு அதிகப்படாமலும் இருந்தால், அதிகமான கால தாமதமில்லாமலும், உடனடியாக ஏதாவது முடிவெடுக்கும் முறையிலும் இருக்கும் என்றும் அதிகச் செலவு ஏற்படாமலும் நாம் எந்த நோக்கத்திற்காக இந்த கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கோ அல்லது சாதாரண பொதுமக்களுக்கோ பலன் கிடைக்க வேண்டுமென்று நினைக்கிறோமோ அந்தப் பலன் கிடைக்க ஏதுவாகயிருக்கும் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

நாம் கூட்டுறவு சம்பந்தமாக ஆக்ட் வரும்பொழுது எதிர்பார்த்தோம், முன்னால் கடந்த காலங்களில், முன்னிருந்த சர்க்காரில், கூட்டுறவில் சிலருடைய ஆதிக்கம்தான் இருந்து சாதாரணமானவர்கள் போக முடியாதபடி அவர்களே பாரம்பரை ஆதிக்கம்



1971 டிசம்பர் 14] [திரு. சோ. அழகர்சாமி]

செலுத்தும் முறையிலிருந்தது. அதற்காக சட்டத்தில் சில ஷரத்துக்களும் இல்லாமலில்லை. ஒரு சங்கத்திற்குப் புதிதாக மெம்பராகச் சேர வேண்டுமென்றால், அப்பொழுது நிர்வாகஸ்தரின் துணையில்லாமல் முடியாது. அவர்கள் சேர்ந்துக்கொள்ளலாம் என்று தீர்மானம் போட்டால்தான் சேர முடியும். ஆனால் இந்த அரசு 1967, 1968-க்குப் பிறகு பல திருத்தங்கள் கொண்டுவந்து யார் வேண்டுமானாலும், அந்த நோக்கத்திற்கு உட்படுபவர்கள் மெம்பர்களாக தகுதியும் ரைட்டும் உள்ளது என்று கூறப்பட்டிருக்கிறது. அவரை நீக்க வேண்டுமென்று சொன்னால் தகுந்த காரணம் ரிஜிஸ்ட்ரார் அவர்கள் ஒப்புக் கொள்ளக்கூடிய காரணம் சொல்ல வேண்டும். ரிஜிஸ்ட்ரார் அனுமதி பெற்றுத்தான் நீக்கலாம் என்று இருக்கிறது. இப்போது அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக் கூடிய திருத்தம் அவை எல்லாம் சென்ட்ரல் சொசைடிகளுக்கும் பொருந்தக்கூடிய முறையிலே கொண்டு வந்திருக்கிறார்கள். பல சங்கங்கள், சென்ட்ரல் சொசைடிகளைச் சார்ந்த வங்கிகளுக்கும், நிலவள வங்கிகளுக்கும் பல அமைப்புகள் திருத்தத்தின் அடிப்படையில் ஏற்பட்டிருக்கின்றன. அந்த அமைப்புகள் எந்த முறையில் செயல்படுகின்றன. எந்த முறையில் பலன் கிடைக்கிறது, உபயோகமாக இருக்கிறது என்பதை எல்லாம் பரிசீலனை செய்து பார்த்த பிறகுதான் மாற்றிக்கொண்டு வரவேண்டுமென்ற என் அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று இந்தக் கூட்டுறவுத்துறை அமைப்புகளிலே தேர்ந்தெடுக்கப்படுகின்ற நிலைமைக்குப் பதிலாக நியமனம் செய்யப்படுகின்ற நிலைமை அதிகமாக இருக்கிறது. நிர்வாகஸ்தர்கள் தேவைக்கு அதிகமாக இருக்கிறார்கள். மகாசபை மாதிரி நிர்வாகஸ்தர்கள் கூட்டம் இருக்கிறது. விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதில் இருந்து பொருள்களை விற்பனை செய்வது வரை ஒருங்கிணைந்த ஸ்தாபனமாக இது அமைய வேண்டுமென்றால், அதில் அரசாங்கத்தின் தலையீடு இருக்கக்கூடாது. இப்போது இது ஒரு அரசாங்கத்தின் டிப்பார்ட்மென்ட் போலவே இருக்கிறது. அரசாங்கம் போடக்கூடிய மூலதனத்திற்கு சரியான பாதுகாப்பைக் கேட்டுக் கொள்ள வேண்டியதுதான்.

சந்தானம் கமிட்டி அறிக்கையிலே ஒன்று, இரண்டு பேருக்கு மேல் நியமன உறுப்பினர்கள் இருக்கக்கூடாது என்று கூறி இருக்கிறார்கள். இப்போது ஐந்தாறு நியமன உறுப்பினர்கள் என்ற வகையில் விதிகளைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதனால் கூட்டுறவு ஸ்தாபனங்கள் நல்ல முறையில் நடக்க முடியாமல் போகிறது.

முக்கியமாக சில சிபாரிசுகளைச் சொல்லியிருக்கிறார்கள். சட்டசபை மெம்பர்கள் கூட்டுறவு நிர்வாகத்திலே இருக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரே நாலைந்து சங்கங்களில் நிர்வாகத்தில் இருக்கக்கூடிய நிலைமை இருக்கக்கூடாது என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். சந்தானம் கமிட்டியில் இன்னும் பல நல்ல

தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்கள் பல எண்ணங்களை உடையவர்களாக, பல கோஷ்டிகளைச் சார்ந்தவர்களாக வருகின்ற காரணத்தால் அதிகாரிகள் கூட சட்டத்திற்குப் புறம்பாக நடக்கிற சூழ்நிலையில் ஆக்கப்படுகின்ற காரணத்தால் அவர்கள் கூட எந்த ஒரு நோக்கத்திற்காக ஒரு துறை இயங்குகிறதோ, அந்த நோக்கத்தைச் சரிவர அமல் செய்யக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதில் இருந்து அவர்களை நாம் தடுத்து விடுகிறோம். அதன் காரணமாக அவர்கள் கூட சரியாக இயங்க முடியவில்லை.

ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சலில் ஒரு வீவிங் சொஸைட்டி என்று ஏற்படுத்தி ஷேர்கள் எல்லாம் திரட்டினார்கள். சாதாரணமாக முதல் முறையாக ஒரு சொஸைட்டியை ஏற்படுத்தும்போது யார் சீஃப் ப்ரோமோட்டர் என்று பார்த்து இருக்கின்ற நியதிப்படி அவரைத் தான் முதலில் தலைவராகவோ அல்லது வேறு எந்த முறையில் அமர்த்த வேண்டுமோ அந்த முறையில் அவர்களை அமர்த்துவார்கள்.

ஆனால் அங்கே என்ன நடந்திருக்கிறது? கூட்டுறவு சொசைட்டிக்காக மக்களிடம் பணம் வசூலித்திருக்கிறார்கள். பல ஷேர்களை திரட்டியிருக்கிறார்கள். திரட்டிய பணம் எங்கே சென்றது என்று பணம் கொடுத்தவர்கள் யார் பணத்தைப் பெற்றார்களோ அவர்களை சந்தேகத்திற்கு உரியவர்களாக இன்று கேள்வி கேட்கக்கூடிய நிலையில் இரண்டு ஆண்டுகளாகியும் இன்னும் அந்தக் கூட்டுறவு சொஸைட்டி உருவம் பெறவில்லை. இன்றைக்குவரை ஏற்படுத்தப்படவில்லை. காரணம் அதிகாரி சொல்கிறார், சீப் ப்ரோமோட்டர் யாரோ அவர்தான் தலைவராக வரவேண்டுமென்று. அப்படித்தான் இங்கு அமைதி காப்பாற்றப்பட்டிருக்கிறது என்று நான் கேள்விப்படுகிறேன். இடையில் என்ன நடந்தது? விட்டேனா பார், அவர் வந்தால் விடமாட்டேன் நான் என்று அங்கிருக்கிறவர் யாரோ இங்கே வந்து—இங்கே என்றால், இங்கே வந்து அதிகாரிகளைப் பார்த்து அவர்களை மிரட்டுகிறார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆதாரம் இருந்தால் அப்படிச் சொல்லுங்கள். அங்கிருந்தவர் இங்கே வந்தார், இங்கு வந்து இப்படிச் செய்தார் என்றெல்லாம் சொல்வது முறையல்ல. தெளிவாக இருந்தால் அரசாங்கத்தின் மீது குற்றஞ்சாட்டுங்கள். அதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. நான் என நினைத்தால் பேசுகிற வகையில் பாவமாக யாரையும் பேசுவதைப்போல் வார்த்தைகளை உபயோகிக்கக் கூடாது.

**திரு. எம். எ. லத்தீப் :** ஆதாரம் இல்லாமல் நான் பேசமாட்டேன். தலைவர் அவர்களுக்கு நான் அந்த உறுதியைக் கூறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆதாரம் இல்லாமல் பேசினீர்கள் என்று நான் சொல்லவில்லை. ஆதாரங்களை அளித்துப் பேசவேண்டுமென்றுதான் சொல்கிறேன்.





**திரு. எம். எ. லத்தீப் :** ஆகவே, குளச்சலில் இன்று ஏற்பட்டிருக்கிற இந்தப் பொது உணர்ச்சியை அமைச்சர் அவர்கள் நல்ல முறையில் கவனித்து அங்குள்ள இந்தக் குறையைக் களைந்து எறிய வேண்டும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பணம் கொடுத்தவர்கள் அங்கு என்ன நடந்தது என்று கேட்கிறார்கள். அவர்களது கேள்விக்கு ஒரு விடை கொடுக்கக்கூடிய அளவில் அங்கு யார் சீப் ப்ரமோட்டராக இருந்தாரோ, அவரை அங்கு அதன் தலைவராக நியமிப்பதற்கு ஆக ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வகையில் எல்லாம் கூட்டுறவுத் துறையிலுள்ள இப்படிப்பட்ட குறைகளைப் போக்கி, அரசியல் கண்ணோட்டத்துடன் இல்லாமல் பொது நோக்கோடு நாட்டின் பொருளாதாரத்தை நாம் பலப்படுத்துவதற்கும், வேலை வாய்ப்புகளை அதிகமாக்குவதற்கும், உற்பத்தியைப் பெருக்குவதற்கும், சிதறிக் கிடக்கிற மக்களை எல்லாம் ஒன்று சேர்த்து உழைக்கக்கூடிய நிலையில் அவர்களுடைய உணர்ச்சிகளை ஒன்றாக ஆக்கும் பாசறையாகவும் அவர்கள் எண்ணங்கள் ஒன்றித்துச் செல்லும் நல்லதொரு களமாகவும் அந்த இடம் திகழும்படிச் செய்வதற்கு வகை செய்யக்கூடிய விதத்தில் இந்தச் சட்டத்தை முழுமையாக ரத்து செய்துவிட்டு ஒரு பெரிய காம்ப்ரஹென்சிவ் பில்லை ஒரு ஜாயிண்ட் செலக்ட் கமிட்டி போட்டு அதில் நன்கு ஆராய்ச்சி செய்த பிறகு ஒரு காம்ப்ரஹென்சிவ் பில் கொண்டு வந்தால் இன்று அமைச்சர் அவர்கள் எந்த நல்ல நோக்கத்தோடு இத்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்களோ, அது அன்று நன்கு முழுமையாக நடைபெறும் என்று சொல்லி இத்துடன் என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. கு. இராசமாணிக்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுத் திருத்தச் சட்டத்தில் எனது எண்ணங்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கூட்டுறவுத் துறை இன்று மிகுந்த அக்கறையோடு நல்ல பல காரியங்களை வேளாண்மைத் துறையில் மேற்கொண்டு செய்து வருகிறது. குத்தகைச் சாகுபடிதாரர்களுக்கு இன்று கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கடன் வழங்கும்போது, குத்தகைச் சாகுபடிதாரர்கள் கோவில், மடங்கள் ஆகியவைகளின் நிலங்களில் சாகுபடிச் செய்கிறவர்கள் அல்லாது பெரிய பெரிய நிலச்சுவான்தார்களிடத்திலும் சாகுபடி செய்துகொண்டு வருகிறார்கள். குத்தகைப் பாக்கி காரணமாக அல்லது குடும்பத் தொல்லைகள் காரணமாக பலர் அவர்களின் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுகிற நிலைக்கு ஆளாகிறார்கள். அப்படி வெளியேறுகிற அல்லது வெளியேற்றப்படுகிற விவசாயிகளிடம் இருந்து கூட்டுறவு சங்கங்கள் தாங்கள் கொடுத்த கடன்களைத் திரும்பப் பெற இயலுவதில்லை. ஆக இப்படி கொடுத்த கடன்களைத் திரும்பப் பெற முடியாத ஒரு சூழ்நிலை சில கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்படுகிற நிலை இருக்கிறது.

(திரு. கு. இராசமாணிக்கம்) [1971 டிசம்பர் 14

ஆகவே, தனிப்பட்ட நபர்களுக்கு ரூ. 500 அல்லது ரூ. 1,000 என்று கடன் கொடுப்பதைவிட அந்த நிலத்தின் மீது, அந்த சாகுபடி நபர் மீது கடன் கொடுத்தால் மீண்டும் அதைச் சாகுபடிக்கு எடுத்துக்கொள்கிற விவசாயியிடமிருந்து அந்தக் கடன் தொகையை வசூலித்துக்கொள்ள வசதியாக இருக்கும். மற்றவர்கள் யாராவது அந்த நிலத்தை குத்தகைக்கு எடுத்துக்கொள்ளும்போது கூட்டுறவு சங்கத்தில் எவ்வளவு கடன் இருக்கிறது என்பதைப் பார்த்து அந்த கடன் தொகையை தீர்த்துவிட்டு அவர் அந்த விவசாய நிலத்தை தன் பேரில் குத்தகைக்கு மாற்றிக்கொள்ள வசதியாக இருக்கும். தனிப்பட்டவர்களுக்கும் கடன் கொடுப்பதன் காரணமாக சாகுபடி செய்யும் நிலத்திலிருந்து அவர் வெளியேற்றப்பட்டுவிட்டால், கொடுக்கப்பட்ட கடனை யாரிடமிருந்து வசூலிப்பது என்பதைப் பற்றி சட்டத்தில் ஒன்றும் இல்லை. ஆகவே, தனிப்பட்ட நபருக்குக் கடன் கொடுக்காமல் அவர்கள் சாகுபடி செய்யும் நிலத்தின்மீது கடன் கொடுக்கப்பட்டால் கடனையும் திருப்ப வசூல் செய்வது எளிதாகயிருக்கும், வேளாண்மை உற்பத்தியையும் பெருக்க முடியும். வெளியேற்றப்பட்டவரைவிட வருகிற விவசாயி சிறிது வசதியுள்ளவராக இருப்பார். கொடுத்த கடனில் 50 சதவிகிதம், 70 சதவிகிதம் என்று வசூல் செய்தால்தான் கூட்டுறவு சங்கங்களுக்குக் கூட்டுறவு மத்திய வங்கிகள் கடன் அளிக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்களுக்கு இத்தகைய குத்தகை விவசாயிகளிடமிருந்து கடன் தொகை வசூலாகாமல் பாக்கியிருக்கிறது. கொடுக்கப்பட்ட கடன்கள் வசூலிக்கப்படாமல் இருக்குமானால் கூட்டுறவுச் சங்கங்கள் மத்திய வங்கிக்குத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையும், திரும்பவும் விவசாய உற்பத்திக்காக கடன் கொடுக்கக்கூடிய நிலை இல்லாதிருக்கக்கூடிய நிலைமையும் ஏற்படுகிறது. சில சங்கங்களுக்கு ஐந்து கிட்டங்கிகள் இருக்கின்றன. ஒரு கிட்டங்கி போதுமானது. மீதமுள்ளவைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். இரண்டு மூன்று ஆண்டுகள் தொடர்ந்து கொடுக்கப்பட்ட கடன் தொகை வசூலிக்கப்படாதிருந்தால் அந்தச் சங்கம் கடனாளியாகக்கூடிய நிலை ஏற்படுகிறது. அப்படி ஒரு கூட்டுறவுச் சங்கம் கடனாளியாக ஆகும்போது அதில் பொறுப்பேற்றுக்கொள்ள வரக்கூடியவர்கள், தலைவர், உறுப்பினர்கள் இவர்கள், அதில் வருவதற்கே தயங்குகிறார்கள். ஆகவே, கூட்டுறவுச் சங்கங்கள் கடனாளியாகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அப்படி கடனாளியாக ஆகி அழிந்துவிடாமல் பாதுகாப்பளிக்க வேண்டும். அதோடு கூட்டுறவுச் சங்கங்களின் நிலைமையைப் பரிசீலித்து அதற்கேற்ற சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். இன்று நிலவள வங்கிகளின் மூலம் நல்ல பல காரியங்கள் செய்யப்படுகின்றன.

இன்று கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பம்ப் செட் அமைத்துக் கொடுத்து அதற்கேற்ற தொகையை விவசாயிகளிடமிருந்து கட்டமாக வசூல் செய்து கொள்ளலாம். கிராமங்களிலே வேளாண்மைக்காக தண்ணீர் வசதி, பாசன வசதிகள், பூச்சி மருந்துகள் கொடுப்பது, விதைகள் கொடுப்பது போன்ற காரியங்களைப்போல் மின்சார பம்பு செட்டுகள் அமைக்க கூட்டுறவுச் சங்கங்கள் மூலம்



1971 டிசம்பர் 14] [திரு. கு. இராசமாணிக்கம்]

விவசாயிகளுக்குத் தாராளமாகக் கடன் உதவி அளிக்கக்கூடிய வகையில் சட்டத்தின் மூலம் அமைப்பை உருவாக்க வேண்டும் என்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் அப்பையர் அவர்களும் விரிவான சட்டம் தேவை என்பதைக் குறிப்பிட்டுப் பேசினார்கள். விரிவான சட்டம் தேவை என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். அந்த விரிவான சட்டம், 'காம்பிரஹென்சிவ் பில்' என்ற அளவில் தயாரிப்பில் இருக்கிறது. அது காம்பிரஹென்சிவ் என்று சொல்கிற காரணத்தாலே, மிகவும் விரிவாக ஆகிக்கொண்டிருக்கிறது. அது ஒரு சில மாதங்களில் கொண்டு வருவது என்பது இயலாத காரியம் என்பதாலே மிகுந்த அவசரமான திருத்தம் என்ற அளவில் இதைக் கொண்டு வருகிறோம். அப்படிக் கொண்டு வருகிற சட்டத்திருத்தங்கள் எல்லாம் அந்த விரிவான சட்டத்தில் இடம் பெறும். அந்தச் சட்டமானது பொறுக்குக் குழுவுக்கு அல்லது செலக்ட் கமிட்டிக்கு விடப்பட்டு விரிவான முறையில் ஆராயப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், திரு. சுப்பிரமணியம் அவர்கள் அரசியல் தலையீடு எல்லாவற்றையும் பற்றிச் சொன்னார்கள். அது கூட்டுறவு என்ற கொள்கைக்கே அடிப்படையான முரணாக இருக்கிறது என்று தெரிவித்தார்கள். அதை நானும் முழுக்க ஒப்புக்கொள்கிறேன். அரசு தலையீடு இல்லாமல் ஒரு கூட்டுறவுக் கழகம் இயங்குமானால், அதைவிடச் சிறந்த ஒரு சங்கம் இருக்க முடியாது. அதைத்தான் நானும் விரும்புகிறேன். எடுத்துக்காட்டாக, அர்பன் பாங்குகள் இருக்கின்றன. நகரங்களில் உள்ள வங்கிகள் இருக்கின்றன. இந்த வங்கிகளில் அரசு தலையிடுவது இல்லை. அரசுக்கு அங்கு [illegible] கிடையாது. அந்த வங்கிக்கு அரசு பணம் தருவது இல்லை. அந்த வங்கிக்கு அரசு மானியம் வழங்குவது இல்லை. இனாமாக மானியம் கொடுப்பது இல்லை. அந்த நிர்வாகத்தில் அரசாங்கம் தலையிடுவது இல்லை. அது நல்ல முறையில் இயங்கி வருகிறது. மேல் நாடுகளில் இருப்பதைப் போலவே இயங்கி வருகின்றன. மேல் நாட்டைப் போலவே என்று நான் சொல்லுவதற்குக் காரணம், அந்த அடிப்படையில் அவைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. குறிப்பாக சொல்லப் போனால், ஜெர்மன் நாட்டைப் போன்று, ஜப்பான் நாட்டைப் போன்று, இங்கிலாந்து நாட்டைப் போன்று, வேறு பல நாடுகளில் செயல்படுவதைப் போன்று அர்பன் பாங்குகள் இயங்கி வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்களில் அரசியல் தலையீடு இருக்கக் கூடாது என்பதை ஒப்புக்கொள்கிறேன். அது ஒரு மிகச் சிறந்த தத்துவம். மேல் நாடுகளில் அரசியல் தலையீட்டை அதில் விரும்புவது கிடையாது. அர்பன் பாங்குகள் போல் இயங்கினால் அதில் அரசியல் தலையீடு வராது.

[திரு. ஸி. பா. ஆதித்தனார்] [1971 டிசம்பர் 14

அர்பன் பாங்குகளில் நாமினேஷன்களைப் பற்றிச் சொன்னார்கள். அதாவது அரசின் சார்பாக நியமனம் செய்வதைப்பற்றிச் சொன்னார்கள். அர்பன் பாங்குகளுக்கு அரசு நியமனம் செய்வது கிடையாது. ஒரு வேளை டாக்டர் ஹாண்டே அவர்களுக்குத் தெரிந்து இருந்தால் சொல்லலாம். அரசின் பங்கோ, அரசின் கடனோ, மானியமோ கொடுக்கப்படாத பாங்குகளுக்கு அரசின் சார்பாக நியமனம் செய்யப்படுவது இல்லை. ஆனால் இங்கே என்ன ஏற்படுகிறது என்றால், முதலில் கோவாபரேடிவ் சொசைடி ஆரம்பிக்க பங்கு வேண்டுமென்றார்கள். பொதுமக்கள் கொடுத்த பங்கு போதவில்லை, ஆகவே, அரசு பங்காளியாக இருக்கவேண்டுமென்கிறார்கள். அரசு பங்கு முதல் போடவேண்டும் என்று சொல்கிற நேரத்தில் கூட்டுறவு சங்கத்தில் அரசும் பங்கேற்க வேண்டிய நிலை இருக்கிறது. அரசு பங்காளியாக அதில் இருப்பதால் அதில் தலையிடவேண்டியிருக்கிறது. அரசு முதல் அதில் இருக்கிற காரணத்தால் தான் அதில் அரசு தலையிடவேண்டியிருக்கிறது. கோடிக்கணக்கான முதல் போட்டு சில கூட்டுறவு கழகங்களைப் படைத்து இருக்கிறது. ஆனால் அரசு கடன் கொடுக்காமலேயே. அரசு பங்கு போடாமலேயே. அரசு முதலிடு செய்யாமலேயே, அரசு மானியம் கொடுக்காமலேயே கூட்டுறவுக் கழகங்கள் இயங்கும் காலம் வரும். அப்போது அந்தக் கூட்டுறவுக் கழகங்களில் அரசு தலையிடாது. அப்படிப்பட்ட நிலையில் இந்த அரசு அச்சங்கங்களில் தலையிடக்கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியமும் மாண்புமிகு உறுப்பினர் அம்மையாரும் சொன்னதாகக் கருதி ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

நான் கேட்கிறேன், அரசு தலையீடு என்றால் என்ன பொருள்? அரசு அதற்குப் பங்கு போடாமல், கடனோ மானியமோ அளிக்காமல் என்ன செய்ய முடியும்? அப்படி இருந்தால், அரசு காரண்டியோ, உறுதிமொழியோ கொடுக்க முடியாது. அப்படி அரசியல் தலையீடு உள்ள இடங்கள் இருந்தால் என்னிடம் சொல்லுங்கள் நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, இடையே பேசுவதற்கு மன்னிக்கவேண்டும். அரசு தலையிடு என்று சொன்னால், அந்தக் கூட்டுறவுச் சங்கங்களை நன்றாக வளர்ப்பதற்கு அரசு உதவி புரியவேண்டும். அரசியல் கண்ணோட்டத்தோடு தலையிடக்கூடாது என்ற கருத்தைத்தான் நாங்கள் சொல்கிறோம். என்னுடைய சொந்த அனுபவத்திலேயே கூட உண்டு. இரண்டு சங்கங்களில் அத்தகைய அரசியல் தலையீடு இருந்தது. முதலமைச்சர் வரை சென்று முறையிட்டதற்குப் பிறகு ஒன்றில் இது நிவர்த்தியாயிற்று. மற்றொன்று அப்படியே நின்றுவிட்டது. இப்படிப்பட்ட அரசியல் தலையீடுகள் இருக்கக் கூடாது என்றுதான் சொன்னேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அரசு கண்காணிப்பு வேண்டும். பல வங்கிகளில் 'அர்ரியர்ஸ்' உள்ளவர்கள்கூட டைரக்டர்களாக இருக்கிறார்கள். அர்ரியர்ஸ் உள்ளவர்கள் டைரக்டர்களாக



1971 டிசம்பர் 14] [திருமதி த. ந. அனந்தநாயகி]

இருக்கக்கூடாது என்று விதி இருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், லால்குடியில் இருக்கும் சங்கத்தில் மு. க. து. நடராசன் என்பவர் அர்ரியர்சில் இருந்தும் டைரக்டராக இருக்கிறார். இது அரசியல் தலையீடு காரணமாகத்தான் நடக்கிறது. He is in arrears to the Bank and is a Director because he has got political pull. நாம் பணம் கொடுப்பதால் நாமினேஷன் போடுகிறோம் என்று சொல்கிறார்கள். அப்படி நாமினேஷன் போடுகிறபோது அரசியல் நோக்கம் இருக்கக்கூடாது என்றுதான் திட்டவட்டமாகச் சொல்கிறோம்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அங்கத்தினர் அவர்கள் திரு. மு. க. து. நடராசன் அவர்கள் அர்ரியர்சில் இருப்பதாகச் சொன்னார்கள். அர்ரியர்ஸ் ஓரளவுக்கு இருக்கலாம் என்று விதி இருக்கிறது. அந்த அளவுக்கு உட்பட்டுத்தான் அவர் அர்ரியர்சில் இருக்கிறார். அதற்குமேல் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அரசியல் பற்றி பேச இப்போது எனக்கு நேரம் இல்லை. இன்னொரு பில் இருக்கிறது. அரசியலைப் பற்றிப் பேசுவதற்கு எதிர்க்கட்சிக்காரர்களுக்கு நன்கு புரிகிற வகையில் புள்ளி விவரத்தோடு சொல்ல முடியும். அரசியல் கண்ணோட்டத்தோடு கூட்டுறவு சங்கங்களுக்கு நாமினேஷன் போடவில்லை என்பதற்குப் பல நாமினேஷன்களை சொல்ல முடியும். எதிர்க் கட்சியில் இருப்பவர்களைக்கூட நாம் நியமித்து இருக்கிறோம். தலையீடு என்று சொல்வது, அதில் அரசுக்குள்ள பங்கைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, அதைக் கட்டுப்படுத்துவதற்காகத்தான். அந்த அளவில் தான் இந்த நியமனங்கள் செய்யப்படுகின்றன என்று சொல்லிக்கொள்கிறேன்.

நாமினேஷன், பொதுவாக, 5-ல் ஒரு பங்குக்கு மேல் செய்வது இல்லை. தமிழ்நாட்டுக்கு மட்டும் இப்படி இருக்கிறது என்று கருதுகிறேன். டெல்லியில் 60% வரையிலும் நியமனம் செய்யலாம். ஆனால் தமிழ்நாட்டில் நாம் கொண்டு வந்திருக்கிற, இன்று சட்டப் பேரவை முன்னால் இருக்கிற இந்தத் திருத்தச் சட்டத்திலேகூட அது அப்படி இருக்கிறது. 5-ல் ஒரு பங்கு அதிலே அரசு பங்கு போட்டிருந்தால், அரசு கடன் கொடுத்து இருந்தால், அதிலே அரசு நியமனம் செய்யலாம். அந்த நியமனத்தில் யார், யார் இருக்க வேண்டுமென்று இருக்கிறது. அதையும் தெளிவாகச் சொல்லி இருக்கிறோம். அதாவது (1) தாழ்த்தப்பட்டவர்கள் இருக்க வேண்டும்; (2) பெண்கள் இருக்கவேண்டும். (3) சின்னஞ் சிறிய, ஏழை எளிய விவசாயிகள் இருக்கவேண்டும்.

ஒன்றை மட்டும் சொல்கிறேன். தாழ்த்தப்பட்டவர்களை நியமனம் செய்யவேண்டுமென்று கொண்டு வந்த சட்டத்தின் காரணமாக இன்று பல கூட்டுறவுச் சங்கங்களில் தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள். இயக்குநர்களாக இருக்கிறார்கள். கடந்த

[திரு. சி. பா. ஆதித்தனார்] [1971 டிசம்பர் 16

50 ஆண்டு காலத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் [illegible] இயக்குநர்களாக இருந்திருக்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன். இருந்தால் திரு. சுப்பிரமணியம் அவர்கள் சொல்லவேண்டும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: அமைச்சர் அவர்கள் அருமையான கொள்கை என்று சொன்னார்கள். அந்தக் கொள்கையில் அவர்களை விட நான் ஒன்றும் [illegible] அல்ல. நடைமுறையில் எடுத்துக்கொண்டால் [illegible] கூட்டுறவுச் சங்கங்களில் அதிகாரம் [illegible].

மாண்புமிகு பேரவைத் தலைவர்: [illegible] கேள்வி வேறு, நீங்கள் சொல்கிற பதில் வேறு.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: அவர்கள் [illegible] பதில் சொல்லவில்லை [illegible] தாழ்த்தப்பட்டவர்கள் யாரும் இயக்குநர்களாக [illegible] என்று நான் [illegible] கொள்கிறேன். [illegible] இருந்தால் அதை நாங்கள் நிறைவேற்றப் போகிறோம். [illegible] தாழ்த்தப்பட்டவர்கள் இருக்க வேண்டுமென்று [illegible] இருக்கிறோம். அதை [illegible] மாறுதல் [illegible] இருக்கிறேன். நண்பர் அழகர்சாமி அவர்கள் [illegible] ஒன்று [illegible] உறுப்பினர்கள் சார்பாக ஒரு கூட்டத்தைப் போட்டு அந்தக் கூட்டத்தில் என் [illegible] என்று கேட்டார்கள்.

நான் [illegible] கேட்கிறேன். [illegible] என்று [illegible] ஆண்டுதோறும் [illegible] 50 ஆண்டுகளாக [illegible]. இந்த 50 ஆண்டுகளில் இது [illegible] எந்த ஒரு தாழ்த்தப்பட்ட [illegible] மாவட்டத்தில் [illegible] கூட்டுறவு [illegible] உட்கார்ந்தது உண்டா? [illegible] உண்டா? [illegible] உண்மை எனக்குத் தெரியும் [illegible] உட்கார விட்டது உண்டா? [illegible] உட்கார விட்டது என்று [illegible] உண்டா? [illegible].

திரு. சோ. அழகிரிசாமி: பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். நான் அப்படி [illegible] என்று சொல்லவில்லை என்றால் ஒத்துக்கொள்கிறேன்.

(திரு. சோ. அழகர்சாமி: [illegible])

THE HON. THIRU SI. PA. ADITANAR: I am not yielding.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: The Hon. Minister is not yielding. நீங்கள் அப்புறம் சொல்லலாம்.

திரு. சோ. அழகர்சாமி: பாயிண்ட் ஆப் ஆர்டர் [illegible] நான் சொன்னது என்னவென்றால் [illegible]

MR. SPEAKER: It is not a point of order. Hon. Minister is not yielding. When the Hon. Minister finishes, I will give the hon. Member an opportunity.



1971 டிசம்பர் 14] [Mr. Speaker]

இதற்குப் பெயர் பாயிண்ட் ஆப் ஆர்டரா? குறுக்கே எழுந்திருக்க வேண்டும் என்று சொல்வதற்கு பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று பெயரா? இது அவர்களுடைய சந்தர்ப்பம். அந்தச் சந்தர்ப்பத்தில், அவர்கள் 'ஈல்ட்' பண்ணினால்தான் நீங்கள் பேசமுடியும். குறுக்கு வழியில், பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்து சொல்ல வேண்டியதைச் சொல்வது என்பதும், அதை நான் சம்பிரதாயமாக பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை என்பதும் சரியாக இருக்காது. நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: முதல் முறையாக, முதல் அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், நாலாந்தர மக்கள் [illegible] இன்றைக்கு கூட்டுறவுத் துறை தாம் உயர்ந்திருக்கிறது. [illegible] எதைச் சொன்னாலும் அரசியல் [illegible] என்று சொல்ல முடியும். நீங்கள் தாம் குறைந்திருக்கிறது என்று [illegible] அப்படிச் சொல்வதற்கு அரசியல் காரணம் என்று [illegible] ஆனால் ரிசர்வ் பாங்கிக்கு எந்த [illegible] அதையாவது ஒத்துக்கொள்வார்கள் என்று [illegible] கொண்டு வந்து நிறைவேற்றிய [illegible] பாங்கி [illegible] கூட்டுறவுத் துறையில், [illegible] வங்கிகள் [illegible] உயர்ந்திருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். [illegible] வங்கி கூட்டுறவுத் துறையில், '[illegible]' ஆக [illegible] 'ஏ' ஆகியிருக்கிறது. அதே [illegible] ஆக இருந்தது. '[illegible]' மட்டுமல்லாமல், '[illegible]' ஆக [illegible]. அகில இந்தியாவிலும் பாராட்டிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் நீங்கள் இங்கே வந்து, குறை சொல்லும்போது [illegible] என்ன என்று சொல்வது! திரு. [illegible] 'கூட்டுறவுத் திருடர்கள்' என்று சொன்னார்கள் [illegible] ஆட்சி வந்த பிறகு, 1967-க்கு பிறகு, நான் [illegible] பார்த்துச் சொல்லுகிறேன். இந்தக் கூட்டுறவுத் துறையில் [illegible] இருப்பதாக இருந்தால், [illegible] சொல்வதாக இருந்தாலும் சொல்லலாம் அல்லது [illegible] சொல்ல வேண்டும் என்றாலும் சொல்லலாம். அப்படிக் [illegible] சொல்லாமல், பொதுப்படையாக, [illegible] என்று சொன்னால், அது தமிழகத்தையே குறைவாகச் சொல்வதாகத்தான் [illegible]. ஏனென்றால், அகில இந்திய [illegible] கூட்டுறவுத் துறை [illegible] இருந்தது. [illegible] இரண்டாவது என்றில்லாமல், முதல் தரம் என்பதை [illegible] கொண்டுள்ளது; 'எகனாமிக் டைம்ஸ்' எழுதியிருக்கிறது. [illegible] 'மெயில்' போன்ற நடுநிலைப் பத்திரிகை [illegible] முதல் தரம் என்பதற்காக அடையாளமாக [illegible] பற்றிச் சொன்னேன். அடையாளத் [illegible] தஞ்சை மாவட்டத்தில் இருக்கும் கூட்டுறவு [illegible] இரண்டாவதாக இருக்கிறது என்றால், [illegible] என்று சொன்னேன். இரண்டாவது என்று சொன்னபோது [illegible] வங்கி வேறு எந்த மாநிலத்தில் [illegible] என்று [illegible] கொண்டிருந்தபோது.

[திரு. சி. பா. ஆதித்தனார்] [1971 டிசம்பர் 14

கும்பகோணம் கூட்டுறவு வங்கி அகில இந்தியாவிலேயே முதல் தரமானது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு கேடயத்தை வழங்க மத்திய அமைச்சர் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் கூட்டுறவுத் துறையைப் பற்றிச் சொல்லும்போது, முன்னால் திருடர்கள் இருந்தார்கள் என்பது இன்றைக்கு மாறிவிட்டது என்பதையாவது உணர்ந்திருந்தால் நல்லது.

THIRU M. A. LATHEEF : On a point of explanation, Sir.

MR. SPEAKER : No. No.

THIRU M. A. LATHEEF : On a point of interpretation, Sir. I am entitled to interpretation.

MR. SPEAKER : No, the hon. Member is not entitled. He must be aware of the Rules of the Assembly. Let the hon. Member resume his seat.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** கும்பகோணத்தைப் பற்றி உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் பேசினார்கள். ஒருவராவது பாராட்டிப் பேசியதற்கு நன்றி. ஆனால் அப்படிப் பேசுவதற்கு எத்தனையோ உறுப்பினர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம், எதிர்க்கட்சிக்காரர்கள் பேசட்டும் என்று விட்டு வைத்திருந்தார்கள். வேறொன்றும் இல்லை. (சிரிப்பு) ஆகவே, நாம் நல்ல பெயர் எடுத்திருக்கிறோம். அந்த நல்ல பெயரை மேற்கொண்டும் நல்லதாகச் செய்ய சிறு சிறு திருத்தங்கள் கொண்டு வருகிறோம். இதை எல்லா உறுப்பினர்களும் ஒரு மனதாக நிறைவேற்றிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, நான் கூறும்போது, இந்த மாதிரி அரிசனங்கள், பெண்கள் போன்றவர்கள் உரிய பங்கு கொள்ள வேண்டும் என்றுதான் சொன்னேன். ஆனால் நியமனம் செய்யாமல், ஒதுக்கிய சீட்டுகளுக்கு, சபையினரே தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொன்னேன். அமைச்சர் குறிப்பிட்டது போல், இதற்கு முன்னால் இப்படி அவர்கள் இடம் வகித்தது கிடையாது. அரிசனங்கள், மற்றவர்கள் வரமுடியாமல் செய்திருந்தார்கள். ஆனால் நான் சொன்னது, அவர்கள் விரும்பும் ஆளைத் தேர்ந்தெடுக்க வழி வேண்டும் என்றேன். அரசாங்க அதிகாரிகள் நியமிக்கும்போதும் பின்தங்கியவர்களைப் பாதிக்கும் முறையில் இல்லாமல் செய்வது நல்லது. அமைச்சர் குறிப்பிட்ட வகையில் நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அரசாங்க அதிகாரிகளை நியமித்தால் அவர்களுக்கு வோட் கிடையாது.

**திரு. சோ. அழகர்சாமி :** மூலதனம் போட்டிருப்பதைக் கண்காணிப்பார்கள். வோட்டிங் ரைட்ஸ் வேண்டாம்.



1971 டிசம்பர் 14]

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் பேசும்போது, நான் ஏதோ தமிழ் நாட்டையே குறிப்பிட்டுப் பேசி, தமிழ் நாட்டை இழிவு படுத்தி விட்டதாகச் சொன்னார்கள். அதற்காகத்தான் நான் மிகவும் ஜாக்கிரதையாகச் சொன்னேன், கூட்டுறவுத் துறையினுடைய பொருளாதாரத் தத்துவத்தை அறிந்த பெரிய நிபுணர்கள், அதைப்பற்றி பொதுவாக எல்லா நாடுகளுக்கும் பொருந்தும் முறையில், பொதுவாக எழுதியிருக்கும் தத்துவங்களில் பல ஒழுங்கீனங்களை, குறைபாட்டினை எழுதி வருகிறார்கள் என்றேன். என் பேச்சிலே தமிழ் நாட்டைக் குறித்துச் சொன்னேன் என்று சொல்வது சரியில்லை. நான் அப்படிச் சொல்லவில்லை என்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன்.

நான் நேரிடையாக ஒரு ஊழலைப்பற்றிச் சொல்லியிருந்தேன். அதற்கு அமைச்சர் பதில் தருவார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர்கள் பதில் சொல்லவில்லை. கும்பகோணம் பற்றிச் சொன்னார்கள். கும்பகோணம் எல்லாவற்றிலும் முதல் என்று சொன்னார்கள்.

• • •

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** I expunge that expression.

• • •

உறுப்பினர் ஒரு மைக்கிற்கு என்று கேள்விப்படுகிறேன். திடீரென்று குறுக்கிடுவது சரியாகாது. சபாநாயகர் தாராளமாக நடக்கிறார் என்பதற்காக, அதை உரிமை என்று கருதிவிடக்கூடாது. அமைச்சர் பேசும்போது ஏதோ தாராளமாக இடம் கொடுத்து கீழே உட்கார்ந்தால் சரி. ஆனால் அவர்கள் 'அன்யீல்டிங்' மினிஸ்டராக இருக்கிறார்கள் (சிரிப்பு) சில வேளைகளில் 'யீல்ட்' பண்ணுவது கூடக் கூடாது. அதை நான் வரவேற்கிறேன். திரு. அழகர்சாமி சொன்னதற்கு அமைச்சர் திட்டவட்டமாக இப்படி இருந்தது கிடையாது என்பதை விளக்கினார்கள். அதற்குமேல் இப்படியெல்லாம் குறுக்கே எழுந்து பேச முற்படுவது, நம்முடைய மரபுகள், விதி முறைகள் இவற்றை நாம் மதிப்பதாகாது. நாம் ஜனநாயகத்தை பெருமையுள்ளதாகச் செய்ய விரும்புகிறோம். இப்படியெல்லாம் செய்தால் அதெல்லாம் குறைந்துவிடும். இப்படிச் செய்வதாலேயே மற்றவர் உரிமைகளைக் குறைத்துவிட்டது, உறுப்பினர்கள்தான் உரிமையாளர்கள் என்று ஆகிவிடாது.

திரு. லத்தீப் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். 'ஒரு ஊழலைப் பற்றிச் சொன்னேன், பதில் சொல்லவில்லை' என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னது மன்ற உறுப்பினர்களுக்கும் புரியவில்லை. அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று நானும் முயன்றேன். ஆனால் அவர்கள் குளச்சலிலே ஏதோ நடந்தது என்று

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக, பெரும்பாலும் சொல்வதற்கு அமைச்சரவர்கள் பதில் சொல்லவேண்டும் என்று விதி கிடையாது. குறிப்பாகக் குற்றம் சாட்டினால், பதில் சொல்ல அவசியம் ஏற்படுகிறது. திரு. லத்தீப் அவர்களுக்கு மட்டும் நான் சொல்வதாகப் பொருளும் இல்லை. பொதுவாகவே, கூடிய மட்டும் பேரவைத் தலைவர் காட்டும் தாராள மனப்பான்மையை, பெருந்தன்மையை உறுப்பினர்கள் உரிமை என்று யாரும் நினைக்கக் கூடாது என்று உருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை. அதிகமான பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புவது உறுப்பினர் அவர்களுக்கே பெருமைக் குறைவு. ஒவ்வொரு உறுப்பினரும் எத்தனை பாயின்ட் ஆஃப் ஆர்டர்கள் கேட்கிறார்கள் என்று எழுதப்பட்டு வருகிறது. பாய்ச்சலாக இருக்கிறதற்கெல்லாம் பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேட்க வேண்டாம் என்று சொன்னேன். பேரவையின் விதி முறைகளை மாற்றி விட வேண்டும், யாருடைய பேச்சிலாவது குறிக்கிட வேண்டும் என்று சொன்னால் அதற்கு பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்வது சரியானதல்ல என்பதை உணரவேண்டும். இப்போது நீங்கள் கேட்டது பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

திரு. ஏ. சி. நரசிம்மன் :

* * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதில் பாயின்ட் ஆப் ஆர்டர் எழவில்லை. My ruling is your point of order is not point of order. அது ஏற்கனவே அவையின் நிகழ்ச்சியிலிருந்து எக்ஸ்பஞ்ச் செய்யப்பட்டிருக்கிறது. இப்போது நீங்கள் பேசியதும் எக்ஸ்பஞ்ச் செய்யப்படுகிறது.

MR. SPEAKER : The question is—

"That the Tamil Nadu Co-operative Societies (Amendment) Bill, 1971 be taken into consideration".

The motion was put and carried and the Bill was taken into consideration clause by clause.

MR. SPEAKER : There are no amendments.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.



மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

"தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## (எ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு † (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 40/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டத்திற்கான காரணங்களையும் விளக்கங்களையும் ஏற்கனவே, பலரும் காரசாரமாகப் பேசி விட்டதால் அதிகமாக விவாதம் இருக்க முடியாது. சொல்ல வேண்டிய முக்கியமான காரணங்கள் எல்லாம் சொல்லியாகி விட்டது. இதற்கு அரசின் திருத்தம் மட்டும் ஒன்றிருக்கிறது. அதை அந்தப் பிரிவு வரும்போது சொல்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த திருத்தத்தின்படி, ஒரு யூனியன் மாவட்ட அளவில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. வட்டார அளவில் கூட்டுறவு யூனியன்கள் இருக்கின்றன. அதற்கு மேல் மாவட்ட அளவில் ஒரு யூனியனைச் சேர்த்திருக்கிறார்கள். ஏற்கனவே இருக்கக்கூடிய யூனியனும் தேவையற்றது என்று எல்லோருக்கும் தெரியும். மத்திய பேங்கிற்கு நிர்வாகஸ்தரை தேர்ந்தெடுப்பதற்கு மட்டும் தான் இது உபயோகமாக இருந்து வந்தது. மேல்வாரண்டு வசூல் போன்றவற்றை நிர்வகிக்க சூப்பர்வைசர்கள், மேற்பார்வையாளர்கள் இருக்கிறார்கள் எனவே, இந்தக் கூட்டுறவு யூனியன் தேவையற்றது. இதனால், காலதாமதமும், வீண் செலவும்தான் ஆகும். இதெல்லாம் கடன் வாங்கக்கூடிய மக்களின் மேல்தான் விழும். அவர்கள் கொடுக்க வேண்டிய வட்டி அதிகமாகிவிடும். பேங்கிற்கு வீண் செலவும் மக்களின்மேல் அதிக வட்டியும் ஏற்படக்கூடிய நிலைதான் இந்த திருத்தத்தினால்

---

† 8—12—1971-ஆம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. சோ. அழகர்சாமி] [1971 டிசம்பர் 14

வரும். ஆகவே, இந்த நாற்பதாவது திருத்தம் தேவையற்றது. இதை அமைச்சர் அவர்கள் வாபஸ் வாங்கவேண்டும். தேவையற்ற இதுபோன்ற ஸ்தாபனங்கள் இருப்பதால்தான், ரிசர்வ் பேங்கிடம் 3%-க்கு வாங்கக்கூடிய கடன், கடைசியில், மக்களிடம் வரும்போது, 9% ஆக உயர்ந்து விடுகிறது. மாவட்ட யூனியன் ஆகட்டும், மாநில யூனியன் ஆகட்டும், வட்டாரத்திலுள்ள யூனியன் ஆகட்டும், இந்த மூன்று யூனியன்களாலும் செலவும் காலதாமதமும்தான் ஏற்படும். தேவையற்றது. எனவே, திருத்தத்தை வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Mr. Speaker, Sir. I entirely support the views expressed by the hon. Member Thiru Alagarswamy. I think we are running a very big show without foundation, so far as the co-operative progress is concerned. Of course, I do not agree with Mr. Latheef who said that it is a co-operative robbery. If this country has to progress on socialistic lines, we must encourage co-operative societies. Wherever there is anything wrong, we must try to rectify it.

There are now Taluk Societies, Apex Societies, District Societies and others to look after the business. The main function of this Union according to this Bill is this—that is the Co-operative Union. The object is only to educate and do propaganda, etc. I think for this purpose a Union is not necessary at all. What we want is, co-operative societies should function well.

If politics should be avoided in co-operative societies, I think there should be a greater interference by Government in co-operative societies. I do not believe that the Government should not interfere. Government should supervise and interfere wherever it is necessary and should rectify the defects. Any number of people belonging to scheduled castes can be nominated. It is necessary. It is good. It is a progressive step. But it cannot be confined to D.M.K. members. It cannot be confined to particular political parties. We are not against any of the so-called oppressed or depressed lower class people coming into the societies This is the time we should encourage such things. What we want is, it should not be politicalised. It takes a long time in a country like India which was very backward for thousands of years to instill the habit of co-operation. It is a very difficult affair and it has to be tackled very wisely and very cleverly for which we should have best officers. There is no doubt about it. Between the Officers on the one side and the political public men on the other side, there should be good understanding. What happens in many co-operative societies or what is reported to be happening is, many of the officers are obliged to do certain things which they may not like to do under normal circumstances.



1971 டிசம்பர் 14] [Thiru K. M. Subramaniam]

The Hon. Minister for Co-operation said that when the Government does not invest money, it does not interfere. It is wrong. It is public money that the co-operative societies are handling and so, even if the Government does not invest money the Government is responsible for looking after the co-operative urban banks, just as Government does under the banking law. Whether the Government invests money or not, public money is there and so the Government has a right to interfere. Otherwise public money is not safe. I say the Hon. Minister for Co-operation cannot run away saying 'I would not interfere'. He has every duty to interfere and see that the societies are managed properly. So, before we pass this Bill, once again I stress the need for a comprehensive Bill or a consolidated Bill . . . . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவை முன் வைக்கப் பட்டிருக்கிற சட்டத்தைப்பற்றி மட்டும் பேசினால் நன்றாக இருக்கும். சட்டத்தில் இல்லாததைப்பற்றி எல்லாம் பேசுவது சரியல்ல. முதலில் நமக்கு நேரமும் இல்லை. இந்த முறையைக் கூடத் தெரிந்துகொள்ளாததைப் போல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவது சரியல்ல. பிற்பகல் 1-30

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I protest . . . . . .

(Mr. Speaker sounded the gong).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்று பேரவையின் அலுவல் பிற்பகல் 1.32 கள் இத்துடன் முடிவடைகின்றன. நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும். திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் தொடர்ந்து அப்போது பேசுவார்கள்.

THIRU K. M. SUBRAMANIAM : I thank you, Sir.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

### (4) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*—Nil.

B. *Reports, Notifications and Other Papers.*

@ 62. Demands for Grants for Further Expenditure and Detailed Supplementary Estimates thereof for the year 1971–72 (English and Tamil.)

@ 63. Notice of Demands for Grants for Further Expenditure in the year 1971–72 (English and Tamil).

@ 64. Demands for Grants for Excess Expenditure for the year 1967–68 (English and Tamil).

@ 65. Notice of Demands for Grants for Excess Expenditure in the year 1967–68 (English and Tamil).

@ 66. Speech of Hon. Dr. M. Karunanidhi, Chief Minister on the First Supplementary Estimates 1971–72. (English and Tamil).

@ 67. Speech of Hon. Dr. M. Karunanidhi, Chief Minister of Tamil Nadu presenting to the Legislature on 13th December 1971, the statement of demands for grants to cover excess expenditure relating to the year 1967–68. (English and Tamil).

£ 68. The Tamil Nadu Legislature (Prevention of Disqualification) Amendment Bill, 1971 (L. A. Bill No. 41 of 1971) with Annexure.

---

@ Laid on the table of the House on 13—12—1971.

£ Despatched to Membres on 11—12—1971.



## இணைப்பு

[............326-ம் பக்கத்தில் உள்ள 381-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க]

தமிழ்நாடு வேளாண்மை—தொழிற்கழகத்தின் சார்பில் கீழ்க்கண்ட உள்நாட்டு/வெளிநாட்டு வகையான டிராக்டர்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன/தற்போது வழங்கப்படுகின்றன.

**உள்நாட்டு வகையான டிராக்டர்கள்.**

1. மேசி பெர்குசன்—1035.
   (Massey Ferguson—1035)
2. இன்டர்நேஷனல்—பி. 275
   (International—B. 275)
3. எஸ்கார்ட்.
   (Escort)
4. இந்துஸ்தான்.
   (Hindustan)

**வெளிநாட்டு வகையான டிராக்டர்கள்.**

(1) ஆர் எஸ். 09 டிராக்டர்.
[R. S. 09 Tractor (A.C.)]

(2) யு. 650—எம்.
(U. 650—M)

(3) செட்டார்—5511
(Zetor—5511)

(4) பைலாரஸ்.
(Byelarus)

(5) செட்டார்—2011.
(Zetor—2011)

(6) செட்டார்—2011
[(Zetor—2011) (Rice Special)]

(7) டி—25
[T. 25 (A.C.)]

(8) உர்சஸ்—சி. 338.
(URSUS C. 338)

**இணைப்பு**—தொடர்ச்சி.

| உள்நாட்டு வகையான டிராக்டர்கள். | வெளிநாட்டு வகையான டிராக்டர்கள். |
|---|---|
| | (9) ஐ.எம்.டி.—555. (I.M.T.—555) |
| | (10) ஃபோர்டு—3000. (Ford—3000) |
| | (11) ஐ.எம்.டி.—533. (I.M.T.—533) |
| | (12) இண்டர்நேஷனல்—பி. 276 (International—B. 276). |
| | (13) மேசி பெர்குசன்—135 (Massey Ferguson—135) |

**குறிப்பு.**—தமிழ்நாடு வேளாண்மை-தொழிற்கழகம் 31—3—70 வரை திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வந்தது. இத் திட்டத்தின் கீழ் பின்வரும் வகை டிராக்டர்கள் தவணை முறையில் உழவர்களுக்கு வழங்கப்பட்டது.

(1) மேசி பெர்குசன் (Massey Ferguson—1035)

(2) இண்டர்நேஷனல்—275.

(3) எஸ்கார்ட்.

(4) இந்துஸ்தான்.

மேற்படித் திட்டத்தின்படி, 406 பேர்களுக்குக் கடன்கள் வழங்கப்பட்டன. டிராக்டர்களை [illegible] அணைகள் கொடுக்கப்பட்டவை. நாளது தேதி வரை உழவர்களுக்கு 259 டிராக்டர்கள் வழங்கப்பட்டுள்ளன. 25 பேர்களுக்கு வழங்கப்பட்ட [illegible] ஒப்பளிப்பு அவர்களே கேட்டுக்கொண்டதன்பேரில் [illegible] செய்யப்பட்டுள்ளது. டிராக்டர்களுக்கு அதிகத் தேவை [illegible] காரணமாகவும் உள்நாட்டின் உற்பத்தி செய்யப்படும் டிராக்டர்கள் பற்றாக்குறை காரணமாகவும் எஞ்சியுள்ள 122 டிராக்டர்களை உழவர்களுக்கு மேற்படி நிறுவனங்கள் இன்னும் வழங்கவில்லை. [illegible] எனினும் எஞ்சிய டிராக்டர்களை கூடிய [illegible] வழங்கத் தமிழ்நாடு வேளாண்மை—தொழிற்கழகம் தேவையான முயற்சிகளை எடுத்து வருகிறது. [illegible] வங்கிகளிலிருந்து போதிய கடன் வசதியினை உழவர்கள் பெறுகின்றனர் என்ற முக்கிய காரணத்தினால் தமிழ்நாடு வேளாண்மை-தொழிற்கழகம் இத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டது.



சில நேர்வுகளில் இறக்குமதி செய்யப்படும் டிராக்டர்கள் உழவர்களின் தேவை அடிப்படையிலும் மேற்படி டிராக்டர்கள் கிடைப்பதைப் பொருத்தும் தமிழ்நாடு வேளாண்மை—தொழிற்கழகம் தவணைக் கொள்முதல் முறையில் மேற்படி டிராக்டர்களையும் வழங்கி வருகிறது. முன்னுரிமை அடிப்படையிலும் மாவட்ட வாரியாகவும் இவை உழவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இறக்குமதி செய்யப்பட்ட டிராக்டர்களைப் பொறுத்தவரையில் அவற்றை இறக்குமதி செய்வது பற்றியும் நாட்டில் பல்வேறு மாநிலங்களிலுள்ள வேளாண்மை-தொழிற்கழகங்களுக்கு அவற்றை ஒதுக்குவது குறித்தும், இந்திய அரசு முடிவு எடுத்து வருகிறது. இறக்குமதி செய்யப்பட்டவையும் தமிழ்நாடு வேளாண்மை-தொழிற்கழகத்திற்கு ஒதுக்கப்பட்டவையுமான வெவ்வேறு வகை டிராக்டர்கள் அவற்றின் பரித்திறன் அவை தயாரிக்கப்படும் நாடு-தோராயமான விலை ஆகியவை பற்றிய விவரங்கள் கீழ்க்காணும் விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

### I. கழகம் நேரிடையாக இறக்குமதி செய்து உழவர்களுக்கு விற்ற டிராக்டர்கள்.

| தொடர் எண். | டிராக்டர் வகை. | பரித்திறன் | தயாரித்த நாடு. | தோராயமான விலையும் விற்பனை வரியும். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | ரூ. |
| 1. | R.S. 09 டிராக்டர் (A.C.) .. .. .. | 20 | ஜெர்மன் குடியரசு | 11,602 |
| 2. | U 650—M .. .. .. | 65 | ருமேனியா | 26,805 |
| 3. | செட்டார் 5511 .. .. .. | 55 | செகாஸ்லோவேக்கியா | 32,000 (நடப்பு தொகுதி) |
| 4. | பைலாரஸ் .. .. .. | 50 | ருஷ்யா | 23,000 |
| 5. | செட்டார் 2011 டிராக்டர் .. .. .. | 25 | செகாஸ்லோவேக்கியா | 24,000 |
| 6. | செட்டார் 2011 (ரைஸ் ஸ்பெஷல்) .. .. .. | 25 | | |
| 7. | T. 25 .. .. .. | 20 | ருஷ்யா | 19,500 |

I. கழகம் நேரிடையாக இறக்குமதி செய்து உழவர்களுக்கு விற்ற டிராக்டர்கள்—தொடர்ச்சி.

| தொடர் எண். | டிராக்டர் வகை. | பரித்திறன். | தயாரித்த நாடு. | தோராயமான விலையும் விற்பனை வரியும். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | **II நிறுவனங்களால் இறக்குமதி செய்யப்பட்டு கழகத்தின் பிரதிநிதிகளுக்கு விற்கப்படுபவை** | | | |
| 8. | உர்சஸ் C 338 .. | 35 | போலந்து | 25,354 |
| 9. | I.M.T. 555 .. | 55 | யுகாஸ்லேவியா | 31,251 |
| 10. | ஃபோர்டு 3000 .. | 47 | இங்கிலாந்து | 34,509 |
| | **III. நிறுவனங்களால் இறக்குமதி செய்யப்பட்டு கழகம் குறிப்பிடுகிறவர்களுக்கு விரைவில் விற்கப்படவிருப்பவை.** | | | |
| 11. | I.M.T. 533 .. .. .. .. | 35 | யுகாஸ்லேவியா | 30,000 |
| 12. | இன்டர்நேஷனல் B 276 .. .. .. .. | 35 | இங்கிலாந்து | 34,000 |
| 13. | மேசி பெர்குசன் 1035 .. .. .. .. | 46 | 〃 | 30,000 |